தமிழ்நாட்டு வரலாறு

சங்ககாலம் — வாழ்வியல்

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு

தமிழ்நாடு அரசு வெளியீடு

தமிழ்நாட்டு வரலாறு

சங்ககாலம் - வாழ்வியல்

தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு

தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்காக
வெளியிட்டோர்

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை-6

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	...	**History of Tamilnadu Sangam Age (Social)**
Authors	...	Expert Committee for History of Tamilnadu
Publisher	...	Director of Tamil Development, Kuralagam, Madras-600 001.
Copyright	...	Government of Tamilnadu
Publication Number	...	2
Language	...	Tamil
Edition	...	First
Number of Copies	...	2000
Date of Publication	...	1983
Paper used	...	Sweedish 20.1 kg.
Binding	...	Full Calico Bound
Size of the book	...	22 × 14.5 cm.
Printing types used	...	10 Pt.
Number of Pages	...	530
Price	...	**Rs. 31-25**
Printers		Thirumalai Printers, Madras-600 004.

குறுக்க விளக்கம்

அகம்.	...	அகநானூறு
ஐங்குறு.	...	ஐங்குறுநூறு
கலி.	...	கலித்தொகை
குறிஞ்சிப்.	...	குறிஞ்சிப்பாட்டு
குறுந்.	...	குறுந்தொகை
சிலப்.	...	சிலப்பதிகாரம்
சிறுபாண்.	...	சிறுபாணாற்றுப்படை
சீவக.	...	சீவகசிந்தாமணி
திவ். பிர.	...	திவ்வியப் பிரபந்தம்
தொல்.	...	தொல்காப்பியம்
நற்.	...	நற்றிணை
நன்.	...	நன்னூல்
நாலடி.	...	நாலடியார்
நெடுநல்.	...	நெடுநல்வாடை
பட்டினப்.	...	பட்டினப்பாலை
பதி.	...	பதிகம்
பதிற்.	...	பதிற்றுப்பத்து
பரிபா.	...	பரிபாடல்
புறம்.	...	புறநானூறு
பெருங்.	...	பெருங்கதை
பெரும்பாண்.	...	பெரும்பாணாற்றுப்படை
பொருநர்.	...	பொருநராற்றுப்படை
மணிமே.	...	மணிமேகலை
மதுரைக்.	...	மதுரைக்காஞ்சி
மலைபடு.	...	மலைபடுகடாம்
முருகு.	...	திருமுருகாற்றுப்படை
முல்லைப்.	...	முல்லைப்பாட்டு

கட்டுரையாளர்கள்

1. சமுதாயம்

டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம்,

இணை இயக்குநர்,
கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை-6

2. பொருளியலும் வாணிகமும்

டாக்டர் எ. சுப்பராயலு,

பேராசிரியர், வரலாற்றுத்துறை,
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-21.

3. நாகரிகமும் பண்பாடும்

டாக்டர் க. த. திருநாவுக்கரசு,

இணைப் பேராசிரியர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113.

4. அறிவியற் கோட்பாடுகள்

கொண்டல் சு. மகாதேவன்,

துணை இயக்குநர் (கோவை வட்டம்),
கல்லூரிக் கல்வி இயக்ககம், கோவை.

5. மெய்ப்பொருளியல்

டாக்டர் கோ. தங்கவேலு,

பேராசிரியர், வரலாற்றுத்துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை-5.

6. கலைகள்

டாக்டர் கோ. தங்கவேலு,

பேராசிரியர், வரலாற்றுத்துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை—5.

7. இசைக்கலை

திரு. ப. சுந்தரேசன்,

பண்ணாராய்ச்சி வித்தகர், குடந்தை.

8. கட்டடக் கலையும் நகரமைப்பும்

திரு. கொடுமுடி ச. சண்முகம்,

உதவிச் செயற்பொறியாளர்,
பொதுப்பணித்துறை, தமிழ்நாடு அரசு.

9. பண்டைத் தமிழரும் சிந்துவெளி நாகரிகமும்

டாக்டர் கோ. தங்கவேலு,

பேராசிரியர், வரலாற்றுத்துறை,
மாநிலக் கல்லூரி, சென்னை-5.

பொருளடக்கம்

இயல் 1

சமுதாயம்

		பக்கம்
சமுதாய அமைப்பு	...	1
சங்ககாலத்து நகர வாழ்க்கை	...	28
உழவர், வணிகர் வாழ்க்கை	...	35
அந்தணர் வாழ்க்கை	...	50
சமுதாயத் தலைவர்கள்	...	65
ஆடை அணிகள்	...	74
மணப்பொருள்	...	89
உணவும் சுவைநீரும்	...	91
நம்பிக்கைகள்	...	115
விழாக்களும் விளையாட்டுகளும்		127
ஊர்திகள்		140

இயல் 2

பொருளியலும் வாணிகமும்

பொருளியல்	...	146
தொழில்கள்	...	148
வாணிகம்	...	156

இயல் 3

நாகரிகமும் பண்பாடும்

		பக்கம்
தமிழன் கண்ட நாகரிகம்	...	177
தமிழர் நாகரிகத்தின் சிறப்பு இயல்புகள்	...	179
மனித நலம்	...	197
வழிபாட்டுமுறை	...	204
முத்தமிழ்	...	224
வாழ்வியல் நோக்கம்	...	228
சங்ககாலச் சான்றோர் கண்ட வருங்கால உலகம்	...	239

இயல் 4

அறிவியற் கோட்பாடுகள்

உடல் உயிர்பற்றிய அறிவு	...	243
வானநூலறிவு	...	246
கால அளவுகள்	...	258

இயல் 5

மெய்ப்பொருளியல்

மெய்ப்பொருளியல்	...	268
தொல்காப்பியர் கண்ட தத்துவம்	...	270
புறநானூறு கூறும் பட்டாங்குகள்	...	276
திருக்குறளில் மெய்ப்பொருளியல்	...	304
புத்த சமண சமயங்களில் காணப்பெறும் தமிழர் தத்துவங்கள்	...	319
ஆசீவகத் தத்துவங்கள் தமிழர் தத்துவங்களே	...	237

இயல் 6

கலைகள்

		பக்கம்
கலைகள்	...	336
ஓவியக்கலை	...	341
சிற்பக்கலை	...	356
எழுத்து	...	378
இலக்கியக்கலை	...	392

இயல் 7

இசைக்கலை

இசைக்கலை	...	398

இயல் 8

கட்டடக் கலையும் நகரமைப்பும்

கட்டடக் கலை	...	420
நகரமைப்பு	...	439
பிற்சேர்க்கை	...	464

இயல் 9

பண்டைத் தமிழரும் சிந்துவெளி நாகரிகமும்

சிந்துவெளி நாகரிகம்	...	470
யார் இந்த மக்கள் ?	...	486
சிந்துவெளி நாகரிகத்தின் காலம்	...	490
பிற்சேர்க்கை	...	492
சிந்துவெளி நாகரிகம் (நிலப்படம்)	...	472

தமிழ்நாட்டு வரலாறு

சங்ககாலம் - வாழ்வியல்

இயல் 1

சமுதாயம்

சமுதாய அமைப்பு

மனிதனை, கூடிவாழும் விலங்கு என்பர்.[1] மனித இனம், நாகரிகம் அடைவதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பிருந்து கூடிவாழும் இயல்புடையதாக இருந்துவருகிறது. காலப் போக்கில், இக் கூடிவாழும் இயல்பினால் மக்களினம் விரிந்தும் பரந்தும் வளர்ச்சியுற்றது. இதன் விளைவாக வாழும் இடம், பேசும் மொழி, செய்யும் தொழில் முதலியவற்றின் அடிப்படையில் பல குழுக்களும், கூட்டங்களும், சமுதாய நிறுவனங்களும் தோன்றின. இவற்றிற்கு இடையே உண்டான உறவும் பிணைப்பும் பையப்பைய இறுகி, நெருக்கமான தொடர்புடைய மனித சமுதாய நிறுவனங்கள் பல உருவாயின.

சமுதாயம்

'சமுதாயம்' என்னும் வடமொழிச் சொல்லிற்குத் தமிழில் ஆறுவகையான பொருள்கள் வழங்கிவருகின்றன. அவை: மக்களின் திரள், பொருளின் திரள், கோயிலின் நிருவாக அதிகாரிகளின் கூட்டம், பொதுவானது, பொதுவாகவேனும் அவரவர்க்குரிய பங்குப்படி பிரித்தேனும் அனுபவிக்கப்படும் ஊர்ப் பொதுச்சொத்து, உடன்படிக்கை[2] என்பன. 'மக்களின் திரள்' என்னும் முதற் பொருளிலேயே 'சமுதாயம்' என்னும் சொல்லினை, இக்காலத்தில் நாம் வழங்குகிறோம். பண்டைக் காலத்தில், நம்முடைய முன்னோர்கள் 'மன்பதை' என்னும் சொல்லையே இப் பொருளில் கையாண்டுள்ளனர்.[3] இச் சொல்லிற்கு 'மக்கட்பரப்பு' அல்லது 'மக்கள் கூட்டம்' என்பதே பொருளாகும்.

ஆனால், இக்காலத்தில் 'சமுதாயம்' என்னும் சொல்லை ஓரளவிற்குச் சுருங்கிய பொருளில், 'சொசைட்டி'[4] என்னும்

---

1 Jowett, T. M., *Aristotle's Politics*, OUP, London, 1905, Ch. I. p.18

2 தமிழ் லெக்சிகன், பக். 1302

3 'மன்பதை காக்கும்நின் புரைமை' (புறம். 210 : 1)

4 Society

ஆங்கிலச் சொல்லிற்கு நேரான இந்தியச் சொல்லாக, நாம் பயன்படுத்துகிறோம். 'சொசைட்டி' என்னும் ஆங்கிலச் சொல் பல்வேறு பொருள்களை உணர்த்துகிறது. பல்வேறு கோணத்தில், பலவாக அறிஞர்கள் அதனுடைய செறிவும் சிக்கலுமிக்க பொருளினை விளக்க முயன்றுள்ளனர். 'கூடிச் செயற்படுவதில் நாட்டத்தையும், பொதுவான நோக்கங்களையும், பற்றார்வத்தையும் உடையதாய் உள்ள சமூகமோ, நாட்டினமோ,[5] பரந்துபட்ட மக்கள் கூட்டமோ சமுதாயம் எனப்படும். அது பல மக்களின் கூட்டுத்திரளாகும்'[6] என்னும் பொருளே பெரு வழக்கில் இன்று உள்ளது எனலாம். இப் பொருளிலேயே 'சமுதாயம்' என்னும் சொல், இந் நூலில் பயன்படுத்தப் பெறுகிறது.

சமுதாயம் என்னும் சொல்லிற்குப் பலவகையான விளக்கங்களை அறிஞர் பெருமக்கள் தந்துள்ளனர். அறி வாராய்ச்சித் துறைகளின் நோக்கிற்கும் போக்கிற்கும் ஏற்ற வகையில், அவ் விளக்கங்கள் அமைந்துள்ளன. அவை யாவும் சமுதாயத்தின் பல்வேறு இயல்புகளையும் நிலைகளையும் சுட்டுவனவாக அமைந்துள்ளன.

ஒரு பொதுவான நோக்கத்தோடு செய்யப்படும் மனி தருடைய பொதுவான செயல்களினால், முறையாக விளையும் பயனைத் துய்ப்பதற்குரிய அமைப்பாகச் சமுதாயம் விளங்கி வருகிறது. அப்பொழுது அதன் நோக்கம் வாழ்க்கையின் பயன் மதிப்புகளுள் ஒன்றையோ, பலவற்றையோ அடைவதற்குரிய முயற்சியாகவும் இருக்கலாம். ஆனால், சமுதாயத்தை உரு வாக்கும் பணியைச் செய்வது மக்களின் பொதுநோக்கமோ, பயன்மதிப்போ அன்று என்பது, பல்வேறு சமுதாய அமைப்பு களை ஆராய்ந்து பார்க்கின்றபொழுது தெரிகிறது. ஒத்த நோக்கமும், பயன்மதிப்பை அடைவதற்கு ஒன்றாகச் சேர்ந்து மக்கள் பணிபுரிவதுமே சமுதாயத்தை உருவாக்குகிறது எனக் கருதுவது தவறாகாது.

சங்ககாலத் தமிழ்ச் சமுதாயம்

சங்ககாலத் தமிழ்ச் சமுதாயம், சமய நம்பிக்கையை மட்டும் அடிப்படையாகக் கொண்டது அன்று; மனிதன் மனிதனாக

5 Nation
6 Webster's Third International Dictionary, G. Bell & Sons., London, 1961, p.2162

வாழவேண்டும் என்னும் மனிதநலக் கோட்பாட்டினையும் அடிப் படையாகக் கொண்டு அமைந்திருந்தது. தனிமனிதன், தன் ஆளுமையை[7] வளர்த்துக் கொள்ளவும், அறநெறியில் நின்று இவ்வுலக வாழ்க்கையின் பயன்களை நுகரவும் அன்றைய வழி வகைகளை வகுத்துக் கொடுத்தது. அரசிற்காகத் தனிமனிதன் வாழவேண்டும் என்ற பண்டைய கிரேக்கரின் கோட்பாடு, நம் தமிழ்நாட்டு முன்னோரிடம் இருந்தது இல்லை.

பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தின் அடிப்படை

இந் நூற்றாண்டின் முற்பகுதியில், தனிமனிதர் பலரின் கூட்டுத்தொகையே 'சமுதாயம்' என்று அறிஞர் சிலர் அறிவித் தனர். நம் முன்னோர்கள், குடும்பங்கள் பலவற்றின் கூட்டுத் தொகையாகவே சமுதாயத்தைக் கருதினர். இன்றைய சமுதாயத்தின் அடிப்படை அலகாகத் தனிமனிதர் கொள்ளப் படுகின்றனர். பண்டைத் தமிழிலக்கியங்களில் அன்றைய தமிழ்ச் சமுதாயம், குடும்பங்கள் பலவற்றின் கூட்டுத்தொகை யாகவே காட்சியளிக்கின்றது.

சமுதாயத்தின் முதன்மையான உறுப்பாகக் குடும்பம் கருதப் பட்டது. குடும்பத்தின் தலைவனாகத் தந்தையும், குடும்ப வாழ்வினைத் திறம்பட நடத்தும் பொறுப்பினளாகத் தாயும் விளங்கினர். குடும்பம், மக்கள் பலருக்குப் பணிபுரியும் நல்ல தோர் அமைப்பாகச் சிறப்புற்றது. குடும்பத் தலைவன் 'கிழவன்' எனவும், தலைவி 'மனையோள்' எனவும் சுட்டப் பெற்றனர்.[8]

இத்தகைய குடிகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனிப் பண்புகள் இருந்தன. அவற்றைக் 'குடிமை' என்பர்.[9]

குடும்பங்கள் பல சேர்ந்து வாழும் இடம் **சேரி** எனப் பட்டது. 'சேர்' என்பதற்கு நெருங்கு, கூடு, திரள் என்பன பொருள். கூட்டமாகத் திரண்டு நெருக்கமாக மக்கள் சேர்ந்து வாழ்ந்த இடம் **'சேரி'** எனப் பெயர் பெற்றது.[10] பிற்காலத்தில்

---

7 Personality
8 தொல். பொருள். செய். 188
9 ஷெ மெய்ப். 25
10 ஷெ செய். 189
'சேரி இளையர் செலஅரு நிலையர்' (பரிபா. 6:38)
'மீன்சீவும் பாண்சேரி' (புறம். 348:4)
'ஆடுவார் சேரி' (பரிபா. 7:32)

'பார்ப்பனச்சேரி', 'பறைச்சேரி' என்றெல்லாம் ஒவ்வொரு வகுப்பினர் வாழ்ந்த இடங்களைக் குறிப்பிட்டனர்.

பல சேரிகளைக் கொண்டது ஓர் ஊர். ஊரில் மக்கள் நிலையாகத் தங்கி வாழ்ந்ததோடு, தங்கள் தொழில்களை முறையாகச் செய்தும்வந்தனர். அங்குத் தொழில்வழிப் பல சமூகங்கள் தோன்றின. சமூகத்தின் உறுப்பினர்களான தனிமனிதர், தங்களுக்குள் கலந்து உறவாடியதோடு, பிற சமூகத்தினரோடும் தொடர்பு கொள்ளலாயினர். காலப்போக்கில் அத் தொடர்பு விரிந்தும் பரந்தும் பெருகலாயிற்று. அதன் பயனாகச் சங்ககாலத் தமிழ்ச் சமுதாய அமைப்பு, தெளிவானதொரு வடிவத்தைப் பெற்றது.

இக்காலத்தில், சமுதாய நிறுவனங்களையும் அமைப்புகளையும் அரசின் ஆதிக்கம் கட்டுப்படுத்துவது பெருகிக்கொண்டே வருகிறது. ஆனால், சங்ககாலத் தமிழ்ச் சமுதாயத்தில், சமுதாயக் குழுக்களுக்குப் பேரளவிற்கு உரிமை அளிக்கப்பட்டிருந்தது. அத்தகைய சமுதாயத்தில், தனிமனிதன் ஒவ்வொருவனும் சமுதாயக் குழுக்களின் ஓர் உறுப்பினனாகவே கருதப் பெற்றான். அதனால், நாட்டுமக்களிடையே குழுமனப்பான்மை மேலோங்கி நின்றது. அம் மனப்பான்மை சமுதாயத்தின் கட்டுக்கோப்பிற்கும், நாடாளும் அரசின் ஆற்றலுக்கும் அரணாக அமைந்திருந்தது.

தமிழ்ச் சமுதாயத்தின் தோற்றம்

பண்டைத் தமிழகம், நிலவியல் அடிப்படையில் நானிலமாகப் பாகுபடுத்தப்பட்டிருந்தது. அவற்றைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று வழங்கினர். நானிலத்திலும் நான்கு வகைப்பட்ட சமுதாய அமைப்புகள் தோன்றி வளர்ந்தன. அவற்றிற்கேற்ப அவர்களுடைய வாழ்க்கை முறைகளும் வேறுபட்டன. அவை வெவ்வேறு சமூகங்கள் கிளைத்தெழக் காரணமாயின. நானிலத்தில் வாழ்ந்த மக்கள், தாங்கள் வாழ்ந்த நிலத்தாலும், செய்த தொழிலாலும் பல சமூகங்களாக வேறுபட்டிருந்தனர். இத்தகைய **வாழ்நிலப் பரப்புவழிச் சமூகங்களை**[11] நிலைக்களனாகக் கொண்டு தொடக்க காலத்தில் தமிழ்ச் சமுதாயம் தோன்றியது எனலாம். பின்னர், பையப்பையத் **தொழில் வழிச் சமுதாய அமைப்பு** உருவாகத் தொடங்கியது.

---

11 Territorial communities

பண்டைத் தமிழகத்தில் வாழ்ந்த தமிழ்மக்கள் பல்வேறு கால்வழிகளாகச்[12] சிறப்புற்று விளங்கினர்.[13] பொதுவாக அக் கால்வழியினரைத் **தமிழ்க் குடிகள்** என்று சுட்டுவது மரபாகும்.[14]

பழமையான குடிகள்

நானிலத்து ஐந்திணை மக்களுள் குறவர் குடி,[15] வேட்டுவர் குடி,[16] ஆயர் குடி,[17] கானவர் குடி,[18] உழவர் குடி,[19] பரதவர் குடி,[20] நுளையர் குடி,[21] எயினர் குடி,[22] மறவர் குடி[23] என்பன அத் தமிழ்க்குடிகளில் சிலவாகும். இக் குடிகளோடு தொழில்வழிக் குடிகளும் நாளடைவில் தோன்றலாயின. இக் குடிகளைப் பழமையான குடிகளாகப் பண்டைத் தமிழர் போற்றினர். **பழமையான குடிகள்** என்பதற்கும், பழங்குடி மக்கள் என்பதற்கும் இடையே நுட்பமான வேறுபாடு உண்டு.[24]

நால்வகைக் குடிகள்

மாங்குடிகிழார் என்னும் புலவர்,

'**துடியன் பாணன் பறையன் கடம்பன்**என்று
இந்நான்கு அல்லது குடியும் இல்லை'[25]

என்று குறிப்பிட்டு உள்ளார். இவ்வடிகளை ஆராய்ந்த அறிஞர் சிலர் துடியன், பாணன், பறையன், கடம்பன் எனப்பட்ட நான்கு குடியினரும் திராவிடருக்கு முற்பட்ட பழங்குடி மக்களாவர் என்று குறிப்பிட்டுள்ளனர். வரலாற்றாசிரியர் ஒருவர் 'இந்நான்கு அல்லது

---

12 Lineage

13 'குடி' என்னும் சொல் காலப்போக்கில் பல்வேறு பொருள்களைத் தருகிறது. எனினும், சங்கத்தமிழில் அதற்குக் குடிமக்கள், குடும்பம், வழிமரபு, சிற்றூர் என்னும் பொருள்களே வழங்கின. இங்கு வழிமரபு என்னும் பொருளிலேயே அச் சொல் பயன்படுத்தப்படுகிறது.

14 'மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
....
தாதின் அனையர் தண்தமிழ்க் குடிகள்' (பரிபா. தி. 7 : 1-5)

15 அகம். 13 : 4

16 நற். 189 : 7

17 தொல். பொருள். அகத். 23

18 நற். 65 : 6

19 அகம். 30:8

20 ஷை 10:10

21 ஷை 366:11

22 ஷை 79:14

23 ஷை 35:6

24 குறள். 955

25 புறம். 335:7-8

குடியுமில்லை' என்பது வியப்பாக இருக்கிறது என்றும், ஒருகால் ஆரியர் கலப்பில்லாத. ஆரியர் வருகைக்கு முற்பட்ட பழங்குடி மக்களை இப் பெயர்கள் சுட்டுவதாகலாம் என்றும் கருதுகிறார்.[26]

மாங்குடிகிழார் குறிப்பிடும் நால்வகைக் குடியினரும் தமிழ்க் குடிகளே ஆவர். துடியை முழக்குபவன் துடியன் என்றும், பண்ணினை இசைப்பவன் பாணன் என்றும், பறை அறைபவன் பறையன் என்றும் பெயர் பெற்றனர். கடம்பன் என்னும் பெயர் குடமுழா என்னும் கருவியை அறைபவனுக்கு வழங்கிய பெயராகும்.[27] இவை யாவும் தொழில்வழி உண்டான பெயர்களாகும்.

இந் நால்வகைக் குடியினரும் மாங்குடிகிழார் காலத்தில் போர்புரியும் வீரர் குடியோடு நெருக்கமான தொடர்புடையவராக இருந்துள்ளனர். 'இந்நான்கு அல்லது குடியும் இல்லை' என்பது. 'இவர்களே இந்நாட்டின் பழங்குடி மக்கள்' என்னும் பொருளில் புலவரால் பயன்படுத்தப்படவில்லை.

இந்தப் பாடல் பூ, உணவு ஆகியவற்றிலும் நான்கு வகைகளே இருப்பதாகக் கூறுகிறது. உண்மையில், சங்ககாலத்திலேயே வேறு பலவகைப் பூக்களும், உணவு வகைகளும் இருந்தன என்பது தெளிவு. இப் பாடல் மூதின்முல்லைத் துறையைச் சேர்ந்தது. எனவே குறிக்கப்பட்டுள்ள பூக்களும், உணவு வகைகளும், குடிகளும் மறவர் குடியோடு சிறப்பாகத் தொடர்புடையவை எனலாம்.

'துடியன், பாணன், பறையன், கடம்பன் என்று இந்நான்கு அல்லது குடியும் இல்லை' என்னும் அடிகளை நோக்குவோமானால், இந் நால்வகைக் குடிகளைச் சேர்ந்தவரே போர்வீரர்களுக்குப் பணிபுரியும் தகுதியும் உரிமையும் பெற்றிருந்தனர் என்பது புலனாகும்.

தொல்காப்பியர் நிலப்பெயர், குடிப்பெயர், குழுப்பெயர் என்று குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத் தக்கது.[28] நிலப்பெயர் என்பது வாழுகின்ற நிலப்பகுதியால் பெறும் பெயராகும். சோழ நாட்டில் வாழ்பவனைச் சோழியன் என்றும், அருவா (தொண்டை) நாட்டில் வாழ்பவனை அருவாளன் என்றும் சுட்டுவது நிலப்பெயராகக் கொள்ளத் தக்கவையாகும்.

---

26 Pillay, Dr. K. K., *A Social History of the Tamils*, Vol. 1, p.232

27 சூடாமணி நிகண்டு, 11:18

28 'நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே'—தொல். சொல். பெயர். 11

அதைப்போன்று, குறிப்பிட்ட ஒரு குடியில் பிறந்தவனை, அக் குடியின் பெயரால் அழைப்பது வழக்காகும். குடிப்பெயராவன மலையமான், சேரமான் போன்றவை ஆகும்.[29] இத்தகைய குடிகள் பல, தொன்றுதொட்டுச் சீரும் சிறப்பும் பெற்று விளங்கின.

நானிலத்து வாழ்ந்த மக்களின் பெயர்கள், தொழில்கள், வாழ்க்கைக்கூறுகள் போன்றவற்றை அவரவர் வாழ்ந்த நிலத்தின் அடிப்படையில் காண முயல்வோம்.

நானிலத்து வாழ்க்கைப் பாங்குகள்

தமிழக மக்களின் வாழ்க்கை, இரு வகையாக அமைந்திருந்தது. நகரத்தில் வாழ்ந்தவர்களின் வாழ்க்கையும், கிராமத்தில் வாழ்ந்தவர்களின் வாழ்க்கையும் ஒன்றுபோல் அமையவில்லை. பொதுவாக நகர்ப்புற வாழ்க்கை, கிராமப்புற வாழ்க்கை என இரண்டாகப் பகுத்து அறிவது உண்மையைக் காண்பதற்குரிய வழியாகும்.

நாட்டுப்புற வாழ்க்கை, இயற்கை அடிப்படையில் பிரித்து ஆராய்வதற்கு ஏற்றவாறு அமைந்துள்ளது அக்கால அறிஞர்களும் இயற்கை அடிப்படையிலேயே இதனைப் பகுத்துப் பேசியுள்ளனர். பொதுவாக நிலப்பரப்பை நான்கு பகுதிகளாகப் பிரித்து. அச் சூழல்களைத் துணையாகக்கொண்டு பாடல்களைப் பழந்தமிழர் எழுதியுள்ளனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பவை ஆகும்.[30] சிலர் இவற்றுடன் பாலை என்னும் ஒரு பிரிவையும் சேர்த்து ஐந்து பிரிவுகள் உள்ளன என்பர் ஆனால், பழைய இலக்கணமாகிய தொல்காப்பியம் நான்கு நிலப்பிரிவுகளையே குறிக்கிறது என்பதனை நினைவுகூர்தல் வேண்டும். சில நேரங்களில், குறிப்பாகக் குறிஞ்சியிலும் முல்லையிலும் வறட்சி ஏற்படுவதுண்டு. அவ்வாறு வறண்டு தோன்றும் அந்நிலப்பகுதிகளைப் பாலை எனக் கூறுவர். அப் பகுதிகள் எப்பொழுதும் வறண்டு பாலையாகவே இருந்துவிடுவதில்லை என்பது உணரத்தக்கது.

அவ்வப் பகுதிகளில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைப் பாங்கினை விரிவாகப் பார்ப்போம்.

---

29 ஷெ சேனா உரை
30 தொல் பொருள். அகத். 5

குறிஞ்சிநில வாழ்க்கை

மலைகள் உள்ள இடங்களுக்கும் அவற்றைச் சார்ந்துள்ள இடங்களுக்கும் குறிஞ்சி என்பது பெயர். இவ்விடங்களில் குறிஞ்சிச் செடிகள் நன்கு வளர்வதால் இப்பெயர் உண்டாயிற்று.[31] குறிஞ்சி நிலத்தில் இருந்த ஊர்களுக்குக் குறிச்சி என்பது பெயர். குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்தவர்களின் முதன்மையான தெய்வம் முருகன்.[32]

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்களுக்குக் குறவர் என்பது பெயர். ஏனைய திராவிட மொழிகளிலும் இப் பெயர் திரிந்தும், மருவியும் வழங்கி வருகிறது.[33] குறவர்க்குக் கானவர் என்றும் பெயர் உண்டு. குறிஞ்சி நில ஆண்மக்கள் குறவன், கானவன், வெற்பன், புனவன் என்றெல்லாம் பெயர் பெற்றிருந்தனர். பெண்கள் குறத்தி, கொடிச்சி என்று சுட்டப்பட்டனர்.

குறவர்கள் சிறு குடில்களை அமைத்துக்கொண்டு அவற்றில் வாழ்ந்தனர்.[34] இக் குடில்களை மரக்கிளை, மூங்கில் முதலிய வற்றினால் அமைத்தனர்.[35] அவற்றின் கூரைகளைத் தினைத் தாளினால் வேய்ந்தனர்.[36] இக் குடில்கள் குரம்பைகள் என இலக்கியங்களில் குறிக்கப்படுகின்றன.

மலைச்சாரலிலும் மலையைச் சார்ந்த இடங்களிலும் தினை, ஐவனம் (மலைநெல்) என்னும் தானியங்களைக் குறவர்கள் பயிர்செய்தார்கள். மலைச்சாரலில் உழுது பயிர்செய்பவர் என்னும் பொருளில் அவர்கள் 'கான் உழு குறவர்' எனக் கூறப் பட்டனர்.[37] பயிர் செய்வதற்கு முன்பு நிலம் பண்படுத்தப்படும். மலைச்சாரலிலுள்ள சந்தனமரம், அகில்மரம், தேக்குமரம், வேங்கைமரம் முதலான மரங்களையும் செடிகொடிகளையும் வெட்டி அப்புறப்படுத்துவார்கள். மரங்களின் வேர்களைப் பறித்துத் தீயிட்டுக் கொளுத்துவார்கள்.[38] அகில் மரங்களை வெட்டி வேர்களைச் சுடுவதனாலே உண்டாகிய புகை நறுமணத்

---

[31] புறம். 374:8 ; அகம். 308:16 ; குறுந். 3:3
[32] தொல். பொருள். அகத். 5
[33] மலையாளம்-'குறவன்' ; தெலுங்கு, கன்னடம் - 'கொறவ' ; துளுமொழியில்-'கொறக'
[34] புறம். 129:1; அகம். 272:10-11
[35] நற் 285 : 7
[36] குறிஞ்சிப். 153; ஐங்குறு. 252:1
[37] நற். 209:2
[38] புறம். 159:16; குறுந். 198:1 ; ஐங்குறு. 253:1

துடன் வெண்மேகம் போலக் குறவர்களின் ஊர்களில் செல்லுவது உண்டு.[39] இவ்வாறு பண்படுத்திய நிலங்களைப் புழுதியாக்கித் தினையையும், ஐவனநெல்லையும் விதைத்துப் பயிர் செய்வார்கள். மழை பெய்யும் காலத்தில்தான் விதைப்பார்கள்.[40]

மலையருவிகளின் பக்கத்தில்தான் ஐவனம் என்னும் மலை நெல்லைப் பயிரிடுவார்கள். அங்கு மலைமல்லிகை, மரலைச்செடி ஆகிய களைகள் முளைக்கும். அவற்றைப் பிடுங்கி எறிவார்கள்.[41] தினையிடையே தோன்றும் களைகளையும் நீக்குவார்கள்.[42]

சில நேரங்களில் நிலத்தை அவர்கள் உழுவதில்லை. காட்டுப் பன்றிகள் காந்தள் கிழங்கைத் தின்னத் தோண்டி எடுக்கும். அதனால் நிலம் புழுதியாக இருக்கும். எனவே, உழாமலேயே அங்கே குறவர் தினை விதைப்பார்கள்.[43]

மலைகளில், தண்ணீர் தேங்கி நிற்பதில்லை; ஏரியோ, குளமோ, கிணறுகளோ கிடையா. அருவிநீரும் எக்காலத்திலும் கிடைக்கும் எனச் சொல்வதற்கில்லை. ஆகவே, பயிர் விளைய மழையையே எதிர்பார்த்திருப்பார்கள்;[44] மழையில்லாதபோது கடவுளைப் பாடி மழை தருமாறு வேண்டுவார்கள்; அதிகமாகப் பெய்தாலும் நிறுத்துமாறு பாடுவார்கள்;[45] மழை பெய்யுமாயின் மிகவும் மகிழ்ச்சியுறுவார்கள்; அம் மகிழ்ச்சியை உவமையாகத் தந்து, ஒரு கவிஞர் அழகிய பாடல் ஒன்று இயற்றியுள்ளார்.[46]

மழையால் பயிர்கள் நன்கு வளர்ந்தாலும் பயிர்களுக்குப் பலவகையில் சேதம் ஏற்படுவதுண்டு. பயிர்களை மான், வருடை முதலிய விலங்குகள் வந்து மேய்ந்து அழித்தன. அவற்றை ஓட்டிப் பாதுகாத்தனர். கதிர் முற்றும்போது கிளிகளும் குருவிகளும் கூட்டமாக வந்து கதிர்களைத் தின்னும். அவற்றை விரட்டியாக வேண்டும். மேலும், காட்டுப்பன்றிகளும் யானைகளும் இரவில் வந்து கதிர்களைத் தின்னும். அவற்றைத் தடுக்கக் குறவர்கள் இரவும் பகலும் தங்கள் நிலங்களிலேயே காவல் இருப்பார்கள்; பரண்கள் அமைத்துக்கொண்டு அவற்றில் தங்கியிருப்பார்கள்; மரங்களிலோ, செயற்கையாகவோ பரண்களை அமைத்துக்கொள்வார்கள்.[47] வேங்கைமரத்தில் பரண் கட்டுவது

---

39 ஐங்குறு.254:1-2; புறம். 231:1-2; நற். 282:7-8

40 அகம். 302:9-10 ; நற்.122:1-2

41 குறுந். 100:1-2

42 ஷெ 392:4-5

43 புறம்.168:2-6 ஐங்குறு.270:1-2

44 அகம். 189:1-3

45 புறம். 143:1-5

46 அகம். 159:15-19

47 ஷெ 42:9-12

வழக்கம். உயரமான இடத்தில்தான் பரண் இருக்கும்.[48] அப்பொழுதுதான் அவர்கட்குப் பாதுகாப்பாக அமைவதோடு நிலத்தின் எல்லாப் புறங்களையும் நன்கு பார்க்க முடியும். இதண் என்றும் சழுது என்றும் பரணுக்குப் பெயர்கள் வழங்கின. தினைப்புனத்தைக் குறமகளிர் காவல் புரிவர்.[49] தட்டை, தழல், குளிறு, கவண் முதலிய கருவிகளைக்கொண்டு ஒலி உண்டாக்கியும் கல்லெறிந்தும், விலங்குகளையும் பறவைகளையும் ஓட்டுவர்.[50] இவற்றை இப்பொழுதும் குறிஞ்சிநிலப் பகுதிகளில் காணலாம். வேங்கை மரத்தின் மேலே சந்தன மரக்கிளைகளைக் கொண்டு கட்டி, புலித்தோல் பரப்பி அமைத்த பரண் கூறப் படுகிறது.[51]

தழல், தட்டை என்பன ஓசை எழுப்பும் கருவிகள். தழல் என்பது பிரம்பு, சில கொடிகள் முதலியவற்றினால் பின்னிச் சுற்றி ஒலி எழுப்புவது;[52] தட்டை என்பது மூங்கிலைப் பிளந்து செய்யப்படுவது.[53] குளிறு என்பது குருவி ஓட்டும் கருவி.[54] கவண் என்பது கல் எறியும் கருவியாகும்.

தினைப்புனத்தில் பரண்மீது இருந்து, குறமகளிர் காவல் புரியும்போது பாட்டுப்பாடி மகிழ்ச்சியாய் இருப்பர்.[5] குளிறு என்னும் கருவியால் எழுப்பப்படும் ஒலி அவர் பாட்டிற்குத் தாளமாய் அமையும்.[56] அம் மகளிர் கிளைகளிலுள்ள பூக்களைப் பறித்து மாலைகட்டித் தலைக்கு அணிவார்கள்.[57]

சில சமயங்களில் யானைகள் வந்து பயிரை அழிக்கும்.[58] அப்போது குறவர்கள் சீழ்க்கை அடித்தும், கவண் எறிந்தும் அவற்றை விரட்டுவார்கள். அதனால் அச்சம்கொண்ட யானைகள் பிளிறிக்கொண்டும், மரக்கொம்புகளை ஒடித்துக்கொண்டும் ஓடும்.[59] அவற்றை அம்பு எய்து விரட்டுவதும் உண்டு.[60]

---

48 அகம். 308:9
49 ஐங்குறு. 283:1-3, 285:1-3; நற். 206:1-6
50 நற். 194:5-6, 216:6-8; அகம். 32:5-6, 188:11-13
51 ஷை 351:5-8
52 குறிஞ்சிப். 40-44
53 அகம். 388:2 மலையாளத்தில் 'தட்ட', கன்னடம் 'தட்டெ'.
54 குறுந்.360:5-6
55 அகம். 118: 12-13; சிலப். 27: 223-24
56 குறுந். 291: 1-3
57 ஷை 142: 1-2
58 அகம். 148: 3-6
59 குறிஞ்சிப். 156-165
60 அகம். 392: 12-15; நற். 108 : 1-5

திணைப்புனத்தைக் காவல் புரிந்தவருக்குத் துன்பம் தந்த இன்னொரு விலங்கு காட்டுப்பன்றியாகும். காட்டுப்பன்றிகள் கூட்டம் கூட்டமாக வந்து வள்ளிக்கிழங்குகளை அகழும்; பயிர் நிலங்களில் புகுந்து கதிர்களைத் தின்னும். காட்டுப்பன்றியின் பற்கள் மிக வலுவுடையவை. அது புலியுடனும் போர்செய்ய வல்லது; திணைக்கதிர்களைத் தின்றுவிட்டுப் புலிக்கு அஞ்சாமல் மூங்கில் புதரில் உறங்குமாம்.[61] கானவர் அம்பு எய்து விரட்டுவர். அம்புபட்ட பன்றி ஓடி, விழுந்து சாகும். காட்டு வழிச் செல்வோர் அவ்வாறு இறந்துபடும் பன்றியைக் கண்டால் அதனை அறுத்து, தீக்கடை கோலினாலே தீ உண்டாக்கி இறைச்சியைத் தீயில் வாட்டித் தின்பார்கள்;[62] பொறி வைத்துப் பன்றியைப் பிடிப்பார்கள். அப் பொறிக்கு 'அடார்' என்பது பெயர்.[63] பயம்பு அமைத்துக் காட்டுப்பன்றியைப் பிடித்துக் கொல்வதும் உண்டு. இதனைப் பொய்க்குழி எனக் கூறலாம்.[64]

பரண்மீதிருந்த குறவர்கள் கவண் எறிந்து விலங்குகளையும் பறவைகளையும் அடிப்பதுண்டு;[65] இரவில் வரும் கொடிய விலங்குகளைக் கொள்ளிக்கட்டைகளினால் ஓட்டுவார்கள்.[66] சில நேரங்களில் கொள்ளிகளை மரங்களில் கட்டித் தொங்க விடுவதும் உண்டு. அவை ஊர்களிலிருந்து பார்ப்பவர்களுக்கு விண்மீன்களைப் போலத் தோன்றும்.[67] அவற்றைக் கண்டு விலங்குகள் அஞ்சி ஓடும்.

திணை அறுத்தபின், அதே இடத்தில் அவரை, மொச்சை ஆகிய பருப்பு வகைகள் பயிரிடப்படுவதுண்டு.[68]

சில இடங்களில் வாழை பயிரிடப்பட்டது.[69] வாழைப் பழங்களைக் குரங்குகள் பறித்துத் தின்னும்.[70] மலைச்சாரல் களில் பலாமரங்கள் வளர்ந்தன. தம் குடில்களுக்கு அருகிலும்

---

61 ஐங்குறு. 262 : 1-2; நற். 386 : 1-5
62 மலைபடு. 243-49
63 நற். 119 : 1-2
64 மதுரைக். 294-95; நற். 336 : 1-6
65 அகம் 292 : 10-14
66 குறுந். 357 : 5-6
67 ஷை 150 : 1-2; குறிஞ்சிப். 226; அகம். 73:14-16; நற். 393:4-7
68 ஐங்குறு. 286:1-2; குறுந். 82: 4-6
69 சிறுபாண். 21; அகம். 332:9 நற். 222:7, 225 : 3-5
70 நற். 251 : 1-3

குறவர்கள் பலாவை வளர்த்தார்கள்.[71] குறவர் குரங்குகளைப் பிடிக்க வலை கட்டிவைத்தார்கள்.[72] பலாப்பழங்கள் கிளைகளிலும், வேரிலும் காய்க்கும்.[73] குறப்பெண்கள் பலாப்பழங்களைத் தின்றுவிட்டுக் குரங்குக்கும் கொடுத்தார்கள்.[74] பலாச் சுளையிலிருந்து ஒருவித மது உண்டாக்கிக் குறவர்கள் பருகினார்கள்.[75] இது கள்ளாக இருக்க முடியாது. இக்காலப் பழச் சாறு போன்ற சுவைநீராக இருக்கக்கூடும்.

மலைகளில் தேன் கிடைக்கும். உயர்ந்த பாறைகளிலும் இடுக்குகளிலும் மரங்களிலும் தேன் கூடுகள் காணப்படும்.[76] அவை பார்ப்பதற்குக் கேடயங்கள் போலத் தோன்றும்.[77] அந்த உயர்ந்த இடங்களில் குறவர் ஏறித் தேன் எடுப்பார்கள்.[78] தேனிலிருந்து ஒருவகை மது உண்டாக்கினார்கள். இதனை மூங்கிற் குழாய்களில் ஊற்றி வைத்துக்கொள்வர்.[79] மேலும் மாம்பழம், பலாப்பழம், தேன் ஆகியவற்றைக் கலந்து ஒருவித மது உண்டாக்கி அவர்கள் குடித்து மகிழ்ந்தனர்.[80]

கானவன் வேட்டையாடுவான். அவன் காலில் செருப்பு அணிதல் உண்டு.[81] அதற்குத் தொடுதோல் என்பது பெயர். எப்பொழுதும் தன்னோடு நாய்களைக் கொண்டுபோவான்.[82] முள்ளம்பன்றியை வேட்டையாடி வந்தவரின் மனைவிமார் அவ்விறைச்சியைப் பக்கத்திலுள்ளவர்களுக்கும் பகிர்ந்து கொடுப்பர்.[83] வேட்டைக்குச் சென்றோர் யானையைக் கொன்று தந்தத்தை எடுத்து வருவதும் உண்டு; அதற்குப்பின் வேட்டையலுப்புப் போக, பலாப்பழ மதுவை அருந்துவார்கள்.[84] வேட்டையாடி முள்ளம்பன்றியைத் தூக்கி வந்த கானவனை, அவனுடைய

---

71 நற். 77:5-6; குறுந். 365:4
72 குறுந். 342:1-4
73 ஷை 18:1, 83:3-4
74 நற். 353:3-6
75 அகம். 182:3
76 குறுந். 179:4; 273:5; அகம். 242:21; மதுரைக். 3-4
77 ஷை 392:6-8
78 மலைபடு. 315-17; அகம். 322:12
79 நற். 276 9; அகம். 348:4-9
80 அகம். 102:1-2, 348;2-9, 368:14-15
81 ஷை 368:1
82 ஷை 28:7-8, 158:15, 182: 5-6, 318: 13-15
83 ஷை 85: 9-11
84 ஷை 182:3-6

நாய்கள் ஓடிப்போய்ச் சூழ்ந்துகொண்டு மகிழ்ச்சிக்குரல் எழுப்பின.[85]

குறவர்கள் யானைத் தந்தத்தை விற்று உணவுப் பொருள்கள் பெறுவதுண்டு.[86] யானைத் தந்தங்கள் மிகுதியாகச் சேர நாட்டில் கிடைத்தன. யவனக் கப்பல்கள் தந்தங்களையும் மிளகையும் வாங்கிப் போனதாகப் பல குறிப்புகள் உள்ளன. இயற்கையிலேயே நிறைய மிளகு அங்குக் கிடைக்கப்பெற்றது. சங்க இலக்கியங்கள் இது குறித்து நன்கு பேசுகின்றன.[87]

குறவர்கள் வாழும் ஊர்களில் பொது இடம் இருந்தது. அதற்கு 'மன்று' என்பது பெயர். பெரும்பாலும் அந்த இடம் வேப்பமரத்தின்கீழ் இருந்தது. குறவர்கள் ஊரின் பொதுச் செயல்களைக் குறித்து அம் மன்றிலிருந்தே கலந்து பேசுவார்கள். சில நேரங்களில் மன்றில் குரவைக் கூத்தாடுவதும் உண்டு;[88] குறிஞ்சிப்பண்ணுடன் பாடுவதும் உண்டு.[89]

முல்லை நில வாழ்க்கை

மலைகளையும் மலைகளைச் சார்ந்த பகுதிகளையும் விட்டு வந்தால், காட்டுப்பகுதிகள் காணப்படும். காடுகளும் அவற்றைச் சார்ந்த பகுதிகளும் முல்லைநிலம் என்று வழங்கப்படும். இப் பகுதிகளில் முல்லைக் கொடிகள் சிறப்பாக வளர்ந்தமையால், இவற்றிற்கு இப் பெயர் ஏற்பட்டது. இப் பகுதியில் செடிகளும், புதர்களும், மரங்களும் இருந்தன. மான், முயல் முதலிய விலங்குகள் திரிந்தன. ஆடு, மாடு, எருமைகள் வளர்க்கப் பட்டன. இங்கு வாழ்ந்த மக்களுக்குக் கோவலர், இடையர், ஆயர், ஆய்ச்சியர் என்னும் பெயர்கள் வழங்கின. மக்கள் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகியவற்றை விற்றார்கள். சிலர் உழவுத்தொழில் செய்தார்கள்; கேழ்வரகு, வரகு, அவரை முதலிய புன்செய்ப் பயிர்களைப் பயிர்செய்தனர்.

முல்லைநில மக்கள் மாயோனாகிய திருமாலைத் தெய்வமாக வணங்கினர்.[90] ஆரிய-திராவிடக் கலப்பு ஏற்பட்ட காலத்தில்

---

85 நற். 285: 3-7; அகம். 284: 8-9
86 குறுந். 100: 1-5
87 நற். 151:7; குறுந். 288 1; புறம்.168:1-2; அகம். 112:14; 149:10, 272:10-12; சிலப். 28:114
88 மலைபடு. 320-22; அகம் 232:6
89 நற். 255:2-3; சிலப். 27:224; அகம். 102:5-6
90 தொல். பொருள். அகத். 5

தமிழரின் மாயோனுடன், ஆரியரின் விஷ்ணு இணைக்கப் பட்டிருக்கலாம்.

முல்லைநில மக்கள், குடிசை வீடுகளில் வாழ்ந்தார்கள்; மண் சுவர் எழுப்பி, வரகுதாளால் கூரையை வேய்ந்திருந்தனர்;[91] சுவரின்மீது செம்மண் பூசினார்கள்.[92]

இடையர்கள் ஆட்டுமந்தைகளையும் பசு எருமை மந்தை களையும் வளர்த்தார்கள். காட்டுக்கு ஓட்டிப்போய் இடையர்கள் அவற்றை மேய்ப்பார்கள். அப்பொழுது கன்றுக்குட்டிகளும் ஆட்டுக்குட்டிகளும் துள்ளிக்குதித்தன.[93] பரவலாக மேயும் ஆடு மாடுகளை ஒன்றுசேர்ப்பது ஒரு விந்தையாம். உதட்டை மடித்து இடையன் சீழ்க்கை அடித்தால், அவை ஒன்றுசேர்ந்துவிடும். ஆனால், அவ்வொலி கேட்டு முயல்கள் ஓடிப்போய் புதரில் மறையும்.[94] ஆட்டுக்குட்டிகளைப் பிடித்துப்போக நரிகள் வருவதுண்டு. அவற்றை விரட்ட இடையன் சீழ்க்கையடிப்பான். அவை பயந்து ஓடிப்போகும்.[95] மாலைக்காலம் வந்தவுடன் ஆட்டுமந்தைகளைக் காட்டில் ஓரிடத்தில் சேர்த்துப் பட்டியில் அடைப்பார்கள். அவர்களும் அங்கேயே காவல் இருப்பார்கள். அங்குத் தீக்கடைகோலைக் கடைந்து தீ உண்டாக்கி, விறகு களைக் கொளுத்தித் தீ மூட்டுவார்கள். குளிர்காய்வதற்காகவும், கொடிய விலங்குகள் காட்டிலிருந்து அங்கு வராமலிருப்பதற் காகவும் இத் தீ பயன்படும். சில நேரங்களில் நரிகள் வராமலிருக் கும் பொருட்டும் சீழ்க்கை அடிப்பார்கள்.[96] நிலங்களில் காவல் காப்போர், காட்டுப்பன்றிகள் வந்து பயிரை அழிக்காதபடி அவற்றை விரட்டக் 'கொம்பு' என்னும் கருவியை ஊதிப் பேரொலி எழுப்புவார்கள். எனவே, கொம்பின் ஒலியும் விலங்குகளை அச்சுறுத்தும்.[97]

காட்டிலே தங்கியவன் தீ மூட்டி விலங்குகளை அச்சுறுத்து வான். அதன்பின் அங்கேயே ஆட்டுத்தோல்களை இணைத்துத் தைத்த படுக்கையை விரித்து, அதன்மீது படுத்து உறங்குவான். கட்டைகள் நெருப்புடன் அருகில் இருக்கும்.[98] இரவு உணவை அங்கேயே அவன் தயாரித்துக்கொள்வான்; சோறு சமைத்து ஆட்டுப்பாலுடன் கலந்து உண்பான்.[99]

---

91 பெரும்பாண். 191
92 அகம். 394.9; சிலப். 16:5-6
93 ஷெ 354.3-4
94 ஷெ 394:13-15
95 ஷெ 274:8-12
96 ஷெ 94:7-8
97 ஷெ. 94 4-12
98 மலைபடு. 418-420
99 ஷெ 414-417

ஆடு மாடுகளை மேய விட்டுவிட்டு, மகிழ்ச்சியாய்க் குழலூதி, ஆயர் இன்பம் பெறுவர். குழல்கள் மூங்கிலாலும் கொன்றைப் பழத்தினாலும் செய்யப்பட்டன.[100]

பசுக்களை மேய்க்கும் இடையர்கள் பசுமந்தையை ஊர்களுக்கு ஓட்டிக்கொண்டு போவது வழக்கம். அவ்வாறு அவை செல்லும்போது அவர்கள் குழல் ஊதிக்கொண்டு செல்லுவார்கள். பசுக்களின் கழுத்தில் மணி கட்டப்பட்டிருக்கும். அதனால் எழும் ஓசையும் குழலோசையும் மந்தைகள் ஊருக்கு வருவதை அறிவிக்கும்.[101] இடையர்கள் கையில் கோல் வைத்திருப்பார்கள். அக் கோலின் ஒரு முனை வளைந்திருக்கும். அவ் வளைவுகோலால் கிளைகளைத் தாழ்த்தி, ஆடுமாடுகளுக்குத் தின்பதற்காகக் கொடுப்பதுண்டு. அதனால் அதற்குக் கொடுங்கோல் என்று பெயர் உண்டு.[102]

இடையன் பாலை விற்றுத் தானியத்தைப் பெறுவான்.[103] இடைப்பெண்டிர் பாலைக் காய்ச்சித் தயிராக்குவார்கள்; தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பார்கள்; பிறகு மோரை விற்று நெல் வாங்குவார்கள்; மோரைக் கொடுத்துவிட்டு நெல்லை வாங்கிப் பண்டமாற்றைச் செய்துகொள்வார்கள். வெண்ணெய், நெய் விற்று அதனால் கிடைத்த நாணயத்திற்குப் பாற்பசுக்களையும் இளைய எருமைகளையும் வாங்குவார்கள்.[104]

இடையர்கள் முல்லை நிலத்தில் வரகு பயிரிட்டனர்.[105] முற்றிய வரகை அறுத்தபின் திரும்பவும் நிலத்தை உழுது பண்படுத்தி வரகு பயிரிட்டனர். அந்த வரகுகளைச் சில நேரங்களில் மான்கள் வந்து மேய்வதுண்டு.[106] மேலும் உளுந்தையும் பயிர் செய்தார்கள்.[107] அவரையும் பயறும் பயிரிடப்பட்டன. சிறிதளவு ஆங்காங்கே நெல்லையும் பயிர்செய்தார்கள்.[108]

---

100 அகம். 54.9; நற். 364.9-10

101 'மதர்வை நல்லான் மாசில் தெண்மணி
கொடுங்கோல் கோவலர் குழலோ டொன்றி
ஐதுவந் திசைக்கும்.' (நற். 69:7-9)

102 முல்லைப். 15; அகம். 74.15-16

103 குறுந். 221 3-4

104 பெரும்பாண்.154-166

105 அகம். 121:1; புறம். 327:1-7

106 நற். 121:1-5; குறுந். 220:1-3

107 நற். 89:4-6

108 அகம். 294:9-11

முல்லை நிலங்களில் அமைந்துள்ள வீடுகளில் கலப்பையும் ஆடு மாடுகளும் காணப்படும்.[109] முல்லைநில மக்களுக்கு வரகரிசிச் சோறு முக்கியமான உணவாகும். செம்மறியாட்டின் புளித்த தயிரில் சமைத்த வரகரிசிச் சோற்றுடன் நெய் கலந்து இடையர்கள் உண்டார்கள்.[110] வரகரிசியுடன் அவரைப் பருப்பைப் போட்டுச் சமைத்த பொங்கல் உணவையும் உண்டார்கள்.[111] தினையரிசிச் சோற்றுடன் பால் கலந்து உண்பதுமுண்டு.[112] தயிரையும் மோரையும் வயல்நிலப் பகுதிகட்குக் கொண்டு போய் விற்று நெல், அரிசி ஆகியவற்றை வாங்கி வந்து அவர்கள் நெல் அரிசிச் சோறும் உண்டார்கள்.[113] பயிர்வேலை செய்பவர்கள். ஆயர்மகள் தந்த வரகரிசிச் சோற்றையும் வேளைப் பூவைத் தயிரில் இட்டுச் சமைத்த புளிங்கூழையும் உண்டுவிட்டு அவரையைக் கொய்வதுண்டு.[114]

முல்லை நிலத்தில் வாழ்ந்த பெண்கள் கிளிகளை வளர்ப்பது உண்டு. அவற்றை மகளிர் தம் முன்கையில் வைத்துக்கொண்டு அவற்றோடு பேசி மகிழ்வார்கள்.[115] மேலும் தூய மயிரை யுடைய மைனாப் பறவைகளையும் அவர்கள் வீட்டில் வளர்ப்பதுண்டு.

மருதநில வாழ்க்கை

காட்டுநிலங்கட்கும் கடலோர நிலங்கட்கும் இடைப்பட்டுச் செழிப்பாக உள்ள வயல்நிலப் பகுதிகளைச் சார்ந்த இடத்தினை மருதம் என்பர். இப் பகுதியில் மருதமரங்கள் மிகுதியாய் இருந்தன.[116] ஆதலால், இதனை மருதம் என வழங்கினர்.

இந்த நிலத்துத் தலைமகன் 'மகிழ்நன்', 'ஊரன்' என்பவனாவான். தலைமகளை 'மனைவி' என்பர். குடிமக்கள் உழவர், களமர், கடையர் என்பவராவர். அவர்தம் பெண்கள் 'உழத்தியர்', 'கடைசியர்' எனப்பட்டனர். அந்த நிலத்தார் இந்திரனைத் தெய்வமாக வணங்குவர்.[117]

109 பெரும்பாண். 185-88
110 அகம். 394 2-7
111 பெரும்பாண். 193-196
112 ஷை 166-168
113 புறம் 33:1-6
114 ஷை 215:1-5
115 அகம். 341:4
116 தொல். பொருள். அகத். 5 (நச்சி. உரை)
117 ஷை

இப் பகுதியினரின் முக்கியத் தொழில் உழவாகும். உழுவ தற்குப் பழக்குவிக்கப்பட்ட எருதுகளைப் பூட்டி உழவு செய்தனர். கலப்பையின் கொழு, நிலத்தில் மறைய அமுக்கி உழுதனராம்.[118] வயல், 'செய்' என்றும் 'செறு' என்றும் பெயர் பெற்றிருந்தது.[119] செந்நெல், தோப்பிநெல், மூங்கில்நெல் எனப் பலவகை நெல் இருந்தன.[120] மேலும், வெற்றிலைக் கொடிகளை வளர்த்துப் பயிர் செய்தனர்.[121]

உழவுக்கு எருமைகளையும் பயன்படுத்தினர்.[122] நெல் நடச் சேற்றில் உழவு செய்யவேண்டும் என்பது எல்லோரும் அறிந்த செய்தி. அவ்வாறு சேற்றுழவு செய்ததாக நற்றிணைப் பாடல் கூறுகிறது.[123] பெருங்குளத்திலிருந்து நீர் நிலத்திற்கு வரும் போது சில வாளைமீன்களும் நிலப்பகுதிக்கு வருவதுண்டு. வயல்களைக் 'கழனி' என அழைப்பதும் உண்டு.[124] அம் மீன்களை உழவர்கள் தம் கைகளிலுள்ள கோல்களால் அடிப்பார்கள்.[125] அவ்வாறு கிடைக்கும் மீன்களை, கழனிக்கு விதைநெல் கொண்டுசென்ற விதைப்பெட்டிக் கூடையில் போட்டு வீட்டுக்கு எடுத்துக்கொண்டு வருவார்கள்.[126] நெல் அறுவடை செய்தபின் மீண்டும் பயிரிட உழுவது வழக்கம். அதனை 'மறுகால் உழுதல்' எனக் குறிப்பிட்டனர்.[127] பயிரறுத்த பின் மீண்டும் உழும் பழக்கம் இன்றும் நல்ல உழவர்களிடம் உண்டு. ஈரம் காயுமுன் உழுதால்தான் நிலம் நல்ல பக்குவ முடையதாயிருக்கும். இந்த அறிவியல் உண்மையை அவர்கள் உணர்ந்திருந்தார்கள் எனக் கூறலாம். வயலில் உழும்போது சேற்றுத்துளிகள் உடலெங்கும் பட்டிருக்குமாகையால் உழவு முடிந்ததும் உழவர் நீராடுவர். எருமைகள் நாள் முழுவதும் வேலை செய்ததால், அத் துயரம் நீங்கக் குளங்களில் பாய்ந்து நீந்தி, அலுப்புத் தீர்ந்ததும் மருத மரத்தினடியில் போய்ப் படுத்துக்கொள்ளும்.[128]

உழவர்கள் தம் மனைவிமாரோடு வயல்களுக்குச் செல்வார்கள். அவ்வாறு செல்லுமுன் காலை உணவு உண்டு செல்வார்கள். அங்குப் பெண்கள் நாற்றுநடுவார்கள். வைகறையில் வரால்மீனை

---

118 பெரும்பாண். 198-200
119 ஷை 210; புறம். 184:3; 318:7
120 ஷை 230, 142; மலைபடு. 121
121 மதுரைக். 400-401
122 நற். 60:1-2
123 ஷை 340:6
124 நற். 340:5
125 ஷை 340:7
126 ஷை 210:3-4
127 ஷை 210:2
128 ஷை 330:4-5

வெட்டிய தசைத் துண்டுகளையும் குழம்பில் உள்ள கறித்துண்டு களையும் சோற்றோடு சேர்த்து நிறைய உண்பார்கள்.[129]

நெல், வாழை, கரும்பு ஆகியவை முக்கியமாகப் பயிரிடப் படும்.[130] நெல் அறுவடை செய்யும்போது தண்ணுமையை அடிப்பதுண்டு.[131] அங்கு மருதமரத்தில் நெல்லை உண்பதற்கு வந்து தங்கியுள்ள பறவைகள் அவ்வொலி கேட்டு ஓடும்.

ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் செந்நெல் விளைந்தது.[132] கரும்பின் சாற்றைக் காய்ச்சி வெல்லக்கட்டி செய்தனர்.[133]

மழை பெய்தபோது நிலம் உழப்படும். ஆதலால், ஓர் ஏரையுடைய உழவன் நிறைய உழவேண்டிய நிலம் பக்குவப்பட்டு இருப்பதால், மிக விரைவாக உழுவான் என்று சொல்லப் படுகிறது.[134] எனவே, ஏர்களின் போதாமையும் தொழிலார்வ மும் இக் கருத்தால் வெளியாகின்றன.

ஒரு பெண்யானை படுத்திருக்கும் அளவுடைய சிறிய நிலத்தில் ஆண்டொன்றுக்கு ஏழு ஆண்யானைகளை உண்பித் தற்குப் போதுமான அளவிற்கு மிகுதியான நெல்லை விளைவிக்கும் திறம் உடையவராக உழவர் திகழ்ந்தனர்.[135] எனவே, குறைந்த இடப்பகுதியில் பல மடங்கு விளைச்சல் பெற வேண்டும் என்ற முயற்சியும், ஊக்கமும், செயற்பாடும் அக் காலத்திலும் இருந்தன எனக் கருதலாம்.

செந்நெற்கதிர்களை உண்ணும் பசிய மயில்களை மகளிர் விரட்டியதால் அவை அருகிலுள்ள மருதமரத்தில் சென்று அமர்ந்தன என்னும் செய்தி அறியப்படுவதால், மருதநிலத்தில் மயில்கள் நெற்கதிர்களை அழித்தன எனத் தெரியவருகிறது.[136] பசுக்களும் நெற்கதிர்களை அழித்தன. ஒரு பசு ஈன்றணிமை கொண்டது. நெற்கதிர்களை வயலிற்சென்று தின்றுகொண்டு இருந்தது. எனவே, அதைப் பார்த்த காவலர்கள் கரும்பை ஒடித்து அதற்கு உண்ணத் தருவதுபோல் நீட்டினர். அது கரும்பை உண்ண வந்தபோது அதைப் பிடித்துக்கொண்டனர். அங்கிருந்த பாகற்கொடியையும் பகன்றைக் கொடியையும் அறுத்துக் கயிறாகத் திரித்து அப் பசுவினை அங்குள்ள காஞ்சி

---

129 நற். 60: 4-7
130 ஷை 400:1-2; பதிற். 50:3
131 ஷை 350:1
132 புறம். 391:21
133 பட்டினப். 9-12
134 குறுந். 131:3-6
135 புறம். 40:10-11
136 ஷை 344:1-4

மரத்தில் அவர்கள் கட்டினார்களாம்.[137] இதிலிருந்து நெற் பயிருக்குக் 'காவலர்' இருந்தனர் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.[138]

காளைகளுக்கு மூக்கணாங்கயிறு இட்டு அவற்றின் வேகத்தையும் துடிப்பையும் குறைத்து அடக்குவது வழக்கம். 'கயிறிடு கதச்சேப் போல'[139] என்ற உவமை இதைக் காட்டும். கயிறிட்டு அடக்கப்படும் கோபமுடைய காளைபோல' என்பது பொருளாயினும், கயிறிடுதல் என்பதனை மூக்குக் கயிறிடுதல் எனக் கொள்ளுதலே பொருத்தமாகலாம். இல்லையாயின், திரிந்து கொண்டிருந்த காளை கயிறு போட்டுக் கட்டப் பட்டிருந்தது எனக் கொள்ளலாம். எப்படியாயினும் கயிறு, காளைகளை நெறிப்படுத்தப் பயன்பட்டது என்பது உறுதிப் படுகிறது. எனவே, கயிறு திரிக்கும் தொழிலும் அதற்குத் தேவையான மூலப்பொருளும் அந்தக் காலத்தில் இருந்தன என அறியலாம்.

உழவர்கள் பல எருதுகள் உள்ள இடத்தில் தமக்குத் தேவையான நல்லெருதை நன்கு ஆராய்ந்து, உழுவதற்கு ஏற்ற எருதைத் தெரிந்தெடுப்பது வழக்கமாகும்.[140]

நெய்தல்நில வாழ்க்கை

வயல்நிலப் பகுதிகளை அடுத்து இருப்பது கடல் சார்ந்த நிலங்களும், கடல் ஓரப்பகுதியும், கடலுமாகும். இப் பகுதிகள் பெரும்பாலும் மணற்பாங்கானவை. அதனால், இப் பகுதியைப் 'பெருமணல் உலகம்' எனத் தொல்காப்பியம் சுட்டுகிறது.[141] தமிழகத்தின் மூன்று பக்கங்களிலும் கடல் சூழ்ந்திருந்ததால் மிகப் பெரிய நீண்ட கடற்கரையைப் பண்டைத் தமிழகம் பெற்றிருந்தது. இதைச் சார்ந்த நிலப்பகுதிக்கு 'நெய்தல்' என்பது பெயர்.

நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்களைப் பரதவர் எனச் சங்க இலக்கியங்கள் அழைக்கின்றன. இக்காலத்தில் இச் சொல் பரவர் எனச் சில இடங்களில் வழங்குகிறது. இவர்களைப் பட்டினவர் எனவும் அழைக்கின்றனர். கடற்கரையைச் சார்ந்த ஊர்

---

137 அகம். 156:4-6
138 ஷை 156:4
139 ஷை 36:7
140 புறம். 289:2
141 தொல். பொருள். அகத். 5:4

களுக்குக் 'குப்பம்' என்றும் 'பாக்கம்' என்றும் பெயர். நெய்தல்நிலக் காட்சியின் இனிமையைச் சங்கப் புலவர்கள் பலர் பாடியுள்ளனர்.[142]

நெய்தல் நிலத்துக்கே உரிய விலங்கு ஒன்றும் இல்லை. கடலில் வாழும் சுறாமீனைச் சிலர் மா என்று கூறுவர். அப்படியானால் கடலில் வாழும் மீன்களும் விலங்குகளேயாகும்.

கடற்காக்கைகள் கடற்கரையிலும் கடலிலும் காணப்படும். அவை பறக்கவும் நீந்தவும் வல்லவை. அவை கூட்டங் கூட்டமாக வாழும். அவை பறந்து செல்லும் காட்சி மிகக் கவர்ச்சியாக இருக்கும்.[143] இவை உலர்த்தும் மீன்களைக் கவர்ந்து தின்பதில்லை. பக்கத்துப் பகுதிகளிலிருந்து வந்த பருந்துகளும் காக்கைகளுமே பரதவர் மீன்களை உலர்த்தும்போது அவற்றைக் கவர்ந்து தின்னும். கடலிலே ஆமைகளும் வாழ்ந்தன. அவை குளத்து ஆமையைவிடப் பெரியவை. கருவுற்ற பெண் ஆமை கடற்கரைக்கு வந்து முட்டையிட்டு மணலினால் அவற்றை மறைத்துவிட்டுப் போகும்.[144]

நெய்தல் நிலத்தில் பனைமரமும் புன்னைமரமும் செழிப்பாக வளர்ந்தன. ஞாழல், கண்டல் என்னும் மரங்களும் வளர்ந்தன. கைதை (தாழை) மரங்கள் புதர்களாக வளர்ந்தன. அடப்பங் கொடிகள் மணல்மேடுகளில் படர்ந்து வளர்ந்தன. தென்னை மரங்கள் இருந்தன. இதைச் சங்க இலக்கியங்கள் 'தெங்கு' எனக் குறிக்கின்றன.[145] தென்னைக்குச் சங்க நூல்களில் தாழை என்னும் பெயரும் கூறப்படுகிறது. (தழைத்து வளர்வது தாழை.)[146] இரண்டு தாழைகளையும் வேறு பிரித்துக் காட்ட அடைகொடுத்துக் கூறினார்கள். வீழ்தாழ் தாழை, முட்டாழை கைதையைக் குறிக்கும். வீழில் தாழை, மடற்றாழை தெங்கைக் குறிக்கும். நெய்தல் நிலத்தில் வாழ்ந்த பரதவர்கள் தங்கள் இல்லங்களைக் கடற்கரை ஓரங்களில்அமைத்துக்கொண்டார்கள். அவர்களுடைய வீடுகள் சிறு குடிசைகளாக இருந்தன. அவற்றின் கூரைகள் புல்லினால் வேயப்பட்டு இருந்தன. அதாவது,

---

142 குறுந். 81: 5-8; நற். 159:1-3

143 நற். 231:3-5; குறுந். 246:1, 313:1-2, 334:1-3

144 அகம். 160:5

145 பெரும்பாண். 353, 364; பட்டினப்.16 ; புறம். 29:15, 61:9

146 முருகு. 307; பொருநர். 181; குறிஞ்சிப். 80; பெரும்பாண். 357; புறம். 17:9, 24:14

நெல்லின் தாள், வரகின்தாள், தினையின் தாள் ஆகியவற்றால் அவை வேயப்பட்டிருந்தன.[147]

பனை ஓலையாலும் கூரை வேய்ந்தனர். மேலும், பனை ஓலையால் வீட்டைச் சுற்றிலும் வேலியமைத்துக் கொண்டார்கள்.[148] தென்னை ஓலையாலும் கூரை வேய்ந்தனர். தாழை மடலாலும் கூரை வேய்ந்தனர்.[149] முண்டகத்தினாலும்[150] காயலினாலும்[151] வேய்ந்தனர்.

நெய்தல்நிலச் சிற்றூர்களில் ஊர்மன்றங்கள் இருந்தன. அவை ஊரின் நடுவில் அமைந்திருந்த பனைமரங்களின் அடியில் அமைந்து இருந்தன. மன்றப் பனைகளில் தெய்வம் இருப்பதாகக் கருதினார்கள்.[152] சில ஊர்களின் மன்றங்கள் புன்னை மரத்து அடியில் இருந்தன.[153] அம் மன்றங்களில் அமர்ந்து ஊர் மக்கள் ஊர்ச் செய்திகளையும் வழக்குகளையும் பேசி முடிவு செய்தார்கள்.

நெய்தல்நில மக்கள் 'நுளையர்' எனப்பட்டனர். நெய்தல் நிலத் தலைவனுக்குச் சேர்ப்பன், புலம்பன், கொண்கன், துறைவன் என்னும் பெயர்கள் வழங்கின.

நெய்தல் நிலம் மணற்பாங்கான பகுதியாதலால் அங்குத் தானியங்கள் விளையவில்லை. கடற்கரையை ஒட்டி உப்பங் கழிகளும் உப்பளங்களும் இருந்தன. ஆகையால், பரதவர்கள் கடலில் சென்று மீன்களைப் பிடித்துவந்து விற்றுத் தானியம் பெற்று உணவு உண்டனர். மேலும், உப்பளங்களில் உப்பு விளைத்து அதனை விற்றுத் தானியம் பெற்றனர்.[154]

பரதவர்கள் கடலில் செல்லக் கட்டுமரங்களையும் படகுகளையும் பயன்படுத்தினர்.[155] மீன்பிடிக்கச் செல்லும் படகிற்குத் 'திமில்' என்றும் 'அம்பி' என்றும் பெயருண்டு. கடலில் சென்று வந்தபின் அம்பியைக் கரையோரத்திலுள்ள புன்னை மரத்தில் அவர்கள் கட்டிவைப்பார்கள்.[156] பழைய அம்பிகளைப் புன்னை மரத்தின் கீழே விட்டுவைத்தார்கள். மேலும், அம்பி

147 அகம். 200:1-2
148 நற். 354:1-4
149 ஷை 270:1
150 ஷை 207:2
151 அகம். 370:5
152 நற். 303: 3-4
153 நற். 49: 8
154 மதுரைக். 117; அகம்.340:14, 390:7-8
155 அகம். 280: 9, 330: 15-16
156 நற். 354: 4-7

களில் தெய்வம் இருப்பதாகக் கருதி நறுமணப் புகை புகைத்தார்கள்.[157]

பரதவர்கள் கடலில் பல இடங்கட்குச் சென்று வலை வீசி மீன்களைப் பிடித்து வந்தனர்.[158] மீன் பிடிப்பதற்குப் பலவகையான வலைகள் இருந்தன. கடலில் பலவகை மீன்கள் இருந்தன. அவற்றுள் சுறாமீன் புகழ்மிக்கது. சுறாமீன்கள் மிகப் பெரியனவாயும் பரதவருக்குத் துன்பம் கொடுப்பனவாயும் இருந்தன. சங்க இலக்கியங்கள் சுறாமீன்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.[159] சுறாமீன்களைப் பிடிப்பதில் பரதவர்கட்கு ஆர்வம் அதிகம்.[160] பரதவர்கள் பெரிய சுறாமீன்களைக் கூர்மையான உளியால் எறிந்து புண்படுத்துவதும் உண்டு. அவை வலைகளை அறுத்துக் கொண்டு தப்பிப்போவதும் உண்டு.[161] பரதவர்கள் சுறாமீன்களால் சில சமயம் புண்படுவதுண்டு. அப்படிப் புண்பட்டு விட்டால் அந்தப் புண் ஆறும்வரை அவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்லமாட்டார்கள்.[162] தொண்டித் துறைமுகத்தில் வாழ்ந்த பரதவர்கள் கொம்புச் சுறாவைப் பிடித்துத் துண்டு போட்டுப் பகிர்ந்து கொண்டதாக ஒரு சங்கப் பாடல் கூறுகிறது.[163]

இரவிலும் மீன்களைப் பிடிப்பதற்காகப் பரதவர்கள் கடலில் செல்வதுண்டு; அப்பொழுது திமிலில் விளக்கேற்றிக் கொண்டு போவார்கள்; விடியற்காலையில்தான் திரும்பி வருவார்கள்.[164] இரவில் மீன்களைப் பிடிக்கப்போவது இப்பொழுது உண்டானாலும், விளக்கேற்றிப் போகும் பழக்கம் காணப்படவில்லை என்பது குறிக்கத்தக்கது. இரவு நேரங்களில் கடலில் சென்றுள்ள படகுகளின் வெளிச்சத்தைக்கொண்டு எத்தனை படகுகள் சென்றன என்பதைக் கரையில் இருந்தவர்கள் எண்ணினார்கள்.[165] அடிவானத்தில் கடலுக்கு மேலே தோன்றிய 'செவ்வாய்' என்னும் நட்சத்திரம் இரவிலே கடலில் சென்று திமில்படகில் ஏற்றிய விளக்குப் போலத் தோன்றுமாம்.[166] யானையின் நெற்றியில் சூட்டப்பட்ட பொன்பட்டம் ஒளிர்வது

157 நற். 315:1-6
158 அகம். 210: 1-3, 340:18-22; நற். 45:2-3
159 குறுந். 318:1; பொருநர். 203; மதுரைக். 112-113
160 நற். 215: 9-12
161 அகம். 340:18-21; நற். 303:8-12
162 குறுந். 269:3-4
163 அகம். 10:8-13
164 நற். 388:2-6; அகம். 240:4-5
165 ஷை 372:10-14
166 புறம். 60: 1-2

போல இரவு நேரத்தில் கடலிலே செல்லும் படகிலே ஏற்றிய விளக்கு ஒளிரும் என்பர்.[167]

மீன்களிலிருந்து கிடைத்த எண்ணெயினால் நெய்தல்நிலப் பரதவர்கள் இரவில் தங்கள் வீடுகளில் விளக்கேற்றினார்கள்.[168] விளக்கு எரிக்கும் தகழிகளுக்குப் பதிலாக அவர்கள் பெரிய கிளிஞ்சில்களைப் பயன்படுத்தினார்கள்.[169] அவ் விளக்குகள் தூரப்பார்வைக்குக் 'காலை ஞாயிறு கடலிலிருந்து தோன்றும் போது செந்நிறமாகத் தோன்றுவதுபோலக்' காணப்பட்டன.[170]

ஆண்மக்கள் நனைந்துபோன வலையைத் தங்களின் வீடுகளின் முன்பு மணலில் பரப்பி உலர்த்துவார்கள்.[171] வெண்மையான மணலில் கருநிறமுள்ள வலை விரிக்கப்பட்டிருப்பது நிலவை மறைத்த இருள்போல் இருந்ததாம்.[172] மீன்பிடிக்கும் போது அறுந்துபோன வலையைச் செப்பனிட்டு உலர்த்துவது உண்டு.[173]

தங்கள் வலைகளை நூலினாலும் நாரினாலும் பரதவர், தாங்களே பின்னிக்கொள்வதுண்டு. கடலில் பிடிக்கும் மீன்களை இடுவதற்காகப் பனை ஓலையினால் பை முடைந்து கொள்வார்கள்.

சிறுபிள்ளைகள் தங்களை மீன்பிடிக்க அழைத்துச் செல்லுமாறு வேண்டி அழுவதுண்டு.[174] அமாவாசை, பௌர்ணமி நாள்களில் மீன்பிடிக்கச் செல்லமாட்டார்கள். அந்நாள்கள் அவர்கட்கு ஓய்வு நாள்களாகும்.[175]

பரதவர் மீன்களைச் சமைத்து உண்டனர்.[176] மீன் மட்டுமே அவர்களுடைய உணவில்லை. மீன்களை விற்று, நெல் முதலிய தானியங்கள் வாங்கியும் அவற்றை உண்டு மகிழ்ந்தனர். ஆண்கள் பிடித்துவந்த மீன்களைப் பெண்கள் பக்கத்து ஊர்களுக்குக் கொண்டுசென்று விற்றார்கள். இப்பொழுதும்கூடப் பெண்களே மீன்கள் விற்பதைப் பார்க்கலாம். மீன்கள் எளிதில் விலையாயின.[177] திருவிழாக் காலங்களில் மீன்கள் எளிதில் விற்பனையாயின.[178] மீனைக் கொடுத்து மாற்றாகப் பெற்ற

167 அகம். 100: 5-10
168 நற். 215:5-7
169 ஷை 175:3-4
170 ஷை 219: 6-8
171 ஷை 4:1-4
172 பட்டினப். 82-83
173 அகம். 340: 18-24
174 நற். 392: 1-3
175 பட்டினப். 92-93
176 நற். 311:6-7
177 ஷை 239:2-3
178 அகம். 320:1-5

நெல்லால் சோறு சமைத்துத் தயிருடன் உணவு உண்பதும் உண்டு.[179] பரதவர் மீன்களைப் பிடித்துக்கொண்டு, அம்பிகளில் போய், விற்றுக் கிடைத்த நெல்லை அம்பிகளில் ஏற்றிக் கொண்டு வந்தார்கள்.[180]

விற்பனையான மீன்கள் போக, மிகுந்தவற்றை உப்பிட்டு மணலிலே பரப்பி வெயிலிலே உலர்த்துவார்கள்.[181] உப்பிட்டு உலர்ந்த மீனைக் கருவாடு என்கிறோம். இதனைப் பெண்களே செய்தனர். இன்றும் அப்படியே. மீன்களையும் இறால்களையும் உப்பிட்டு உலர்த்தும்போது அவற்றின் நாற்றம் நீண்டதூரம் வீசும்.[182] மீன் உலர்த்தாத காலங்களில் புன்னைப் பூவின் மணமும் தாழம்பூவின் மணமும் கடற்காற்றில் கலந்துவரும்.[183]

உலர்த்தப்படும் மீன்களைப் பறவைகள் எடுத்துப் போகாத படி பெண்கள் காவல் இருந்து அவற்றை ஓட்டுவார்கள்.[184] பெரிய மீன்களை உப்பிட்டு உலர்த்திக் கண்டங் கண்டமாக அறுத்த கருவாட்டுக்கு **உப்புக்கண்டம** என்று பெயர் **உப்புக் கண்டங்கள்** மற்றப் பண்டங்களுடன் படகுகளில் ஏற்றி வெளியூருக்கு அனுப்பப்பட்டன.[185]

பரதவர்கள் கடலிலிருந்து உப்பு எடுத்தார்கள், உண்டாக்கவும் செய்தார்கள். ஆனால், சில இடங்களில் மட்டுமே உப்பங்கழிகளும் உப்பளங்களும் இருந்தன. உப்புப் பாத்திகளில் பாய்ச்சிய நீர் ஆவியாகப் போனபின் பாத்திகளில் உப்புக் கிடைக்கும்.[186] பிறகு பரதவர்கள் அதைக் குவியல் குவியலாகக் குவித்து வைத்து உப்பு வாணிகர் வரவை எதிர்பார்த்திருப்பார்கள்[187]

சிறுமியர் கடலில் மூழ்கி விளையாடியபின் உப்புக் குவியல்களின்மேல் ஏறிநின்று கடலிலிருந்து திரும்பிவரும் படகுகளை எண்ணினார்கள்.[188]

உமணர், வண்டிகளில் நெல்லை ஏற்றிக்கொண்டு வந்து நெல்லைக் கொடுத்து உப்பை வாங்கிக்கொண்டு போவார்கள். மீன்களைத் தந்து நெல்லைக் கொண்டதுபோலவே உப்பை

179 அகம். 340: 14-15
180 புறம். 343:1-2
181 நற். 45:6
182 குறுந். 320:1-4
183 நற். 49: 8-9
184 அகம். 80:4-6; நற். 45:7, 101: 1-3
185 மதுரைக். 319-322
186 அகம். 140:1-3
187 நற். 331:1-3
188 அகம். 190:1-3

விற்றும் நெல்லைக் கொண்டார்கள். மீனும் உப்புமே பரதவருக்கு உணவு தந்தன.[189] உப்பை விற்று நெல்லைக் கொண்டு வருவதற்காகத் தாய்மார்கள் உப்பளத்திற்குச் சென்றனர்.[190] பரதவப் பெண்கள் உப்பு விற்று வந்த நெல்லரிசியால் சமைத்த சோற்றைப் புளியிட்டுச் சமைத்த மீனுடன் தம் தந்தையை உண்பிப்பதும் உண்டு.[191]

பரதவர்கள் தங்கள் களைப்புத் தீர்வதற்குப் பனங்கள்ளை அருந்தி மகிழ்ச்சியாக இருந்தார்கள். கள்ளை உண்டு ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள்.[192]

மீன்களைப் பிடிப்பதற்குத் தூண்டில்களும் பயன்படுத்தப் பட்டன. அவ்வாறு மீன்பிடிப்பவர்களை 'வேட்டுவன்' எனக் கூறுவதுமுண்டு.[193]

பாலைநில வாழ்க்கை

தமிழகத்தில் 'பாலை' என்னும் நிலப்பிரிவு நிரந்தரமாக இயற்கையில் இருந்தது இல்லை. சில வேளைகளில் குறிஞ்சி, முல்லை ஆகிய நிலங்கள் தம் நீர்வளத்தில் குன்றி, மக்கள் நிலைத்துவாழ வசதியில்லாத வெப்பமுடையதாகிவிடும். அப்பொழுது அப்பேர்ப்பட்ட நிலத்தைப் 'பாலை' என்று வழங்குவர். குடிகளைக் காப்பாற்றிப் பாதுகாக்க வேண்டிய மன்னன், அப் பொறுப்பினைப் புறக்கணித்துக் குடியைப் பேணாத அமைச்சர்களுடன் கூடித் தன் ஆட்சியால் நாட்டை அரசியல் இல்லாத நாடாக்குவதைப்போல, ஞாயிறு என்னும் அரசன் வேனில் என்னும் அமைச்சனோடு கூடிக் குறிஞ்சியையும் முல்லையையும் வாட்டுவதால் இரண்டு நிலங்களும் தம் இயற்கை நிலைகளிலிருந்து மாறி, தங்களைச் சேர்ந்தவர்களைத் துன்புறுத்தும் பாலை என்னும் வடிவைப் பெறும்.[194] குறிஞ்சி நிலம் மட்டும் தனியாகப் பாலையாக மாறுவதும் உண்டு.[195] அதுபோலவே முல்லை நிலமும் தனியாகப் பாலையாகத் திரிதலும் உண்டு.[196] இவ்வாறு திரிந்த நிலத்தைச் சேர்த்தால் ஐந்தாகத் தோன்றும். ஆகையால், பொதுவாக நான்கு நிலங்களே இருந்தன. சில காலங்களில் அந் நிலங்களில் பாலைப்

---

189 அகம். 60:4
190 குறுந். 269:5-6
191 அகம். 60: 1-7
192 பட்டினப். 89; நற். 38:3; புறம். 24:4-6
193 அகம். 36:6
194 சிலப். 11:61-66
195 அகம். 113; பதிற். 43:13-14
196 கலி. 2:7-8

பகுதிகள் அதிலும் குறிப்பாக முல்லையிலும் குறிஞ்சியிலும் ஏற்படுவது உண்டு. ஆகவே, பாலைப் பகுதியில் அப்பொழுது வாழும் மக்கள் வாழ்க்கையைப் பற்றியும் பழைய இலக்கியங்கள் பேசுகின்றன.

நச்சினார்க்கினியர் என்ற பழைய உரைகாரர் பாலைத் தன்மையைப்பற்றி விளக்கியிருப்பதை இங்கு நினைவுகூர்தல் நல்லது. 'பாலைத் தன்மையாவது காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமைகூரச் சோலை தேம்பிக் கூவல்மாறி, நீரும் நிழலும் இன்றி நிலம் பயன்துறந்து, புள்ளும் மாவும் புலம்புற்று இன்பமின்றித் துன்பம் பெறுவது'[197] எனச் சித்திரிக்கிறார். இதிலிருந்து அந்த நிலத்தின் தன்மையை உணரலாம்.

இப்பேர்ப்பட்ட பாலை நிலத்தில் வேட்டுவர், எயினர், மறவர் என வழங்கப்பட்ட மக்கள் வாழ்ந்தனர். பெண்கள் எயிற்றியர், மறத்தியர் என்பவராவர். இந்த மக்கள் வாழ்ந்த ஊர்கள் குறும்பு, பறந்தலை எனப் பெயர்பெற்றன. இவர்கள் ஐயை, கொற்றவை என்ற பெண் தெய்வங்களை வழி பட்டார்கள். இவர்கள் வாழ்ந்த நிலப்பகுதிகளில் இருப்பை, ஓமை, நெமை, பாலை, யா என்னும் மரங்கள் சிறப்பாக இருந்தன. மேலும், வழிப்பறி செய்வதையே பிழைப்பாகக் கொண்ட ஆறலைகள்வர் எனப்பட்டோரும் வாழ்ந்தார்கள். இவர்களுடைய தொழில் பெரும்பாலும் வழிப்பறி செய்வதும், ஊர்களுக்குச் சென்று கொள்ளையடித்து வருவதும், பகைவருடைய கால்நடைகளைக் கவருவதும் ஆகும்.

ஈந்தின் இலையால் வேய்ந்த குடிசைகளில் எயினர் வாழ்ந்தனர். மான்தோலாகிய படுக்கையில் பிள்ளை பெற்ற எயிற்றி முடங்கிப் படுத்துக்கிடப்பது உண்டு. எயிற்றியர் கரம்பை நிலத்தில், புல்லரிசியைச் சேகரித்து எடுத்துச்செல்லுவது வழக்கம். அவர்களுடைய குடிசைகளின் அருகில் நிலத்தில் உரல் தோண்டப் பட்டு இருந்தது. எயிற்றியர் அந்த உரல்களில் தாம் கொண்டு வந்த புல்லரிசியை இட்டுக் குட்டையான உலக்கையால் குற்றினார்கள். கொஞ்சமாக நீரையுடைய கிணற்றிலிருந்து உவர் நீரை முகந்து உலைவைத்துப் புல்லரிசிச் சோற்றைச் சமைத்தார்கள். பிறகு அந்தச் சோற்றை உப்புக்கண்டம் சேர்த்து உண்டார்கள் என அறிகிறோம்.

---

197 தொல். பொருள். அகத். 9 நச்சி. உரை

பன்றிகள் குட்டைகளில் நீர்பருக வருவதுண்டு. ஆகவே, அவற்றை அம்பெய்து கொன்று வீழ்த்த, அந்தக் குட்டைகளின் அருகில் குழி தோண்டி வைத்துக்கொள்வார்கள். பிறகு அக் குழிகளில் பதுங்கியிருந்து பன்றிகளை வேட்டையாடிக் கொன்றனர். வலைகளை விரித்து முயல்களைப் பிடிக்க முயன்றனர். வேட்டை நாய்களுடன் போய், புதர்களை அடித்து. அவற்றுள் முயல் இருந்தால் ஓடச் செய்வதுண்டு. அப்பொழுது அவை வலையில் போய்ச் சிக்கும்.

இந்த எயினர்கள் சில வீடுகளை அமைத்துக்கொண்டு அரணிட்டு வாழ்வதும் உண்டு. அங்குள்ள அந்த வீடுகளில் வேல்களும், வில்களும், அம்புகளும் நிறைந்திருக்கும். அங்கே நல்ல வலுவான கால்களைக் கொண்ட பந்தரையுடைய காவலோடுகூடிய வீடும் இருப்பதுண்டு. அந்த வீட்டில் நாய்கள் சங்கிலியால் பிணிக்கப்பட்டுக் கட்டப்பட்டிருந்தன. அந்த வீட்டைச் சுற்றி ஊகம் புல்லால் வேயப்பட்ட உயர்ந்த மதில் இருந்தது எனவும் அறிகிறோம். அந்த மதில் வாயிலில் நீண்ட முனையும் உறுதியும் வாய்ந்த கழுக்கள் நிறுத்தப்பட்டிருந்தன. உட்கதவு வலுவான கணைய மரத்தால் செய்யப்பட்டிருந்தது.

இந்த எயினர்களைப் பட்டினப்பாலை 'கொடுவில் எயினர்' எனக் குறிக்கிறது.[198] வளைந்த வில்லினை எப்பொழுதும் கொண்டு இருப்பார்கள்போலும். இவர்கள் தம் அம்புகளை வெம்மையான பாறைகளின்மீது ஏறித் தீட்டுவார்கள்.[199] இவர்களிடம் வில்லோடு 'துடி' என்னும் பறையும் இருந்ததென அறிகிறோம்.[200] இந்தத் துடி என்னும் பறையை அடித்துக் கொண்டு அவர்கள் ஆடி மகிழ்ந்தனர். இவர்கள் கொன்று வரும் விலங்குகளின் ஊனைப் பறவைகள் வந்து பற்றாதவாறு எயிற்றியர் விரட்டுவர்.[201] எயிற்றியர்கள் புளிவெஞ்சோறு சமைப்பார்கள்.[202]

அம்புகளைச் செலுத்தும் வில்களைத் தாங்கும் எறுழ்த்தோள் மறவர்களைப் பற்றி மதுரைக்காஞ்சியில் காணலாம்.[203] இந்த மறவர்கள் அழகில்லாத நீண்ட தாடியினையும் பேராற்றலையும் உடையவர்களாய் இருந்தார்கள்.[204] இம் மறவர்கள் நீண்ட மூங்கில்கள் உயர்ந்து நிற்கும் நீரில்லாத இடங்களின் வழி

198 பட்டினப். 266
199 குறுந். 12:2-3
200 அகம். 79:11-15
201 ஐங்குறு. 365:1-3
202 சிறுபாண். 175
203 மதுரைக். 728-29
204 அகம். 297: 5-6

யாகச் செல்லும் வழிப்போக்கர்களை அம்பு எய்து கொள்ளை யடிப்பதுண்டு[205] கூற்றுவனைப்போலச் சில நேரங்களில் அவர்களைக் கொல்லவும் செய்வார்கள்[206] பெரும்பாலும் அவர்கள் குறிதப்பாமல் அம்பு எய்வதில் வல்லவர்கள்.

வேட்டையாடுபவர்கள் 'வேடர்' எனப்பட்டார்கள். இவர்கள் காட்டில் வாழ்ந்ததால் கானவர் எனவும் குறிக்கப்படுகிறார்கள். 'கருங்கட் கானவர்' எனப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.[207]

மறக்குடி மகளிர் அஞ்சாமை உடையவர்கள். இக் குடியிற் பிறந்த கருவுற்ற மகள் யானை தன் எதிரே வந்தாலும், பாம்பு தன்மீது ஊர்ந்து சென்றாலும், வானத்தில் இடி தோன்றினாலும் அஞ்சமாட்டாள்.[208] இத்தகைய மகளிர் பெற்ற எயினர், வீரர்களுடன் சென்று பகைவர்களுடைய பசுக்களைக் கவர்ந்து வந்து அவற்றைக் கள்ளுக்கு விலையாக விற்றுள்ளார்கள்.[209] பிறகு தம் வீடுகளில் நெல்லினால் சமைத்த கள்ளைக் குடித்தார்கள்; ஆட்டிறைச்சியை உண்டனர். எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு மத்தள முழக்கத்தோடு தோள்களை வளைத்து மகிழ்ச்சியுடன் கூத்தாடுவது வழக்கம்.[210]

சங்ககாலத்து நகர வாழ்க்கை

மதுரை, புகார் நகரங்களின் வாழ்க்கை முறைகளை அடிப்படையாகக்கொண்டு சங்ககாலத்து நகர வாழ்க்கையின் பாங்கினை நாம் கண்டறியலாம்.

மதுரை நகரத்து மக்களுக்கும் மன்னனுக்கும், நாட்பொழுது எவ்வாறு கழிந்தது என்னும் செய்தி மதுரைக்காஞ்சியில் கூறப்பட்டுள்ளது. அதில் முன்னிரவு, நள்ளிரவு, பின்னிரவு என்று மூன்று பகுதிகளாக இரவுக்காலம் பிரிக்கப்படுகிறது. இந்தக் காலப் பகுதிகளில் மதுரையில் நிகழ்ந்தவை இவை என்று கூறப்படுவதிலிருந்து மதுரைநகர மக்களின் வாழ்க்கை முறைமையை நாம் உய்த்துணர முடிகிறது. இரவுக்காலம் பொதுமக்கள் வாழ்க்கையில் மூன்று கூறாகிக் கிடப்பது தெளிவாக நூலில் கூறப்பட்டுள்ளது. அதுபோலவே மன்னன் வாழ்க்கையில் அறம்

---

205 குறுந். *331: 1-3*
206 ஷை *283:5*
207 பெரும்பாண். *116*
208 ஷை *134-136*
209 ஷை *140-141*
210 ஷை *144-146*

புரிதல், அரசியல் நடத்துதல், இன்பமாகப் பொழுதுபோக்கு தல் (அறம், பொருள், இன்பம்) ஆகியவை முறையே நிகழ்வதாகக் கூறப்படுவதிலிருந்து பகற்காலமும் மூன்று கூறுபட்டுக் கிடப்பதை நாம் உணரமுடிகிறது. இத்தகைய பாங்கில் அமைந்துள்ள மதுரை நகர வாழ்க்கையைச் சுருக்கமாகக் காண்போம்.

மதுரையில் பகல் கடைத்தெரு[211]

வையை ஆற்றுத்துறைகளில் உள்ள சோலைப் பகுதிகளில் 'பெரும்பாண்' மக்கள் வாழ்ந்தனர். நாட்டை இழந்த மன்னர் களும், தம் நாட்டில் குடியிருப்புகளை இழந்த மக்களும், பாண்டி நாட்டைத் தாக்கித் தோற்ற மன்னர்களும் மதுரைநகரின் கோட்டைக்கு உள்ளே இருந்த உயர்ந்த மாடிவீடுகளில் வாழ்ந் தனர். பாணர் இருக்கைகளிலும் நகரின் அகன்ற தெருக்களிலும் பல்வேறு குழுவினர் ஆங்காங்கே இசையை எழுப்பிக்கொண் டிருந்தனர். இசையைக் கேட்டு மகிழ்ந்தோரில் சிலர் ஆடினர்.

பல்வேறு கொடிகள் நகரில் பறந்துகொண்டிருந்தன. திருவிழாக் கொண்டாட்டத்திற்கென எடுத்த கொடி, மன்னன் பகை அரண்கொண்ட போதெல்லாம் ஒவ்வொரு நாளும் எடுத்த கொடி, தாக்கிய படைவரை ஓட்டியபொழுதெலலாம் புகழ்ந்து கூறி எடுத்த வெற்றிக்கொடி, கள்ளுண்டு களியாட்டம் புரிவதைக் காட்டும் கொடி முதலான கொடிகள் அங்குப் பறந்தன. இரண்டு வரிசைகளிலும் இத்தகைய கொடிகள் பறக்கும் தெருக்களில் கொடிகளைத் தாங்கிய யானைகள், தேர்கள், குதிரைகள் வந்து போய்க்கொண்டிருந்தன. கள்ளுண்ட வீரர்கள் செருக்கோடு இவற்றின் ஊடே கலந்து சென்றனர்.

கூடையில் வைத்துக்கொண்டு பூ விற்போர், விரித்துப் பிடித்துக்கொண்டு மாலைகள் விற்போர், பலர் கூடி இடித்த மேனி மணப்பொடிகள் விற்போர், வெற்றிலை பாக்கு விற்போர், சுண்ணாம்பு விற்போர் முதலானோர் படை நடமாட்டத்தைக் கண்டு அஞ்சிப் பெருமூச்சு விட்டுக்கொண்டு நின்றனர். படை நடமாட்டம் நீங்கியபின் இவற்றையும் இவை போன்ற பொருள் களையும் விற்போர் மாடிவீடுகளின் நிழலிலே இருந்தனர். வயது முதிர்ந்த அழகியர். மயில் போன்ற அழகியர், மடமொழி (மழலை) பேசும் சிறுமியர் முதலானோர் மென்மையாக நடந்து

211 மதுரைக். 332-430; சிலப். 5:63, 196

வந்து தாம் விரும்பிய பொருள்களைத் தாம் கொண்டுவந்த கலைவேலைப்பாடுடைய செப்புகளில் வாங்கிச் சென்றனர். பண்பாட்டில் தோயாத இவர்களைக் கண்டு நகையாடி மகிழ்ந்தனர்.

இவ்விடங்களில் எழுந்த ஆரவாரம், வேந்தனுடைய வெற்றிக்குப் பின் ஏழு நாள் அவன் சோறு வழங்கிய விழாவில் எழுந்த ஆரவாரம்போல் இருந்தது.

இரவுக் கடைத்தெரு (முன்னிரவு)[212]

செல்வர்கள் குதிரைகள் பூட்டிய தேரில் உலா வந்தனர். அவர்களுக்குக் காவலாகக் காவலர்கள் கால்நடையாகச் சென்றனர். கொடையில் சிறந்த செல்வர்களில் சிலர் நாண்மகிழ் இருக்கையில் இருந்து கண்டு மகிழ்ந்தனர். மகளிர் மாடங்களின் மீதுள்ள நிலாமுற்றங்களில் அங்கும் இங்கும் நடமாடினர்.

மழுவேந்திய நெடியோனைத் (சிவனை) தலைவனாகக் கொண்ட பல தெய்வங்களை வழிபட்டனர். அத் தெய்வ வடிவங்களுக்கு உயிர்ப்பலி கொடுக்கும் அந்தி விழாவில் இசைக் கருவி முழங்கிற்று. அவரவரது குழந்தைகளை அணைத்துத் தூக்கிக்கொண்டு பேரிளம்பெண்டிர் பூவும் புகையும் தந்து அந்தக் கடவுளரைப் போற்றிப் பாடினர்.

குன்றுகளைக் குடைந்தாற்போன்று அமைந்துள்ள அந்தணர்களின் வீடுகளில் சிறந்த வேதம், பொருள் விளங்கும்படி பாடப்பட்டன.

சமணப் பள்ளிகளில் சாவகர்கள் பூவும் புகையும் கொடுத்துப் போற்றிப் பாடினர். இவை யாவும் நிலவொளியில் நடைபெற்றன. துலாக்கோல்போலச் செம்மையாக நின்று முறை செய்யும் அறங்கூறு அவையம் அங்கு இருந்தது. நன்மை தீமைகளைக் கண்டாய்ந்து அடக்கத்தோடு அன்பும் அறமும் காத்தோம்பி, பழியின்றிப் புகழோடு செம்மையாக வாழும் காவிதி மக்களும், குன்றுபோல் உயர்ந்து கலைத்திற வேலைப்பாடுகள் அமைந்த வீடுகளில் அறநெறி பிழையாது வாழ்ந்து வெளியிடங்களுக்குச் சென்று சிறப்பான விலையில் பண்ணியம்[13] விற்று முத்தும் மணியும் விலையாகப் பெற்றவர்களும், வேந்தனுக்கு

212 மதுரைக். 431-620
213 பண்ணப்பட்ட (செய்யப்பட்ட) பொருள்கள்

உதவி புரிந்த நாற்பெருங் குழுவினரும். சங்கு. யானைத்தந்தம், மணிக்கற்கள், பொன். செம்பு முதலானவற்றைக்கொண்டு பல் வேறு பண்டங்கள் செய்து விற்றவர்களும், ஆடை, பூ, நறுமணப் பொருள் முதலானவற்றை விற்றவர்களும், ஓவியரும் நான்கு பெருந் தெருக்களிலும் கூடியதால் நகரில் பேராரவாரம் எழுந்தது.

பலா, மா முதலான காய்கனி வகைகள், கிழங்கு வகைகள், ஊன்சோறு, வெற்றிலைபாக்கு முதலானவற்றையும் பிற இனிய உணவு வகைகளையும் மக்கள் பலருக்கும் தந்து, தாமும் உண்டு திளைக்கும் ஆரவாரம், இரவுக்கடைகளில் எழுந்த ஆரவாரத் தைக் காட்டிலும் மிகுதியாக இருந்தது. பட்டப்பகல்போல் நில வொளி வீசியதால் அதனை விரும்பிய பொதுமகளிர், தம்மைப் பலவாறாக ஒப்பனை செய்துகொண்டு வெளிப்பட்டுக் களிப் புடன் ஆடித் திளைத்தனர். வளமையில் வாழ்ந்த இளம் பிள்ளைத் தாய்ச்சியர் தம் சுற்றத்தார் புடைசூழ நடந்துசென்று இந்த முன்னிரவில் குளத்தில் நீராடினர். யாழ், முழவு, ஆகுளி முதலான இசைக்கருவிகள் முழங்க, கருவுற்ற மகளிர் கடவு ளுக்குப் பூசை செய்வதற்காக வைத்த பொங்கலைத் தூக்கிக் கொண்டு விளக்கொளி முன்னே செல்லத் தாம் பின்னே மயில் போல் மெல்லமெல்ல நடந்து சென்றனர். சென்றவர்கள் கடவுள் முன் அதை வைத்துக் கைதொழுதனர். சாலினி[214] அந்தப் பொங்கலைக் கடவுளுக்கு ஊட்டித் தானும் உண்டு, படைத் தோருக்கும் ஊட்டினாள். மற்றொரு பக்கம் வேலன் முருகக் கடவுளைப் பேணி மன்றங்கள்தோறும் இன்னிசை முழங்க மற்றவர்களோடு தழுவிக்கொண்டு குரவை ஆடினான். தனித் தனிக் குழுவினர் வாழும் சேரிகள்தோறும் சொற்பொழிவுகள் நடைபெற்றன. இசைப்பாடல்கள் பாடப்பட்டன ; கூத்தாட்டு கள் திகழ்ந்தன. இவ்வாறு ஆங்காங்கே எழும் வேறுவேறு ஓசைகள் ஒன்றுசேர்ந்து பேராரவாரமாக எங்கும் கேட்டது. இந்த நிலையில் முன்னிரவு கழிந்தது.

நள்ளிரவு[215]

முன்னிரவு போனபின் நள்ளிரவு வந்தது. இக்காலத்தை அறிவிக்கும் வகையில் சங்கு ஊதப்பட்டது. மகளிர் தம் விற்பனைக் கடைகளை அடைத்துவிட்டுப் பள்ளியில் தூங்கினர். அடை, விசயம்[216], மோதகம்[217] முதலானவற்றைக் கூவியர்

---

214 சாமியாடும் பெண்
215 மதுரைக். 621-653
216 பாயசம்
217 கொழுக்கட்டை வகை

விற்றனர். விழாவில் ஆடிய வயிரியர்[218] தூங்கினர். பாயில் படுத்திருந்தோர் இனிமையாகத் துயின்றனர். ஊர் காவலர் மழைக்காலமாய் இருந்தாலும் பொருட்படுத்தாமல், வீதிகளில் அசையாமல் எழுந்து அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்தனர். இதனால் அச்சம் இல்லாமல் நள்ளிரவு பகல் போல் கழிந்தது.

பின்னிரவு[219]

நள்ளிரவு கழிந்தபின் பின்னிரவாகிய வைகறைப்பொழுது வந்தது. அவ் வேளையில் ஓதும் தொழிலையுடைய அந்தணர் கள் வேதங்களைப் பாடினர். யாழ்வல்லோர் மருதப்பண்ணைப் பாடினர். களிறுகளுக்கு உணவு உருண்டைகள் ஊட்டப் பட்டன. பல்வேறு பண்ணியக்கடைகள் மெழுகப்பட்டன. கள் விற்போர் விலைசொல்லிக் கூவினர். தத்தம் கணவருடன் துஞ்சிய மகளிர் கதவுகளைக் திறக்கும் ஒலி கேட்டது. கள்ளுண்டு செருக்கியவரின் கரகரப்பான ஒலி கேட்டது. சூதர்கள் மன்னனைத் துயிலெழுப்பி வாழ்த்துப் பாடினர். மாகதர்[220] விண்மீன் நிலையை அளந்து கூறினர். வேதாளிகர்[221] தம் இசைக்கருவியை முழக்கினர். இந்த மூவரும் விடியற்காலம் ஆயிற்று என்பதை இந்த வகையில் அறிவித்தனர். முரசு முழங் கிற்று இவ்வாறாகப் பின்னிரவு கழிந்தது.

மன்னன் வாழ்க்கை[222]

வெற்றிபெற்று மீண்ட மன்னன் இரவில் இன்பம் துய்த்திருந் தான். வைகறையில் துயில் எழுந்தான்; தன்னை ஒப்பனை செய்து கொண்டான்; போர் வெற்றிக்கு உதவியவர்களையும் கலைஞர்களையும் தானே அழைத்துக் கொடை வழங்கினான்; புலவர்களும் சான்றோர்களும் கூடிய அவையில், முறைவழங்கிச் செங்கோல் செலுத்தினான்; பின் மகளிர் பொன்கலத்தில் தேறலை ஏந்தி ஊட்ட உண்டு மகிழ்ந்து உறைந்தான். இவ்வாறு எல்லாம் மன்னன் வாழவேண்டும் என்று புலவர் வாழ்த்துவது மரபு.

---

218 மூங்கில் நிறுத்திக் கட்டிய கயிற்றின்மேல் ஆடுவோர்

219 மதுரைக். 654-686

220 மாகம்-விண்-விண்ணியலார்

221 இடக்கை இசைக்கருவியாகிய ஆமந்திரிகை போல் வலக்கை இசைக்கருவி என்று கொள்ளத்தக்க வேதாளிகையை முழக்கு வோர் போலும்

222 மதுரைக். 687-782

புகார் நகரம்[223]

புகார் நகரத்தில் பகற்பொழுதும் இரவுப்பொழுதும் எவ்வாறு கழிந்தன என்று பட்டினப்பாலையில் கூறப்பட்டுள்ளது. சோழநாடு செல்வவளம் மிக்கது ; முற்றத்தில் காயும் உணவுப் பொருள்களைக் கவரும் கோழிகளை, மகளிர் தம் காதுகளில் உள்ள குழைகளைக் கழற்றி எறிந்து ஓட்டும் அளவுக்கும், மூன்று கால் விளையாட்டுத் தேரை[224] ஓட்டும் சிறுவர்கள் தம் தேர் வழியில் கிடந்த அந்தக் குழைகளைத் தம் பொன்காப்பு அணிந்த கால்களால் விலக்கிச் செல்லும் அளவுக்கும் செல்வவளம் மிக்க தாகத் திகழ்ந்தது. காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த உப்புவாணிகர் சோழ நாட்டிலுள்ள பல ஊர்களுக்குச் சென்றனர் ; ஓடத்தில் உப்பை ஏற்றிக்கொண்டு சென்றனர் ; அவ்வூர்களில் உப்பை விற்றுவிட்டு நெல்லை வாங்கிக்கொண்டு மீண்டனர்.

புலி பொறித்த கதவினை உடையதும், பயன்படுத்த முடியாமல் செல்வம் தூங்கிக் கிடந்ததுமான காப்புமனையில் மொழி வளர்க்கும் நோக்கத்தோடும்,[225] அறத்தை நிலைபெறச் செய்யும் நோக்கத்தோடும் சோறு ஆக்கிப் படைக்கப்பட்டது.

தெருக்களில் காளைமாடுகள் முட்டிச் சண்டையிட்டுக் கொள்வதும் தேர்கள் அங்குமிங்கும் செல்வதும் மிகுதி.

நிலம் தாழ்ந்த காட்டுப் பகுதிகளில் தவப்பள்ளிகள் இருந்தன. அங்கு, விரிந்து கிடக்கும் சடைமுடியை உடைய முனிவர்கள் நெய்யை ஊற்றித் தீயை வளர்த்து வேள்வி செய்தனர்.

முதுமரத்தின் அடியில் 'முரண்களரி' இருந்தது. இது போர்ப்பயிற்சி அரங்கம். இந்த அரங்கம் ஒரு மணல்திட்டு. போர்வீரர்கள் ஆரவாரத்தோடு இங்குப் படைக்கலப் பயிற்சி பெற்றனர். கடல்மீனின் கறி, வயல் ஆமையின் கறி ஆகியவற்றை உண்டு, அவர்கள் உடல் வலிமை பெற்றிருந்தனர். அவர்கள் அடும்பு, ஆம்பல் ஆகிய பூக்களைச் சூடி மகிழ்வுடன் மன்றத்திற்கு வந்தனர். அங்குப் பலரும் கூடிப் பயிற்சி பெற்றனர். கையால் தாக்கியும் படைக்கலங்களோடு தாக்கியும் பயிற்சி பெற்றனர் ; எவரிடத்திலும் வெற்றியோ, தோல்வியோ காண முடியவில்லை.

---

223 பட்டினப். 29-218

224 நடைவண்டி

225 மொழிப் புலவர்களுக்குச் சோறு ஆக்கிப் படைக்கப்பட்டது

எனவே, வெளியிடம் நோக்கிக் கவண்கள் வீசி, தத்தம் திறத்தைக் காட்ட அவர்கள் முனைந்தனர்.

புறச்சேரிப் பகுதியில் மகளிர் பகலெல்லாம் விளையாடினர். உவா நாளில்[226] கடல் வேட்டைக்குச் செல்லாத பரதவர்களோடு அப்பகுதி மகளிர் சேர்ந்து விளையாடினர். உண்டு மகிழ்தல், கடலாடல், கடல் ஆடியதால் உடலில் படிந்த மாசு போக நல்ல நீரில் படிந்து குளித்தல், நண்டுகளை ஆட்டி மகிழ்தல், கடல் அலைகளை மறித்தல். ஈரமண்ணில் பாவை செய்து வழிபடல், பல குறியெழுத்துகளைச் சுழித்தல் ஆகியவை மகளிரும் மைந்தரும் அகலாக் காதலோடு ஆடிய விளையாட்டுகள் ஆகும். மேலே கூறப்பட்டவை அனைத்தும் பகற் காலத்தில் நிகழ்ந்தவை.

இரவில் மாடங்களின்மீது மகளிர் தம் கணவரோடு கூடி மகிழ்ந்தனர் அப்போது பகலில் அணிந்திருந்த பட்டாடையை நீக்கிவிட்டுப் பருத்தி ஆடையை அணிந்தனர். பகலில் உண்ட சுவைமிக்க தேனை உண்ணாமல் ஒதுக்கிவிட்டு, மதமதப்பைத் தரும் மதுவை உண்டனர். மைந்தர் தலையில் சூடிக்கொண்ட பூக்களை மகளிர் சூடிக்கொண்டனர். மகளிர் மார்பில் சூடியிருந்த மாலைகளை மைந்தர் அணிந்தனர். மாடங்கள்தோறும் வைத்திருந்த விளக்குகளை இரவில் கடல்வேட்டம் சென்று திமில்மேல் இருந்த பரதவர்கள் எண்ணிக்கொண்டிருந்தனர். இதைப்போலவே படகிலுள்ள விளக்குகளை ஊரிலுள்ளோர் எண்ணுவதுமுண்டு.[227] பூம்புகார் காவிரி ஆற்றின் மணற்பரப்பில் இருந்துகொண்டும் சிலர் பாடல்களைப் பாடுவதும் பலர் கேட்டு மகிழ்வதும் உண்டு. சிலர் நாடகத்தைக் கண்டு களித்தனர். சிலர் வெண்ணிலவின் பயனைத் துய்த்தனர். இவர்கள் தூக்கம் வந்தபோது காவிரி மணலிலேயே தூங்கிவிட்டனர். கங்குலின் கடைசிப் பகுதியான வைகறைப் பொழுதில் சிலர் தூங்கியும் விட்டனர்.

ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்கள் மன்னனின் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டுப் பெரும் பாதுகாப்போடு மூடை மூடைகளாக அடுக்கப்பட்டிருந்த முற்றத்தையும் புழைவாயையும்,[228] போகு இடைகழியையும் கொண்டிருந்த மாடி வீடுகளில் இருந்த மகளிர், சன்னல் வழியே தெருவில் இன்னிசை முழங்க மகளிர் வெறியாடு

226 முழுமதிநாள்

227 இந்நூல் பக். 22.

228 சுருங்கைவழி

வதைக் கண்டு தொழுதுகொண்டிருந்தனர், இவை இரவுக் காலத்தில் நிகழ்ந்தவை.

புகார் நகரத்தில் பல்வேறு கொடிகள் பறந்துகொண்டு இருந்தன. தெய்வத் திருவிழாவுக்குக் காப்புக் கட்டிய கொடி, செல்வரின் மாடிவீடுகளில் மூதாதையர் வழிபாடு குறித்து ஊன்றிய கொடி, ஆசிரியர்கள் கருத்துப்போருக்காக நாட்டிய கொடி, கப்பல்மீது பறந்த கொடி. நறவு விற்கும் அடையாளக் கொடி ஆகியவை அங்குப் பறந்த கொடிகள் ஆகும்.

உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகங்களில் விரிவான முறையில் ஈடுபட்டிருந்த வாணிகர்கள் நேர்மையான முறையில் வாணிகம் நடத்தி வாழ்ந்து வந்தனர்.

பகலிலும் இரவிலும் திளைத்து மகிழும் பல்வேறு ஆயத்தாரும், புலமைப்போர், வாணிகம், உழவு, வேளாண்மை முதலான தொழில்களில் ஈடுபட்டிருந்த பல்வேறு ஆயத்தாருமாகிய இவர்கள் எல்லாரோடும் பழகினர். பல்வேறு மொழி பேசும் பல்வேறு நாடுகளிலிருந்து வந்த மக்கள் ஒன்றாகக் கலந்து இன்பமாக இந் நகரில் வாழ்ந்து வந்தனர்.

இதுவரை உள்நாட்டு நகரான மதுரை நகர வாழ்க்கையையும். துறைமுகப்பட்டினமான புகார் நகர வாழ்க்கையையும் தனித்தனியே பார்த்தோம். இந்த வாழ்க்கை முறையின் ஒவ்வொரு கூறுபாட்டையும் இனித் தனித்தனியே காணலாம்.

உழவர் வாழ்க்கை

நகரத்தைச் சார்ந்திருந்த வயல்களில் வேளாண்மை செய்து வாழ்ந்துவந்த உழவர்கள் நகரில் வாழ்ந்தார்கள் எனக் கொள்ள இடமுண்டு. இந்த உழவர்கள் பசுக்களையும் எருதுகளையும் பாதுகாத்தார்கள்; அமரரைப் பேணி ஆவுதி அருத்தினார்கள். கொலை, களவு தாம் செய்யாமல் வாழ்ந்ததோடு, பிறர் அவற்றைச் செய்யாமல் வாழுமாறும் பார்த்துக்கொண்டார்கள்; நான்மறையோர் புகழைப் பரப்பினார்கள்; உணவுப் பொருளைச் சமைத்தும் சமைக்காமலும் பிறருக்கு அளித்தார்கள். அறத்திற்குத் தடை நேராமல் பார்த்துக் கொள்ளும் அவர்களது வாழ்க்கையும் கொடுமைகள் நேராமல் பார்த்துக் கொள்ளும் மன்னனின் ஆட்சியைப்போலவே உலகிலுள்ள மக்களுக்கெல்லாம் நிழல் என்று கருதப்பட்டது.[229]

---

229 பட்டினப். 199-205

வேளாண்மையில் சிறந்து விளங்கிய உழவர்கள் மன்னரால் 'காவிதி' என்னும் சிறப்புப் பட்டம் அளிக்கப்பெற்று, நகரங்களில் வாழ்ந்து வந்தனர்.[230] இவர்கள் மன்னனுக்கு அமைச்சர்களாக விளங்கினார்கள் என்று கொள்ளவும் இடமுண்டு. இந்த உழவர்கள் தமது மார்பிலே சந்தனம் பூசிக்கொண்டார்கள். நறுமணப் புகை ஊட்டி ஒளிரும் ஆடையை உடுத்திக்கொண்டார்கள். நல்லனவற்றையும் தீயனவற்றையும் கண்ணாரக் கண்டு உளமார ஆராய்ந்து பார்த்து அடக்கத்தோடு, அன்பும் அறமும் நிலைத்து நிற்கப் பேணி, பழிபடுவன நீக்கி, உயர்ந்த புகழோடு இல்லற வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.[231] நாட்டுப்புற வாழ்க்கை என்னும் பகுதியில் இவர்களது வாழ்க்கைபற்றிய பிற செய்திகளை விரிவாகக் காணலாம்.

தொழிலாளர் வாழ்க்கை

சங்கு அறுத்தல், யானைத் தந்தங்களைக் கடைதல், பொன் வேலை, மணிவேலை, செம்புவேலை, வம்பு முடிதல்,[232] ஓவியம் தீட்டுதல், மாலை கட்டுதல், சுண்ணம்இடித்தல்,[233] திரையல்[234] மடித்தல் முதலான சிறுதொழில்களும், குடிசைத் தொழில் களும் மதுரையில் நடைபெற்றன என்று மதுரைக்காஞ்சி தெரிவிக்கிறது.[235]

இவற்றுடன் வெண்கல வேலை, நெசவு வேலை, சிவிகை, வண்டி, தேர், மெய்புகு கவசம், யானையை அடக்கும் தோட்டி கள், கையில் மாட்டிக் கொள்ளும் தோல் உறைகள், மருந்துகள், குழியம், வெண்சாமரை, பல வகையான கேடயங்கள் முதலான வற்றைச் செய்தல் ஆகியனவும் மதுரையில் நடைபெற்றதாகச் சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது.[236] புகார் நகரத்திலும் வெண் கலத் தொழில், செம்புத்தொழில், மரவேலை, இரும்புவேலை, பொன்வேலை, ஓவியம் தீட்டுதல், மண்பொம்மை செய்தல், தையல்வேலை, தோல்வேலை, துணியில் பூப்போடும் வேலை,[237] நெட்டிவேலை முதலான பல தொழில்கள் நடைபெற்றதாகச் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.[238]

---

230 மதுரைக். 493-499; சிலப். 22:9
231 ஷி 493-499
232 மகளிர் மார்புக் கச்சு, போர் வீரர் கவச உடை, கயிறுகளைக் கொண்டு முடிவது
233 Toilet powder
234 வெற்றிலை பாக்குச் சுருள்
235 மதுரைக். 398-401, 511-518.
236 சிலப். 14:168-177
237 Embroidery-அக்கப் பதித்தலு மாம்
238 சிலப். 4:45-51, 5 28-34

மேலே கூறப்பட்ட தொழிலாளர்களுள் ஓவியரின் தொழில் திறமை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. எந்தக் கருத்தையும் உவமை வாயிலாக அவர்கள் தம் ஓவியத்தில் தீட்டிக்காட்ட வல்லவர்களாம். இவர்கள் திரைச் சீலைகளிலும் வளமனைச் சுவர்களிலும் ஓவியம் தீட்டியிருந்தனர்.[239]

இந்தத் தொழிலாளர்கள் அனைவரும் பொருள்களைச் செய்பவர்களாகவும் செய்த பொருள்களைத் தாமே விற்பனை செய்பவர்களாகவும் விளங்கித் தமது வாழ்க்கையை நடத்தி வந்தனர்.

வாணிகர் வாழ்க்கை

வாணிகரை உள்நாட்டு வாணிகர் என்றும் வெளிநாட்டு வாணிகர் என்றும் பகுத்துக் கொள்ளலாம். நகர வாணிகம் அங்காடியிலும்[240] ஆவணத் தெருக்களிலும்[241] நடைபெற்றது. கூடல் (மதுரை),[242] புகார்[243] ஆகிய நகரங்களில் இருந்தது போலவே மருங்கூர்ப்பட்டினம்[244] என்னும் நகரிலும் அங்காடி இருந்தது. தவசம், உப்பு, எண்ணெய் வகை, மீன் முதலான இறைச்சி வகை, கள்வகை, சமைத்த உணவுப் பொருள்கள், சந்தனம், சுண்ணம், ஆடைகள், அணிகள், கிழங்குப் பொருள்கள் முதலான திணைப் பொருள்களும் நகர வாணிகத்தில் இடம் பெற்றிருந்தன.

தவசவாணிகர் வாழ்க்கை

உணவாகும் தவசங்கள் நகரங்களில் விளையவில்லை. நகரை ஒட்டிய பகுதிகளில் ஓரளவு விளைந்திருக்கும் எனலாம். உப்பை விற்றுவிட்டுப் புகார் நகரத்திற்கு நெல் வாங்கிவரப்பட்ட செய்தி பட்டினப்பாலையில் கூறப்பட்டுள்ளது.[245] இந்த நகரில் தவசம் குவிந்துகிடந்த ஒரு வீதியே இருந்ததாகச் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.[246] மிளகு மூட்டைகளும் பிற தவசங்களும் குவிந்திருந்த வீதி மதுரையில் இருந்த செய்தியையும் இந்த நூல் தெரிவிக்கிறது.[247] மணிமேகலை நூலின்

239 மதுரைக். 516-518
240 Market
241 Bazaar
242 அகம். 93:10; மதுரைக். 430, 544; சிலப். 13:122, 14:179
243 சிலப். 5:63, 196
244 நற். 258:7
245 பட்டினப். 29-30
246 சிலப். 5:23
247 ஷை 14:210-211

ஆசிரியரான சாத்தனார் ஒரு கூல வாணிகர் ஆவார். இவர்கள் நகரத்துப் பண்டங்களை நாட்டுப்புறங்களில் விற்றுவிட்டு, உணவுப் பொருள்களை வாங்கிவந்து நகரத்தில் விற்றார்கள் என்று கொள்ளலாம்.

உப்பு வாணிகர் வாழ்க்கை

புகார் நகரத்தில் உப்பு வாணிகம்[248] நடைபெற்ற செய்தி முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. கடல்நீரை உப்பளங்களில் பாய்ச்சி, சூரிய வெப்பத்தால் காயும்படி செய்து நெய்தல் நில மக்கள் உப்பை விளைவித்தனர். உப்புக்கு விலையாக நெல்லையே இவர்கள் மிகுதியாகப் பெற்றனர்.[249] உமணர் இவர்களிடம் உப்பை வாங்கிச் சென்றனர்; கூட்டம் கூட்டமாக மாட்டு வண்டிகளில் வெளியூர்களுக்குக் கொண்டுசென்று விற்றனர்.[250] இவர்கள் உப்பு வாணிகர் என்ற நிலையிலேயே காணப்படுவதால் இவர்களைப்பற்றி நகரவாழ்க்கைப் பகுதியில் மேலும் கூறுவதற்கில்லை.

புகார் நகரத்தில் வாழ்ந்த 'ஓசுநர்' என்போர் எண்ணெய் வாணிகராக இருக்கலாம்.[251] பாசவரைத் திரையல் சுருட்டி விற்போர் என்றோ, பச்சைப்புலால் அல்லது புலால் வறுவல் விற்போர் என்றோ, கயிறு விற்போர் என்றோ கொள்ளலாம்[252] இறைச்சி விற்போரும் இங்கு வாழ்ந்தனர்.[253] புகார் நகரத்தில் மீன் விற்போரும் வாழ்ந்து வந்தனர்.[254] கடலில் மீன்பிடித்தல், அவற்றைக் காயவைத்துப் பதப்படுத்துதல் முதலிய தொழில்கள் கடற்கரை ஓரமாகப் பரதவர் வாழ்ந்த இடங்களிலெல்லாம் நடைபெற்ற தொழிலே.

கள் விற்போர் வாழ்க்கை

கள்ளில் இருமடைக்கள், கலிமடைக்கள், தேறல், தோப்பி மட்டு, மகிழ், நறவு, நனை, அரியல் முதலிய வகைகள் இருந்தன.[255] சங்க காலத்து மக்கள் இவற்றை விரும்பிப்

---

248 பட்டினப் 29-30; சிலப். 5:25

249 நற். 254:6; அகம். 140:7

250 ஷை 138:1-3; அகம். 140:7-8, 159:1-2, 173:10

251 சிலப். 5 27

252 ஷை 5:26; மணிமே. 28:33; பதிற். 21:9, 67:16

253 சிலப். 5:26; மணிமே 28.33

254 சிலப். 5:25

255 நற்.59:5,295:7;புறம்.392:16; பெரும்பாண். 142; புறநா. 113:1; அகம். 36:17, 166:1, 184:13-14

பருகினர். இவற்றுள், பல நாம் இக்காலத்தில் பருகிவரும் பழச் சாறு, காப்பி, தேநீர் போன்றவை. இவற்றின் விற்பனை நகர வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க நிலையைப் பெற்றிருந்தது. கள் விற்றோரைக் 'கள்நொடை ஆட்டியர்' என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.[256] இதனால் பெண்கள் இத் தொழிலில் ஈடு பட்டிருந்தார்கள் எனத் தெரியவருகிறது.

கள் விற்பனை வைகறை நேரத்திலும் நடைபெற்றது.[257] உடல் உழைப்பு வாழ்க்கையை மேற்கொண்ட மக்கள் இதனைக் காலையில் விரும்பிப் பருகினர். பகல், மாலை, இரவு முதலான வேளைகளில் பருகுவதற்கு ஏற்றவாறு கள் வகைகள் இருந்தன. பனைமரத்திலிருந்து இறக்கியனவும், வீட்டில் காய்ச்சியனவுமாக அவை இருந்தன. இவற்றை விரிவாக உணவு வகையில், பருகு பொருள்கள் என்னும் பகுதியில் காணலாம்.

நகரத்தில் தேறல் முதலானவை காய்ச்சப்பட்டும் இருக்க லாம். எப்படியிருந்தாலும், விற்பனை கொடிகட்டி நடந்தது என்பது தெளிவு. கள்ளுக்கடைகளில் பறந்த கொடி விளம்பரக் கொடியாக இருக்கலாம்.

மீன் பிடிக்கும்போது முகந்து கொண்டு வந்த இப்பி யையும்;[258] வரால்மீனையும்,[259] மான்கறியையும், யானைக் கோட்டையும்,[260] நெல்[261] முதலானவற்றையும் கள்ளுக்கு விலை யாகக் கொடுத்தனர். இப்போது பதநீர் விற்கப்படுவது போலக் கள்ளை வீடுவீடாகச் சுமந்து சென்று விற்றவர்களும் உண்டு.[262] வண்டிகளில் ஏற்றிக்கொண்டு போய் வயல்களில் வேலை செய் தவர்களுக்கு விற்றவர்களும் உண்டு[263] மோர், வெண்ணெய், நெய் முதலான பொருள்களை விற்ற செய்திகளும் சங்கநூல்களில் கூறப்பட்டுள்ளன.[264]

சமைத்த உணவுப் பண்டங்கள் விற்றோர் வாழ்க்கை

அப்பம், பிட்டு, பண்ணியம் முதலான உணவுப் பண்டங் களைச் சமைத்து நகரத்துத் தெருக்களில் வைத்துக்கொண்டு விற்றவர்களும்,[265] விரும்பி வாங்குவோர் இருப்பிடங்களுக்குச்

---

256 சிலப். 45:24
257 மதுரைக். 662
258 அகம். 296:8
259 ஷெ 196:2
260 பதிற். 30:10-11
261 அகம். 61:10
262 புறம். 120:12-13
263 அகம். 116:1-2
264 கலி 106:37,108:26, 110:5-6,17
265 மதுரைக். 624-627

சென்று விற்றவர்களும்,[266] தெருவிலேயே சுட்டு விற்றவர் களும்[267] உண்டு. இவர்களது உணவுப் பண்டங்கள் இனிய சுவை மிக்கனவாக இருந்தன.

பூ, பூமாலை, மேனிமணப்பொடி, பொன்அணிகள், முத்து, பவழம், வைரம் முதலானவை கோத்தோ, பதித்தோ அமைக்கப் பட்ட அணிகள், பூ வேலைப்பாடு அமைந்த சிறந்த ஆடைகள் முதலான திளைப்புப் பொருளின் வாணிகம் நகர வாழ்க்கையில் சிறப்பிடம் பெற்றிருந்தது.

மதுரையில் கலிங்கம் (ஆடை) விற்றோர் வாழ்ந்ததாக மதுரைக்காஞ்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது.[268] பட்டு நூல், பருத்தி நூல், மயிரிழை முதலானவற்றைக் கொண்டு நெய்யப் பட்ட ஆடைகளை விற்றவர்கள் மதுரையிலும் புகாரிலும் வாழ்ந்தார்கள் என்று சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.[269] கைம்பெண்கள் நூல் நூற்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.[270] ஆடை நெய்தல்,[271] ஆடைகளில் அச்சுப் பதித்தல்,[272] துணி களில் கலைத்திற வேலைப்பாடு செய்தல்,[273] துணிகளை அணியத்தக்க வகையில் தைத்துத் தரல்,[274] வம்பு முடிதல்,[275] தோல் அணிகள் செய்தல்,[276] செய்த பொருள்களை விற்றல் முதலான பல தொழில்களைச் செய்து நகரமக்கள் வாழ்க்கை நடத்தி வந்தனர்.

ஓவியம் தீட்டுதல்,[277] பொம்மைகள் செய்தல்,[278] நெட்டி களைக் கொண்டு கண்ணைக் கவரும் மாதிரி உருவங்கள் செய்தல்,[279] அவற்றை விற்றல், வீடு கட்டுதல்[280] முதலான தொழில்களில் ஈடுபட்டுச் சிலர் வாழ்க்கை நடத்தி வந்தனர். கைவினைத் தொழில் புரிந்தும் சிலர் வாழ்ந்து வந்தனர்.[281]

---

266 மதுரைக். 405-406
267 சிலப். 13:122-123
268 மதுரைக். 513
269 சிலப். 5:16-18, 14:205-207
270 புறம். 125.1, 326:5
271 சிலப். 5:16-17; அகம். 217:2, 293:4
272 ஷை 5:17 (காருகர்-கைக் கோளர்-திவாகரம் 2)
273 சிலப். 5:33 (கிழி-கிழித்த துணி) தேர்ச்சீலை முதலா னவை தைத்தல்
274 சிலப். 5 32
275 மதுரைக். 514 (பனியன் பின் னுதல்)
276 சிலப். 5:33
277 ஷை 5:30
278 ஷை 5:30
279 ஷை 5:33
280 நெடுநல். 73-78
281 சிலப். 5:38

சங்கை அறுத்தல், யானைத் தந்தத்தைக் கடைதல், மணி களை அணிகலன்களாகக் கோக்கும் வகையில் செதுக்கித் துளை யிடுதல், பொன்னைச் சுட்டுச் சுடரும் அணிகலன்களாகச் செய்தல், பொன்னை மாற்றுப் பார்த்து வாங்கிவிற்றல் முதலான தொழில்களைச் செய்து மதுரைநகரில் வாழ்ந்துவந்த மக்கள் செய்தியை மதுரைக்காஞ்சி தெரிவிக்கிறது. கருவூர் நகரத்துப் பொன்வாணிகன் ஒருவனைச் சங்க காலத்துத் தமிழ் எழுத்துக் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது.[282] மதுரையில் இருந்த மணிக்கல் வாணிகர் பெரும் கலைத்திறன் உடையவர் களாய் வாழ்ந்து வந்தனர் என்னும் செய்தியைச் சிலப்பதிகாரம் விரிவாகத் தெரிவிக்கிறது.[283] வைரம், மரகதம், மாணிக்கம், புருடராகம், கோமேதகம், நீலம், வைடூரியம் முதலான மணிக் கற்களில் காணப்படும் குற்றங்களையும், நல்ல பண்புகளையும் அவர்கள் உணர்ந்து வாணிகம் செய்பவர்களாக விளங்கினர். பிளவு, களங்கம், புள்ளி, கீறல்[284] முதலானவை வெள்ளை, சிவப்பு, பச்சை, கறுப்பு நிறங்களில் கிடைக்கும் வைரங்களில் காணப்படும் குற்றங்கள்; கீறல், பிணையல், இருள்[285] முதலா னவை மரகதத்தில் காணப்படும் குற்றங்கள்; காற்றேறு, மண லேறு, கல்லேறு, நீரேறு முதலானவை முத்துகளில் காணப்படும் குற்றங்கள்; உட்பகுதியில் துளை இருத்தல், கல் இருத்தல், முறுக்கு இருத்தல் முதலானவை பவழத்தில் காணப்படும் குற்றங்கள் ஆகும். கோடி முதலானவை வைரத்தில் காணப்படும் நற்பண்புகள். வெண்முத்து, செந்நீர் முத்து, ஆணிமுத்து முதலான சிறந்த முத்துகளையும், சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்புநதம் முதலான சிறந்த பொன் வகைகளையும் இவர்கள் தம் வாழ்க்கைப் பட்டறிவால் உணர்ந்து, பகைவர் களிடம் ஏமாந்து போகாமல் வாழ்க்கை நடத்தி வந்தனர். புகார் நகரத்திலும் சிலர் பொன் அணிகள் செய்து வாழ்க்கை நடத்தி வந்தனர். இடம் சுட்டப்படாமல் இத் தொழில்பற்றிக் குறிப் பிடப்படும் சங்கநூல் சான்றுகளும் உண்டு.[286]

அயல்நாட்டு வாணிகர் வாழ்க்கை

திருப்பதிக்கு அப்பால் இருந்த நாடுகளை அண்டை நாடுகள் என்றும், கடல்களுக்கு அப்பால் இருந்த நாடுகளை வெளிநாடு

282 மதுரைக். 511-513
283 சிலப். 14:180-204
284 காகபாதம், களங்கம், விந்து, இரேகை
285 ஏகை, மாலை, இருள்
286 புறம். 308:1-3, 353:1; நற். 313:1-2

என்றும் இங்குக் கருதலாம். இவை அயல்நாடுகள். அயல்நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்த வாணிகர்களையும், தமிழ்நாட்டிலிருந்து அயல்நாடுகளுக்குச் சென்ற வாணிகர்களையும், 'அயல் நாட்டு வாணிகர்' என்னும் தொடரால் சுட்டுகிறோம்.

சிறப்பாக விலைபோகக் கூடிய தேசங்களுக்குச் சென்று தமிழ்நாட்டில் செய்யப்பட்ட பொருள்களை விற்ற வாணிகர்கள் மதுரையில் வாழ்ந்தார்கள். இவர்கள் குன்றுகள்போல் தோற்றமளித்த வீடுகளில் குழுக்குழுவாக வாழ்ந்து வந்தனர். பல வேலைப்பாடுகள் மிக்க இவர்களது வீடுகளில் பல்வேறு பண்டங்கள்[287] இருந்தன. இவற்றுடன் இவர்கள் இல்லத்தில் உணவு மிகுதியாக இருந்தது என்று குறிப்பிடப்பட்டிருப்பதால் இவர்கள் தமக்கு எடுபிடி வேலை செய்யும் ஆள்களுக்கும் தாம் உண்ணும் சிறந்த உணவையே அளித்து உண்ணச்செய்து கூடிச் செயலாற்றி வாணிகம் செய்தார்கள் எனலாம், அறநெறி தவறாமல் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து இவர்கள் வாழ்ந்து வந்தார்கள் என அறிகிறோம்.[288]

புகார்நகரத்தில் நடைபெற்று வந்த அயல்நாட்டு வாணிகத்தைப் பற்றிப் பட்டினப்பாலை விரிவாகக் கூறுகிறது.[289] கடல் வழியே வந்து இறக்குமதி செய்யப்பட்ட குதிரைகள், நிலவழியே வந்த மிளகு மூடைகள், வடமலையில் பிறந்த மணிக்கற்கள், பொன் முதலானவை, குடமலையிலிருந்து கொண்டுவரப்பட்ட சந்தனம், அகில் முதலானவை, தென்கடலில் எடுத்து வாங்கி வரப்பட்ட முத்துகள், குணகடலில் விளைந்த பவளம், கங்கைச் சமவெளியிலிருந்து வாங்கிவரப்பட்ட பொருள்கள், காவிரிச் சமவெளியில் வாங்கிவரப்பட்டவை, ஈழநாட்டு[290] உணவு வகை, பர்மாநாட்டுச் செல்வம் முதலானவை மிகுதியாக வாணிகத்தின் பொருட்டுக் குவிக்கப்பட்டிருந்த தெருக்களில் தமிழ்நாட்டு வாணிகர்கள் வாழ்ந்தார்கள். தெருக்களில் இந்தப் பொருள்கள் குவிந்திருந்ததோடு கப்பல்களில் காவல் இல்லாமலேயே இந்தப் பொருள்கள் கிடந்தன. இந்த அளவுக்கு வாணிகர்கள் அயல்நாட்டு வாணிகத்தில் ஈடுபட்டு வளமிக்க வாழ்க்கை நடத்திவந்தனர்.

இவர்கள், உழவர் நுகத்துப் பகல்ஆணி போல நடுவு நிலைமையிலிருந்து பிறழமாட்டார்கள்; பழியைக் கண்டு அஞ்சுவார்கள்; உண்மையே பேசுவார்கள்; தம் பொருளையும் பிறர்

---

287 செய்பொருள்கள்
288 மதுரைக். 500-506
289 பட்டினப். 184-218
290 இலங்கை

பொருளையும் சமமாக மதிப்பிடுவார்கள். இவ்வாறு இவர்களின் வாழ்க்கை நேர்மை உடையதாக இருந்தது.

பல்வேறு மொழிகள் பேசும் அயல்நாட்டவரும் புகார் நகரத்திற்கு வந்து இந்த வாணிகருடனும், பிற மக்களுடனும் ஒன்றிக் கலந்து வாழ்ந்துவந்தனர். நம் நாட்டு வாணிகர்களும் அயல்நாட்டு வாணிகர்களும் ஒருவர் மற்றொருவர் மொழியை உணர்ந்துகொள்ளும் அளவுக்குப் பன்மொழி அறிவு உடையவர்களாய் வாழ்ந்துவந்தனர் எனலாம்.

தமிழர்கள் கடல்கடந்து சென்று வாணிகம் நடத்தினார்கள் என்பதற்கு இலக்கியங்களிலும் சான்றுகள் உள்ளன.[291] வாணிகத்தில் சிறந்து விளங்கியமைக்காக மன்னனால் 'எட்டி' என்னும் பட்டம் சூட்டப்பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்த பெருவாணிகரும் உண்டு.[292] இவையும் பிறவும் இந்நூலின் 'பொருளியலும் வாணிகமும்' என்னும்இயலில் காணலாம்.

அரண்மனை வாழ்வு

நகரங்கள் பெரும்பாலும் மன்னரின் தலைநகரங்களாக விளங்கின எனலாம். எனவே, நகரங்களில் மன்னன் வாழ்ந்த அரண்மனை இருந்திருக்க வேண்டும். மன்னன், மன்னனது சுற்றத்தார், அரசியலாளர் முதலானவர்களின் வாழ்க்கையை இந்தப் பகுதியில் காணலாம்.

மன்னன்

மன்னன் பகலிலும் இரவிலும் எவ்வாறு வாழ்ந்தான் என்பது மதுரைநகர வாழ்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இரவு வேளையில் மாறுவேடம் பூண்டுசென்று, அரசாட்சி பற்றிய மக்களின் கருத்தினை ஆராய்வதில் மன்னன் ஈடுபட்டிருந்தான் என்பதைப் பொற்கைப் பாண்டியன் வரலாறு நமக்குக் காட்டுகிறது.[293]

அரண்மனையில் மும்முரசு முழங்கிற்று.[294] செல்வர் இல்லங்களிலும் முரசு முழங்கிற்று.[295] அரண்மனையில் அவைக்

---

291 அகம். 110:28
பதிற். 52:3-4, 76:4
புறம். 66:1, 126:14-15, 400:3
ஐங்குறு. 192:2
நற். 189:5

292 சிலப். 15 196;
மணிமே. 22.113

293 சிலப். 23:42-53

294 புறம் 58:12

295 அகம். 145:9

களம் இருந்தது.[296] அதில் இருந்த அரியணையில் அரசன் வீற்றிருந்தான்.[297] அப்போது அவனுக்குக் கவரி வீசப் பட்டது.[298] அந்த அவையில் இருந்துகொண்டு காலையில் மன்னன் கொடை வழங்கினான்.[299] அங்குச் சான்றோர் பலரும் குழுமியிருந்தனர்.[300] மக்கள் தமது குறைகளை அவையிலிருந்த மன்னனிடம் முறையிட்டனர்.[301] மன்னன் அந்த அவையில் திறமிக்க ஒருவனை அமர்த்திச் செங்கோல் செலுத்துதலும் உண்டு.[302] நட்பு மன்னர்களோடும்,[303] புலவர்களோடும்,[304] கலைஞர்களோடும்[305] அந்த அவையில் கூடியிருந்து முறையே அரசியல் தொடர்பாக உரையாடியும், மொழி வளர்ச்சிக்கு வேண்டியனவெல்லாம் செய்தும், கலை வளர்ச்சிக்கு உதவியும் தன் வாழ்க்கையை நடத்தி வந்தான். தம்மைக்காட்டிலும் வலிமையுடையவர்கள் சொன்னபடியெல்லாம் கேட்கும் நிலையினராக இல்லாமலும், தம்மைக்காட்டிலும் வலிமை அற்றவர்களாயின் அவர்கள் முன்னிலையில் தம்மை வியந்து கூறாமலும், பொருளுக்காகப் பிறரிடம் இரக்காமலும், பொருளுக்காக இரந்தவர்களுக்கு இல்லையென்று மறுப்புச் சொல்லாமல் அளித்தும், பெரும்பாலான மன்னர்கள் வாழ்ந்து வந்தனர்.[306] போரில் தமது உயிரைப்பற்றிப் பெரிதாக மதிக்காமை, பெரியோரைப் பேணி அவர்வழி நடத்தல் ஆகிய பண்புகள் நிறைந்தவராய் அவர்கள் வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.[307]

விடியற்காலம் ஆயிற்று என்பதை உணர்ந்த சூதர், மாகதர் முதலானோர் மன்னன் துயில் எழும்படி வாழ்த்துப் பாடினர்.[308] பாணர், விறலியர் முதலானோரும் தம் இசைக் கருவிகளை மென்மையாக இசைத்து அவனைத் துயிலெழும்படி செய்தனர்.[309] துயிலெழுந்த மன்னன் நீராடித் தன்னை ஒப்பனை செய்துகொண்டான்; மார்பில் சந்தனம் பூசிக்கொண்டு முத்தாரம் அணிந்துகொண்டான். கழுத்தில் பூமாலை, கையில் பொன்தொடி, இடுப்பில் கஞ்சியிட்டுச் சலவைசெய்த உடை முதலான ஒப்பனைகளைச் செய்துகொண்டு முருகன்போல்

---

296 நற். 400:7; தொல். பொருள். புறத். 17

297 சிலப். 20:22-23

298 நற். 241:6

299 புறம். 54:6-8

300 ஷெ 266:8; பதிற். 72:6

301 குறுந். 276:5-6

302 புறம். 71:7-8

303 ஷெ 71:11-14

304 ஷெ 72:16

305 பரிசில் பெறவந்த பாணர், விறலியர், கூத்தர் முதலானோர் தமது கலைநிகழ்ச்சிகளை நடத்திக் காட்டினர் எனலாம்.

306 புறம். 236:3

307 பதிற். 79:1

308 மதுரைக். 670-671; சிலப். 5:48-49

309 மதுரைக். 658

மன்னன் தோன்றினான்.[310] பின்னர் அவைக்களம் சென்றான். அங்கு வீரர்கள் அவனுக்கு முதலில் வாழ்த்துக் கூறினர்.[311] பின் மன்னன் கொடை வழங்கினான். போரில் தான் வெற்றிபெற உதவிய வீரர், அந்த வீரரின் சுற்றத்தார், பாணர், விறலியர், புலவர் முதலானவர்களைத் தானே 'வருக' என வரவேற்றுப் பரிசுகள் வழங்கினான்;[312] பின் அவர்கள் எல்லாரோடும் கூடிச் சுவைமிக்க உணவை உண்டு மகிழ்ந்தான்;[313] அதன் பின்னர் அரசியல் தொடர்பான செயல்களைச் செய்தான். அரசியல் அலுவலர்களும், குறுநில மன்னர்களும் அவனது ஆணையை நிறைவேற்ற அவையில் காத்துக்கொண்டிருந்தனர். இவர்களும், அவனைப் புகழ்ந்து கூறினர்.[314] அழகிய அணிகலன்களை அணிந்திருந்த மகளிர் கொடுத்த தேறலை மன்னன் உண்டு மகிழ்ந்தான்.[315]

மன்னன் குதிரை, தேர், யானை ஆகிய ஊர்திகளில் செல்லுதல் உண்டு.[316] செங்குட்டுவன் மலைவளம் காணவும் அப்பகுதியில் விளையாடித் திளைக்கவும் விரும்பித் தன் மனைவி வேண்மாளுடன் வஞ்சிநகரத்தைவிட்டுச் சென்றபோது பூங்கா, ஆறு, ஆற்றுத்திட்டு முதலான இடங்களில் அரசனும் அரசியும் அவர்களுக்குத் துணையாக வந்த மகளிரும் விளையாடினார்கள் என்பதைச் சிலப்பதிகாரம் நமக்குத் தெரிவிக்கிறது.[317] புகார் நகரத்தில் இருந்த பூங்காவில் சோழமன்னன் மாவண்கிள்ளி, தன் மனைவி சீர்த்தி என்பாளுடன் விளையாடினான்.[318] மதுரை அரண்மனையில் செயற்கைப் பூங்கா அமைக்கப்பட்டிருந்தது.[319]

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் தன் மனைவிமீது கொண்டிருந்த அன்பும்,[320] அவனது மனைவி, பூதப்பாண்டியன் இறந்தபோது தீயில் பாய்ந்து இறக்கும் அளவுக்கு[321] அவளது கணவன்மீது கொண்டிருந்த அன்பும் அவர்களின் கற்புநெறியைக் காட்டுகின்றன. சோழன் நலங்கிள்ளி பரத்தையைத் தழுவுவதை இழிவாகக் கருதியதாக அவனே பாடிய புறநானூற்றுப் பாடல் கூறுகிறது.[322]

---

310 மதுரைக். 715-727
311 ஷை 725-727
312 ஷை 728-752
313 ஷை 753-770
314 ஷை 771-778
315 ஷை 779-781
316 புறம். 239:13-15
317 சிலப். 25:6 23
318 மணிமே. 19:54-116
319 நெடுநல். 89-100
320 புறம். 71:6
321 ஷை 246:15
322 ஷை 73:5-14

அரசி

அரசவையில் அரசனோடு இணையாகச் சில சமயங்களில் அரசி வீற்றிருந்தாள்.[323] அரசன் உலாவச் சென்றபோது அரசி உடன்சென்ற நிகழ்ச்சிகளும் உண்டு.[324] கருவறையில் பாண்டியன் மனைவி இருந்த காட்சி அரசியர் வாழ்க்கைக்கு ஓர் எடுத்துக் காட்டாய் அமையும். கட்டடக்கலை வல்லுநர் முறைப்படி கட்டிய அரண்மனை; அதன் உள்ளே செயற்கையில் அமைத்த பூங்கா; பூங்காவின் அருகில் அரசியின் இல்லம்; இல்லமெல்லாம் கிரேக்கநாட்டுப் பாவைவிளக்கின் ஒளி; அந்த விளக்கைத் தூண்டி நெய் வார்க்கும் மகளிர்; அந்த இல்லத்தில் பூங்கொடி படர்ந் திருக்கும் கருவறை. (இந்தக் கருவறை அரசியின் கணவனான வேந்தன் அன்றிப் பிற ஆண்மக்கள் செல்லா இடம்.) வெள்ளை அடிக்கப்பட்டு விளக்கொளியில் செம்பால் செய்யப்பட்டதுபோல் தோற்றமளிக்கும் அதன் சுவர்; அறையில் யானைத்தந்தத்தைக் கடைந்தும், குயின்றும் கால் அமைக்கப்பட்ட கட்டில்; அதில் அன்னத் தூவியாலான மெத்தை. அதன்மேல் தூய ஆடை விரிப்பு. கட்டிலைச் சுற்றித் தொங்கும் முத்துக்கோவைகள்; கட்டிலுக்கு மேலே கட்டப்பட்டிருந்த திரைச்சீலை. திரைச் சீலையில் காதலர் மகிழ்ந்திருப்பதைச் சித்திரிக்கும் ஓவியம். இத்துணைச் சிறப்புகளோடு கருவறையிலிருந்த அரசியின் காலடி களை மெல்லியல் மகளிர் வருடினர். செவிலியர் பலர் கூடி உரை யாடினர். இவையெல்லாம் அரசியர் பெற்றிருந்த பெருவாழ்வைக் காட்டும்.

ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன் மனைவி பாண்டிமா தேவி அவைக்களம் நோக்கிச் சென்ற காட்சியும் அரசியின் வாழ்வு எத்தகையது என்று நாம் அறிய உதவுகிறது. கண்ணாடி, அணி கலன்கள், கோடி ஆடைகள், பட்டாடைகள், திரையல் செப்பு, வண்ண நீர்க்குடங்கள், சுண்ணப்பொடிகள், மான்மதச் சாந்து, பூக்கண்ணிகள், பூமாலைகள், மணப்புகைகள் முதலானவற்றை ஏந்திக்கொண்டு மகளிர் சென்றனர். சிலர் அரசிக்குக் கவரி வீசிக் கொண்டு சென்றனர். அரசிக்குக் குற்றேவல் செய்யும் கூனர், குறளர், ஊமையர் முதலான மக்களும் அவளைச் சூழ்ந்து சென் றனர். ஆயத்தாரும் காவலர்களும் அவள் அரசவைக்குச் செல் லும்போது வாழ்த்துக் கூறினர்.

அரசிக்குச் சினம் வந்தபோது அவளது ஆயத்தாரான தோழிமார் அனைவரும் அவளைக் கைகூப்பித் தொழுதனர்.[325]

---

323 சிலப். 5:79-81; 20:20-22
324 டி 25:23
325 நற். 300:2

அரசிளங்குமரர்கள் மகிழ்வோடு வாழ்க்கை நடத்தி வந்தனர். அதியமான் மகன் பொகுட்டெழினி படைச்சிறப்புடன் ஊர் ஊராகச் சுற்றுலாச் சென்று களித்தது,[326] புகார் நகரத்தில் உதய குமாரன் தேரில் ஏறிச்சென்றது[327] முதலான நிகழ்ச்சிகள் அரசிளங்குமரர்கள் மகிழ்வாக வாழ்க்கை நடத்தி வந்தனர் என் பதைக் காட்டும் சான்றுகள்.

ஆட்சிக்குழுவினர்

'வேந்துதொழில் அயரும் அருந்தலைச் சுற்றத்தா'ரான[328] அரசரின் உரிமைச் சுற்றமும்,[329] ஐம்பெருங்குழு, எண்பேராயத் தைச்[330] சேர்ந்த ஆட்சிக் குழுவினரும், அரசு பணிபுரிந்த பிறரும்[331] நகரத்தில் வாழ்ந்து வந்தனர். இவர்கள் அரசு செல் வாக்குடன் மகிழ்வாக வாழ்ந்து வந்தனர் எனலாம். சிலர் நகரின் கோட்டையைச் சூழ்ந்திருந்த காவற்காடுகளில் இருந்துகொண்டு பகைவர் நுழையாவண்ணம் காத்தனர்.[332] சிலர் கோட்டை வாயிலைக் காத்து நின்றனர். (கிரேக்க நாட்டு யவனரும் வாயில் காவலராய்ப் பணிபுரிந்தனர்.)[333] சிலர் நகரத்தின் தெருக்களில் காவல் புரிந்து வந்தனர்.[334] சிலர் செல்வர் மனை களில் காவல்புரிந்து வந்தனர்.[335]

காவல்புரியும் பணி ஊர்களிலும் உண்டு. பாழூரைத் தனி மகன் ஒருவன் பாதுகாத்தல்,[336] பெருமழைக் காலத்தில் நீர்ப் பாசனக் குளத்தைக் காவல்காத்து நிற்றல்,[337] உப்பு வாணிக ரிடம் பங்கு வாங்கிக்கொண்டு அவர்களின் கூட்டத்திற்கு வழிக் காவலாய்ச் செல்லல்,[338] திருவிழாக்காலங்களில் மன்னர் கையில் கைத்தடியுடன் காவல் புரிதல்,[339] விளைச்சல் நிலங்களைக் காத்தல் முதலான பலவகையான காவல்தொழிலில் ஈடுபட் டிருந்த மக்களும் உண்டு என்பதை நாம் நினைவுகூர்தல் வேண்டும்.

---

326 புறம். 96:6-9
327 மணிமே. 4:27-50
328 புறம். 285:7
329 சிலப். 5:157,
330 ஷெ 22:8-13 26:38
331 ஷெ 6:155
332 பதிற். 78:8-9
333 சிலப். 14:66-67
334 நெடுநல். 29 35; மதுரைக். 631-648; அகம். 122:6
335 அகம். 22:16, 311:1
336 நற். 153:10
337 அகம். 252:10-11
338 ஷெ 191:1-5
339 புறம். 84:3-4; நற். 260:3-4

பரத்தையர் வாழ்க்கை

பரத்தையர் என்பவர் பொதுமகளிர். இந்தப் பொதுமகளிர் தம்மிடம் இன்பம் துய்க்கவந்த ஆடவரிடமிருந்து செல்வத்தைப் பெற்று வாழ்ந்து வந்தனர். இவர்கள் பரத்தமை வாழ்க்கையில் ஈடுபட்டமையால் பரத்தையர் எனப் பெயர் பெற்றனர். வளம் நிறைந்த பகுதிகளில் வாழ்ந்த ஆடவர் பரத்தையரை நாடிச் செல்வதும் உண்டு. ஆற்றங்கரைகளில் விளங்கிய மதுரை, புகார் முதலான செல்வ வளமிக்க நகரங்களில் இத் தொழில் பகட்டுடன் தோற்றமளித்ததைச் சங்க நூல்கள் தெரிவிக்கின்றன.

மதுரை நகரத்தில், பரத்தையர் வாழ்ந்ததை மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது. அவர்கள் 'பாசிழை மகளிர்' (நல்லில் பரத்தையர்) என்றும்,[340] 'கொண்டி மகளிர்'[341] என்றும் சுட்டப் படுகின்றனர். அரசனால் சிறப்பு செய்யப்பட்ட பரத்தையர் வாழ்ந்த தெருவும்,[342] ஆடல், பாடல், கலைகளில் தேர்ச்சி பெற்ற பரத்தையர் வாழ்ந்த தெருவும்[343] மதுரையில் தனித் தனியே இருந்ததாகச் சிலபபதிகாரம் குறிப்பிடுகிறது.

மதுரைக்காஞ்சியில் குறிப்பிடப்படும் பாசிழைப் பரத்தையர் யாழை மீட்டி இனிமையாகப் பாடினர்; தம்மை விரும்பிவந்த ஆண்களைத் தழுவிக்கொண்டனர். அவர்கள் மேனி, மலர்ந்த குவளைப் பூவைப் போல மணத்தது. முடித்துப் பின்புறமாகத் தொங்கவிட்ட கூந்தலில் அதிக அளவில் பூக்களைச் சூடிக் கொண்டும், வளையல்கள் தெரியும்படி கைகளைப் பகட்டாக வீசிக்கொண்டும் தெருவெல்லாம் மணங்கமழ நடமாடினர் இந்தப் பரத்தையர் உயர்ந்த இல்லங்களில் வாழ்ந்தனர்.

மதுரைக்காஞ்சி குறிப்பிடும் கொண்டி மகளிர் கண்டோரை மனம்கலங்கச் செய்பவர். இவர்கள் நீர்த்துறைகளை அடுத்திருந்த மணலில் நடனம் ஆடினர் ; யாழும் முழவும் இசைக்க ஆடினர் ; இதில் வெறுப்புத் தோன்றியபோது தம் மனைகளுக்குச் சென்று பொய்தல் விளையாடினர்.

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும், அரசனால் சிறப்பிக்கப் பட்ட பரத்தையர் அரசனோடும் செல்வரோடும் திளைப்பு வாழ்க்கை நடத்தினர். வையம், சிவிகை முதலிய ஊர்திகளில்

---

340 மதுரைக். 579-இவர்கள் வாழ்க்கை 559-582

341 மதுரைக்.583-இவர்கள் வாழ்க்கை 582-589

342 சிலப். 14:125-145

343 ஷை 14:146-167

இவர்கள் செல்வது உண்டு. இந்த அளவுக்குச் செல்வாக்கான வாழ்க்கையை இவர்கள் நடத்தி வந்தனர்.

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கலைத்தொழில் பரத்தையர், 64 கலைகளிலும் தேர்ச்சிபெற்று விளங்கினர். ஆடலில், 'தலைக்கோல்' என்னும் சிறப்பினைப் பெறும் அளவுக்குத் கலைத்திறமை பெற்றிருந்தனர். சிலப்பதிகாரத்தில் 'மங்கலத்தாசியர்' என்று குறிப்பிடப்படுவர் இவர்களாக இருத்தல்கூடும்.[344]

மதுரைக்காஞ்சியிலும், கலித்தொகையிலும், மாதவி வாயிலாகச் சிலப்பதிகாரத்திலும் பரத்தையர் ஒப்பனை செய்து கொண்ட முறை விரிவாகக் கூறப்பட்டுள்ளது.[345]

தெய்வ உத்தி, வலம்புரி, தொய்யகம், புல்லகம், சிகழிகை முதலான அணிகலன்களைத் தலையிலும், குழை, இந்திர நீலக்கல் பதித்த கடிப்பிணை முதலானவற்றைக் காதிலும், சங்கிலி, ஆரம், கடிகை முதலானவற்றைக் கழுத்திலும், வாளைப்பகுவாய், மத்திகை முதலான மோதிரங்களைக் கைகளிலும், சூடகம், பொன்வளையல், பவளவளையல், தோள்வளை முதலானவற்றைக் கைகளிலும், பூவாடை, மேகலை முதலானவற்றை இடையிலும், குறங்குசெறி, சதங்கை, பாடகம், சிலம்பு முதலானவற்றைக் கால்களிலும் ஆடல் மகளிர் அணிந்துகொண்டனர்.

10 வகைத் துவர், 5 வகை மணநெய், 32 வகை மருந்து மணப்பொடி ஆகியவற்றைத் தலையில் தேய்த்து நீராடிய பரத்தையரும் உண்டு. தலையை ஐந்து பகுதியாக ஒப்பனை செய்து பின்புறமாகத் தொங்கவிட்டனர். அதிக அளவில் பூ வைத்துக்கொண்டனர். நெற்றியில் பொட்டிட்டுக் கொண்டனர். மார்பு முகட்டில் தொய்யிலும், மார்பில் காமன்கொடியும் எழுதிக்கொண்டனர். அடிகளுக்குச் செம்பஞ்சுக்குழம்பு ஊட்டிக் கொண்டனர்.

ஆடல் மகளிர் புனலிலும், பொழிலிலும், மணலிலும், கடலிலும் விளையாடித் திளைத்தனர்; கூடல் இழைத்தும், வண்டற்

344 சிலப். 6:125

345 கலி. 84:25, 96:37, 97:1-5; சிலப் 6:76-119; மதுரைக். 562-568, 578-579

பாவை செய்தும் விளையாடினர். ஆடியும், பாடியும், இசைக் கருவிகளை மீட்டியும் மகிழ்ந்தனர்.

புனலாடுவதற்குத் தேரிலும் சிவிகையிலும் செல்லல்,[346] தன் தேரை அனுப்பித் தனக்கு உரியவனை அழைத்து வரும்படி செய்தல்,[347] திருவிழாக் காலங்களில் ஒப்பனை செய்துகொண்டு வெண்பல் தோன்றச் சிரித்துக்கொண்டு நிற்றல்[348] முதலியன பரத்தையருள் ஒரு சாராரின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க சில செயல்களாம். அரசவை ஆடல் மகளிர் செல்வம் படைத்தவர்களாய்ச் சிறப்போடு வாழ்ந்து வந்தார்கள். பிறர் அவ்வாறு வாழ்ந்தார்கள் என்று சொல்வதற்கில்லை.

ஆற்றுநிலப்பகுதிகளில் எல்லாம் பரத்தையர் வாழ்ந்தார்கள். எனினும், ஆற்றங்கரை நகரங்களில் அவர்கள் எண்ணிக்கை ஓரளவு மிகுதி என்பதை அறிகிறோம். இத்தகைய பரத்தையரோடு வாழும் வாழ்க்கையை வள்ளுவர் வெறுத்து உரைக்கிறார்.[349]

அந்தணர் வாழ்க்கை

அந்தணர், பார்ப்பார், ஐயர் ஆகிய சொற்கள் இக்காலத்தில் பிராமண சமூகத்தினரைச் சுட்டும் சொற்கள் எனப் பொதுவாகக் கருதப்படுகின்றன. ஆனால், சங்க நூல்களில் பிராமணர் என்னும் சொல் வழக்கில் இல்லை. அந்தணர், பார்ப்பார், ஐயர் என்னும் சொற்களால் சுட்டப்பட்டோர் அக்காலத்தில் எவ்வாறு வாழ்ந்து வந்தனர் என்பது இப் பகுதியில் விளக்கப்படுகிறது. பண்டைத்தமிழ் மக்களுள் ஒழுக்கத்தாலும் பண்பாட்டாலும் சிறப்புற்று விளங்கியவரை அந்தணர் என்று அழைத்தனர். அவர்கள் எத்தகையவர் என்பது திருக்குறளில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான நிலம்போல ஈர நெஞ்சம் (அன்பு) உடையவர்களாய் வாழ்ந்த அந்தணரை அறவோர் என்கிறோம்.[350] மனமாசு இன்மையே[351] அறம் ஆகும். அது இல்வாழ்க்கை,[352] துறவு பூணல்[353] என்னும் இருவகையான வாழ்க்கைப் பகுப்பைக் கொண்டது. இந்த நெறியில் வாழ்ந்தோர் அந்தணர் எனப்

346 கலி. *98:2-5; சிலப். 14:126*
347 ஷை *69:12-13*
348 நற். *170:2-4*
349 குறள். அதி. *92*
350 குறள். *30*
351 ஷை *34*
352 ஷை *49*
353 ஷை *23*

பட்டனர். இவர்கள் ஐம்புலன்களை வகைதெரிந்து ஆள் பவர்கள்; பண்புக் குன்றின்மேல் ஏறி நிற்பவர்கள்; நிறை மொழி மாந்தர் என்போரும் இவர்களே.[354]

நூல், கரகம், முக்கோல், மணை ஆகியவை அந்தணர் களுக்கு உரியவை.[355] (அரசர்களுக்கும் இவை உரியனவாய் அமைதல் உண்டு.)[356] புறத்திணைகளில் வரும் பாடாண் டிணைத் துறைகளில் இவர்கள் உரிமைப் பெயரால் குறிப்பிடப் படுதலோ, நெடுந்தகை, செம்மல் என்னும் சிறப்புகளைப் பெறு தலோ இல்லை.[357] ஊரின் பெயர், பொதுபபெயர், தொழி லாற்றும் கருவியின் பெயர் முதலானவற்றைச் சார்த்தியே இவர் களது பெயர் குறிப்பிடப்பெறும்.[358] பண்புச் சொற்களாலும் இவர்கள் குறிப்பிடப் பெறுவர்.[359] போர்ப்படையில் இவர்கள் இடம்பெறுதல் இல்லை.[360]

மதுரை,[361] புகார்,[362] ஆமூர்[363] முதலான நகரங்களில் அந்தணர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு அரண்மனையின் கதவு எப்பொழுதும் திறந்திருந்தது.[364] வேள்வித் தூண் நட்டு இவர்கள் தங்களது கடமைகளைச் செய்தனர்.[365] குன்றுகளைக் குடைந்தாற்போன்ற பெரிய வீடுகளில் இவர்களுள் சிலர் வாழ்ந் தனர். மாலையில் பொருள் விளங்கும்படியும், காலையில் வண்டுகள் ஒலிப்பது போலவும் தங்களது மறைநூல்களை இவர் கள் ஓதினர்.[366] பொழுது போனபின் வளமனையில் வாழ்ந்த தம் மனைவியர் விளக்கு ஏற்றி வைக்க, இவர்கள் தமது வீட்டில் இருந்துகொண்டே மாலைக்காலத்தில் வழிபாடு செய்தனர்.[367] இமயமலைச்சாரலில் வாழ்ந்துவந்த அந்தணர் மாலைக்காலத்தில் முத்தீ வளர்த்து வழிபாடு செய்தனர்.[368] வேள்விசெய்யும் அந்தணர்களுக்குப் பெறுதற்குரிய பொருளை, அவர்கள் ஏந்தும் கையில் நீர் ஊற்றும் சடங்கோடு கொடுப்பது உண்டு.[369] சிலர் புலன் அழுக்கு அற்றவர்களாயும், பரிசில் பெற்று வாழும் புலவர் களாயும் வாழ்ந்தனர்.[370]

---

354 குறள். 27-29
355 தொல். பொருள். மரபு. 615
356 ஷை 617
357 ஷை 618
358 ஷை 619
359 ஷை 620
360 ஷை 621
361 மதுரைக். 468-474; 654-656
362 பட்டினப்.202 (நான்மறை யோர்)
363 சிறுபாண். 188
364 ஷை 204-206
365 பெரும்பாண். 315-316
366 மதுரைக். 468-474, 654-656; சிலப். 13:141 (சிலப். 13:142 அந்தணர் நான்மறையை நவின்றனர். மாதவர் ஓதினர்.)
367 குறிஞ்சிப். 223-225
368 புறம். 367:13
369 ஷை 361:4-5, 362:12
370 ஷை 126:11, 200:11-12, 201:7

ஓதல், பிறரை ஓதும்படி செய்தல், வேள்வி செய்தல், பிறரை வேள்வி செய்யும்படி செய்தல், பிறருக்கு ஈதல், பிறரிடமிருந்து தாம் ஏற்றல் ஆகிய ஆறு வாழ்க்கை நெறிகளை உடையவர்களாய் அந்தணர்கள் வாழ்ந்து வந்தனர்.[371] மாலைக் காலத்து ஒளிக்கு ஏற்ப இவர்கள் செந்தீ மூட்டி வழிபட்டனர்.[372] முக்கோலை வைத்திருக்கும் இவர்கள் இந்த வழி பாட்டில் தமது முது மொழியை நினைத்த வண்ணம் அசையாமல் அமர்ந்திருப்பது உண்டு.[373] இவர்கள் வேள்வி செய்யும்போது புகை மிகுதியாகத் தோன்றும்.[374]

திருமணம் செய்துகொள்வதற்காகத் தான் விரும்பிய ஒருவனுடன் தன் தாய், தந்தையர் அறியாமல் தனி வழியில் செல்லும் ஒருத்தி, தான் இவ்வாறு செல்லுவதைத் தன் பெற்றோரிடம் தெரிவிக்குமாறு வழியில் நடந்து வரும் அந்தணர்களிடம் கேட்டுக்கொள்வதும்,[375] கேட்டுக்கொண்ட வண்ணம் இவர்கள் செய்தியைச் சொல்லுவதும்[376] உண்டு. இதுபோன்ற செய்தியைக் கூறும் அந்தணர்கள் நிழலுக்காகக் குடைபிடித்துச் செல்வதும், உறியில் தொங்கும் கரகத்தையும், உரைசான்ற முக்கோலையும் தோளில் சுமந்து செல்வதும், உள்ளத்தில் ஒரே குறிப்போடு செல்வதும்[377] உண்டு. மறைபாடும் நாவினையுடைய இவர்களில் சிலர்திறமை மிக்க செயல்களைச் செய்யும் கோட்பாடு உடையவராக விளங்கினர்.[378]

தமிழ்நாட்டில் கள் உண்பவர், கள் உண்ணாதவர் என இருதிறப்பட்ட மக்கள் வாழ்ந்து வந்தனர்; அந்த இருதிறத்தாரும் அவரவர்களுக்கு ஏற்றாற்போல் கடைப்பிடித்து வந்த இருவேறு வகை அறச்செயல்கள் இருந்தன. அந்த இரண்டு வகையான அறச்செயல்களையும் அவர்களுக்கு எடுத்துரைத்து வாழ்ந்தவர்கள் இருவேறு வகை அந்தணர் ஆவர். இவர்களுக்கு உரிய நூல்களும் இருவேறு வழியை எடுத்துரைப்பனவாய் இருந்தன. இவர்கள் அவரவர்களது நூல் நெறியிலிருந்து வழுவாது வாழ்ந்து வந்தனர்; இவர்கள் இவ்வாறு வாழ்ந்ததால் மழை பொழிந்தது என்றுகூட நம்பப்பட்டது.[379]

பூணூல் மார்பும், கணிச்சியும் மழுவும் ஏந்திய கையும், புரிசடையும் உடைய கடவுளான சிவபெருமான் ஓர் அந்தணன்

---

371 பதிற். *24:6-7*
372 கலி. *119:12-13*
373 ஷை *126:4*
374 ஷை *36:26*
375 ஐங்குறு. *384:1-2*
376 ஷை *387:4-5*
377 கலி. *9:1-4*
378 ஐங்குறு. *387:1-2*
379 கலி. *99:1-5*

என்று குறிப்பிடப்படுகிறார்.[380] அந்தணர்கள் வினவிய விடைகளுக்காக இந்தச் சிவபெருமான் மறைகளைச் சொன்னார்.[381] இதனால் போலும் மறை ஓதும் அந்தணர்கள் இவரைப் பெருமையாகப் பேசினார்கள்.[38] பனைக் கொடிக் கடவுள் பலராமனும் அந்தணரது அருமறையில் போற்றப்படுகிறார். திருமால், பிரமன், முருகன் ஆகியோர் அந்தணர்களின் மறையில் தெய்வங்களாக விளங்குகின்றனர்.[383] வியாழன் என்னும் மீன், சிவபெருமான், பிரமன் ஆகியோர் அந்தணர் என்னும் சொல்லாலேயே குறிப்பிடப்படுகின்றனர்.[384] அந்தணர்கள் திருமாலுக்குச் சமமானவர்கள்.[385] திருமாலின் வலப்பக்கமாக இருந்துகொண்டு அந்தணர்கள் அவனை வணங்கினர்;[386] முருகக் கடவுள் விரும்பி ஏற்கும் அறத்தைச் செய்வார்கள்.[387] நீராடும் மக்கள் உண்டு உகுத்த சாறு,[388] சோறு,[389] நெய் முதலானவையும், சூடி எறிந்த பூக்களும் கலந்து ஆற்றில் வரக்கண்டு, அந்தணர்கள் அந்த நீரில் நீராடாது நிற்கும் அளவுக்குத் தூய்மை உடையவர்களாக விளங்கினர்.[390] அந்தணர்களில் ஒருபாலாரும் வாணிகர்களில் சிலரும் வடமொழியை அறிந்திருந்தனர்.[391]

விதலைப்பருவம் எனப்படும் முன்பனிப் பருவத்தில்[392] பிற்குளம் என்னும் நாள்களோடு[393] தொடர்புடையதாய்த் திருவாதிரை என்னும் நாள்மீனுக்கு உரிய நாள் வரும்போது விரிநூல் அந்தணர் விழாத் தொடங்கினர். அந்த விழாவில் புரிநூல் அந்தணர் பொற்கலன்களை (விரிநூல் அந்தணர் நல்க) ஏற்றனர்.[394] அந்தணர்களில் ஒருவன் நாய்க்கறி தின்றதாகக்[395] குறிப்புக் காணப்படுகிறது.

அந்தணர் ஒன்றுபுரி கொள்கை உடையவர்; இரு பிறப்பாளர்; முத்தீ வளர்ப்பவர்; நான்மறை அறிவு உடையவர்; ஐம்பெரும் வேள்வி செய்பவர்; ஆறு தொழில் புரிபவர்.[396]

---

380 அகம். கடவுள் வாழ்த்து 5-6
381 கலி. கடவுள் வாழ்த்து 1-4
382 புறம். கடவுள் வாழ்த்து 6:20
383 பரிபா. 1:11-13, 2:57, 3:14, முருகு. 96 ; பரிபா. 5:22
384 ஷை 11:7-8, அகம். கடவுள் வாழ்த்து,15-16, பரிபா. 5:22
385 பரிபா. 4:65-68
386 ஷை 1:52
387 ஷை 14:28
388 பழச்சாறு
389 அல்வா வகை
390 பரிபா. 6:40-45 ; ஷை தி. 2:60-61
391 சிலப். 15:55-71
392 மார்கழி, தை
393 உத்திராடம்
394 பரிபா. 11:78-79 சேந்தன் திவாகரம்-தெய்வப் பெயர்த் தொகுதி கழகம்-1957 பக்.18, சூடாமணி நிகண்டு-தேவப் பெயர்த் தொகுதி செய்யுள் 76. அரும்பொருள் விளக்க நிகண்டுளகர-எதுகை-செய்.30
395 மணிமே. 11:84-87
396 சிலப். 23:67-70

பார்ப்பார் வாழ்க்கை

தலைவன் தலைவியரின் வாழ்வு நெறியில் அமைய உதவும் வாயில்களாய் அமைந்தவர்களுள் பார்ப்பாரும் ஒருவர்.[397] இவர்கள் தலைவன், தலைவியரின் களவு வாழ்க்கை நெறியை அறிந்து அவர்களுக்கு உதவுவது உண்டு.[398] தலைவனும் தலைவியும் திருமணம் செய்துகொண்டு வாழும் காலத்திலும் அவர்களுக்கு உதவியாக இருப்பர். (அறிவரும் இவ்வாறு வாழ்ந்தனர்.)[399] தலைவன் தன் தலைவியைப் போர் காரணமாகப் பிரிந்திருக்கும்போது இன்ப நிலையால் ஏங்கி வருந்துவதைத் தலைவனிடம் எடுத்துக் கூறுதல், இந்த நிலையில் தலைவன் தெளிய வேண்டிய உண்மைநிலை இது என்று அவனிடம் உரைத்தல், அவன் குறிப்பினை அறிந்து வந்து தலைவனிடம் கூறுதல், ஆனிரைகள் மீளுதல் முதலான நன்னிமித்தங்களை அறிந்து தலைவியிடம் கூறுதல், தலைவன் பிரிந்து சென்றான் என்னும் செய்தியினைத் தலைவியிடம் கூறுதல், தலைவியைவிட்டுப் பிரிந்து செல்லுவதைத் தவிர்க்க வேண்டும் என்று தலைவனிடம் கூறுதல், தலைவன் தலைவியரிடையே தூது சென்று இவை போன்ற பிறவும் கூறுதல் முதலானவை பார்ப்பாருக்கு உரிய செயல்களாகும்.[400] இவ்வாறு தலைவன் தலைவியரோடு அன்றி, அவர்கள் இணைந்து வாழத் துணைபுரியும் பிறரோடும் பார்ப்பார் உரையாடுவர். (அறிவரும் இவ்வாறு உரையாடுவர்.)[401] பார்ப்பாருக்கு உரிய தொழில், ஆறு வகையில் அமைந்திருந்தது.[402]

பிறர், வேந்தனுக்காகத் தூது செல்வதைப் போலவே பார்ப்பாரும் தூது செல்வர்.[403]

சடைமுடி அணிந்த சிவபெருமானை வழிபட்டவர்களும் அறம், பொருள்,இன்பம், வீடு என்னும் நான்கு நெறிகளைக்கூறும் முதுநூலின் துறை இருபத்தொன்றையும் தெளிவாகக் கற்றவர்களும், இந்த முதுநூலில் மாறுபட்ட கருத்தை உடையவரின் வலிமையைச் சாய்ப்பதற்காக அந் நூலிலுள்ள உண்மையையும் பொய்யையும் வேறுபடுத்திக்கொண்டவர்களுமாகிய உரவோரின்

---

397 தொல். பொருள். கற்பு. 191:1
398 ஷை செய். 490:1
399 ஷை 491:2-3
400 ஷைகற்பு. 175
401 ஷை செய். 498
402 ஷை புறத். 74:1 (தொல். பொருள். கற்பு. 175-ல் கூறப்பட்டுள்ள ஆறு செயல்கள் என்று கொள்ள இடம் உண்டு)
403 கள. 37 (சங்க காலத்துப் பிற்பகுதியைச் சேர்ந்த இலக்கண நூல்)

வழிவந்தவர் பார்ப்பார். இவர்கள் மான்தோலும் பூணூலும் அணிந்திருந்தனர்; நெய்யை ஊற்றிப் பல வேள்விகள் செய்தனர்; பல துணைவியருடன் புகழோடு வாழ்ந்து வந்தனர்.[404] படிவ நோன்பு கொண்டிருக்கும் பார்ப்பார் காவிக்கல் கரைத்த நீரில் தமது ஆடையைத் தோய்த்து அணிவது வழக்கம். கையில் முக்கோலை வைத்துக்கொண்டிருப்பதும் உண்டு [405] வேள்வி செய்யாத பார்ப்பார் சங்குகளை அறுத்து வளையல்கள் செய்து வாழ்ந்து வந்தனர்.[406] போர்க்காலத்தில் பாதுகாப்பான இடத்தில் இருந்துகொள்ளும்படி பார்ப்பன மக்கள் முன்பே அறிவிக்கப் பட்டனர்.[407] பார்ப்பாரைத் துன்புறுத்தல் கொடுமையாகும் எனக் கருதப்பட்டது.[408] பொதுவாக, மன்னர்கள் பார்ப்பார் நோகும்படியான செயல்களைச் செய்யவில்லை.[409] வாடிய வயிற்றோடு பட்டினி நோன்பு இருக்கும் படிவப் பார்ப்பார் இரவோடு இரவாக மன்னனுக்கு அறிவுரை கூறியதும் உண்டு. அவர்களது அறிவுரையைக் கேட்ட மன்னன் போர் செய்வதைக் கைவிட்டதும் உண்டு. இரவோடு இரவாக நடந்த இதுபோன்ற நிகழ்ச்சிகளை வேளாசான் எனும் புலவர் அறிந்திருக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தார்.[410] வேள்வியில் பார்ப்பார் கையேந்தி நின்றனர். அவர்களது கையில் பூ, பொன் முதலானவை நீரோடு சொரியப்பட்டன; ஒன்று புரிந்து அடங்கிய இருபிறப்பாளர் முத்தீ வளர்த்தனர்.[411]

பார்ப்பன மகளிர் மாலைப் பொழுதில் காட்டு முல்லைப் பூவை அணிந்துகொள்வது வழக்கம்.[412] நோன்பு இருந்து உண்ணக் கூடிய பார்ப்பன மகன், நாரை உரித்துவிட்டு எஞ்சிய முருக்க மரத்தின் தண்டையும் கமண்டலத்தையும் கையில் வைத்திருப்பது உண்டு. எழுதாது கற்கப்பட்ட இவனது வேதத்தில், பிரிந்தாரைக் கூட்டிவைக்கும் மருந்துபற்றிய செய்தியில்லை.[413]

---

404 புறம். *166:17*

405 முல்லைப். *37-38*

406 அகம். *24:1-2* வளையல் விற்றல், தலைவன் தலைவியரிடையே தூது செல்ல வாய்ப்பாய் அமைந்தது (மறைநூல் ஒழுக்கத்திலிருந்து வழுவி வந்த பூணூல் அணிந்த மார்பினை உடையவர் மதுரை நகருக்குப் புறந்தே இருந்தபுறஞ்சேரியில் வாழ்ந்து வந்தனர். சிலப். *13:38-39)*

407 புறம். *9:1*

408 ஷை *34:20*

409 ஷை *43:14*

410 மதுரை வேளாசான்-புலவர்-புறம். *305:2-6*

411 ஷை *367:4-13*

412 நற். *321:3-4*

413 குறுந். *156:2-7* (அன்பின் ஐந்திணை பற்றிய விளக்கம் இல்லை)

நான்மறை முனிவர்கள் மன்னரிடம் கையேந்தி நிற்கும் போது மன்னன் தலைதாழ்த்தி அவர்களுக்கு வணக்கம் செலுத்துதல் வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டான்.[414] மன்னன் வேள்வி செய்தபோது ஆன்ற கேள்வியும் அடங்கிய கொள்கையும் உடைய நான்மறை முதல்வர் அவனுக்குச் சுற்றத்தாராக அமைந்தனர்.[415] அறம்புரி கொள்கை நான்மறை முதல்வரின் பசும்புல்லைப் பரப்பி அதன்மீது நோய்வாய்ப்பட்டு இறந்தவரின் உடலைக் கிடத்தி, விழுப்புண்ணின் அடையாளமாக அந்த உடலில் வாளால் வடுச்செய்து அடக்கம் செய்வது வழக்கம்.[416]

சில மன்னர்கள் பார்ப்பாருக்குப் பணிதல் உண்டு.[417] பசுவும் ஊரும் பார்ப்பாருக்குக் கொடையாக வழங்கப்பட்டன.[418] பார்ப்பாரிற் பெரியோரைக் கொண்டு மன்னன் பத்து வேள்வி செய்தலும், வேள்வியின் முடிவில் பார்ப்பனப் புலவன் தன் மனைவியுடன் துறக்கம் புகுவதாக நம்புவதும் உண்டு.[419] பார்ப்பார் காதில் கடுக்கன் அணிந்துகொண்டனர். தண்டு, குண்டிகை, வெண்குடை, காட்டம்[420] முதலானவற்றை வைத்திருந்தனர்;[421] காலணி அணிந்திருந்தனர்.[422] வேதம் ஓதும் சிறுவர்களுக்குப் பரிசுகள் தந்து ஊக்கமளித்தனர்.[423] மன்னனை மறைவழியில் வேள்வி செய்யத் தூண்டினர்.[424] பார்ப்பனச் சிறுவர்கள் குடுமித் தலையுடன் காணப்பட்டனர்;[425] பூணூல் கடகம். தோடு முதலானவற்றை அணிந்திருந்தனர் எனலாம்.[426] பார்ப்பனக் கோலத்தில் தோன்றுவோர் யாராய் இருந்தாலும் அவர்களை யாரும் துன்புறுத்துவது இல்லை.[427] கற்புநெறி தவறாது வாழ்ந்து வந்த பார்ப்பன மகளிர் வரலாறுகளும்,[428] நெறி

---

414 புறம். 6:17-20
415 ஷை 26:13
416 ஷை 93:7-11
417 பதிற். 63:1 (நறவு என்னும் பட்டினத்தில் இருந்த அரசவையே 'கபில' என்னும் அந்தணப் புலவரைப் பணிந்து வரவேற்றதை இதனோடு ஒப்பிடலாம். பதிற். 85 : 8-13)
418 பதிற். பதி. 6:4-பசுக்கொடை பெறல் ; பதிற். பதி. 2-குமட்டூர்க் கண்ணனார் என்னும் பார்ப்பனப் புலவர் உம்பற் காட்டு 500 ஊர்கள் பிரமதாயமாகப் பெறல்)
419 பதிற், பதி. 3
420 சுள்ளி விறகு (தீ வளர்ப்பதற்காக வைத்திருந்தனர் போலும்)
421 சிலப். 23:77
422 ஷை 23:78
423 ஷை 23:61-102
424 ஷை 28:176-178
425 ஐங்குறு. 202:2-3
426 சிலப். 23:96-97
427 ஷை 21:48
428 மாலதி, சிலப். 9:5-32, 30:74-80 ; மருதி, மணிமே. 22:40-79 ; தேவந்தி, சிலப். 9:34-40, 29 : உரைப்பாட்டு மடை

தவறி வாழ்ந்த பார்ப்பன மகளிர் வரலாறுகளும்[429] இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.

ஐயர் வாழ்க்கை

பண்டைக்காலத்தில் ஐயர் என்னும் சொல் உயர்ந்தவர், சால்புடையவர் என்னும் பொருள்களில் வழங்கப்பட்டுள்ளது. ஐயர் எனும் சொல், சமுதாயப் பாகுபாட்டில் குறிப்பிட்ட ஒரு சாதியினரை, அக்காலத்தில் சமுதாயத் தலைவர்களைச் சுட்டிய தாகவே கொள்ளலாம். சுட்டியதாகக் கூறுவதற்குச் சான்றில்லை. ஒருவனும் ஒருத்தியும் தாமே கூடி என்றும் நெறி பிறழாது வாழ்ந்துவரும் காலத்தில் சில பொய்மை உரைகளும் நெறி தவறல்களும் நிகழவே அவற்றைக் களையும் முகத்தான் 'ஐயர்' திருமணச் சடங்கினை வகுத்தளித்தனர்.[430] குழந்தையைப் பெற்றெடுத்துப் புனிறு தீர்ந்தபின் நீராடிய தாயின் நலனை நோக்கி அமரர்களை வழிபடக் கருதித் தலைவன் 'ஐயர்'களுக்குப் பெருஞ்சிறப்புச் செய்தல் உண்டு.[431]

சங்ககாலத்தின் முற்பகுதியில் தோன்றிய அகநானூறு, புறநானூறு முதலான நூல்களில் 'ஐயர்' என்னும் சொல் அகவையில் மூத்த அண்ணன், தந்தை ஆகியோரையே எல்லா இடங்களிலும் உணர்த்துகிறது[432] குறிஞ்சிப்பாட்டு சான்றாண்மையும், வியத்தகு பண்பும், இயல்புமாறா நன்னடத்தையும் உடையவர் 'ஐயர்' என்று குறிப்பிடுகிறது.[433]

ஐயர் மகிழுமாறு மன்னன் செயலாற்றுவது உண்டு.[434] மாலையில் ஐயர் அழல் எடுப்பர்.[435] ஐயர்கள் அமைத்துத் தந்த கல்லின்மீது சாரணர் வந்து இருந்தனர் என்று சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படுகிறது.[436] இவற்றிலிருந்து சமுதாயத்தில் உயர்ந்தோராக ஐயர் கருதப்பட்டனர் என்பது புலனாகின்றது. பிற்காலத்தில் (விசயநகரப் பேரரசர் காலத்தில்) குறிப்பிட்ட

---

429 சாலி, மணிமே. 13:3-10; சுதமதி, மணிமே. 3:27-41

430 தொல். பொருள். கற்பு. 143

431 அந்தணர், சான்றோர் முதலான சிறந்தவர்களின் ஒழுங்கு நெறியைத் தலைவன் தலைவிக்கு எடுத்துக்கூறும் பாங்கோடு இதனை ஒப்பிட்டு நோக்கலாம். தொல். பொருள். கற்பு. 144:15-18

432 அகம். 126:7, 259:16, 302:9; புறம். 337:16, 350:8

433 குறிஞ்சிப். 15-17

434 பதிற். 70:19

435 கலி. 130:9

436 சிலப். 10:160-163 'பெரும் பெயர் ஐயர்'

ஒரு சமுகத்தினரைக் குறிக்கும் சொல்லாக ஐயர் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டது.

திளைப்பு வாழ்க்கை

இதுவரை நகரத்து வாழ்க்கையைத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு பார்த்தோம். இனி நகரத்து மக்கள் வாழ்க்கையில் திளைத்து மகிழ்ந்த பாங்கினைக் காணுதல் வேண்டும்.

யானைக்கூட்டம் செல்லும் அளவுக்கு அகன்று உயர்ந்த 'சுருங்கைவீதி' ஒன்று மதுரையில் இருந்தது.[437] சுருங்கை வீதி என்பது நிலத்தடித் தெரு.[438] இந்தத் தெரு அமைக்கப்பட வேண்டிய அளவுக்கு மதுரையில் போக்குவரத்து மிகுதியாக இருந்தது போலும். சங்ககாலத்து நகரங்கள் இத்தகைய அமைப்புடையன என்று கூறலாம்.

நகரத்து மக்கள் காலத்திற்கேற்பக் கோலம் பூண்டும், சூழலுக்கேற்ப ஆடிப்பாடியும் மகிழ்ந்தனர். வாடைப்பருவம், பனிப்பருவம், கோடைப்பருவம், உவாநாள், பகற்பொழுது, மாலைவேளை, முன்னிரவுவேளை முதலான காலங்களுக்கு ஏற்ற வாறு நகரத்து மக்கள் பல்வேறு வகையான வாழ்க்கையை நடத்தினர் என்பதற்குச் சங்கப்பாடல்களில் குறிப்புகள் உள்ளன. மாடிவீடுகளில் வாழ்ந்தவர்களும், மற்றப் பகுதிகளில் வாழ்ந்த வர்களும் அவரவர்களது சூழலுக்கு ஏற்றவாறு திளைத்து மகிழ்ந் தனர் என்பதைச் சங்க நூல்களால் அறிகிறோம்.

மதுரைநகரத்தில் வாழ்ந்த மக்கள், கோடைப்பருவத்தில் வெப்பத்தைத் தணிக்கச் சந்தனத்தை அரைத்துப் பூசிக்கொண் டனர்; பூக்களை மாலைகளாகக் கட்டி அணிந்துகொண்டனர்; மேல்மாடியில் இருந்த வேனிற்பள்ளியில் தென்றல் காற்று தம் மேனியில் படும்படி உலாவினர். குவிந்த வாயினையுடைய கன் னல்களில்[439] வைத்திருந்த குளிர்ந்த நீரைப் பருகினர்; ஆடியும் பாடியும் மகிழ்ந்தனர்;[440] கோடைப் பருவத்தில் பயன்படுத்திய பொருள்களை வாடைப்பருவத்தில் அவர்கள் பயன்படுத்த வில்லை. கோடைப்பருவத்தில் சந்தனம் பூசிக்கொண்ட மார்பில் வாடைப்பருவத்தில் கல்வத்தில் அரைத்த கூட்டுப் பொருள் களை-வெப்பம் தரும் கூட்டுப் பொருள்களைப்-பூசிக் கொண்ட னர்; அப்போது கோதை சூடிய கூந்தலில் இப்போது சிறிதளவே

---

437 சிலப். 14:65

438 Underground passage

439 Jugs

440 நெடுநல். 49-70

பூ வைத்துக்கொண்டனர்; அப்போது கூந்தலை வாரிமுடித்த நிலைபோய் இப்போது தகரம் பூசி, நெருப்பில் அகிலும் அயிலும் புகைத்துக் கூந்தலை உலர்த்தினர். அப்போதுவேனிற்பள்ளியில் தென்றல்காற்றுப் படும்படி உலாவியவர்கள் இப்போது காலதர்களில்[441] இருந்த கதவுகளைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டனர்; குவிந்த வாயைக்கொண்ட கன்னலில் அப்போது தண்ணீர் உண்டவர்கள் இப்போது அகன்ற வாயையுடைய தடவில் (தாம்பாளத்தில்) நெருப்புக்கட்டிகளைப் பரப்பிக் குளிர் காய்ந்தனர். கோடையில் ஆடிப்பாடி மகிழ்ந்த நிலைபோய் வாடையில் யாழ் நரம்புகளைத் தம் மார்புமுகட்டில் தடவிச் சூடேற்றி, இசைத்து மகிழ்ந்தனர்.

வாடைக்காலத்துத் திளைப்பாக மேலே கூறப்பட்ட செய்திகளுள் தடவில் தீப் பரப்பிக் குளிர்காய்தல், காலதர்களை அடைத்துக்கொண்டு நங்கையரும் நம்பியரும் திளைத்தல் ஆகியவை சிலப்பதிகாரத்திலும் கூறப்பட்டுள்ளன.[442] பனிப்பருவத்துப் பங்குனி மாதத்தில் காமனுக்கு அல்லது முருகனுக்கு விழாக் கொண்டாடி மகிழ்ந்தனர்.[443]

மதுரையில் வாழ்ந்த மகளிர் தம்மை ஒப்பனை செய்துகொள்வதற்காகப் பகற்பொழுது போனபின், கழுநீர்ப் பூக்களைக் கொண்டு மாலை தொடுத்தல், கூந்தலுக்கும் ஆடைக்கும் மணப் புகை ஊட்டுதல், நரந்தம்[444] சந்தனம் முதலானவை அரைத்தல் ஆகிய செயல்களில் ஈடுபட்டிருந்தனர்[445] மாலை வேளைக்குப் பிறகு முன்னிரவு வேளை வந்ததும் நல்லில் பரத்தையர், தம்மை ஒப்பனை செய்துகொண்டு தெருவெல்லாம் மணக்கும் வண்ணம் தம் வீட்டு மாடிகளில் நடமாடினர். தொண்டிமகளிர் பல்லியம் முழங்க ஆற்று மணலில் ஆடி, ஆட்டத்தில் வெறுப்புத் தோன்றிய போது அங்கிருந்த தம் மனைகளில் பொய்தல் விளையாடினர். இந்த வேளையில் புனிறுதீர்ந்த மகளிர் குளத்தில் நீராடத் தம் சுற்றத்தாருடன் சென்றனர். நிறைமாதப் பெண்கள் விழாக் கோலத்துடன் பொங்கல் படைக்கச் சென்றனர்.

புகார்நகரத்தில் மாடி வீடுகளில் வாழ்ந்த செல்வர் இரவுப் பொழுது வந்ததும், தாம் பகற்பொழுதில் உடுத்தியிருந்த பட்டு ஆடைகளை நீக்கிவிட்டுப் பருத்தியாடைகளை உடுத்திக்கொண்

441 காற்று வழிகள்-சன்னல்கள்
442 சிலப். 14:98-101
443 ஷை 14:110-112
444 Scent
445 நெடுநல். 50-59; மதுரைக். 549-554

டனர்; தெருக்களில் நடைபெற்ற ஆட்டபாட்டங்களை மாடிகளில் இருந்தவாறு கண்டு மகிழ்ந்தனர்.

மலைநாட்டு வளமான வீட்டில் அல்லது நகரத்தில் வாழ்ந்த செல்வர்கள் யாமவேளையிலும் தூங்காமல் குறிஞ்சிப் பண்ணைப் பாடிக்கொண்டு திளைத்திருந்த நிலையும் உண்டு.[446] கார்த்திகை விளக்கேற்று விழா,[447] தை நீராடுவிழா,[448] உறந்தை நகரத்தில் நடைபெற்ற பங்குனி விழா,[449] இளவேனில் விழா[450] முதலான விழாக்களைப் பருவக்காலத் திளைப்பு என்று கூறலாம்.

செல்வமகளிர் செடிகொடிகளையும், சில பறவைகளையும் தம் வீட்டில் வளர்த்து மகிழ்ந்தனர். அன்னம்,[451] புறா,[452] கிளி[453] முதலானவை அவர்கள் வளர்த்துவந்த பறவைகள். வீட்டுத் தூணின் மேலுள்ள இடத்தில் புறாவும்,[454] கூட்டில் கிளியும்[455] மதுரையில் வளர்க்கப்பட்டதாகக் கூறப்படுவதாலும், பறவைகள் வாராமல் ஓட்டும் நிலை நாட்டுப்புறங்களில் இருந்ததாலும், பிறவற்றாலும், பறவைகளை வளர்த்து மகிழும் வாழ்க்கை நகரத்து மக்களுக்கு உரியதாகக் கூறலாம். தாழிகளில் வளர்க்கப் பட்டமை, தழை ஆடைக்காக வளர்க்கப்பட்டமை முதலான வற்றை எண்ணிச் செடிகொடி வளர்த்தலையும் நகர வாழ்க்கையின்பாற்படுத்தலாம். செம்பருத்தி,[456] குவளை,[457] வயலைக் கொடி,[458] மௌவல்,[459] புன்னை[460] முதலானவை நகரத்தார் வளர்த்து மகிழ்ந்த செடிகொடிகளில் சில. இவற்றை இவர்கள் அழகுக்காகவும், பிற பயன் கருதியும் வளர்த்தார்கள் எனலாம். புன்னை மரத்தை வளர்த்த ஒருத்தி அதற்கு நெய்யைத் தடவியும், பாலை ஊற்றியும் குழந்தையைப்போல் வளர்த்த பாங்கு குறிப்பிடத்தக்கது. இவை செல்வர் திளைத்த வகை.

மக்கள் மன்றங்கள் தோறும் வேலனோடு பிணையாகத் தழுவிக் குரவையாடியும், சேரிகள்தோறும் ஆடல்பாடல்கள்

---

446 நற். 255:2
447 அகம். 17:19-20; 141:8; நற். 202:9-10
448 அகம். 70:10-12; கலி. 59:13
449 அகம் 137:9; நற். 234:8
450 கலி. 36:9
451 நற். 132:5; அகம். 34:12
452 அகம் 71:8, 162:1; அகம். 47:11
453 கலி. 72:4; அகம். 34:14, 324:3; நற். 209:6
454 நெடுநல். 45-48
455 பெரும்பாண். 300
456 அகம். 129:7; மகளிர் காலடிகளில் பூசிக்கொள்ளும் அலத்தகம்-அரதகம் என்றும், செம்பஞ்சுக் குழம்பு என்றும் கூறப்படும். சிவப்புச் சாயம் எடுக்கவும் இதன் பூ உதவும்.
457 அகம். 165:11,
458 அகம் 383:6 (தழை ஆடைக்காக)
459 குறுந். 19:4
460 நற். 172:5

நிகழ்த்தியும், பிறர் நிகழ்த்தியவற்றைக் கண்டுகளித்தும் மகிழ்ந் தனர்.

பகற்பொழுதில் மதுரையில் தெருவில் வீரர்கள் யானை முதலானவற்றில் ஏறி உலாவந்தனர். புகார் நகரத்தில் நிறைமதி நாளில் பரதவர் கடல் வேட்டைக்குச் செல்லாமல், பரதவமகளிர் சுறாக்கொம்பு நட்டுக் கொண்டாடும் விழாவில் கலந்துகொண்டு, உண்டும் ஆடியும் திளைத்தனர். கடலாடல், புனலாடல், நண்டை ஆட்டி மகிழ்தல், கடல் அலைகளை மறித்து மகிழ்தல், பாவை செய்து விளையாடல் முதலானவை இவர்கள் திளைத்த வகைகளில் சில. புகார் நகரத்தில் வாழ்ந்த மக்கள் காவிரி ஆற்று மணலில் நடைபெற்ற ஆடல், பாடல், நாடக நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்தனர். யானைப் பொம்மைகளையும் விளையாட்டுத் தேர்களையும் இழுத்து வருதல்,[461] பறைமுழக்கி மகிழ்தல்,[462] தாளம் கொட்டல்,[463] துடிகொட்டிக்கொண்டு பாடுதல்[464] வட்டமான அரங்கத்தின் உள்ளே நெல்லிபோன்ற காய்களைக் கொண்டு வட்டாடுதல்[465] முதலான சிறுவரின் விளையாட்டுத் திளைப்புகளை நகரவாழ்க்கையின்பாற் படுத்தலாம்.

மன்றங்களில் உள்ள கல்லில் குழி அமைத்து நாய் என்னும் காய் முதலான பொருள்களைக் கொண்டு விளையாடும் வட்டு விளையாட்டு,[466] வல்லுப்பலகை விளையாட்டு[467] முதலான விளையாட்டுகள் நாடெங்கும் நடைபெற்றன என்பது இவ்விடத்தில் நினைவுகூரத் தக்கது.

வஞ்சியிலும் புகாரிலும் நடைபெற்ற ஆற்றுப்புனல் விழா,[468] புகார் நகரத்தில் நடைபெற்ற இந்திரவிழா, நீரணிவிழா, நெடுந்தேர்விழா,[469] கடல்கொண்ட பஃறுளி ஆறு கடலோடு கலக்குமிடத்தில் கொண்டாடப்பட்ட முந்நீர்விழா,[470] பழையர் கொண்டாடிய உவாநாள் விழா,[471] கொங்கர் கொண்டாடிய உள்ளி விழா,[472] மழவர் கொண்டாடிய பூந்தொடை விழா[473] முதலான விழாக்கள் செல்வரும் மக்களும் கூடித் திளைத்த விழாக்கள் என்ற முறையில் இவ்விடத்தில் நினைவுகூரத்தக்கவை (இவற்றை விழாப் பகுதியில் விரிவாகக் காணலாம்).

461 கலி. 80:18; பட்டினப்.24-25
462 நற். 58:2
463 ஷெ 95:6
464 புறம். 291:1
465 நற். 3:3-4
466 புறம். 52:14-15;அகம்.377:7; கலி. 94:13
467 அகம். 5:9-10
468 பதிற். 48:14
469 சிலப். 10:22
470 புறம். 9:10
471 அகம். 201:8-10
472 ஷெ 368:16-18
473 ஷெ 187:7-8

நகரத்து மக்கள் திளைத்த வகைகளில், விழாக்கொண்டாடு தல் சிறப்பிடம் பெறத்தக்கது. விழாவை இறைவிழா என்றும், கலைவிழா என்றும் பகுக்கலாம். இறைவிழா என்பது இறைவனை (மன்னனையுமாம்)[474] வழிபட்டுக் கொண்டாடப்படும் விழா. இதில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். கலைவிழா என்பது கலைகளைக் கொண்டாடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட தாகும். இந்தக் கலைவிழா இறைவழிபாடாய் முடிவதும் உண்டு. இந்த விழாக்கள் நகர வாழ்க்கைக்கு மட்டுமே உரியன என்று கூறவியலாது. நகரங்களிலும் நடைபெற்றன என்பதால் இப் பகுதியில் சுருக்கமாகக் காண்கிறோம்.

நகரங்களில் கட்டடங்களுடன் கூடிய கோயில்கள் பல இருந்தன என்று கூறலாம். நாட்டுப்புறங்களில் இத்தகைய கோயில்கள் சங்ககாலத்தில் இருந்தனவாகத் தெரியவில்லை. செந்தில், பழனி முதலான இடங்களில் இருந்த கோயில்கள் தனித்த கோயில்கள்.

சிவபெருமான்,[475] திருமால், பலதேவன், முருகன் ஆகியோரின் கோயில்கள் மதுரையில் இருந்தன.[476] காமவேள்,[477] சிவன், திருமால், இந்திரன், முருகன், பலதேவன், ஐயனார், ஞாயிறு, நிலா முதலான தெய்வங்களின் கோயில்களும், தேவர், நாகர் முதலான சிறு தெய்வங்களின் கோயில்களும் தேவதரு, வச்சிரப் படை, வேற்படை முதலானவற்றின் கோயில்களும் புகாரில் இருந்தன.[478] சிவன், திருமால், சதுக்கப்பூதம் முதலான கடவு ளரின் கோயில்கள் வஞ்சியில் இருந்தன.[479] மதுரையிலும், புகா ரிலும் சமணமதக் கோயில்கள் இருந்தன.[480] புகாரிலும் காஞ்சி யிலும் பௌத்தமதக் கோயில்கள் இருந்திருக்கலாம்.[481] இந்தக் கோயில்களுக்கெல்லாம் மக்கள் சென்று வழிபட்டனர். சமணப் பள்ளிகளிலும், புத்தவிகாரங்களிலும் அந்தந்தக் கோயிலுக்கு வரும் மக்களுக்கு நன்னெறிகளை எடுத்துரைத்தனர். கொட்டு முழக்குடன் வந்து மதுரை நகரமன்றில் முருகனை நிலைநாட்டிப் பொங்கற்சோறு முதலானவற்றை மகளிர் படைத்தபோது, 'சாலினி' என்னும் சாமியாடும் பெண் முன்னின்று படையல் செய்ததும், ஆண்கள் அவனை வழிபடுகையில் 'வேலன்' என்னும்

---

474 மன்னனை வாழ்த்தும் வள்ளைப்பாட்டுகள் முதலானவற்றை நோக்குக.

475 மதுரைக். 455

476 பரிபா. 1-5

477 சிலப். 9:60

478 ஷெ 5:141-146, 169-178, 9:9-13, 10:9-10

479 சிலப். 26:61-67, 28:147; பதிற். பதி. 9

480 மதுரைக். 475-488; சிலப். 10:11-14, 21-25

481 மணிமே. 28:210-15 காஞ்சி அகழ்வாய்வு

சாமி ஆடும் ஆண் அவர்களைத் தழுவிக் குரவை ஆடியதையும் மதுரைக்காஞ்சி கூறுகிறது. இதைத் தமிழ்மதத்தாரின் வழி பாட்டு முறைக்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.[482] (பிறவற்றைச் சங்ககாலச் சமயம் என்னும் பகுதியில் காணலாம்.)

சான்றோரைத் தெய்வமாக்கித் தமிழ் மதத்தார் கோயில் எடுத்த விழாக்களில் (காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்தல்)[483] நகரமாந்தர் திளைத்து வரம் பெற்று மகிழ்ந்தனர்.[484]

மன்னனின் பிறந்தநாள் விழா,[485] முடிசூட்டுவிழா,[486] வெற்றி விழா[487] முதலானவற்றையும் நகர மக்கள் மகிழ்வாகக் கொண்டாடித் திளைத்தனர். முன்தேர்க்குரவை, பின்தேர்க் குரவை[488] முதலான ஆட்டங்களையும், இந்த ஆட்டங்களைக் கண்டு மகிழும் வாய்ப்பினையும் வெற்றி விழாவில் உண்டாடித் திளைக்கும் வாய்ப்பினையும்[489] நகரமக்கள் பெற்றிருந்ததை இந்தத் திளைப்பிற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். குடைநாட் கோள்,[490] வாள்நாட்கோள்,[491] முரசுமண்ணல்,[492] வாள் மண்ணல்,[493] வேல்மண்ணல்[494] முதலான படைத்துறை விழாக் களிலும் நகரத்து மக்கள் திளைக்கும் வாய்ப்புகளைப் பெற்றிருந் தனர்.

மகிழ்வைத் தருவனவற்றையெல்லாம் கலை எனலாம் சமையல், நாவுக்குச் சுவையாய் அமைந்து மகிழ்வைத் தரும் போது கலையாகிறது. போர் பிறர் போற்றும் வண்ணம் அமைந்து, புகழால் மகிழ்வைத் தரும்போது கலையாகிறது. ஓவியம், கண்ணுக்கு இன்பமாக மகிழ்வைத் தரும்போது கலை யாகிறது. ஆடலும் பாடலும் இவ்வாறே கலைகளாகின்றன. (இவற்றை பற்றிக் கலைப்பகுதியில் விரிவாகக் காணலாம்.) இங்கு நகரங்களில் நடந்த கலை விழாக்களை மட்டும் காணலாம்.

ஆடல்பாடல், புலமை ஆகிய கலைகளுக்கு விழாக்கள் நடை பெற்றன. விழாக்கள் அரங்கேற்றங்கள், போட்டி அரங்குகள்

---

482 மதுரைக். 605-615
483 தொல். பொருள். புறத். 63:19-20; சிலப். காதை 25-29
484 சிலப். 30:151-154
485 'பிறந்த நாள்வயின் பெருமங் கலம்' தொல். பொருள். புறத். 88:8
486 தொல். பொருள். புறத். 88:9
487 மதுரைக். 367-371; தொல். பொருள். புறத். 88:11-13
488 தொல். பொருள். புறத். 75:5-6
489 ஷை 69:10; மதுரைக். 746-768
490 ஷை 69:1
491 ஷை 69:1
492 புறம். 50:5
493 தொல். பொருள். புறத். 69:11
494 பதிற். 46:11-12

என்னும் நிலைகளில் காணப்படுகின்றன. மாதவியின் ஆடல் அரங்கேற்றம், ஆடல்பாடல் அரங்கேற்றம் புகார் நகரத்தில் நடைபெற்றது என்பதைக் காட்டும் சான்றாகும். உறந்தை நகரில் இசைவிழா நடைபெற்றது.[495]

புலவர்கள் தம் புலமைத்திறத்தால் வளம்மிக்க பாடல்களைப் பாடித் தக்கார் முன்னிலையில் வெளிப்படுத்தினர்; நகரங்களில் வெளிப்படுத்தும் வாய்ப்பு மிகுதி. மதுரையில் பாண்டிய மன்னன் கூட்டிய புலவர் அவை (சங்கம்) ஒன்று தொடர்ந்து நிலவிவந்தது.[496] இந்த அவை வேனிற்பருவத்தில் சிறப்புக் கூட்டங்கள் நடத்திற்று. இந்தக் கூட்டங்களில் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.[497] இந்தப் புலவர்களின் மொழித்தொண்டால் மதுரையில் தமிழ்மொழி நிலைபெற்றது.[498] தமிழ்நிலை பெற உதவிய இந்தப் புலவர்களுக்கு மதுரையில் சிறந்த உணவு சமைத்துப் படைக்கப்பட்டது போலவே[499] புகார்நகரத்திலும் படைக்கப்பட்டது.[500]

புகார்நகரத்தில் இருந்த புலவர்கள் கொடிகட்டிக் கருத்துப் போர் நடத்தியும்[501] மொழியை வளர்த்து வந்தனர். பெருஞ்சேரல் இரும்பொறை 'நற்றமிழ் முழுதும் அறிந்தவன்' என்று போற்றப்படுவதாலும்,[502] இவனது தந்தை செல்வக்கடுங்கோ வாழியாதன் பகைநாட்டு வெற்றியால் வந்த பொருள்களையெல்லாம் தமிழுக்காகச் செலவிட்டான் என்று கூறப்படுகின்றமையாலும்[503] சேரமன்னர்கள் தமிழ் வளர்த்தமை பெறப்படுகின்றமையால் வஞ்சிநகரில் புலவர்கள் இருந்து தமிழ்த்தொண்டு செய்து வந்தார்கள் என்பது தெளிவாகிறது. நன்னன் தலைநகரிலும்[504] 'நாநவில் அவையம்' இருந்ததாகவும், அந்த அவைக்கு வல்லமை இல்லாப் புலவர்கள் சென்றாலும், வல்லமை உடையவர் என்று பிறர்க்குக் காட்டி நன்னனது சுற்றத்தார் போற்றுவர் என்று கூறப்படுவதால்[505] சிறு நகரங்களிலும் புலவர் அவை இருந்தது எனத் தெரிகிறது. தமிழ் வளர்த்த அவைகள், நகர வாழ்க்கையில் சிறப்பிடம் பெறத்தக்கவையாம்.

---

495 'கறங்கிசை விழவின் உறந்தை' அகம். 4:14
496 புறம். 72:15-16; கலி. 68:4-5; தொல். பாயிரம் 9
497 கலி. 35:17-20
498 சிறுபாண். 66-67
499 மதுரைக். 759-762.
500 பட்டினப். 40-44
501 ஷை 169-171
502 புறம். 50:10
503 பதிற். 63:9
504 செங்கண்மா (வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள செங்கம்)
505 மலைபடு. 77-80

சமுதாயத் தலைவர்கள்

நானிலங்களில் வாழ்ந்த பழங்குடி மக்கள் பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தின் முதுகெலும்பாக விளங்கினர். அவர்களுள் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கிய மக்கள், சமுதாயத்தின் சிறந்த உறுப்புகளாகக் கருதப்பட்டனர். காலப்போக்கில் அவர்களுள் ஒருசாரார் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். இன்னொரு சாரார் வீறுமிக்க வீரம் உடையவராய் எச்செயலிலும் தலைமையேற்றுத் தாங்களே முனைந்து நின்று, பணிபுரிவதில் இணையற்று விளங்கினர். மற்றொரு சாரார் வாணிகத்தில் நாட்டம்உடையவராய், தத்தம் ஊர்களிலும் நாடுகளிலும் கிடைத்த பொருள்களை அயல் ஊர்களுக்கும் அயல் நாடுகளுக்கும் கொண்டு சென்று, பண்டமாற்றாகக் கொடுத்துத் தங்களுக்கு வேண்டிய பொருள்களைப் பெற்றனர். பன்னெடுங் காலமாகப் பயிரிடுவதில் ஒரு கூட்டத்தார் தேர்ச்சியுற்று விளங்கினர். இத் தகைய தொழிற் பாகுபாடு முதலில் ஊர்களில் தோன்றியது; பின்னர்ப் பேரூர்களிலும் பையப்பையப் பல்கிப் பெருகியது. இதன் விளைவாக நாகரிக வளர்ச்சியுற்ற நகரங்களிலும் பேரூர்களிலும் மேட்டுக்குடி மக்கள் எனச் சிறப்பித்துச் சொல்லத்தக்க வகையில் நால்வகைச் சமுதாயத் தலை மக்கள் தோன்றினர்.

அரசர்

பண்டைத் தமிழரிடையே, தொல்பழங்கால முதல் அரசு என்னும் அமைப்பு இருந்து வருகிறது. மன்னன், குரிசில், கோன், ஏந்தல், வேந்தன், இறைவன், குறுநில மன்னன் போன்ற பழந் தமிழ்ச் சொற்கள் இதற்குச் சான்று பகருகின்றன. அரசன், குடிகளை ஆள்வது ஆட்சி எனப்பட்டது. ஆள் என்பது குடிமகனாகிய ஒரு மனிதனைக் குறிப்பது. ஆட்சி என்பது குடிமக்களை, இடையன் மந்தைகளைக் காப்பதுபோல் பகைவரிடம் இருந்து காத்து, காவல் புரிவதைக் குறிப்பதாகும். அரசனுடைய பழைய பெயர் 'கோ' அல்லது 'கோன்' என்பதாகும். இதற்குக் கோக்களை மேய்ப்பவன் என்பது பொருள். இதனால் அரசு முதன்முதல் முல்லை நிலத்தில் தோன்றியிருக்கலாமென எண்ணத்தோன்றும்.

சங்க காலத்திலேயே அரசன் கடவுளுக்கு ஒப்பானவனாகக் கருதப்பட்டான். மன்னரைக் குறிக்கும் இறை, கோ, வேந்தன் போன்ற சொற்கள் அவர்கள் தெய்வத்தன்மை வாய்ந்தவர்கள் என்பதைச் சுட்டுகின்றன. நாட்டு மக்களைக் காத்தருளும்

அரசனை, காக்கும் கடவுளாகிய திருமாலாகக் கருதிப் போற்றும் வழக்கம்[506] அக்காலத்தில் இருந்தது. 'மன்னாள் செல்வர்' என அவர்கள் போற்றப்பெற்றனர்.[507]

சங்க காலத்திய அரசர் அனைவரும் தங்கள் பெயர்களுடன், தங்கள் குடியைக் குறிக்கும் பல பெயர்களில் ஏதாவது ஒன்றை இணைத்துக் கூறுவது வழக்கம். சோழன், சென்னி, செம்பியன், கிள்ளி, வளவன் என்பனவற்றுள் ஏதாவது ஒரு பெயரைச் சோழர் குடியினர் அடையாகக் கொண்டிருந்தனர். இதைப் போன்றே பாண்டிய மன்னர் மாறன், வழுதி, செழியன் என்னும் பெயர் களுள் ஒன்றையும்; சேரவேந்தர் ஆதன், குட்டுவன், இரும் பொறை முதலிய குடிப்பெயர்களில் ஒன்றையும்; வானவரம்பன், இமயவரம்பன் என்னும் பட்டப் பெயர்களுள் ஒன்றையும் தங்க ளுடைய இயற்பெயரோடு சேர்த்து வழங்கினர்.

தமிழகத்தின் பண்டைக் கால அரசர்கள் யாரும் பூணூல் அணிந்துகொண்டது இல்லை. என்றுமே அவர்கள், தங்களைச் சத்திரியர் என்று கூறிக்கொண்டதும் கிடையாது; வைதிக சமயத்தின் தாக்குதலால், தாங்களும் 'சத்திரியர் மரபைச் சேர்ந் தவர்' என்று கூறிக்கொள்ளுவதில் இடைக்காலத்திய சோழ, பாண்டிய மன்னர்கள் ஆர்வம் காட்டியதைக் கொண்டு தமிழகத் தின் மூவேந்தர் குடிகள் சத்திரியச் சாதியைச் சேர்ந்தன என்று கூறுவது தவறாகும்.

அந்தணர்

உலகில் உள்ள உயிர்களிடத்து அருள் நோக்குடையவராய், அன்பும் பண்பும் நிறைந்து அனைத்துயிரும் தம்முயிர்போல நினைத்து ஒழுகவல்ல சான்றோர்கள் பலர் அக்காலத்திய தமிழகத்தில் வாழ்ந்துவந்தனர். அப் பெருமக்களை '**அந்தணர்**' என்று அழைத்தனர். அரச வாழ்க்கையில் இன்பம் துய்த்த மன்னர்கள், அவ் வாழ்விலே வெறுப்படைந்தவர்களாய் உறுதிப் பொருளை அறிய வேண்டும் என்னும் பேராவல் கொண்டு மெய் யுணர்வு பெற விரும்பி அரச வாழ்வைத் துறந்து, அறவோராக விளங்கியதும் உண்டு. அவர்களையும் 'அந்தணர்' என்று சுட்டு வது மரபு.[508] அரசரைப் போன்று, வாணிகமும் வேளாண்மையும் செய்துவந்த பிற தொழிலினரும் அறவாழ்வினை மேற்கொண்டு

---

506 தொல். பொருள். புறத். *5:9*
507 புறம். *337:2*
508 தொல். பொருள். மரபு. *73*

அந்தணர்களாகத் திகழும் பேறு பெற்றிருந்தனர். இம் முப்பெருங் குடியில் தோன்றிய மூதறிஞர்களைக் கொண்டதே அந்தணர் எனப்படும் அறவோர் மரபாகும்.

அந்தணர் நிலையான ஓரிடத்தில் தங்காது நாடு முழுவதும் சுற்றித் திரியும் இயல்பினர். அவர்களுக்கு 'யாதும் ஊர்'; தங்களுக்குத் தேவையான நீர்க்குண்டிகையையும், முக்கோலையும், மணையையும் கையில் ஏந்திய வண்ணம் செல்லுவர்; கல்வியில் சிறந்த சான்றோராய்ப் பிற மக்களுக்கு எல்லாம் அறிவுரை வழங்கும் அறிஞராயும் அறவுரை கூறும் அறவோராயும் அவர்கள் விளங்கினர்.[509] அரசர்களுக்கு அறிவுரை கூறும் மூதறிஞராய் விளங்கியதோடு, ஒரோவழி நாடாளும் தகுதியையும் பெற்றிருந்தனர்.[510] அவா, வெகுளி, மயக்கம் என்னும் குற்றமற்ற தவத்தை முக்காலத்திலும் முறைதவறாதியற்றும் மெய்யுணர்வு பெற்றவராய் இருநதமையின், அவர்கள் அறிவர் என்றும் போற்றப் பட்டனர்.

அந்தணர் அருள் உணர்வு மிக்கவராவர். பசுவின் குரல் கேட்டுப் பதைத்து உருகும் அளவிற்கு அருளுணர்வு வாய்ந்தவராக அவர்கள் விளங்கினர்.[511] அவர்கள் உள்ளத்தாலும் உடலாலும் தூய்மையுடையவராய் விளங்கினர்;[512] பண்பாலும் ஒழுக்கத்தாலும் மேம்பட்டு விளங்கினர். இறைவழிபாட்டிலும் மறை நூல்களைக் கற்பதிலும் கற்பிப்பதிலும் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். அறத்தைப் போற்றிக் காப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தனர்.[513]

அந்தணருள் சிலர் புலவராகவும் சிறப்புற்றிருந்தனர்.[514] அரசனுடைய செங்கோல் அந்தணர் அறவழியில் நின்று, அற நூல் ஓத உறுதுணையாக இருந்துவந்தது.[515] அந்தணர் அரிய மறைகளில் நன்கு தேர்ச்சியுற்றிருந்தனர்; அந்நெறியிலிருந்து திறம்பாது ஒழுகும் உள்ளவுரம் வாய்ந்தவர்களாக விளங்கினர்.[516] அந்தணர் அறிவுரைப்படி ஒழுகுவதை மன்னனும் மக்களும் பெரும் பேறாகக் கருதினர்.[517]

இதிலிருந்து, அன்றைய சமுதாயத்தில் அந்தணர் பெற்றிருந்த மதிப்பும் ஏற்றமும் புலனாகின்றன. அரசரும் மக்களும்

---

509 தொல். பொருள். மரபு. 71; கலி. 9:1-4
510 ஷை 75
511 புறம். 362:3-6
512 ஷை. 126:11
513 பரிபா. 1:40
514 புறம். 201:7
515 குறள். 543
516 ஐங்குறு. 387:1-2
517 பதிற். 24:6

அவர்களை வணங்கிப் போற்றும் அளவிற்கு, அவர்கள் சீரும் சிறப்பும் பெற்றிருந்தனர்.

சங்க காலத்தின் கடைப்பகுதியில் வடக்கிலிருந்து வந்த பார்ப்பனருள் சிலரும் நகரங்களில் தங்கி அந்தணராகச் சிறப்புற்றிருந்தனர். ஓதலும், வேள்வி செய்தலும் அவர்களுக்குரிய முக்கியக் கடமைகளாகும். அவற்றை மற்றவர்களும் செய்யுமாறு அவர்கள் உதவி வந்தனர்.

இவற்றுடன் ஈதலும் ஏற்றலும் ஆகிய அலுவலகத் தொழில்களை அவர்கள் செய்தனர்.[518] அவர்கள் காலை, மாலையில் வழிபாடியற்றினர்.[519] அவர்கள் நாவில் கொடிய சொற்களே எழுவதில்லை; அருமறையை ஓதுவதிலும் அழலோம்புவதிலும் அவர்கள் கருத்தைச் செலுத்தி வந்தனர்.[520] வேள்வியைச் சிறப்பாகச் செய்து முடித்த அந்தணர்க்கு அரசன் பெறற்கரிய பொருள்களை (கலங்களை) நீர்வார்த்துக் கொடுப்பதும் உண்டு.[521]

வணிகர்

பொருள்களின் விலைகளைக் கூறி, பண்டமாற்றாகவோ பணமாகவோ பொருள்களை விற்றவர் வணிகர் எனப்பட்டனர். அவர்கள் எண் வகையான கூலங்களை விற்று வாழ்க்கை நடத்தினர்.[522] சிலர் உழவுத் தொழிலும் செய்தனர்.[523] தனி வழிகளில் பொருள்களை எடுத்துச்சென்று வாணிகம் செய்தமையால், தற்காப்பிற்காகப் படைக்கலன்களை ஏந்திச்செல்லும் உரிமையை அவர்கள் பெற்றிருந்தனர். வணிகர் தலையில் பூவினைச் சூடியும், தம் குடிப்பிறப்பிற்குரிய மாலையை அணிந்தும் செல்வது வழக்கம்.[524] நடுவுநிலை பிறழாத உள்ளமும், அளவாகக் கொடுத்து, அளவாகப் பெறும் நேர்மை நாட்டமும் வாய்ந்தவர் வணிகர் என்று பண்டைப் புலவர்கள் வணிகரைப் போற்றியுள்ளனர்.[525]

வணிகர், வாணிகம் செய்த பொருள்கள் பலதிறப்பட்டன. அவை உணவுப் பொருள்கள், பூசும் பொருள்கள், பூணும் (அணியும்) பொருள்கள், உடுக்கும் பொருள்கள், மலைபடு

---

518 பதிற். 24:7, 64:3-5; புறம். 397:15-20
519 புறம். 2:22
520 பரிபா. தி. 1:18-24; புறம். 122:3
521 புறம். 361:5
522 பதிற். 13:23
523 தொல். பொருள். மரபு. 78, 79, 81
524 ஷை 81
525 பட்டினப். 205-211; குறள். 120

பொருள்கள், கடல்தரு வளங்கள், பண்ணப்படும் பொருள்கள் எனப் பலவகையாகப் பாகுபாடு செய்யப்பட்டிருந்தன.[526] வணிகரை 'அரசர் பின்னோர்' என்று சுட்டும் வழக்கம் சங்க காலத்தின் கடைப்பகுதியில் உண்டாயிற்று.[527]

வாணிகத் தொழிலில் பலவகைப் பிரிவுகள் இருந்தன. கூல வாணிகம், உப்பு வாணிகம், பொன் வாணிகம், அறுவை வாணிகம், கடல் வாணிகம் முதலிய பிரிவுகள் இருந்தன. அவற்றைச் செய்தோர் முறையே கூலவாணிகர், உமணர், பொன் வாணிகர், அறுவை வாணிகர் எனப்பட்டனர். கடல் வாணிகம் செய்தவர் மாநாய்கர் எனவும் உள்நாட்டில் வாணிகம் செய்தவர் சாத்துவர் எனவும் வழங்கப்பட்டனர்.[528]

இப் பாகுபாடு வாணிகம் என்ற ஒரே தொழிலைச் செய்த வரிடையே உண்டானதாகும். ஒரே தொழிலைச் செய்கின்ற பொழுதும், அவர்கள் எப்பொருளில் வாணிகம் செய்தனரோ, அப் பொருளின் அடிப்படையில் பல குழுவினராகப் பிரிந்து செயல்பட்டனர். இதனால் தொழில்வழி இனப்பிரிவுகள் உண் டாயின. ஒரே தொழிலைச் செய்தவரிடையே பல பிரிவுகள் தோன்றின.

வேளாளர்

உழவுத் தொழிலைச் செய்து வாழ்ந்தோர் வேளாளர் எனப் பட்டனர். வெள்ளத்தை ஆள்பவர் என்னும் பொருள்படும் வெள் ளாளர் என்னும் பெயரே முதல்நிலை திரிந்த தொழிற்பெயராக **வேளாளர்** என மாற்றமுற்றதாகக் கொள்ளலாம்.[529] வேளாளர் காடுகெடுத்து நாடாக்கி, குளந்தொட்டு வளம்பெருக்கி, உழவு செய்யும் வகையினை முதன்முதல் நடைமுறைக்குக் கொண்டு வந்தவராகலாம். உழவுத் தொழிலையன்றிப் பிற தொழில் களைச் செய்வது அவர்கள் வழக்கமன்று. பெரிதும் உழவுத் தொழிலையே செய்துவந்தமையால் **உழவர்** என்று அவர்கள் சுட்டப்பட்டனர்.

---

526 பரிபா. தி. *1:22-26*

527 சிலப். *15:109; 16:44*

528 நாவாயைக் கொண்டு கடல் வாணிகம் செய்தோர் நாய்கன் எனவும், உள்நாட்டின் பல பகுதிகளுக்குச் சரக்குகளைக் கழுதைகள்மீதும் கோவேறு கழுதைகளின்மீதும் ஏற்றிச் சென்று வாணிகம் செய்தோர் சாத்தன் அல்லது சாத்துவன் எனவும் சுட்டப் பெற்றிருக்கலாம். இதைப் பற்றிய விளக்கத்தை, வாணிகம் என்னும் பகுதியில் காண்க.

529 Kanakasabhai Pillai, V., *The Tamils 1800 Years Ago*, p. 43

வேள்: விருப்பத்தை உண்டாக்குபவர். யார், சமுதாயத்திற்குப் பணிபுரிந்து மகிழ்வுறச் செய்கின்றனரோ அவர்களே வேளாளராவர். வேளாளர் என்பவர் ஈகையுடையோர்; பிறருக்கு உணவுப் பயிரிட்டு உதவிபுரிபவருமாவர். வேள் என்றால் மண் என்பது பொருள். மண்ணை ஆள்பவர் வேளாளர் எனவும் போற்றப்பட்டிருக்கலாம்.

வேளாளர் அரசர்க்கு உதவியாளராய்ப் படைத்தலைவரும் அமைச்சருமாக விளங்கினர்; மேலும், அரசர் தரும் வரிசைகளைப் பெற்றுக் குறுநில மன்னர்களாகத் திகழ்ந்தனர்.[530] அவர்கள் அரசரைச் சார்ந்து வாழ்ந்தமையால் வில்லும் வேலும் ஏந்தியவராய்க் காலில் வீரக் கழலும், தலையில் கண்ணியும், தங்கள் குடியின் அடையாள மாலையோடு தாரும் அணிந்திருந்தனர்; தேரும் குதிரையும் ஊர்திகளாகக் கொண்டு வாழ்ந்தனர்.[531]

அவர்களுள் 'செல்வமும் செல்வாக்கும் பெற்றவர்' எனும் பிரிவும், இழிந்தவர் (உழுது உண்பவர்) எனும் பிரிவும் இருந்திருக்கலாமெனத் தோன்றுகிறது.[532] இதையே, பிற்கால உரையாசிரியர்கள் 'அவருள் உழுவித்துண்போர் மண்டில மாக்களும் தண்டத் தலைவருமாய்ச் சோழ நாட்டுப் பிடவூரும், அழுந்தூரும், நாங்கூரும், நாவூரும், ஆலஞ்சேரியும், பெருஞ்சிக்கலும், வல்லமும், கிழாரும் முதலிய பதியில் தோன்றி வேளெனவும் அரசெனவும் உரிமை எய்தினோரும், பாண்டிய நாட்டுக் காவிதிப் பட்டம் எய்தினோரும், குறுமுடிக் குடிப்பிறந்தோர் முதலியோருமாய் முடியுடை வேந்தர்க்கு மகட்கொடைக்கு உரிய வேளாளர் ஆகும்.''[533] என்று விரித்துரைத்துள்ளனர். இக் குறுநில மன்னரை **வேளிர்** குடியினர் என்று போற்றுவது மரபு. வேளாளருள் மேட்டுக் குடியினராகப் பெருவாழ்வு பெற்றவர் வேளிர் எனப் பட்டனர்.[534] இவ் வேளிர் முடியுடைய மூவேந்தருக்குப் பெண் கொடுக்கும் உரிமை பெற்றிருந்தனர்[535] இத்தகைய பெருமை வாய்ந்த வேளிர் பலர், சங்க காலத்தில் சிறப்புற்றிருந்தனர்.[536] இவர்களுக்கு அடுத்த நிலையில் 'கிழார்' என்னும் பட்டப்பெயர் பூண்டோர் பலர் அக்காலத்தில் இருந்தனர். ஏரினைக்கொண்டு நிலத்தினை உழுது பயிரிடும் தொழிலைச் செய்தவர் உழவ

530 தொல். பொருள். மரபு. 82; பரிபா. 20:63
531 ஷ 83
532 ஷ 85
533 ஷ அகத். 30; நச்சி உரை
534 Subramanian, N.; *Sangam Polity*, p. 278
535 'வேந்தரும் வேளிரும் பின் வந்து பணிய' (பதிற். 88:13)
536 குறுநில மன்னர் என்னும் பகுதியில் விரிவாகக் காணலாம்.

ராவர்.[537] அவர்களுக்கு 'ஏரின் வாழ்நர்',[538] 'ஏராளர்'.[539] 'களமர்',[540] 'தொழுவர்'[541] என்னும் பெயர்களும் வழங்கின. அவர்கள் வயல்களை உழுதனர்; நெல் விதைத்தனர்; நாற்று நட்டனர்; களை எடுத்தனர்; வயல்களுக்கு நீர் பாய்ச்சினர்; அறுவடை செய்தனர்; கடா விட்டனர்;[542] எருதுகளினால் நிலத்தை மிதிக்கச் செய்தனர்; உழுது நிலத்தை மட்டுப்படுத்தினர்;[543] வரிசையாக நின்றுகொண்டு மட்டைகளினால் வயலுக்கு நீரை இறைத்தனர்; அப்பொழுது அவர்கள் பாடிக்கொண்டே பணிசெய்தனர். நாற்று நட்டுப் பயிரிட்டனர்.[544] களையெடுக்கத் தொடுப்பு என்னும் கருவியினைப் பயன்படுத்தினர்.[545] வயலில் வேலையை முடித்ததும் அவர்கள் கள்ளுண்டு களித்தனர்; முழவினை முழக்கி இசையோடு பாடி மகிழ்வதும் உண்டு.[546]

உழவர் வீட்டு மகளிர் கூந்தலைக் கொண்டையாக முடிந்தனர். ஆம்பல் முதலிய மலர்களாலும், தளிர்களாலும் தயாரிக்கப்பட்ட ஒருவகை ஆடையை அவர்கள் அணிந்திருந்தனர்.[547] அவர்கள் சிறிய முதுகுடையவர்; பெண் யானை (பிடி) யின் கை போன்ற பின்னலை உடையவராய் விளங்கினர். கைகளில் தொடி அணிந்திருந்தனர்.[548] குளத்தின்கீழ் விளைந்த வெண்ணெல்லைப் பண்டமாற்றாகக் கொடுத்து வேட்டுவரிடம் மான் இறைச்சியையும், ஆயர் மகளிரிடம் தயிரையும் அவர்கள் பெற்றுக்கொண்டனர்.[549] உழவுத் தொழிலைச் செய்தவர்களை உலகத்தார்க்கு அச்சாணி போன்றவராக அக்காலத்திய அறிஞர்கள் கருதினர்.[550]

நாம் முன்னர்க் கண்டதைப் போன்று, பண்டைத் தமிழ் மக்கள் வாழ்ந்த நிலத்தாலும், செய்த தொழிலாலும் பெயர் பெற்றிருந்தனர்.[551] செய்தொழிலை ஒட்டிப் பண்டைத் தமிழ்

---

537 பதிற். 90:41; புறம். 13:11; நற் 97:9; குறள். 14; பரிபா. தி. 1:26
538 புறம். 33:4
539 பதிற். 76:11
540 புறம். 212:2, 387:25; நற். 125:9
541 புறம் 24:1, 209:2; நற். 195:6
542 பெரும்பாண். 209-211; நற். 125:9-10; பரிபா. 20:52
543 பதிற். 43:1 புறம் 13:10-11, 24:1, 33:4-5, 209:2, 387:22-25; நற். 125:9, 195:5-6
544 மதுரைக். 89-90
545 பெரும்பாண். 201
546 ஷை 201-222
547 புறம். 248:1-2
548 சிறுபாண். 191-192
549 புறம். 33:2-4
550 குறள். 1032

551 பெயரும் வினையும் என்றா யிருவகைத்
திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே
(தொல். பொருள். அகத். 22)

மக்கள் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நால் வகைத் தலைமைப் பிரிவினராகக் கருதப்பட்டனர். இவர்களி டையே சங்ககாலத்தின் கடைப்பகுதி வரையில் வேற்றுமை பாராட்டுதலோ, உயர்வு தாழ்வு கற்பிக்கும் பழக்கமோ தோன்றவில்லை.

வடநாட்டவரும், பிற மொழியாளரும் பையப் பையத் தமிழகத்தில் நுழைந்து, நிலையாகத் தங்கி வாழத் தலைப் பட்டனர். அவர்களுடைய கூட்டுறவால் தமிழ்ச் சமுதாயத்தின் அமைப்பிலே மாற்றம் பெரிதும் உண்டாகவில்லை. ஆனால், வடவருடைய நால்வகைச் சாதிப் பாகுபாட்டு முறையினைத் தமிழகத்துத் தொழில்வழி இனப் பாகுபாட்டோடு பொருத்திப் பார்க்கும் புதிய வழக்கம் தோன்றியது.[552]

'வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லவனும் அவன்கட் படுமே'[553]

என்னும் பாட்டில் (உயர்வு தாழ்வு) வேற்றுமையுடைய நால் வகைப் பகுதிகளைக் கொண்ட தமிழ்ச் சமுதாயம் சுட்டப் படுவது உண்மை. அச் சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் உள்ள கல்வியிற் சிறந்த ஒருவனிட மேனிலையிலுள்ள ஒருவனும் கல்வி யின் பொருட்டுச்சென்று வழிபடுவான் என்பது பொருள். அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் எனப்பட்ட சமுதாயத் தலைவர் களுடைய மரபுகளையே இவ்வடிகள் தெரிவிக்கின்றன. நாளடை வில், அந் நால்வகை மரபினரிடையே செய்தொழிலால் சிறப்பும் சிறப்பின்மையும் உண்டாகியிருக்கலாம். எக்காலத்திலும்,

---

552 சாதி என்னும் வடசொல்லை வருணாசிரம தரும அடிப்படையில் மனித இனப் பாகுபாட்டைக் குறிக்கும் சொல்லாகத் தொல்காப் பியர் பயன்படுத்தவில்லை. 'நீர்வாழ் சாதியுள் அறுபிறப்பு உரிய' (தொல். பொருள். மரபு. 44) என்றும் 'நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே' (தொல். பொருள். மரபு. 64) என்றும் குறிப்பிடும் இடங்களில் பிரிவு, வகை என்னும் பொருளில் அவர் வழங்கியுள்ளார். பெரும் பாணாற்றுப்படையில் 'கடுப்புடைப் பறவைச் சாதி அன்ன' (229) என்னும் பகுதியிலும், இப்பொருளிலேயே அச் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில்தான் முதன் முதலாக மனிதரிடையே பிறப்பால் புகுத்தப்பட்ட பாகுபாட்டைக் குறிக்கும் வகையில் 'நால் வகைச் சாதியும் நலம்பெற நோக்கி'(8:41) என்னும் தொடர் வழங் கப்பட்டுள்ளது. வரலாற்று முறையில் மேற்கொண்ட கருத்துகளைத் தொகுத்து நோக்குகின்றபொழுது 'பண்டைத் தமிழர் அறியாதது சாதிப் பாகுபாடு. வடவர் கூட்டுறவால் தமிழரிடை சங்ககாலத் தின் கடைப் பகுதியில் சாதிப் பாகுபாடு செல்வாக்குற்றது' என்னும் உண்மை புலனாகின்றது.

553 புறம். *183:8-10*

உலகின் பல்வேறு நாடுகளில் ஆட்சியாளர்களும் வணிகர்களுமே சமுதாயத்தில் சீரும் சிறப்பும், செல்வமும் செல்வாக்கும் பெற்று விளங்கியதாக வரலாறு பேசுகிறது. இதனால், 'கீழ்ப்பா லொருவன்' என்னும் தொடர் சமுதாயத்தின் கடைநிலையில் வறுமையில் வாழ்ந்த மக்கள் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவனைக் குறிப்பதாகலாம். எனவே, இப் பாகுபாட்டை வருணாசிரம தருமத்தோடு ஒப்பாகக் கருதுவது தவறாகும். 'சூத்திரர்'என்னும் சொல்லையும், பொருளையும், அதன்வழி ஒழுகுதலையும் சங்க காலத் தமிழ்மக்கள் அறிந்தவரல்லர். இம் முறை பிற்காலத்திய தமிழகத்தில் (சங்ககாலத்தின் கடைப்பகுதியில்) புகுத்தப்பட்ட 'சாதி'ப் பிரிவாகும்; சமுதாயத்தில் சிறந்த தொழில் புரிந்த மக்களிடையே தோன்றிய தொழில்வழிப் பாகுபாடேயாகும். இப் பாகுபாடு உலகில் உள்ள பல நாடுகளிலும் காணப்படுவ தாகும்.[554] மற்றும் ஆரியரின் நால்வகைச் சாதிப் பாகுபாட்டில் மதகுருமார்களின் (பார்ப்பன இனத்தவரின்) ஆதிக்கம் மேம்பட் டிருந்ததைக் காணுகின்றோம். ஆனால், தமிழ்நாட்டில் சங்க காலச் சமுதாயத்தில் மதகுருமார் என்னும் வகுப்பே இருந்த தில்லை. இதனால், அவர்களுடைய சுரண்டலுக்கு ஏற்ற சாதிப் பாகுபாட்டு முறையும் இந்த மண்ணில் முளைத்தெழவில்லை என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

இவ்வுண்மையைப் புரிந்துகொள்ள விரும்பாத சிலர், காலப் போக்கில் இரண்டையும் ஒன்றென மயங்கும் நிலையை மட்டும் கருத்தில்கொண்டு, தொன்றுதொட்டு (பிற்காலத்தில் நுழைந்து - நுழைக்கப்பட்ட) அப் பாகுபாடே தமிழகத்தில் இருந்து வருவ தாகக் கூறிவருகின்றனர்[555] ஆனால், நடுவுநிலையில் நின்று, இந்திய வரலாற்றை ஆராய்வோமானால் அவர்களுடைய கருத்து ஆதாரமற்றது என்பது புலனாகும். 'வியத்தகு இந்தியா' என்னும் நூலின் ஆசிரியர், 'வருணப் பாகுபாடு திராவிடத் தென்னாட்டிற்கு மிகவும் பிற்பட்ட காலத்திலேயே வந்தது. தொடக்க காலத்தில் தமிழ் இலக்கியத்திலுள்ள பழைய குடிமக்க ளின் குழுக்களைக் கொண்ட சமுதாயமே காணப்படுகிறது. அக் குழுக்களிடையே ஒன்று மற்றொன்றைக் காட்டிலும் உயர்ந்தது அல்லது முற்பட்டது என்ற எண்ணமே இருந்ததாகத் தெரியவில்லை. பின்தொடர்ந்த நூற்றாண்டுகளிலேயே வகுப்புப் பிரிவுகள் படிப்படியாகத் தோன்றின. வடஇந்தியப் பிராமணர்

---

554 Iyengar, P.T.S., *Pre Aryan Tamil Culture,* Journal of History, 1927, p-19

555 Nilakanta Sastri, K.A., *Sangam Literature, Its Cults and Cultures,* Swathi Publications, Madras, 1972, p. 42

களைவிட, தென்னிந்தியப் பிராமணர்கள் சடங்குகளைக் கடைப் பிடிப்பதில் கண்டிப்பும் கடுமையும் உடையவர்களாக மாறும் வரை அச் சாதிப் பாகுபாடு இறுகிக்கொண்டு வந்தது'[556] என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

ஆடை அணிகள், மணப்பொருள்கள்

ஆடை

ஆடை, உடை, உடுக்கை ஆகிய சொற்கள் மக்கள் அணிந்து உடலை மூடிக்கொண்ட பொருளைக் குறிக்க வழங்கின. இயற் கையில் ஏற்படும் குளிரைத் தடுக்கவும் உடலை மூடித் தன்மானத் தைக் காக்கவும் இவை பயன்படுத்தப்பட்டன. சங்ககாலத்தில் இவை எவ்வாறு அமைந்திருந்தன என்பதைக் காண்போம்.

தழையுடை

பழைய காலப் பெண்கள் தழையும் பூவும் சேர்ந்து ஆக்கப் பட்ட தழையுடைகளை அணிந்தார்கள்.[557] பழையர் மகளிர் கொற்கை முன்றுறையில் தழையுடை அணிந்திருந்தனர்.[558] மேலும் பெண்கள் தண்தழையையும்,[559] முறித்தழையையும்,[560] பல்குழைத் தொடலையையும்[561] உடுத்தார்கள் என அறிகிறோம்.

உடைகளை வயலைக்கொடியாலும், நொச்சியாலும், நெருப்புப் போன்ற செயலையாலும் ஆக்கிக்கொண்டார்கள்.[562] கழிகளில் மலர்ந்த கண்போன்ற நெய்தல் மலர்களைப் பெரிய தழைகளுடன் கூட்டி மகளிர் ஆடை அணிவதுண்டு.[563] ஆம்பலை யும் கழுநீரையும் இணைத்தும், வயலைக்கொடியையும் ஆம்ப லையும் பின்னியும் ஆடைகளை அக்காலத்தில் அமைத்துக் கொண்டார்கள்.[564] விழாக் காலங்களில் நெய்தல் மலர்களால் தழையுடை செய்தார்கள்.[565] இடுப்பிலும் மார்பிலும் மகளிர் தழையுடை அணிந்தார்கள்.[566]

---

556 Basham, A. L., *The Wonder that was India*, 1957, p. 138
557 அகம். 20:9, 269:15-17
558 ஷை 201:6-7
559 ஷை 7:2, 59:5, 226:3
560 ஷை 348:9
561 ஷை 390:7
562 ஷை 189:8, 383:4-8, 275:16-17, 188-12; குறுந். 214:4-5
563 அகம். 230:2-3.
564 ஷை 156:9, 176:13-14
565 ஷை 70:11-12; நற். 96:7-8
566 அகம். 156:9-10

காதலர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது காதலன் காதலிக்குத் தாரும் தழையும் தருவது உண்டு.[567] மகளிர் காதலனை இழந்துவிட்டால் தழையுடையை அணியமாட்டார்கள் என்று கூறலாம்போல் தோன்றுகிறது.[568] பரத்தையர் தழையுடையைத் தொடையளவே விட்டு அணிந்திருந்தார்கள்.[569]

ஆகவே, பழந்தமிழகத்தில் தழைகளாலும், பூக்களாலும், கொடிகளாலும் ஆன தழையுடைகளை மகளிர் உடுத்து வந்தனர் என உறுதியாகக் கூறலாம். அதோடு மக்கள் சங்ககாலத்தில் நெய்த ஆடைகளையும் துணிகளையும் அணிந்திருந்தார்கள் என்பதையும் பழைய இலக்கியங்களின்வழி அறிகிறோம்.

மரவுரி

பழங்காலத்தில் மரவுரி இருந்ததாகப் பத்துப்பாட்டால் அறிகிறோம். இது நாராலும் மரப்பட்டையாலும் செய்யப்பட்டிருக்கலாம். மான்தோலும் ஆடையாகப் பயன்படுத்தப் பட்டது.[570]

அறுவை

பருத்தி பழந்தமிழகத்தில் பயிரிடப்பட்டது. அதிலிருந்து நூல் நூற்று மக்கள் துணி நெய்தார்கள். நீளமாக நெய்து பிறகு வெட்டி வேட்டியாகவும், துண்டித்துத் துண்டாகவும், அறுத்து அறுவையாகவும் பயன்படுத்திக் கொண்டார்கள்.

மிலேச்சர் தோளிலும், வேலன் தலையிலும் அறுவை அணி செய்தது.[571] பாம்பின் தோலைப்போல மென்மையாகவும் இலேசாகவும் பூவேலைப்பாட்டுடன் அறுவைகள் இருந்தன. அப்பேர்ப்பட்ட அறுவைகள் பாணர்க்குப் பரிசாகத் தரப்பட்டன.[572]

அக்காலத்தில் படுக்கைகளின்மீது அறுவை விரிக்கப்பட்டது. அந்த அறுவைகள் மணமூட்டப்பட்டு விரிக்கப்பட்டன.[573] இக்காலத்திலும் நாகரிகமிக்க வீடுகளில் இவ்வாறு விரிக்கப்படுவதை ஒப்பிட்டுப் பார்த்தால் பழங்கால மக்கள் எவ்வளவு நாகரிகம் மிக்கவர்கள் என்பது தெற்றென விளங்கும்.

---

567 நற். 80;5,359;4
568 புறம். 248:1-3
569 குறுந். 293:5-6
570 முருகு. 126, 128-129
571 நெடுநல். 35; அகம். 195:12
572 பொருநர். 83:84
573 நற். 40:5

தூய வெண்மையான அறுவைகள் அவர்களுக்குத் தெரியும்.[574] அவ்வாறான வெண்மையான அறுவையைப் பிணங்களை மூடப் பயன்படுத்தியுள்ளார்கள்.[575] அப்பேர்ப்பட்ட வெண்மை ஆடைகளுக்குக் கஞ்சி ஊட்டுவதும் உண்டு.[576] பூந்துகில் ஆடைகளுக்கும் கஞ்சி ஊட்டுவது உண்டு.[577] சில வேளைகளில் இவ்வாறான ஆடைகளிலிருந்து கஞ்சியை நீக்குவதும் உண்டு.[578] இவ்வாறு கஞ்சியை நீக்குவதையும் போடுவதையும் புலைத்தியர் எனப்படும் மகளிர் செய்தார்கள் என அறிகிறோம். இக்காலத்தில் கஞ்சியுடன் கூடிய புத்தாடையைச் சலவை செய்து உடுத்துகிறோம். அப்பொழுது கஞ்சி நீக்கப்படுகிறதன்றோ? அதே போலப் பின் சலவை செய்யும் ஆடைகளுக்குக் கஞ்சி ஊட்டி மடங்கா நிலை செய்து அணிகின்றோமல்லமோ? எனவே, இக் கஞ்சியூட்டலும் நீக்கலும் மிக நீண்ட காலமாகத் தமிழகத்தில் இருந்து வரும் முறையாகும்.

மென்துகில்

மெல்லிய மூங்கிலாடைபோல, ஆவிபோல அறுவை நெய்யப்பட்டதுண்டு. அவ்வாறான ஆடையைச் சிறுபாணன் பெற்றான் என அறிகிறோம்.[579] இப்பொழுது கிடைக்கும் ஆவி போன்ற ஆடைகளை நாம் அப்பொழுதே பெற்றிருக்கிறோம்.

இந்த அறுவைகளை எல்லாம் விற்போரை அறுவை வாணிகர் என்றும், அவர்கள் அவற்றை வைத்து விற்ற தெருக்கள் அறுவை வீதி எனவும் இலக்கியங்களில் குறிக்கப்படுகின்றன.[580] அத் தொழில் செய்பவர்கள் தம் பெயர்களுக்கு முன்பு 'அறுவை வாணிகன்' எனச் சேர்த்துக்கொள்வதுண்டு என்பதை 'மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்' என்னும் பெயரிலிருந்து அறிகிறோம்.[581]

கலிங்கம்

ஆடையைக் 'கலிங்கம்' என்னும் சொல்லாலும் பழைய இலக்கியங்கள் குறிக்கின்றன. சிலர் கலிங்க நாட்டிலிருந்து வந்த பருத்தி ஆடைக்குத் தமிழர் 'கலிங்கம்' எனப் பெயரிட்டனர் என்றும், பட்டு ஆடைக்கு 'நூலாக் கலிங்கம்' எனப் பெயரிட்டனர் என்றும் கூறுகிறார்கள். நுரைபோன்ற கலிங்கமும் நுரை

---

574 புறம். 291:2
575 ஷை 286:5
576 ஷை 311:2
577 அகம். 387:6-7
576 ஷை 34:11
579 சிறுபாண். 235-236
580 சிலப். 14:207; மணிமே. 28-53
581 அகம். 272

போல் நுண்ணிய பூக்களைக் கொண்ட கலிங்கமும் அக்கால மக்களால் உடுத்தப்பட்டன;[582] மூங்கிலிலிருந்து உரிக்கப்பட்ட வெள்ளிய தோல்போன்று, நெய்யப்பட்டுள்ள இழைகளின் வரிசைகள் கண்ணுக்குத் தெரியாதவாறு நெய்யப்பட்ட 'ஒண்பூங் கலிங்கம்'[583] அவர்களால் போற்றப்பட்டது. நுட்பமான நூல்களைக்கொண்ட கலிங்கமும்,[584] பாம்புச் சட்டை போன்ற வெண்மையான மெல்லிய பூத்தொழிலையுடைய கலிங்கமும்[585] அவர்களால் அணியப்பட்டன.

மணப்பெண்கள் 'கோடிக் கலிங்கம்' அணிந்தனர்.[586] மேலும், மணமகள் 'முருங்காக் கலிங்கம்' அணிந்தாள் என்னும் குறிப்பும் கிடைக்கிறது.[587] ஆடையானது அவ்வளவு நன்றாகச் சுருங்காமல், சலவை செய்யப்பட்ட கஞ்சியுடைய துணிபோலக் கசங்காமல் இருந்தது என்பதே அதன் கருத்தாகக் கொள்ள வேண்டும். சில பெண்கள் சில பூக்களையுடைய கலிங்கம் அணிந்தார்கள்.[588] கலிங்கம் கட்டிக்கொண்டு சமையல் செய்த ஒரு பெண் அச்சமயத்தில் கையில் பட்ட தயிரை அக் கலிங்கத்தில் துடைத்துக்கொண்டாள் என அறிகிறோம்.[589] கலிங்கத்தை அரையில் அணிவது வழக்கம்.[590] பரத்தையரும் கலிங்கம் அணிந்தார்கள். வண்ணாத்தியால் கஞ்சியிட்டு உலரச்செய்து பக்குவப் படுத்திய சிறிய பூக்கள் வேலைப்பாடு கொண்ட கலிங்கத்தைப் பரத்தையர் அணிந்ததாகக் குறிப்பு உள்ளது.[591] வள்ளல்கள் பாணருக்குப் பாலாவி போல விளங்கும் கலிங்கங்களைக் கொடுத்து உடுக்கச் செய்துள்ளார்கள்.[592]

வண்ண ஆடை

ஆடைகளில் பல நிறங்கள் கொண்டவையும் உண்டு. வெள்ளாடை, நீல ஆடை, சிவப்பு ஆடை ஆகியவை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.[593]

சாலியர்

பட்டுச் சாலியர்கள் என்பவர்கள் பட்டு நூலாலும், எலிமயிராலும், பருத்தி நூலாலும் ஊசியால் பிணைக்கும் நுண்ணிய

---

582 சிலப். 22:21
583 புறம். 383:9-11
584 ஷை 392:15
585 ஷை 397:15
586 அகம். 86:21
587 ஷை 136:20
588 கலி. 56:11
589 குறுந். 167:2
590 முருகு. 109
591 நற். 90:4
592 பெரும்பாண். 469
593 கலி. 111:3; புறம். 385:6-7

தொழில் செய்து உடைகளைத் தயாரித்து வந்தார்கள்.[594] இவற்றாலான புடைவைகளைக்கொண்ட கடைகள் மதுரையில்நிறைய இருந்தன.[595] புடைவை என்பது ஆண்பாலார் உடைக்கும் பெண்பாலார் உடைக்கும் பொதுவாக வழங்கிய பெயர் என உரையாசிரியர்களுடைய குறிப்புகளால் அறியலாம்.[596]

கச்சை

மகளிர் அழகிய வேலைப்பாடுடைய கச்சுகளை அணிந்திருந்தனர். கச்சைப் பற்றிய குறிப்புக் கிடைக்கிறது. அர்ச்சுனன் என்பவன் பூவிரி கச்சையை அணிந்திருந்தானாம்.[597] கச்சையும், பூத்தொழில் பெற்ற நல்ல ஆடையேயாம்.

ஆடைகளை எவ்வாறு அணிந்தார்கள் என்பது பற்றியும் ஆடைகளில் சில வகைகள்பற்றியும் நாம் அறிவதற்குச்சில குறிப்புகள் உதவுகின்றன. அணிவதையும் மிக நேர்த்தியாய் அணிந்துள்ளார்கள். நீண்ட கொய்சகம் வைத்து உடுத்தியிருந்தனர். மகளிர் 'வம்பு' என்னும் மார்புக் கச்சை அணிந்திருந்தனர்.[598] 'வார்' என்றும் இதற்குப் பெயருண்டு.[599]

வட்டுடை

வட்டுடை என ஒன்றை மணிமேகலை குறிக்கிறது.[600] முழந்தாள் அளவு அணியும் உடையே வட்டுடை எனப்பட்டது என நினைக்கலாம். ஆண்கள் அணிந்த சட்டைக்கு மெய்ப்பை என்ற பெயர் இருந்தது.[601] படம் என்பதும் சட்டையைக் குறிக்கும். 'படம்புக்கு', 'படம்புகு மிலேச்சர்'[602] என்பன இலக்கியம் காட்டும் தொடர்களாகும். திருமலர் போன்ற புது மடியை[603] அணிந்துள்ளனர்.

எனவே, பழங்காலத்தில் ஆடவரும் மகளிரும் அரையிலும் மார்பிலும் ஆடைகள் அணிந்திருந்தனர் என்பதும், அவை தழையாலும், பூக்களாலும், பருத்தியாலும், பட்டாலும், எலிமயிராலும், மான்தோலாலும் ஆக்கப்பட்டன என்பதும், அவை பல

594 சிலப். *5:16-17*
595 சிலப். *14:205-207*
596 கலி. *31 2* உரையும் அடிக் குறிப்பும்; முல்லைப். *39;* நெடுநல். *149-151*
597 சிறுபாண். *238-240*
598 அகம். *11:8; 150:2-3*
599 ஷெ *361:5*
600 மணிமே. *3:121-2*
601 முல்லைப். *60*
602 பெரும்பாண். *69;* முல்லை. *66*
603 புறம். *390:15*

வகையான வண்ணங்களில் பூவேலைப்பாடுகளோடு மென்மை யாகவும் இருந்தன என்பதும் தெரிகிறது.

அணிகள்

ஒரு நாட்டின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் காட்டும் பலவற்றுள் ஆடைகளும் அணிகளும் சிறந்த இடம்பெறுகின்றன. அணிகள் அழகூட்டும் என்பது அசையா நம்பிக்கையாகும். பழந்தமிழகத்தில் எந்த உலோகங்களில் அணிகள் செய்யப் பட்டன என்பதும், அவைகட்கு அவர்கள் சூட்டிய பெயர்கள் என்ன என்பதும், அவை அணியப்பட்ட உடலுறுப்புகள் இவை என்பதும், இன்ன பிறவும் பழைய தமிழிலக்கியங்களிலிருந்தும் சில தோண்டியெடுக்கப்பட்ட புதைபொருள்களிலிருந்தும் நாம் ஓரளவு அறியலாம்.

பல்வகை அணி

பழைய இலக்கியங்களில் அணிகள் பல பெயர்களால் வழங்க பட்டன. அணி, பூண், இழை, கலம், தொடி, குழை, வளை என்னும் சொற்கள் அணியைக் குறிப்பன. இவை எல்லாம் யாதாயினும் ஒரு காரணம்பற்றி வந்த பெயராகலாம். முற் காலத்தில் ஆடை அணிதல்போல எளியமுறையில் அணியும் கழுத்தணிகளைக் குறித்து, பின் காலப்போக்கில் எல்லா நகைகளையும் பொதுவாகக் குறிக்கும் பெயராக அணி என்பது வந்திருக்கலாம். பூண் என்பது பூணப்படுவது ஆகும். ஓரங்களில் இறுக்கத்திற்காகப் பூண்கள் போடுவதை அறிவோம். அதேபோலக் கைகளில் செறிவாக அணிந்த நகையைப் பூண் எனச் சொல்லலாம். இது நாளடைவில் பொதுப் பெயராய் வழங்கி இருக்கலாம். இழை என்பது இழைத்துச் செய்யப் படுவது. அதனால் இழைத்துச் செய்யப்படும் நகைகட்குப் பொதுப் பெயராக இழை வழங்கி இருக்கலாம். பெயர்களும், நகைகளைக் குறிக்க வழங்கின என்பதில் கருத்து வேறுபாடே இருக்க வழியில்லை.

அணியிழை, ஒளியிழை, இலங்கிழை, சேயிழை, பாசிழை, மாணிழை, ஆயிழை என்னும் சொற்றொடர்கள் சங்க இலக்கியங் களிலே பயின்று வருகின்றன. இவற்றுக்குள்ள வேறுபாடு நுணுகி ஆராய்தற்குரியது. இழைகளின் வகைகளை எல்லாம் ஊன்றி எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஒண்டொடி, ஆய்தொடி, செறிதொடி, பைந்தொடி எனத் தொடி பகுத்துச் சொல்லப்படுகிறது. தொடி என்பது முன் கைகளிலும் தோள்களினருகிலும் தொட்டுக்கொண்டு இருக்கின்றவாறு அணியப்பெற்ற அணியாக இருக்கலாமன்றோ.

மகரக்குழை, பொலங்குழை, ஒண்குழை, பூங்குழை, வார்குழை, சிறுகுழை என்பனவற்றில் குழை இணைந்து இருக்கும் நேர்த்தியைக் காண்க. குழை என்பது தளிரிலிருந்து பிறந்த பெயர். தளிர்களை முன்பு காதில் அணிந்திருக்கலாம். இப்பொழுதுகூட ஊர்ப்புறங்களில், சிறுமொட்டுகளைக் காதில் துளைசெய்து அணிந்துகொள்ளும் எளியவர்களைப் பார்க்கலாம். இது நாளடைவில் காதணியைக் குறிக்க வந்திருக்கக்கூடும்.

வளை என்பது வளைந்த அணியாகும். இதனைச் சங்கு, ஆமை ஓடு, வெள்ளி முதலியவற்றால் செய்தார்கள்போலும்.

ஆகவே, மேலே காட்டியுள்ள பெயர்கள் எல்லாம் அணிகளுக்கு ஏதோ ஒரு காரணத்தால் வந்திருக்கவேண்டும் எனக் காரணகாரிய முறை காண்பது பிழையாகாது. இவ்வாறு பல பெயர்களாலும் பழைய தமிழ் இலக்கியங்களில் நகைகள் குறிக்கப் பட்டுள்ளன என்பதைப் பொதுவாகத் தெரிந்துகொண்டு அந்த இலக்கியங்கள்வழி அறியும் நகைகளைப்பற்றிச் சிறிது விரிவாகப் பார்ப்போம்.

முடி

தொல்காப்பியர் பெரிய நிலம் ஆளும் மன்னர்களுக்கு 'முடி' என்ற அணி உண்டு எனக் குறிக்கிறார்.[604] 'மன்னற்கு முடி முதற் கலங்கள்' சமைப்பதுண்டு எனச் சிலம்பு பேசுகிறது.[605] மேலும், முருகப்பெருமான் முடி அணிந்திருந்ததாகத் திருமுருகாற்றுப்படை கூறுகிறது.[606] முல்லைப்பாட்டு, தமிழரசன் பாசறையிலும் இரவு நேரத்திலும் முடிசூடி இருந்தான் என மொழிகின்றது.[607] ஆகவே, முடி ஓர் அணிகலனாய் உயர்ந்தவர்கட்கு—சிறப்பாக அரசர்கட்கு—உரியதாக இருந்ததெனலாம். ஆயினும் இதனை ஆண்களே அணிந்தனர் போலும். நள்ளி என்ற சிற்றரசன் தலையில் 'நீலமணி'யை அணிந்திருந்தான் என அறிகிறோம்.[608]

---

604 தொல். பொருள். மரபு. 72
605 சிலப். 16:114
606 முருகு. 83-84
607 முல்லைப். 76
608 புறம். 150:6

மகளிர் தலையணி

பெண்கள் கூந்தலை ஒப்பனை செய்வது மரபு. இதனைப் பெரும்பாணாற்றுப்படை[609] அழகுறக் காட்டுகிறது. திருமுருகாற்றுப்படையில் சேர மகளிர் தலைக்கோலம் அணிந்திருந்ததாகக் கொள்ளுமாறு குறிப்பு உள்ளது.[610] பொன்னாலான தலையணிகள்,[611] தலையணி,[612] சுரிதகம் என்னும் தலையணி[613] ஆகியவை தொகைநூல்களில் காணப்படுகின்றன.

மகளிர் காதணி

முருகப் பெருமான் 'பொலங்குழை'யை அணிந்திருந்தான்.[614] விறலி 'பூங்குழை' அணிந்திருந்தாள்.[615] இடைமகள் காதுகளில் 'சிறுகுழைகள்' அசைந்தாடின.[616] மருதநிலத்துப் பெண்கள் காதுகளில் 'பொலங்குழை' பொலிவுற்று விளங்கின[617] மதுரையிலுள்ள செல்வ மகளிர் 'ஒண்குழை' அணிந்திருந்தனர்.[618] அரசியரும் இந்த அணியை அணிந்திருந்தனர்.[619] பாண்டிய நாட்டைச் சார்ந்த மகளிர், 'பூங்குழை' பூண்டிருந்தனர்.[620] அந்த நாட்டு அரசி 'வார்குழை'[621] அணிந்து இருந்தாள். பூத்தொழில் அமைந்த குழைகள்,[622] கனங்குழை,[623] பொலங்குழை,[624] பூக்குழை,[625] மகரக்குழை,[626] வரிக்குழை[627] ஆகியவையும் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆண்களைப் போலவே பெண்களும் தொடியணியும் வழக்கம் இருந்தது. பல இடங்களில் வரும் குறிப்புகள் அதனை விளக்கி நிற்கின்றன.

மகளிரின் தொடியும் வளையும்

விறலியர் தம் முன்கையில் தொடி அணிவது மரபு. இந்தத் தொடி கையில் வளையங்களுக்கு முன்னால் அணியப்படும்.[628]

---

609 பெரும்பாண். 485-486
610 முருகு. 23-25
611 குறுந். 21:2
612 கலி. 54:5
613 நற். 86:6
614 முருகு. 86
615 பொருநர். 30
616 பெரும்பாண். 161
617 ஷை 211-312
618 மதுரைக். 448
619 ஷை 709
620 நெடுநல். 38
621 ஷை 139
622 குறுந். 159:5
623 கலி. 57:15
624 ஷை 58:21
625 ஷை 63:6
626 ஷை 92:36-37
627 ஷை 104:23
628 ஐங்குறு. 475:1; சிறுபாண். 81, 95

ஒய்மானாட்டு உழவரின் மகளிர் தொடி அணிந்திருந்தனர்.[629] மகளிரைப்போலவே பேய்மகளும் தொடியணிவதுண்டு எனத் திருமுருகாற்றுப்படை தெரிவிக்கின்றது.[630] தொண்டை நாட்டிலிருந்த நகர்களிலுள்ள செல்வக் குடும்பத்தில் பிறந்த சிறுமியர் குறுந்தொடி அணிந்து விளங்கினர்.[631]

அரசர் போர்க்களத்தின்கண் பாடி வீட்டில் தங்குவது வழக்கம். அப்பொழுது அவருக்குப் பணி செய்ய அங்கிருந்த பணிப்பெண்டிர் தங்களுடைய முன்கையில் குறுந்தொடி அணிந்திருந்தனர் என்று தெரிகிறது.[632] சில நேரங்களில் விறலியர்க்குக் குறுந்தொடி பரிசாகத் தரப்பட்டது.[633]

பரத்தையர் அழகான திரண்ட விளக்கமுடைய தொடியை அணிந்திருந்தனர்.[634] பரத்தையரன்றி அரசமகளிரும் ஆய் தொடி அணிந்திருந்தனர்.[635] வளமான மனைகளில் வாழ்ந்த மகளிர் பூந்தொடி அணிந்திருந்தனர்.[636] மன்னனிடம் பரிசில் பெற்ற விறலியர் செறிதொடி அணிந்திருந்தனராம்.[637]

எனவே மகளிர் குறுந்தொடி, அவிர்தொடி, ஆய்தொடி, பூந்தொடி, செறிதொடி எனப் பலவகைத் தொடிகளை அணிந்து அழகுபடுத்திக்கொண்டனர் எனக் கொள்ளலாம். இதிலிருந்து தொடிகளின் வகைகளையும் ஒருவாறு நாம் உணரலாம். மதுரைக்காஞ்சியில் 'வந்திகை' என்ற ஓர் அணிவகை காணப் படுகிறது.[638] செல்வ மகளிர் இதனைக் கையில் தோளின்கீழ்ப் பூண்டிருத்தல்கூடும். இது இக்காலத்தில் 'வங்கி' என வழங்கும் அணியைப் போன்றதாய் இருக்கலாம் என்பர்.[639]

கைகளில் வளையல்கள் அணிவது அக்கால வழக்கம். கிணை மகள் வளைக்கையையுடையாள் எனச் சிறுபாணாற்றுப்படை சொல்கிறது.[640] பாண்டிமாதேவி 'வலம்புரிவளை' அணிந்திருந்ததாக நெடுநல்வாடை கூறுகிறது.[641] வலம்புரிவளை என்பது

---

629 சிறுபாண். 192
630 முருகு. 54
631 பெரும்பாண். 334
632 முல்லைப். 45
633 மதுரைக். 217-218
634 ஷை 563
635 ஷை 712
636 குறிஞ்சிப். 223-224
637 மலைபடு. 201
638 மதுரைக். 415
639 இராசமாணிக்கனார், மா., 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி', பக். 537
640 சிறுபாண். 136
641 நெடுநல். 141-142

வலம்புரிச் சங்கால் அறுத்துச் செய்யப்பட்ட வளை என நச்சினார்க்கினியர் உரை எழுதுவது நோக்கத்தக்கது. 'எல் வளை',[642] 'இலங்குவளை'[643] எனக் குறிஞ்சிப் பாட்டும் மலை படுகடாமும் குறிக்கின்றன எனவே, மகளிர் கையில் வளைகள் அணிந்தனர் எனக் கொள்ளலாம். அரத்தால் அந்த வளைகள் போழப்பட்டுச் செய்யப்பட்டன.[644]

ஆண்களின் அணிகள்

ஆண்கள் தம் கையில் வீரத்திற்கு அடையாளமாகத் 'தொடி' அணிவது வழக்கம். முருகப்பெருமான் 'தொடியணி' தோளன்[645] எனப்படுகிறான். 'தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம் பியன்'[646] என்பது ஒரு சோழன் பெயராகும். வானத்தில் தொங்கிக்கொண்டிருந்த எயிலை அழித்த சோழ மன்னன் தொடியைத் தோளில் அணிந்திருந்தான் என்பதே அப் பெயரின் விளக்கமாகும். திருக்கோவலூரை மலையமான் திருமுடிக்காரி என்பவன் ஆண்டுவந்தான். அவன் 'கழல்தொடித் தடக்கைக் காரி' என அழைக்கப்பட்டான்.[647] 'வலிகெழு தடக்கைத் தொடி யொடு' பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் விளங்கினான்.[648] நன்னன் சேய் நன்னன் என்ற குறுநில மன்னன் தொடியணிந்திருந்தான்.[649] ஆடவரும் சிறுவரும் தொடி அணிந்திருந்தனர்.[650]

நள்ளி என்ற சிற்றரசன் கையில் கடகத்தை அணிந்திருந் தான்.[651] அரசியைப் பிரிந்து போர்க்களம் சென்ற வேந்தன் கையில் கடகத்தை அணிந்திருந்தான்.[652] கடகம் கையில் அணியத் தக்கது என்பது தெளிவாகத் தெரிகிறது.[653]

கழுத்தணிகள்

கழுத்திலும் மார்பிலும் பொருந்துமாறு அணிகளை அந்தக் காலத்திலும் அணிவதுமுண்டு. ஆண்களும் பெண்களும் முத்து மாலை அணிந்திருந்தனர். பாடினி முத்துமாலையை அணிந்திருந்

642 குறிஞ்சிப். 167
643 மலைபடு. 46
644 அகம். 6:1-2
645 முருகு. 113-114; 211-212
646 சிறுபாண். 81-82
647 ஷை 95
648 மதுரைக். 34, 720
649 மலைபடு. 577
650 நற். 48:6, 166:7
651 புறம். 150:21
652 முல்லைப். 76
653 மணிமே. 6:114

தாள்.[654] மதுரை நகர மகளிர் முத்துமாலை அணிந்தனர்.[655] பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் முத்துமாலையை அணிந்திருந்தான் என்னும் குறிப்பு உள்ளது.[656] மேலும் பாண்டிமாதேவியும் தன் மார்பில் முத்துக் கச்சினைக் கட்டியிருந்தாள்[657] எனக் கூறுகிறது. எனவே, முத்து களை மார்பில் அணிவது அந்தக் கால நாகரிகமாகும்.

பொன்மாலையும் அந்தக் காலத்தில் அணியப்பட்டன.[658] கரிகாலன் பாடினிக்கு 'நூலின் வலவா நுணங்கரில் மாலை'யைப் பரிசளித்தான் என அறிகிறோம்.[659] இதற்கு 'நூலால் கட்டப் படாத நுண்மையையும் பிணக்கத்தையும் உடைய பொன்னரி மாலை' என உரைவிளக்கம் செய்கிறார்கள்.[660] ஆகவே, பொன் மாலை அணியும் மரபு பழந்தமிழகத்தில் இருந்தது என உறுதிப் படுத்தலாம்.

காலணிகள்

பழங்காலத்தில் கால்களுக்கு அணிகள் பூணுவது மரபு. சூரரமங்கையர் கால்களில் 'கிண்கிணி' அணிந்திருந்ததாகக் கூறப்படுகிறது. கிண்கிணி என்பது சிறு சதங்கை என்பர்.[661] கிண்கிணி என்பது பிள்ளைகளின் இடையிலணியப்படும் ஒரு வகை அணி எனத் தெரிகிறது.[662] எனவே, அணியும் இடங்கள் ஏதுவாயினும் ஒலி எழுப்பும் கிண்கிணி எனச் சொல்லப்படும் அணி இருந்தது என்பது உண்மையாகும்.[663]

மகளிர் கால்களில் சிலம்பு அணிந்துகொண்டார்கள். இதில் 'தெள்ளரிப் பொற்சிலம்பு' என்பது ஒருவகை.[664] இவற்றை உள்ளே மணிகளைக் கொண்ட பொற்சிலம்புகள் என்பர். எனவே, சிலம்புகள் பொன்னால் செய்யப்பட்டன என்றும் பிற்காலத்தில் தான் பொன் நகைகளைக் காலில் அணியும் பழக்கம் கைவிடப் பட்டிருக்க வேண்டுமென்றும் கருதப்படுகின்றன.[665] 'பொன்' என்பதைத் தங்கம் எனக் கொள்ளாமல் அழகிய எனக் கொள்ளினும் அமையுமாயினும் 'தமனியப் பொற்சிலம்பு' என

---

654 பொருநர். 162
655 மதுரைக். 680-681
656 ஷெ 715
657 நெடுநல். 136
658 முருகு. 79
659 பொருநர். 161
660 ஷெ நச்சி உரை
661 முருகு. 13
662 நற். 269:1
663 ஐங்குறு. 442:5
664 மதுரைக். 444
665 இராசமாணிக்கனார், மா., மு. கு. நூ., பக். 537

ஒரு தொடர் கிடைப்பதால் தங்கம் எனக் கொள்ளினும் பிழை யாகாது. இந்தப் பொற்சிலம்புகளுக்குள் மாணிக்கத்தையும் முத்துகளையும் பரலாக இட்டுச் செய்வது மரபு.[666]

சோழ நாட்டு ஊர்களில் வாழ்ந்த செல்வக் குடும்பத்தைச் சார்ந்த சிறுவர்களைப் பட்டினப்பாலை 'பொற்காற் புதல்வர்' எனப் பேசுகிறது[667] அதாவது, செல்வர் வீட்டுச் சிறார், கால்களில் பொன் அணிகள் பூண்டிருந்தனர் எனக் கொள்ளுமாறு இக் குறிப்பு உள்ளது.

கழல் என்ற ஓர் அணிவகையும் அக்காலத்தில் பெருவழக்காக இருந்தது. இளந்திரையன் என்பவன் வீரக்கழலை அணிந்திருந்தான்.[668] பாண்டிநாட்டு வீரர்கள் காலில் வீரக்கழலைப் பூண்டிருந்தனர்.[669] மதுரைநகரச் செல்வரும் குறிஞ்சிநிலத் தலைவரும் வீரக்கழலை அணிந்திருந்தனர்.[670] என்வே, கழல் ஆண்கள் அணிந்துவந்த ஓர் அணி எனலாம்.

பல்வகை அணிகள்

தெளிவாக விளக்க இயலாத அணிகள் சில பண்டை இலக்கியங்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன. குறும்பொறி,[671] சில்காழ்,[672] பருமம்,[673] பல்காழ்.[674] பைங்காழ்[675] என அணிகளின் பெயர்கள் சொல்லப்படுகின்றன. உரையாசிரியர்கள் வழிப் பார்த்தால் அவை எல்லாம் இடை அணிகள் என நாம் உணரலாம். பல்காழ் என்பது பல வண்டினங்களின் இருப்பை ஒத்த பலமணிகள்கோத்த வடங்களையுடைய மேகலை என்றும், பைங்காழ் என்பது பசிய மணிகள் கோத்த வடங்கள் என்றும் கூறப்படுகிறது.

பூண், இழை, கலம் என்னும் சொற்களால் பல இடங்களில் நகைகள் குறிக்கப்பட்டுள்ளன. பூணகம்,[676] நுண்பூண் அகம்,[677] பூணொடுபொலிய,[678] ஒண்பூண்,[679] பெரும்பூண் நன்னன்,[680] பொலம்பூண் ஐவர்,[681] கிளர்பூண் புதல்வர்[682] எனப் பல் வேறிடங்களில் பூண் என்னும் ஆட்சியைக் காண்கிறோம்.

---

666 நற். 110:4-5; சிலப்.20:67-69
667 பட்டினப். 24
668 பெரும்பாண். 102
669 மதுரைக். 436
670 குறிஞ்சிப். 126-127; குறுந். 7:1
671 முருகு. 213
672 ஷெ 16
673 ஷெ 146
674 பொருநர். 39
675 பெரும்பாண். 329
676 சிறுபாண். 26
677 மதுரைக். 569
678 குறிஞ்சிப். 121-122
679 பட்டினப். 297
680 மலைபடு. 63-64
681 மதுரைக். 775
682 சிறுபாண். 61

இழை என்னும் சொல்லும் பல இடங்களில் காணப் படுகிறது.[683] ஒண்பொன் அவிரிழை.[684] மாணிழை[685] தமனியம் வளைஇய தாவில் விளங்கிழை,[686] இலங்கிழை,[687] அவிரிழை,[688] பாசிழை,[689] ஒள்ளிழை.[690] நேரிழை,[691] வயங்கிழை,[692] முற்றிழை,[693] விளங்கிழை,[694] இங்கெல்லாம் இழை என்பது அணியையே குறித்து நிற்கிறது. பாண்டியனுடைய அரண்மனைப் பணிப்பெண்டிரும் இலங்கிழை அணிந்திருந்தனர் என்பது கவனித்தற்குரியது.[695] கலன் என்னும் சொல் நகை என்னும் பொருளிலும், பாத்திரம் என்னும் பொருளிலும் முன்பு வழங்கியுள்ளது. 'நன்கலஞ் சீப்ப'[696] 'கலம் பெறும் கண்ணுளர்'[697], 'நன்கலன் உய்ம்மார்'[698] என வருமிடங்களில் எல்லாம் கலம் என்பது அணிகலன் என்னும் பொருளில் வழங்கியிருப்பதை அறியலாம்.

'மதாணி' என்ற[699] அணிபற்றி ஒரு குறிப்பு உள்ளது. இதை மார்பில் அணியும் பதக்கம் எனக் கருதலாம்.

சங்க காலத்தில் தமிழ் மன்னர்கள் தம்மை நாடிவந்த கூத்தர், பாணர், விறலியர்க்கு நகைகள் பரிசளித்துள்ளார்கள். பொற்றாமரை, பொன்னரிமாலை,[700] பொன் வஞ்சிப்பூ[701] ஆகியவற்றை வழங்கியதாகக் குறிப்புகள் கிடைக்கின்றன. வீரர்களுக்குப் பொன்னால் செய்த தும்பைப் பூவைப் பாண்டியன் நெடுஞ்செழியன் பரிசளித்தான்.[702] நன்னன் என்ற குறுநில மன்னன் விறலியர்க்கு இழைகளைத் தந்துள்ளான்.[703] வெள்ளி நாரினால் பொற்றாமரைகள் கோத்துப் பரிசளிப்பதும் உண்டு.[704]

யானைகட்குப் பொன்னால் அணி செய்து முகபடாம் போடுவதுண்டு.[705] புலிப்பல் கொண்டு செய்யப்பட்ட, தொங்கிக்

683 முருகு. 18
684 மதுரைக். 666
685 ஷெ. 680
686 ஷெ. 704
687 ஷெ. 779
688 ஷெ. 445
689 ஷெ. 579
690 ஷெ. 623
691 பட்டினப். 22
692 ஷெ. 219
693 ஷெ. 296
694 மலைபடு. 570
695 மதுரைக். 779
696 ஷெ. 685
697 மலைபடு. 50
698 மதுரைக். 322
699 ஷெ. 461
700 பொருநர். 159-162; பெரும்பாண். 481,485-486; மலைபடு. 569-570
701 புறம். 32:1-2
702 மதுரைக். 737
703 மலைபடு. 569-570
704 புறம். 11:17-18
705 பதிற். 34:6; நற். 296:1-2

கொண்டு இருக்கும் தாலிகளைச் சிறுவர்களுக்குக் கழுத்தில் அந்தக் கால மகளிர் அணிவிப்பதுண்டு.[706] சில நேரங்களில் முற்காலத்தில் புலியோடு போராடி வென்ற வீரன் தன் மனைவிக்கு இதைப் பரிசாக அளிப்பதுண்டு.[707]

அணிகளைத் தொடுத்தும், பூண்டும், செறீஇயும் அணிவார்கள் எனத் தெரிகிறது.[708] சில அணிகளின் பெயர்கள் ஆங்காங்கே நமக்குத் தெரியவருகின்றன.

சுரிதகம் : சடையில் அணியப்படும் திருகு பூப்போன்ற வட்டமான மணிகள் பதித்த பொன் அணியாம்.[709]

சூழி : சூழி என்பது யானைக்கு அணிவிக்கப்படும் முகபடாம் எனக் கூறப்பட்டுள்ளது.[710]

தொய்யகம் :[711] இதனைத் தலைப்பாளை என்பாரும் உண்டு. இதனை ஒன்பது விதமான மணிகள் அழுத்திச் செய்யப் பெற்ற ஒரு பொன் அணி என்பர். இது தலைமயிர்ப் பிரிவின் நடுவில் அணியப்படுவதால் தலைப்பாளை எனப்படும்.

மகரப்பகுவாய் :[712] இது சுறாமீன் வடிவமாகப் பொன்னால் செய்யப்பெற்ற ஒரு நுதலணியாம்.

மகரவலயம் :[713] இது பொன்னால் செய்யப்பெற்ற பலவித மணிகள் இழைத்து அழகுறச் செய்யப்பட்ட பொன் அணி. இது சுறா வடிவம் வாய்ந்தது.

கடிப்பிணை (குதம்பை) : கோவலன் நீலமணிகள் பதித்த பொன்னாலான கடிப்பிணை அணிந்திருந்தான்.[714]

வாகுவலயம் :[715] தோள்வளை போன்ற ஒன்று என்பர்.

நித்திலமதாணி : ஆண்கள் மார்பில் அணியும் ஓர் அணி. திருமால் மார்பில் திகழ்ந்த முத்துகள் பதித்த அழகிய பதக்கம், முழு நிலவை ஒத்திருந்ததாம்.[716] பொன்னின் தூய்மை நலங்

---

706 புறம். 374:9; குறுந். 161:3
707 ஷை 374:9-10
708 குறுந். 295:1
709 நற். 86:6
710 அகம். 15:10
711 பரிபா. 7:46
712 முருகு. 25
713 பரிபா. 10:77
714 சிலப். 6:104
715 பரிபா. 7:47
716 ஷை 2:30

களைக் காண ஓர் உரைகல் இருந்தது எனத் தெரிகிறது. இது 'பொன்காண் கட்டளை'[717] என்றும், 'கட்டளைக்கல்'[718] என்றும் குறிப்பிடப்படுகிறது. பொன்வேலை செய்பவனைக் கம்மியன் என அழைத்தனர்.[719] திருமணத்திற்குச் செல்வோர் பொன் அணிகலன்களை அணிந்து செல்வர்.[720]

ஒன்பான் மணிகள்

மணிகள் ஒன்பது வகைப்படும் என்பதை அறிஞர் அறிவர் அவை பழந்தமிழகத்தில் சங்ககாலத்தில் இருந்தனவா எனக் காண்போம். வைரம், முத்து, மரகதம், மாணிக்கம், நீலம், புட்பராகம், வைடூரியம், கோமேதகம், பவழம் என்பன இப்பொழுது நவமணிகளாகக் கருதப்படுகின்றன. சிலப்பதிகாரம் இந்த நவமணிகளைப்பற்றியும் அவற்றிலுள்ள குணங் குறைகளைப் பற்றியும் தெளிவாகக் கூறியுள்ளது.[721] ஆனால், பாட்டிலும் தொகையிலும் ஆங்காங்கே இவற்றுள் பலவற்றைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

நீலமணிபற்றிப் பல இடங்களில் பேசப்படுவதைக் காண்கிறோம்.[722] முத்து,[723] பவளம்,[724] வைரம்[725] போன்ற மணிகள் பலவற்றைப் பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன. எனவே, சங்ககால மக்கள் பல மணிகளை அணிந்திருந்தனர் என உறுதியாகக் கூறலாம்.

கடலில் மூழ்கிப் பவழம், முத்து ஆகியவற்றை அந்தக் கால மக்கள் எடுத்தனர்.[726] சங்ககால ஆண்களும் பெண்களும் பலவகை அணிகளைப் பல உறுப்புகளுக்கும் அணிந்து தம்மை அழகுபடுத்திக்கொண்டனர் என்பதை எவரும் மறுக்க இயலாது. மேலும், மணிகளாலும் பொன்போன்ற உலோகங்

---

717 பெரும்பாண். 220
718 குறள். 505
719 நற். 313:2
720 ஐங்குறு. 432:2-3
721 சிலப். 14:180-198
722 ஐங்குறு. 233; குறுந். 55:1, 138:5; அகம். 14:3-4, 304:13, 374:13; கலி. 85, 12, 91:6; புறம். 56:5; 147:7; 150:6; சிறுபாண். 181, 264; பெரும்பாண். 14
723 ஐங்குறு. 105:2, 185:2, 193:2, 195:1; குறுந். 51:2, 104:2; நற். 23:6; அகம். 108:2; கலி. 4:9; பரிபா. 6:16; பதிற். 11:9; புறம். 161:16, 380:1 மதுரைக். 681-684; பட்டினப். 189
724 அகம். 14:3, 243:1-2; புறம். 218:1; சிறுபாண். 164; பட்டினப். 148
725 புறம். 215
726 பதிற். 30:6-7

களாலும் பலமாதிரியான அணிவகைகளை அவரவர்க்கேற்பச் செய்துகொண்டனர் என்பதும் அறியப்படுகிது. அவற்றை நுட்பமாகச் செய்பவரும் அழகாக அணிபவரும் அக்காலத்தில் விளங்கி இருக்கவேண்டும். அவற்றிலுள்ள குற்றம் குறைகளையும் நல்ல குணங்களையும் பார்ப்பதற்குப் பல வழிகளை அறிந்து வைத்திருந்தனர் எனவும் நாம் நம்ப இடமுண்டு. சிலப்பதிகாரம் ஒரு காப்பியமாதலால் அதில் பலவகையான, பல அமைப்புகளையுடைய அணிகளைப்பற்றி மிகுதியாகக் குறிப்பிடப்படுவது கருதத்தக்கது.

மணப்பொருள் அணிதல்

நாகரிகமிக்க பண்பட்ட சமுதாயத்தில் நறுமணப்பொருள்களை உற்பத்தி செய்வதும் அவற்றை அணிந்து மகிழ்வதும் உண்டு. சங்ககாலத் தமிழகத்தில் அவை இருந்தமை குறித்து இலக்கியங்களிலிருந்து அறிகிறோம்.

மலர்கள், காய்கள், மரக்கட்டைகள், விலங்குகளிலிருந்து கிடைத்த சில பொருள்கள் முதலியவை மணப்பொருள்களாகப் பயன்படுத்தப்பட்டன.

குறிஞ்சிநிலப் பெண்கள் பலவகைப் பூக்களைப் பறித்துப் புறவிதழ் நீக்கி அகவிதழ்களால் தழைஆடை செய்து அணிந்துகொண்டனர். மேலும், பல மலர்களையும் தொடுத்து மாலைகளாகக் கட்டி அணிந்து மகிழ்ந்தனர்.[727]

வெட்சிப் பூக்களைத் தலையில் தூவி அவற்றிற்கு இடையில் குவளை இதழ்களைக் கிள்ளிச் செருகித் தலையணிகளைக் குறமகளிர் அணிந்துகொண்டனர்.[728] தேருருளைகளைப் போன்ற வடிவம் கொண்ட செங்கடப்ப மலர்களாலான மாலையை முருகக் கடவுளுக்கு அளிப்பதுண்டு.[729]

வெறியாட்டாடும் வேலன் சாதிக்காய், தக்கோலக்காய் காட்டுமல்லி, வெண்டாளி மலர் ஆகியவற்றைக் கலந்து கட்டிய மாலையைத் தலையில் அணிந்திருந்தான்.[730] மலர்களிலுள்ள இதழ்களைப் பறித்து மாலையாகக் கட்டித் தலையில் அணிவது

727 குறிஞ்சிப். 61-104
728 ஷை 63
729 முருகு. 10-11
730 ஷை 190-193

மகளிர் வழக்கம். கஞ்சங்குல்லைப் பூவையும் தலையில் அணிவ துண்டு.[731]

குறிஞ்சிநில ஆண்கள் பல மலர்களைத் தொடுத்துத் தலை மாலையாகவும் பித்திமலர்களைத் தொடுத்து மாலையாகவும் அணிந்துகொண்டார்கள். அசோகந்தளிரைக் காதில் செருகிக் கொண்டு பொலிவாக விளங்குவதுண்டு.[732]

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த ஆண்கள் தம் தலையில் குளிர்ச்சி பொருந்திய மணமுள்ள மயிர்ச்சாந்தைப் பூசிக்கொள்வதுண்டு; அகிற்புகையை ஊட்டித் தலைமுடியை உலரவைத்தனர்; அதற் குப்பிறகு அகிலின் நெய்யைத் தலை முடிக்குத் தடவினர்; கடைசி யில் பலநிறப் பூக்களைத் தலையில் சூட்டிக்கொண்டனர்.[733] இதிலிருந்து தலைமுடியைப் பேணிக் காப்பதில் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியும் ஆர்வமும் புலனாகின்றன.

முல்லைநில மக்கள் முல்லை, காயா, கொன்றை போன்ற மலர்களை விரும்பிப் பயன்படுத்தினர்.[734] விரிச்சிகேட்கும் மக்கள் நெல்லோடு முல்லைமலர்களையும் சேர்த்துத் தெய்வத்தின் முன்பு தூவுவார்கள்.[735] முல்லைநிலத்து இடையர்கள் காட்டிலுள்ள மரங்களிலும் கொடிகளிலும் மலர்ந்த பல பூக்களைப் பறித்து விரவி, கலம்பக மாலையாகக் கட்டி அணிந்துகொண்டார்கள்.[736]

நெய்தல்நில மக்கள் நெய்தற்பூ மாலையை அணிந்து வந் தனர்.[737] பரதவர்களின் பிள்ளைகள் மணலிற் படர்ந்துள்ள அடும்பின் பூவைப் பறித்துத் தலையிற் கட்டிக்கொண்டார்கள்; நீரில் வளரும் ஆம்பலிலிருந்து பூக்களைப் பறித்துச் சூடிக்கொண் டார்கள்.[738] பரதவர்கள் வெண்டாளிப் பூமாலையையும், மடலை யுடைய தாழம்பூவையும் அணிந்து மகிழ்ந்தனர்.[739] பகன்றைப் பூவாற் செய்த கண்ணியை பழைய மகளிர் சூடிக்கொண்டனர்.[740]

கூத்தர்கள் மராமரத்துப் பூக்களையும், யாமரத்துப் பூக் களையும் இலைகளோடு நாரினால் கட்டி மாலையாக அணிந்து கொண்டார்கள்.[741]

---

731 முருகு. 200-203
732 குறிஞ்சிப். 114-120
733 ஷெ 108-115
734 பொருநர். 199-200
735 முல்லைப். 8-11
736 பொருநர். 172-174
737 ஷெ 218-219
738 பட்டினப். 61-66
739 ஷெ 84-88
740 மலைபடு. 459
741 ஷெ 428-431

மதுரை நகரச் செல்வ மகளிர் இரவு நேரங்களில் செங்கழுநீர் மாலையை அணிந்தார்கள்.[742] அங்கு வாழ்ந்த பரத்தையர்கள் பலநிறப் பூக்களை நெருக்கமாகக் கட்டித் தலையில் சூடித் தம்மை அழகு செய்துகொண்டனர்.[743] மதுரைக்கு வந்திருந்த மிலேச்சர்கள் தழை கலந்த மாலையை அணிந்தார்கள்.[744] அங்கு வாழ்ந்த இடையர்கள் காந்தள் இதழ்களால் கட்டப்பட்ட கண்ணியை அணிந்து மகிழ்ந்தனர்.[745]

மதுரையில் தெருக்களில் மலர்மாலைளும் விடுபூக்களும் விற்கப்பட்டன.[746] எனவே, பூக்களையும் மாலைகளையும் பலர் வாங்கி அணிந்தனர் எனக் கொள்ளலாம்.

நவமணிகள், பொன், சந்தனம், கற்பூரம் முதலியவற்றைப் புனுகிலும் பனிநீரிலும் நனையவைத்து இடித்துச் சுண்ணம் தயாரிக்கப்பட்டதென அறிகிறோம்.[747] செல்வருடைய வீடுகளில் பணிப்பெண்கள் அம்மியில் மணப்பொருள்களை இட்டுச் சாந்தாக அரைத்துத் தரச் செல்வப் பெண்கள் அந்தச் சாந்தினைப் பூசி மகிழ்ந்தார்கள்.[748] வடநாட்டிலிருந்து சந்தனக்கல் கொண்டுவரப் பட்டுத் தமிழகத்தில் விற்கப்பட்டது. மகளிர் சந்தன விறகில் தீ மூட்டி அதில் கண்டசருக்கரையையும் அகிலையும் சேர்த்து வீடுகளில் புகைத்து நறுமணமூட்டினர்.[749]

செல்வப் பெண்கள் தம் கூந்தலுக்கு மலர்ச்சாந்து தடவினர். கத்தூரி, சந்தனம் போன்றவற்றை அரைத்துப் பூசிக்கொண்டார்கள். தாங்கள் அணிவதற்காகப் பெற்ற கலிங்கங்களுக்கு அகிற்புகை ஊட்டுவதுண்டு.[750] இந்த அகிற்புகையை ஊட்டுவதால் நறுமணம் கிடைப்பதுடன் துணிகளை அரிக்கும் பூச்சிகள் துணிகளில் தங்கி அவற்றைப் பழுதுபடுத்தாமலிருக்கவும் அது உதவியது எனக் கொள்வது பொருத்தமாகும். இம்முறை அந்தக் காலத்தில் துணிகளைப் பாதுகாக்க இருந்த முறை எனக் கொள்ளுதல் சிறப்புடைத்து.

உணவும் சுவைநீரும்

உணவு

தமிழக மக்கள் அனைவரும் ஒரே வகையான உணவை உண்டார்கள் என்று சொல்வதற்கு எவ்விதச் சான்றும் இல்லை.

---

742 மதுரைக். 550-551
743 ஷெ 566-568
744 நெடுநல். 31-32
745 ஷெ 5-6
746 மதுரைக். 397-398
747 ஷெ 399
748 நெடு. 49-50
749 ஷெ 49-56
750 மதுரைக். 552-554

இயற்கையாக அமைந்த நிலப்பாகுபாடுகளில் ஆங்காங்குக் கிடைத்த பொருள்களையும் தங்கள் முயற்சியால் தட்பவெட்ப நிலைக்கேற்ப உற்பத்தி செய்த பொருள்களையும் கொண்டு தங்கள் உணவு வகைகளைத் தயாரித்துக்கொண்டார்கள் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. உணவுப் பொருள்களை அப்படியே பச்சையாக உண்ணாமல் நல்ல முறையில் பக்குவம் செய்து, சுவையேற்றி உண்டு மகிழ்ந்திருக்கிறார்கள்.

உணவு சமைத்த முறை

அடுப்புகளில் வைத்து உணவுகள் சமைக்கப்பட்டுள்ளன நெருப்பு மூட்டும் கோல் 'ஞெலிகோல்'[751] என அவர்களால் வழங்கப்பட்டது. அக் கோலால் கடைந்து தீயை உண்டாக்கி, அடுப்பு மூட்டி விறகு வைத்துச் சமைத்துள்ளார்கள்.[752] உணவுப் பொருள்கள் 'குழிசி'[753] என்னும் பானைகளில் இட்டு அடுப்பில் வைக்கப்பெற்றன எனவும் அறிகிறோம். அவ்வாறு வைப்பதை 'உலை' வைப்பது எனக் கூறுவது வழக்கம்.[754] உணவுகளைப் பல வகையாகச் சமைத்து உண்டிருக்கிறார்கள் என்பதற்குப் பல குறிப்புகள் காணப்படுகின்றன. உணவுகளைப் பல சுவைகளுடன் பல்வகையாகச் சமைப்பதை 'வீமபாகம்' என வழங்குகிறோம். சமையல் குறித்து பல்வகைக் குறிப்புகள் உள்ளன.[755]

விருந்தோம்பல்

சங்க இலக்கியங்களில் அரசர்களும் பொதுமக்களும் எவ்வாறு உணவு படைத்து விருந்தோம்பினார்கள் என்பது சிறப்பாக எடுத்துப் பேசப்படுகின்றது. கலைஞர்களுக்கு அவர்கள் உணவு தந்து விருந்தோம்பினார்கள். 'விருந்தோம்பல்' ஒரு சமுதாய அறப்பண்பாக அவர்களால் பேணப்பட்டு வந்தது. அப் பண்பை விளக்கும் பாடல்களிலிருந்து அக்கால உணவு வகைகளையும் சுவைகளையும் ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

குறிஞ்சிநில மக்களின் உணவுவகை

சோழநாட்டுக் குறிஞ்சிநில மக்கள் கிழங்கையும் தேனையும் மகிழ்ந்து உண்டார்கள். இவ்விரண்டு பொருள்களையும் பிறருக்கு விற்று அவற்றிற்குப் பதிலாக மீன் நெய்யையும் நறவையும் வாங்கிப்போய் உண்டுள்ளார்கள்.[756] சில சிறப்பான நாள்களில்

---

751 புறம். 315:4
752 ஷை 164:1-2
753 ஷை 168:9, 237:7
754 ஷை 172:1
755 சிறுபாண். 240-241
756 பொருநர். 214-215

நெய் மிகுதியாகப் பெய்த உணவு அவர்களால் உண்ணப் பட்டது.[757]

மலை அடிவாரத்தில் வாழ்ந்த சிற்றூர் மக்கள் தினைச்சோறு சமைத்து நெய்யில் இறைச்சியை வேகவைத்து இரண்டையும் சேர்த்து உண்டார்கள்.[758]

நன்னனுடைய மலைகளில் வாழ்ந்த மக்கள் கடமான் இறைச்சியையும் பெண்நாய் கடித்துக் கொண்டுவந்த உடும்பின் இறைச்சியையும் உண்டுள்ளார்கள். பலாக்கொட்டை, மா, புளிநீர், மோர் ஆகியவற்றைக்கொண்டு தயாரிக்கப்பட்ட குழம்பை மூங்கிலரிசியால் சமைக்கப்பட்ட சோற்றுடன் கலந்து உண்டார்கள்.[759] மலைநாட்டைக் காவல்புரிந்துவந்த வீரர்கள் இறைச்சியையும் கிழங்கையும் உண்டுவந்தனர்.[760] மலைவழிகளில் சென்ற கூத்தர்கள் தினைப்புனங் காவல் செய்த காவலர்களால் கொல்லப்பட்ட காட்டுப் பன்றிகளைப் பெற்று, அவற்றின் மயிரைப் போக்கிவிட்டு, அங்கே மூங்கில் உராய்வதால் பற்றி எரிந்துகொண்டு இருக்கும் நெருப்பில் அவற்றை வதக்கி அந்தப் பன்றிகளின் இறைச்சியை உண்டார்கள்.[761] எவ்வாறு பன்றி கொல்லப்பட்டது என்பதும். அது எவ்வாறு இறைச்சியை வதக்குமுன் மயிர் நீக்கப் பட்டுப் பக்குவப்படுத்தப்பட்டது என்பதும் இச் செய்தியால் நாம் தெரிந்துகொள்கிறோம்.

முல்லைநில மக்களின் உணவுவகை

முல்லை நிலத்தில் மாடுகள் வளர்ந்தன. எனவே, அங்குப் பாலுக்குப் பஞ்சமில்லை. பாலையும் தினை அரிசிச் சோற்றையும் தொண்டைநாட்டு முல்லைநில மக்கள் உண்டனர்.[762] முல்லை நிலப் பகுதிகளின் சிறு ஊர்களில் இருந்த மக்கள் வரகரிசிச் சோறும் அவரைப் பருப்பும் கலந்து செய்யப்பட்ட கூட்டாஞ் சோற்றை உண்டு மகிழ்ந்தார்கள்.[763]

நன்னன் நாட்டில் முல்லைப் பகுதியில் வாழ்ந்த மக்கள் புளிங்கூழ் செய்து உண்டார்கள். சிவப்பு நிறமுடைய அவரை விதைகளையும் மூங்கில் அரிசியையும் மேட்டு நிலங்களில் விளைந்த ஒருவகை நெல்லரிசியையும் கலந்து புளி கரைக்கப்பட்ட உலை

---

757 குறிஞ்சிப். 204
758 மலைபடு. 168-169
759 ஷ௸ 171-183
760 ஷ௸ 425-426
761 ஷ௸ 243-249
762 பெரும்பாண். 167-168
763 ஷ௸ 192-195

யிற் பெய்து புளிங்கூழாக்கினார்கள் என அறிகிறோம்.[764] பலவகைப் பொருள்களையும் கலந்து புளிப்புச் சேர்த்துவைத்த உணவு பல நாள்களுக்குக் கெடாது என்பது இன்றும் அறியப்பட்ட உண்மை. ஆகவே, இந்த உணவை நாள்தோறும் தயாரிக்காமல் சில நாள்களுக்கொருமுறை தயாரித்திருக்கவும் கூடும் என எண்ண இடமுள்ளது. வழிப்பயணம் போகின்றவர்கள் கட்டுச் சோறாகப் புளிச்சோறு எடுத்துச் செல்வதை இன்றும் ஊர்ப் புறங்களில் காண்கிறோம். எனவே, இவ்வகைச் சோறு, எடுத்துச் செல்லவும் பயன்பட்டு இருக்கலாம். பருப்பு, அரிசி, புளி ஆகிய மூன்றின் கூட்டுக்கலவை சிறந்த உணவு என்பதை இன்றைய அறிவியலும் வற்புறுத்தும். மேலும் பொன் துகள்கள் போன்ற சிறு அரிசியை இட்டு, வெள்ளாட்டு இறைச்சியையும் சேர்த்து ஆக்கிய சோற்றையும் தினைமாவையும் உண்டார்கள் எனவும் தெரிகிறது.[765] தினைமாவைப் பக்குவப்படுத்தியே உண்டிருத்தல் கூடும்.

முல்லைநிலப் பகுதியில் அவரை பயிரிடப்படும். அவற்றை உரிய காலத்தில் கொய்வது மரபு. 'அவரை கொய்யுநர்' என்றே இலக்கியம் பேசுகிறது.[766] இன்றும் ஊர்ப்புறங்களில் 'கதிர் கொய்தல்' என்னும் சொற்றொடர் வழங்குவதைக் காணலாம். அவ்வாறு அவரை கொய்பவர்களுக்கு ஆயர் மகளிர் உணவு சமைத்துக் கொடுத்தார்கள். வரகை நன்கு குற்றி அரிசியாக்கிச் சோறு வடித்தனர். தெரு ஓரங்களில் முளைத்துள்ள வேளைச் செடியிலுள்ள பூக்களைப் பறித்து வெள்ளிய தயிரின்கண் இட்டுச் செய்த புளிக்குழம்பையும் தயாரித்தனர். பிறகு, வரகு சோற்றையும் வேளைப்பூ மிதக்கும் தயிர்க்குழம்பையும் அவரை கொய்யுநர்க்கு வழங்கினர்.[767]

மருதநில மக்களின் உணவுவகை

ஒய்மானாட்டு மருதநில மக்கள் வெண்மையான நிறத்துடன் கூடிய வெண்சோற்றை நண்டும் பீர்க்கங்காயும் சேர்த்துச் செய்யப்பட்ட கலவைப் பொரியலுடன் உண்டார்கள்.[768] ஆகவே, நெல் மிகவும் வெண்மைநிறமுடைய அரிசி ஆகுமாறு உமி நீக்கப் பட்டிருக்க வேண்டும் என்றும், அந்த நெல் ஒருவகைச் சிறப்பு நெல்லாக இருந்திருக்கலாமென்றும் எண்ண இடமுள்ளது.

---

764 பெரும்பாண். 434-436
765 ஷை 470-475; சிறுபாண். 193-195
766 புறம். 215:5
767 ஷை 215:1-4
768 சிறுபாண். 193-195

தொண்டை நாட்டு மருதநிலத்துச் சிறுபிள்ளைகட்குப் பழைய சோறு தரப்பட்டது.[769] இக்காலத்திலும் பழைய சோறு உண்பது வலுவூட்டும் எனக் கிராம மக்களால் நம்பப்படுகிறது. அதுவும் காலையில் உண்ணப்பட்டால் உடலுக்கு வளமாகும் என ஊரிலுள்ள உழைப்பாளி மக்கள் இன்றும் எண்ணுகின்றனர். ஆனால், பழைய சோறு எப்பொழுது உண்டார்கள் என்பதற்குத் தெளிவான சான்றில்லை. மேலும், அங்கு அவல் இடித்து உண்டுள்ளார்கள் என்பதும் தெரியவருகிறது. 'அவல்' கெடாமல் நீண்ட காலம் இருக்கக்கூடியது. ஆகவே, சிறுவர்கள் பசிக்கும்போது உடன் உண்ணப் பக்குவமாகத் தயாரிக்கப்பட்ட உணவாக அவலைக் கருதுவது தவறாகாது. இன்றும் கிராம வீடுகளில் அவல் சிறுவர்கட்குக் கொடுக்கப்படுவதைப் பார்க்கலாம். அவலை நீரில் சிறிது நேரம் ஊறவைத்து வெல்லப் பொடியுடன் கலந்து கொடுப்பதை இன்றும் காணலாம். அங்கு வாழ்ந்த மக்கள் நெல்லரிசிச் சோற்றைப் பெட்டைக் கோழிப் பொரியலோடு உண்டார்கள். வெறும் சோற்றுடன் பொரியல் கலக்கப்பட்டுச் சுவையாக உண்ணுவார்கள் போலும்.[770] இன்றும் இவ்வாறு உண்பவர்களைக் காணலாம்.

வளம் நிறைந்த பகுதிகொண்ட நிலத்திற்கு மென்புலம் என்றும், நீர்வளம் இன்றி வானத்தைப் பார்த்து நிற்கும் பகுதிக்கு வன்புலம் என்றும் அக்கால மக்கள் பெயரிட்டார்கள்.[771] வன்புலத்தில் வாழும் மக்கள் மென்புலத்திற்குச் செல்வதுண்டு. அப்பொழுது மென்புலத்தார் அவர்களை விருந்தினராக ஏற்று, உணவளிப்பார்கள். அவ்வாறு அளிக்கும்போது அவர்களுக்கு அந்த இடத்தில் கிடைத்த உணவையே அளிப்பார்கள். விளைந்த நெல்லை அறுக்கும்போது வயல்களிலுள்ள கடைமடைகளிலிருந்த வாளைமீன்களை நெல்லறுக்கும் மக்கள் பிடித்து வருவார்கள். பிறகு, அந்த வயல்களை உழும்போது உழுபடையால்—கொழுவால்—மேலேகொண்டுவரப்பட்ட ஆமைகளை எடுத்து வருவார்கள். கரும்புக் காடுகளில் தேனிறால்கள் நிறையத் தொங்கும் என்பதை இன்றைய நிலையிலும் காணலாம். கரும்புகளை வெட்டுபவர்கள் அந்தத் தேனிறால்களை அழித்துத் தேன் எடுத்து வருவார்கள். அப்பொழுது பெரிய நீர்த் துறைகளிலிருந்து பெண்கள் நீரை முகந்து வரும்போது அங்கிருந்த செங்கழுநீர்ப் பூவையும் பறித்து வருவார்கள். விருந்தினர்களுக்குத் தங்கள் பகுதியில் கிடைத்த செங்கழுநீர்ப் பூவையும் வரவேற்கு

---

769 பெரும்பாண். 223-226
770 ஷெ. 254-256
771 புறம். 42:17-18

முகமாகத் தந்துள்ளார்கள்.[772] விருந்தினர்க்குப் பூக்கொடுக்கும் பழக்கம் இன்று தோன்றியதன்று. இந்த உயரிய பண்பட்ட நாகரிகம் பழந்தமிழகத்திலிருந்தது எனின் மக்கள் பண்பாட்டைப் போற்றாமலிருக்க முடியுமா?

பொய்கையில் கொழுமையாக வளர்ந்த வாளைமீன்களைத் துண்டித்துத் தசைகளைப் புதிய நெல்லிலிருந்து எடுக்கப்பட்ட வெண்மை நிற அரிசியுடன் சமைத்துக் கழனியில் பணிபுரியும் உழவர்கள் உண்டார்கள். வயிற்றின் மேற்பகுதியில் உள்ள விலா எலும்புகள் புடைக்குமாறு உண்டதால் அவர்கள் நெற்கட்டுகளைத் தூக்கிக்கொண்டு தள்ளாடித்தள்ளாடி நடந்து சென்றனர்.[773] அப்பொழுது அவர்களுடைய மக்கள்—சிறுவர்கள்—தென்னை தரும் பெரிய பழத்தை—அலுத்துப் போனதால்—வேண்டா என விலக்கிவிட்டு அங்கிருந்த வைக்கோற் போர்மீது ஏறிப் பனம்பழத்தைப் பறிக்க முயன்றார்களாம். எனவே சிறுவர்கள் தேங்காய், பனம்பழம் ஆகியவற்றை விரும்பி உண்டார்கள் எனத் தெரிகிறது.[774]

ஆமை இறைச்சியைத் தின்று கள் குடிப்பது உண்டு. பிறகு தம் கடைவாயில் ஆரல்மீன் சூட்டை அடக்கிக் கொள்வதுண்டு. சிறுவர்கள் மிட்டாயை வாயில்போட்டு அடக்கிக்கொள்வது போலவும், சிலர் புகையிலையை வாயில்போட்டு அடக்கிக் கொண்டு அவ்வப்போது அசைபோடுவது போலவும் அந்தக் காலத்தில் ஆரல்மீன் அடக்கிக்கொள்வது பின்பற்றப்பட்டது போலும்.[775]

உழவர்கள் தம் வயலில் உழுதலை நிறுத்திவிட்டுக் காலையில் உணவு உண்பது வழக்கம். அங்கு வீடுகள் தூரத்திலிருப்பதால் சுடுசோறு கிடைக்காது. ஆகவே, அங்குப் பழஞ்சோற்றையே எளிமையாய்க் கொண்டுவருவார்கள். அப்பொழுது குறுமுயல்களின் சூட்டிறைச்சியை வாளை மீன்களைக் கொண்டு செய்த அவியலைத் துணையாகக் கொண்டு பழஞ்சோற்றுடன் உண்பார்கள். 'உவியல்' அவியலைக் குறிக்கும் எனக் கொள்ளலாம்.[776]

கொக்கின் நகம் போன்ற அரிசியாலான சோற்றைப் பசிய துண்டுகளாலான பொரிக்கறியுடனும் சூட்டிறைச்சியுடனும் வறுமைக் காலத்தும் பிட்டூர்கிழார் மகன் பெருஞ்சாத்தன் வழங்கினான் என அறிகிறோம்.[777]

772 புறம். 42:15-16
773 ஷை 61:5-7
774 ஷை 61:9-11
775 ஷை 212:4
776 ஷை 395 4
777 ஷை 395.3, 398:3

பூணிட்ட உலக்கையால் குற்றப்பட்ட அரிசிகொண்டு ஆக்கிய சோற்றைக் காடிநீர் பெய்த கலத்தில் வைத்தார்கள். மாங்காயால் புளிக்குழம்பு வைக்கப்பட்டது. வராலிறைச்சி, சுறாமீனிறைச்சி, வள்ளைக்கீரை, பாகற்காய் ஆகியவற்றைக் கலந்து அவிழ்ப்புழுக்கல் செய்யப்பட்டது. அவ்வாறு பழஞ்சோறாக வைக்கப்பட்ட கலத்திலுள்ள சோற்றைப் புளிக்குழம்புடனும் அவிப்புழுக்கலுடனும் மருதநிலத்தில் உழவு செய்துகொண்டிருக்கும் உழவர்கள் உண்டார்கள்.[778] அந்த உணவைச் சமைத்துத் தந்தவள் 'அடுமகள்' எனப்பட்டாள்.[779] மேலும், பாகற்காயால் புளிங்கூழ் தயாரிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.[780]

கரிய கண்ணைக் கொண்ட கருணைக்கிழங்கைப் பொரித்து அத்துடன் செந்நெல்லரிசியாலாக்கிய வெண்சோற்றையும் சேர்த்துத் தெய்வத்துக்குப் பலியிடும் பொருளைக் காக்கைகள் தம் சுற்றத்துடன் கூடி உண்ணுவதற்கு வீட்டின்கண் அமர்ந்திருக்கும் என்ற செய்தி[781] உணவு வகைகளைக் காட்டுவதோடு, அவை தெய்வத்திற்கும் படைக்கப்பட்டனவோ என எண்ணுமாறு உள்ளது.

மருதமர நிழலில் ஓய்வுக்காகத் தங்கியிருந்த உழவர்களுக்கு அங்கேயே உணவு தரப்பட்டது. கொள்ளும் பயறும் பாலோடு சேர்த்துச் சமைத்துக் கூழாக்கி உழவருக்குத் தந்தனர். பருக்கைகளையுடைய கூழோடு கலந்து பருகுவதுபோன்று பக்குவப்படுத்தி உழவர்கட்குப் பருக உணவு தந்தனர் என அகம் கூறுகிறது.[782] அந்த மிதவைக் கூழைப் பனைஓலைக்குடையில் வைத்துக் குடித்தனர்போலும்; அதனால் போதும் என்பதனை வாய் திறந்து கூறாமல் கையினாலேயே போதும் எனத் தடுத்திருக்கிறார்கள்போலும்!

நெய்தல்நில மக்களின் உணவு வகை

ஓய்மானாட்டு நெய்தல்நில மக்கள், பெண்கள் அளித்த கள்ளையும் உலர்ந்த குழல் மீனின் சூட்டிறைச்சியையும் உண்டார்கள்.[783] தொண்டை நாட்டு மக்கள் நெல்லையிடித்து மாவாக்கிப் பன்றிக்கு இட்டுக் கொழுக்க வைத்து நன்கு கொழுத்த

---

778 புறம். 399:9
779 ஷை 399:1
780 ஷை 399:16
781 நற். 367:1-4
782 அகம். 37:11-14
783 சிறுபாண். 156-163

பின், அப்பன்றியைக் கொன்று அதன் இறைச்சியைச் சமைத்து உண்டார்கள் என அறிகிறோம்.[784]

மீனவர்கள் கடல் இறால்மீன், வயலில் கிடைத்த ஆமை ஆகிய இரண்டையும் பக்குவம் செய்து உண்டு வாழ்ந்தார்கள்.[785] கள்ளுக் கடைகளில் மீன் இறைச்சியும் விலங்குகளின் இறைச்சியும் பொரிக்கப்பட்டு விற்கப்பட்டன.[786]

சிறப்பான உணவு வகை

தொண்டைநாட்டில் மாதுளங்காய் ஒருவகையாகப் பக்குவப் படுத்தப்பட்டது. மிளகின் பொடியைக் கறிவேப்பிலையுடன் கலந்து பசுநெய்யில் வேகவைத்த கொம்மட்டி மாதுளங்காயை யும் மாவடு ஊறுகாயையும் துணைக்கு வைத்துக்கொண்டு பாற் சோறு, பருப்புச்சோறு ஆகியவற்றைத் தொண்டைநாட்டு மக்கள் சுவைத்து உண்டார்கள்.[787]

பாலைநில மக்களின் உணவு வகை

ஓய்மானாட்டுப் பாலைநில மக்கள் இனிமையுடைய புளியங் கறி கலந்த சோற்றையும் ஆமாவின் சூட்டிறைச்சியையும் உண் டார்கள்.[788] தொண்டைநாட்டுப் பாலைநில மக்கள் புல்லரிசி யைச் சேகரித்துத் திரட்டி நிலத்திலே உரல் செய்து அதிலிட்டுக் குற்றி அரிசியாக்கிப் புல்லரிசிச் சோறு சமைத்து உப்புக் கண்டத் தோடு உண்டனர். அவர்கள் விருந்தினர்களுக்கும் உணவு தந்தனர். விருந்தினர்க்கு உணவைத் தேக்கிலையில் படைத் தார்கள்.[789] இப்பொழுதும் தேக்கிலையில் உணவு படைக்கும் பழக்கம் இருந்து வருவதைக் காணலாம்.

மேட்டுநிலத்தில் ஒருவகை நெல் விளைந்தது. அந்த நெல் பார்ப்பதற்கு ஈச்சங்கொட்டை போன்றிருக்குமாம். அந்த நெல்லிலிருந்து அரிசி செய்து, சோறு ஆக்கி அதனுடன் உடும்பின் பொரியலையும் சேர்த்துக்கொண்டு பாலைநில மக்கள் உண்பது துண்டு.[790]

அரசர் உணவு

புலால் நாற்றம் வீசும் பசுமையான துண்டங்களைச் சுடுவதற்குப் பூநாற்றம் வீசும் விறகுகளால் புகையுண்டாக்கி

---

784 பெரும்பாண். *339-345*
785 பட்டினப். *63-64*
786 ஷெ *176-178*
787 பெரும்பாண். *304-310*
788 சிறுபாண். *175-177*
789 பெரும்பாண். *104*
790 ஷெ *130-133*

அவ்வாறு வெந்த ஊனையும், துவையையும், கறியையும், சோற்றையும் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனின் கைகள் உண்டன எனக் குறிப்பிடப்படுவதிலிருந்து இவ்வகை உணவை அரசர்கள் உண்டனர் என அறியலாம்.[791]

மலராத முகைகளைக் கொண்ட பூக்களால் இடையிடையே பசுமையான இலைகளை வைத்துப் பூப்பந்து கட்டுவது வழக்கம். வெண்மையான பூக்களும் பசுமையான இலைகளும் கொண்ட பூப்பந்தினைப்போல ஊனினையும் சோற்றினையும் கலந்து உருண்டை உருண்டையாகக் கவளங்கள் பிடிக்கப்பட்டுச் சோற்று அமலைகள் தயாரிக்கப்பட்டன. அவற்றை அரசர் அளிக்கப் பாணர் கூட்டம் மகிழ்ந்துண்டது.[792]

இந்த அமலைச் சோறு வேறு வகையாகவும் அமைவதுண்டு. புன்செய் நிலங்களில் வரகு கிடைக்கும். அது புறாவின் கருப் போன்று தோன்றும். அந்த வரகிலிருந்து அரிசி உண்டாக்கி, அதைப் பாலில் வேகவைத்துச் சமைப்பார்கள். அந்தப் பாற் சோற்றைத் தேனோடு கலந்து உண்பார்கள். மேலும், அச்சோறு சிறிய முயலின் கொழுத்த இறைச்சியுடன் கலந்து அமலைகளாக வைக்கப்படும். கொழுப்பும் சோறுமாகக் கலந்திருந்ததால் 'அமலைக் கொழுஞ்சோறு' எனப் புலவர் குறித்தனர் போலும்.[793] சோற்று அமலைகள் இவ்வாறு தயாரிக்கப்பட்டன எனலாம்.

பாணர் உணவு உண்ட முறை

அவ்வாறான அமலைக் கொழுஞ்சோற்றைப் பாணர்கள் மிக மகிழ்ந்து உண்டார்கள். அவர்கள் நெஞ்சங்கள் மிக நேர்மையானவை. உள்ளொன்று புறமொன்றாகிய கரத்தல் இல்லை. ஆகவே, ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியுடன் இன்பமான விருப்பமுடைய சொற்களில் பேசிக்கொண்டு நன்கு நிறைய உண்டார்கள் எனத் தெரிகிறது.[794] இத்தகைய உணவு உண்ணும் முறையை மேலைநாட்டார் நாகரிகமானதாகவும் அறிவியல் முறைச் சிறப்புடையதாகவும் போற்றுவதை நாம் அறிவோம். இந்த நோக்கில் பாணர் உணவு உண்ட முறையைக் காண்போமானால் அவர்களுடைய நாகரிகப் பண்பு எவ்வளவு உயர்ந்தது என்பது விளங்கும்.[795]

---

791 புறம். *14:12-14*
792 ஷை. *33:13-14*
793 ஷை. *34:14*
794 புறம். *34:13-14*
795 மீனாட்சிசுந்தரம், டாக்டர் க. 'பன்மையில் ஒருமை', பாணர் கீழ்நிலையில் இருந்தனரா?

குழந்தை உணவு

குழந்தைகள் வளரத் தொடக்கநிலையில் பால் மட்டுமே தரப்படும். நீர்மப்பொருள்களே அவர்களால் செரிக்கப்படும். ஆனால், தக்க பருவம் வந்தபின் பாலைவிட்டு அல்லது பாலுடன் உணவாகக் கட்டிப்பொருளைக் கலந்து கொடுப்பது வழக்கம். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் இளமை வாழ்வுபற்றிக் கூறும்போது அவன் பாலைவிட்டு அன்றுதான் மென்று தின்னும் உணவைக் (அயினி) கொண்டான் என இளமை வீரம்பற்றி எடுத்துக் காட்டப்படுகிறது.[796]

பகுத்துண்ணல்

விழாக் காலங்களில் உணவு பலர்க்கும் பங்கிட்டுத் தரப்படும் எனத் தெரிகிறது.[797] ஆனால், பொகுட்டெழினியின் ஊர் விழாக் காலமல்லாத காலத்தும் செம்மறியாட்டு உணவு எல்லோருக்கும் மகிழ்ந்துண்ணத் தரப்பட்டது என அறிகிறோம்.[798]

பறம்பு நாட்டு மக்களின் உணவு

பாரியின் பறம்பு நாட்டில் நெல்லும். பலாச்சுளையும், வள்ளிக் கிழங்கும், தேனும் எளிமையான உணவுப்பொருள்களாயின.[799] மேலும், ஆட்டுக்கிடாய் ஊனும், சோறும், கொழுமையான துவையும் அங்கு உணவாகக் கலந்து உண்டனர்.[800] தெறுக்கொடியின் பூவையும் புற்றுகளில் கிடைக்கும் ஈயலையும் இனிய மோருடன் கூட்டிப் புளிங்கறி சமைக்கப் பட்டது. புதிய தினைச்சோற்றுடன் இப் புளிங்கறி சுவைத்து உண்ணப்பட்டது.[801] பாரியின் பறம்பு நாட்டில் தினையும் வரகும் சிறந்து வளர்ந்து கொழுத்துக் கிடைத்தன. நல்ல முறையில் உழுது விதைத்துப் பக்குவம் செய்ததால் அடியிலும் தலையிலும் இடமின்றிக் காய்த்தன என்கிறார் புலவர்.[802] எனவே, புதிய வரகு, தினைச்சோற்றுடன் எள்ளிளங்காய், அவரை, வெள்ளரிக்காய் ஆகியவற்றையும் நெய்யிலே பொரிக்கப்பட்ட கடலையையும் பறம்பு நாட்டினர் உண்டார்கள்.[803]

வறியவரின் உணவு

வெறும் மான்நிணத்தைச் சமைத்துக் கள்ளுடன் சேர்த்து உணவாகக் கொள்வதும் உண்டு.[804] சில நேரங்களில் சிலருக்கு

796 புறம். *77:7-8*
797 ஷை *96:6*
798 ஷை *96:6-7*
799 ஷை *109:4-8*
800 ஷை *113:1-2*
801 ஷை *119:3-4*
802 ஷை *120:8*
803 ஷை *120:9-14*
804 ஷை *152:26*

வளமான உணவு கிடைக்காமல் போவதுமுண்டு வெறும் குப்பையில் விளைந்துள்ள கீரைகளைப் பறித்து—அதுவும் முற்றா நிலையில் இருக்கின்றவற்றைப் பறித்து—அவற்றை வெறும் நீரைக் கொதிக்க வைத்து இட்டுச் சமைத்து உப்பும் மோரும் இல்லாமல் அந்த வெந்த கீரையைச் சோறாக எண்ணி உண்பவரும் உண்டு.[805]

அரசர் அளித்த விருந்து

குமணன் ஒரு வள்ளல்; ஒரு குறுநில மன்னன். அவன் புலவர்க்கு அளித்த விருந்து மிக அழகாகக் கூறப்பட்டுள்ளது. அதிலிருந்து விருந்தில் தரப்பட்ட உணவு வகைகள், விருந்து தந்த பாத்திரங்கள் ஆகியவற்றைப்பற்றி நாம் நன்கு அறிகிறோம். விருந்தாக வந்தவன் பசியால் தின்னப்பட்டவன். அவனுடைய வரிக்குடலில் உணவு சில நாள்களாகப் புகவில்லை. அப்பேர்ப் பட்ட குடர் தண் எனக் குளிரும்படி—நிறையும்படி—உணவு சுவையாகவும் நிரம்பவும் தரப்பட்டது. நன்கு ஓசை கிளம்புமாறு தாளிதம் செய்யப்பட்ட கொழுமை நிறைந்த நெய்யுடைய உணவு அவனுக்குக் கொடுக்கப்பட்டது. சிறுசிறு பொன்னாலான நல்ல கலங்களில் அந்த உணவு படைக்கப்பட்டது. அந்தக் கலங்கள் விண்மீன்களைப்போல மின்னினவாம். எனவே, நெய்ச்சோறு பொற்கலங்களில் குமணனால் வழங்கப்பட்டது என அறிகிறோம்.[806]

பிட்டங்கொற்றன் என்பவன் கொடுத்த விருந்து சந்தன விறகால் சமைக்கப்பட்டது எனக் குறிக்கப்படுகிறது. மலை சார்ந்த பகுதியில் மிளகும் சந்தனமும் மிகுதியாகக் கிடைப்பது இயற்கை.[807] மலைசார்ந்த பகுதிகளில் கேழல்களே தம்முணவைத் தேடும்பொழுது நிலத்தை உழுதுவிடுவதால் உழாமலேயே விதைக்கப்பட்ட தினைகள் இயற்கையாக வளர்ந்து சிறு தினைகளைந் தந்தன. அந்தச் சிறு தினைகளை நுரையுடன் கறக்கப்பட்ட தீம்பாலில் இட்டு மான் தசையையும் பெய்து பெரிய புலால் நாற்றம்வீசும் பானையிலிட்டு, அடுப்பில் ஏற்றிச் சந்தன விறகிட்டு நெருப்புமூட்டி நன்றாகச் சமைத்தார்கள். வளமான குலை ஈன்றுள்ள வாழையிலிருந்து அகன்ற இலைகளைக் கொண்டுவந்து அந்த உணவினை இட்டுப் பலர்க்கும் படைத்தார்கள் பிட்டங் கொற்றனின் மக்கள். எனவே, வாழையிலையில் சோறு படைக்கும் பழக்கம் பண்டைத் தமிழகத்திலிருந்தது[808] என்பது இதிலிருந்து

805 புறம். 1-59:9-12
806 ஷெ. 160:11-12
807 ஷெ. 168:2-11
808 ஷெ. 168:13

நன்கு தெரிகிறது. கண்ணகி கோவலனுக்கு மதுரைப் புறநகரில் வாழையிலையில் சோறுபடைத்தமை இதனை மேலும் உறுதி யாக்கும்.[809] இன்றுவரை தமிழகத்தில் இப் பழக்கம் இருந்து வரு வதை ஊர்களில் காணலாம். நகர்களிலும் விருந்துக் காலங்களில் வாழை இலையில் பரிமாறுவதைக் காணலாம்.

குறுகிய கால்களுடைய உடும்பின் நிணத்தைத் தயிரில் போட்டுப் பாணர்க்கு அக்கால மக்கள் தருவது உண்டு.[810] சிற்றூர் மன்னர்கள் விருந்தாக வருபவர்கட்கு நெய்பெய்து அரிசியில் சமைத்து துடுப்பின் உதவிகொண்டு களியாக்கி உண்பதற்குக் கொடுப்பர் எனத் தெரிகிறது.[811] ஒரு சமயம் இப்பொழுதுள்ள அல்வாப்போலவோ, நெய்ச்சோறு உருண்டையாக்கப்பட்டது போலவோ இருந்திருக்கலாம். 'களி' எனச் சொல்லப்படுவதால் அந்த வகையைக் கூர்ந்து கவனிக்க வேண்டியுள்ளது.

சோழநாட்டு மன்னன் பொருநர்க்குத் தந்த உணவு வகைகள் பொருநராற்றுப்படையில் காணப்படுகின்றன.[812] கொழுத்த செம்மறிக் கடாயின் இறைச்சித் துண்டங்கள் இரும்புக் கம்பியில் கோத்துச் சுடப்பட்டன. வேறு சில இறைச்சிகள் வேக வைக்கப் பட்டன. பல வடிவங்களில் செய்யப்பட்ட இனிப்புச் சுவையுடைய தின்பண்டங்கள் பரிமாறப்பட்டன. மெல்லிய அரிசிச் சோறு படைக்கப்பட்டது. பாலைக் காய்ச்சி அதில் சேர்த்த பொரிக்கறி கள் சேர்த்துக் கொடுக்கப்பட்டன. எனவே, மேலே கூறப்பட்ட உணவு வகைகள் மன்னனால் கலைஞனுக்குத் தரப்பட்டுள்ளன.

தொண்டைநாட்டு அரசனின் அரண்மனையில் சமையலில் வல்லவன் பல இறைச்சி வகைகளைத் தயாரித்தான். நெற்சோறு வடித்தான்; கண்டசருக்கரையுடன் அடிசிலை ஆக்கினான். இவ்வாறு ஆக்கப்பட்ட உணவுகள் பாணர்கட்குப் பெரிய வெள்ளிக்கலங்களிலும் பாணர் பிள்ளைகட்குச் சிறிய வெள்ளிக் கலங்களிலும் தரப்பட்டன.[813]

நன்னனின் அரண்மனையில் பெண்நாய் கடித்துக் கொண்டு வந்த தசைகளும் வெண்ணெல் அரிசிச் சோறும் கூத்தர்க்குக் கொடுத்தனர்.[814]

---

809 சிலப். *16:42*
810 புறம். *326:9-10*
811 ஷெ *328:9-11*
812 பொருநர். **103-116**
813 பெரும்பாண். **471-480**
814 மலைபடு. **563-566**

அறச்சோறு அளித்தல்

பசியுடன் வரும் சிறுவர்க்குச் சோறு வழங்கிய வள்ளல்கள் அக்காலத்தில் இருந்தார்கள். எறும்புகள் சாரைசாரையாக முட்டைகளை ஏந்திக்கொண்டு செல்வதுபோலச் சிறுவர்கள் வரிசைவரிசையாகச் சோற்றினைக் கையிலேந்திக் கொண்டு சென்றார்களாம்.[815] இதிலிருந்து சோற்றுக்கட்டிகள்—கவளங்கள் சிறுவர்கள் கையில் கொடுக்கப்பட்டன என ஊகிக்கலாமன்றோ?

செல்வர் உண்ட பழவகை

செல்வர்கள் பலவகைப் பழங்களை உண்ணுவது உண்டு. ஆதியென்ற செல்வன் புளிப்புடைய களாப்பழத்தையும் துடரிப் பழத்தையும் சேர்த்துத் தின்றான். ஆனால், அவை அலுப் பூட்டின. எனவே, நாவல் பழத்தை மரத்திலிருந்து பறித்துத் தின்றான். இவ்வாறான குறிப்பிலிருந்து[816] பழங்களை உண்ணும் வழக்கம் நன்கு வெளிப்படும்.

உணவுப் பொட்டலம்

எய்யப்பட்ட மானின் செவ்விய தசையுடன் சமைக்கப்பட்ட புதிய வெண்சோற்றை வருபவர்கட்கு எல்லாம் பனையோலை யால் செய்யப்பட்ட குடைபோன்ற பொட்டலங்களில் காரி ஆதி தந்துள்ளான்.[817] இக் குறிப்பிலிருந்து பலர் வரும்போது உணவு கள் எவ்வாறு பொட்டலங்களாக்கப்பட்டு எளிமையாகவும் பக்குவ மாகவும் தரப்பட்டுள்ளன என்பதை நன்கு அறியலாம். இங்கு உணவுகளை வாழையிலை வழியாகவும், பனங்குருத்து வழியாக வும், நல்ல கலங்களின் வழியாகவும், நேராகக் கைவழியாகவும் வழங்கினர் எனத் தொகுத்துக் காண்பது அக்கால வழங்கு முறையைத் திரட்டித் தெரிந்துகொள்வதாகலாம்.

தனி மனிதனுக்குரிய உணவின் அளவு

ஒருவன் எவ்வளவு உண்ணக்கூடும் என்பதற்குப் புறநானூற் றில் ஒரு குறிப்புக் கிடைக்கிறது.[818] ‘உண்பது நாழி’ என ஒரு நாழி அளவு உண்பது பொதுமரபு எனச் சொல்லப்படுகிறது. ‘நாழி’ என்பது இக்கால அளவில் இவ்வளவு எனத் தெளிவாகச் சொல்லுவதற்கும் ‘நாழியின்’ கொள்ளளவைத் திட்டவட்ட மாகத் தெரிந்துகொள்ளுவதற்கும் சான்றில்லை.

---

815 புறம். 173:7-9
816 ஷெ 177:8-11
817 ஷெ 177:14-16
818 ஷெ 189:5

முள்வேலிகள் தோட்டங்கட்கு இடுவது வழக்கம். அந்த வேலிகளில் உள்ள இலைகளையும், வேலிகளைக் கடந்து தோட்டத்தில் படர்ந்துள்ள இலைகளையும் ஆடுகள் தின்பதுண்டு. அங்கு முஞ்ஞை என்ற செடியின் தளிர்களை ஆடுகள் தின்று விட்டன. தின்னாதுவிட்ட பகுதிகளில் சிறிய முளைகள் கிளை விட்டன. அந்த கிளைக்கப்பட்ட சிறிய இலைகளைக் கிள்ளி, வன்மையான நிலத்தில் கிடைத்த வரகு சோற்றுடன் சமைத்துச் சீறூர் மன்னர்கள் விருந்தினர்க்கு உணவு படைத்தார்கள்.[819]

பனம்பழம், நுங்கு, கிழங்கு

படைவீரர்கள் வழியில் செல்லும்போது உண்டவை குறித்தும் நமக்குக் குறிப்புகள் கிடைக்கின்றன. பனை நுங்கிலுள்ள நீரைக் குடிப்பது வழக்கமாய் இருப்பினும் அந்த நீரைகொண்டு இருக்கும் செறிவையும் இனிமையாக உண்டார்கள்.[820] இவ்வாறு நுங்கையும், பனம்பழத்தையும் பொதுமக்கள் தின்பதை இன்றும் நாட்டுப்புறங்களில் காணலாம். படைவீரர்களுள் சிலர் பனங்கிழங்கினைச் சுட்டுத் தின்றுள்ளார்கள். இப்பொழுது பனங் கிழங்கு தின்போர் நகரங்களில் அருமையே. ஆயினும் அதைச் சுட்டு மிகச் சிலர் தின்பதைப் பார்க்கலாம். இப்பொழுது வறண்ட பகுதிகளிலுள்ள பனைநிறைந்த காடுகளில் வாழ்வோர் கிழங் கைத் தின்பதுண்டு.

சோற்றின் வகை

அதியமான் நெடுமானஞ்சி சிறுசோறாயினும் பெருஞ்சோறா யினும் மிகப் பல கலங்களோடுதாம் உண்பான் என்ற குறிப்புக் கிடைக்கிறது. எனவே, சோறு உண்ணும் வேளையை ஒட்டியோ சோற்றின் அளவை ஒட்டியோ சிறுசோறு, பெருஞ்சோறு, நாட் சோறு என்ற பாகுபாடுகள் இருந்திருக்க வேண்டும்.[821] நண்பகல் உணவு, இரவு உணவு, காலை உணவு ஆகியவற்றிற்கு ஆங்கிலத் தில் வெவ்வேறு பெயர்கள் இருப்பதுபோலத் தமிழகத்திலும் சிறு சோறு, பெருஞ்சோறு, நாட்சோறு என்ற பெயர்கள் காலத்தை யொட்டி அமைந்திருக்கலாம். அப்பொழுது உணவில் வேறுபாடா யினும், உணவு உண்ணும் கலன்களோ பரிமாறும் கலன்களோ எண்ணிக்கையில் குறையவில்லை என்பது கருத்துப்போலும்.[822] சிற்றுண்டி, உணவு என நாம் வழங்கும் பிரிவுகள்போல நாட்

---

819 புறம். 197:11-14
820 ஷை 225:1
821 ஷை 235:4-5, 261:3
822 ஷை 235:4-5

சோறு, சிறுசோறு, பெருஞ்சோறு[823] என்பன வழங்கியும் இருக்கலாம்.

பண்ணியம்

இறைச்சியும் சோறும் தொடர்ந்து உண்பதால் தெவிட்டி விடுவது உண்டு. அப்பொழுது அவற்றை விலக்கி மென்மையான உணவுகளைக் கொள்வார்கள். பாலில் இட்டுச் செய்யப்பட்டவையும் இனிப்புப்பாகில் இட்டுச் செய்யப்பட்டவையுமான பண்ணியங்களைக் கலந்து உண்டார்கள்.[824] பாகு என்பது இனிப்புக் குழம்பு என அறிகிறோம். இன்னும் இச் சொல் வழக்கில் உண்டு. அதேபோலப் பாலிற் பெய்தும் பாகிற் பெய்தும் பண்ணியங்கள் செய்யும் பழக்கம் இக்காலத்தும் உண்டு என்பது இணைத்துக் காணுதற்குரியது. இனிய சுவைகளுடைய பொருள்களை உண்ணத் தருவது அக்காலத்து உண்டு[825]

நெய்யால் வறுக்கப்பட்ட வறுவல்களைக் சூட்டுக்கோலால் கிழித்துச் சுடப்பட்ட ஊனை, தின்னும்போது நுணை உணவாகக் கொள்வதைப் பழங்காலத்தில் காணலாம். பெரிய பானையில் பால் காய்ச்சி வைத்திருப்பார்கள் அந்த உணவையும் பாலையும் சுடச்சுட உண்பதால் அவர்களுக்கு வியர்ப்பது உண்டு[826]

ஊனும் சோறும்

நல்ல அரிவாளால் பிளந்து அறுக்கப்பட்ட வெண்மையான கொழுப்பு நிறைந்த இறைச்சியும் ஆட்டு இறைச்சியும் பெய்து சமைக்கப்பட்ட வெண்ணெல்லின் வெண்மையான சோறு கிடைத்ததாகக் குமட்டூர்க் கண்ணனார் பாடுகிறார்.[827] ஊன் உணவா? சோறா? எனத் தெரியாதவாறு மயங்கிய உணவு சேர நாட்டில் கிடைத்தது[828] சோறு வேறு ஊன் வேறு எனப் பிரித்துக் காணாதபடி ஊன் குழையச் சமைத்த உணவும் அங்கு உண்டு[829] இரண்டும் அவ்வாறு குழையச் சமைக்கப்பட்டனபோலும்.

சமையலறை

செம்பு போன்ற பெரிய பானையும், பூண் தேய்ந்த உலக்கையும், ஊனை வெட்டுதலால் ஊனும் குருதியும் படிந்த சிவந்த மரக்கட்டையும் பார்த்தவர் மயங்குமாறு இருந்தன என்ற

---

823 நற். 60:5, 281:6
824 புறம். 381:1-2
825 ஷை 382:9
826 ஷை 386:6-7
827 பதிற். 1:14-17
828 ஷை 55:7-8
829 ஷை 45:13

குறிப்பு[830] அந்தக் காலச் சமையலறைச் சூழலை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. போர்வீரர்கள் மார்பில் பல முறை குத்தப்பட்டும் வெட்டப்பட்டும் பல தழும்புகள் இருப்பதுபோல மரக்கட்டையில் ஊனைப் பல முறை வெட்டியதால் தழும்புகள் ஏற்பட்டிருந்தன. 'எஃகா டூனம் கடுப்ப மெய்சிதைந்து' என்னும் பதிற்றுப்பத்து அடியைப்[831] பார்த்தால் மேலே காட்டிய விளக்கம் கிடைக்கிறது.

சிற்றுண்டி வகை

முறுக்கு, சிற்றுணவாக அக்காலத்தில் இருந்தது எனக் கருதலாம். வயலில் கிடந்த வயலைக்கொடிகளை விளக்குவதற்குத் தரப்படும் உவமையே அதனை நன்கு வெளிப்படுத்துகிறது. உழுந்து மாவாக்கப்பட்டுச் சிறிய நூல்போல இழுக்கப்பட்டு, நெய்யில் இட்டு மயக்கி முறுக்காகச் சமைக்கப்பட்டது என அறிகிறோம்[832]

உணவு வகையும் மிளகும்

பழந்தமிழர் மிளகினைப் பயன்படுத்தியுள்ளனர். உகா மரத்தின் காயைப்பற்றிக் குறிப்பிடும்போது மிளகினை இட்டு வைத்தாற்போன்ற சுவையுடையது என்னும் குறிப்பிலிருந்து நன்கு உணரலாம்.[833] உலக்கையால் மிளகு இடிக்கப்பட்டதாகப் பதிற்றுப்பத்தில்[834] கூறப்படுவதாலும் பல இடங்களிலும் 'கறி' என மிளகு குறிக்கப்படுவதாலும் அந்தக் கால மக்கள் மிளகை மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார்கள் எனக் கொள்வது பிழையாகாது.

உணவு—பால்

பசு, எருமை ஆகியவற்றிலிருந்து கிடைத்த பாலைப் பலவகையாகப் பக்குவப்படுத்தி உண்டுள்ளார்கள். 'பசு' என்னும் சொல் அந்தக் காலப் பயிற்சியில் இல்லையாயினும் 'ஆன்' என்னும் சொல் இருந்தது கவனித்தற்குரியது.[835] ஆக்களைப் பிடித்துப் போனால் போர் மூளும் என்பது அந்தக் கால எச்சரிக்கை. போருக்குமுன் ஆக்களை அகற்றிவிடுமாறு கூறுவதுண்டு. ஆக்களுக்குத் துன்பம் செய்ய யாரும் நினைப்பதில்லை; பதிலாக, அவற்றைக் காப்பாற்றி இருக்கிறார்கள். ஓரிடத்திலும்கூட ஆ இறைச்சி கொண்டதாகவோ உண்டதாகவோ குறிப்பு இல்லாமை கருதத்தக்கதாகும். ஆகவே, ஆக்களை மிகப் பயன்படும் விலங்

---

830 பதிற். *24:19-22*
831 ஷே *67:17*
832 ஐங்குறு. *211:1*
833 நற். *66:1*
834 பதிற். *41:21*
835 புறம். *152:27*

காகக் கருதிப் பண்டைத் தமிழர் போற்றியுள்ளனர் என்பது புலனாகின்றது. அவை பலவகைகளில் மக்களுக்குப் பயன்பட்டன

பால் சூடாக்கப்பெற்றுத் தனியாகவே உணவாக உண்ணப் பட்டது. குழந்தைகட்குப் பால் மிக முக்கியமான உணவாகத் தரப்பட்டது. 'பாலுமுண்ணாள்' என ஒரு தாய் வருந்துகிறாள். பால் குடித்துவந்த சிறுவன் இன்றுதான் மென்று தின்னத் தொடங்கியுள்ளான் என ஒரு அரசன் கூறப்படுகிறான்.

பாலைப் பெய்து பண்ணியங்கள் செய்யப்பட்டன. 'பாலிற் பெய்தவும்' எனப் புறநானூறு கூறுகிறது. பாலை உலையாக வைத்துப் பாற்சோறு சமைப்பதும் உண்டு.[836]

பாலைக் காய்ச்சித் தயிராக்குவது உண்டு. பாலைக் காய்ச்சி அது ஒரு பக்குவம் அடையும்போது அப் பாலுள்ள குடத்தில் உறை ஊற்றுவார்கள்[837] அந்த உறை மிகச் சிறிய அளவாக இருத்தல் வேண்டும். 'வள்ளுகிர்த் தெறித்த குடப்பால் சில்லுறை போல' என்ற உவமை[838] கவனித்தற்குரியது. ஒரு குடம் பாலைக் கைவிரலில் எடுத்துத் தெறித்த ஒரு துளிமோர் எவ்வாறு அந்தத் தன்மை முழுவதையும் மாற்றிவிடுகிறதோ அதுபோல இந்தச் சிறுவன் பெரும் படையையே தகர்த்து மாற்றித் தன்வயப்படுத்தி விடுவான் என்பது பாட்டு[839] எனவே, ஒரு துளி மோர் இடும் செயலுக்கு 'உறை' எனக் கலைச்சொல் வழங்கியுள்ளது இன்றும் 'உறையூற்றல்' என்னும் தொடர் வழங்குவதைக் காணலாம்.

உறை ஊற்றியதால் குடப்பால் தயிராக ஆகிவிடுகிறது. அந்தத் தயிரினை வைகறையில்—காலையில்—பானையில் எடுத்து மத்து இட்டுக் கயிற்றை இழுத்துக் கடைவார்கள்[840] அந்தப் பானைகள் விளாம்பழம் போல மணக்குமாம். மேலும், அந்த மத்துகள் இழுத்து இழுத்துத் தேய்ந்துள்ளனவாம்.[841] அவ்வாறு தயிரைக் கடைந்து மோரும்[842] வெண்ணெயும்[843] எடுத்தார்கள். அந்த வெண்ணெயை உருக்கி நெய் ஆக்கினார்கள். 'உருக்குறுநறு நெய்'[844], 'ஆனுருக்கன்ன'[845] என்னும் சொற்றொடர்கள் நெய் உருக்கப்பட்டதைத் தெளிவாகக் காட்டும். 'நறுநெய் உருக்கி நாட்சோறு ஈயா'[846] என்னும் வரி, நெய் உருக்கிய பின்பே நாட்

836 புறம். 168:8-10
837 ஷை 328:7
838 ஷை 276:4-5
839 ஷை 276:3-6
840 ஷை 257:12-13, நற். 12:2-4; பதிற். 71:16
841 நற். 12:1-2
842 புறம். 159:11
843 குறுந். 58:5
844 நற். 21:6
845 புறம். 152:27
846 ஷை 379:9

சோறு தரப்படும் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது இந்த நெய்யால் ஊனைப் பொரிப்பதுண்டு.[847] மேலும், நெய் சோற்றில் கலக்கப்பட்டு உண்ணப்படும். இறைச்சி, சோறு ஆகியவற்றுடன் நெய் கலக்கப்பட்டு உண்ணப்படும். கையில் நெய் வழிவதுண்டு. 'நெய்யுடைக் கையர்'[848] என்னும் தொடர் இதனை வலியுறுத்திக் காட்டும். தாளிதுங்கள் செய்வதற்கும்[849] காய்களைப் பொரிப்பதற்கும் நெய் மிகுதியாய்ப் பயன்பட்டது. கடலையை நெய்யில் வறுத்துள்ளார்கள்.[850] தயிரிலிருந்தும் மோரிலிருந்தும் தயிர்க் குழம்பும் மோர்க்குழம்பும் சுவையாகச் செய்யப்பட்டன. ஆகவே பால், தயிர், மோர், நெய் ஆகியவை பசுவிலிருந்தும் எருமையிலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்களாகும். அவற்றின் ஊட்டச்சத்துப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? உணவின் சுவை பற்றியும் சொல்ல வேண்டுவதில்லை.

திருமண விருந்து

திருமண நாளில் பெருஞ்சோறு வழங்கப்பட்டது.[851] உழுத்தம் பருப்புப் போட்டுச் சமைத்த கொழுப்பு நிறைந்த களியாகிய மிதவையோடு சோற்றமலையைத் திருமணத்தன்று உண்டார்கள்.[852] 'அமலை' என்பதனைச் சோற்றுத் திரள் எனக் கொள்ளலாம். உழுத்தம் பருப்புப் போட்டு வெண்பொங்கல் செய்வதுமுண்டு. அதன் மீதுள்ள கறுப்புப் பொட்டு நீக்கப்பட்டு அவை சிறிது பழுப்பு நிறமுடையதாக இருக்கும்.

கைம்பெண்டிர் உண்ட உணவு

கணவனை இழந்த மகளிர்க்குப் பொதுஉணவு தரப்படாமல் தனி உணவு தரப்பட்டது. நெய் சிறிதும் தரப்படவில்லை. அப்பொழுது அந்த நெய்யின் தன்மை விவரிக்கப்படுகிறது. அணில் போன்ற வரிகளைக்கொண்ட வெள்ளரிக்காயை அரிந்தால் விதை கிடைக்கும். அந்த விதைகளைப் போன்ற சோற்றை, நெய் இல்லாமல் கையால் பிழிந்து நீர் வார்த்து, திரளையாக்கி உயவல் பெண்டிர் உண்டனர். எள் அரைத்த சாந்தினையும் புளியிட்டு வேகவைத்த வேளையையும் அந்த நீர்ச் சோற்றுடன் உண்பதற்காகத் தந்தார்கள்.[853] ஆகவே, அந்தக் காலத்துச் 'சாந்து' என்பது இக்காலத்தில் 'துவையல்' (சட்னி)

---

847 புறம். 261:8,382:8
848 ஷை 296:2
849 ஷை 10:7
850 ஷை 120:14
851 அகம். 86:1-3
852 ஷை 86:1-2
853 புறம். 246:4-8

எனத் தெரியவருகிறது. மேலும், சோற்றினைக் கெடாமல் வைத்திருக்க நீர் ஊறறி வைப்பது வழக்கம் என்பதும், அது இப்பொழுதும் நடைபெற்று வருகிறது என்பதும் சுவையான செய்திகளாகும். இவ்வகை உணவு தந்தால் காம உணர்வு நீங்கும் என எண்ணினார்கள் போலும்.

அறச்சாலைகள்

பாண்டியன் தலைநகரமான மதுரையில் ஏழைகளுக்குச் சோறிடும் சோற்றுச் சாலைகள் இருந்தன. அங்குத் தங்கியிருந் தோர்க்குப் பலாச்சுளை, மாம்பழம், வாழைப்பழம், முந்திரிகைப் பழம் போன்ற பழவகைகளும், பாகற்காய், வாழைக்காய், வழு துணங்காய் போன்ற சமைத்த காய்களும், பலவகைக் கீரைக்கறி களும், இனிப்புப் பண்டங்களும், பக்குவப்படுத்தப்பட்ட இறைச்சி கலந்த சோறும், சமைக்கப்பட்ட கிழங்கு வகைகளும், பாற் சோறும், பாலும் கொடுக்கப்பட்டன.[854] எல்லாப் பொருள் களும் எல்லார்க்கும் கொடுக்கப்பட்டன எனக் கொள்ள வேண்டு வதில்லை. யார் யாருக்கு எவையெவை தேவையோ, அவ்வ வற்றை உட்கொண்டார்கள் எனக் கொள்வதுதான் பொருத்தம். எனவே, ஆதுலர் சாலைகளில் இக்கால வட்ட உணவு பரிமாறும் முறைபோல் தேவைக்கேற்ப எடுத்துக்கொள்ளும் நிலை இருந்தது போலும்.

பழந்தமிழகத்தில் பாண்டி நாட்டில் விழாக் காண வரு பவர்க்கு எல்லாம் சோறு படைக்கும் வழக்கம் இருந்தது என அறிகிறோம்.[855]

சிற்றுண்டி விற்றல்

சிற்றுண்டிகளை விற்கும் பழக்கம் அக்காலத்தில் உண்டு. சிறு சிறு கடைகளாகவோ, பெரியனவாகவோ இருந்திருக்கலாம். தேனிறாலை ஒத்த வரிகளையுடைய அடைகள், வெல்லப் பாகில் தேங்காயையும் பருப்பையும் இட்டுச் சமைத்துப் பிடித்த மோதகம் (கொழுக்கட்டை), இனிய பாகோடு சேர்த்துக் கரைத்த மாவினிலாக்கப்பட்ட அப்பம் ஆகிய பொருள்களை வணிகர் விற் றனர் என அறிகிறோம்.[856] கரிய சட்டியில் பாகுடனே தேவை யானவற்றைச் சேர்த்து நூல்போல் அமைத்த வட்டம் ஒருவகைச் சிற்றுண்டியாக இருந்தது.[857]

---

854 மதுரைக். 527-535
855 ஷை. 421-28
856 ஷை 624-627
857 பெரும்பாண். 377-378

உணவின் பலவகையான பெயர்கள் காணப்படுவதிலிருந்து பல்சுவைப்பட்ட பல உணவுகள் அந்தக் காலத்தில் தயாரிக்கப் பட்டன என முடிவுக்கு வரலாம். குய்யுடை அடிசில்,[858] நெய் யுடை அடிசில்,[859] பாற்சோறு,[860] ஊன்துவை அடிசில்,[861] வல்சி,[862] சோறு,[863] புழுக்கு,[864] புற்கை,[865] அவிழ்,[866] அமுதம்,[867] கூழ்,[868] அயினி,[869] வெண்சோறு[870] எனப் பலவகைப் பெயர்கள் காணப் படுகின்றன. மேலும், இவற்றைப் பக்குவப்படுத்துவதற்குத் துணையான கருவிகள் கூறப்பட்டுள்ளன. அவற்றை எவ்வாறு செய்தார்கள் என்பதனையும் உணரலாம். சோறு, அடுமகள் என்பனவற்றிலிருந்து சோறு சமைத்தலை 'அடுதல்' என்றும், 'சமை' என்பதை 'அடு' என்றும் கூறியிருப்பார்கள் என நினைக்க லாம். அடுமிடத்திற்கு 'அடுப்பு' என்ற பெயர் உண்டு.[871] 'புழுக்கு ஏற்று', 'ஏற்றுக உலையே' என்பனவற்றிலிருந்து 'ஏற்று' என்பதன் பொருள் விளங்கும். பானை, மிடா, குழிசி என்பன சோறு சமைக்கும் பாத்திரங்களாக இருந்தன.

உலக்கையால் அவல் இடித்தல், மிளகு இடித்தல் ஆகியவை நடைபெற்றுள்ளன.[872] உப்பைக் 'கடல்விளை அமுதம்' எனப் போற்றியுள்ளார்கள். உணவையும் 'அமுதம்' எனக் குறிக்கிறார் கள்.[873] சுளகிலும்[874] மான்தோலிலும்[875] பொருள்களை உலர வைத்துள்ளார்கள். அவற்றை முன்றிலில் உணக்குவது உண்டாம்.[876]

உணவுப் பாத்திரங்களாகப் பொற்புனைகலம்,[877] வெள்ளி வெண்கலம்,[878] மணிக்கலன்[879] ஆகியவை இருந்துள்ளன.

---

858 புறம். 127:7
859 ௸ 160:7
860 ௸ 168:8-11
861 ௸ 390:17
862 பதிற். 75:12
863 புறம். 160:20
864 ௸ 152:26
865 ௸ 84:1
866 பெரும்பாண் 193
867 நற். 65-1; புறம். 392:20; குறுந். 201:1
868 புறம். 160:20
869 புறம். 77:8
870 நற். 367:3; புறம். 61:5
871 புறம். 372:5
872 பதிற். 41:21; புறம். 399:2 ; குறுந். 238:1
873 குறுந். 201:1
874 புறம். 321:3
875 ௸ 320:10
876 குறுந். 46:3
877 ௸ 356:6
878 புறம். 390:18
879 ௸ 397:14

மாம்பழம்,[880] பலாப்பழம்,[881] விளாம்பழம்,[882] வாழைப் பழம்,[883] நாவற்பழம்[884] முதலிய பழங்களை உண்டிருந்தார்கள்.

என்ன காரணம் கொண்டும் விதைப்பதற்காக வைத்துள்ள விதைகளை உண்பதில்லை. வித்துண்ணாமை அவர்கள் எண்ண மாகும்.[885] எனவே, விதைப்பொருள்களுக்குத் தனிச் சிறப்புக் கொடுத்து அவற்றை உண்ணாமல் பக்குவமாய் வைத்திருந்தார் கள் எனக் கருதலாம்.

உண்பதில் மகிழ்ச்சியடைந்தார்கள். விலாப்புடைக்க உண் டதை முன்னர்க் கண்டோம். இனிமையாகப் பேசிக்கொண்டு உண்பதும் உண்டு. விழாக் காலங்களில் சிறப்பான உணவுகளை உண்டார்கள். சோற்றுடன் பண்ணியங்களும் அவர்களுக்குக் கிடைத்தன; ஒரு நாழி அளவு பொதுவாய் உண்பது வழக்கம் போலும்.

சுவை நீர் வகை

பிழிவு

பழங்காலத் தமிழர்கள் பலவகை உணவுகளை உண்ட தோடல்லாமல் பலவகையான பருகுபொருள்களையும் குடித் துள்ளனர். பலவகைச் சாறுகள் அவர்களால் தயாரிக்கப்பட்டுப் பருகப்பட்டுள்ளன. இயற்கையில் கிடைத்த நீர்ப்பொருள் களுடன், செயற்கையாகவும் நீர்ப்பொருள்களைத் தயாரித்துச் சுவையாகப் பருகியுள்ளனர் என அறிகிறோம். கருவிகளால் சாறுபிழிந்து எடுத்திருக்கிறார்கள். 'தீம்பிழி எந்திரம்'[886] என்னும் சொற்றொடர் அதனை வற்புறுத்தும். 'தீம்பிழி' என்னும்[887] தொகைச்சொல் இனிய பொருள்கள் பிழிந்து எடுக்கப்பட்டன என்பதைச் சுட்டிக்காட்டும்.

கள்

'கள்' என்பது இக்காலத்தில் குறிக்கப்படும் போதையூட்டும் 'கள்' என்பதையே குறிக்கும் எனச் சொல்வதற்கில்லை. 'களிப்பு'த் தரும் பருகுபொருள்கள் எல்லாவற்றையும் 'கள்' எனச் சொல்லும் பழக்கம் இருந்திருக்கிறது என ஆய்பவர்கள்

---

880 புறம். 399:4
881 ஷை 109:5, 236:1
882 நற். 12:1
883 புறம். 168:13
884 ஷை 177:11
885 ஷை 230:13
886 பதிற். 19:23
887 ஷை 81:21

அறியக்கூடும். 'கள்' என்பதற்குத் 'தேன்' என்னும் பொருளும் உண்டு. பனைமரத்திலிருந்தும் தென்னை மரத்திலிருந்தும் 'தெளிவு' இறக்கப்படுவதுபோல, அந்தக் காலத்திலும் 'தெளிவு' இறக்கப்பட்டது. இனிப்பாகச் சுவையும் மகிழ்வும் ஊட்டும் பொருள்கள் எல்லாம் 'கள்' எனப்பட்டன.

சுவைநீர்

ஊர்களில் நீர்ப்பொருளாகப் பருகுவதற்குப் பல சுவைநீர்கள் தரப்பட்டன. பெரிய பனைமரத்திலிருந்து நுங்கு எடுத்து அதன் நீரினையும், அழகிய வளர்ந்த கரும்புகளிலிருந்து பிழிந்த கருப்பஞ் சாற்றையும், நல்ல மணற்பாங்கான நிலத்தில் திரண்டு வளர்ந்த தென்னை மரங்களிலிருந்து கிடைத்த இளநீரினையும் கடலோரப்பகுதியிலுள்ள மருதநில மக்கள் பருகி மகிழ்ந்தார்கள்.[888] இக்காலத்திலும் கிராமப்புறங்களில் நுங்கு, கரும்பு, இளநீர் ஆகியவை மிகுந்திருப்பதையும் அவை பருகவும் தின்னவும் பயன்படுவதையும் காணலாம். இவை யாவும் நல்ல ஊட்டச் சத்துடையன என்பதும் பல நோய்களுக்கு மருந்து போன்று அமைவன என்பதும் கருதத்தக்கன. நீர்த்தடுப்பு, நீர்க்கடுப்பு ஆகியவற்றிற்கு இளநீர் நல்ல மருந்தாகும் என இன்றைய மருத்துவர்களால் போற்றப்படுவது எல்லாரும் அறிந்ததே.

நெல் விளைந்துள்ள கழனிகளில் நெல்லைப் பறவைகள் சேதம் விளைவிக்காமல் இருக்க அவற்றை ஓட்டினார்கள். அவர்கள் அங்குக் கிடைக்கும் மீன்களைப் பனங்கருக்கு விறகால் சுட்டு, வெம்மையான கள்ளைக் குடிக்கும்போது கடித்துத் தின்றார்கள். அவ்வாறு குடித்தும் தின்றும் வயிறு நிறையாததால் அருகிலுள்ள தென்னை மரங்களிலிருந்து இளநீர் உதிர்த்து இளநீரைப் பருகி இளங்காயைத் தின்றார்கள்.[889]

குடிவகை

ஏழைகளும் செல்வர்களும் அந்தக் காலத்தில் குடிப்பழக்கம் உடையவர்களாய் இருந்தார்கள். குடிவகைகள் பல இருந்தன. பூந்தேனைக் கொண்டு ஒருவகைக் குடிவகை தயாரிக்கப்பட்டுள்ளது. ஒரு சமயம் இது இக்காலத்தில் பருகும் சுவைநீர் போன்றதாய் இருக்கலாம். இதிலும் பலவகைச் சுவைநீர்கள் இருந்திருக்கலாம்.

---

888 புறம். *24:12-15*

889 ஷே. *29:14-16*

தென்னங்கள், பனங்கள், அரிசிக்கள் என்று பல வகைக் கள்கள் இருந்திருக்கின்றன. மேனாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட யவனருடைய குடிவகையும் தமிழகத்தில் கிடைத்தது. அவர்கள் தந்த வேலைப்பாட்டுடன் கூடிய நல்ல கலங்களில் அது வழங்கப்பட்டது என அறிகிறோம்.

குறிஞ்சிநில மக்கள் மூங்கிலரிசியைக்கொண்டு தயாரிக்கப் பட்ட கள் தெளிவைப் பருகியுள்ளனர். தேனிலிருந்து தயாரித்த கள்ளை மூங்கிற் குழாயுள் இட்டு அது நன்கு புளித்து முற்றியபின் குடித்தார்கள். இதனைத் 'தேக்கள் தேறல்' என்பர்.[890]

வீடுகளிலும் கள்ளினைக் காய்ச்சும் வழக்கம் உண்டு. வீடு களில் நெல்லைக்கொண்டும் வேறுசில பொருள்களைக் கொண்டும் கள் சமைக்கப்பட்டது. இது 'இல்லடு கள்' எனப் பட்டது.[891]

குற்றாத கொழியல் அரிசியைக் களியாகச் சமைத்துத் துழாவிக் கூழ் செய்வார்கள். பிறகு அகன்ற வாயையுடைய தட்டில் (மலர்வாய்ப் பிழாவில்) அதனை ஆற்றுவார்கள். நெல் முளையை இடித்து அந்தக் கூழில் கலப்பார்கள். அந்தக் கலவையை இரண்டு இரவும் இரண்டு பகலும் தொடாமல் வலிய வாயையுடைய சாடியில் வைப்பார்கள். நன்றாக முற்றிய பிறகு அதை வெந்நீரில் வேகவைத்து, வடிகட்டி, விரலால் அலைத்துப் பிழிவார்கள். இங்ஙனம் எடுக்கப்படும் கள் வெம்மை யான தன்மை உடையதாயிருக்கும். இங்ஙனம் தயாரிக்கப்பட்ட சாறு 'நறும்பிழி' எனப்பட்டது.[892]

சோழநாட்டுப் பரதவர்கள் 'பெண்ணைப்பிழி'யைப் பருகி னார்கள்.[893] பெண்ணை என்பது பனைமரம். ஆகவே, பனங் கள் அருந்தினார்கள் எனக் கொள்ளலாம். காவிரிப்பூம்பட்டினப் பெண்கள் 'மட்டு' என்னும் பெயர்கொண்ட கள்ளைப் பருகி னார்கள்.[894] 'மட்டு நீக்கி மதுமகிழ்ந்தும்' என்னும் சொற் றொடரில் மட்டு, மது என்னும் சொற்கள் வந்துள்ளமை காண்க. 'மட்டு' நீக்கப்பட்ட ஒருவகைக் கள்ளை உண்டார்கள் எனக் கூறலாம்.

---

890 முருகு. 195
891 பெரும்பாண். 142
892 ஷை 275-281
893 பட்டினப். 89
894 ஷை 108

நன்னனுடைய மலைநாட்டு மக்கள் தேனால் தயாரிக்கப் பட்ட கள்ளை மூங்கிலில் சில நாள்கள் வைத்திருந்து முற்றிய பின் அதன் தெளிவைப் பருகினார்களாம். அந்தத் தெளிவுக் குத் 'தேக்கள் தேறல்' என்னும் பெயர் தரப்பட்டிருந்தது.[895] இதுபோன்ற கள்ளை மலைநாட்டாரும் பருகினர்;[896] பலவகை இறைச்சிகளைத் தின்றுகொண்டே தேக்கள் தேறல் அருந் தினர்.[897]

கரிகால் வளவனின் அரண்மனையில் 'மகிழ்',[898] மகிழ்ப்பதம்[899] என்ற கள் வகைகள் பருகப்பட்டன. குங்குமப்பூ மணத்தைக் கொண்ட கள்ளின் தெளிவு 'பூக்கமழ் தேறல்'[900] எனப்பட்டது. பாண்டியன் அரண்மனையில் 'மணம்கமழ் தேறல்'[901] தரப் பட்டது. அது பொன்வட்டியில் தரப்பட்டதாம். இவ்வகை யான தேறல்களை அரண்மனையிலிருந்த அழகான பெண்கள் பொற்கலங்களில் நிரப்பி[902] மன்னனுக்கும் விருந்தினருக்கும் தருவது வழக்கம்.[903]

தினையிலிருந்தும் கள் தயாரிக்கப்பட்டதுண்டு.[904] கள் விற்கும் கடைகளில் கொடிகள் கட்டியிருப்பதுமுண்டு.[905] கள்ளைப் பெரிய பானைகளிலும், சிறிய பானைகளிலும், சாடி களிலும் வைத்திருப்பர்.[906] 'தேள் கடுப்பன்ன நாட்படு தேறல்',[907] 'அரவு வெகுண்டன்ன தேறல்' எனக் கள்ளின் தன்மை கூறப்பட்டுள்ளது. கள்ளையும் காமத்தையும் இணைத்துத் திருவள்ளுவர் கூறுகிறார்.[908] மாமரத்தில் கிளிபோன்ற காய்கள் குலைகுலையாய்த் தொங்கின. பழந்தமிழர் அவற்றைப் பறித்துப் புதிய குடத்திலிட்டனர்; பின், புளிச்சுவையுண்டாகும் படி பதப்படுத்தி அதைச் சாறாக்கினர்; இந்த இனிய புளிப்புச் சாற்றைப் பனை ஓலைகளைக் கொண்டு செய்யப்பட்ட தொன்னை போன்ற உண்கலத்தில் ஊற்றி மருதமரத்துக்குக் கீழ் இருந்த உழவர்களுக்குக் குடிக்கத் தந்தனர்.[909] இவ்வாறு மாங் காய்ச் சாறு தயாரிக்கப்பட்டுக் குடிப்பதற்காகத் தரப்பட்டது.

---

895 மலைபடு. 171,522
896 முருகு. 196
897 மலைபடு. 171-177
898 பொருநர். 84
899 ஷை 111
900 ஷை 157
901 மதுரைக். 780
902 புறம். 392:17
903 மதுரைக். 779-782
904 அகம். 284:8
905 பதிற். 68:10
906 புறம். 258:9
907 ஷை 392:16
908 குறள். 1281
909 அகம். 37:7-10

இதனை மயக்கம் தரும் கள் எனக் கூற இயலுமா? ஒருவகைப் பருகுபானம் என்றுதான் கூற முடியும்.

எவ்வகையான விருந்திலும், பெரும்பாலும் பருகுநீர்கள் கொடுக்கப்பட்டன. அவை பலவகைப்பட்டிருந்தன. கள்ளும் கொடுக்கப்பட்டது. புலவர்களும் அரசர்களும் மதுவையும் கள்ளையும் உண்டு மகிழ்ந்தனர். மகளிரும் மது அருந்ினார்கள் என்பது மேலே எடுத்துக்காட்டப்பட்டது. மகளிர் மதுவை எடுத்துத் தரச் செல்வர் அருந்தி மகிழ்வதுண்டு என்பதும் தெற்றெனத் தெரிகிறது. மேலும், வருபவர்க்கு முதலில் கள் தந்து பிறகு தாமுண்பர் என்பதும்[910] அறியப்படுகிறது.

நம்பிக்கைகள்

கண்ணால் பார்க்காமலும் அறிவு ஆராய்ச்சி செய்யாமலும் சில செய்திகள் காரண காரியம் கருதாமல் மக்களால் அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்பட்டுச் செயலாற்றப்படுகின்றன. முன்னோர் வழங்கியதை அப்படியே ஏற்றுக்கொள்வர். ஏன், எதற்கு என்ற வினாக்கள் எழுப்பப்படுவதில்லை. அவை உண்மையா, கட்டுக் கதையா எனக் கருதிப் பார்க்கப்படுவதில்லை. இயற்கையில் ஏற்படும் எதிர்பாரா நிகழ்ச்சிகளுக்கெல்லாம் கருத்துகள் கற்பித்து அப்படியே நம்பப்படும். இவற்றை நம்பிக்கைகள் என்பர். எவ்வளவு நாகரிகமுடைய சமுதாயமாய் இருந்தாலும் அச் சமுதாயத்தில் சிலராவது நம்பிக்கை அடிப்படையில் ஆராயாமல் சிலவற்றை ஏற்றுக்கொள்வதைப் பார்க்கிறோம். சிலருக்கு அவை மூடநம்பிக்கைகளாகத் தோன்றி அவற்றை எடுத்து விளக்கினாலும் முழுச் சமுதாயமும் அவற்றை விட்டுவிடுவதில்லை. அவ்வாறு பழந்தமிழகத்தில் தமிழரும் சில நம்பிக்கைகள் கொண்டிருந்தனர். அவற்றை ஓரளவு எண்ணிப் பார்ப்போம்.

நாளிடத்தும் கோளிடத்தும் கொண்ட நம்பிக்கை

மேலும், இயற்கையில் கிடைக்கும் மழை பொய்ப்பதோ, இயற்கையில் இருக்க வேண்டியவை மாறிச் செயற்கையாகத் தோன்றுவதோ அரசனின் ஆட்சிக் குறையால்தான் நிகழும் என்று பண்டைத் தமிழர்கள்[911] நம்பினார்கள். வெள்ளிக்கோள் தென்திசையில் தோன்றுதல் தீய நிமித்தமாகக் கருதப்பட்டது.

---

910 புறம். 290:1 911 ஷை 35:27-29

வெள்ளி தென்திசையில் தங்கியதால் வயல் வறண்டது என்று நம்பினர்.[912] மைம்மீன் புகைகளோடு தோன்றினாலும், எல்லாப் பக்கங்களிலும் புகை தோன்றினாலும், தெற்குத் திசையில் வெள்ளி தோன்றினாலும் நாட்டிற்குத் தீமையுண்டாகும் என்று நம்பினர்.[913] சிலப்பதிகாரம் இக்கோள்கள்பற்றிப் பேசுகிறது.[914] இவ் வெள்ளியை வெண்மீன் எனக் கூறுவதுமுண்டு.[915] வடக்குப் பகுதியில் பிற மீன்கள் சூழ உரிய இடத்தில் இருந்தால் நல்ல மழை கிடைக்கும் என நம்பினர்.[916] எனவே, வெள்ளிமீன் நிற்கு மிடத்தையொட்டி மழையும் மழையின்மையும் ஏற்படும் என்பது அவர்களுடைய நம்பிக்கை. ஆயினும், வெள்ளி எங்கு நின்றாலும் அதுபற்றிக் கவலாமல் இருக்கவும் எண்ணியவருண்டு.[917]

கிரகணம்

கிரகணங்களின் உண்மையை அவர்கள் அறியவில்லை. திங்களைப் பாம்பு கௌவி விடுவதாக நம்பிவந்தார்கள்.[918]

விண்மீனும் அரசரும்

வானத்திலிருந்து ஒளியுடைய விண்மீன் குறித்த காலத்தில் விழுமானால் அரசர் போன்ற பெரிய தலைவர்கள் இறந்துபடு வார்கள் என மக்கள் நம்பினர்.[919]

பேய்கள்

தமிழர், பேய்கள் இருப்பதாக நம்பினர். அவற்றின் இருப்பிடம், உருவம், உணவு, செயல் முதலானவைபற்றிப் பல வாறு கற்பனை செய்திருந்தனர் எனத் தெரிகிறது.

போர்க்களம், சுடுகாடு, பொதுமன்றங்கள், மரங்கள் முத லான இடங்களில் பேய்கள் வாழ்ந்ததாகவும்,[920] நள்ளிரவில் நடுத் தெருக்களிலும் அவை திரியுமென்றும்,[921] பிளவுபட்ட காலடி, கொடிய கண், ஆட்டுக்குட்டிகளை அணியாகப் பூண் டிருக்கும் காது, அகன்ற வாய், பன்றிக் கொம்பு போன்றும் யானை நகம் போன்றும் உள்ள பற்கள்,[922] நெருப்புத் தொங்கு வது போன்ற நாக்கு, குருதியைப் பூசிச் செம்பட்டையான தலை மயிர், முருங்கைக்காய் போன்ற விரல், புலவு நாற்றம் வீசும்

912 புறம். 388:1-2
913 ஷ்டி 117:1-2
914 சிலப். 10:102-104
915 பட்டினப். 1
916 பதிற். 24:24, 69:14
917 புறம். 384:20, 386:24
918 குறள். 1146
919 ஷ்டி 229:12-15
920 ஷ்டி 238:1-6
921 மதுரைக். 631-33
922 குறுந். 180:1

உடல் முதலான தோற்றத்தை அவை கொண்டிருக்குமென்றும், பிணத்தின் புண்ணைத் தோண்டிக்கொண்டும் அதன் குடரைச் சுற்றிக்கொண்டும்[923] பிணத்தைத் தழுவிக்கொண்டும் கைகளை விலாப்பகுதியில் அடித்துக்கொண்டும் மகிழ்ச்சியோடு போர்க் களத்தில் அவை கூத்தாடுமென்றும்,[924] குருதியைக்கொண்டு கூழ் காய்ச்சி வீரர் வாயில் ஊற்றி மகிழுமென்றும், தாமே உயிர்களைக் கொன்று தின்னாமல் பிறர் கொன்று தமக்குப் பலியாகத் தந்த பிணப் பலிகளையே அவை தின்னுமென்றும், பேய், கழுது, பூதம் முதலான பெயர்களால் கோரக் காட்சிகளை அவர்கள் கற்பனை செய்து நம்பினர்.

போரில் இறந்த வீரர்களின் மனைவியர் தங்கள் கணவன்மார் உடலைப் பெண்பேய் தழுவக்கூடாது என்று எண்ணிப் பாது காத்த நிலையும் உண்டு.

வேப்பந்தழையைச் செருகுதல், வெண்சிறு கடுகையோ அகிலையோ புகைத்தல், ஆம்பல் குழலை ஊதுதல், மணி ஓசை எழுப்புதல், காஞ்சிப்பண் பாடல் முதலான செயல்களால் பேயை நெருங்கவொட்டாமல் தடுக்கலாம் என்றுஅவர்கள் நம்பினார் கள்.[925] பெண்கள் காதல் நோயால் துன்புறும்போது அதை உண ராமல், அவர்கட்குப் பேய் பிடித்ததாக எண்ணி அப்பேயை ஓட்டுமாறு வேலனை ஆடு வெட்டி வழிபடுவதும் உண்டு.[926]

கண்ணேறு

தமிழர்கள் கண்ணேறு எனப்படும் நம்பிக்கையுடையவர்கள். கண்ணினால் ஏற்படும் தீங்குகளைத் தீர்ப்பதற்காகக் குறமகள் நெய்யையும் வெண்சிறு கடுகையும் கலந்து தூவுவாள்.[927] பெண் கள் வருத்தும் அணங்குகள் தம்மை நெருங்காவண்ணம் காவலாக இருக்கும்பொருட்டு வெண்கடுகை அப்பி எண்ணெய் தேய்த்து நீராடுவார்கள்.[928] அப்பொழுது அணங்குகளின் பார்வை அவர் கள்மீது விழாதுபோலும். நெய்யுடன் கலந்து ஒளிவிடும் சிறு வெண்கடுகாகிய விதைகளை வீடெங்கும் தூவுவதுண்டு.[929] தீங்குதரும் கண்களுக்கு மாற்றாகக் கதவுநிலைகளில் கடுகும் நெய்யும் பூசும் வழக்கம் உண்டு.[930] மதுரையிலிருந்த பெரிய வீடு களின்கண் அமைந்திருந்த கதவுநிலைகள் பலமுறை நெய் பூசப்

---

923 புறம். 370:24-25
924 ஷை 359:4-8
925 ஷை 281:1-8
926 குறுந். 263:1-5
927 முருகு. 228
928 நற். 40:7-9
929 ஷை 370:3-4
930 நெடுநல். 86

பட்டதால் கறுத்து விளங்கினவாம்.[931] மேலும், மதில்கதவுக்குக் காவலாக வெளிவாயிலில் தூக்கப்படும் துலாமரத்தை ஐயவி எனக் கூறினர்.[932] இம் மரத்திற்கு ஐயவி அப்பியதால் இப் பெயர் வந்திருக்கலாம். எனவே, ஒருவர் பார்வை இன்னொருவர்க்குத் துன்பம் செய்யும் என்ற நம்பிக்கை வலுவாக இருந்தது என்று உறுதியாக நாம் கூறலாம்.

கொல்லிப் பாவை

கொல்லிமலையின் மேற்குச் சாரலில் ஒரு பெண் பாவைப் புடைப்பு ஓவியம்[933] இருந்தது; அது தெய்வத்தால் சமைக்கப் பட்டது என்றும், கண்டோரை வருத்துமென்றும் நம்பினர்.[934]

கொல்லி மலையிலுள்ள பாவை காற்று மோதி அடித்தாலும், மழை விரைந்து வீசினாலும், இடி மோதினாலும், உலகமே பிறழ்ந் தாலும், வேறு எந்தவித ஊறுகள் வந்தாலும் தன் அழகு கெடா மல் இருக்கும் என நம்பப்பட்டது.[935]

மாணிக்கம்

பாம்புகள் மாணிக்கங்களை உமிழும் என்று பழந்தமிழர் நம்பி வந்தனர். காந்தள் மலர்மேல் சிறிய இறக்கைகளையுடைய தும்பி அமர்ந்து இருப்பது பாம்புமிழும் மணியைப்போல் தோன்றிய தாம்.[936] பாம்பு உமிழும் மணியிடத்து நெருங்க அஞ்சினர். அது போல மறக்குடி மகளின் கணவனை மாற்றார் நெருங்க அஞ்சு வராம்.[937]

நிமித்தம் பார்த்தல்

பரிசில் பெறச் செல்லும்பொழுது கூத்தர்கள் நிமித்தம் பார்த் தார்கள்.[938] புலவர்கள் பரிசில்பெற வள்ளல்கள்பால் செல்வ துண்டு. அப்பொழுது வள்ளல்கள் வழங்காமையும் உண்டு. அதற் காகப் புலவர்கள் அவர்களைப் பழிப்பதில்லை. ஆனால், அவ்வாறு ஏற்பட்டமைக்குத் தம் வழியிடத்தே கண்ட புள்நிமித்தத்தையும் பொழுதையுமே பழித்தார்கள்.[939]

---

931 மதுரைக். 354
932 பதிற். 16:4
933 Base-relief
934 குறுந். 89:4-6, 100:5-6; நற். 185:7-11, 192:8-10
935 நற். 201:5-11
936 குறுந். 239:3-5
937 புறம். 294:8-9
938 மலைபடு. 64-66, 446-448
939 புறம். 204:10-11

பறவைகளின் நிமித்தமே புள் எனப் பேசப்படுகிறது. ஓணானும் நிமித்தப் பொருளாகக் கருதப்பட்டது. முதிய ஓணானைப் பாலைநிலத்தில் காண்பார் அதனை நிமித்தமாகக் கொண்டுள்ளனர்;[940] தலைவரைப் பிரிந்து வருந்தும் மகளிர் தலைவர் வருவர் என்பதற்குரிய நல்ல நிமித்தங்களை எதிர்பார்த்துநிற்பராம்.[941]

விரிச்சி என்பது நற்சொல் கேட்பதாம். ஏதோ ஒரு செயலைப் பற்றி எண்ணிக்கொண்டு இருக்கும்போதோ செய்யும்போதோ யாரோ ஒருவர் தாம் அறியாமல் பேசிப்போகும் சொற்கள் நலமோ தீதோ காட்டும் குறிகளாகும். பக்கத்து வீட்டுப் பெண் ஒருத்தி வேறு ஏதோ ஒரு பெண்ணுடன் உரையாடிக் கொண்டிருந்தாள். அவ்வாறு உரையாடிக் கொண்டிருக்கும்போது ‘அவன் இப்பொழுது வருவான்’ என்று கூறினாள். அப் பேச்சை நல்ல விரிச்சியாகக்கொண்டு தோழியானவள் தலைவியிடம் ‘நம் தலைவரும் விரைவில் வருவார்; வருந்தற்க’ என்று கூறி ‘அவ்வாறு விரிச்சி சொன்ன அந்தப் பெண் அமுதம் உண்பாளாக’ என்று புகழ்ந்து வாழ்த்தினாள்.[942]

திருந்திய நகைகளை அணிந்த மகளிர் நிற்பதே ஒரு நல்ல விரிச்சி.[943] முதிய பெண்கள் நெல்லும் நீரும் சொரிந்து விரிச்சி கேட்பது வழக்கம்.[944] தலைவன் பிரிந்துள்ளான்; அவன் வருகையை எதிர்பார்த்து நிற்கின்றார்களாம். வண்டுகள் மகிழ்ந்து ஆரவாரிக்குமாறு நறிய பூக்களைக்கொண்ட முல்லை அரும்புகள் அவிழும் நேரம். அப்பொழுது நற்சொல் கேட்போர் முல்லைப் பூக்களுடனே நெல்லைத் தூவித் தெய்வத்தை வணங்கி நிற்பார்கள். ஆயமகள் ஒருத்தி தோளில் கட்டிய கையளாய், கட்டப்பட்டிருக்கின்றகன்றின் பசித்துன்பத்தைப்பார்த்து நிற்கிறாள். அப்பொழுது அவள் ‘இடையர் செலுத்தத் தாய்மாராகிய பசுக்கள் நிரம்ப மேய்ந்து இப்பொழுது திரும்பும்’ எனக் கூறுகிறாள். இச் சொற்களைக் கேட்டதும் ‘தலைவர் வெற்றிசூடி வினைமுடித்து வருவார்’ என நற்சொல் கேட்க நின்ற பெண்கள் தலைவியைத் தேற்றிப் பேசுவார்கள்.[945] தலைவன் வருகை குறித்து விரிச்சி கேட்கமாட்டோம் எனக் கூறும் பெண்களுமுண்டு.[946]

---

940 குறுந். 140:1
941 ஷ்ஷ 218:1-3
942 நற். 65:1
943 ஷ்ஷ 40:4
944 புறம். 280:6-8
945 முல்லைப். 9-20
946 குறுந். 218:7

பெண்கள் தம் கைகளிலுள்ள வளைகள் இறுகினால் அதனை நல்ல நிமித்தமாகக் கருதினார்கள்.[947] மயிர் விளங்குகின்ற முன் கையிலுள்ள வளைகள் நெருங்குகின்றன. அதனால் மலை நாட்டான் சீக்கிரம் வருவான் என அவர்கள் நம்பினர்.[948]

சில நிகழ்ச்சிகள் தீய நிமித்தங்களாய்க் கருதப்பட்டன. தும்பி கள் நடுப்பகலில் பறப்பது, விளக்குகள் இரவில் நில்லாமை, கூகை கள் குழறல், பெருந்தூக்கம் வருதல் ஆகியவை தீய நிமித்தங் களாகக் கருதப்பட்டன.[949] ஆகாயத்திலிருந்து விண்மீன் தீப் பரக்க வீழ்ந்தால் உலகாளும் மன்னன் மடிவான் என விண்மீன் வீழ்தலைத் தீய நிமித்தமாகக் கருதினார்.[950]

கனவில் நம்பிக்கை

கனவில் காணும் சில காட்சிகளும் கெட்ட நிமித்தங்களாகும் என்று நம்பினர். எட்டுத் திக்குகளிலும் எரிகொள்ளியானது எரிந்து வீழ்தல்போல் காணுதல், பெரிய மரத்தில் இலையில்லாத பெரிய கொம்பு, வற்றல் பற்றி எரிதல்போல் பார்த்தல், வெம்மைத் தன்மையுடைய ஞாயிறு பல இடத்தும் நெருங்கித் தோன்றுமாறு காண்டல், பயப்படத்தக்க பறவைகள் குரல் எடுத்து ஒலிப்பதுபோல் பார்த்தல்,பற்கள் நிலத்தின்மீது விழுவது போல் காணுதல், மயிரிடத்து எண்ணெயை வார்த்தல்போல் பார்த்தல், பன்றிமீது ஏறுதல்போல் பார்த்தல், ஆடைகளைக் களைவதுபோல் நோக்குதல் ஆகியவற்றைக் கனவில் கண்டாலும் தீயநிமித்தங்களாகவே கொண்டார்கள். அவ்வாறு கனவில் கண்டவர்களுக்குத் தீங்கு விளையும் என நம்பினார்கள்.[951]

இதைப்போன்றே, மலையில் கிடைக்கும் மணியையும், கடலில் கிடைக்கும் ஒளிமிக்க முத்தையும், வேறுபட்ட உடையை யும், கள் குடத்தையும் கனவில் கண்டால் அதற்காக மக்கள் வருந்துவார்கள்.[952]

கண்ணகி கண்ட தீய கனவைப்பற்றி இளங்கோவடிகள் கனாத்திற முரைத்த காதை'யில் விரித்துரைத்துள்ளார். தன் கைப்பிடித்த கணவனோடு கண்ணகி ஒரு பெரிய நகருக்குச் சென்றதாகக் கனவு கண்டாள். அவ்வூரில், அவள் கணவன்மீது,

---

947 குறுந். 260:3
948 ஐங்குறு. 218:2
949 புறம். 280:2-7
950 ஷை 229:12-17
951 ஷை 41:3-11
952 ஷை 377:16-20

ஒரு பழி சுமத்தப்பட்டதாம். அதையொட்டிக் கோவலனுக்குத் தீங்குண்டானதைக் கேட்டு, கண்ணகி அரசனிடம் வழக்குரைத்ததாகவும் அவள் கூறுகிறாள். பின்னர் நடக்கப்போவதையே அவள் கனவு கண்டதாக ஆசிரியர் வருணிக்கிறார். அக் கனவைக் கண்ட அவள் உள்ளம், அச்சமும் ஐயுறவும் கொண்டதாகத் தெரிகிறது.[953]

இளங்கோவடிகள், அரசனுடைய செங்கோலும் வெண்கொற்றக் குடையும் நிலத்தில் விழுந்ததையும், அரண்மனையின் தலைவாயிலில் உள்ள மணி நடுங்கியதையும், இரவில் வானவில் தோன்றியதையும், பகலில் விண்மீன் விழுந்ததையும், எங்கும் காரிருள் சூழ்ந்ததையும், நான்கு திசைகளும் அதிர்ச்சியுற்றதையும் பாண்டிமாதேவி கனவில் கண்டதாகக் கூறுகிறாள். இவற்றைக் கனவில் கண்டதனால், யாதோ துன்பம் உண்டாகப் போகிறது என்று அவள் அஞ்சியதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.[954]

இவை பண்டைத் தமிழர் கனவினிடம் கொண்டிருந்த நம்பிக்கையை எடுத்துரைக்கின்றன.

பல்லி சொல்

பல்லி சொல்லுவதையும் நிமித்தமாகக் கொண்டனர். ஒரு பன்றி பல்லி சொல்லுவதைக் கேட்டுத் தீமையுண்டாகும் என்று கருதி அச் செயலை விட்டுத் தீங்கிலிருந்து தப்பியதாம். பன்றியாகிய விலங்கும் நிமித்தம் பார்க்கும் என நம்பியுள்ளனர், அந்தக் கால மக்கள். பல்லி சொல்லுதலுக்குரிய பலன்களை இக்காலப் பஞ்சாங்கமும் கூறும். இந்தப் பலன்களை இன்றும் கவனிப்பவர்கள் பலர் உண்டு. சிறிய கண்களைக் கொண்ட பன்றி முள்ளம் பன்றியின் முட்களைப் போன்ற பருமனான மயிரையுடைய பிடரைக்கொண்டது. தினைக்கதிர் மேயத்தினைப்புனம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அங்கே வரும் விலங்குகளைத் தடுப்பதற்காக அங்குள்ள மக்கள் அவற்றைப் பிடிப்பதற்காகப் பொறிகளை அமைத்து இருந்தனர். அந்தப் பன்றி, அதை அறியாமல் பொறி வைத்திருக்கும் வழியில் போகத் தொடங்கியது. அப்பொழுது பல்லி இடைவிடாது ஒலித்தது. அதைக் கேட்ட பன்றி அவ்வழியில் போனால் கெடுதல் வரும் என எண்ணிப் பின்னாலேயே சென்று தன் இருப்பிடத்தை அடைந்தது.[955] இவ்வாறு

953 சிலப். 9:45-54
954 ஷை. 20:1-14
955 நற். 98:1-7

நற்றிணைப் பாடல் ஒன்று மனிதரின் நம்பிக்கையை விலங்கின் மீது ஏற்றி அழகாகச் சுவைபடக் கூறுகிறது.

பொருள் திரட்டுவதற்காகத் தன் மனைவியை விட்டுப் பிரிந்துள்ளான் தலைவன். அவன் வரவை அவளும் அவள் தோழியும் எதிர்பார்த்து நிற்கிறார்கள். அப்பொழுது நல்ல நிமித்தங்கள் ஏற்படுவதாகத் தோழி கூறுகிறாள். நீண்ட சுவரி லிருக்கும் பல்லி நம் பக்கமாக இருந்து தெரிவிக்கிறது என்கிறாள். மேலும், வீட்டிலுள்ள நொச்சிவேலி கொண்ட தோட்டத்தில் மாமரத்திலிருந்துகொண்டு கரிய குயில் கூவுகிறது. ஆகையால் தலைவன் வரும் காலம் இது எனக் கூறுகிறாளாம்.[956] இதேபோல, தலைவன் வருவான் என்பதற்கு நன்னிமித்தமாகச் சுவரிலுள்ள பல்லி சொல்லுவதாக நம்பினர்.[957] மேலும், தலைவர் வரவைப் பல்லியின் நல்லொலி காட்டும் எனக் கலித்தொகையும் சொல் கிறது. அதோடு இணைந்தாற்போல் அந்த நல்ல ஒலியுடன் இன்னொரு நிமித்தமும் நன்மையாய் முடியும் என்பதைக் காட்டு வதாக அப் பகுதி தெரிவிக்கிறது. தலைவியின் இடக்கண்ணும் ஆடுகிறதாம். அதனால் தலைவன் வருவது உறுதி என்பதே அப் பகுதியாம்.[958] அகநானூறும் பல்லியின் சொல்பற்றிக் குறிக் கிறது.[959] எனவே, பல்லி சொல்லுக்குப் பயனுண்டாகுமென்று பழந்தமிழர் சமுதாயம் நம்பியது எனக் கூறலாம்.

இடக்கண் துடித்தால் நலம் வரும் என்ற நம்பிக்கையைக் கலித்தொகை மட்டுமன்றி ஐங்குறுநூறும்[960] தெரிவிக்கின்றது. எனவே,உடலில் ஏற்படும் மெய்ப்பாடுகளையும் நிமித்தங்களாகக் கொண்டனர் எனக் கொள்ளலாம். கண்ணகியின் கருங்கண்ணும் மாதவியின் செங்கண்ணும் இடத்திலும் வலத்திலும் துடித்ததாக இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.[961] இதனால், பெண்களுக்கு இடப்பக்கம் துடித்தால் நன்மையும் வலப்பக்கம் துடித்தால் துன்பமும் உண்டாகும் என்னும் மக்களுடைய நம்பிக்கை புலனா கின்றது.

காக்கை கரைதல்

காகத்திற்கு உணவு உண்ணுவதற்குமுன் உணவிடும் பழக்கம் இன்றும் ஊர்ப்புறங்களில் காணலாம். அதிலும் சிறப்பாக ஈமச்

---

956 நற். 246:2-4
957 ஷெ. 169:3-4, 333:10-12
958 கலி. 11:21-22
959 அகம். 151:12-15
960 ஐங்குறு. 218:1
961 சிலப். 5:237-239

சடங்குகள் செய்தபின் காகத்திற்கு இடுவது இன்றைய தமிழகச் சிற்றூர்களில் காணப்படும் ஒன்று. பொதுவாகக் காக்கைக்கு உணவிடும் பழக்கம் பழந்தமிழகத்தில் இருந்தது எனக் கூறலாம். தென்னை மரங்கள் நிறைந்த தோப்புகளில் வாழும் மக்கள் தந்த செஞ்சோற்றுப் பலியைக் கறுப்பான காகம் உண்ணும் எனப் பொருநராற்றுப்படை கூறுகிறது.[962] வெண்ணெல் அரிசியால் ஆக்கிய சோற்றுடன் பசுநெய் கலந்து கலங்களில் காக்கைக்குத் தருவதுண்டு.[963]

காக்கை கரைவது விருந்தினர்களின் வரவைத் தெரிவிப்பதாகும் என நம்பினார்கள். 'விருந்தினர் வரும்படி கரைதலைச் செய்த காக்கை' என்னும் பொருள்படும்படி குறுந்தொகையில் 'விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே'[964] என்னும் வரி கூறுகிறது. இப் பாடலைப் பாடிய புலவர் பெயர் காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்பதாம். காக்கையைப் பாராட்டியதால் கிடைத்த சிறப்புப் பெயர் போலும்.

ஒரு பெண் தன் காதலனுடன் பெற்றோர்க்கும் தெரியாமல் உடன்போக்குப் போய்விட்டாள். எனவே, அப் பெண்ணின் தாய் காகத்தைக் கரையும்படி வேண்டுவதாக ஐங்குறுநூற்றில் ஒரு பாடல் காணப்படுகிறது.[965] 'நல்ல இறக்கைகளையுடைய சிறிய கருமை நிறமுடைய காக்கையே, அன்பையும் முறைமையையும் உடைய உன் உறவினருடன் நீ உண்ணும் பொருட்டாக ஊன் பெய்த நிணத்தைப் பொற்பாத்திரத்தில் வைத்துத் தருவேன்; மிக்க சினமுடைய வெற்றி வேலையுடைய காளையோடு சென்ற அழகான கூந்தலையுடையாளை வருமாறு கரைவாயாக' என்று வேண்டுகிறது தாயுள்ளம். ஆகவே, காகம் கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை பழந்தமிழகத்திலிருந்தது என்பது உறுதிப்படுகிறது.

மரங்களில் தெய்வத் தன்மை

மரங்களில் கடவுள் தங்கியுள்ளார் எனப் பழந்தமிழர் நம்பினர். அன்றில் பறவை இணையாகப் புணர்ந்து வாழும் ஊர்ப் பொதுவிடத்திலுள்ள பனைமரத்தில் கடவுள் தங்கியுள்ளதாக நற்றிணை[966] கூறுகிறது. ஊர் முகப்பிலுள்ள பொய்கை அருகிலுள்ள முதிய மரத்தில் கடவுள் தங்கியுள்ளதாகவும் அதே நூல்

962 பொருநர். 181-184
963 குறுந். 210:2-3
964 ஷை 210:6
965 ஐங்குறு. 391:1-6
966 நற். 303:3-5

குறிக்கிறது.[967] பறவைகள் நேற்றுத் தின்றோமே என்று எண்ணாமல் மீண்டும் மீண்டும் ஆலமரத்திடம் செல்கின்றன என்றும், அந்த ஆலமரத்தில் கடவுள் உறைகின்றார் என்றும் பெரும்பதுமனார் புறநானூற்றில் பாடுகிறார்.[968]

சுனைகள்

மலைகளிலுள்ள கற்சுனைகளிலும் கடவுள் தங்கியுள்ளார் என நம்பியுள்ளனர் போலும். 'கடவுள் கற்சுனை' என நற்றிணை பேசுகிறது.[969] மேலும், வாகை மரத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது 'கடவுள் வாகை' எனப் பதிற்றுப்பத்துக்[970] குறிக்கிறது. ஆகவே, மரங்கள் சிலவற்றிலும் கற்சுனைகளிலும் கடவுள் தங்கியுள்ளதாக நம்பிவந்தார்கள் என எண்ணலாம்.

உடற்குறைகளும் தீவினையும்

மக்களுள் சிலர் ஊனமுடையவர்களாய்ப் பிறக்கிறார்கள். குருடு, வடிவில்லாத தசைத்திரள், கூன், குறள், ஊமை, செவிடு, மா, மருள் என எட்டு வகையாகப் பழந்தமிழர் அந்தப் பிறப்பைப் பிரித்துப் பேசினர். இவ்வகையான பிறப்பைக் குறையாகக் கருதினார்கள். இவற்றைப் பேதைமைப் பிறப்பு என்றும் பயனில்லாத பிறப்பு என்றும் எண்ணினார்கள்;[971] அறம் செய்தால் இவ்வகையான பிறப்புகள் வரமாட்டா என நம்பினார்கள்.

சாவாமூவாப் பெருவாழ்வு

அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் வள்ளலுக்கு ஒரு நெல்லிக்கனி கிடைத்தது. அதை அவன் ஔவையார் என்னும் புலவர்க்குத் தந்தான். அவ்வாறு அவன் தந்தமைக்குரிய காரணம் கவனிக்கத்தக்கது. அந்த நெல்லிக்கனியை உண்டவர்கள் நஞ்சுண்ட கண்டன்போல என்றும் இறவாமல் இருப்பார்களாம்.[972] எனவே, சிவன் நஞ்சுண்டமையும் சாகாமல் வாழலாம் என்பதையும் நம்புவதோடு நெல்லிக்கனி தின்றால் சாகாமல் இருக்கலாம் எனவும் நம்பியுள்ளனர் என்பது தெரிகிறது. உலகில் மக்கள் சாகிறார்கள். ஆனாலும் சிலருக்கு மட்டும் சில ஊர்திகளில் போவதற்கும், சில இடங்கட்கும் வாய்ப்புக் கிட்டுமாம். புலவர்களால் பாடப்படும் புகழைப் பெற்றவர்கள் பொதுவான

---

967 நற். 83:2
968 புறம். 199:1
969 நற். 34:1
970 பதிற். 66:15
971 புறம். 28:1-6
972 ஷை 91:9-11

மக்களைப்போல் அல்லாமல் ஓட்டுபவரில்லாத வான ஊர்தி களில் இறந்தபின் செல்வார்கள் என முதுகண்ணன் சாத்தனார் கூறுகிறார்.[973] எனவே, புலவரால் புகழப்படுவோர் (இறந்த பிறகும்) தனிச் சிறப்புப் பெறுவர் என நம்பினார்கள் எனத் தெரிகிறது.

இம்மை, மறுமை

இம்மை, மறுமை என்பனவற்றில் அவர்கட்கு நம்பிக்கை யிருந்தது. கபிலர் என்னும் புலவர் பாரி இறந்தபிறகு இம்மை யில் தாங்கள் கூடி இன்புற்றிருந்தவாறே மறுமையிலும் அமைய வேண்டும் என விரும்புகிறார்.[974]

குறிபார்த்தல்

இப் பழங்காலத்தில் குறிபார்க்கும் பழக்கம் மிகுதியாக இருந்தது என்பதனை அகப்பொருள் இலக்கியங்கள் தெரிவிக் கின்றன. தன் பெண் காமநோய் உற்றதை அறியாத தாய், அந்த நோய் வந்ததற்குக் காரணம் என்ன என்று அறியும் பொருட்டுக் கட்டுவிச்சியை அழைத்துக் கட்டுப்பார்ப்பது உண்டு. முறத்தில் நெல்லையிட்டு அதனை எண்ணி அதிலிருந்து சில நிமித்தங்களை உண்டுபண்ணிக்கொண்டு இந்தப் பெண் முருகனால் அணங்கப்பட்டாள் எனக் கூறுவது வழக்கம். சில நேரங்களில் சில கட்டுவிச்சியர் தெய்வமேறிக் குறி சொல்லு வதும் உண்டு. இக் கட்டுவிச்சியரைக் குறுந்தொகை 'சங்கு மணி யாலாகிய கோவையைப் போன்ற வெண்மையாகிய நல்ல நீள மான கூந்தல்கொண்ட அகவல் மகள்'[975] எனக் கூறுகிறது. ஆகவே, பெரும்பாலும் கட்டுவிச்சியர் நரையையுடைய முதிய பெண்கள் எனக் கருதலாம்.

தலைவன் பிரிந்ததனால் தலைவியின் நெற்றியில் பசலை படர்ந்தது. அதைக் கண்ட தாய் உடனே செம்மையும் முதுமையு முடைய கட்டுவிச்சியின் இல்லத்திற்குச் சென்றாள். அவள் முறத் தில் நெல்லைப் பரப்பிக் கட்டுவித்தாள். தலைவியை அவள் எதிரில் நிறுத்தச் செய்து பிறகு குறி கேட்டாளாம்.[976] இவ்வாறு குறிகேட்கும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. நெல் எண்ணிக்

---

973 புறம். 27:8-9
974 ஷை 236:10-12
975 குறுந். 28:2-3
976 நற். 288:5-7

கையையொட்டி 'இது முருகணங்கு, இது பிற அணங்கு' எனக் கூறுவர்போலும். தன் பெண்ணின் முகமலர்ச்சி குறைந்ததைக் கண்டு மற்றொரு தாய் கட்டுவிச்சியிடம் சென்று வேண்டினாள். அப்பொழுது கட்டுவிச்சி பிரப்பரிசியைப் பரப்பி வைத்துப் பார்த்து அது முருகனால் வந்த நோய் எனக் கூறினாள்.[977]

தெய்வமேறியாடுதல்

பழங்காலத்தில் வெறியாடிச் சொல்வதை நம்பினர். இவ் வெறியாட்டு அக்காலத்தில் பெருவழக்காய் இருந்தது.[978] வெறியாடுவோர், அதற்குரிய முறைகள் முதலியவைபற்றி விரிவாகச் சமயம்பற்றிய இயலில் கூறப்பட்டுள்ளன. கையில் வேலைக்கொண்டு கூத்தாடி ஒருவன் முருகனை வாழ்த்தி விளிப்பான். அதனால் அவன் வேலன் எனப்பட்டான். துன்பங்களுக்குக் காவலாக உள்ளவன் முருகனே என நம்பி அவனை வேலன் வேண்டுவான்.[979] ஐங்குறுநூறு என்னும் இலக்கியத்தில் 'வெறிப்பத்து' என்னும் ஒரு பகுதி உள்ளது. இப் பகுதி வெறியாட்டின் செய்திகளை நன்கு விளக்குகிறது; பெண்ணுக்கு ஏற்பட்ட மெலிவுக்குக் காரணம் முருகக் கடவுள் எனக் கூறுவான் வேலன்.[980] எனவே, தெய்வமானது எவரிலேனும் வெளிப்பட்டுத் தோன்றித் தான் கூறவேண்டியதைக் கூறும் என்று அக்கால மக்கள் நம்பினார்கள் என நாம் உறுதியாகக் கூறலாம்.

மகளிர் நம்பிக்கை

கன்னிப்பெண்கள் பலர் கூடி வேங்கை மரத்தின் அருகில் நின்றுகொண்டு 'புலி, புலி' எனக் கூவினால் வேங்கை மரம் தாழ்ந்து அதன் பூக்களை அப் பெண்களுக்குத் தரும் என அக்கால மக்கள் நம்பினர்.[981] அவ்வாறு மகளிர் 'புலி புலி' எனக் கூறியதைக் கேட்ட ஆண் மகன் ஒருவன் உண்மையான புலிதான் வந்துவிட்டதோ என எண்ணிப் பாதுகாக்க அங்கு வந்ததாக நகைச்சுவையுடன் அச் செய்தி கூறப்படுகிறது. மேலும், மகளிர் வேங்கைப் பூக்களைச் சூடுவதற்கு விரும்பி அவற்றைப் பறிப்பதற்காக வேங்கை மரத்தினருகில் சென்று அவை எட்டாமையால் அவற்றை வளைத்துக் கொடுக்குமாறு செய்வதற்குப் 'புலி, புலி' என்ற ஓசை செய்துகொண்டிருந்தனர்.[982]

---

977 அகம். 98:6-10
978 தொல்.பொருள்.களவு.21:23
979 மதுரைக். 612-615
980 குறுந். 111:1-2
981 அகம். 48:7-8
982 மலைபடு. 305-306 உரை

விழாக்களும் விளையாட்டுகளும்

சமுதாயத்தில் மக்கள் எல்லோரும் ஒரே சமயத்தில் ஒன்று போல் மகிழ விழாக்கள் அமைந்திருப்பது இயல்பு. விழா என்பது விழைந்து (விரும்பி) செய்யப்படுவது. மக்கள் மிக விருப்பத்துடன் அவரவர் இல்லங்களிலும் பொதுவிடங்களிலும் விழாவைக் கொண்டாடுவார்கள். பழைய தமிழகத்தில் தமிழர் பல வகை விழாக்களைக் கொண்டாடியுள்ளனர். பழைய இலக்கியங்களில் அவற்றைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. விழாவின்போது என்னென்ன சடங்குகள் மேற்கொண்டனர், எவ்வெவ்வாறு உடுத்தனர், உண்டனர் என்பனபோன்ற விரிவான விளக்கங்கள் காணப்படவில்லையானாலும் விழாக்களைப் பற்றிய குறிப்புகள் கிடைத்துள்ளன.

விளக்கீட்டு விழா

விளக்குகள் வைத்துக் கொண்டாடும் முறை பழங்காலத்தில் சிறக்க எடுத்துப் பேசப்பட்டுள்ளது. இன்றைய நாளில் கார்த்திகை மாதத்தில், கார்த்திகை நாளில், கார்த்திகை விளக்கீடு எனக் கூறி விழாக் கொண்டாடுவது யாவரும் அறிந்ததே. மேலும், அண்ணாமலையில் விளக்கேற்றி வணங்குவதையும் நாம் அறிவோம். மலைகளில் சிறப்பாக விளக்கேற்றி வணங்குகின்றனர். இப்பொழுதுள்ள சடங்குகள், வழிபாட்டு முறைகள் எல்லாம் முன்பு இருந்தனவெனச் சொல்லுவதற்கில்லை. ஆனால், இதற்குரிய மூலம் பழங்காலத்திலிருந்தது எனக் கூறலாம். பழைய இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள செய்திகளைப் பார்ப்போம்.

அறுமீன் சேரும் முழுநிலா நாளில் மாலை வேளையில் இவ் விழாக் கொண்டாடப்பெறும். அப்பொழுது உழவர்கட்கு உழும் வேலை இராது. ஏனென்றால் கார்காலம் முடிந்த பின்பு தான் இக்காலம் வருகிறது. கார் காலத்தில் உழுது விதைத்து விட்டால் இப்பொழுது வேலை இல்லை. எனவே, மக்கள் அறுவடையை நோக்கி இருக்கும் காலம் அது. எல்லோருக்கும் நல்ல ஓய்வு. பொதுவாக மக்கள் வேலை எதுவும் இல்லாத காலத்தில்தான் விழாக்களை அமைப்பது மரபாகக் காணப்படுகிறது.

அப்பொழுது தெருக்களிலே விளக்குகளை ஏற்றி வைப்பார்கள்; மலர்மாலைகளைத் தொங்கவிடுவார்கள். மக்கள் ஒருங்குகூடி

மகிழ்வார்கள்.[983] திருமணமான புதுமணப்பெண்கள் நன்கு நீராடியபின் பல கொண்டைகளையுடைய அடுப்பை மூட்டுவார்கள்; பால் பானைகள் வைத்து உலை வைப்பார்கள். பால் நன்கு பொங்கவேண்டும் போலும். பிறகு கார்நெல்லைக் கொய்து அந்த நெல்லைப் போட்டு நல்ல வலுவான உலக்கைகளால் தோழிமாரோடு சேர்ந்துகொண்டு பாசவல் இடிப்பார்கள். இவ் விழாக் காலத்தில் வெளியூர்களுக்குச் சென்றுள்ள ஆண்கள் எல்லோரும் அவரவர் வீட்டுக்கு விழாக் கொண்டாடத் திரும்பி விடுவது வழக்கம்.

மலை உச்சியில் விளக்குகள் வைத்து மகிழ்வது வழக்கம். இலவ மரங்கள் இலையில்லாமல் எங்கும் பூத்து நிற்குமானால் எவ்வாறு காட்சி இருக்குமோ அதுபோன்று மலையின்மீது ஏற்றிய விளக்குகள் பொலிவுடன் தோன்றின.[984] எனவே, பல விளக்குகள் பல்வேறு இடங்களில் வைத்து வழிபட்டு இருப்பர் எனக் கூறலாம். ஆகவே, மலைமீது விளக்குகள் வைத்துக்கொண்டாடும் விழா அக்காலத்தில் சிறப்புற்றிருந்தது என உறுதியாகக் கூறலாம். மேலும், அவ் விளக்குகள் சரம் சரமாக வைக்கப்பட்டிருந்தன எனவும் சொல்லலாம். கோங்க மரங்களின் பூக்கள் பூத்து ஒரு நீண்ட கொடிபோல் இருப்பதுபோல விளக்குகள் ‘அறுமீன் பயந்த அறஞ்செய் திங்களில்’ இருந்தன என நற்றிணையில்[985] பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடுகிறார். நீண்ட கொடி போலச் சுடர் விளக்குகள் இருந்தன என்பதை ஔவையாரும் அறிவிக்கிறார்.[986]

எனவே, இவ் விழாவைப்பற்றிச் சில செய்திகளே தெரிய வருகின்றன. அறுமீன் சேரும் முழுநிலாக்காலத்துப் பெண்கள் நீராடித் தெருக்களில் விளக்குகள் வைப்பார்கள் என்றும், அப்பொழுது மாலைகள் தொங்கவிடப்படும் என்றும், மகளிர் பால் உலைவைத்துப் பிறகு பசுமையான அவல் இடிப்பார்கள் என்றும் அறிகிறோம். மேலும், மலைகளில் வைக்கப்படும் விளக்குகள் கொடிபோலச் சரமாகப் பூக்களைப்போல் அழகாய் இருக்கும் என்றும் அறிகிறோம்.

ஓணம்

ஓணம் ஒரு நல்ல நாளாகக் கருதப்பட்டது. திருமால் உலகத்தில் தோன்றிய நாளாக அதனைக் கருதினார்கள்.[987] எனவே,

---

983 அகம். 141:8-10
984 ஷை 185:10-13
985 நற். 202:9-10
986 அகம். 11:5
987 மதுரைக். 591

இந் நாளும் விழாவாகக் கருதப்பட்டது போலும். அந்த நாளில் வீரர்கள் யானைகளைப் போரிடுமாறு செய்து கண்டு களிப்பார்கள். அந்த யானைப் போரைக் காண மக்கள் திரளாகக் கூடுவார்கள். யானைகளின் போர்களைப் பயமின்றிப் பார்ப்பதற்கேற்றவாறு தகுந்த இடமும் போரிடமும் அமைக்கப்பட்டிருந்தன என அறிகிறோம். குன்றேறி யானைப்போர் காணும் வழக்கத்தை வள்ளுவர் சுட்டியுள்ளார்.[988] இவ் விழாவைப்பற்றி இதற்குமேல் பழைய இலக்கியங்களிலிருந்து தெரியவில்லை.

தைந்நீராடுதல்

பழைய இலக்கியங்களிலே தைந்நீராடுதல் சில இடங்களில் குறிக்கப்படுகிறது. இது ஒரு பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது எனக் கூறுவதற்கு நேரடிச் சான்றுகளில்லை. ஆயினும் இதனை ஒரு விழாவாகக் கருதுதல் பிழையாகாது. மகளிர் தைத் திங்களில் படிந்து விளையாடும் குளம் என ஐங்குறுநூறு குறிக்கிறது.[989] இதேபோன்ற கருத்தை நற்றிணையும் பேசுகிறது.[990] மகளிர் கூட்டமாகச் சேர்ந்து குளத்தில் நீராடுவர் என்பதே அங்குச் சுட்டப்படுகிறது.

பரிபாடலில் திருவாதிரை நாளும் தைந்நீராடலும் ஓரளவு விரிவாகப் பேசப்படுகிறது. திருவாதிரை நாளன்று மகளிர் நீராடி, குளிர்வாடை வீசியதால் நடுங்கிக்கொண்டு நெருப்பை நாடினார்கள் என்று அறிகிறோம். தங்கள் தாய்மார்களோடு கன்னிப்பெண்கள் தைந்நீராடலாகிய நோன்பை நோற்றார்களாம். நீராடும்போது ஒருத்தி நீலமலரைக் காதில் சூடி வேறொருத்தியைப் பார்த்தாள். அவள் தன் காதில் அசோகந் தளிரைச் சூடிக்கொண்டாள். அந்தத் தளிரின் ஒளி பொருந்துவதால் அந்த நீலமலர் இளவெயில் தழுவியது போலானதாம். அப்பொழுது அசோகு சூடியவள் நீலஞ்சூடியவளைப் பார்த்து இவள் தன் காதுகளில் நீலமலர் சூடி நான்கு விழி படைத்தாள் எனக் கூறினாளாம். பவள வளையணிந்திருந்தவளைப் பார்த்து ஒருத்தி குவளைத் தண்டினைப் பச்சை வளையலாகத் தன் கையிலணிந்து கொண்டாள். வையையில் தண்டைக் கைப்பற்றி மகளிர் விளையாடியுள்ளனர். இவ்வாறு மகளிர் தைந்நீராடலின்

---

988 குறள். 758

989 ஐங்குறு. 84:4

990 நற். 80:7

போது வையையில் நீராடி மகிழ்ந்ததைப் பரிபாடல் சித்திரிக்கிறது.[991]

புதுப்புனல் விழா

பேராறுகளில் நீர் வற்றாமல் ஓடிக்கொண்டு இருந்தாலும் நீர்பெருகிப் புதுநீர் வருவது இயல்பு என்பதை எல்லோரும் அறிவார்கள். அவ்வாறு புதுநீர் வரும்பொழுது மக்கள் திரண்டு சென்று பார்த்து மகிழ்வதை இக்காலத்தில் காண்கிறோம். ஆனால், பழைய காலத்தில் புதுப்புனல் வரும்போது மக்கள் விழாக்கோலம் பூண்டு அங்குச் சென்று வழிபாடு செய்து, பிறகு நீராடி மகிழ்வது வழக்கம் என்பதைப் பழந்தமிழர் இலக்கியங்கள் கூறுகின்றன.

கழாஅர்ப் பெருந்துறையில் ஆட்டனத்தி என்பவன் விழாக் காலத்தில் நீராடினான் எனப் பரணர் குறிக்கிறார்.[992] 'விழவின் ஆடும்' என்னும் சொற்றொடர் அவரால் தரப்படுகிறது. இந்த ஆட்டனத்தியின் அழகு காரணமாகக் காவிரி நங்கை அவனை அணைத்துக் கொண்டாளாம். அப்பொழுது அவனுடைய காதலி அவனுடன் விழா நீராடியவள் அவனைக் காணாமல் தேடத் தொடங்கிப் பிறகு பெற்றாளாம். இவ்வாறு இந்நிகழ்ச்சியைப் பரணர் தம் பாடலில் பாடும்போது 'விழா'வைப்பற்றிக் கூறியுள்ளார். இந் நிகழ்ச்சி காவிரியில் நடைபெற்றதாகும்.

பரிபாடல், வையைப் புதுப்புனல் வந்தகாலை மக்கள் மகிழ்ந்து விழாவெடுத்ததைச் சித்திரிக்கிறது.[993] வையையில் புனல் பெருகியதை அறிந்த மகளிரும் அவர் கணவன்மார்களும் விழாக்கோலம் பூண்டு வையை நோக்கிப் போயினர். பூ, தீ போன்ற ஆராதனைப் பொருள்களை மகளிர் ஏந்திச் சென்றனர். பிறகு மைந்தரும் மகளிரும் நீரில் மகிழ்ந்து நீராடினர். பெண்கள் தொய்யில் அழிய, வளை அலைய, மேகலைகள் உதிர, சந்தனம் அழிய ஆடினர். அப்பொழுது அவர்கள் தம் கணவன்மாரோடு நெருங்கி ஆடியதால் இருவருடைய அணிகலன்களும் ஒன்றோடுஒன்று மாட்டிக்கொண்டன. இவ்வாறு ஆணும் பெண்ணும் மகிழ்ச்சியுடன் புதுப்புனல் விழாக் கொண்டாடினார்கள்.

அவ் விழாக் காலத்தே யானைகளை நீராட்ட அணியணியாகச் செலுத்தினார்கள். நீராடுவதற்குரிய ஆடைகளை

---

991 பரிபா. 11:74-92

992 அகம். 222:7, 376:10-11

993 பரிபா. 6:11-50

அணிந்துகொண்டு ஆண்களும் பெண்களும் யானைகளின்மீதும் குதிரைகளின்மீதும் ஏறிச் சென்றார்கள். அவ்வாறு செல்லும் போது நீரில் விளையாடுவதற்குரிய விளையாட்டுக் கருவிகளை யும் கொண்டுசென்றனர். பீச்சும் கருவி, பனிநீர் நிரப்பிய கொம்பு, மிதவைகள், நெட்டியால் செய்த தேர்கள் ஆகியவற் றைக் கொண்டுபோய் நன்கு விளையாடியுள்ளனர் எனத் தெரி கிறது. மேலும், அந்நேரத்தில் மக்கள் கூட்டம் மிக நெருக்கமாய் இருந்ததால் இளைஞர்கள்கூடப் போவதற்குத் துன்பப்பட்டன ராம். நல்ல வலிவுடையவர்கள் நீரில் பாய்ந்து நீரைக் கலக்கி விளையாடி மகிழ்ந்தார்கள்.

எனவே, புதுப்புனல் காலத்தில் மக்கள் நீராடி விழாவெடுத் தார்கள் எனத் தெரிகிறது. காவிரி, வையை ஆகிய இரண்டு ஆற்றோரப் பகுதிகளிலும் இவ் விழாச் சிறப்புடன் நடைபெற் றிருக்க வேண்டும். ஆறுகள் இல்லாத இடங்களில் இவ் விழா எவ்வாறு கொண்டாடப்பெற்றது என அறிய இதுவரை எவ் விதச் சான்றும் கிடைக்கவில்லை.

இவ் விழா ஒரே நாளில் முடிந்ததா, சில நாள்கள் நடந்ததா எனக் கூற நேரடிச் சான்று ஒன்றும் காணோம். ஆனால், ஏழு நாள்கள்வரை இது நடைபெற்றிருக்கலாம் என மதுரைக்காஞ் யின் துணைகொண்டு[994] கூறலாம். மேலும், பெருவிழா[995] எனப் பட்டினப்பாலை குறிப்பதைக்கொண்டு சில நாள்கள் நடைபெற் றிருக்கும் எனவும் நினைக்கலாம். இப் பெருவிழாவின்போது வழியில் நறிய பூக்களைச் சிதறிக் கூத்தர்கள் முழவுகொண்டு அடித்து ஆடுவது உண்டு எனத் தெரிகிறது. இதனால் விழாக் காலங்களில் கூத்துகள் நடைபெற்றிருக்க வேண்டும் என்பதை உய்த்துணரலாம்.

உள்ளி விழா

உள்ளி விழா என்ற பெயர் கொண்ட விழா கொங்குநாட்டில் நடைபெற்றது.[996] கொங்குநாட்டார் மணியை இடுப்பில் கட்டிக் கொண்டு தெருவிலே உள்ளி விழாவின்போது ஆடுவது வழக்கம். இதற்குமேல் இவ் விழாவைப்பற்றிய செய்தி எதுவும் தெரிய வில்லை.

வீரர் விழா

வீரர்கள் கொண்டாடும் பூந்தொடை விழா ஒன்று அக நானூற்றில்[997] குறிக்கப்படுகிறது. மறவர் மக்கள் முதன் முதலாக

994 மதுரைக். 427-428
995 பட்டினப். 255
996 அகம். 368:18
997 ஷை 187:8

அம்பு தொடுத்தற்பொருட்டு இவ் விழா நிகழ்ந்தது எனக் கருதலாம். அவ் விழாவின்போது மணல் கொண்டுவந்து பரப்பி விழா நடக்கும் இடத்தைப் பக்குவப்படுத்துவார்கள் எனத் தெரிகிறது. பெரும்பாலும் குதிரை வீரர்கள் இதில் பங்கு கொள்வார்கள். எனவே, தொழில் தொடர்பாக இவ் விழா அமைந்திருந்ததுபோலும்.

கோடியர் விழா

மறவர்களைப் போலவே கூத்தர்களும் தம்மினத்தார்க்கென்று ஒரு விழாக் கொண்டாடினர்போலும். 'கோடியர் விழவு' என இதை அகநானூறு[998] கூறுகிறது. இவ் விழாக்கள் பழைய ஊர்களில்தாம் நடைபெறும்போலும். 'மூதூர்' என்னும் குறிப்பு அவ்வாறு நினைக்கத் தூண்டுகிறது. பலாப்பழம், குரங்கு, மயில் ஆகியவற்றை முழவு, முழவன், விறலி ஆகியவற்றோடு இணைத்து நாகையார் என்ற பெண்பாற் புலவர் பேசுகிறார்.

விழாமிகு வேங்கடம்

வேங்கட மலையில் எப்பொழுதும் விழாக்கள் சிறப்புடன் நடந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது. 'விழவுடை விழுச்சீர் வேங்கடம்'[999] என்னும் குறிப்பு அதனை உறுதிப்படுத்துகிறது. வேங்கடம் எல்லோருக்கும் தெரிந்த இடமாகவும் அங்கு நடைபெற்ற விழாக்கள் ஊரறிந்த ஒன்றாயும் இருந்திருக்க வேண்டும்.

இந்திர விழா

இந்திர விழாவைப்பற்றிப் பழைய இலக்கியங்களில் விரிவான குறிப்பு இல்லை. ஐங்குறுநூறு என்னும் நூலில் 'இந்திர விழவிற் பூவினன்ன'[1000] என ஒரு குறிப்பு வருவதைக்கொண்டு இந்திர விழா நடைபெற்றிருக்க வேண்டுமென ஊகிக்கலாம். இந்திர விழா நிகழ்ச்சியை விளக்கமாகச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தருகின்றன. இவ் விழாக் காலத்தில் மக்கள் ஒன்றுகூடிக் கொண்டாடுவர் என்பதும் ஐங்குறுநூற்றிலிருந்து அறியக் கிடக்கின்றது.

சித்திரை மாதத்தில், சித்திரை ஓரையில் முழுநிலாக் காலத்தில் இவ்விழா நடைபெற்றது என்று கருதுவாருமுண்டு. ஆனால், அவ்வாறு தெளிவாக எந்த இலக்கியத்திலும் குறிக்கப்படவில்லை. சதுக்கபூதத்திற்கு அந்த நாளில் பெருவிருந்து செய்யப்பட்டது

---

998 அகம். 352:4-5

999 ஷெ 61:31

1000 ஐங்குறு. 62:1

என்றுதான் சிலம்பு கூறுகிறதே தவிர, அந்த நாளில் இந்திர விழாக் கொண்டாடப்பட்டது எனச் சிலப்பதிகாரம் கூறவில்லை. ஆகையால், விழா எந்த நாளில் நடைபெற்றது எனத் திட்டவட்டமாகக் கூறவியலாது.

விழாத் தொடங்குமுன் அரசனுடைய முரசத்தை யானை மீது ஏற்றி வள்ளுவ முதுமகன் அவ் விழாநாளைப்பற்றி நெடுகப் பறையறைந்து சொல்வான் என மணிமேகலை வழியாகவும் சிலம்பின் வழியாகவும் அறிகிறோம். அப்பொழுது விழாவுக்குரிய முன்னேற்பாடுகளைச் செய்யுமாறு அவன் கூறுவான். நகரை அழகுபடுத்துமாறும், தெய்வங்களுக்குச் சிறப்புச் செய்யுமாறும், பட்டி மண்டபம் ஏறி ஆராய்ச்சி நடத்துமாறும், பசியின்றி வளமாக வாழுமாறும் கூறி முரசறைவது வழக்கம்.

இவ் விழா, காவிரிப்பூம்பட்டினத்தில் கொண்டாடப் பெற்றதாக அறிகிறோம். அந்த நகரில் நாளங்காடி, அல்லங்காடி என்று பகற்கடைவீதியும் இரவுக் கடைவீதியும் இருந்தன. அந்தப் பகற்கடைவீதியில் ஒரு பூதம் இருந்தது. வீரக் குடியில் தோன்றிய பெண்கள் அந்தப் பூதத்திற்குப் பூ, பொங்கல் முதலியன படைத்துக் குரவையாடி மகிழ்ந்தனர். பிறகு, வீரர்கள் முரசு முழங்க உயிர்ப்பலியூட்டினர். அடுத்து முத்துப்பந்தர் முதலியன உள்ள அரும்பெறல் மண்டபத்திலும், வெள்ளிமன்றம், இலஞ்சிமன்றம், நெடுங்கல் மன்றம், பூதசதுக்கம், பாவை மன்றம் ஆகிய ஐந்து மன்றங்களிலும் பலிகள் கொடுக்கப்படுகின்றன. அதற்குப் பிறகுதான் வள்ளுவ முதுமகன் முரசறைந்து முழக்குதல் நடைபெறும்.

நகரவீதிகள் பூரணகும்பம், பொற்பாலிகை, பாவை விளக்கு ஆகியவற்றினால் அணிசெய்யப்பட்டன. ஐம்பெரும் குழுவும், எண்பேராயமும் அரச குமரரும் குதிரைகளிலும், யானைகளிலும், தேர்களிலும் வந்து அரசனை வாழ்த்துவர். உடனே காவிரியின் புண்ணிய நீரைக் குடங்களிற் கொண்டுவந்து இந்திரனை நீராட்டுவர். சிவன் முதலிய தெய்வக் கோயில்களில் வழிபாடுகள் செய்யப்பெற்றன. அறவோர் பள்ளி முதலிய இடங்களில் அறநெறிச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. இசை ஒரு பக்கம் நிகழ்ந்தது. இவ்வாறு மக்கள் மகிழ்ச்சியுடன் இந்திர விழாக் கொண்டாடியதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

காமவேள் விழா

காமவேள் விழா ஒன்று கொண்டாடப்பட்டதாகக் கலித்தொகையில் இருந்து தெரியவருகிறது. காமவேள் கோட்டம்

எனக் கோயில் அமைப்பு ஒன்று இருந்ததாகச் சிலப்பதிகாரமும் பரிபாடலும் தெரிவிக்கின்றன. ஆனால் பத்துப்பாட்டிலோ கலித்தொகை, பரிபாடல் நீங்கலாயுள்ள எட்டுத்தொகையிலோ காமவேள் கோட்டம் பற்றியோ காமவேள் விழாப்பற்றியோ குறிப்பைக் காணோம்.

காமவேள் விழா இளவேனிற் காலத்தில் கொண்டாடப் பட்டது.[1001] தம் காதலியருடன் காதலர்கள் மகிழ்ந்து விளையாடி அவ் விழாவைக் கொண்டாடுவது வழக்கம் எனத் தெரிகிறது. பிரிந்தவர்கள் அந்நேரத்தில் கட்டாயம் வந்து சேர்ந்திடுவார்கள் என்பதும் புலனாகிறது. ஆகவே, ஆணும் பெண்ணும் கூடி மகிழ்ந்த விழாவாக இது அமைந்திருத்தல் வேண்டும்.

விளையாட்டுகள்

ஒவ்வொருவரும் எப்பொழுதும் வேலை செய்துகொண்டே இருப்பதில்லை. ஓரளவு நேரம் உழைத்தபிறகு ஓய்வு தேவைப் படுகிறது. மேலும், உழைப்புகள் எல்லாம் ஒரே வகையாகவும் அமைவதில்லை. அவற்றுள் உடல் உழைப்பு, அறிவுழைப்பு போன்றவை ஒன்றிற்கு ஒன்று வேறுபட்டவை. உழைப்புக்கும் ஓய்வுக்கும் இடையே பொழுதுபோக்கு என்பது மக்கட்கு அடிப் படைத் தேவையாகிறது. மேலும், சிறுவர் சிறுமியர் பொழுது போக்குக்காக ஏதாவது ஒன்றை அமைத்துக்கொண்டாக வேண்டும். ஆகவே, மக்களாக விளைவித்துக்கொண்டு—படைத்துக் கொண்டு—தம் பொழுதைப் போக்கினர். அவ்வாறு விளை வித்துக் கொள்கின்றவற்றை நாம் விளையாட்டுகள் எனக் கூறு கிறோம். தனி ஒருவன் விளையாட முடியாது. குறைந்தது இரண்டு பேராவது கூடியாடுதல் வேண்டும். இரண்டு பேரி லிருந்து பல பேர்களைக் கொண்டதாக விளையாட்டுகள் சமு தாயத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மன மகிழ்ச்சிக்கும் கூடிப் பழகுவதற்கும் அறிஞர்கள் கண்டுபிடித்த கருவிகளில் விளை யாட்டும் ஒன்றாகும். ஒவ்வொரு சமுதாயமும் தான் கைக்கொண்டு வரும் விளையாட்டுகளை ஆராய்ந்தால் அந்தச் சமுதாயத்தின் நாகரிகநிலை, அறிவுநிலை ஆகியவற்றை நாம் நன்கு அறியலாம்.

நீர் விளையாட்டு

நீர்நிலைகளிலும், பேராறுகளிலும், கடலிலும் குதித்து நீந்தி விளையாடுவது பழந்தமிழர் வழக்கம். ஆழமான நீர்

1001 கலி. 27:24, 30:10-14, 35:14-15

நிலையின் அருகேயுள்ள மரத்தின்மீது ஏறி நின்று அந் நீர்நிலையில் திடும் எனக் குதித்து அதன் அடியிலேயுள்ள மண்ணினை அள்ளிக்காட்டி விளையாடுதலை இக்காலத்திலும் கிராமங்களில் காணலாம். முதுமைப் பருவப் புலவர் ஒருவர் கரையிலுள்ளவர் வியக்குமாறு நெடுநீர்க் குட்டத்தில் 'துடும்' எனப் பாய்ந்து அதன் அடியிலுள்ள மண்ணை எடுத்துக் காட்டிய தம் இளமைப் பருவச் செயலைச் சுவைபடக் குறிப்பிடுகிறார்.[1002]

குட்டங்களில் நீராடுவோர் தம் கையை மேலே கூப்பி முழுகி நீரின் ஆழத்தைக் காட்டி விளையாடுவராம்.[1003]

மகளிர் விளையாட்டு

தம் உடலமைப்பிற்கும் உள்ள இயல்புக்கும் ஏற்ற விளையாட்டுகளைத் தமிழ்ப் பெண்கள் விளையாடினர். மணலில் சிறு வீடு கட்டுதல், கழற்சிக்காய், அம்மானைக்காய் முதலியவற்றைக் கையாற் பிடித்து ஆடுதல், பறவை உயர்ந்து பறக்குமாறு உந்தி பறத்தல், பந்தாடுதல், ஊசலில் ஏறி ஆடுதல், பூக் கொய்தல், புனல் விளையாடல் போன்றவற்றை இளம்பருவப் பெண்கள் விளையாடினர். விளையாடும் மகளிர் கூட்டத்தை 'ஆயம்' என்னும் சொல்லால் குறித்தனர்.[1004]

இரு பெண்கள் இணைந்து நீர் விளையாட்டு நிகழ்த்தியதைக் குறுந்தொகை அழகாகக் குறிக்கிறது. தெப்பத்தின் துணை கொண்டு நீராடுவது அக்கால வழக்கம். ஒருத்தி பிடிக்கும் இடத்தையே மற்றவளும் பிடித்து நீந்த முற்படுவாள். எப்பகுதியை அவள் பிடித்தாளோ அதையே மற்றவளும் பிடித்தாளாம்.[1005]

அவல் இடித்த உலக்கைகளைக் கீழே போட்டுவிட்டு வளையல் அணிந்த மகளிர் வண்டல் விளையாடினர் என அறிகிறோம்.[1006]

'ஓரை மகளிர்' என ஓரை விளையாட்டு விளையாடிய பெண்களை அழைப்பது வழக்கம்.[1007] கரிய சேற்றைக் கிளறி ஆமையின் முட்டையையும், ஆம்பலின் கிழங்கையும் அம் மகளிர் எடுப்பதுண்டு.[1008] பொருநை ஆற்றினருகில் இளமகளிர் தெற்றி (கழங்கு) விளையாடுவர்.[1009] இவ் விளையாட்டை முற்றி நீண்ட

1002 புறம். 243:9-10
1003 பெரும்பாண். 272-273
1004 குறுந். 396:2
1005 ஷை 222:1-4
06 ஷை 238:3
1007 ஷை 316:5, 401:3; புறம். 176:1
1008 புறம். 176:2-4
1009 ஷை 36:4

சிப்பிக்கண் முத்துப்போலும் ஒழுங்குபட்ட மணலிடத்து ஆடினர்.[1010] பின்னியாடுவதையே தெற்றி எனப் புலவர் கூறுகின்றனர்.[1011] சிலர் இதனைக் கைகோத்தாடும் குரவை என்பர்.

பெண்கள் வீட்டருகில் உள்ள மேட்டில் ஏறி நின்றுகொண்டு வழியில் செல்லும் உமணர்களின் உப்பு வண்டிகளை எண்ணிக் கொண்டிருப்பார்கள்.[1012] இக்காலத்தில்கூட இளைஞர்கள் நெடுவழியிலமர்ந்துகொண்டு வழியில் செல்லும் உந்துவண்டிகளை எண்ணி விளையாடி மகிழ்வதைக் காணலாம்.

குழந்தைகள் அழுமானால் அவற்றை அச்சுறுத்தியும் விளையாட்டுக் காட்டியும், அவர்கள் கருத்தை மாற்ற நினைப்பது இயல்பு. குழந்தை அழுகின்றபொழுது ‘புலி வருகிறது’ என்று கூறி அச்சுறுத்தியும், மதியைக் காட்டி அதைக் குழந்தையோடு விளையாட வருமாறு அழைத்தும் மகளிர் குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்டுவது வழக்கமாகும்.[1013]

சிறுமியர் பஞ்சாய்க் கோரையினாற் செய்த பாவையைத் தம் மகளெனப் பாவித்து விளையாடுவதுண்டு.[1014] நெய்தல் நிலப் பெண்கள் உப்பங்கழிகளுக்குப் பக்கத்தில் கிடைக்கும் மலர்களைப் பறித்து விளையாடி மகிழ்ந்தனர். கடல் அலைகளிலும் விளையாடினர்.[1015] பூக்களால் பாவைக்கு அவர்கள் பலவகை ஒப்பனை செய்வதுண்டு.[1016] நெய்தல்நிலச் சிறுமியர் சுறாமீன் கொம்பால் செய்த பலகையினைத் தாழையின் விழுதால் திரித்த கயிற்றால் கட்டி ஊஞ்சல் அமைத்து, அதில் அமர்ந்தாடி மகிழ்ந்தனர்.[1017] மகளிர் காற்பந்தும் கைப்பந்தும் விளையாடினர்.[1018] பந்துகள் நூலால் வரிந்து புனையப்பட்டிருந்தன.[1019]

சிறு பெண்கள் சிற்றில் அமைத்துச் சிறு சோறாக்கும் விளையாட்டைப் பெரிதும் விரும்பினர்.[1020] மரப்பானையும் மரப் பாவையும் வைத்து அவர்கள் விளையாடினர்.[1021] மரத்தினால் செய்யப்பட்ட ஒருவகைப் பாவைக்குக் குழமகன் என்னும் பெயர் வழங்கியது.[1022] முல்லைநிலச் சிறுமியர் முல்லை, பாகற் கொடி

1010 புறம். 53:1
1011 ஷி 53, உ.வே.சா. உரை
1012 ஷி 116:7-8
1013 ஷி 160:22
1014 குறுந். 114:1-2; நற். 68:1-2
1015 ஷி 144:1-2
1016 ஷி 195:6
1017 அகம். 20:6
1018 நற். 12:6, 305;1; அகம். 17:1, 49:1
1019 முருகு. 68 ; பெரும்பாண். 331-332
1020 கலி. 51:1-2, 57:7, நற். 123:8
1021 ஷி 59:5-6
1022 ஷி 66

கள் படர்ந்துள்ள தோட்டப் பகுதிகளில் சிற்றில் இழைத்து விளையாடினர்.[1023] அம் மகளிர் பிடவம், தடவம், தோன்றி, கொன்றை முதலிய பூக்களைக்கொண்டு தழையும் மாலையும் செய்தனர்.[1024]

சிறுவர் விளையாட்டு

குறச்சிறுவர்கள் யானைக் கன்றுடன் சேர்ந்து சுற்றிச் சுற்றி விளையாடி மகிழ்ந்தனர்.[1025] நீர்த்துறையில் படியும் யானைகளின் கொம்புகளை ஊரில் உள்ள சிறு பிள்ளைகள் தண்ணீர் விட்டுக் கழுவி விளையாடுவர்.[1026] நீரிலே காலைவிட்டுக் கலக்கி அவர்கள் விளையாடுவதும் உண்டு.[1027] உலர்ந்த தலையுடைய அலந்தலை மரத்தின் அசைகின்ற நிழலில் மெல்லிய தலையுடைய சிறுவர்கள் அம்புவிட்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.[1028] ஆமானின் அசையும் தலையையுடைய கன்றுகளை இளஞ் சிறுவர்கள் தம்முடைய சிறுதேர்க்குச் சேங்கன்றாகப் பூட்டி விளையாடினர்.[1029] இக்காலத்தில் சிறிய எருமைக் கன்றுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் நாய்க்குட்டிகளையும் வண்டியில் பூட்டிச் சிறுவர் மகிழ வைப்பதைக் கிராமங்களில் காணலாம். தச்சன் செய்த சிறிய தேரினை ஊர்ந்து இன்புறாது, சிறுவர்கள் இழுத்து இன்புற்றனர்.[1030]

கட்டளைக்கல் போன்ற அரங்கை வட்டினால் கீறி நெல்லிக் காயை வட்டாகக்கொண்டு சிறுவர் பாண்டில் ஆடுவது வழக்கம்.[1031] செல்வருடைய குழந்தைகள் தம் தோள்களில் சிறிய பறைகளை மாட்டிக்கொள்வர். அப் பறைகளின் கண்ணில் குருவி வடிவம் எழுதப்பட்டிருந்தது. அந்தச் சிறுவர்கள் சிறிய கோலைக் கொண்டு அக் குருவிகளின்மீது அடித்து ஒலி எழுப்பினர்.[1032] கயிறுகளைப் பனை நாரினால் திரித்து, மரக்கிளைகளில் கட்டித் தொங்கவிட்டு ஊஞ்சலாடி மகிழ்வது சிறுவரியல்பாகும்.[1033]

சிறு ஆண்பிள்ளைகள் தேர்களை உருட்டி விளையாடினர்.[1034] செல்வச் சிறுவர்கள் பெரிய மணிகள் பதிக்கப்பட்ட சிறிய தேரில்

1023 நற். *111:9*
1024 ஷை *102:2*
1025 குறுந். *394:1-3*; புறம். *181:1-3*
1026 புறம். *94:1-2*
1027 ஷை *104:2-3*
1028 ஷை *325:11-12*
1029 ஷை *319:11*
1030 குறுந். *61:1-3*
1031 நற். *3:3-4*
1032 ஷை *58:2-3*
1033 ஷை *222:1*, *368:1-2*
1034 ஷை *250:3*; பெரும்பாண். *248-249*

வீற்றிருப்பர். அந்நிலையில் சேடியர் அத்தேரை இழுத்துச் செல்வதுண்டு.[1035] பூம்புகாரில் கையால் உருட்டும் மூன்று சக்கரங்களைக் கொண்ட சிறிய தேரினை உருட்டிச் சிறுவர் விளையாடினர்.[1036] சிறுவர்கள் மரயானையை வைத்து விளையாடினர்.[1037] சிலர் பனங்குரும்பையைக் கொடியிற் கட்டி இழுத்து விளையாடினர்.[1038] இவ்வாறு நுங்கு தோண்டப்பட்ட பனங்காய்களைக் கொண்டு வண்டி செய்து, அதை இழுத்து விளையாடுவதை இன்றும் ஊர்களில் காணலாம்.

காவிரிப்பூம்பட்டினத்தில் மீனவரின் பெண்பிள்ளைகள் மணலிலே படர்ந்த அடப்பம்பூவைத் தலையிலே கட்டியும், நீரிலிருந்த ஆம்பல் பூவைப் பறித்துச் சூடியும் தங்கள் மன்றிலே ஆட்டுக்கிடாய்ப் போரையும் கவுதாரிப் போரையும் கண்டும் களித்தார்கள்.[1039]

சிறுவரும் சிறுமியரும் கலந்து விளையாடுதல்

இளையவர்களாய் இருக்கும்போது ஆண் பெண் என்னும் வேறுபாடின்றிச் சிறுவரும் சிறுமியரும் கலந்து விளையாடினர். விளையாடுவதற்கு மண்ணாற் பாவை செய்வது மரபு. அதனை வண்டற்பாவை என்பர். அப் பாவையை வைத்து அதற்குப் பூச்சூடி, பொய்கை யோரத்தில் மகளிர் விளையாடினர். அவர்களோடு சிறுவரும் சேர்ந்து விளையாடினர். பின்னர்ச் சிறுமியர் வியக்குமாறு, அவ்விளம் பிள்ளைகள் நீரிற் குதித்து நெடுநேரம் நீச்சலடித்துத் தம் ஆற்றலைக் காட்டி மகிழ்ந்தனர்.[1040]

வீரர் விளையாட்டு

வீரர்களும் உடற்பயிற்சி செய்ததோடு, பொழுதுபோக்காகச் சில விளையாட்டுகளில் ஈடுபட்டு மகிழ்ந்தனர். மதுரையில் வீரர்களின் விளையாட்டுக் களம் ஒன்றிருந்தது. அங்கு அவர்கள் யானைகளோடு விளையாடினர். ஞாயிறு மறைந்தபின் சில வீரர்கள் போர்ப்பயிற்சிபெற்ற யானைகளைத் தங்களைத் தொடர்ந்து வந்து பிடிக்கும்படி ஏவினர். அவ்வாறு அவை தொடரும்போது, அவற்றின் போக்கைத் தடுப்பதற்காகத் தம் மடிகளில் இருந்த கப்பணங்களைத் தரையில் இங்குமங்குமாகப் போட்டுவிட்டு அவர்கள் ஓடினர். யானைகள் அவற்றைக் கண்டு அஞ்சி, அடியெடுத்து வைக்காமல் நின்றுவிட்டன. இதைக் கண்டு வீரர்கள்

1035 கலி. 83:10
1036 பட்டி. 25
1037 கலி. 80:5-8
1038 ஷ 83:8-9
1039 பட்டி. 61-77
1040 புறம். 243:9

மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். இஃது அவர்களுக்கு ஒருவகை விளையாட்டாய் இருந்தது.[1041]

மீனவர் விளையாட்டு

கடலிற்சென்று மீன்பிடித்து வாழ்ந்த பரதவர்கள் உவா நாள்களில் மீன்பிடிக்கச் செல்லாமல் ஆடியும் பாடியும் பொழுதைக் கழித்தனர் என அறிகிறோம். அவர்கள் கொம்பை நட்டு, வெண்டாளி மலர் மாலையினையும், தாழை மலரையும் சூடிப் பனங்கள்ளை உண்டு விளையாடினார்கள்; கடலாடி மகிழ்ந்தனர். உடம்பில் உப்புப் படியுமன்றோ? அது போவதற்காகக் காவிரியில் நீராடினார்கள். நண்டுகளைப் பிடித்தும் சில நேரங்களில் விளையாடுவதுண்டு.[1042]

ஏறு தழுவுதல்

முல்லை நிலத்தில் நடைபெற்ற ஒருவகை வீர விளையாட்டு மிக விறுவிறுப்போடும் துடிப்புணர்ச்சி பீறிடுமாறும் முல்லைக் கலியில் சொல்லப்பட்டுள்ளது. 'ஏறு தழுவுதல்' என்னும் சொற்றொடரால் இவ் விளையாட்டைக் குறிக்கலாம். புறநானூற்றில் ஏறுகளின் மன்றம் 'கொல்லேறு திரிதரு மன்றம்' என்னும் தொடரால்[1043] குறிக்கப்படுகிறது. இந் நிகழ்ச்சியை வீரவிளையாட்டு எனக் கொள்ளாமல் முல்லைநில மக்கள் மணமகளைத் தெரிந்தெடுக்கக் கையாண்ட முறை என்பாருமுண்டு. ஆனால், அவ்வாறு கொள்ள வலுவான சான்றுகள் இல்லை. எனவே, அவ் விளையாட்டில் வெற்றிபெற்ற இளைஞர்களை மணமகனாகத் தெரிந்து மணமுடிப்பதுண்டு எனச் சொல்லலாமேயன்றி அந்த ஒரே முறையால்தான், தம் பெண்ணுக்குரிய மணவாளனைத் தெரிந்தார்கள் எனச் சொல்லுவதற்கில்லை. ஆகையால், ஏறு தழுவல் அக்காலத்தில் முல்லை நிலத்தார் மேற்கொண்ட ஒரு வீர விளையாட்டு எனக் கூறலாம்.

செம்மையாக வளர்க்கப்பட்ட பல நிறமுள்ள காளைகள் தொழுவில் விடப்படும். சிவப்பு, வெள்ளை, கருமைப் புள்ளிகள் நிரம்பிய நிறமாகப் பல்வேறு நிறமுடைய ஏறுகள் வீர விளையாட்டுக்காகவே வளர்க்கப்பட்டன. அவற்றைத் தொழுவினுள் விட்டு அதற்குப்பின் இளைஞர்கள் அத் தொழுவத்துள் அனுப்பப் படுவார்கள். இளைஞர்கள் அந்தக் காளைகளுடன் மோதி

1041 மதுரைக். 594-599

1042 பட்டினப். 99-101

1043 புறம். 309:4

வெல்லவேண்டும். அப்பொழுது மக்கள் அத் தொழுவத்தைச் சுற்றித் திரள்வார்கள். திருமணமாகாத மகளிரும் பெண்களும் அங்குஅவர்க்கெனப் போடப்பட்ட பரண்களில் இருந்துகொண்டு ஏறுகளும் இளைஞர்களும் மோதிப் போராடுவதைப் பார்த்து மகிழ்வார்கள். மக்கள் ஆரவாரமும் பறையொலியும் முழங்கும். அவ்வொலிகள் போரிடுவோர்க்கு உற்சாகம் ஊட்டும். அவை போரிடுவதை,

'எழுந்தது துகள்
ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்புக்
கலங்கினர் பலர்'

என மிகச் சுருங்கிய வாக்கியங்களில் உணர்வு கொப்புளிக்க இலக்கியம் பேசுகிறது.[1044] போர் விளையாட்டு முடிவில் ஏறுகள் வருந்தின என்றும், ஆனால் ஆயர்கள் தம் புண்களுடன் தம் மனைவியரைப் பார்த்துச் சேர்ந்து மகிழ முல்லையம் காட்டுக்குச் சென்றார்கள் என்றும், அதே நோக்கத்துடன் மகளிரும் அக் காட்டுக்குச் சென்றார்கள் என்றும் கலித்தொகை கூறுகிறது.[1045]

எனவே, வியக்கத்தக்க வீர விளையாட்டு, மக்கள் திரண்டு பார்த்த ஒன்றாம். ஆண்டு முழுவதும் அதற்கெனவே ஏறு களைச் செவ்வையாய்ச் சீராய் வளர்த்து வந்தார்கள் எனவும் நாம் அறிகிறோம். இதனை ஆயர்குல மக்களே செய்து வந்துள் ளார்கள். பிற நிலமக்கள் இதில் ஈடுபட்டதாகவோ அவரவரிடங் களில் பின்பற்றியதாகவோ எங்கும் குறிப்பில்லை.

ஊர்திகள்

விலங்குகளோ பறவைகளோ தாமாக அங்கும் இங்கும் செல் வதற்கு ஊர்திகளையோ பிற உதவிகளையோ நாடுவதில்லை. இயற்கையில் தமக்குக் கிடைத்த கால்களையும் இறக்கைகளையும் அவை பயன்படுத்துகின்றன. மனிதனும் தொடக்க நிலையில் தன் கால்களால்தாம் அங்குமிங்கும் சென்றிருப்பான். ஆனால், மனித அறிவு தனக்கும் சமுதாயத்திற்கும் பயன்படுமாறு ஊர்தி களைக் கண்டுபிடிக்கத் தொடங்கிய காலம் நாகரிக வளர்ச்சியில் ஒரு திருப்புமுனையாகும். தனி மனிதன் குடும்பமாக வாழத் தொடங்கியதும் தன்னை மட்டுமன்றி பிறரையும் பாதுகாக்க

1044 கலி. 102:21-24 1045 ஷை 101:47-50

வேண்டியவன் ஆனான். ஆகவே, இடம்விட்டு இடம் பெயரும் போது தான் மட்டுமன்றித் தன் குடும்பத்தையும் அழைத்துப் போக வேண்டுமன்றோ? அவ்வாறு இயலாதபோது, தான் போய்ப் பொருள்களைத் தேடிச் சேகரித்துக்கொண்டு திரும்பினான். பொருள்களை அவன் ஒருவன் எவ்வளவு கொண்டுவர முடியும்? வாணிக நிலை தொடக்கத்தில் பண்டமாற்றாக இருந்ததால் பண்டங்களைக் கொண்டுசெல்லுவதும் பண்டங்களைத் திரும்பக் கொண்டுவருவதும் சமுதாய மரபாக அக்காலத்தில் இருந்தன. அதனால், அவனுக்கு அவற்றைக் கொண்டுசெல்லவும், தான் நீண்ட தூரம் செல்லவும் ஊர்திகள் தேவைப்பட்டன. ஆகவே, அவன் ஊர்திகளைக் கண்டுபிடித்தான். இந்த ஊர்திகளின் தன்மையைக்கொண்டும் அவற்றின் அளவுகளைக்கொண்டும் ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியை நாம் அறுதியிட முடியும். எனவே, பழங்காலச் சமுதாயத்தில் ஊர்திகளின் அடிப்படையில் நாகரிகம் எந்த அளவு வளர்ந்திருந்தது என்பதைக் காண்பது இன்றியமையாததாகின்றது.

மூவகை வழி

இடம்விட்டு இடம் செல்வதற்குப் பொதுவாக மூன்று வழிகள் உள்ளன. அவை நிலவழி, வான்வழி, நீர்வழி என்பனவாம். இவ் வழிகளைப் பழந்தமிழர் அறிந்திருந்தனரா? அறிந்திருப்பின் அவற்றில் பயன்படுத்திய ஊர்திகள் யாவை? என்பதைக் காண்பது மிகச் சுவைமிக்கதாம்.

விலங்கு ஊர்தி

ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு நிலவழியாகச் சென்றார்கள் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. நடந்தும், விலங்குகளின்மீது ஏறி அமர்ந்தும், விலங்குகள் இழுக்கும் வண்டிகளில் அமர்ந்தும் சென்றனர். அவ்வாறாயின் எந்தெந்த விலங்குகளைப் பயன்படுத்தினார்கள் என்பதையும் வண்டிகள் எவ்வாறு இருந்தன என்பதையும் காணலாம்.

யானையின்மீது அமர்ந்து ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்வதுண்டு. சில நேரங்களில் அந்த யானையின் முகம் முகபடாம் போட்டு அழகுபடுத்தப்பட்டிருக்கும். யானை நடந்து செல்லும்போது வழியில் உள்ளார் விலகிக் கொள்வதற்காக இரண்டு பக்கமும் மணிகள் கட்டப்பட்டு, அது நடக்க நடக்க ஒலியுண்டாகுமாறு செய்யப்பட்டிருந்தன. எனவே, தெரு

விதிகள் சில அந்தக் காலத்தில் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும் என்பதை நாம் உய்த்துணரலாம்.

எருமைகள்மீது சிறுவர்கள் ஏறிச் செல்வதுண்டு. இதை விளையாட்டுகள் என்னும் தலைப்பில் காண்க. கோவேறு கழுதையில் ஏறிக்கொண்டு மகிழ்ச்சியாய்ச் செல்வதுண்டு.[1046] குதிரைகளில் ஏறிச் சென்றதால்தான் காரிக்குதிரை, ஓரிக்குதிரை என்னும் தொடர்கள் காணப்படுகின்றன.[1047]

வண்டிகள்

காலால் தன் போக்குவரவைச் செய்த மனிதன்[1048] காலமும் சூழ்நிலையும் இடமும் கற்பித்த பாடத்தால் விலங்குகளை ஊர்தியாகப் பயன்படுத்தினான். அதன்பிறகு சக்கரங்களையும் வண்டிகளையும் கண்டுபிடித்தான். சக்கரக் கண்டுபிடிப்பே போக்குவரத்தையும் வாணிகத்தையும் வசதிப்படுத்தியது எனக் கூறின் மிகையாகாது. பழந்தமிழகத்தில் உள்நாட்டு வாணிகமும் போக்குவரவும் வண்டிகளைக்கொண்டு நடைபெற்றன.

கடலில் விளைந்த உப்பை மற்றப் பகுதிகளில் விற்பதற்குச் செல்லும் உமணர் வண்டிகளைச் சங்க இலக்கியங்கள் பல இடங்களில் பேசுகின்றன.[1049] பறம்பு மலையில் மகளிர் மேட்டில் நின்றுகொண்டு உப்பு வண்டிகளை எண்ணிக்கொண்டிருந்தார்களாம். சிலப்பதிகார ஆசிரியர் மாதவி 'வையம்' என்ற வண்டியில் ஏறிச் சென்றதாகக் கூறுகிறார். 'வையம்' என்பது 'கொல்லாப் பண்டி, கூடாரப் பண்டியுமாம்'[1050] என அரும்பதவுரைகாரர் விளக்கம் தருவது கவனித்தற்குரியது. வண்டிகள் முன்பு பண்டிகள் எனத் தமிழில் அழைக்கப்பட்டனவென்பதை இடைக்கால இலக்கியமாகிய சிந்தாமணியும் காட்டும்.[1051] ஆயினும் வண்டிகளின்மீது கூண்டுகள் இருந்தனவா, அவை எவ்வாறு அழகுபடுத்தப்பட்டிருந்தன என்பதனை அறியத் தெளிவான சான்றுகள் காணோம்.

தேர்

வேந்தரும், வீரரும், ஆண்மக்களும் தேரில் சென்றதாக இலக்கியங்களில் பேசப்படுகின்றது.[1052] தேர்களைக் குதிரைகளே

1046 சிலப். 6:119
1047 சிறுபாண். 110, 111
1048 ஷி 7-10
1049 புறம். 102:1-4, 313:5
1050 சிலப். 6:1-20; அரும்பதவுரை
1051 சிந்தா. 2621:3
1052 அகம். 34:10, 35:15, 36:13

இழுத்துச் சென்றன என்பதையும் அறிகிறோம். 'கொய்சுவல் புரவி கொடித்தேர்ச் செழிய'[1053] என்னும் வரி அதனை வற்புறுத்தும். குதிரைகளைப் புரவிகள் எனக் கூறுவது வழக்கம்.[1054]

தேர் எவ்வாறு செய்யப்பட்டிருந்தது என்பதனைச் சிறுபாணாற்றுப்படை விளக்குகிறது.[1055] தேரின் சக்கரம் முழுநிலாக் காலத்து வெண்மதிபோன்ற (குறட்டையும் கும்பத்தையும்) அதன் வெளிவட்டம் போன்ற வட்டையையும் அவற்றை இணைக்கும் ஒளிக்கதிர்கள் போன்ற ஆரக்கால்களையும் கொண்டிருந்தனவாம். கரிய உளிகளால் அந்தக் குறட்டில் துளைகள் செய்து ஆரக்கால் பொருத்தப்பட்டு வட்டைகளில் இணைக்கப்பட்டன எனக் கூறப்படுகிறது; அத் தேரில் அழகான சாதிலிங்கப் பலகைகள் அடிப்பாகமாக நின்று இணைக்கப் பெற்று பொலிவைத் தந்தன. 'கருந்தொழில் வினைஞ'ராகிய தச்சர்களின்[1056] வேலைப்பாடு அதில் இருந்தது. ஓடுவதற்கு இலகுவாகவும் இருந்தது. 'ஊர்ந்து பெயர்பெற்ற' என்னும் தொடர் அந்த வகைத் தேர்களின் விளம்பரத்தையும் புகழையும் காட்டும். இத் தேர்கள் அழகிய நடையுடைய கவர்ச்சியான முகங்களைக் கொண்ட பாண்டில்களால் இழுத்துச் செல்லப்பட்டன. வண்டிகளை இழுக்கும் குதிரை அல்லது எருதுகளுக்குப் பாண்டில்கள் என்னும் பெயர் வழங்கியதுபோலும். அவ்வாறு வண்டிகளை இயக்குபவர்கட்கு 'வலவன்' (ஓட்டுபவன்) என்னும் சொல் அப்பொழுது வழங்கியுள்ளது.[1057]

பழந்தமிழகத்தில் வண்டிகள் வரிசையாகத் தொடர்ந்து செல்வது உண்டு. அவ்வாறு தொடர்ந்து செல்லும் வண்டிகளின் தொடர்நிலையினை 'ஒழுகை' எனத் தமிழ் இலக்கியம் குறிக்கிறது.[1058] வணிகப் பொருள்களை ஏற்றிச் செல்லும்போது வண்டிகளின் பின்புறத்தில் காவலுக்காக அல்லது பாதுகாப்புக்காகக் குரங்குகளைப் பின்புறத்தில் வரச் செய்வதும் உண்டு.[1059]

சக்கரத்தைப் பெரும்பாலும் தேர்க்குப் பயன்படுத்தியதனால் போலும் குயவர்கள் பானை வனைவதற்காகப் பசிய மண்ணைச் சக்கரத்தில் வைத்துச் சுற்றினார்கள் எனச் சொல்ல வந்த கோவூர்கிழார் சக்கரத்தைத் 'தேர்க்கால்' என்னும் சொற்றொடரால் குறிக்கின்றார்.[1060]

1053 அகம். 36:13
1054 புறம். 299:2
1055 சிறுபாண். 252, 260
1056 புறம். 290:4-5
1057 சிறுபாண். 260
1058 ஷை 55
1059 ஷை 56
1060 புறம் 32:8

தேர்கள் ஓடும்பொழுது துகள்கள் எழும்பின என்ற குறிப்பிலிருந்து அந்தக் காலத்தில் இருந்த தெருக்களின் நிலையையும் ஒருவாறு உணரலாம்.[1061] சில தெருக்கள் வளைவுகளுடன் இருந்தன எனவும் அறிகிறோம்.[1062]

நீரைக் கடந்து செல்ல ஊர்திகளைக் கண்டுபிடித்திருந்தார்கள். கடல் கடந்து வெளிநாடுகளுக்குச் செல்லவும் அறிந்திருந்தார்கள்.

மரக்கலன்கள்

பொன் பரிசங்களை வெளிநாடுகளிலிருந்து கலம் கொண்டு வந்ததென்றும் அந்தக் கலத்திலிருந்து தோணிகளின் உதவியால் அவை கரை சேர்க்கப்பட்டன என்றும் பரணர் குறிக்கிறார்.[1063] கழிகளில் பயன்படுத்தப்படும் தோணி எனக் கூறுவதால் கடல், கடற்கழிகள் என்னும் இரு இடங்களைப்பற்றியும் அறிகிறோம். கழிமுகங்கள் ஆழமற்றவையாதலால் கலங்கள் அங்கே வரமுடியா என்பது அறிந்த ஒன்று. இன்றைய நிலையிலும் இப்பேர்ப்பட்ட அமைப்பைக் காண்கிறோம் அன்றோ? தோணிகள் கடலில் மண்டிக் கிடந்தன எனப் பொன்முடியார் கூறுகிறார்.[1064]

மீன்களை விற்றுவிட்டு நெற்குவைகளை நீர்வழியாக 'அம்பி' என்னும் படகு வழியாகக் கொண்டுவருவதுண்டு எனத் தெரிகிறது.[1065] நெற்குவைகள் தடுக்கப்பட்டிருந்ததால் போலும் வீடுபோல அம்பி உயர்ந்திருந்தது.

'திமில்' என்னும் பெயருடைய தோணியும் இருந்ததாக எருமை வெளியனார் கூற்றால் அறிகிறோம்.[1066] அவை நீரில் பிளந்து செல்லும் காட்சி அந்தக் காலப் புலவர்களைக் கவர்ந்துள்ளது.

அருமையான பொருள்களைக் கொண்டுவருவதற்காகப் பெரிய ஒலி செய்யும் வங்கங்கள்[1067] (கப்பல்கள்) பல திசைகளில் சென்றன என்னும் குறிப்பிலிருந்து 'வங்கம்' என்பது பெரிய கப்பலுக்குப் பெயராய் இருந்தது என்றும், அது பேரொலி செய்யும் என்றும், நீர்வழிப் பொருள்களைக் கடத்தப் பயன்பட்டது என்றும் அறியலாம்.

1061 புறம். 315:1-2
1062 ஷை 345:3
1063 ஷை 343:5-6
1064 ஷை 299:3
1065 ஷை 261:4
1066 ஷை 303:7
1067 பதிற். 52:4

கடலில் 'நாவாய்' என்ற ஊர்தி வழங்கியது எனப் புறநானூறு கூறுகிறது.[1068]

வெள்ளை உப்பை விற்றுவிட்டு நெல்லை வாங்கிவந்த ஓடங்களுக்குப் 'பஃறி' என்னும் பெயர் இருந்தது.[1069]

வானவூர்தி

வான்வழியாகச் செல்லும் ஊர்திகள் இருந்தனவா என உறுதியாகக் கூற இயலாது. எனினும் வான் ஊர்தி என்னும் கருத்து இருந்தது எனக் கூறலாம். 'வானவூர்தி' என்னும் தொடர் புறநானூற்றில் காணப்படுகிறது. ஓட்டுபவன் இல்லாமலேயே அது சென்றது என்னும் பொருள்பட 'வலவன் ஏவா வானவூர்தி'[1070] என்னும் சொற்றொடர் காணப்படுகிறது. எனவே, வானத்தில் ஊர்ந்து செல்ல முடியும் எனக் கருதியிருக்கிறார்கள் என உறுதியாக நம்பலாம்.

1068 புறம். 13:5; பட்டினப். 174

1069 பட்டினப். 30

1070 புறம். 27:8

இயல் 2

பொருளியலும் வாணிகமும்

பொருளும் உயர்வும்

ஒரு நாட்டின் நாகரிக நிலைக்கு அடிப்படையாய் அமைவது அந் நாட்டின் பொருளியலே. உயர்ந்த எண்ணங்களையே 'நாகரிகம்' என்று குறிப்பிடும் வழக்கம் இருப்பது உண்மையே. ஆயினும் எண்ணமுதிர்ச்சி மட்டும் நாகரிகத்தை வரையறுக்கப் போதுமானது என்று சொல்லமுடியாது. நகரங்கள், செல்வ வளம் ஆகியவை இல்லாத சமுதாயங்களை நாகரிகம் பெற்றவை என்று கூறுவது வரலாற்று நோக்கில் பெரும்பாலும் பொருத்தமற்றதாகும். ஆகவே, ஒரு சமுதாயத்தின் நாகரிக நிலையை அதன் பொருளடிப்படையிலே மதிப்பிட முடியும். இந்தக் கூற்றை 19ஆம் நூற்றாண்டு மேதை கார்ல் மார்க்சின் கூற்றாகத்தான் கொள்ள வேண்டும் எனக் கருதவேண்டா. சங்ககாலத்திலேயே இந்த எண்ணம் ஊடாடியிருந்தது என்பது தொகைநூல்களை ஊன்றி நோக்கினால் தெரியவரும்.

பொருளின் சிறப்பு

'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை'[1] என்னும் வள்ளுவர் கூற்றின் திட்பத்தை விளக்க வேண்டியதில்லை. 'அறன்கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும் பிறன்கடைச்செலாஅச் செல்வமும் இரண்டும் பொருளின் ஆகும்' என்னும் உலகியலுண்மையைச்[2] சங்கப் பாடல்களில் பரக்கக் காணலாம். அறமும் இன்பமும் பொருளைப் பற்றுக்கோடாகக் கொண்டவை என்பது இப் பாடல்கள் கூறும் உண்மை. பொருள் இயற்ற எந்த வருத்தத்தையும் பாராது உழைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தனர் அக்காலத்தவர். 'அறம்தலைப் பிரியாது ஒழுகலும், சிறந்த கேளிர் கேடுபல ஊன்றலும் நாளும் வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கு இல்' எனச் செய்வினை புரிந்த நெஞ்சினர்தாம் போற்றப்பட்டனர்.[3]

---

[1] குறள். 247

[2] அகம். 155:1-3

[3] அகம். 173:1-3

சான்றுகள்

சங்ககாலத்தின் அகவாழ்க்கையையும், போர்முறைகளையும் அறிந்துகொள்ளும் அளவுக்குப் பொருளியலைப்பற்றி அறிந்து கொள்ள முடியவில்லை. சங்கப் புலவர்களின் தலையாய நோக்கம் காதலையும் போரையும் சிறப்பித்துப் பாடுவதாக இருந்தது. அதனால் பொருளியல் பற்றிய செய்திகள் மிகக் குறைந்த அளவி லேயே காணப்படுகின்றன. செய்திகள் யாவற்றையும் திரட்டிப் பார்க்கும்பொழுது, குறைவாக இருந்தாலும், ஓரளவு முழுமை யான பொருளியல் வடிவம் புலப்படுகிறது. பொருளியலின் ஒரு கூறான வெளிநாட்டு வாணிகத்தைப்பற்றிப் பழங் கிரேக்க நூல் கள் பேரளவிற்குச் செய்திகளைக் கொடுக்கின்றன. இச் செய்தி களிலும் குறைகள் இல்லாமலில்லை. எடுத்துக்காட்டாக இவற்றில் குறிப்பிடப்படும் சில கடற்கரைத் துறைமுகங்கள் எங்கேயிருந்தன என்பதைத் துணிந்து சொல்ல இயலவில்லை. ஏற்றுமதி இறக்கு மதிப் பொருள்களின் அளவையும் மதிப்பையும் அளந்தறிய முடிய வில்லை. ஆயினும், உள்நாட்டு வாணிகத்தைவிட வெளிநாட்டு வாணிகம்பற்றி அதிகச் செய்திகள் கிடைக்கின்றன என்பதை மறுக்க இயலாது.

முன்னோர் இயல்பு

எல்லாப் பழைய சமுதாயங்களைப்போலவே, சங்ககாலத் தமிழ்நாட்டுச் சமுதாயம் ஏற்றத்தாழ்வுகள் மலிந்த பொருளிய லையே கொண்டிருந்தது என்பது இலக்கியச் சான்றுகளை மேற் போக்காகப் பார்த்தாலே தெரியவரும். ஊனும் ஊணும் சலித்து விட்டால் பால் அளைந்து செய்த பண்ணியங்களையும், பாகு கூட்டிச் செய்த இன்னடிசிலையும் உண்ண வசதி படைத்த கரும்பனூர் கிழான்[4] போன்ற பெருநிலக்கிழார்கள் ஒரு பக்கமும், மழைநீரையுங்கூடச் சேமித்து வைக்க இயலாது பங்கிட்டு உண்டு 'நிறையா வாழ்க்கை' வாழ்ந்தோர்[5] மற்றொரு பக்கமும் வாழ்ந் ததைப் பார்க்கிறோம். விரைந்து செல்லும் தேர்களைப் பெற்று நெடுங்கொடி பறக்கும் பேரூர்களில் நிலையாக வாழ்ந்த செல்வர் களும்[6] இருந்தார்கள். புரவலரிடம் இரந்துபெற்ற பொருள்களை 'நாளைக்கு' என்று சேர்த்து வைக்காமல், அப்போதைக்கப்போதே உண்டு களித்துத் தங்களுக்கென்று ஓர் ஊரில்லாமல் நாடோடி களாகத் திரிந்த கோடியர்களும் இருந்தார்கள்.[7] இந்தப் பொரு ளியல் ஏற்றத்தாழ்வுகள் தொடக்கத்தில் அவரவர் செய்த

---

4 புறம். 381
5 ௸325:3-5
6 நற். 45:4-5
7 அகம். 301:17-24

தொழில்களின் அடிப்படையாக அமைந்தன (நாளடைவில் இத் தொழில், பொருளியல் ஏற்றத்தாழ்வுகளே சாதி வேறுபாடுகளாக மலர்ந்தன). ஆகவே, சங்ககாலத் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தொழில்களையும் முறையாக அறிந்து கொள்வது இன்றியமையாதது.

வேளாண்மை

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்னும் வள்ளுவர் குறள் சங்ககாலத்தை ஒட்டிய நூற்றாண்டுகளில் வேளாண்மைக்கு இருந்த முதலிடத்தை உறுதிப்படுத்துகிறது.[8] இதைவிடத் தெளிவாக வெள்ளைக்குடி நாகனார் உழவின் சிறப்பைக் கூறுகிறார். 'அரசனுடைய மறவெற்றி போர்க்களத்தில் விளைவதில்லை; கலப்பை(ஏர்)உழுத சால்களில் தாம் விளைகிறது' என்று பொருள்பட 'பொருபடை தரூஉங் கொற்றமும், உழுபடை ஊன்றுசான் மருங்கின் ஈன்றதன் பயனே' என்று கூறி மேற்செல்கின்றன அவர் பாடிய புறப்பாட்டடிகள்.[9] இவ்வாறு புகழ்ந்து கூறப்படும் மிக அடிப்படையான இத் தொழிலைச் சமுதாயத்தில் எத்தனை விழுக்காட்டு மக்கள் மேற்கொண்டிருந்தார்கள் என்று கணித்தறிவது இயலாத செயல் ஆகும். நாட்டுப்புறங்களில் வாழ்ந்த பெரும்பாலான மக்கள் ஏதோ ஒருவகையில் இத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள் என்றே கொள்ளவேண்டும். நகர மக்களுக்கு இது ஒரு துணைத்தொழிலாக இருந்திருக்கக்கூடும். பெரும்பாலான மக்கள் நாட்டுப்புறங்களில் (ஊர்களில்) தாம் வாழ்ந்தார்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியரின் கருத்தின்படி, இருவகைப்பட்ட வேளாளர் இருந்ததாகக் கொள்வது வழக்கமாக இருந்துவருகிறது.[10] ஒருவகையினர் உழுவித்துண்ட 'வேளிர்' எனப்பட்ட உயர்குடி வேளாளர் என்றும், இரண்டாவது வகையினர் நிலத்தில் நேரடியாக இறங்கி உழுதுண்ட வேளாளர் என்றும் கொள்கின்றனர். நச்சினார்க்கினியர் உரை தொல்காப்பியர் காலமரபை அப்படியே எதிரொலிக்கிறது எனக் கொள்ளமுடியாது. அப்படியே கொண்டாலும், உண்மையில் இந்தக் கருத்து எந்த உண்மையை உணர்த்துகின்றது என்பது விளங்கவில்லை. 'உழுவித்துண்ட வேளிர் மட்டுமே நிலச்சொந்தக்

---

8 குறள். 1031
9 புறம். 35:25-26
10 Subramanian, N., *Sangam Polity* (1966) p. 280

காரர்களாக இருந்தார்களா, உழுதுண்டவர்கள் வெறுந் தொழி லாளிகள் மட்டுந்தாமா? அவர்களுக்கு நிலம் சொந்தமாக இல்லையா?' என்பன போன்ற வினாக்களுக்கு இந்தக் கருத் திலிருந்தே விடையை எதிர்பார்க்க முடியாது. உண்மையில் வேளிர் (வேள் என்னும் வேர்ச்சொல்லை விட்டுவிட்டால்) வேளாண்மையில் எந்த வகையிலாவது ஈடுபட்டிருந்தார்களா என்பதை நிறுவ இப்போது திறமான சான்றுகளில்லை.

உழுதுண்ட உழவன் சொந்த நிலங்களைப் பெற்றிருந்தான் எனக் கருத வேண்டியுள்ளது. எந்த இடத்திலும் பெரிய நிலக் கிழார்களுக்கு சிறு உழவர்கள் மேல்வாரம் கொடுத்தார்கள் என்ப தாகக் குறிப்புகள் இல்லை. உழவு வேலைக்குச் சொந்தமாகக் கால்நடைகளை வைத்திருந்த உழவர்கள் குறிப்பிடப்படுகிறார் கள். ஓர் ஏர் வைத்திருந்த உழவனும்[11] இருந்தான். பல எருது களை வைத்திருந்த உழவர்களும்[12] இருந்தார்கள். எருமைகளை யும் உழவுக்குப் பயன்படுத்தினார்கள்.[13] வேளாண்மைக் கருவி களான கலப்பை, உருளை முதலியவற்றை வைக்கத் தனிக் கொட் டில்கள் இருந்தன.[14] உழவர்களின் வீடுகள் வைக்கோலால் வேயப்பட்ட குவிந்த குடில்களாக இருந்தன.

மருத நிலத்து உழவுமுறை அதாவது, நன்செய் வேளாண்மை பெரும்பாலும் இன்றுள்ள முறையையே ஒத்திருந்ததாகத் தெரி கிறது. முதலில் நிலம் நன்றாக உழப்பட்டது. 'காளைகள் தங்களுக்குள் சண்டையிட்டு உழப்பியதன் காரணமாக வயல் உழாமலே நுண்மையான சேற்றைப் பெற்றது' என்னும் பெரும் பாணாற்றுப்படைக் குறிப்பிலிருந்து[15] உழுவது மிக வழக்கமான செயல் என்பதை உணரலாம். இப்படிப்பட்ட உழுத வயலில் நாற்று நடப்பட்டது.[16] அதாவது, முதலில் நாற்றங்காலில் வளர்க்கப்பட்ட பயிர், பறிக்கப்பட்டு வயல்களில் நடப்பட்டன. நெல்லை அப்படியே விதைப்பது வழக்கமில்லை என்பது இதி லிருந்து தெரிகிறது. விளைந்து முற்றிய நெற்பயிரை அறுவடை செய்து,களத்தில் சேர்த்து,மாடுகளைக்கொண்டு போர் அடித்துப் பின் பதர்போகத் தூற்றி நெல்லைக் குப்பையாகச் சேர்ப்பது பற்றிப் பெரும்பாணாற்றுப்படையில் அழகாக விவரிக்கப்பட் டுள்ளது.[17]

---

11 குறுந். 131:5
12 புறம். 289:2
13 நற். 60:2
14 பெரும்பாண். 188-89
15 ஷை 210-11
16 ஷை 212
17 ஷை 230-40

வெண்ணெல்,[18] செந்நெல்[19] என்ற வகைகள் அதிகமாக மருதநில வயல்களில் விளைவிக்கப்பட்டன. நேரடியாகக் குறிப்புகள் இல்லையென்றாலும் வாழையும் மருதநில வயல்களில் பயிர் செய்யப்பட்டதாகக் கொள்ளலாம்.[20] கரும்பு மிகப் பழக்கப்பட்ட பயிர் என்பது பல குறிப்புகளிலிருந்து தெரிய வருகிறது.[21] கரும்பாலை பல இடங்களில் குறிக்கப்படுகிறது.[22] நெல்லை அறுவடை செய்தவுடன் மறுமுறை நெல் பயிரிடும்வரை வயல்களில் உழுந்துபோன்ற பயறுவகைகள் விளைவிக்கப்பட்டன. 'அரிகாற் பெரும்பயறு' என்று ஓர் ஐங்குறுநூற்றுப் பாடல் குறிப்பிலிருந்து இதை அறியலாம்.[23] அரிகால் என்பது அறுவடை செய்யப்பட்ட வயல் ஆகும். இவ்வாறு நன்செய் நிலங்களில் பயறு பயிர்செய்வது இன்றும் வழக்கில் உள்ளது.

வயல்களுக்கு வேண்டிய நீர் ஆறுகளிலிருந்தும் குளங்களிலிருந்தும் பெறப்பட்டது. கரிகாலன் குளந்தொட்டு வளம் பெருக்கியதை[24] யாவரும் அறிவர். 'குளக்கீழ் விளைந்த வெண்ணெல்லை' ஒரு புறநானூற்றுப் பாடல் குறிக்கிறது.[25] 'உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே; அதனால், நீர்நிலைகள் பெருக வகை செய்வது அரசர் கடமை' என்று புலவர்கள் அறிவுரை கூறினர்.[26]

ஆகவே, நன்செய் வேளாண்மை நன்கு வளர்ச்சியடைந்திருந்தது என்று கருதலாம். இவ் வேளாண்மையில் ஈடுபட்டிருந்தவர் நல்ல செல்வச் செழிப்போடு இருந்தார்கள் எனத் தெரிகிறது. இவர்களின் வீடுகளில் இருந்த தானியக்குதிர்கள் எப்போதும் நிறைந்து ஏணிக்கு எட்டாத அளவுக்கு உயரமாக நின்றன.[27]

மருதநில உழவு முறையிலிருந்து முல்லை, குறிஞ்சிநில உழவு முறைகள் வேறுபட்டனவாக இருந்தன. வித்தி வான் நோக்கும்

---

18 மலைபடு. *471*; அகம். *40:13, 204:10, 236:4*; புறம். *33:5*; நற். *350:1*; குறுந். *269:5*

19 பதிற். *71:4*; பெரும்பாண். *230* பட்டினப். *13*; நற். *73:8, 275:1*; அகம். *116:2*; புற. *344:1, 390:22*

20 பொருநர். *208*; பட்டினப். *16*; அகம். *141:20*

21 பொருநர். *193*; முல்லைப். *32*; பட்டினப். *9*; ஐங்குறு. *4:4, 65:1*; பதிற். *13:3, 50:3*

22 பெரும்பாண். *260-62*; மதுரைக். *258*; மலைபடு. *341*; ஐங்குறு. *55:1*

23 ஐங்குறு. *47:3*

24 பட்டினப். *284*

25 புறம். *33:5*

26 ஷ *18:21-29*

27 பெரும்பாண். *245-47*

புன்புலங்கள் இவை. ஆகவே, மழை பெய்ததும் ஈரம் காய்வதற்கு முன்னால் மிகவும் விரைந்து செயலாற்ற வேண்டியவர்களாக இப் பகுதி உழவர்கள் இருந்தார்கள்.[28] கார்காலத்தில் நன்கு மழை பெய்தவுடன் அடிமண் மேலே வருமாறு நன்றாக உழுது வரகு, தினை, எள், அவரை முதலிய தானியங்கள் முல்லை நிலங்களில் விதைக்கப்பட்டன; பயிர் வளரும்பொழுது களை பிடுங்கப் பட்டுப் பாதுகாக்கப்பட்டது.[29] குறிஞ்சி நிலங்களில் அதாவது, மலைசார்ந்த பகுதிகளில் தினை முதலிய தானியங்கள் சில சமயம் உழாமலும், சில சமயம் உழுதும் விதைக்கப்பட்டன.[30] உழாமல் விதைக்கும் முறை மலைப்பகுதிகளில் பல இடங்களில் இன்றும் உள்ளது. காடுகளைத் தீமூட்டி வெந்த சாம்பலில் விதைகளையிட்டுக் கிளறிவிடுவது இந்த முறை. மலைபடுகடாம் குறிஞ்சி முல்லைநில விளைபொருள்களாகக் கீழ்க்காண்பவற்றைக் குறிப்பிடுகிறது: எள், தினை, அவரை, வரகு, ஐவன வெண்ணெல் (மருதநில வெண்ணெல்லினின்றும் வேறுபட்டது இது), கரும்பு, தோரை, இஞ்சி, ஐயவி (கடுகு), கவலைக்கிழங்கு, வாழை, மூங்கில் நெல், நாவற்கனி, உயவைக்கொடி, கூவைக்கிழங்கு, தேமாங்கனி, ஆசினிப்பலா, பலா.[31] இவற்றில் பலவற்றை இயற்கையாக விளைந்தவையாகக் கொள்ளவேண்டும். சில பயிர் செய்யப்பட்டிருக்கலாம். கோடையில் விளைந்த பருத்தியைப்பற்றி ஒரு குறிப்பு உள்ளது.[32]

மேற்கண்டவாறு தமிழ்நாட்டில் வேளாண்மை செய்யப் பட்ட பொருள்களைப்பற்றி ஓரளவு அறிந்துகொள்கிறோம். பெரும்பாலும் தன்னிறைவு கொண்ட தொழிலாக இஃது இருந்தது எனக் கருதலாம். வேளாண்மையில் ஈடுபட்டோர் எப் பொழுதும் மகிழ்ச்சியாகவே இருந்தார்கள் என்பதற்கில்லை. விதைநெல்லையே உண்ணும் அளவுக்கு உழவன் வறுமையில் வாடியதும் உண்டு.[33] விளைந்த வரகு, தினை அவ்வளவும் இரவலர்களுக்குக் கொடுத்துத் தீர்ந்த சமயத்தில், தங்களிடமிருந்து பிறர் கடன் வாங்கிய தானியமும் திரும்ப வாராது என்ற நிலையில் விதைத்தினையை உரலிலிட்டுக் குற்றி விருந்தாற்றும் ஒரு மனைக்கிழத்தியையும் புறநானூற்றில் பார்க்கிறோம்.[34] இப்படிப் பட்ட நெருக்கடிநிலை சில காலங்களில் ஏற்பட்டாலும் மற்றத் தொழில்களில் ஈடுபட்டவர்களைவிட உழவர்கள், குறிப்பாக மருதநில உழவர்கள் நல்ல நிலையிலிருந்தார்கள் எனலாம்.

---

28 குறுந். *131:3-5*
29 அகம். *194:9*; குறள். *550, 1038*
30 புறம். *168:3-6*
31 மலைபடு. *105-144*
32 புறம். *393:12*
33 ஷை *230:12-13*
34 ஷை *333:9-13*

ஆயர் தொழில்

வேளாண்மையோடு இயைபுடைய தொழிலாக ஆயர் தொழிலான கால்நடை வளர்த்தலைக் கொள்ளலாம். வேளாளரே நிறையக் கால்நடைகளை வைத்துப் பேணிவந்தார்கள். உழவு வேலைகள் யாவற்றிற்கும் கால்நடைகள் இன்றியமையாதன. உழுதல், களத்தில் போர் அடித்தல், விளைந்த தானியங்களை ஏற்றிச் செல்லல் முதலான வேலைகளுக்கு இவை பயன்பட்டன வாதலால் அவற்றை உழவர்கள் பேணியதில் வியப்பொன்றுமில்லை. தனியாகக் கால்நடைகளை வளர்ப்பதிலேயே முழுக் கவனமும் செலுத்தினர் முல்லைநிலத்து ஆயர். ஆயர்கள் கால்நடைகளைத்தாம் பெருஞ்செல்வமாகக் கருதினர் என்னும் உண்மையைப் பெரும்பாணாற்றுப்படை தெளிவாகக் குறிக்கிறது. நெய்யை விற்று வந்த ஆய்மகள் நெய்யின் விலையாகக் கட்டிப்பொன் கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளவில்லையாம்; மாறாக எருமை, பசு, நாகு (ஈனாத கடாரி அல்லது பெண் கன்று) ஆகியவற்றைத்தாம் கொள்வாளாம்.[35]

ஆயர்கள் ஆட்டு மந்தைகளையும் ஓம்பினர். ஆட்டு மந்தைகளை ஓட்டிச் செல்லும் இடைமகன் ஆட்டுப்பாலைக் கொணர்ந்து வீட்டில் கொடுத்துவிட்டு வீட்டிலிருந்து கூழைக் கொண்டுசெல்வானாம்.[36] இந்தப் பாலை, உறிகளில் தொங்கவிட்ட கலயங்களில் தூக்கிக்கொண்டு சென்று இடையர்கள் விற்று வருவது உண்டு. பாலைத் திரித்து மோராக்கி அதைத் தலையில் கொண்டு சென்று ஆய்மகள் விற்றுவருவாள்.[37] நெய் விற்பதை மேலே பார்த்தோம். ஓர் ஆவையே நம்பி வாழ்ந்துவந்த சில ஏழை ஆயர்களையும் நாம் காணமுடிகிறது.[38]

தமிழ்நாட்டில் சிலவிடங்களில் கால்நடை வளர்ப்பு மிகச் சிறந்து விளங்கியதாகத் தெரிகிறது. நள்ளியின் நாட்டில் வாழ்ந்த இடையர்கள் (அண்டர் எனப்பட்டவர்) மிகுந்த ஆநிரைகளைப் பெற்றிருந்தார்கள் என்று தெரிகிறது.[39] நள்ளியின் நாடு மதுரைக்குத் தெற்கில் மலைப்பகுதியைச் சார்ந்திருந்தது. இன்று காங்கேயம் மாட்டினத்திற்குப் பெயர்பெற்ற கொங்குப்பகுதி முன்பு நல்ல மாட்டினங்களைப் பெற்று இருந்ததாகத் தெரிகிறது. ‘கொங்கர் படுமணி ஆயம்’, ‘ஆகெழு கொங்கர் நாடு’, ‘கொங்கர் ஆபரந்

---

35 பெரும்பாண். 155-165
36 குறுந். 221:3
37 பெரும்பாண். 158-60
38 அகம். 369:22-25; குறுந். 295:4
39 குறுந். 210:1-2; பதிற். 71:17

தன்ன' என்னும் சொற்றொடர்கள்[40] இதை நன்கு புலப்படுத்துகின்றன.

கம்மியர்

வேளாண்மையல்லாது பிற தொழில்கள் செய்வோரை மொத்தமாகக் கம்மியர் எனலாம். இச் சொல் பொதுவாகக் கண்மாளரைக் (கம்மாளர்) குறிப்பது வழக்கம். என்றாலும் எல்லாத் தொழிலாளரையும் குறிக்கவும் சிலபோது பயன்பட்டது என்பது மதுரைக்காஞ்சியிலிருந்து தெரியவருகிறது. சங்கறுப்பவர், மணிகளைத் துளைப்பவர், பொன்னணை செய்வோர், பொன்னை மாற்றுக் காண்பவர், துணி விற்போர், செம்பு விற்போர், பூ, சாம்பிராணி முதலியன விற்போர், ஓவியர் ஆகியோர் யாவரையும் கம்மியர் என மதுரைக்காஞ்சி குறிக்கிறது.[41] பல்வேறுபட்ட தொழில்கள் மக்களால் மேற்கொள்ளப்பட்டன என்பதற்கும் இந்தக் குறிப்புச் சான்று பகர்கிறது. இத் தொழில்கள் அக்காலப் பொருளியலில் எவ்வகை இடத்தைப் பெற்றன என்று பார்க்கலாம்.

கொல்லர், தச்சர் தொழில்கள் முக்கிய இடத்தைப் பெற்றன என்பதை இவற்றைப்பற்றி வரும் பல்வேறு குறிப்புகளிலிருந்து உய்த்துணரலாம். கொல்லன் ஊதுஉலை பல இடங்களில் உவமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.[42] ஆகவே, இது மிகப் பழக்கமான பொருள் என்பதில் ஐயமில்லை. வேளாண்மைக் கருவிகள், போர்க்கருவிகள் முதலியன கொல்லரால் செய்யப்பட்டன. சிறிய உருவங்கொண்ட ஊசிகளும் செய்யப்பட்டன.[43] பெரிய கோடரி (நவியம்)களும் செய்யப்பட்டன.[44] போர்வீரர்கள் தங்கள் வேல்களுக்கும், பிற படைக்கலன்களுக்கும் கொல்லர்களை நம்பியிருந்தார்கள்.[45] தச்சுத்தொழிலைக் கொல்லுத்தொழிலின் ஒரு பகுதியாகவே கருதலாம். ஒரு நாளைக்கு எட்டுத் தேர்களைச் செய்யக்கூடிய தச்சர்களும் இருந்தார்கள் என்று ஒரு குறிப்பு வருகிறது.[46] மிகைப்படுத்திக் கூறலாக இதைக் கொண்டாலும், தச்சுவேலை சிறந்த நிலையில் இருந்தது என்பதை இக் குறிப்பு வெளிப்படுத்துகிறது. பெரிய கோபுர வாயில்களும், அரண்மனையிலுள்ள அழகான தந்தக் கட்டில்கள் முதலியனவும் இவர்களால் செய்யப்

---

40 அகம். 79:5-6 ; பதிற். 22:15, 77:10-11
41 மதுரை. 511-21
42 நற். 125:4; குறுந். 172:6; அகம். 202:5-6
43 அகம். 199:8
44 புறம். 36:7
45 ஷ 180:12-13, 312:3
46 ஷ 87;2-3

பட்டன என்று நெடுநல்வாடை சுட்டுகிறது.[47] இச் செய்திகளிலிருந்து கொல்லரும் தச்சரும் சங்ககாலப் பொருளியல் வாழ்வில் முக்கிய இடத்தைப் பெற்றார்கள் என்பதை உணரலாம். இவ்விரு தொழில்களும் இரும்புக் கருவிகள் பயன்படுத்தப்படும் வேளாண்மை முதலிய தொழில்களுக்கு அடிப்படையாக அமைந்தன. இத்தொழில் செய்தோர் எத்தனை விழுக்காட்டினர் என்று அறியப் போதுமான சான்றுகளில்லை. ஏழு ஊர்களுக்கு வேண்டிய இரும்புக் கருவிகளை ஒரே கொல்லன் ஆக்கி வழங்கிய நிலையும் உண்டு என்ற ஒரு குறிப்பை இங்குக் குறிக்கலாம்.[48] ஒவ்வோர் ஊரிலும் சில குடும்பங்கள் சிறப்பாக இத் தொழில்களில் ஈடுபட்டிருந்தன என நம்பலாம். நகரங்களில் அரண்மனையைச் சார்ந்து இத் தொழிலாளிகள் கணிசமான எண்ணிக்கையில் இருந்திருக்கக் கூடும்.

பொற்கொல்லர், மற்ற உலோக வேலைகள் செய்தவர் ஆகியோரும் ஓரளவு நல்ல இடத்தைப் பெற்றிருந்தார்கள். பொன் நகைகள் மிகுதியாகப் பேசப்படுகின்றன.[49] இவை யாவும் பொற்கொல்லரால்தாம் செய்யப்பட்டிருக்கவேண்டும். செம்பு, வெள்ளி ஆகிய உலோகங்களைக் கொண்டும் பாத்திரங்கள் செய்யப்பட்டன எனத் தெரிகிறது.[50] இத் தொழில்களிலும் சிலர் ஈடுபட்டனர் எனல் வேண்டும்.

குயவர்

'கலம்செய் கோ' எனக் குயவர் அழைக்கப்பட்டனர்.[51] வேட்கோ[52] எனப்படுபவரும் இவரே. உலோகப் பாத்திரங்கள் மிகக் குறைந்த அளவில் புழக்கத்தில் இருந்த காலம் சங்ககாலம். அப்பொழுது எல்லா வகையான பாத்திரங்களும் மண்ணால்தான் செய்யப்பட்டிருக்கவேண்டும். அகழ்வாராய்ச்சிகள் இதை உறுதிப்படுத்துகின்றன. ஆகவே, மட்கலம் வனையும் தொழிலும் அக்காலத் தொழில்களில் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தது என்பது தெளிவு. மட்கலங்களைச் சுட அமைக்கப்பட்ட பெரிய சூளைகளிலிருந்து மிகுந்த புகை எழுந்தது என்று சில குறிப்புகள் வருகின்றன.[53] மட்கலம் வனையும் தொழில், பெரியதொரு குடிசைத் தொழிலாக இருந்தது எனலாம். அதிகமான கலங்கள் செய்யும் வகையில் சக்கரங்கள் பயன்படுத்தப்பட்டன.[54] வீட்டு

---

47 நெடுநல். *80-86, 115-31*

48 குறுந். *172:5-6*

49 அகம். *75:11-12 ;*
குறுந். *21:1-2, 67:4, 148:1-3;*
புறம். *11:12-18, 353:1-2*

50 நற். *153:3;* அகம். *317:8*

51 புறம். *256:1*

52 ஷை *32:8*

53 ஷை *228:2-3;* அகம். *308:6*

54 ஷை *228:15-16*

வேலைகளுக்குப் பயன்படும் சிறிய கலங்களோடு இறந்தோரை வைத்துப் புதைக்கும் பெரிய தாழிகளும் இவர்களால் செய்யப் பட்டன.[55] குயவர்களுக்குச் சமுதாயத்தில் முக்கிய இடம் கொடுக் கப்பட்டது என்று தெரிகிறது. விழாநாள்களை ஊருக்கு அறிவிக் கும் பொறுப்புக் குயவர்களிடம் இருந்தது.[56] இடைக்காலத்தில் வேட்கோக்கள் பல ஊர்களில் கரணங்களாக (கணக்கர்) அமர்த்தப் பட்டிருந்தார்கள் என்று கல்வெட்டுகளிலிருந்து அறியப்படும் செய்தியை[57] இங்கு நினைவுகூரலாம்.

நெசவுத் தொழில்

பண்டுதொட்டே நெசவுக்குப் பெயர்பெற்றது தமிழ்நாடு. சங்க இலக்கியங்கள் மிகத் தெளிவாக நெசவுத் தொழிலின் வளர்ந்த நிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. பருத்தி, பட்டு,[58] மயிர்[59] ஆகிய மூன்று பொருள்களைக் கொண்டும் துணி கள் நெய்யப்பட்டன. மிக உயர்ந்த மெல்லிதான துணிகளும் நெய்யப்பட்டன. அதற்குத் துகில் என்பது பெயர்.[60]

நெசவுத் தொழிலை ஆண்களே மேற்கொண்டிருக்கக்கூடும்; ஆனால் குறிப்புகளில்லை. நெசவுத் தொழிலின் ஒரு கட்ட மான நூல் நூற்கும் தொழில் பெரும்பாலும் பெண்களாலேயே செய்யப்பட்டது என்று குறிப்பிடவேண்டும்.[61] ஆதரவிற்கு யாரும் இல்லாத கைம்பெண்களுக்கு இதுதான் வாழ்க்கை.[62] துணிகளை அழுக்குநீக்கி வெளுப்பவர்களும் பெரும்பாலும் பெண்களாகக் குறிப்பிடப்படுகிறார்கள். இவர்கள் 'புலைத்தி' எனப்பட்டார்கள்.[63]

மீன்பிடித்தலும் உப்பெடுத்தலும்

கடற்கரைப்பகுதி மக்களான பரதவர் வாழ்க்கைக்கு இவ் விரண்டு தொழில்களும் உயிர்நாடிகளாக இருந்தன. பரதவர்கள் ஆழ்கடலுக்குள்ளே சென்று நிறைய மீன்களைப் பிடித்துப் படகு களில் ஏற்றித் திரும்புவதைப் பல சங்கப்பாடல்கள் குறிப்பிடு கின்றன. நடுஇரவில் கடலுக்குள் போய் விடியற்காலையில் கரைக்குத் திரும்புவார்களாம் இவர்கள்.[64] மீன் இவர்களுக்கு

55 புறம். 228:12-13, 256:5-6
56 நற். 200:4
57 Epi. Ind. Vol. XXII, p. 237
58 பொருநர். 154-55
59 சிலப். 5:16, 14:205
60 புறம். 383:9-11, 392:15
61 ஷெ 125:1, 326:5
62 நற். 353:1-2
63 அகம். 34:11; குறுந். 330:1
64 நற். 388:4-6

முக்கிய உணவு. மீன்களைத் தானியத்திற்குப் பண்டமாற்றாக வும் விற்றனர். மீனிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெயை விளக் கெரிக்கப் பயன்படுத்தினர். கிளிஞ்சில் சிப்பிகளை அகல்விளக் காகப் பயன்படுத்தினர்.[65] கடல்நீரைத் தேக்கி உப்பு எடுத்து உள்நாட்டுக்கு விற்க அனுப்புவதும் இவர்களால் மேற்கொள்ளப் பட்டது.[66]

பிறதொழில்கள்

மேலே குறிப்பிட்ட தொழில்களே அல்லாது வேறுசில தொழில்களைப் பற்றியும் குறிப்புகள் உள்ளன. முத்துக்குளித் தல், சங்கறுத்து வளையல் செய்தல், தோல்வேலை முதலியன முக்கியத் தொழில்களாக இருந்தாலும் இவற்றைப்பற்றி மிகச் சில குறிப்புகளே உள்ளன. இவை எல்லாம் வாணிகப் பொருள் களாகக் குறிக்கப்படுவதால் இத் தொழில்கள் ஆங்காங்குச் சில ரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன எனக் கருதலாம். தோல் வேலை செய்பவன் ஒருவன் ‘இழிசினன்’ என்று ஒரு பாட்டில் குறிப்பிடப்படுகிறான்.[67] வாணிகத்தையே ஒரு முக்கியத் தொழி லாகப் பலர் கொண்டிருந்தார்கள் என்பதை அடுத்த பகுதியில் காணலாம்.

வாணிகம்

உள்நாட்டு வாணிகம்

வாணிகத்தை ஒரு நாட்டின் பொருளியல் நிலையை மதிப் பிட உதவும் ஒரு சிறந்த அளவுகோலாகக் கருதலாம். சங்ககால வாணிகத்தை உள்நாட்டு வாணிகம், வெளிநாட்டு வாணிகம் என்ற இரு தலைப்புகளின்கீழ் விளக்கலாம். உள்நாட்டு வாணி கத்தைப் பற்றி அறிய முழுவதும் இலக்கியச் சான்றுகளே பயன் படுகின்றன. வெளிநாட்டு வாணிகத்தைப் பற்றிச் சிறிது விளக்க மாகவே அறிந்துகொள்ளும் வகையில் யவனக் கடற்பயணி களின் குறிப்புகள் உள்ளன.

உள்நாட்டு வாணிகத்தைப் பொறுத்துக் குறிப்பிடவேண்டிய முதல் செய்தி போக்குவரத்து மிகக் குறைவாக இருந்தது என்பது. நாட்டின் பெரும்பகுதியில் இருந்த ஊர்கள் பொருள் தேவையில் தன்னிறைவு பெற்றவையாக இருந்தன என்று கருத வேண்டி

---

65 நற். 215:5 175:3-4 67 புறம். 82:3-4
66 ஷி 4:7-10, 183:1-2

யுள்ளது. ஒருசில பொருள்கள்தாம் இடம்விட்டு இடம் கொண்டு போகப்பட்டன. இவ்வகையில் அதிகமாகக் குறிக்கப்படும் பொருள் உப்பு. இயற்கையாக உப்பு கடற்கரைப் பகுதியில் அதிகமாகக் கிடைத்ததாலும், எல்லோருடைய உணவிலும் உப்பு ஓர் இன்றியமையாத கூறாக இருந்ததாலும் இது அதிகமாகப் போக்குவரத்தில் எடுத்துச் செல்லப்பட்டது. உப்பு வாணிகர் உமணர் எனப்பட்டனர்.

உமணரைப்பற்றி ஓரளவு முழுமையாக நமக்குச் செய்தி கிடைக்கிறது. உமணர் பரதவரினின்று வேறானவர்களாகக் காணப்படுகிறார்கள். பரதவர் சேர்த்த உப்பை உமணர் மகள் ஒருத்தி விற்றதாக வரும் ஓர் அகப்பாட்டிலிருந்து[68] இதை உய்த்துணரலாம். இன்னொரு பாட்டில் உமணர் வருகையை எதிர் நோக்கி, உழாத உழவர் (பரதவர்) உப்பைக் குப்பைகளாக வைத்துக் காத்துவந்தார்கள் என்னும் குறிப்பும் உள்ளது.[69] உமணர் மருதநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். தம் நாட்டில் விளைந்த வெண்ணெல்லைக் கொடுத்துப் பிறநாட்டில் விளைந்த உப்பை வாங்கி உமணர் வாணிகம் செய்ததாகவும் தெரிகிறது.[70] இவர்களில் பெரும்பான்மையினர் ஊர்ஊராகத் திரிந்து வாணிகம் செய்தவர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இதை 'நிலையா வாழ்க்கைக் கணங்கொள் உமணர்' என்று ஒரு நற்றிணைப் பாடல்[71] குறிக்கிறது. உமணர் எப்பொழுதும் கூட்டம் கூட்டமாகச் சென்றார்கள். இவர்கள் போவது ஓர் ஊரே போவதுபோலத் தோன்றுமாம்.[72] இவர்கள் தங்கிச் சென்ற இடங்கள் பாழடைந்தனபோலக் காணப்பட்டன.[73] தங்கள் குடும்பங்களை இவர்கள் கூடவே அழைத்துச் சென்றார்கள்.[74] பெண்கள் எருதுகள் பூட்டிய வண்டிகளை ஓட்டிச் சென்றார்கள். வண்டிகளின் மருங்கில் ஆண்கள் காவல் பூண்டு நடந்தார்கள். வண்டிகளின் அடிப்பகுதியில் கோழிகளைக் கொண்ட கூடுகள், உரல், ஊறுகாய்ச் சாடிகள் முதலியன தொங்கவிடப்பட்டிருந்தன.[75] வண்டியில் பொருத்தப்பட்டுள்ள அச்சு, வழியில் எதிர்பாராது முறிந்துவிட்டால், புதிதாகப் பொருத்துவதற்காகக் கூடவே ஒரு சேமஅச்சையும் கொண்டு சென்றார்கள். இவர்கள் போகும் வழிகளிலேயே சமைத்து உண்டு

68 அகம். 140:7
69 நற். 138:1-2
70 ஷெ 183:1-5
71 ஷெ 138:1-3
72 அகம். 17:11-13
73 குறுந். 124:1-2
74 சிறுபாண். 55-62
75 பெரும்பாண். 50-65

சென்றார்கள்.[76] வழிகளில் புலிகள் வேட்டையாடி உண்டு மிகுந்த விலங்குகளின் இறைச்சியுங்கூடச் சில சமயங்களில் இவர்களுக்கு உணவாவது உண்டு.[77]

கூட்டமாகச் சென்றாலும் போகும் வழிகளில் இவர்கள் ஆறலை கள்வர்களால் தாக்கப்படுவது உண்டு.[78] சிலசமயம் வண்டிகளில் ஏற்றப்பட்ட உப்பு, பெருமழையினால் சேதமுறுவதும் உண்டு. இவ்விடையூறுகளையும் பொருட்படுத்தாது, ஊர் ஊராக உப்புமூட்டைகளைக் கொண்டுசென்று, இவர்கள் விற்று வந்தனர். ஆங்காங்கு உப்பைக் குப்பைகளாகக் குவித்து வைத்து விற்றனர்.[79] ஊர்களுக்குள் உமணப்பெண்கள் கூடைகளில் எடுத்துச் சென்று விற்றுவருவது வழக்கம் என்பதை முன்னரே கண்டோம்.

மிளகு பொதிகளைக் கழுதைகள்மீது ஏற்றித் தொலை விடங்களுக்குக் கொண்டுசெல்வதும் உண்டு.[80] இவ்வாறு உமணர் சாத்தும், மற்றச் சாத்துகளும் சென்றுவரும் வழிகளில் வில் வீரர்கள் காவல் புரிந்துவந்தார்கள். இவ் வழிகள் கூடும் சந்திகளில் சுங்கச்சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன.[81] இவ்வழிகளில் மலையில் கிடைக்கும் பொருள்களும் கடலில் கிடைக்கும் பொருள்களும் வாணிகர்களால் பரிமாறிக்கொள்ளப்பட்டன.[82]

அங்காடிகள்

ஊர்களுக்குள்ளாக நடந்த பண்டமாற்று வாணிகம் ஊர்களைத் தன்னிறைவு பெற்றவையாக வைத்திருந்தது. பெரிய ஊர்களில் அதாவது, நகரங்களில்தாம் அங்காடிகள் இருந்தன. சிற்றூர்களில் கூலவாணிகம்தான் நடைபெற்றது. நகர அங்காடிகளைப்பற்றி ஓரளவு விளக்கமாகவே செய்தி கிடைக்கிறது. சிற்றூர் வாணிகத்தைப் பற்றிய செய்தி சிறிதாக இருந்தாலும், அதன் அடிப்படைத் தன்மையை அறிந்து கொள்ளும் வகையில் உள்ளது.

உமண்மகள் உப்பு விற்றதைப்பற்றிச் சங்கப்பாடல்களில் குறிப்பு உள்ளது. காட்டிலிருந்து மருதநில ஊர்களுக்குள் வரும் வேட்டுவர்கள் தங்களோடு கொண்டுவந்த மான்கறியைக்

76 அகம். 159:1-10
77 ஷை 169:2-7
78 குறுந். 390:3-5
79 நற். 138:1
80 பெரும்பாண். 78-80
81 ஷை 81-82
82 ஷை 67

கொடுத்துவிட்டு மாறாக வெண்ணெல் பெற்று மீண்டனர்.[83] இதே ஊர்களில், ஆய்மகள் தயிர் கொண்டுவந்த பாத்திரம் நிறைய வெண்ணெல் பெற்றுச் சென்றாள்.[84] பாண்மகள் (மீனவப்பெண்) கெடிறு மீனும், வரால் மீனும் கொண்டுவந்த வட்டி (கூடை) நிறையப் பயறு அல்லது வெண்ணெல்லை நிரப்பி அனுப்பினாள் வேளாளப்பெண்.[85] பாண்மகள் கொஞ்சம் மீன் கொடுத்துவிட்டு மாறாக மிகுந்த நெல்லைப் பெற்றாளாம்.[86] ஊர்களில் தெருத் தெருவாகச் சென்று உழவப் பெண்கள் புது மலர்களை விற்றுவந்த காட்சியும் மிக வழக்கமான ஒன்றாகும்.[87]

காவிரிப்பூம்பட்டினம், மதுரை முதலிய நகரங்களில்தாம் ஆரவாரமான அங்காடித் தெருக்கள் இருந்தன. பல்வேறு தொழில் செய்வோர் நிறைந்தனவாகவும், பல்வேறு நாட்டுப் பொருள்களும் மலிந்தனவாகவும் இவையிருந்தன. மதுரை நகரில் இருந்த அங்காடிகளைப்பற்றி மதுரைக்காஞ்சி நன்றாகச் சித்திரிக்கிறது. மதுரையில் நாளங்காடி, அல்லங்காடி என இரு வகை அங்காடிகள்[88] இருந்தன. பகற்பொழுது மட்டும் விற்பனை நடக்கும் அங்காடி நாளங்காடி; மாலை தொடங்கி முன்னிரவு முடிய விற்பனை நடக்கும் அங்காடி அல்லங்காடி ஆகும். அல்லங்காடியில் கடைகள் வைத்திருந்த மகளிர், முதல் யாமம் கழிந்த பிறகு (இரவு 9 மணிக்குப் பிறகு) கடைகளை அடைத்து உறங்கச் செல்வார்களாம்.[89]

மதுரை நாளங்காடியில் பெண்கள் பல பொருள்களை விற்றார்கள். இனிய பண்ணியங்கள், நறிய பூக்கள், பலவகையான பூமாலைகள், நறுமணச் சுண்ண வகைகள், அடைக்காய் (பாக்கு), வெற்றிலை, நூறு (சுண்ணாம்பு) முதலிய பல்வேறு பொருள்களை விற்றார்கள்.[90] சிலபோது இவர்களுடைய அமைதியான வாழ்க்கைக்கு, போர்மேற் செல்லும் படைகளின் அணிவகுப்பு இடைஞ்சலாய் அமைந்தது. படைகள் அகன்றதும் மீண்டும் தங்கள் விற்பனையைத் தொடங்கினார்கள்.[91] சிலர் வீடுவீடாகப் பொருள்களைக் கொண்டுசென்றனர்.[92] போக்கும் வரத்தும் சமமாக இருந்ததால் நாளங்காடியில் பொருள்கள்

83 புறம். 33:1-6
84 ஷை 33:3-6
85 ஐங்குறு. 47:1-3, 48:1-3
86 ஷை 49:1-2
87 நற். 97:6-9, 118:8-11
88 மதுரைக். 430, 544
89 ஷை 620-623
90 ஷை 395-405
91 ஷை 402-405
92 ஷை 422-423

குறையவுமில்லை, கூடவுமில்லை என்கிறார் புலவர்.[93] மலையி லிருந்து வந்த பொருள்கள், நிலத்திலிருந்து வந்தவை, நீரிலி ருந்து வந்தவை, பல்வேறு திருமணிகள், முத்து, பொன், துணி என்று பலநாட்டுப் பொருள்களை அறநெறி பிழையாது முறை யாக விற்கும் வாணிகர்கள் பலர் மதுரையில் இருந்தார்கள் என்றும் குறிப்பிடுகிறார்.[94]

இதேபோலக் காவிரிப்பூம்பட்டினத்தின் அங்காடிகளிலும் விற் பனைப் பொருள்கள் மலிந்தவையாக இருந்தன. கடல் வழியாக வெளிநாட்டிலிருந்து வந்த குதிரைகள், நிலத்தின் வழியாக வண்டிகளில் வந்த மிளகு மூட்டைகள், இமயமலைப் பகுதியி லிருந்து வந்த மணிகளும் பொன்னும், மேற்கு மலைகளிலிருந்து வந்த சந்தனமும் அகிலும், தென்கடலிலிருந்து வந்த முத்து, குணகடலிலிருந்து வந்த பவளம், கங்கை காவிரிப் பகுதி விளை பொருள்கள், ஈழத்திலிருந்து வந்த உணவுப் பொருள்கள், கடா ரத்திலிருந்து வந்த பொருள்கள் முதலியன செறிந்து மிக்க வளப் பத்தையுடைய தெருக்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தன.[95] இந் நகர வாணிகர்களும் அறவழியில் தொழில் செய்தவர்கள்; பிறர் பொருள்களைத் தம் பொருள்களைப்போல் உயர்வாக நினைத்தவர்கள்; கொடுக்கும் பொருள்களைக் குறைக்கவு மில்லை விலையைக் கூட்டவுமில்லை.[96]

சங்ககால நகரங்களில் பல்வேறு கொடிகள் பறந்தன. பல் வேறுபட்ட மக்களின் குழுக்கள் தங்கள் இலச்சினையாக இவற்றை வைத்திருந்தன. எல்லாக் கடைகளிலும் கொடிகள் பறந்தன என்று உறுதியாகக் கூற இயலாது. ஆனால், மது விற்கும் கடைகளில் கொடிகளிருந்தன என்று மதுரைக்காஞ்சி, பட்டினப் பாலை ஆகிய இரண்டிலும் குறிக்கப்படுகிறது.[97] மற்றக் கடை களிலும் இவை இருந்தன என உய்த்துணரலாம். இக்காலத்தில் பெயர்களைத் தாங்கிய பலகைகள் விளங்குவதைப்போல அக் காலத்தில் கொடிகள் விளங்கின.

வெளிநாட்டு வாணிகம்

ஒரு நாட்டின் வெளிநாட்டு வாணிகம் பேரளவில் நடை பெற்றால், அந் நாட்டின் பொருள்நிலை சிறந்ததாக இருக்கும் என்று தற்காலத்தில் கருதப்படுகிறது. இந்தக் கருத்து ஓரள

93 மதுரைக். 425-430
94 ஷை 500-506, 511-18
95 பட்டினப். 185-193
96 ஷை 209-212
97 மதுரைக். 372; பட்டினப். 180

வுக்குப் பழைய காலத்துக்கும் பொருந்தும். பழங்காலத்தில் சில நாடுகளைத் தவிர, மற்ற நாடுகளில் வெளிநாட்டு வாணிகம் அந்நாடுகளின் பொருளியலில் மிகக் குறைந்த இடத்தையே பெற்றிருந்தது. பொதுவாகக் கைத்தொழில்களும், கப்பல் கட்டும் தொழிலும் வளர்ச்சியடைந்திருந்த நாடுகள்தாம் வெளிநாட்டு வாணிகத்தில் மிகுந்த அக்கறை காட்டின. இத்தகைய ஒரு வாய்ப்பான நிலை சங்ககாலத் தமிழ்நாட்டில் இருந்தது. தமிழ்நாட்டின் இயற்கை அமைப்பும், இயற்கையிலேயே விளைந்த சில பொருள்களும் வெளிநாட்டு வாணிகத்துக்குத் தூண்டுகோலாய் அமைந்தன.

கடற்கலங்கள்

சேரநாட்டைத் தன்னுள் கொண்ட சங்ககாலத் தமிழ்நாட்டுக்கு மூன்று பக்கமும் கடல் எல்லையானதால், கடல் போக்குவரத்துக்கு வேண்டிய துறைமுகங்கள் பல இயற்கையாகவே அமைந்திருந்தன. கடல்வளம், நாட்டின் பொருளியலைப் பெரிதும் மாற்றியது என்றே சொல்லலாம்.[98] கடல்சார்ந்த பகுதி நெடுகிலும் மீன்பிடிக்கும் தொழிலும், சில இடங்களில் முத்துக் குளிக்கும் தொழிலும் நடைபெற்று வந்தன. இவற்றோடு வெளிநாட்டு வாணிகமும் நன்கு வளர்ச்சியுற்றிருந்தது. இத்தொழில்களுக்கு உறுதுணையாகக் கப்பல் கட்டும் தொழில் சிறந்திருந்ததாகவே கொள்ளவேண்டும்.

நீர்க்கலங்களில் சில வகைகள் பல இடங்களில் குறிப்பிடப்படுகின்றன. அவை நாவாய், வங்கம், பஃறி, அம்பி, திமில், தோணி என்பன. இவற்றில் அம்பி பெரும்பாலும் மீன்பிடிக்கும் தொழிலுக்கே பயன்படுத்தப்பட்டது.[99] திமிலும் தோணியும் கூட ஓரளவு மீன்பிடிக்கப் பயன்படுத்தப்பட்டன.[100] கடலில் நிற்கும் பெரிய கலங்களிலிருந்து பொருள்களை ஏற்றிக்கொண்டு கழிகள் மூலமாகக் கரைசேர்க்கும் தொழிலிலும் தோணி பயன்பட்டது.[101] பஃறி கடற்கரை ஓரமாகச் சென்று பக்கத்திலுள்ள ஊர்களோடு வாணிகம் செய்யப் பயன்படுத்தப்பட்டது. உப்பை விற்றுவிட்டு மாறாக நெல்லைக் கொண்டுவந்த பஃறிகள், குதிரைகள் வரிசையாகக் கட்டப்பட்டிருப்பது போலக் காவிரிப் பூம்பட்டினக் கழிகளில் கரையோரமாகக் கட்டப்பட்டிருந்தன

98 தொல். பொருள். அகம். 34
99 அகம். 187:21-23; நற். 74:1-3
100 நற். 331:6-8, 388:4-5; அகம். 50:1, 240:4-6
101 புறம். 343:5-6

என்று பட்டினப்பாலை குறிக்கிறது.[102] வங்கம், நாவாய் ஆகியவை நெடுந்தொலைவுக் கடற்செலவுக்குப் பயன்பட்டன.[103] நாவாய் பெரிய உருவம் கொண்டவை என்பதனால் இவை யானைகளுக்கு உவமையாகச் சில இடங்களில் சுட்டப்பட்டுள்ளன.[104] பல நாள்கள் கடலில் செல்லும் வங்கத்தில் ஏறிக் காதலியைப் பிரிந்து சென்ற ஒரு காதலனைப்பற்றி அகநானூற்றுப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது.[105]

இவ்வாறு பலவகையான கலங்கள் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டன என்பதற்கு யவன ஆசிரியர் குறிப்புகளும் சான்று பகர்கின்றன. கி.பி. 75ஐச் சார்ந்து வாழ்ந்த **எரித்திரையக் கடற்செலவு** (சுருக்கமாகச் **கடற்செலவு**) ஆசிரியர் தமிழ்நாட்டின் கீழைக் கடற்கரையில் மூன்று வகையான கலங்கள் சிறப்பாக வழக்கில் இருந்தன என்கிறார். முதல் வகை, கடற்கரையோரமாகப் போக்குவரத்தில் ஈடுபட்ட நாட்டுக் கலங்கள். அடுத்தது ஓரளவு பெரிய கடற்கரையோரமாகச்சென்ற 'சங்கரா' என்னும் கலங்களின் வகை. இவை பல மரங்களைக் கொண்டு கட்டப்பட்டவை (இன்று இவை சங்காடம் என்று மலையாளத்தில் அழைக்கப்படுவதாகத் தெரிகிறது).[106] மூன்றாம் வகையான 'சோலாண்டியா' என்னும் பெயர்கொண்ட கப்பல்கள் மிகப் பெரியவை. இவையே கங்கையாற்றுப் பகுதிக்கும் கிழக்கு நாடுகளுக்கும் சென்று வந்தன.[107]

துறைமுகங்கள்

தமிழ்நாட்டில் பல துறைமுகங்களிருந்தன என்பதற்குச் சங்க இலக்கியங்களில் நிறையச் சான்றுகள் உள்ளன. யவன ஆசிரியர் குறிப்புகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன. மேற்குக் கடற்கரையில் முசிறி, பந்தர், கொடுமணம் முதலிய துறைமுகங்களும், கிழக்குக் கடற்கரையில் கொற்கை, மருங்கூர்ப்பட்டினம், காவிரிப்பூம்பட்டினம், எயிற்பட்டினம் முதலியனவும் இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றன.

மேற்குக் கரையில் இருந்தனவாகக் கிரேக்க ஆசிரியரால் குறிப்பிடப்படும் சில துறைமுக ஊர்களின் சரியான இருப்பிடம்

102 பட்டினப். 29-32
103 பதிற். 52:3-4
104 பட்டினப். 172-174
105 அகம். 255:1-7
106 Caldwell, R., *A Comparative Grammar of the Dravidian or South Indian Family Languages* (University of Madras, 1961) p. 95
107 *The Periplus of the Erythraean Sea*, para. 60.

இன்னும் சரிவர முடிவு செய்யப்படவில்லை. 'எரித்திரையக் கடற் செலவு' என்னும் நூலில் நஊர, திண்டிஸ் என்ற இரண்டு ஊர் களும், தமிழகத்தின் மேற்குக் கரையை வடக்கிலிருந்து அணுகுப வர்கள் கண்களில் படும் முதல் 'சந்தைகள்' என்று குறிக்கப்பட் டுள்ளன.[108] 'நஊர' என்பதை இப்போதைய கண்ணூர் (அல்லது வர்கள் கண்ணனூர்) ஆக எடுத்துக்கொள்கிறார்கள். கண்ணூர் சங்க இலக்கியத்தில் குறிக்கப்படவில்லை. இந்த நஊர பதிற்றுப் பத்தில் குறிக்கப்படும் நறவு என்ற ஊராகக் கருதப்படுவதும் உண்டு.[109] திண்டிஸைச் சங்க இலக்கியத்தில் குறிக்கப்படும் தொண்டியாகக் கருதலாம். 'கடற்செலவு' இதனைச் சேர நாட் டைச் சேர்ந்த ஊர் என்கிறது. அகநானூற்றில் இது குட்டு வனின் கடல் துறைமுகமாகச் சுட்டப்படுகின்றது. இந்த ஊர் இப்போதைய கோயிலாண்டியே என்று ஒரு கருத்தும், கடலுண்டி என்னும் ஊரே என்ற இன்னொரு கருத்தும் உள்ளன.[110] எந்த ஊர் என்று திட்டமாக முடிவு செய்யப் போதுமான சான்றுகள் கிடைக்கவில்லை. எப்படி இருந்தபோதிலும் தொண்டி முதலில் ஒரு சிறிய ஊராக இருந்து நாளடைவில் நகரமாக மாறியது என் பதில் ஐயமில்லை. 'கடற்செலவு' இதனை ஓர் ஊராகக் குறிப் பிட, தாலமி (கி.பி. 140) இதனை ஒரு நகரமாகக் குறிப்பிடு கிறார்.[111] இலக்கியத்தில் குறிக்கப்படும் பந்தர்த் துறைமுகம் கோயிலாண்டிக்குப் பக்கத்திலுள்ள பந்தலாயினியாக இருக்க லாம்.[112]

தொண்டிக்குத் தெற்கே முசிறி இருந்தது. பிளினி (கி.பி. 50), 'கடற்செலவு' ஆசிரியர், தாலமி ஆகியோர் யாவருமே இதனைக் குறிக்கிறார்கள். முசிறித் துறைமுகம் அவ்வளவு நல்ல துறைமுகம் அன்று. ஏனென்றால், அதன் அருகில் கடற் கொள்ளைக்காரர்கள் நிறைந்திருந்தார்கள் என்று பிளினி சொல்லுகிறார்.[113] ஆனால், 'கடற்செலவு' இத் துறைமுகத்தை மிகச் சிறந்த ஒன்றாக வருணிக்கின்றது. அரேபியர், கிரேக்கர் கப்பல்கள் பல இங்கு வந்தன என்று அது குறிப்பிடுகின்றது.[114] ஓர் ஆற்றின் கரையில் இஃது அமைந்திருந்ததாகவும் அது குறிக் கின்றது. தாலமியும் இதனை ஒரு பெரிய கடல்துறைமுகமாகச் சுட்டுகிறார்.[115] சங்க இலக்கியப் பாடல்கள் இதனை மிகச்

---

108 Ibid. para. 53-54

109 Sivaraja Pillai. K.N., *The Chronology of the Early Tamils*, p. 117

110 Kunjan Pillai, Elankulam, *Studies in Kerala History*, p. 59

111 Kanakasabai Pillai, V., Op. cit., p. 17

112 Kunjan Pillai Elankulam, Op. cit., p. 63.

113 Nilakanta Sastri, K.A., *Foreign Notices of South India* (1972), p. 53.

114 *The Periplus*, para. 54.

115 Kanakasabai Pillai, V., Op. cit., p. 19

சிறப்பாகப் பாடுகின்றன. யவனர்களின் கலங்கள் பேரியாற்றின் வழியாக இத் துறைக்கு வந்தன என்று ஓர் அகப்பாட்டுச் செய்தி தருகின்றது.[116] இச் செய்தியிலிருந்தும், 'கடற்செலவு' இந்த ஊர் கடலிலிருந்து இருபது ஸ்டேடியாக்கள் உள்ளே இருந்தது என்பதிலிருந்தும், இப்பொழுது உள்ள கொடுங்கலூரே (கொடுங்கோளூர்) பழைய முசிறி என்று முடிவுகட்டுவது எளிதாக உள்ளது. முசிறிக்குத் தெற்கே (ஐந்நூறு ஸ்டேடியாத் தொலைவில்) 'நெல்சிண்டா' என்ற துறைமுகம் இருந்ததாகக் 'கடற்செலவில்' சொல்லப்படுகின்றது.[117] இஃது ஓர் ஆற்றின் கரையில் கடலிலிருந்து ஏறக்குறைய 120 ஸ்டேடியாக்கள் தொலைவில் அமைந்திருந்தது என்றும் சொல்லப்படுகின்றது. தாலமி இந்த ஆற்றின் பெயரைப் பாரிஸ் என்று குறிக்கின்றார். இந்த ஊர் கோட்டயத்திற்குக் கிழக்கே 10 கி.மீ. தொலைவிலுள்ள நீர்க் குன்றமாகக் கருதப்படுகிறது.[118] கோட்டயத்துக்கு அருகில் பாயும் பாலியாறே பாரிஸ் ஆறாகும். இந்த ஆற்றின் முகவாயிலில் பிகாரே என்ற துறையிருந்ததாகவும், இவ்வூரையொட்டிய கடல்பகுதியில்தான் நீர்க்குன்றத்துக்கு வந்த கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சி நின்றன என்றும், நீர்க்குன்றத்திலிருந்து பிகாரேக்குப் படகுகளில் மிளகு அனுப்பப்பட்டதென்றும், பிளினியின் குறிப்பு, 'கடற்செலவு' ஆகியவற்றிலிருந்து தெரிகிறது.[119] இந்தப் பிகாரே கோட்டயத்துக்கு அருகில் இறங்கு துறையாக உள்ள வைக்கரை என்று கொள்ளப்படுகிறது.[120] நீர்க்குன்றத்தைச் சுற்றியுள்ள 'குட்டநாடு' என்னும் பகுதியில் இன்றும் நல்ல மிளகு விளைவிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. **கடற்செலவு** நீர்க்குன்றத்தைப் பாண்டிய அரசனுக்கு உரிய ஊராகக் குறிப்பிடுகிறது. பின்னால் நீர்க்குன்றம், வைக்கரை இரண்டுமே உள்நாட்டில் வாழும் அரசர்களின் துறைமுகங்கள் என்றும் 'கடற்செலவு' குறிக்கிறது. இரண்டு ஊர்களும் அருகருகே இருந்ததால், பெரும்பாலும் இரண்டும் பாண்டிய அரசனுக்கு உரியவை எனக்

---

116 அகம். 149:9-11

117 *The Periplus*, para. 55.

118 Kanakasabai Pillai, V., Op. cit., & p. 19

119 *The Periplus*, para. 55. Nilakanta Sastri, Op., cit. p. 53.

120 *Kanakasabai Pillai*, Op cit., p. 19
பக்கரை என்ற இடம் கோட்டயத்திற்கு அண்மையிலுள்ள நீரா ரம், பம்பா ஆறுகள் கடலோடு கலக்குமிடத்திலுள்ள பொரக்காடுதான் என்னும் மற்றொரு சார்புக் கருத்தும் உண்டு. பார்க்க.
Thomas, P.J., *The Pepper Trade of South India in Early Times* in *Krishnaswamy Iyengar, S., Commemoration* Vol. pp 226-33

கொள்ளலாம். பிளினி கூற்றில் இரு பெயர்களும் ஒரே ஊரைக் குறிப்பனபோல் உள்ளன.[121]

வைக்கரைக்குத் தெற்கே இருந்த நிலப்பகுதி 'பராலியா' என்றும், இப் பகுதியில் தெற்குநோக்கிப் போனால் காணப்படும் முதலிடம் 'பலித' என்றும் 'கடற்செலவில்' சொல்லப்பட்டு உள்ளது. இப்போதைய வர்க்கலை என்னும் இடமே 'பலித' என்று தெரிகிறது.[122] இதுவும் ஒரு சிறந்த துறைமுகமாக இருந்தது. இதற்குத் தெற்கே குமரி (கன்னியாகுமரி) ஒரு துறைமுகமாகச் சொல்லப்படுகிறது.

கிழக்குக் கடற்கரையில் தெற்கிலிருந்து வடக்காகக் கோல்சி, கமரா, பொதுக்கா, சோபாட்மா என்ற துறைமுகங்களைக் 'கடற்செலவு' குறிக்கிறது.[123] இவை முறையே கொற்கை, காவிரிப்பூம்பட்டினம், புதுச்சேரி, மரக்காணம்ஆகியவையாகக் கொள்ளப்படுகின்றன. கொற்கை முத்துக்குளியலுக்குப் பெயர் பெற்றதாகவும், இங்கே தண்டனை பெற்ற குற்றவாளிகள் இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் தெரிகின்றன.[124] மற்ற மூன்று துறைகளைப்பற்றிக் 'கடற்செலவில்' விளக்கமான குறிப்புகள் இல்லை. ஆனால், காவிரிப்பூம்பட்டினத்தைப்பற்றி இலக்கியத்தில் குறிப்புகள் நிறைய உள்ளன. புதுச்சேரிக்கு அருகில் அரிக்கமேடு என்னும் ஊரில் நடத்தப்பட்ட அகழ்வாய்வு அங்கு ஒரு சிறந்த பண்டசாலை இருந்ததாக உறுதிப்படுத்துகிறது.[125] எயிற்பட்டினம் துறைமுகமாக விளங்கியதைச் சிறுபாணாற்றுப்படை புலப்படுத்துகிறது. இஃது இப்போதைய மரக்காணத்துக்கு அண்மையில் இருந்திருக்கவேண்டும்.[126]

இவையல்லாமல் பெரும்பாணாற்றுப்படை 'நீர்ப்பெயற்று' என்ற ஊரின் எல்லையில் ஒரு துறைமுகம் இருந்ததாகக் குறிக்கிறது. இதைப் பின்னால் வந்த மாமல்லபுரத்துறைமுகத்தின்முன்னோடியாகக் கொள்கிறார்கள்.[127] மருங்கூர்ப்பட்டினம் என்ற துறைமுகம் சில பாடல்களில் சுட்டப்படுகிறது.[128] இது பாண்டிநாட்டுப் பகுதியில் இருந்ததாகக் கொள்ளலாம்.

---

121 Nilakanta Sastri, K.A., Op. cit., p. 53
122 Ibid., p. 59
123 *The Periplus,* para. 60
124 *Ibid,* para 59.
125 *Ancient India,* No. . (194?), pp. 18-24.
126 இராசமாணிக்கனார், மா., 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி' (1970) பக். 153-60
127 மு.கு.நூ. பக். 64-67
128 அகம். 227:20; நற். 258:10, 358:10

ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்கள்

மேலே குறிப்பிட்ட துறைமுகங்கள் வழியாக ஏற்றுமதி, இறக்குமதியான பொருள்களைப் பற்றிக் 'கடற்செலவு' சிறிது விளக்கமாகவே கூறுகிறது. முசிறி, நீர்க்குன்றம் ஆகிய இரு துறைமுகங்களிலும் ஏற்றுமதிக்கு வைக்கப்பட்டிருந்த மிளகும் மலபத்திரமும் (ஒருவகை நறுமண இலை) மிகுதியாக இருந்தன வாதலால் இங்கே வந்த கப்பல்கள் பெரியனவாகவே இருந்தன என்று 'கடற்செலவு' குறிக்கிறது.[129] அரேபியர், கிரேக்கர் கலங்கள் இத் துறைக்கு வந்தன என்பதை மேலே பார்த்தோம். இலக்கியச் சான்றுகள் இச் செய்திகளுக்குச் சான்று பகருகின் றன. பேரியாற்றைக் கிழித்துக்கொண்டு பொன்னோடு வந்த யவ னரின் கலங்கள் மிளகை ஏற்றிக்கொண்டு திரும்பின என்பதை ஒரு குறிப்பில் பார்க்கிறோம்.[130] மீனை விற்றுப் பெறப்பட்ட நெல் உயரமாகக் கரையோர வீடுகளில் குவிக்கப்பட்டிருந்தது. இவ் வீடுகளில் குவிக்கப்பட்டிருந்த மிளகு மூடைகள் கரை நெடு கிலும் ஆரவாரமான ஒலிக்குக் காரணமாயிருந்தன. கடலில் நின்ற பெரிய கப்பல்களிலிருந்து பொன்னால் செய்யப்பட்ட பொருள் கள் தோணிகளில் ஏற்றப்பட்டுக் கழி வழியாகக் கரைக்குக் கொணரப்பட்டன. இங்கு மலைபடு பொருள்களும் கடல்விளை பொருள்களும் கலந்து விளங்கின.[131]

முசிறி, நீர்க்குன்றம் முதலிய மேற்குக்கரைத் துறைமுகங் களில் இறக்குமதியான பொருள்களில்[132] மிகுதியாக (பொன்) நாணயங்கள் இருந்தன. சிறிதளவு புஷ்பராகம் (தோபஜ்) என் னும் அரிய கல்வகையும்,மெல்லிய துணிகளும் இறக்குமதியாயின. சித்திரவேலைகள் தீட்டப்பட்ட லினன் துணி, அஞ்சனக்கல் (ஆன்டிமனி),[133] பவளம், வேலைப்பாடற்ற கண்ணாடி வகை, செம்பு, தகரம், ஈயம் ஆகியவை ஓரளவும், ஓரளவு மதுவும், தாளகம் (அரிதாரம்), செந்தாளகம்[134] ஆகியவையும் இறக்குமதி யாயின. யவன மாலுமிகளுக்கென்று கோதுமையும் எகிப்தி லிருந்து வந்தது. ஏராளமான மிளகு இவ்விடங்களிலிருந்து ஏற்று மதியாயிற்று. இத் துறைகளைச் சுற்றியிருந்த குட்ட நாட் டில் நல்ல மிளகு நிறைய விளைந்தது. நேர்த்தியான முத்துகள் யானைமருப்பு (தந்தம்), பட்டுத்துணி, கங்கைப்பகுதி இலா

---

129 *The Periplus,* para. 56
130 அகம். *149:9-10*
131 புறம். *343:56*
132 *The Periplus* para. 56
133 Antimony
134 Orpiment, realgae–மருந்துப் பிசின் வகைகள்

மிச்சை(ஸ்பைகினார்டு),[135] உள்நாட்டிலிருந்து வந்தமலபத்திரம், பல்வேறு அரிய கண்ணாடிக்கல் வகைகள், வயிரம், நீலக்கல்,சங்கு ஆகியவை, சுவர்ணதீபம் (மலாய் தீவுகள்) பகுதியிலிருந்து வந்த பொருள்கள், தமிழகத்தின் அண்மையிலிருக்கும் தீவுகளிலிருந்து வந்த பொருள்கள் ஆகியவை யாவும் மிகுந்த அளவில் ஏற்றுதி யாயின. முசிறியிலிருந்து ஏற்றுமதியான முத்து கொற்கையிலிருந்து வந்திருக்கலாம். அதே சமயம் பந்தருக்கருகிலும் சிறந்த முத்து விளைந்ததாகப் பதிற்றுப்பத்தில் குறிக்கப்படுகிறது.[136] பந்தர்த் துறைமுகத்திலிருந்துகூட முத்து ஏற்றுமதியாயிருக்கலாம். பந்தரில் நல்ல கலங்களில் வந்த செல்வம் மிகுந்திருந்த தாகக் குறிப்பிடப்படுகிறது.

கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களை நேரில் பார்க்காத காரணத்தால் போலும், 'கடற்செலவு' ஆசிரியர் கிழக்குத்துறை வாணிகம் பற்றிச் சிறிதளவே செய்தி வெளியிடுகிறார். கொற்கை முத்துக்குப் பெயர் பெற்றது என்பதைக் காண்கிறோம்.[137] கொற்கைக்கு வடக்கில் ஒரு வளைகுடாப் பகுதியை ஒட்டியிருந்த 'ஆற்கரு' என்று அழைக்கப்பட்ட உள்நாட்டுப் பகுதிக்குக் கடற்கரையிலிருந்து முத்துகள் கொண்டுவரப்பட்டதாகவும், இப் பகுதியிலிருந்து 'அர்கரிடிக்' என்ற மஸ்லின் துணி ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் செய்தி உள்ளது.[138] 'அர்கரு' என்பது உறையூர் எனச் சில ஆசிரியர்கள் கொள்வது பொருத்தமாகத் தெரியவில்லை. சொல் ஒற்றுமை தெளிவாக இல்லை. இருப்பிடமும் பொருந்தி வரவில்லை. வேறு ஏதாவது பாண்டிநாட்டு ஊராக இது இருக்கலாம். பாக் கடலிடுக்கை ஒட்டிய அறந்தாங்கி, பட்டுக்கோட்டைப் பகுதிகளில் தேடிப்பார்த்தால் உண்மை விளங்கலாம்.

காவிரிப்பூம்பட்டினம் முதலிய பிற துறைமுகங்களைப்பற்றிய 'கடற்செலவுக்' குறிப்பு விளக்கமாக இல்லை. தமிழகத்தின் எல்லாப் பகுதியிலிருந்தும், எல்லாப் பொருள்களும் இங்கு வந்தன என்றும் எகிப்திலிருந்து இறக்குமதியானவற்றில் பெரும்பகுதி இங்கே வந்தன என்றும் அது குறிக்கிறது.[139] இக் குறிப்பை விரிவு படுத்துவதுபோல மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலைக் குறிப்புகளும் பிறவும் உள்ளன.

---

135 Spikenard—மருந்து மூலிகை
136 பதிற். *74:6*
137 *The Periplus*, para. 59
138 Ibid
139 Ibid., para. 60

பாண்டி நாட்டின் கொற்கை, முத்துக்குப் பெயர்பெற்றது என்பது பல பாடல்களில் சுட்டப்படுகின்றது.[140] கொற்கைத் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதியான பொருள்களில் இது தலையாய இடத்தைப் பெற்றிருக்கவேண்டும். இங்குச் சங்குகளுக்காகப் பரதவர் கடலில் மூழ்கிவந்ததைப் பற்றியும், மீன்பிடிப்பவர் தாங்கள் கொணர்ந்த முத்துச் சிப்பிகளைக் கள்ளுக்குப் பண்டமாற்றாக விற்றதைப்பற்றியும் குறிப்புகள் உள்ளன.[141] இந்தத் துறைமுகம் வழியாக நடந்த வணிகம்பற்றி வேறு குறிப்புகள் இல்லை. ஆனால், மதுரைக்காஞ்சி பாண்டிநாட்டின் கடற்கரைநெடுகிலும் வாணிகம் சிறப்பாக நடைபெற்றது என்று தெரிவிக்கிறது. முத்து, சங்குவளையல், பலவகைத் தானியங்கள், உப்பு, மீன் வற்றல் ஆகியவையும், பிற நாடுகளிலிருந்து நாவாய்கள் மூலமாக வந்த சிறந்த பொருள்களும், குதிரைகளும் பல இடங்களில் நிறைந்திருந்தன[142] என்று மதுரைக்காஞ்சி விரித்துக் கூறுகிறது. கொற்கை, மருங்கூர்ப்பட்டினம் முதலிய பாண்டிநாட்டுத் துறைமுகங்கள் யாவற்றிலும் இப் பொருள்கள் வணிகப் பொருள்களாக இருந்தன என்பதில் தவறில்லை. மதுரை அங்காடிகளில் பிற நாட்டுப் பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன என்பதை முன்பே பார்த்தோம்.

கிழக்குக் கடற்கரையில் மிகச் சிறந்த நிலையிலிருந்த துறைமுகம் காவிரிப்பூம்பட்டினம் (புகார்) ஆகும். இது 'கமரா' என்று 'கடற்செல'வில் குறிப்பிடப்பட்டுள்ளதை மேலே பார்த்தோம். தாலமி இதனைக் 'காபேரிஸ்' துறைமுகம் என்று குறிப்பிடுகிறார்.[143] பட்டினப்பாலையில் இத் துறைமுகத்தைப் பற்றி விரிவாகக் கூறப்படுகிறது. இது சங்ககாலத்தில் கடலிலிருந்து சிறிது உள்ளே தள்ளியிருந்ததாகத் தெரிகிறது. அப்படித் தள்ளியிருந்தாலும் பெரிய கப்பல்களும் அதற்குள் வந்து தங்கும் அளவுக்கு வசதி பெற்றிருந்தாகக் கருத இடமுண்டு. பெரிய கலங்கள் தங்கள் பாய்களை அவிழ்க்காமலும், பாரத்தைக் குறைக்காமலும் புகார்த்துறைக்குள் புகுந்து ஏராளமான வாணிகப் பொருள்களை இறக்கின[144] என்று ஒரு புறப்பாட்டுச் செய்தி தருகிறது. புகாரில் ஆங்காங்குக் கடற்கழிகள் இயற்கையான படகு துறைகளாக விளங்கின என்றும் பட்டினப்பாலையிலிருந்து உய்த்துணரலாம்.

---

140 அகம். 27:9; நற். 23:6
141 ஷை 296:8-9, 350:11-13
142 மதுரைக். 315-24
143 'Khaberis emporion'—Mortimer Wheeler, *Rome beyond the Imperial Frontiers* (1955), p. 149
144 புறம். 30:11-13



ஒளிப்படம் 2

படகு கட்டும் துறை
(காவிரிப்பூம்பட்டினம்)

நன்றி: இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை-9

உப்பை விற்று நெல்லைக் கொண்டுவந்த படகுகள் (பஃறி) கழி களில் கட்டப்பட்டிருந்தன என்பதை முன்னரே கண்டோம். இப்படிப் படகு கட்டும் துறை ஒன்று அண்மையில் காவிரிப்பூம் பட்டின அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.[145]

காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் எப்பொழுதும் பர பரப்பான நிலை இருந்தது. பலநாட்டுப் பொருள்கள் வந்திறங் கின. பல நாடுகளுக்குப் பொருள்கள் ஏற்றுமதியாயின என்பது இந் நகரத்தின் அகன்ற அங்காடித் தெருக்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருள்களைக் கொண்டு அறியலாம்.[146] மேலே இதைப்பற்றிப் பார்த்தோம். பல திசைகளிலிருந்தும் நாடு களிலிருந்தும் வந்த இப் பொருள்களில் அரிதான பொருள்களும் இருந்தன; பெரிய அளவுள்ள பொருள்களும் இருந்தன. இப் பொருள்கள் பெரும்பாலானவை கடல் வாணிகத்தில் வழங்கின என்பதில் ஐயமில்லை. காவிரிப்பூம்பட்டினத் துறைமுகப் பண்ட சாலைகளில் கடற்கலங்களிலிருந்து நிலத்திற்கு இறக்கப்பட்ட பொருள்களும் ஏற்றுமதிக்கு வைக்கப்பட்டிருந்த பொருள்களும் அளவிட முடியாதவாறு ஏராளமாகக் கிடந்தன. இப் பொருள் கள் சோழ அரசனின் சுங்க அதிகாரிகளால் சோதனை செய்யப் பட்டு முத்திரையிடப்பட்டன.[147] இப் பொருள்கள்மீது பெறப் பட்ட சுங்கவரி (உல்கு) அரசுக்கு நிறைய வருமானத்தைக் கொடுத்தது. வாணிகம் நன்கு வளர்ச்சியடைந்திருந்ததால் இந் நகரம் மிக்க செல்வச் செழிப்போடு இருந்தது. உயர்ந்தோங்கிய மாடமாளிகைகளைப் பெற்றிருந்தது இந் நகரம். வாணிகத்தின் பொருட்டு வந்த பல்வேறு மொழிகளைப் பேசும் வேற்று நாட்ட வர்கள் இங்குக் கலந்து உறவாடினர்.[148]

கிழக்குக் கடற்கரையில் இருந்த இன்னொரு சிறந்த துறைமுகம் நீர்பெயற்று என்னும் பெயருடையது. மேலே குறிப்பிட்டவாறு இது மாமல்லபுரத் துறைமுகத்தின் பழைய பெயராகக் கருதப் படுகிறது. இவ்வாறு கருதுவது முடிந்த முடிபு அன்று. என்றா லும் இத் துறைமுக நகரம் சிறந்த ஒன்றாக இருந்தது என்று பெரும்பாணாற்றுப்படை புலப்படுத்துகிறது. இந் நகரமும் உயர்ந்த மாடவீடுகளைப் பெற்றதாக இருந்தது. இங்கு வாணி கச் செட்டிகள் (பரதர்) நிறைந்திருந்தார்கள். வெள்ளைநிறக் குதிரைகளையும், வடக்குப் பகுதிப் (கங்கைப் பகுதி) பொருள் களையும் ஏற்றி வந்த நாவாய்கள் இத் துறைமுகத்தில் குவிந்து

---

145 *Indian Archaeology*, 1962-63, A Review, p. 13

146 பட்டினப். 185-93

147 ஷை 130-135

148 ஷை 213-18

இருந்தன.[149] இத் துறைமுகத்திலிருந்த உயரமான கலங்கரை விளக்கம் கடலில் செல்லும் கலங்களைக் கூவி அழைத்ததாகக்[150] கூறுவது இலக்கிய மரபு.

எயிற்பட்டினத் துறைமுகத்தைப்பற்றி ஒரு குறிப்புமட்டுந் தான் கிடைக்கிறது. 'வீங்குதிரை கொணர்ந்த விரைமரம்' என்னும் அந்தக் குறிப்பிலிருந்து[151] இத் துறைமுகத்தில் கலங்கள் அகில் மரங்களைக் (விரை மரம்) கொண்டுவந்து இறக்கின எனலாம். இம் மரங்கள் அடுக்கப்பட்டிருந்த நிலை தூங்கும் ஒட்டகங்கள் காட்சியளிப்பதுபோல இருந்ததாம்.

இதுவரை எடுத்துக்காட்டிய செய்திகளிலிருந்து, சங்ககாலத் தமிழ்நாட்டின் வெளிநாட்டு வாணிகம் சிறந்த நிலையிலிருந்தது என்று முடிவுகட்டலாம். தமிழ்நாட்டின் மூன்று பக்கமும் நல்ல துறைமுகங்கள் இருந்ததனாலும், மற்ற நாடுகளில் கிடைக்காத சில அரிய பொருள்கள் இங்கே கிடைத்ததனாலும் வெளிநாட்டு வாணிகம் எளிதாக வளர்ந்தது. தொகுத்துப் பார்த்தால், தமிழ் நாட்டிலிருந்து சிறப்பாக மிளகு, முத்து, சில அரிய கல்வகைகள், பட்டு, பருத்தித் துணி ஆகியவை ஏற்றுமதியாயின. இறக்குமதியான பொருள்களில் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவை தங்கநாணயங்கள், குதிரைகள், உயர்ந்த மது ஆகியவை.

ஏற்றுமதியான பிற பொருள்களில் ஏலக்காய், அகில், சந்தனம் முதலிய நறுமணப் பொருள்களும், யானைமருப்பு, வயிரம் முதலியனவும் இருந்தன. ஏலக்காய் இங்கிருந்து குறைந்த அளவில்தான் ஏற்றுமதியாயிற்று.[152] அகில், சந்தனம் இங்கே இயற்கையாக விளைந்தன என்பது உண்மைதான். காவிரியாறு தன்னோடு (மலையிலிருந்து) கொண்டுவந்த நறை (ஒருவகை மணக்கொடி), நரந்தம் (ஒரு மணப்புல்), சந்தனம், அகில் ஆகியவற்றை ஒவ்வொரு துறையிலும் இறக்கியது என்று காணப்படும் பொருநராற்றுப்படை வருணனை இதனை உணர்த்துகிறது. உள்நாட்டிலே விளைந்தாலும் இவை வெளியேயிருந்தும் (கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்தும்) இங்கு இறக்குமதி செய்யப்பட்டன என்று கருத இடமுண்டு. எயிற்பட்டினத்திற்கு அகில் மரங்கள் கடலில் வந்தன என்று பார்த்தோம். இப்படி இறக்குமதி

149 பெரும்பாண். 319-23
150 பெரும்பாண். 347-51
151 சிறுபாண். 154-55
152 Innes Miller, J., *The Spice Trade of the Roman Empire*, p. 73

செய்யப்பட்ட பொருள்கள் மீண்டும் மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்த வகையில் தமிழ்நாட்டுக் கடல் வாணிகர்கள் இடைத்தரகர்களாகவும் இருந்தார்கள் எனலாம். 'கிழக்குக் கடற்கரைத் துறைகளுக்கு எகிப்திலிருந்து வந்த பொருள்களில் பெரும்பகுதி வந்தது. தமிழ்நாட்டிலிருந்து ஏற்று மதி செய்யப்பட்டவற்றில் பெரும்பகுதி இங்கிருந்தே போயின' என்ற 'கடற்செலவு'க் குறிப்பும்[153] மேலே குறிப்பிட்ட கருத்துக்குச் சான்று பகர்கிறது. சீனாவிலிருந்து மேற்கு நாடுகளுக்குச் சென்ற பட்டுத் துணிகளில் ஒரு பகுதி கங்கை ஆற்றுப்பகுதி வழியாகத் தமிழ்நாட்டுக்குக் கொணரப்பட்டுத் தமிழ்நாட்டிலிருந்து மேற்கே அனுப்பப்பட்டதுமுண்டு.[154]

இறக்குமதிப் பொருள்களில் இரும்பு தவிர்த்த உலோகங்களில் சில இருந்தன என்பதை மேலே குறிப்பிட்ட 'கடற்செலவு'க் குறிப்பிலிருந்து அறியலாம். சில அழகூட்டும் பொருள்களும் இறக்குமதியாயின. யவனப் பாவை விளக்கு இலக்கியத்தில் குறிப் பிடப்படுகிறது.[155]

தமிழ்நாட்டோடு வாணிகத் தொடர்புகொண்ட நாடுகள் கிரேக்கம், உரோமானியப் பேரரசு, எகிப்து, அரேபியா ஆகிய மேற்கு நாடுகள், மலாயா உள்ளிட்ட சில கிழக்கிந்தியத் தீவுகள், சீனா, ஈழம் ஆகியவை. இந்தியாவிலேயே கங்கைச் சமவெளிப் (வங்காளம்) பகுதிக்கும் போக்குவரத்து இருந்தது. கிழக்குத் தீவுகள், சீனா ஆகிய நாடுகளின் தொடர்பைப்பற்றிச் சிறிதளவுதான் தெரியவருகிறது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் காஞ்சிபுர 'நாட்டுக்கும்' சீனாவுக்கும் தொடர்பு இருந்ததாகத் தெரி கிறது.[156] ஆனால், இதைப்பற்றி இதற்குமேல் ஒன்றும் தெரிய வில்லை. அதிகமாக, வாணிகம் மேற்கு நாடுகளோடுதாம் நடந்தது.

கிறித்து பிறப்பதற்கு முன்னால் கிரேக்கம் தென்னிந்தியாவோடு நேரடியாக வாணிகம் செய்தது. எகிப்து நாட்டின் நகர மான அலெக்சாண்டிரியா இந்த வாணிகத்தின் காரணமாக மிகுந்த வளர்ச்சியடைந்தது.[157] இதற்குப் பின் கிரேக்கமும், எகிப்தும் உரோமானியப் பேரரசுக்குள் வந்ததன் காரணமாக உரோமானியப் பேரரசும் தென்னிந்தியாவோடுதொடர்புகொண்

---

153 *The Periplus*, para. 60.
154 Dipackranjan Das, *Economic History of Deccan*, p.223
155 நெடுநல். *101-102*
156 Nilakanta Sastri, K.A., Op. cit., pp. 44–45
157 Nilakanta Sastrl, K.A., Op. cit. p. 5

டது. உரோமானியப் பேரரசின் தொடக்கக் கட்டத்திலிருந்தே இந்தியாவோடான அதன் கடல் வாணிகம் பெரிதும் வளரத் தொடங்கியதாகத் தெரிகிறது. முதல் உரோமானியப் பேரரசனான அகஸ்டஸ் காலத்தில் வாழ்ந்த ஸ்ட்ராபோ என்பவர் கொடுக்கும் செய்தியிலிருந்து இது தெரிகிறது. அதற்கு முன்னால் ஒருசில கலங்களே செங்கடல் துறைமுகமான மையோஸ் ஹோர் மோஸிலிருந்து இந்தியாவுக்குச் சென்றுவந்த நிலை மாறி, (ஓர் ஆண்டில்) 120 கலங்கள் வரை இந்தியாவுக்குச் சென்று வரத் தொடங்கின என்கிறார் அவர்.[158] இதற்குக் காரணங்கள்: ஒன்று அரேபியாவின் தென்கோடி உரோமானிய ஆதிக்கத்தின்கீழ் வந்தது.[159] இரண்டு, 'ஹிப்பாலஸ்' என்பவன் தென்மேற்குப் பருவக்காற்று கலஞ்செலுத்த உதவும் வகையைக் கண்டறிந்தது. 'ஹிப்பாலஸ்' என்ற ஒரு கிரேக்க மாலுமி கி.பி. முதல் நூற்றாண்டுத் தொடக்கத்தில் அரபிக்கடல் பகுதியில் கலஞ்செலுத்துவதற்குத் தென்மேற்குப் பருவக்காற்று மிகுந்த உதவிபுரிகிறது என்பதைக்கண்டுபிடித்தான். இதிலிருந்துகாற்றின்போக்கிலேயே சென்றால், நாற்பது நாள்களில் செங்கடல் துறைமுகங்களிலிருந்து தென்னிந்தியக் கரையை அடையலாம் என்றும், இந்தக் காற்றின் உதவியைப் பெறவேண்டுமானால் ஜூலை மாதத்தில் பயணத்தை மேற்கொள்ளவேண்டும் என்றும் தெரியவந்தது.[160] இந்தப் பயணம் நடுக்கடலினூடேயே மேற்கொள்ளவேண்டி வந்ததால் இதற்குமுன் கடற்கரையோரமாகச் சென்று வந்ததனால் ஏற்பட்ட மிகுந்த காலவிரையம் குறைந்தது. கடற்கரையோரமாக இருந்துவந்த கடற்கொள்ளைக்காரர்களின் தாக்குதலுக்கு உள்ளாவதும் குறைந்தது. இந்தக் காலத்திலிருந்து இக்காற்று 'ஹிப்பாலஸ்' என்று பெயரிடப்பட்டது. ஆனால், இதற்கு முன்பே இக்காற்றைப்பற்றி அரேபியரும் இந்தியரும் குறிப்பாகத் தமிழர்களும் தெரிந்து வைத்திருந்தார்கள் என்பதில் தவறில்லை. 'நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி, வளிதொழில் ஆண்ட உரவோன் மருக' என்று சோழ அரசன் புகழப்படுவதை[161] இங்கே நினைவுகூரலாம். எவ்வாறிருப்பினும் 'ஹிப்பாலஸ் கண்டுபிடிப்பு' உரோமானியர்களைப் பொறுத்தவரை மிக முக்கியமான ஒன்றாக இருந்தது. எகிப்திலிருந்து உரோமானியக் கப்பல்கள் தென்னிந்தியாவுக்கு வந்துபோய் ஏராளமான பொருள்களைச் செங்கடல் துறைமுகங்களில் குவித்தன. பின்பு அத் துறைகளிலிருந்து பொருள்

---

158 Nilakanta Sastri, K.A., Op. cit., p. 48

159 Nilakanta Sastri, Op. cit., p. 5

160 Mortimer Wheeler, Op. cit., pp. 153-57

161 புறம். 66:1-2

கள் நிலவழியாக நடுநிலக்கடல் துறைமுகங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுஅங்கிருந்து உரோமானியப் பேரரசை அடைந்தன.

உரோமானிய-தமிழ்நாட்டு வாணிகத் தொடர்பைப்பற்றி விரிவாக அறிந்துகொள்ளும் வகையில் சான்றுகள் உள்ளன. மேலே குறிப்பிட்ட இலக்கியக் குறிப்புகள், கிரேக்க ஆசிரியர் குறிப்புகள் ஆகியவற்றோடு தொல்லியல் சான்றுகளும் மிகுந்த செய்தியைக் கொடுக்கின்றன. தமிழ்நாட்டிலிருந்து வந்த மிளகு, முத்து முதலியவற்றின் காரணமாக உரோமானியப் பேரரசுக்கு ஏராளமாக இழப்பு ஏற்பட்டது என்று கருதப்பட்டது. குறிப்பாக உரோமானியர் மிளகை மிகவும் உயர்வாக மதித்தார்கள். மருந்தாகவும், உணவுக்குச் சுவையூட்டும் பொருளாகவும் இது பயன்படுத்தப் பட்டது. அதனால் இதற்கு மிகுந்த தேவையிருந்தது.[162] தமிழ் நாட்டிலிருந்து போன மற்றப்பொருள்களுக்கும் நிறையத் தேவையிருந்தது. இப் பொருள்களைத் தமிழ்நாட்டிலிருந்து கொண்டு சென்ற வாணிகர்கள் மிகுந்த ஊதியம் பெற்றார்கள். வாங்கின விலையைப் போல நூறு மடங்கு இருந்தது விற்பனை விலை. இதைக் குறித்துப் பிளினி பின்வருமாறு அங்கலாய்க்கிறார்.[163] 'இப்பொழுது எகிப்திலிருந்து இப் பயணத்தில் ஈடுபடுவது எந்த வகையிலும் தவறில்லை. இக்கூற்றை முக்கியமானதாகக்கொள்ள வேண்டும். ஏனென்றால், அகவிலையைப் போல நூறு மடங்கு விலையில் இங்கு உரோமானிய நாட்டில்) விற்பனையாகக் கூடிய பொருள்களை இந்தியா அனுப்பிவிட்டு மாறாக நம்முடைய பேரரசின் செல்வத்தில் $5\frac{1}{2}$ கோடி ஸெஸ்டர்சுகளைத் தனதாக்கிக் கொள்ளாத ஆண்டே இல்லை. இன்னோர் இடத்தில் பிளினியே 'ஒவ்வோர் ஆண்டும் குறைந்தது 10 கோடி ஸெஸ்டர்சுகளை இந்தியா, பட்டு விளைவிக்கும் வடசீனா, அரேபியத் தீபகற்பம் ஆகிய நாடுகள் சேர்ந்து நம் பேரரசின் செல்வத்தை எடுத்துக் கொள்கின்றன. நம் பெண்களாலும், நம் ஆடம்பரங்களாலும் இந்த இழப்பு ஏற்படுகிறது' என்று வருத்தப்படுகிறார்.[164]

பிளினியின் கூற்று முழுவதும் உண்மையென்று தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இந்தியாவில் பல இடங்களில் உரோமானியத் தங்க, வெள்ளி நாணயங்கள் (புதையல்களாகவும் தனித்தனியாகவும்) கிடைத்துள்ளன. இவை மிகுதியாகத் தென்னிந்தியாவிலேயே கிடைத்துள்ளன.[165] மொத்தம் 68

---

162 Mortimer Wheeler, Op. cit., p. 148

163 Innes Miller, J., Op. cit., p.223

164 Ibid

165 Mortimer Wheeler, Op. cit., p. 165–72

கண்டுபிடிப்புகளில் 57 விந்தியமலைக்குத் தெற்கே கிடைத்தன. மேலும், கோயமுத்தூர் மாவட்டம் அதையொட்டிய சில எல்லைப்பகுதிகள் ஆகிய பகுதிகளில் மட்டும் இந்தியாவில் கிடைத்த மொத்த உரோமானிய நாணயங்களில் பாதிக்குமேல் கிடைத்தன என்பது குறிப்பிடத்தக்கது. இந் நாணயங்களில் கி.பி. முதல் நூற்றாண்டு நாணயங்களே (அகஸ்டஸ், டைபீரியஸ் ஆகிய பேரரசர் நாணயங்கள்) மிகுதியாக உள்ளன. பேரரசன் நீரோ (கி.பி.54–68)காலத்திலிருந்து இங்குவந்த நாணயங்கள் குறைந்துவிட்டன. இந் நாணயங்களுள் பலவற்றில் உள்ள அரசர் தலைகள் சிதைக்கப்பட்டுள்ளன. இதனால் இவை தமிழ்நாட்டில் 'நாணயங்கள்'என்னும் வகையில் புழங்கப்படவில்லை என்று கருதப்படுகிறது. இந்த நாணயங்களுக்கு ஈடான உள்நாட்டு நாணயங்கள் சங்ககாலத்தில் இருந்தமைக்கான தெளிவான சான்றும் இதுவரை கிடைக்கவில்லை. ஆகவே, உரோமானிய நாணயங்கள் பெரும்பாலும் அவற்றின் தங்க, வெள்ளி மதிப்புக்காகவே தமிழ்நாட்டு வாணிகர்களால் வாங்கப்பட்டிருக்கலாம் என்று எண்ண இடமுண்டு.[166] அதாவது, இவ்வளவு எடை தங்கத்துக்கு இவ்வள்வு பொருள்கள் என்றே இந்த வாணிகம் இருந்தது. நீரோ அரசன் காலத்திலிருந்து உரோமானிய நாணயங்களில் கலப்பு மிகுதியாகி அவற்றின் மாற்றுக் குறையவே அவை தமிழ்நாட்டு வாணிகர்களால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படவில்லை.[167] இதனால்தான் நீரோ காலத்துக்குப் பிற்பட்ட உரோமானிய நாணயங்கள் இங்கு அருகிக் காணப்படுகின்றன.

உரோமானிய வாணிகர்கள் தங்க, வெள்ளி நாணயங்களோடு தங்கள் நாட்டிலிருந்து சில பொருள்களையும் கொண்டுவந்தார்கள். 'யவனர் தேறல்' தமிழ்நாட்டில் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டது.[168] புதுச்சேரிக்கருகில் அரிக்கமேடு என்னும் இடத்திலும், கொற்கை, காவிரிப்பூம்பட்டினம், காஞ்சிபுரம், கரூர் முதலிய இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் மதுவகைகள் கொண்டுவரப்பட்டனவாகக்கருதத்தக்க யவன மட்கலங்கள் பல காணப்பட்டன. இவையேயல்லாது சில யவன நாட்டு விளக்குகளின் சின்னங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.[169] இப் பொருள்களெல்லாம் பண்டமாற்று வாணிகத்தில் பயன்

---

166 Mortimer Wheeler, Op. cit., pp. 165-72.

167 Ibid, p. 168

168 புறம். 56:18-21

169 Ancient India, No. 2. (1946) pp. 34-36



ஒளிப்படம் 3

யவன மட்கலங்கள்

(காஞ்சிபுரம்)

நன்றி : இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை - 9

படுத்தப்பட்டன. கி. பி. முதல் நூற்றாண்டைத் தொடர்ந்து நாணயங்கள் குறைந்த பிறகு இந்தப் பண்டமாற்று வாணிகம் அதிகமாகியிருக்கவேண்டும். இந்த வகையில் கி. பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தனவாகக் கருதப்படும் நீலகிரிப் பெருங் கல் ஈமச்சின்னங்களில் கிடைக்கும் வெண்கலப் பாத்திரங்களும், பொருள்களும் உரோமானிய வேலைப்பாட்டைக் கொண்டு உள்ளன என்னும் கருத்தை[170] இங்கே சுட்டிக் காட்டலாம்.

முடிவு

இதுவரை குறிப்பிட்ட செய்திகளிலிருந்து சங்ககாலத் தமிழ் நாட்டின் பொருளியலின் முழு வடிவம் கிடைக்கவில்லையென் றாலும், ஓரளவுக்கு அதனியல்பு புலப்படுகிறது. இப் பொரு ளியலில் வேளாண்மை முதலிடம் பெற்றது. வெளிநாட்டு வாணி கத்தில் முதலிடம் பெற்றது வாணிகப் பொருளான மிளகு என் பதைப் பார்த்தோம். வேறு உணவுப்பொருள்கள் ஏற்றுமதி யானதாகத் தெரியவில்லை. கிரேக்க, உரோமானிய மாலுமி களுக்கு வேண்டிய கோதுமை எகிப்திலிருந்தே கொண்டுவரப் பட்டது[171] என்பதைக் கவனிக்கவேண்டும். இங்கிருந்து ஏற்று மதியான கைவினைப் பொருள்களில் மென்துகில் முதலிடத்தைப் பெற்றது. இந்தத் துகில் ஏற்றுமதி உள்நாட்டு நெசவுத் தொழி லைப் பெரிதும் ஊக்கியிருக்கவேண்டும். பிற ஏற்றுமதிப் பொருள் களில் அரிய கல்வகைகள்தாம் மிகுந்திருந்தன. கோயமுத்தூர் மாவட்டத்தில், தாராபுரம் வட்டத்தில், படியூர் என்னும் ஊரில் இருந்து 'பெரில்' எனப்பட்ட பச்சைக் கற்கள் மிகுதியாக ஏற்று மதிக்குச் சென்றன.[172] அதனால்தான் இம் மாவட்டத்தில் மிகுதி யாக உரோமானிய நாணயங்கள் கிடைக்கின்றன. இதனைப் பற்றி நிலவும் இன்னொரு கருத்தையும் இங்கே பார்க்கவேண்டும். அதாவது, மேற்குக் கரையை வந்தடைந்த மேல்நாட்டு வாணி கர்கள் கிழக்குக் கடற்கரைக்குப் போவதற்கு முதலில் நிலவழி யைத்தான் மேற்கொண்டிருக்க வேண்டும். பாலக்காட்டுக் கண வாய் வழியாகக் கோயமுத்தூர் மாவட்டத்தை அடைந்து அங் கிருந்து நேராகக் கிழக்குக் கடற்கரைக்குப் போயிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.[173] இப்படி ஓர் உள்நாட்டுப் போக்கு வரத்து ஏற்பட்டிருந்தால் அஃது உள்நாட்டுப் பொருளியலை ஓரளவு தாக்கியிருக்கும் என்று நம்பலாம்.

---

170 Smith, V.A. *Early History of India* (Oxford, 1967) p. 463

171 *The Periplus*, para. 56.

172 Smith, V.A., Op. cit., p. 461

173 Mortimer Wheeler, Op. cit., pp. 171-72

சங்ககாலத் தமிழ்நாட்டுப் பொருளியலைப்பற்றி நமக்குக் கிடைக்கும் செய்தியில் பல குறைபாடுகள் உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. அக்கால வாழ்க்கைத்தரத்தைத் தெளிவாக அளந்தறிவது இயலாத ஒன்று. உள்நாட்டு வாணிகம், பொருளியலில் வெளிநாட்டு வாணிகம் எப்படிப் பொருந்தியது என்பதும் தெளிவாக இல்லை. இந்தியாவுக்கு ஆண்டுதோறும் 5½ கோடி ஸெஸ்டர்சுகள் மதிப்புள்ள நாணயம் வந்தது என்று பார்த்தோம். இதில் பேர்பாதி தமிழ்நாடு பெற்றது என்று நம்பலாம். 2.75 கோடி ஸெஸ்டர்சுகள் 2,80,513 ஆங்கில சவரன்களுக்குக் சமமாகக் கொள்ளப்படுகிறது.[174] அதாவது, இன்றைய மதிப்பில் இது ரூ. 56,10,260 ஆகும். அக்கால மொத்த நாட்டு வருமானம் என்ன என்பது தெரியாத வரை இந்த வெளிநாட்டு வாணிக மதிப்பினால் புதிய விளக்கம் யாதும் கிடைக்க வாய்ப்பு இல்லை.

174 Innes Miller, J., Op. cit., p. 223

இயல் 3

நாகரிகமும் பண்பாடும்

இக்காலத்தில் வரலாறு என்பது ஓர் இனத்தின்—நாட்டின்—'நாகரிக'த்தினை விளக்குவதாக, 'பண்பாட்டினை'ப் படம்பிடித்துக் காட்டுவதாக அமையவேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.[1]

தமிழன் கண்ட நாகரிகம்

பண்டைத் தமிழர், 'நாகரிகம்' என்னும் நயமிகு சொல்லையே பொதுவாகப் பயன்படுத்தியுள்ளனர். நாகரிகம்[2] வேறு; பண்பாடு[3] வேறு என்பது மேலை நாட்டு அறிஞர்களின் கருத்து ஆகும். நாகரிகம் இருவகைப்படும் என்பது நம் முன்னோரின் நம்பிக்கை. உள்ளத்தின் வளர்ச்சியையும் உணர்வுகளின் மலர்ச்சியையும் புலப்படுத்துவது ஒரு வகை; புறவாழ்வின் சிறப்பினை வெளிப்படுத்துவது மற்றொரு வகை. பொருளினை அகம், புறம் என்று பாகுபடுத்தியதைப்போன்றே, நாகரிகத்தையும் அகம், புறம் எனப் பாகுபடுத்தலாம். அகத்தின் எழுச்சியை—உள்ளத்தின் உயர்வை—மேம்பாட்டை அறிய உதவுவன யாவும் நாகரிகத்தின் அகக் கூறுகளாகும்.

உலக வாழ்க்கையில்—புறவாழ்வில்—மனிதன் அடைகின்ற வியத்தகு முன்னேற்றங்கள், பெறுகின்ற பேறுகள், போற்றிப் பின்பற்றுகின்ற நாள்வண்ணம், இன்பம் தரும் பகட்டுமிகு வாழ்க்கை வசதிகள் போன்ற யாவும் நாகரிகத்தின் புறக்கூறுகளாகும். இவ்வாறு அகமும் புறமும், உணர்வும் அறிவும், உள்ளமும் உடலும் ஒன்றியும் இணைந்தும் இயங்குவதால் வெளிப்படும் வாழ்க்கை முறையையே, பண்டைத் தமிழ்மக்கள் 'நாகரிகம்' என்று போற்றினர்.

---

1 Toynbee Arnold, J., *Civilization on Trial*, OUP, London, 1957, p.8

2 Civilization

3 Culture

இதனை வேறுவகையாகவும் கூறலாம். நம்முடைய முன்னோர்கள் தனிமனிதனுடைய வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் 'நாகரிகம்' என்னும் சொல்லால் சுட்டினர்; அதே சமயத்தில் சமுதாயத்தின் பல்துறை வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் வெளிப்படுத்தும் வாழ்க்கைப் பாங்கினையும் 'நாகரிகம்' என்றே போற்றிப் புரந்தனர்.

'பெயக்கண்டு நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்'

என்னும் குறட்பாட்டிற்குப்[4] பரிமேலழகர், 'நாகரிகம் என்பது கண்ணோட்டமாதல்'[5] என்று விளக்கம் தந்துள்ளார். இங்குக் 'கண்ணோட்டம்' என்பதுகுற்றத்தைப்பொறுத்துக்கொள்ளும்—பிறர் செய்த துன்பத்தைத் தாங்கிக் கொள்ளும்—உள்ளப் பண்பாட்டையே குறிப்பதாகக் கொள்ளலாம்.

பரிமேலழகருக்குக் காலத்தால் முற்பட்டவரான மணக்குடவர் என்னும் உரையாசிரியர், 'அறம் பொருள் இன்பத்தின்கண் நற்குணங்கள் பலவும் உடைமையே'[6] நாகரிகம் என்பார். இதிலிருந்து ஓர் உண்மை புலனாகின்றது. அறத்தை அடிப்படையாகக் கொண்ட உள்ளப் பண்பாடும் 'நாகரிகம்' எனப் போற்றப்படுவதும், பொருளையும் இன்பத்தையும் அனுபவிக்கும் வாழ்க்கை முறையும் 'நாகரிகம்' எனக் கருதப்படுவதும் தெளிவாகின்றன. எனவே, ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போன்று, பிரிக்க இயலாதனவாக இவை உள்ளன எனலாம். உள்ளப் பண்பாடும் உணர்ச்சிக் கனிவும் இயைந்து மனித உள்ளத்தில் மாட்சியைப் புலப்படுத்தும் அகவாழ்க்கைக் கூறுகளும், வளமார்ந்த வாழ்க்கையை வெளிப்படுத்தும் புறவாழ்க்கையின் கூறுகளும் இணைந்தும் இழைந்தும் இயங்குவனவே 'நாகரிகம்' எனப் போற்றுவது நம் நாட்டு மரபு என்பது இவற்றால் புலனாகின்றது.

நாகரிகமும் பண்பாடும்

இந்தியச் சிந்தனையாளர்களும், மேலைநாடுகளின் நல்லறிஞர்களும் நகர் அகத்துத் தோன்றிவளர்ந்த சிறப்புமிகு வாழ்க்கை நெறியை 'நாகரிகம்' எனப் போற்றி வருகின்றனர்.[7] வாழ்க்கை

---

4 குறள். 580
5 ஷெ பரிமே. உரை
6 ஷெ மணக். உரை
7 Toynbee Arnold, J., *A Study of History*, Abd. D.C. Somerwell Dell Publishing Co., Inc. New York, 1969; Vol. I. p. 19

யில், மனிதன் முழு நிறைவை அடைவதற்காக மேற்கொள்ளும் முயற்சியின் பயனாக அமைவது பண்பாடு. முழுநிறைவான வாழ்க்கை, இனிமையும் ஒளியும் உடையதாக அமையும்.[8]

பண்பாட்டின் வளர்ச்சியில் பல படிநிலைகள் உள்ளன. தனி மனிதனுடைய உணர்வுகளும், செயல்களும், பழக்கவழக்கங்களும் பண்பட்டு வளர்ச்சியுறுதல் ஒரு நிலை; தனிமனிதர்கள் ஒன்றாகக் கூடி வாழ்வதால் உருவாகும் சமூகங்களின் பண்பட்ட முன்னேற்றம் மற்றொரு நிலை; சமூகங்கள் பல சேர்ந்து ஒரு சமுதாயமாகப் பின்னிப் பிணைந்து இயங்கும்பொழுது உருவாகும் வாழ்க்கை நெறி, பழக்கவழக்கங்கள், கலையுணர்வு, சிந்தனை முதிர்ச்சி ஆகிய அனைத்தும் இணைந்து ஒருவகைச்சமுதாயச்சிந்தனையாக வெளிப்படுவதே 'பண்பாடு' என்பது மூன்றாவது நிலை.[9] இம் மூவகை நிலைகளிலும் முதன்மை இடம் பெறுவது மனிதனுடைய உள்ளத்து உணர்வுகள் பதப்பட்டுச்செம்மை நலமுறுவதேயாகும். எனவே, இதனை நம் முன்னோர் கண்ட நாகரிகத்தின் அகக் கூறாகக் கொள்ளலாம்.

தமிழர் நாகரிகத்தின் சிறப்பு இயல்புகள்

இந்தியாவின் தென்பகுதியில், கிழக்குக் கடலுக்கும் மேற்குக் கடலுக்கும் இடைப்பட்ட பகுதியில் வளர்ந்து, சிறந்தது பண்டைத் தமிழர் நாகரிகமாகும். இதனை உருவாக்கிய—போற்றி வளர்த்த-மக்கள், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எண்ணத்தில் எழுச்சியும், இதயத்தில் மலர்ச்சியும், வாழ்க்கையில் வளமும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்தவராவர்.

மேலை நாடுகளோடும் கிழக்காசிய நாடுகளோடும் வாணிகத் தொடர்புகொண்டு பொருள் ஈட்டிய பெருமைக்குரியவர்கள் பண்டைத் தமிழர்களாவர். கடலக வாழ்வில் அவர்கள் பேரீடுபாடு கொண்டு இருந்தனர். இதனால், பல்வேறு நாட்டு மக்களோடு பழகவும், அம் மக்களின் வாழ்க்கை இயல்புகளையும் வாழ்க்கைப் போக்குகளையும் நேரில் கண்டுணரவும் வாய்ப்புகள் பலவற்றை அவர்கள் பெற்றிருந்தனர். பல்வேறு நாட்டு மக்கள் தமிழகத்தின் நகரங்களிலும் பட்டினங்களிலும் வேறுபட்ட பல

---

8 Matthew Arnold, *Culture and Anarchy*, CVP, GB, 1969, p. 69
9 Eliot, T.S., *Notes Towards the Definition of Culture*, Faber, London, 1967, p. 21

மொழிகளைப் பேசுபவர்களாக வாழ்ந்தனர்.[10] இவற்றால் சங்க காலத் தமிழருடைய வாழ்க்கையில் ஒருவகை நெகிழ்ச்சியும், பொறுமைப் பண்பும், வேற்றுமைகள் இடையே ஒற்றுமை காணும் உள்ளவுணர்வும் மேம்பட்டு விளங்கலாயின. இவர்களின் காலம் ஏறக்குறைய கி. மு நான்காம் நூற்றாண்டு முதல் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை எனலாம்.

பண்டைத் தமிழருடைய நாகரிகம் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நானிலத்து ஐந்திணை நாகரிகமாக அரும்பி, பையப்பைய வளர்ந்து, ஆற்றங்கரையோரங்களில் நகர நாகரிகமாக மலர்ச்சியுற்றது. இதனால், நானிலத்து வாழ்க்கை வேறுபாடுகளுக்கு இடையே மருத நிலத்து வாழ்க்கை—நகர வாழ்க்கை—ஒருவகைப் புதுமைப் பொலிவும், புதுக் கவர்ச்சியும் பெற்றுச் சிறப்புறலாயிற்று. பிற நிலங்களின் வாழ்க்கைக் கூறுகள்—இயல்புகள்—இம் மருதநில நாகரிகத்தில் கலந்தும் கரைந்தும் தம் தனிப் பண்புகளை இழந்தன. இங்கும், வேற்றுமை களுக்கு இடையே ஒற்றுமையைப் போற்றி வாழும் உணர்வு தழைத்தோங்கத் தொடங்கியது.

பேரரசன் அசோகன் கால முதல் (கி.மு. 273-232) தமிழகத் திற்கும் வடஇந்தியப் பகுதிகளுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு உண்டானதை முன்னரே நாம் கண்டோம். பௌத்த சமயத் தொண்டர்களும், சமணத் துறவிகளும் தமிழகத்திற்குப் பேரளவில் அலையலையாக வரத் தொடங்கினர்; மலைகளிலும் குகைகளிலும் தங்கி வாழ்ந்தனர்; மக்களுக்கும் மன்னர்களுக்கும் இடையே, சிறப்புமிகு அறவோர்களாக இக் ‘குன்றுறை தவசியர்’ செல்வாக்குப் பெற்றனர்;[11] தங்கள் சமய உண்மைகளை, மக்கள் மொழியில் நயமாக இவர்கள் எடுத்துரைத்தனர்.

இவர்களுக்கு முன்பே வைதிக சமயத்தினர் சிறுசிறு கூட்ட மாகத் தென்னாட்டில் குடியேறி இருந்தனர். அக் குடியேற்றத் திற்குத் தலைமை தாங்கியவரே அகத்தியர் என்பது ஆராய்ச்சி யாளரின் துணிபாகும். ‘ஆரியவர்த்தத்தினின்று தென்னாட்டை ஆரியமயமாக்கும் பொருட்டு, விந்திய மலையைக் கடந்து வந்தவர் களுள் அகத்தியர் முதன்மையானவர். அவர் ஆரியப் பண்பாட் டையும் சமயத்தையும் தென்னாட்டிற்குக் கொண்டுவந்து பரப்பி யதையே, பலவகையாக வழங்கும் பழங்கதைகளின் மூலம் அறி

10 பட்டினப். 214-217

11 நற். 141:4-5

கிறோம்'.[12] மற்றும், 'ஆதிகாலத்தில் ஆரியர்கள் பிறநாடுகளில் தங்கள் பண்பாட்டைப் பரப்புவதில் கொண்டிருந்த ஆர்வத்தைப் புலப்படுத்தும் உருவகக் கதைகள் பல அகத்தியரைப் பற்றிய கதைகளாக வழங்குகின்றன'[13] என்னும் வடஇந்திய அறிஞரின் கருத்தும் அரண் செய்கிறது. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு அளவில் இவ் வைதிக சமயத்தவரின் ஊடுருவல் தமிழகத்தில் தொடங்கி இருக்கலாம்.[14]

வடக்கிலிருந்து வந்த, தமிழ் அல்லாத பிற மொழிகளைப் பேசிய வைதிக சமயத்தவரையும், சமண-பௌத்தத் துறவிகளையும் 'ஆரியர்' என்னும் பொதுப் பெயராலேயே பண்டைத் தமிழர் சுட்டினர். இந்த ஆரியர்களின் செல்வாக்கு நகரத்து மேட்டுக் குடிமக்களிடையிலும், அரசர்கள் இடையிலும் வேரூன்றத் தொடங்கியது. ஆயினும், நாட்டுப்புற மக்களும் அறிஞர்களும் இந்தப் 'புதுமைக் கவர்ச்சி'க்கு இரையாகவில்லை என்பதைச் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் புதுமை நெறிகளின் தாக்கத்தால் 'வேற்றுமைகளுக்கு இடையே ஒற்றுமை காணும்' தமிழ்ச் சான்றோர்களின் உள்ளவுணர்வு வலிவும் பொலிவும் பெற்றதைக் காணுகின்றோம். வாழ்க்கையை அளவாகச் சுவைப்பதில், எதையும் நடுவுநிலைமையோடு அணுகுவதில் சங்ககாலத் தமிழ்மக்கள் சிறந்து விளங்கினர். 'நன்மை செய்ய இயலாவிட்டாலும் தீமை செய்யாமல் ஆகிலும் ஒதுங்கி நிற்கவேண்டும்'[15] என்பது பண்டைத் தமிழ்ச் சான்றோரின் வாழ்வியல் கோட்பாடாகும்.

சமயச் சார்பற்ற சமுதாயமாகச் சங்ககாலச் சமுதாயம் விளங்கியதை நாம் எளிதில் புறக்கணிக்க இயலாது. 'இந்திய நாகரிகம் என்று சொன்னால், அது மண்ணுலகைப்பற்றிக் கவலைப்படாதது; செத்த பிறகு சிவலோகம், வைகுந்தம் வாய்க்குமா? என்பதைப்பற்றி எண்ணுவதாகவே இருக்கும்'[16] என்னும்

---

12 Sivaraja Pillai, K.N., *Agastya in Tamil Land,* University of Madras, 1929, pp. 61–64

13 Gangoly, O.B., *The Cult of Agastya* in the Quartely Journal of the Mythic Society, Bangalore, 1931, Vol. 17, p. 170

14 Nilakanta Sastri, K.A., *Cultural Contacts between Aryans and Dravidians,* Manktales Bombay, 1967, p. 16.

15 புறம். *195:6-7*

16 Albert Schweitzer, *Indian Thought and Its Development*, Wilco, Bombay, 1969, p. viii

எண்ணம் பொதுவாகப் பலருக்கு எழுவது உண்டு. ஆனால், சங்ககாலத் தமிழரின் நாகரிகம் இதற்கு நேர்மாறானது. 'மனிதன் வளமாகவும் நலமாகவும் இந்த உலகில் வாழ்வதற்கு உரிய வழி வகைகளை வளர்த்துக்கொண்டதனால் உருவானதே பண்டைத் தமிழரின் நாகரிகம்[17] எனத் துணியலாம். உலக மறுப்போ, வாழ்க்கை மறுப்போ சங்ககாலத் தமிழரிடையில் காணப்பெற வில்லை. 'வாழ்க்கை வாழ்வதற்கே! வளமாக வாழ்வதற்கே! நலமாக வாழ்வதற்கே! சிறப்பாக வாழ்வதற்கே' என்னும் உணர்வே அவர்களிடம் மேலோங்கி இருந்தமை தெரியவருகிறது.

பண்டைத் தமிழர் பருப்பொருள் சார்பான பண்பாட்டையே போற்றி வளர்த்துள்ளனர். அவர்கள் உணர்ச்சிக் கனிவு மிக்கவர்களாவர். இதனால், நெஞ்சை நெகிழ்விக்கும்-மகிழ்வுறுத்தும்-அழகுக் கலைகள் பலவற்றைப் படைத்துப் போற்றி வளர்த்துள்ளனர். இந்த இயல்பு அவர்களுடைய மெய்யுணர்வுக் கோட்பாட்டிலும் அகப்பொருள் இலக்கிய மரபிலும் நன்கு வெளிப்பட்டுள்ளதைக் காணலாம்.

சங்ககாலம் முதற்கொண்டே, தமிழ்ப் பண்பாடு மனிதநல நோக்குடையதாக இருந்து வருகிறது. மனிதன் 'மண்ணில் நல்ல வண்ணம்' வாழ்வதற்கு வழிகாட்டுவதற்கும், உதவி செய்வதற்கும் நிறுவப்பட்டவையே சமுதாய நிறுவனங்களாகும் என்பதைச் சங்ககாலச் சான்றோர் நன்கு உணர்ந்து இருந்தனர். இதனால் கற்பனையுலகில் மூழ்கிப் 'பகற் கனவுகளை'க் காண்பதில் காலத்தைக் கழிக்காமல், நடைமுறை உலகிற்குப் பொருந்துவனவற்றை ஆராந்து அறிந்து, அவற்றை அடைவதற்குரிய வழிவகைகளில் நாட்டம் உடையவர்களாகப் பண்டைத் தமிழர் விளங்கினர். எனவே தான், அவர்கள் 'இலட்சியக் கனவு' காணும் 'கற்பனையாளர்'களாக வாழாமல், எதையும் சாதிக்கும் 'செயல் வீரர்க'ளாகப் பொன்றாப் புகழ் பெற்றுள்ளனர். இவற்றைக் கருத்தில்கொண்டே, பண்டைத் தமிழ்ப்பண்பாட்டினை, 'வெப்ப மண்டலக் கிரேக்கப் பண்பாடு' எனவும், தமிழகத்தைக் 'கிரேக்கத்திற்கு முற்பட்ட இந்தியக் கிரேக்கம்'[18] எனவும் அறிஞர்கள் பாராட்டியுள்ளனர்.

இல்வாழ்க்கை

சங்ககாலத் தமிழ்மக்கள், மனிதனுடைய வாழ்க்கை மதிப்பும் பயனும் வாய்ந்ததாக அமையவேண்டும் என்பதில் பேரார்வம்

---

[17] Iyengar, P.T.S., *History of the Tamils,* C. Coomaraswamy Naidu & Sons, Madras, 1929, p-154.

[18] Rene Grousset, *Bilau de Histoire,* Paris, 1927, p.130

காட்டினர். அதற்குரிய சிறந்த கருவி 'இல்வாழ்க்கை' என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து இருந்தனர். எனவேதான், அவர்கள் படைத்த இலக்கியத்தில் வீடும் வாழ்க்கையும் பின்னிப் பிணைந்துள்ளன. ஆடவனும் பெண்ணொருத்தியும் கருத்தொருமித்து இணைந்து வாழ்வதே இல்வாழ்க்கை. அவர்கள் இடையே அரும்பிய காதல், உற்றார் உறவினரிடை அன்பாக மலர்ந்து, பிற உயிர்கள் இடத்து அருளாகக் கனிந்தது. பிற்காலத்தில் இந்தக் காதலே, பக்தியுணர்வாகப் பெருக்கெடுத்து ஓடியது. சங்க காலத்தில் இத்தகைய அன்பே, இல்வாழ்க்கையின் பண்பாகப் போற்றப்பட்டது. அன்புவழிப்பட்ட இல்வாழ்க்கையின் பயனாக அறம் ஒளிர்ந்தது.[19]

சங்கப் பாடல்களில் இல்வாழ்க்கையை முதன்மையாகக் கொண்ட உலக வாழ்க்கையே பெரிதும் விரும்பப்படுவதைக் காணுகின்றோம். இதனால் உலக வாழ்க்கையை வெறுக்கின்ற பௌத்த, சமண சமயங்களின் செல்வாக்கு, தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையை இக்காலத்தில் தாக்கவில்லை என்பது தெரிகிறது.

மகளிர் அன்பின் தலையூற்றாக விளங்கினர். இல்வாழ்க்கையில் ஈடுபடுவதற்குத் தேவைப்படும் அன்பைப் பெருக்குவதற்கு உரிய வாயிலாக உந்துதல் சக்தியாகக் காதல் வாழ்க்கை-அன்பின் ஐந்திணைவழி வளரும் இல்வாழ்க்கை பெரிதும் போற்றப்பட்டது. இல்வாழ்க்கையில் முதன்மை இடத்தை, தலைமை இடத்தைப் பெண்ணே பெற்றாள். அவள் அடக்குமுறைக்கு ஆளாகி அல்லற்படவில்லை; தனியுரிமையோடு தற்சிந்தனையும் உடையவளாக விளங்கினாள். குடும்ப வாழ்க்கையில் ஆண்களோடு ஒத்த உரிமையுடையவர்களாக மகளிர் விளங்கினர். இல்லத்தரசியரைக் 'குடும்ப வாழ்க்கையின் சுமை'யாக அக்காலத் தமிழர் கருதவில்லை. இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதவராக, ஆண்களுடைய உயிர்நாடியாக இல்வாழ்க்கையில் ஈடுபட்ட மகளிர் பாராட்டப்பட்டனர். சங்க காலத்தில் குடும்பப் பெண்கள், மதிப்பு வாய்ந்தவர்களாகவும் சிறப்புமிக்கவர்களாகவும் போற்றப்பட்டனர்.

தன்னலமிக்க 'சோற்றுப் பிண்ட'மாக விளங்கும் தனிமனிதனைப் பண்படுத்த-செம்மைப்படுத்த-இன்றியமையாதது குடும்ப வாழ்க்கை என்பது அன்றைய தமிழ்மக்களின் துணிபாகும். குடும்ப வாழ்க்கையில் மனைவிக்கு முதன்மையிடம் கொடுக்கப்பட்டது. அவள் 'இல்லாள்', 'மனையாள்' (இல்லத்தரசி) என்று போற்றப்

19 குறள். 45, 49

பட்டாள். இல்லத்தரசியைக் குடும்ப விளக்காக 'மனைக்கு விளக்காகிய வாள்நுதல்'[20] என்று சிறப்பித்துப் பாராட்டினர். அன்பும் பண்பும் நிறைந்ததாய், காதலர் இருவர் கருத்தொரு மித்து நடத்தும் இல்வாழ்க்கையை-சிறப்புமிகு அறமாக-இல்லற மாகக் கருதினர்.

பழிக்கு அஞ்சிப் பொருளை ஈட்டித் தாமும் நுகர்ந்து, பிறர்க்கும் அளித்து வாழ்தலே அறவோர்க்கு அளித்தலும், அந்த ணரை ஓம்பலும் துறவிகளைப் பேணுதலுமே இல்லறத்தினரின் தலையாய கடமைகளாகக் கருதப்பட்டன.

கல்வி பயிலும் மாணவர், மொழியை வளர்க்கும் புலவர், கலை வளர்க்கும் கலைஞர் முதலியோரையும், பிறர்க்கென வாழ் வதற்காகத் தம் வாழ்வைத் துறந்தவர், உழைக்கும் ஆற்றலின்றி வறியவரானோர், தம்மைச்சார்ந்தவர்களால் கைவிடப்பட்டோர், தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், உற்றார் உறவினர் முதலியோரையும் போற்றிக் காக்கவேண்டிய பொறுப்பு இல் லறத்தில் ஈடுபட்டோரைச் சார்ந்து இருந்தது.[21] இவற்றிலிருந்து பண்டைத் தமிழகத்தின் குடிமக்களுள், இல்வாழ்க்கையில் ஈடுபட் டோருக்குப் புனிதமான கடமைகள் பல இருந்தமை புலனா கின்றன.

கணவனும் மனைவியும் இருதலைப் புள்ளின் ஓர் உயிராய் இல்லறம் நடத்தும்பொழுது, பிறருக்குப் பயன்பட வாழ்ந்தனர்; புகழ்பூத்து வாழ்ந்தனர்; மற்றும், அறிவறிந்த மக்களைப் பெற்று மகிழ்ந்தனர். மனைமாட்சியை மங்கலமாகப் பெற்ற இல்வாழ்க் கையின் நன்கலமாக-நல்லணியாக-மக்கட் பேற்றைப் போற்றினர். 'மயக்குறு மக்களைப் பெறாதவருடைய வாழ்நாள் பயனற்றன வாகப் போய்விடும்'[22] என்பது சங்ககால மக்களின் நம்பிக்கை யாகும். சுருக்கமாகச் சொல்லுவது என்றால், காதலர் இருவர் மக்களைப் பெற்று, மனையறம் காத்துச் சுற்றம் தழுவிச் சோர் விலாது சமுதாயத்திற்குப் பயன்பட வாழ்தலே இல்வாழ்க்கையின் இனிய நோக்கங்களாக இருந்தன எனலாம்.

விருந்தோம்பல்

இல்வாழ்க்கையின் தலையாய கடமையாக விருந்தோம்பல் கருதப்பட்டது.[23] கணவன் இல்லாதபோதும் மனைவி விருந்தோம்

---

20 புறம். 314:1
21 குறள். 43
22 புறம். 188:6-7
23 குறள். அதி. 9

பலைக் கவனித்து வந்தாள். வந்த விருந்தினரை அன்புடன் வரவேற்று, அவர்களுக்கு உதவி செய்வதற்காகத் தேவைப் படுவது 'பொருள்' என்று கருதினர். இதற்காகப் பொருளை ஈட்டுவதில் பேரார்வம் காட்டினர்.

இருந்தோம்பி இல்வாழ்க்கை நடத்துவது 'இன்னார், இனியார்' எனக் கருதாது, விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று உதவிகள் பல செய்யும் பொருட்டே எனும் தெளிந்த அறிவுடை யவர்களாக அன்றைய தமிழர் விளங்கினர். பண்டைத் தமிழர் விருந்தோம்புதலைச் சிறந்ததோர் அறமாகப் போற்றினர். இதனை அவர்களுடைய அன்றாட வாழ்வின் நிகழ்ச்சிகளிலிருந்து தெளியலாம். சங்கப் பாடல்கள் இத்தகைய நிகழ்ச்சிகள் பல வற்றை அழகிய ஓவியங்களாகத் தீட்டிக் காட்டுகின்றன. அவற் றுள் ஒன்றை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

ஓர் இல்லத்திற்குப் பசியால் வாடிய சில பெரியோர்கள் சென்றனர். அந்த இல்லத்தரசி அவர்களை அன்போடு வரவேற் றாள். வீட்டில் இருந்த வரகும் தினையும் இரவலரின் பசியைப் போக்கப் பயன்படுத்தியதனால் தீர்ந்துவிட்டன. திருப்பித் தருவ தாகக் கடன் வாங்கிச் சென்ற அண்டை அயலாரும், அந்நேரத் தில் உதவும் நிலையில் இல்லை. இவ் வீட்டரசி செய்வது அறி யாமல் வருத்தமுற்றாள். அடுத்த உழவுக்குப் பயன்படுத்து வதற்குப் பாதுகாப்பாக எடுத்துவைக்கப்பட்டுள்ள 'தினைவிதை' வீட்டில் இருக்கும் நினைவு வந்தது. ஆனால், அந்த விதைக்குரிய தினையைச் செலவழித்துவிட்டால், அடுத்து விதைவிதைப்பதற்கு ஒருசிறு மணிகூட வீட்டில் இல்லாமல் போய்விடுமே எனும் எண்ண மும் அவள் உள்ளத்தில் எழுந்தது. ஆயினும், அதற்காக அவள் தயங்கவில்லை. இல்லம் வந்தவருடைய பசியைப் போக்குவது தன்னுடைய இல்வாழ்க்கையின் கடமை என்பதை அவள் முக்கிய மாகக் கருதினாள். உடனே விதைத் தினையை மிகுந்த மகிழ்ச்சி யோடு உரலில் இட்டு, குற்றியெடுத்து அவள் உணவு சமைத் தாள். விருந்தினரை உண்பித்து மகிழ்ந்தாள்.[24]

இவ்வாறு விருந்தினரைப் போற்றி வரவேற்று, அவர்கள் பசி யைப் போக்குவதை எளிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் தங்களுடைய தலையாய கடமையாகக் கருதியமை, அக்காலத்திய தமிழ்மக்களின் விருந்தோம்பும் உணர்விற்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

---

24 புறம். 333:8-13

'தனக்கு இன்னா; பிறர்க்கு இன்னா' என்பதையுணர்ந்து போற்றும் 'அருளற' நெறியின் அடிப்படைப் பண்பே விருந்தோம்புதலாகும். இல்லறத்தாரின் கடமைகளுள் 'விருந்தோம்புதல்' முதன்மை இடம் பெற்றிருந்தமைக்கு இதைப்போன்று பல நிகழ்ச்சிகளைக் காட்டலாம்.

வரலாற்றுக் காலம் நெடுக விருந்தோம்பும் பண்பு, தமிழரிடையே தனிச் சிறப்பு வாய்ந்ததாக இருந்துவருகிறது. இதற்கு உரிய அடிப்படையுணர்வினைச் சங்ககால மக்களிடம் இருந்து 'மரபுச் செல்வ'மாக[25] இதனைப் பெற்றுள்ளனர் எனலாம்.

மகளிர் நிலை

இல்வாழ்க்கையின் இன்னொளியாக மகளிர் விளங்கினர். இன்புறு மனைவியாக, அன்புறு தாயாக, பண்புறு இல்லத்தரசியாக மகளிர் அக்காலத்தில் மாண்புற்று இருந்தனர். 'பெண் தெய்வம்' என்று போற்றப்படும் பெருநிலையை அவர்கள் அடைந்து இருந்தனர். கல்வி, கலை பயில்வதில் அவர்கள் ஆண்களோடு சரிநிகர் சமானமாக விளங்கினர். சங்ககாலத்தில் சிறப்புற்று விளங்கிய புலவர்களின் எண்ணிக்கை 473 என்று கணக்கிட்டுள்ளனர்.[26] அவர்களுள் முப்பது பேர் பெண்பாற்புலவர்களாக உள்ளமை, அக்காலத்தில் கல்வி பெறுவதற்கு மகளிர்க்கு வாய்ப்பு வசதிகள் மிகுதியாக இருந்தன என்பதைத் தெரிவிக்கிறது. இசைக்கலையில் அவர்கள் தன்னிகரற்ற கலைஞரா்ய் விளங்கினர்.

பண்டைத் தமிழ்மக்கள் காதல் வழிப்பட்ட திருமணத்தையும் இவ்வாழ்க்கையையும் மாண்புமிக்கனவாகக் கருதினர்.[27] இல்வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் ஒழுக்கத்துடன் வாழவேண்டும் என்னும் குறிக்கோள் நலங்கிள்ளி, பூதப்பாண்டியன்[28] போன்ற ஒருசிலரைத் தவிர, பிற ஆடவரிடம் பொதுப் பண்பாக இருந்ததாகத் தெரியவில்லை. 'ஒருத்திக்கு ஒருவன்' எனும் கொள்கையே நடைமுறையில் வீறுபெற்று விளங்கியது. இதனால், பெண்களுக்கு 'உயிரினும் சிறந்தது நாணம்; நாணத்தைவிடச் சிறந்தது குற்றமற்ற கற்பு ஒழுக்கம்' என்று அறிவுறுத்தப்பட்டது.[29]

---

25 Heritage

26 சஞ்சீவி. ந., 'சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், சென்னைப் பல்கலைக் கழகம் 1973, பக். 18-57

27 அகம். 352:17; குறுந். 81:4-5, 167; குறள். அதி. 5

28 புறம். 71:6, 73:12-14

29 தொல். பொருள். களவு. 23:1-2

கற்பின் அருமைப்பாட்டை உணர்ந்த சான்றோர்கள், 'தெய்வத் தன்மை பொருந்தியது கற்பு' என்றும்,[30] கற்பொழுக்கத்தில் சிறந்து விளங்கிய மகளிரைக் 'கற்புக்கரசியர்' என்றும் போற்றினர்.

இதனால், உரிமை அற்றவளாகப் பெண் இருந்தாள் என்பது கருத்தாகாது. ஆணைவிடப் பெண்ணிற்குக் குடும்ப வாழ்க்கையில் பல்வேறு உரிமைகளும் கடமைகளும் இருந்தன. கற்புநெறியில் வழுவாது நின்று இல்லறத்தை இனிது நடத்திய பெண்களைப் பெருமையுடன் போற்றினர். 'இல்லத்தரசி' எனப் பொருள்படும் 'இல்லாள்' எனும் சொல்லே இதற்குப் போதிய சான்றாகும். 'பெண்ணின் பெருந்தக்கது இல்'[31] என்பது அன்றைய தமிழரின் கொள்கையாகும். பெற்றோர் இறைவனை வேண்டி நோன்பு நோற்று மகளையும் மகனையும் பெற்றனர் என்னும் சங்க இலக்கியக் குறிப்பு,[32] சங்ககாலத் தமிழ்மக்கள் மகளையும் மகனையும் சமமாகவே கருதிப் போற்றியதைப் பறை சாற்றுகிறது. பேராசிரியர் திருமதி சி. இராசலக்குமி, 'இருக்கு வேத காலத்தில் காணப்பட்ட நிலைக்கு அது முற்றிலும் நேர் மாறானதாகும். அவர்கள் பெண் குழந்தைகள் பிறப்பதையே விரும்பவில்லை! ஆண் குழந்தைகளே பிறக்க வேண்டும் என்று கடவுளை வேண்டி வழிபாடு செய்தனர்'[33] என்று குறிப்பிட்டுள்ளமை இங்கு நினைவுகூரத் தக்கதாகும்.

திருமண முறை

பண்டைத் தமிழருடைய திருமணம் எளிமையானது; சடங்குகள் அற்றது. அதில் புரோகிதருக்கோ, எரியோம்பலுக்கோ, தீவலம் வருதலுக்கோ இடம் கிடையாது. தமிழருக்கேயுரிய திருமணமுறையினை இரு சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன.[34]

திருமணத்திற்குரிய நல்ல நாளையும், நல்ல வேளையையும் பார்த்துத் திருமண நாளைப் பண்டைத்தமிழர் உறுதி செய்தனர்; பெரிதும் வளர்பிறையில் திங்களும் உரோகிணியும் ஒன்றாகச் சேர்ந்து விளங்கும் நன்னாளையே தேர்ந்து எடுத்தனர்; விடியற்

30 புறம். *122:8-10, 198:3*; குறள். *55*; சிலப். *15:143-147*

31 குறள். *54, 1137*.

32 ஐங்குறு. *257:1-2*

33 Rajalakshmi, C., *Women in the Age of the Cankam* in the Journal of Tamil Studies, International Institute of Tamil Studies, Madras, No-8, Dec. 1975, p. 89

34 அகம். *86:2-17, 136:2-8*

காலையில் திருமணத்தை நடத்தினர்; திருமண நாளிற்கு முன்பு வீட்டின் முற்றத்தில் வெண்மணல் பரப்பி, பந்தல் அமைத்து அழகிய தோரணங்கள் கட்டினர்; முரசுகள் முழங்கின. திருவிளக்குச் சுடருடன் ஒளிர்ந்தது; கடவுளைப் போற்றி வழிபட்டனர்; சுற்றத்தார்க்கும் மற்றவர்க்கும் உணவு அளித்தனர்; மணமகளை ஒப்பனைசெய்து மணப்பந்தருக்கு அழைத்து வந்தனர்; பூவும் நெல்லும் கலந்த நீர் நிறைந்த குடங்களைச் செம்மை நயமிக்க முதுபெண்டிர் தலைமீது சுமந்து வந்தனர்; குழந்தைகளைப் பெற்ற வாழ்வரசியர் நால்வர் திருமணப் பந்தருக்குள் நுழைந்தனர்; முறைமுறையாகக் குடங்களைப் பெற்று மணமகள் மீது பூவும் நெல்லும் விளங்குமாறு நீரையூற்றி முழுக்காட்டினர்; முழுக்காட்டும்போது, 'கணவனால் என்றும் விரும்பப்படும் மனைவியாக இருப்பாயாக!' என்று வாழ்த்தினர்; பெற்றோரும் உடன்பிறந்தோரும் 'பெருமைமிகு வீட்டிற்குரிய தலைவியாய் வாழ்க!' என்று வாழ்த்தி, தலைவனிடம் தலைவியை ஒப்படைத்து, வாழ்த்தொலி எழுப்பினர்; பிறகு, அன்றிரவே மணமகனும் மணமகளும் தனி அறையில் கூடி மகிழுமாறு விடப்பட்டனர்.

இந்த முறையில் பண்டைத் தமிழருடைய திருமணம் எளிமையும் இனிமையும், அன்பும் பண்பும் நிறைந்ததாக விளங்கியது. இதனை 'ஆரியச் சார்பற்ற திருமணமுறை' என்று பேராசிரியர் பி. தி. சீனிவாச ஐயங்கார் போற்றியுள்ளமை[35] இங்குக் கருதத்தக்கதாகும்.

இத்தகைய முறையில் திருமணம் எளிமையாக, சமயச் சடங்குகள் இன்றி நடத்தப்பட்டமை, பண்டைத் தமிழரின் உள்ளப் பண்பாட்டை உணர்த்துகிறது. திருமண விழாவின்பொழுது புத்தாடை உடுத்துவதும், புது அணிகளை அணிவதும், மலர்களையும் மாலைகளையும் சூடுவதும் உண்டெனத் தெரிகிறது. 'திருமணத்தின்பொழுது மணமகளுக்குத் தாலிகட்டும் வழக்கம் இருந்திருக்குமாயின், இவ்விரு பாக்களில் ஒன்றிலேனும் நீராட்டு, விருந்து முதலியவற்றைக் கூறும் புலவர், தாலி கட்டும் சடங்கினைக் குறியாதிருத்தல் கூடுமா'[36] என்னும் ஐயம் எழுகிறது.

இடைக்காலத்திலோ, இக்காலத்திலோ திருமண நிகழ்ச்சியில் மணமகன் மணமகளுக்குத் தாலியினை அணிவதைப் போன்ற

---

35 Iyengar, P.T.S. *Pre-Aryan Tamil Culture* in the Journal of Indian History, 1927, pp. 35-36

36 இராசமாணிக்கனார், மா., 'தமிழர் திருமணத்தில் தாலி' செல்வி பதிப்பகம், காரைக்குடி, 1955. பக். 13

சடங்கு, அக்காலத்திய திருமணத்தில் இடம்பெறவில்லை என்பது உண்மை. ஆனால், கணவனோடு வாழ்கின்ற மகளிரை-வாழ்வரசிகளை-'வாலிழை மகளிர்' என்று திருமண முறையினை விளக்கும் பாடல் சுட்டுவதை 'வாலிழை மகளிர் நால்வர் கூடி',[37] நாம் எளிதில் புறக்கணிக்க இயலவில்லை. மற்று, இந்த 'வாலிழை'யை 'ஈகை அரிய இழையணி'[38] என்று மகளிர்க்குரிய சிறப்பு மிகு அணியாக அக்காலத்திய மக்கள் போற்றியுள்ளனர். இவற்றிலிருந்து வெறும் திருமண நாணினை (இழை), 'திருமணம் ஆனவர்' என்பதைப் புலப்படுத்துவதற்கு அறிகுறியாக, மகளிர் அணியும் வழக்கம் இருந்தது என்பது புலனாகின்றது. ஆனால், யார் மணமகளுக்கு இதனை அணிவித்தார்கள் என்பது தெரியவில்லை. அகநானூற்றுப் பாடலில் மணமகளுக்குத் திருமணத்தின் பொழுது நறுமணமிக்க மலர்களையும் வெண்ணூலையும் வாழ்வரசியர் ('வதுவை மண்ணிய மகளிர்') சூட்டினர்[39] என்று குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கது. இங்கே சுட்டப்படும் 'வெண்ணூல் என்பது யாது?' என்னும் ஐயம் உண்டாகிறது. 'பிற்காலத்திய மங்கல நாணிற்கு' இது முன்னோடியா?' என்னும் கேள்வி எழுகிறது. இதைத்தான் 'வாலிழை'[40] (வெண்மையான நூல்) என்று சுட்டினரா? என்னும் எண்ணமும் தோன்றுகிறது.

இவற்றை எல்லாம் ஒருங்கு இணைத்து நோக்குகின்ற பொழுது, 'வாலிழை' என்பது 'மங்கல நாண்' (தாலிச் சரடு) என்பதும், இக்காலத்திய தமிழருள், சில சமூகத்தினர், திருமணத்து அன்று வாழ்வரசிகளைக் கொண்டு மணமக்களுக்குத் தாலியைக் கட்டுவதைப் போன்ற ஒருவகை வழக்கம், சங்க காலத்தில் வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்பதும் உய்த்துணரத் தக்கனவாக உள்ளன.

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரம், இந்த அணியையே 'மங்கல வணி'[41] எனப் போற்றுவதாகக் கொள்ளலாம். இவற்றால், சங்ககாலத் தமிழரின் திருமணத்தில், மங்கல நாண் அணியும் வழக்கம் இருந்ததாகக் கொள்ளுவதே பொருத்தமாகும்.

இந்தத் திருமணமுறை, சங்ககாலத்தின் கடைப்பகுதியில் மாற்றமுற்றதைச் சிலப்பதிகாரத்தில் காணுகின்றோம். 'மாமுது

37 அகம். 86:12, 136:8
38 புறம். 127:5
39 அகம். 136:13-14
40 அகம். 86:12
41 சிலப். 1:47

பார்ப்பான் மறைவழி காட்டிட', மணமக்கள் தீவலம் வரும் பழக்கம், நகரங்களில் வாழும் மேட்டுக்குடி மக்களிடத்துப் புதியதாகப் புகுந்து, செல்வாக்குப் பெறத் தொடங்கியது எனலாம். சங்ககாலத்தின் பிற்பகுதியில், ஆரியச் சடங்குவழிப்பட்ட இத் திருமண முறையைத் தமிழர்கள் வியப்புடன் நோக்கியமை புலனாகின்றது.

'நாமும்
நெய்பெய் தீயின் எதிர்கொண்டு
தான்மணந் தனையம்என விடுகம் தூதே'[42]

என்று கபிலர் திருமணச்சடங்கில் இடம்பெறும் எரியோம்பலைக் (ஓமம் வளர்த்தலை) குறிப்பிட்டுள்ளார். இதையே சிறிது விரிவாக,

"காதல்கொள் வதுவை நாள், கலிங்கத்துள் ஒடுங்கிய
மாதர்கொள் மான்நோக்கின் மடந்தைதன் துணையாக
ஓதுடை அந்தணன் எரிவலம் செய்வான்போல்[43]

என்று மருதனிளநாகனாரும் சுட்டியுள்ளார்.

சங்ககாலத்தின் கடைப்பகுதியில், ஆரியரின் பழக்கவழக்கங்கள் தமிழரிடம் புகுந்துவிட்டமையை இவற்றால் அறிய முடிகிறது. ஆனால், இந்தப் 'புதுமை மோகம்' நகரத்து மக்கள் இடையில், செல்வமும் செல்வாக்கும் பெற்றவர்களிடத்துச் செல்வாக்குப் பெற்றிருக்க வேண்டும். இதனுடைய வளர்ச்சியைத் தான், இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் படம்பிடித்துக் காட்டுகிறார்.

சாதி வேறுபாடற்ற சமுதாயம்

மக்கள் இடையே பிறப்பால், உயர்வு தாழ்வு கற்பிக்கும் 'வருணாசிரம வழிப்பட்ட சாதிப் பாகுபாடு' சங்ககாலத் தமிழரிடம் இடம் பெறவில்லை! நிலவியல் அடிப்படையில் தமிழகம் நானிலமாகப் பாகுபடுத்தப்பட்டது. நானிலத்தில் நான்கு வகைப்பட்ட சமுதாய அமைப்புகள் தோன்றி வளர்ந்தன. அவற்றிற்கேற்ப அவற்றின் வாழ்க்கை முறைகளும் வேறுபட்டன. அவை வெவ்வேறு சமூகங்கள் கிளைத்தெழக் காரணமாயின. நானிலத்து வாழ்ந்த மக்கள், தாங்கள் வாழ்ந்த நிலத்தாலும், செய்த தொழிலாலும் பல சமூகங்களாக வேறுபட்டு விளங்கினர். இத்

42 குறுந். 106:5-6 43 கலித். 69:2-5

தகைய வாழ்நிலப் பரப்புவழிச் சமூகங்களை[44] நிலைக்களனாகக் கொண்டு தொடக்க காலத்தில், தமிழ்ச் சமுதாயம் தோன்றியது. பின்னர், பையப்பையத் தொழில்வழிச் சமுதாய அமைப்பு அதனிடையே உருவாகத் தொடங்கியது.

நானிலத்து ஐந்திணை மக்கள் குறவர்குடி, வேட்டுவர்குடி, ஆயர், கானவர், உழவர், பரதவர் ஆகிய குடியினர், நுளையர் குடி, எயினர்குடி, மறவர் குடி எனப்பட்ட பல்வேறு குடிகளைச் சேர்ந்தவர்களாக விளங்கினர். இக் குடிகளோடு கம்மியர் (உலோகத் தொழிலாளர்), தச்சர், குயவர், பாணர், பொருநர், வணிகர் போன்ற தொழில்வழிக் குடிகளும் நாளடைவில் தோன்றின. இப் பாகுபாட்டிற்குப் பிறப்பு அடிப்படை அன்று; செய்த தொழிலே வேறுபாட்டிற்குக் காரணமாகும். சங்க காலத்தின் கடைசிப் பகுதியில், நகர நாகரிகம் சிறப்புற்றது. அக்காலத்தில் வடவருடைய வருணாசிரம சாதிப் பாகுபாட்டைத் தமிழ்நாட்டுத் தொழில்வழிச் சமூகங்களோடு பொருத்தி, 'இரண்டும் ஒன்றே' என்று மயங்குமாறு ஆரியர் செய்தனர். எனினும், அவர்கள் முயற்சி வெற்றிபெறவில்லை.[45] நிலக்கிழார்களே குறுநில மன்னர்களாக விளங்கினர். அவர்களிடையே இருந்து வேந்தர்கள் தோன்றினர். போர்க்காலத்து மறவர், மழவர், உழவர், குறவர் போன்ற பலவகை மக்களும் படைவீரர்களாகப் பணிபுரிந்தனர். எனவே, 'போரிடுவதற்கு என்றே பிறந்த சாதியினர்' (சத்திரியர்) என்று தமிழ்நாட்டில் அந்தக் காலத்தில் யாரையுமே குறிப்பிட இயலாது. இதைப்போன்றே மற்றப் பாகுபாடுகளும் அமைந்தன. எனவே, சங்ககாலத்தின் முற்பகுதியில் இச் சமுதாயத்தில் 'நான்கு வகைச் சாதி முறை' தமிழ்நாட்டில் இருந்தது இல்லை என்று துணிந்து கூறலாம்.[46] பிற்காலத்தில் அம்முறையை இங்குப் புகுத்த முயன்றனர். ஆனால், அம் முயற்சி இன்று வரையில் முழுவெற்றி பெறவில்லை.

இன்றைய இந்தியச் சமுதாயத்தைச் சீரழிக்கும் 'தீண்டாமை' முறை அன்றைய தமிழகத்தில் இடம்பெறவில்லை. புன்மையான தொழிலைச் செய்தவர்களைப் 'புலையர்' என்றும், இழிவான தொழில்களைச் செய்தவர்களை 'இழிசினர்' என்றும் அக்கால மக்கள் சுட்டினர்.[47] இதற்கும் தீண்டாமைக்கும் யாதொரு தொடர்பும் அக்காலத்தில் இருந்ததில்லை.

---

44 Territorial Communities

45 Iyangar, P.T.S., Op.cit., p.20 *Aryan Tamil Cultnre,*

46 Pillay, K.K., Op.cit., pp. 229-36

47 புறம். *82:3, 170:5, 287:1, 360:19, 289:10*

கல்வி கற்கும் உரிமை

மக்களாகப் பிறந்த அனைவருக்கும் கல்வி கற்கும் உரிமை, பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் இருந்தது. நுண்ணறிவையும் நூலறிவையும் வளர்ப்பதற்குக் கல்வியினைச் சிறந்த கருவியாகப் பண்டைத் தமிழர் போற்றினர். 'மேட்டுக்குடி மக்களுக்கும், பிறப்பால் உயர்ந்தவர்களுக்குமே கல்வி கற்கும் உரிமை உண்டு' என்று உலகின் பிற பகுதிகளில் நம்பப்பட்ட அக்காலத்தில், சங்க காலத் தமிழ்மக்கள் எண்ணை (கணக்கை)யும், எழுத்தை (இலக்கியத்தை)யும் எல்லாருக்கும் இரு கண்களாகக் கருதினர்.[48]

அன்றைய கல்வி முறையில் பொதுக் கல்வி, சிறப்புக் கல்வி, மேல்நிலைக் கல்வி என்னும் மூன்று நிலைகள் இருந்தன; பொதுக் கல்வி ஏழாண்டுகளுக்கும், சிறப்புக் கல்வி மூன்றாண்டுகளுக்கும் பயிற்றுவிக்கப்பட்டன. மேல்நிலைக் கல்வி என்பது வெளி ஊர்களுக்கோ நாடுகளுக்கோ சென்று குறிப்பிட்ட துறையில் வல்லுநர்களிடம் கற்ற கல்வியாகும். இதற்காக ஒன்று முதல் மூன்று ஆண்டுகள் வரை ஒதுக்கப்பட்டன.[49]

பொதுவாக எல்லாரும் எழுதவும், படிக்கவும், கணித அறிவு பெறவும் கற்பிக்கப்பட்ட கல்வியே பொதுக் கல்வியாகும். சங்க காலப் புலவர்களுள் பலர் 'பாலாசிரியர்', 'கணக்காயர்,' 'தமிழாசிரியர்' என்று அடைகொடுத்துச் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். ஊர்தோறும் இத்தகைய ஆசிரியர்கள் கல்விப்பணி புரிந்தார்கள் என்பதை அறிகிறோம். சிறப்புக் கல்வி என்பது ஒருவர் விரும்பும் தொழில் அல்லது கலையைப்பற்றிய கல்வியாகும். இதனைத் தொழிற்கல்வி எனலாம். இத் தொழிற்கல்வியை முறையாகப் பெறாதவரை அல்லது பயிலும் நிலையில் உள்ளவரை, 'கல்லா இளையர்' எனச் சுட்டுவது அக்கால வழக்கம். மேல்நிலைக் கல்வி என்பது ஆராய்ச்சிக் கல்வியாகும். இக் கல்வியைப் பயில்வதற்குத் திருமணம் ஆன பிறகு, மனைவியைப் பிரிந்து வெளியூர்களுக்கு ஆடவர் சென்றனர். பொதுக்கல்வி பெரும்பாலும் எல்லோருக்கும் உரியதாக இருந்ததைக் காண்கின்றோம். தொழிற்கல்வி குறிப்பிட்ட தொழில் செய்த குடும்பத்தினருக்கே உரிய கல்வியாக இருந்தது. மேல்நிலைக் கல்வியானது அரசரும், ஆட்சியாளரும், பிற மேட்டுக்குடி மக்களும் எளிதில் பெறத்தக்கதாக இருந்தது எனலாம். மகளிருள் பலர் பொதுக்கல்வி பெற்றவர்

---

48 குறள். 392

49 சஞ்சீவி, ந., மு.கு.நூ., பக்.30 பாலாசிரியர் 4; கணக்காயர் 3; ஆசிரியர் 4

களாக இருந்ததோடு, சிறந்த புலவர்களாகவும் விளங்கியமை இங்கு நினைவுகூர்வதற்கு உரியதாகும்.

உழவுத்தொழில்

நானிலத்து மக்கள் மேற்கொண்ட தொழில்களுள், மருத நிலத்து உழவுத்தொழிலே முதன்மையான தொழிலாகப் போற்றப்பெற்றது. நெல்லைப் பயிரிடுதல், பருத்தியைப் பயிரிடுதல், வெற்றிலைக் கொடியைப் பயிரிடுதல், கரும்பைப் பயிரிடுதல் போன்ற பல்வகைப் பயிர்த்தொழில்களைத் தொல்பழங்காலம் முதற்கொண்டே தமிழ்மக்கள் செய்துவந்தனர்.

தமிழன் என்று உழவுத்தொழிலைக் கற்றானோ, அன்றே பாசன முறைகளைப் பற்றியும் சிந்திக்கத் தொடங்கினான்; வேளாண்மைத் தொழிலுக்கு இன்றியமையாத நீரினைப் பாழாக்காமல், போற்றிக் காக்க முயன்றான். தமிழகத்தில் மழை பெய்யும் பருவத்தைக் கண்டறிந்து அம் மழைநீரைத் தேக்கி வைப்பதற்குப் பல முறைகளைப் பண்டைத் தமிழர் கையாண்டுள்ளனர். ஆற்றினை ஆழப்படுத்தி, இருபக்கத்திலும் நீண்ட நெடுங்கரைகளை அவர்கள் அமைத்துள்ளனர். கரிகாலன் காவிரியாற்றுக்குக் கரை அமைத்த வரலாற்றைத் தமிழ்நாட்டு மரபுவழிச் செய்திகளும், இலங்கையின் காலவழிச் செய்திக்கோவையும் உறுதிப்படுத்துகின்றன.[50]

வெள்ளப் பெருக்கெடுத்து ஓடும் ஆற்றின் நீரை அணைகள் கட்டி, தடுத்து நிறுத்திப் பெரிய ஏரிகளையும் குளங்களையும் அமைத்துள்ளனர். பாண்டியன் நெடுஞ்செழியனிடம் குடபுலவியனார் என்னும் புலவர், ‘செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும், இவ்வுலகத்தில் இனிய புகழை நாட்ட விரும்பினும் செய்யத்தக்கதைக் கேட்பாயாக! உணவால் நிலைபெறுவது உடல்; உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படுவது நீர்; விளைவுக்குத் தேவையான நீரையும் நிலனையும் ஒன்றாக இணைப்போர், உடம்பும் உயிரும் படைத்தோராவர். வயலில் விதைத்துவிட்டு நீர்க்கு வானத்தை நோக்கி இருப்பது, இறைவன் என்று சிறப்பித்துக் கூறப்படும் அரசன் முயற்சிக்கு இழுக்காகும். ஆகவே, நீர்நிலைகளைப் பெருகச் செய்தல் அரசரின் தலையாய கடமையாகும். அவ்வாறு செய்பவரே தம்

---

50 திருநாவுக்கரசு, க.த., ‘இலங்கையில் தமிழ்ப் பண்பாடு,’ சேகர் பதிப்பகம், சென்னை, 1978, பக். 51-52; 120

புகழை இவ்வுலகில் நிலைநிறுத்தியோராவர். இதனைச் செய்யாதவர், தம் புகழை இவ்வுலகத்தில் நிலைபெறச் செய்யாதவர் ஆவர்'[51] என்று அறிவுரை கூறியுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

இன்றும் இந்தியாவில் மட்டும் அல்லாமல் தெற்கு ஆசிய, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் நீர்ப்பாசன முறைகளில் சிறந்து விளங்குவது தமிழகமேயாகும்.[52] இத்தகைய பாசன வசதிகளைக் கொண்ட உழவுத் தொழிலையே—வேளாண்மைத் தொழிலையே—சங்ககால மக்கள் சிறப்புமிக்க தொழிலாகப் போற்றியுள்ளனர். அக்காலத்திய வடவர்களால் உழவுத்தொழில் இழிந்த தொழிலாகவும், அத் தொழிலைச் செய்வோர் இழிந்தவர்களாகவும் கருதப்பட்டனர்[553] என்பதை இங்கு நினைவு கூர்வோமானால், வேளாண்மைத் தொழிலை அடிப்படையாகக் கொண்ட தமிழர் நாகரிகத்தின் சிறப்பு எளிதிற் புலனாகும்.

கடலக வாழ்வு

நீண்ட நெடுங் கடற்கரையை இயல்பாகப் பெற்றிருந்த பண்டைத் தமிழ்மக்கள், அலைகடலைக் கண்டு அஞ்சாது, கருங் கடலில் மரக்கலத்தைச் செலுத்தி, நெடுந்தொலைவில் உள்ள நாடுகளோடு வாணிகத் தொடர்பும், பண்பாட்டுத் தொடர்பும் கொண்ட கடல்மறவராய்ச் சிறப்புற்று விளங்கினர். 'வரலாற்று நூலின் தொடக்க காலத்திற்கு அருகில் சென்றால், இந்தியத் தீபகற்பத் (தமிழகத்)தின் நாகரிகத்தில், கடலக வாழ்வின் பண்புகள் பல பளிச்சிடுகின்றன. பழந்தமிழ் இலக்கியத்தில் கடல் வாணிகத்தைப்பற்றிய குறிப்புகள் நிறைந்துள்ளன. இந்திய மக்களுள் தென்னாட்டவரே, கிறித்தவ நூற்றாண்டின் தொடக்கத்தில் மேற்கத்திய நாடுகளோடும், கிழக்காசிய நாடுகளோடும் நெருக்கமான வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்'[54] என்று கே. எம். பணிக்கர் மொழிந்துள்ளமை தமிழரின் கடலகவாழ்வின் சிறப்பிற்குச் சான்று பகருகிறது.

இந்தக் கடலக வாழ்வின் சிறப்பினைக் கருத்தில்கொண்டே ரெனே குரோசெட் என்னும் பிரெஞ்சு நாட்டு அறிஞர்,

---

51 புறம். 18:13-30

52 குழந்தைசாமி, வா. செ., 'பழந்தமிழும் பொறியியலும்,' பல்கலைப் பழந்தமிழ், சென்னைப் பல்கலைக்கழகம், 1974, பக். 147

53 Buhler, G., (tr) *The Laws of Manu*, Clarenden Press, Oxford, 1886, 10:34-35

54 Panikkar, K.M., *Geographical Factors in Indian History*, Bharatiya Vidhya Bhavan, Bombay, 1956, p.63

பண்டைத் தமிழரை 'வெப்ப மண்டலக் கிரேக்கர்'[55] என்று பாராட்டியுள்ளார்.

போர் நெறி

சங்ககாலம் தமிழகத்தின் வீரயுகமாகப் போற்றப்படுகிறது.[56] போர்க்களத்தில் புகழுக்காக உயிரைக் கொடுக்கும் பண்பு, பண்டைத் தமிழரிடம் மேலோங்கி நின்றது.[57] இதனால், வீரமும் காதலும் சங்ககாலத் தமிழருடைய வாழ்க்கையில் முதன்மை இடம் பெற்று இருந்தன. 'ஒருவனை ஒருவன் அடுதலும், தொலைதலும் புதுவது அன்று; இவ்வுலகத்து இயற்கை'[58] என்பது பண்டைத் தமிழரின் நம்பிக்கையாகும்.

எனினும், போரிடுவதற்கு உரிய நெறிமுறைகளை நன்கு வரையறுத்து இருந்தனர். போரில் ஐந்து நிலைகள் இடம் பெற்றன. அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்பனவாகும்.[59] போரில் வீரமரணம் அடைந்தோர்க்கு நினைவுச் சின்னமாக நடுகல் நாட்டி, வழிபாடு செய்வது பண்டைத் தமிழரின் வழக்கமாகும்.[60]

மறக்குடி மங்கையர், போருக்குத் தங்கள் மக்களையும், கணவனையும், அண்ணன், தம்பியரையும் அனுப்பிவைப்பதில் பேரார்வம் காட்டினர். 'தம் வயிற்றில் பிறந்து, தம் முலைப் பால் உண்ட மக்கள், வீரம் குன்றாத மானமும், அஞ்சாநெஞ்சமும் படைத்தவராய்க் கடும்போர் புரிந்து வாகை சூட வேண்டும்' என்பது வீரத் தாய்மார்களின் சிறந்த குறிக்கோளாக இருந்தது! 'போரில் புறமிட்டு ஓடாத தன் மகனுடைய வீரச் செயல்களைக் கேட்டு, போர்க்களத்தில் அவனுடைய உடலைக் கண்ட பொழுது, அவளுடைய வாடிய மார்பகங்கள் பால் ஊறிச் சுரந்தன'[61] என்னும் செய்தி அக்காலத்திய மறவுணர்வுமிகு தாய்மாரின் அகத்தெழுச்சியைப் புலப்படுத்துவதாகும்.

மற்றொரு மறக்குடி மங்கை, 'போரில் என் மகன் புறமிட்டு ஓடி இருப்பின், அவனுக்குப் பாலூட்டிய இம் முலைகளை அறுத்து எறிவேன்' என்று வஞ்சினம் கூறிப் போர்க்களம் புகுந்து, தன்

---

55 Rene Grousse, Op. cit., p.132

56 Kailasapathy, K., *Tamil Heroic Poetry*, Clarendon Press, Oxford, 1968, para, p.vii.

57 புறம். *182:5*

58 ஷை *76:1-2*

59 தொல்.பொருள். புறத்திணை இயல்

60 ஐங்குறு. *352:1-2*; அகம். *35:6-8*; புறம். *232:3*; *264:3-4*; பட்டினப். *78-79*; மலைபடு. *394-396*; தொல். பொருள். புறத். *5:19-21*

61 புறம். *295:2-8*

மகன் இறந்து கிடப்பது கண்டு, அவனைப் பெற்ற காலத்தினும் பெருமகிழ்ச்சியுற்றாள்[62] எனும் வீரவரலாறு, சங்ககாலத் தமிழ் மக்களுடைய மறவுணர்வுமிகு வாழ்க்கையின் மாண்பினைப் புலப் படுத்துகிறது.

இத்தகைய வீரவுணர்வு, மனிதனின் அடிமனத்தில் உறை யும் வேட்கையை வெளிப்படுத்துகிறது. செயற்கருஞ் செயல் களைச் செய்யவேண்டும் என்னும் உள்ளத் துடிப்பும், ஒப்புயர் வற்ற இலட்சியங்களுக்காக உயிரைக் கொடுக்கும் துணிவும் சங்ககாலத் தாய்மார்களை இத்தகைய அஞ்சா நெஞ்சமும் அருஞ்செயல் நாட்டமும் வாய்ந்தவர்களாகப் பொன்றாப் புகழ் பெறத் தூண்டின.

வீரயுக இலக்கியம்பற்றி ஆராய்ந்து சி. எம். பௌரா மூவகை வீரயுக மனப்போக்குகளைச் சுட்டுவார். 'முதல்வகை, நாடோடி மக்கள் இடையே காணப்படுவதாகும். இரண்டாவது நிலை, நிலப் பிரபுத்துவ நிலையில் இருந்து பேரரசு அமைக்கும் நிலைக்குக் குறிப்பிட்ட ஒரு சமுதாயம் மாற்றமுறும் கால கட் டத்தில் அமைவது. இக் காலத்திலேயே வீரத்தாய்மார் வீறு டன் விளங்குவர்'[63] என்பார். சங்ககாலத் தமிழகத்து வீரத் தாய் மார்கள், பேரரசுகளைத் தமிழ்மக்கள் உருவாக்கியதற்கு உதவி புரிந்தவர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

போரினைப் பல்வேறு நிலைகளாக, நுட்பமாகப் பாகுபடுத்தி யுள்ளதைப் புறப்பொருள் இலக்கணத்தால் அறிகிறோம். இதைப்போன்றே, போர்புரியும் காலத்திலும், போருக்குப் புறப் படும் பொழுதும் பண்டைத் தமிழர், சில நெறிமுறைகளைப் பின் பற்றினர். பொதுவாக, நாட்டுமக்களுக்கு அல்லலை உண்டாக்கக் கூடாது என்னும் நோக்குடையவராக அவர்கள் செயல்பட்டனர். ஒரு நாட்டின்மீது படையெடுத்துச் செல்லும்போது, அந் நாட்டு மக்களுக்கு, தக்க பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடு மாறு முன்கூட்டியே எச்சரிக்கை செய்துள்ளனர்:

பசுக்கூட்டங்களையும், அறவோர்களையும், பெண்டிரையும், நோயாளிகளையும், திருமணம் ஆகிய நிலையில் பொன் போல் புதல்வரைப் பெறாதவர்களையும் 'எங்கள் அம்பு கள் தாக்கா வண்ணம் உங்களுக்குக் காவலான அரண்களை

---

62 புறம். 278:4-9

63 Bowra, C.M., *The Heroic Poetry*, Mac Millan, London, 1952, p.489

அடைக'[64] என்று அறிவுறுத்தும் வழக்கம் படையெடுத்துச் செல்லுவோரிடம் இருந்ததாகத் தெரிகிறது. இவ்வாறு ஏன் எச்சரிக்கை செய்தனர்? 'அறத்தின் வழிப்பட்டதாகத் தங்கள் போர் நெறி அமைய வேண்டும்' என்னும் உயரிய நோக்கொடு, அருள் உள்ளத்தோடு இவ்வாறு எச்சரிக்கை செய்தனர் என்பதை, 'அறத்தாறு நுவலும் பூட்கை'[65] எனும் தொடர் அறிவிக்கிறது.

அடிக்கடி போரில் ஈடுபட்ட சங்ககாலத் தமிழ்மக்கள், அப் போரினை நெறியோடும் முறையோடும் நடத்த வேண்டும் எனும் உறுதிப்பாடு உடையவர்களாக இருந்தமை இதனால் புலனாகிறது. இக்காலத்தில் ஈவு இரக்கமற்ற முறையில் பள்ளிகளையும், மருத்துவமனைகளையும், கோயில்களையும், குடியிருப்புகளையும் பகைவர்கள் தாக்கி அழிக்கும் கொடுஞ்செயல்களைப் பண்டைத் தமிழர் அறியாதவர் ஆவர்.

மனித நலம்

பண்டைத் தமிழ்மக்கள் மனிதப் பண்பினை மதித்துப் போற்றினர். 'பிறர்க்கின்னா தமக்கின்னா' என்னும் உண்மையை உணர்ந்து, பிறர் துன்பத்தைத் தம் துன்பமாக உணரும் அருள் நெறியினைக் கடைப்பிடித்தனர்; போரில் எத்துணை அளவிற்கு வீரத்தைப் போற்றினரோ, அத்துணை அளவிற்கு அன்றாட வாழ்க்கையில் ஈரத்தை—அருள் உணர்வை—போற்றியுள்ளனர்; 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைத்தனர்; பயன் கருதாமல் பிறருக்கு உதவியாக வாழ்வதைப் பெரும் பேறாகக் கருதினர்; 'தனக்கென வாழாமல் பிறர்க்குரியாளராக' வாழ்வதே வாழ்க்கையின் பயனாக அமையவேண்டும் என்னும் நோக்கத்தொடு அவர்கள் வாழ முயன்றனர்.

'பதவியைக் குறிக்கும் நீண்ட பட்டங்களைப் பெறுவதும், விரைந்த செலவினையுடைய ஊர்திகளிலே ஏறிச் செல்வதும் செல்வமும் செல்வாக்கும் வசதியுமுள்ள வாழ்க்கையைக் குறிக்கும். ஆனால், இவை உண்மையான செல்வம் ஆகா. இத்தகைய செல்வம், தாம் முன்பு செய்த வினைப்பயனால் எய்தப்படுவதாகும். சான்றோரால் மதித்து உயர்த்திக் கூறப்படும் செல்வம் யாதெனில், 'தம்மை நம்பி வந்து அடைந்தோரின் துன்பத்தை, வறுமையைக் கண்டு அஞ்சி, அத் துன்பத்தைப் போக்கி, அவரைக்

---

64 புறம். 9:1-5 65 ஷை 9:6

கைவிடாமல் காக்கும் இனிய தன்மையேயாகும்'[66] என்பது சங்ககாலத் தமிழ்மக்கள் போற்றிய மனிதநலக் கோட்பாடாகும்.

அறிவைப் பெற்றதன் பயன், பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பமாக உணரும் திறனுடையவனாதல். ஒருவன் துன்ப மானவை என்று தன் வாழ்க்கையில் கண்டு உணர்ந்தவற்றை, மற்றவர் இடத்தில் செய்யாமல் தவிர்க்க வேண்டும். துன்பம் செய்தவர்க்கும் இனியவையே செய்யவேண்டும்; துன்பம் செய்தவர் நாணம் அடையுமாறு, அவருக்கு நன்மை செய்வதே அவருக்குத் தரத்தக்க சிறந்த தண்டனையாகும். தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால், உலகமும் இன்புற வேண்டும் என்பது பண்டைத் தமிழரின் மனிதநல நாட்டமாகும்.[67]

நாம் பிறருக்குச் செய்யும் உதவிகளுக்கு எத்தகைய பயனையும் மாற்றாக எதிர்பார்த்தல் கூடாது. இந்த உலகத்தார், தமக்கு உதவிபுரியும் மேகத்திற்கு என்ன கைம்மாறு செய்கின்றனர்? பிறரிடம் இருந்து பொருளைப் பெறுவது நன்மை தரலாம். ஆனால், மேல்உலகம் — சுவர்க்க வாழ்வு—கிடைக்காது என்றாலும் பிறருக்குக் கொடுத்து உதவுவதே நல்லது. தவநெறியில் ஈடுபட்டோர், தம்முடைய பசியைப் பொறுத்துக்கொள்ளும் ஆற்றல் உடையவராவர். ஆனால், அப் பசியை உணவு கொடுத்து மாற்றுபவரின் ஆற்றலே அதைவிடச் சிறந்தது. வறியவரின் கடும்பசியைத் தீர்க்கவேண்டும்; அதுவே பொருள் பெற்ற ஒருவன், அப் பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் பயன்படுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.[68]

இவ்வுலகில் மனிதன் பெற்றுள்ள செல்வம், அறத்தைச் செய்யவும் அதனால் உண்டாகும் இன்பத்தை அனுபவிக்கவும் உதவுவதாக இருக்கவேண்டும்; பிறருடைய துன்பத்தைப் போக்குவதற்கு இச் செல்வம் பயன்படவேண்டும். அருட் செல்வமே செல்வத்துள் செல்வம் என்பதையும், அருள் தலை காக்கும் என்பதையும், பகுத்துண்டு பலவகை உயிர்களையும் போற்றிக் காக்கும் வாழ்க்கையே[69] சாலச் சிறந்தது என்பதையும் பண்டைத் தமிழர் நன்கு உணர்ந்திருந்தனர். 'நாகரிகம்' என்னும் சொல்லிற்குக் 'கண்ணோட்டம்' என்னும் பொருளினைக் கண்டவன் தமிழன் என்பதை நாம் முன்னரே கண்டோம். இது ஒன்றே

66 நற். 210:5-9
67 குறள். 314, 315, 316, 399, 987
68 ஷை 226
69 ஷை 241, 247, 322

தமிழரின் மனிதநலக் கோட்பாட்டின் மாட்சியை உணர்த்துவதற்குப் போதிய சான்றாகும்.

'அறத்தைச் செய்வதால் புண்ணியம் கிடைக்கும்; அதனால் மறுபிறவிக்குப் பெரும்பயன் உண்டாம்' என்னும் ஆதாயம் கருதி, அறத்தைச் செய்வதைப் பண்டைத் தமிழர் சிறப்புடையதாகப் போற்றவில்லை. இவ்வாறு பயன்நாடி, அறச்செயல்களைச் செய்வோரை அறத்தை விலைகூறிவிற்கும்வாணிகர்—'அறவிலை வாணிகர்'—என்று அருவருப்போடு அவர்கள் சுட்டியுள்ளனர். பிறர் வறுமையைப் போக்குவதே தங்கள் கடமை. அதுவே 'சான்றோர் சென்ற நெறி' என்று அவர்கள் தெளிந்துள்ளனர்.[70]

இத்தகைய மனிதநலம் கனிந்த உள்ளம், விரிந்தும் பரந்தும், வளர்ந்து பண்பட்டதன் பயனாக மான்கள் போன்ற விலங்குகளும்,[71] வண்டுகளாகிய பறவைகளும்[72] தம்மால் எத்தகைய துன்பமும் அடையக்கூடா என்னும் அருளுணர்வால் நெகிழ்ந்துருகும் உள்ளப் பண்பாட்டைப் பண்டைத் தமிழர் அன்றாட வாழ்வில் பெற்றிருந்தனர். இவ்வாறு பொதுநலத்தின் நாட்டத்தில், தம்முடைய நலத்தைக் கரைத்து வாழக் கற்றனர் அன்றைய தமிழர்கள். இப் பண்பாட்டின் பயனாகத் தன் குடும்பம், தன் ஊர், தன் நாடு என்னும் குறுகிய பற்றுகளில் இருந்து விடுபட்டு, அனைத்துலகக் குடிமகனாகி, எல்லா ஊர்களையும் தன்னுடைய ஊர்களாகவும், உலக மக்கள் அனைவரையும் தன்னுடைய சுற்றத்தினராகவும் கருதிப் போற்றும் பரந்த உள்ளத்தை—பண்பட்ட உள்ளத்தை—பாசம் தோய்ந்த உள்ளத்தை—சங்ககாலத் தமிழன் பெற்றிருந்தான். இந்த அருள்நலங் கனிந்த மனிதநலக் கோட்பாட்டை,

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'[73]

என்னும் முதுமொழி உலகிற்கு உணர்த்துகிறது.

இத்தகைய உள்ளப் பண்பாட்டின் அடிப்படையில், துன்பத்தில் துவளுவோர்க்கும் வறுமையில் வாடுவோர்க்கும் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்தனர்.

'வறியார்க்(கு) ஒன்று ஈவதே ஈகை;மற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர(து) உடைத்து'[74]

'ஆற்றுதல் என்ப(து) ஒன்று அலந்தவர்க்(கு) உதவுதல்'[75]

70 புறம். 134:1-3
71 அகம். 134:11-15
72 ஷை 4:10-12
73 புறம். 192:1
74 குறள். 221
75 கலி. 133;6

என்னும் பாடல்களால், சங்ககாலத் தமிழருடைய அறச்செயலின் கொடைத் திறத்தின் நோக்கம் யாது என்பது இனிது விளங்கும்.

இதனை, இன்னும் தெளிவாகச் 'செல்வம் உடையவர்க்கு ஒரு பொருளைக் கொடுத்துதவுதல் என்பது அறத்தை வாணிக நோக்கொடு விற்பதாகுமே யொழிய, அது உண்மையான அறமாகாது. குருடர், முடவர், செவிடர், ஆதரவற்றோர், நோயாளிகள் போன்ற அல்லற்பட்டு ஆற்றாது வருந்தும் மக்களுக்குச் செய்யப்படுகின்ற உதவியே உண்மையான அறச்செயலாகும்'[76] என்று மணிமேகலையின் ஆசிரியரான சாத்தனார் அறிவுறுத்தியுள்ளமை இங்கு நினைவு கூர்தற்குரியதாகும். மற்றும், உலகிலுள்ள உயிர்கள் அனைத்தையும் வாட்டி, வதைக்கும் 'பசிப்பிணி' என்னும் நோய் ஒழிக்கப்பட வேண்டும் என்னும் தம் பேராவலை,

'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக!'[77]

என்று அவர் தெரிவித்துள்ளார். இவை யாவும், பண்டைத் தமிழ் மக்கள் மனிதநலத்தை மட்டும் அல்லாமல் உயிர்கள் அனைத்தையும் மதித்துப் போற்றும்[78] பண்புடையவராக விளங்கியதைத் தெரிவிக்கின்றன.

வள்ளல்களின் கொடைத்திறன்

இந்தப் பின்னணியில் நோக்கினால், 'கடையெழு வள்ளல்கள் என்று சிறப்பித்துப் பேசப்படும் சங்ககாலக் குறுநில மன்னர்களின் வரையாது வழங்கிய வள்ளல் தன்மையின் உள்ளார்ந்த உணர்வு யாது என்பது எளிதில் புலனாகும்.

தன்னுடைய பறம்பு நாட்டில் இருந்த முந்நூறு ஊர்களையும் தன்னை நாடிவந்த பாணர்க்கும், புலவர்க்கும், மற்றக் கலைஞர்க்கும் அன்புப் பரிசாகப் பாரி அளித்து மகிழ்ந்தான்.[79] வாய் விட்டுத் தன்னுடைய துன்பத்தை எடுத்துரைக்க இயலாது, காட்டில் காற்றினால் அலைப்புண்டு வருந்திய முல்லைக் கொடிக்குக் கொழுகொம்பாக, ஒலிக்கின்ற மணிகள் நிறைந்த தன்னுடைய தேரினைப் பறம்புமலைக் கோமான் பாரி வழங்கிய செயல் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும்.[80]

---

76 மணிமே. *11:92-94 ; 13:111-13*

77 ஷை *16:134*

78 Albert Schweitzer, *Reverence for Life*, Bharathiya Vidhya Bhavan, Bombay, 1964, pp.1-3

79 புறம். *110:3-4*

80 ஷை *200:9-11, 201:2-5*

மேகத்தைப் பார்த்தவுடன் களிப்புற்று மயில் ஆடுவதைக் கண்டு, கானமயில் குளிரால் நடுங்கித் துன்புறுகிறது என்று எண்ணி, அருளுணர்வோடு, தான் போர்த்துக்கொண்டிருந்த சிறப்புமிகு போர்வையை அம் மயிலுக்குப் பேகன் போர்த்தி மகிழ்ந்தான். அவனுடைய அருள் உள்ளம் 'எத்துணை யாயினும் ஈதல் நன்றெனை, மறுமைப் பயனை நோக்காது, பிறர் வறுமையைப் போக்குவதே' என்பதனை வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு இருந்ததைக் காணுகின்றோம்.[81]

நீலநாகம் நயந்து அளித்த கலிங்கமெனும் மென்துகிலை, ஆய் எனும் வள்ளல் ஆலமர் செல்வனாகிய இறைவனுக்கு அளித்து இன்புற்றான்.[82] இவன், தன்னுடைய பொருள்கள் அனைத்தையும் புலவர்களுக்கும், பாணர் பாடினியர்களுக்கும் உவந்து அளித்தான். இறுதியில் எஞ்சி நின்றது, ஆயினுடைய மனைவியின் கழுத்தில் பொலிவுற்ற 'ஈகை அரிய இழையணி'யாகிய மங்கல நாணேயாகும்.[83]

மலைநாட்டு மன்னனாகிய மலையமான் திருமுடிக்காரி, பொன்னையும் பொருளையும் இரவலர்க்கு வரையாது வழங்கியதோடு, தேரினை அழகிய மணமகளைப்போல் அலங்கரித்துப் புலவர்களுக்குப் பரிசாகக் கொடுத்து மகிழ்ந்தான்.[84] புலவர்கள் தன்னைப் புகழ்வதை விரும்பாத வல்வில் ஓரி, 'புகழ் வேண்டாப் புரவல'னாக வாழ்வதையே பெரிதும் விரும்பினான்.[85] 'தான் யார்?' என்பதையும், தன்னுடைய 'நாடு யாது?' என்பதையும் பிறருக்கு அறிவிக்காமல், வரையாது வழங்கிய வள்ளல் நள்ளி, 'பெயர் அறியாப் புரவல'னாக வாழ்ந்து மறைவதையே நோக்கமாகக் கொண்டிருந்தான்.[86] உண்டவரை, நரைதிரை மூப்பு இன்றி நெடுநாள் வாழச் செய்யும் கருநெல்லிக் கனியைத் தான் உண்டு மகிழாமல், நாளும் இனிய பாடல் புனைந்து நற்றமிழை வளர்த்த ஔவைப் பெருமாட்டிக்கு அளித்துப் பெருமையுற்றான் அதியமான் நெடுமான் அஞ்சி.[87]

இவர்களைப் போன்று வேறு சில சிற்றரசர்களும், தங்களுடைய அரிய கொடைத்திறத்தால் பொன்றாப் புகழ் பெற்று உள்ளனர்.

தன்னை நாடிவந்த இரவலர்க்குக் காளைமாட்டினை நன்கு அணிசெய்து, அதன்மீது பல்வேறு பொருள்களை மூட்டை

81 புறம். 141:13
82 சிறுபாண். 96-99
83 புறம். 127:5
84 ஷை 123:3-4
85 அகம். 238:11-14
85 ஷை 152:19-22
86 ஷை 150:22-28;
87 ஷை 91:7-11

மூட்டையாக ஏற்றி முசுண்டை என்னும் வள்ளல் வழியனுப்பி வைத்தான்.[88] வயிற்றுப் பசிக்கு உணவு தருமாறு கேட்ட புலவருக்கு, நாஞ்சில் வள்ளுவன் பேரளவிற்கு உணவு அளிக்க வேண்டிய யானையைப் பரிசாகக் கொடுத்தான். இதனைத் 'தேற்றா ஈகை'[89] என்பர். ஆடுமாடுகளையும், ஏறிச் செல்லு வதற்கு ஊர்தியையும் தாமான் தோன்றிக் கோ பரிசாகக் கொடுத்துள்ளான்.[90] புலவர்க்கு வண்டி நிறையச் செல்வத்தை, வண்டி ஓட்டியோடு நல்லியக்கோடன் பரிசளித்தான்.[91]

தன்னை நாடிவந்த நற்றமிழ்ப் புலவருக்குக் கொடுத்து உதவு வதற்குத் தன்னிடம் பொருள் யாதும் இல்லாமையால், தோயன் மாறன் பெருவருத்தமுற்றான்; உடனே, கொல்லனிடம் சென்று வேலினை வடித்துத் தருமாறு வேண்டினான். பகைவரைத் தாக்கி, வெற்றி பெற்றால் கிடைக்கும் திறைப்பொருளைக் கொண்டுவந்து புலவருக்குக் கொடுத்து உதவலாமே என்று அவன் அருள் உள்ளம் துடித்ததாம்.

அரசைத் துறந்து காட்டிலே வாழ்ந்த குமணன், தன்னைத் தேடிவந்த புலவருக்குக் கொடுத்து உதவ வேறு பொருள் இன்மை யால் வருந்தினான். தன் தலையைக் கொண்டு வருபவருக்குப் பரிசு அளிப்பதாகத் தன் தம்பி அறிவித்து இருப்பதை நினைவு கூர்ந்து, புலவரிடம் வாளைக் கொடுத்துத் தன்னுடைய தலை யைக் கொய்து சென்று, தம்பியிடம் கொடுத்துப் பரிசைப் பெறு மாறு வேண்டினான் குமணன்.[92] தன் உயிரைவிட, வருந்தி வந்த புலவர், பரிசில் பெறாமல் வெறுமனே திரும்பிச் செல்லுவது கொடுமையாகும் என்று எண்ணிய குமணனுடைய அருள் உள்ளம் சங்ககாலத் தமிழரின் கொடைத் திறத்திற்குச் சூட்டப்பட்ட 'மணிமுடி'யாகும்.

இத்தகைய கொடைத்திறன் வாய்ந்த குறுநில மன்னர் பலர், அக்காலத்தில் சிறப்புற்று விளங்கினர். அவர்கள் வாழ்ந்த காலம் தமிழருடைய 'வீரயுகமாக' மட்டும் வீறுபெறவில்லை; வரை யாது வழங்கும் வள்ளல்கள் பலர், வாழ்ந்து மறைந்த 'கொடை யுக'மாகவும் வான்புகழ் பெற்றுள்ளதை யாரும் மறக்கவோ, மறுக் கவோ, மறைக்கவோ இயலாது!

---

88 அகம். 249:2-9
89 புறம். 140:9
90 ஷை 399:30-34
91 சிறுபாண். 207:217
92 புறம். 165:10-12

இந்த வள்ளல் தன்மையின் வழிப்பட்ட அருளுணர்வு, தமிழகத்தின் வரலாற்றுக் காலம் நெடுகப் பல்வேறு வழிகளில் வெளிப்பட்டுள்ளதைக் காணலாம். உலக அறிஞர்கள் பலர், தமிழ்ப் பண்பாட்டின் மனிதநல நோக்கினைப் புரிந்து கொண்டுள்ளனர். இந்திய மெய்ப்பொருளியிலில், பருப்பொருள் சார்ந்த ஆழ்ந்த விழிப்புணர்வையும், உயிர்க்களை வாய்ந்த படைப்பாற்றல்மிகு கற்பனையையும் மனிதநலப் பண்பார்ந்த மென்மை நயத்தையும் தமிழருடைய அறவியல் கோட்பாடு சேர்த்திருக்கிறது[93] என்பது அவர்களுடைய துணிபாகும். 'மனிதன்' எனும் மென்மைமிகு மலரின் இயல்பினையும், ஏற்றத்தையும், பண்டை உலகில் உணர்ந்து போற்றிய நாகரிக நாடுகள் ஓரிரண்டேயாகும். அவற்றுள் சங்க காலத் தமிழகம் முன்னணியில் நிற்கிறது.

சிறப்புமிகு பழக்கவழக்கங்கள்

சங்ககாலத் தமிழ் மக்களுக்கேயுரிய சிறப்புமிகு பழக்கவழக்கங்கள் நம் கருத்தைக் கவருகின்றன. அவற்றுள் சில, இன்றுவரையில் தமிழரிடையே வழக்கில் இருந்துவருகின்றன. அவை, பிற இந்திய மக்கள் இடையே காணப் பெறாதனவாக உள்ளன. அல்லது தமிழ்மக்களிடம் இருந்து, பிற இந்திய மக்கள் கற்றுக்கொண்டனவாகத் தோன்றுகின்றன. அவற்றுள் முதன்மையான சிலவற்றை இங்குக் காண்போம்.

சிலம்புகழி நோன்பு

திருமணம் ஆவதற்கு முன்பு, இளம்பெண்கள் ஒருவகைச் சிலம்பு 'அணிந்து இருப்பர். திருமணம் முடிவான பிறகும், திருமண விழாவிற்கு முன்னரும் ஒரு நன்னாளில் அச் சிறு 'சிலம்பினை நீக்கும் விழா' மணமகள் இல்லத்தில் நடைபெறும். இதனைச் 'சிலம்புகழி நோன்பு' என்பர். இவ் விழா வயது முதிர்ந்த இல்லத்தரசியர் சிலர் ஒன்றாகக் கூடிச் செய்த சடங்காகும். இச் சடங்கின் மூலம், பெற்றோர் தம் மகள் மணவாழ்விற்குரிய தகுதியைப் பெற்றுவிட்டனள் என்பதை உலகிற்கு உணர்த்தினர்.[94]

இந்தச் சிறு ' "சிலம்பு நீக்கு விழா'விற்குப் பிறகு, வாழ்வரசியரான மகளிர் சிலம்பு அணிவது இல்லையா?" என்னும் ஐயம் எழலாம். திருமணத்திற்குப் பிறகு வேறுவகையான சிலம்புகள்

---

93 Rene Grousset, Op. cit., pp. 132-33

94 ஐங்குறு. 399:1-2; அகம். 385:17-18; நற். 279:10-11

அணிவது வழக்கம். கண்ணகியின் காற்சிலம்பும் பாண்டிமா தேவியின் பொற்சிலம்பும் இதற்குச் சிறப்புமிகு சான்றுகளாகும்.

திருவிளக்கு வழிபாடு

இன்றைய தமிழர் வாழ்வில் 'திருவிளக்கு' ஏற்றி வழிபாடு செய்தல் ஒருவகைப் பண்பாடாக இருந்து வருகிறது. விழாக்களைத் தொடங்குகின்றபொழுதும், நற்செயல்களைச் செய்கின்றபொழுதும் குத்துவிளக்கேற்றுதல் சிறப்புமிகு வழக்கமாகும்.

நாள்தோறும் மாலை வேளையில், கதிரவன் மறையும் அந்தி நேரத்தில், வீட்டுமுற்றத்தில் மணிவிளக்கு ஏற்றி, நெல்லும் மலரும் தூவி வழிபாடு செய்வது பண்டைத் தமிழ்மகளின் பழக்கமாகும். தெரு வாசற்படியில் நெல்லும் மலரும் பெய்து விளக்கேற்றி அந்நேரத்தில் வழிபடுவதும், வீட்டின் உள்ளே திருவிளக்கு ஏற்றி வழிபாடு செய்வதும் மனையுறை தெய்வத்தை—குலதெய்வத்தை—வழிபாடு செய்யும் ஒருவகை முறையாகவும் மேற்கொள்ளப்பட்டது.[95]

பிறை தொழுதல்

பொதுவாகத் திங்களைப் போற்றி வழிபடுவது, பண்டை நாகரிக நாடுகளில் சிற்சில வேறுபாடுகளுடன் இருந்ததைக் காணுகின்றோம். செழிப்பினையும் வளர்ச்சியினையும் வேண்டிப் பிறை தொழுவது தமிழ்நாட்டின் மரபு. மங்கைப் பருவம் அடைந்த பெண்கள் 'நல்ல கணவனும் சிறந்த வாழ்க்கையும் வாய்க்க வேண்டும்' என்னும் நோக்கத்தோடு பிறையினைப் போற்றி வழிபட்டனர். சந்திரனைப் பெண் தெய்வமாகவும் காதல் தெய்வமாகவும் கருதிப் போற்றுவது பண்டைத் தமிழரின் வழக்கமாகும்.[96]

பத்தினி வழிபாடு

கற்புடைய மகளிரைப் பெருமையுடன் பாராட்டுவது பண்டைய மரபு. கற்புக்கரசியாகிய கண்ணகிக்குக் கோயில் எடுத்து, திருவிழா நடத்தப்பட்டதைச் சிலப்பதிகாரத்தால் அறிகிறோம். கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன், இப் பத்தினித் தெய்வ வழிபாட்டைத் தமிழகத்தில் இருந்து கொண்டுசென்று, இலங்கையில் புகுத்தியதாகத் தெரிகிறது.[97]

---

95 நெடுநல். 41-44

96 குறுந். 178:5, 307:1-3 மதுரைக். 193

97 சிலப். 30; 160-65

சேரன் செங்குட்டுவனால் தொடங்கி வைக்கப்பட்ட இப் பத்தினி வழிபாடு, இளங்கோவடிகளால் இலக்கியத்தின் மூலம் போற்றிப் பரப்பப்பட்ட இப் பத்தினி வழிபாடு, சங்ககாலத் திற்குப் பிறகு, தமிழகத்தின் ஊர்தோறும் 'சக்தி வழிபாட் டின்' ஒரு பகுதியாகப் பின்பற்றப்பட்டுவருவதைக் காணலாம். இவ் வழிபாட்டு நெறி, இன்றும் இலங்கையில் பெருஞ்சிறப்பு உடையதாக இருந்துவருவது கருதத்தக்கதாகும்.[98]

மலரினைப் போற்றுதல்

இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தவர்கள் பண்டைத் தமிழர்கள். அவர்களுடைய உள்ளத்தை வண்ண மலர்கள் பெரிதும் கவர்ந்துள்ளன; அவற்றை அணிந்து மகிழ்ந் தனர்; காதல் வாழ்க்கை, போர், வழிபாடு முதலியவற்றில் ஒரு வகைக் குறியீட்டுப் பொருளாகவும், கலையுணர்வை வெளிப் படுத்தும் ஒருவகைச் சின்னமாகவும் மலர்களை அவர்கள் பயன் படுத்தியுள்ளனர்.[99]

காதல் வாழ்க்கையில் மட்டும் அல்லாமல், போரின் பல்வேறு நிலைகளைப் புலப்படுத்தவும் வெட்சி, கரந்தை, வஞ்சி, தும்பை, உழிஞை, வாகை போன்ற பூக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை பண்டைத் தமிழருக்கு மலர்களிடத்து ஒருவகை 'மயக்கம்' இருந்த னைத் தெரிவிக்கிறது.

முல்லை மலர் கற்புநெறி பிறழாத காதல் வாழ்க்கைக்குரிய 'முல்லை சான்ற கற்பு' என்று அடையாளச் சின்னமாகப் போற்றப் பட்டது.[100] அதே சமயத்தில் காட்டுநிலப் பெயராகவும் வழங்கப் பட்டது. எல்லா வகையான வழிபாட்டிற்கும் உரிய புனித மல ராகவும் முல்லை மலர் பயன்படுத்தப்பட்டது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிமலர், மலையும் மலை சார்ந்த பகுதியையும் சுட்டும் பெயராகவும், ஒருவனும் ஒருத்தி யும் காதல் வயப்பட்டு, 'இருதலைப் புள்ளின் ஓருயி'ராக விளங் கும் களவு வாழ்க்கையின் சின்னமாகவும் போற்றப்பட்டது. மருதமலர் நகர நாகரிகத்தின் சின்னமாகவும், 'பரத்தையர் பிரி வினை'யும் அதனால் உண்டாகும் ஊடலையும் உணர்த்துவ தாயிற்று. நெய்தல் மலர், கடற்கரைப் பகுதிக்குரிய பெயராக

98 Navaratnam, C.S., *A Short History of Hinduism in Ceylon*, Jaffna, 1964, p. 82

99 Thani Nayagam, Xavier, S. *(1) Nature in Ancient Tamil Poetry*, Tamil Literature Society, Tuticorin, 1952, p. 23
(2) 'The Tamil said It All with Flowers,' in *Tamil Culture*, Vol. II, No. 2, pp. 164-176

100 சிறுபாண். 29-30

வும், காதலன் பிரிவினால் உண்டாகும் ஏக்கத்தைப் புலப்படுத்தும் குறியீடாகவும் வழங்கலாயிற்று.

குவளை மலரும், தாமரைப் பூவும் வளமிக்க வாழ்க்கையின் சின்னங்களாகக் கருதப்பட்டன. 'பூப்பலி'[101] செய்து இறை வழிபாடு செய்யும் 'பூசெய்' (பூசை) முறை சங்க காலத்திலேயே தோன்றிவிட்டது.

ஆடவரும் மகளிரும் மலர்களைத் தலைமுடியில் சூடி மகிழ்ந்தனர்; [102] மாலையாக அணிந்து, அழகுமிக்கவர்களாக விளங்க முயன்றனர்; விருந்தினருடைய உள்ளத்தை அனிச்சமலரினும் மென்மையானதாகக் கருதினர்;[103] இந்த அனிச்சமலர் காதலியின் பாதங்களைத் துன்புறுத்தக்கூடிய முட்களாகும் என்று காதலனுடையஉள்ளம் துடித்ததைக் காணுகின்றோம்.[104]

காதல் நோய் காலையில் அரும்பாகத் தோன்றுமாம்; பகற்பொழுதில் மொட்டாகக் காட்சி தருமாம்; மாலையில் மலர்ந்து மணம் பரப்புமாம்! காதல் வாழ்க்கை 'மலரினும் மென்மை'யானதாகக் கருதப்பட்டது.[105] மங்கையர் மலர்க்கொடி, பூங்கொடி என்று பலவாறாகப் போற்றப்பட்டனர்.

இவ்வாறு வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் மலரினைப் பெரிதும் தமிழர்கள் மதித்துப் போற்றியுள்ளனர். மலரினுடைய மென்மை, எளிமை, தூய்மை, அழகு முதலிய பண்புகளைப் பண்டைத் தமிழர் நன்கு உணர்ந்து இருந்தனர்; மகிழ்ச்சியையும் இன்ப எக்களிப்பையும், தூய்மையையும், குறிக்கோளினையும் புலப்படுத்தும் ஓர் அடையாளச் சின்னமாக மலர்களை அவர்கள் போற்றிப் பயன்படுத்தியுள்ளனர்.

எண்ணெய் தேய்த்துக் குளித்தல்

சங்ககாலத் தமிழர் 'நெய்' என்னும் சொல்லாலேயே எண்ணெயைச் (எள் + நெய்) சுட்டினர். வெப்ப மண்டலத்தில் வாழும் மக்கள், கதிரவனின் வெப்பத்தின் தாக்குதலால் உடலின் தோல் நைந்துவிடாவண்ணம் காப்பதற்கு, உடல் முழுவதும் எண்ணெய் பூசி, ஊறவைத்துக் குளிப்பது வழக்கம்.

சங்ககாலத் தமிழகத்தில், எண்ணெய் தேய்த்துக் குளித்தல் வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகளோடு இணைந்த ஒருவகைப்

---

101 சிலப். 24:19-20
102 புறம் 242
103 குறள். 90
104 ஷை 1120
105 ஷை 1289

பழக்கமாக இருந்தது; இன்றும் இப் பழக்கம் இருந்துவருவதைக் காணலாம்.

குழந்தையைப் பெற்றெடுத்த தாய்மார்களுக்குக் குறிப்பிட்ட சில நாள்கள் கழிந்த பிறகு எண்ணெய் நீராட்டுதல் சிறப்புமிக்க பழக்கமாகும். எண்ணெய் தேய்த்துக் குளித்த இளம் தாய்மார் கள் சோர்வினாலும் களைப்பாலும் மயக்கமுற்று உறங்குவர். இதனை 'நெய்யணி மயக்கம்'[106] என்பர்.

போருக்குப் புறப்படும்பொழும், திரும்பி வந்த பிறகும் ஆடவரும், தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவதற்கு முன்பு ஆடவரும் பெண்டிரும் எண்ணெய் தேய்த்துக் குளித்தல் வழக்கம் என்பதைச் சங்கப் பாடல்களால் நாம் அறிகிறோம்.[107]

பண்டை நாகரிக நாடுகளுள் கிரேக்கர்களும் உரோமானியர் களுமே (ஆலிவ்) எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் பழக்கம் உடையவர்களாக இருந்தனர்.

வெள்ளணி விழா

ஐரோப்பியர் வருகைக்குப் பிறகே, இந்தியர்கள் பிறந்தநாள் விழாக் கொண்டாடுவதைக் கற்றதாகச் சிலர் தவறாகக் கூறு கின்றனர். நம் நாட்டில் அரசர்களுடைய பிறந்தநாள் விழா மிகச் சிறப்பாகப் பண்டைக் காலத்தில் கொண்டாடப்பட்டதைச் சங்க இலக்கியத்தால் அறிகிறோம்.

திருவண்ணாமலைக்கு அருகில், செங்கண்மாவினைச் (செங் கம்) சிறப்பாக நன்னன் என்னும் குறுநில மன்னன் ஆட்சிபுரிந்து வந்தான். அவனுடைய பிறந்தநாள் விழா, அவனுடைய நாட்டு மக்களால் சிறப்புமிகு பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது.

'பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாள்
சேரி விழவினும் ஆர்ப்பெழுந் தாங்கு'[108]

என்று மாங்குடி மருதனார் குறிப்பிடுகிறார். இந்தப் பிறந்த நாள் விழாவினை, 'வெள்ளணி விழா' எனப் போற்றுவது வழக் கம் என்பது சிலப்பதிகாரத்தால் புலனாகின்றது.[109] இதனால், பிறந்த நாள் அன்று, தூய வெண்மையான ஆடையை உடுத்திக் கொள்ளுவது வழக்கம் என்பதும் தெரிகிறது.

---

106 தொல். பொருள். கற்பு. 5:28
107 புறம். 279:9, 329:1-5
108 மதுரைக். 618-619
109 சிலப். 27:229

கார்த்திகை விளக்கீடு

சங்ககாலம் முதற்கொண்டு இன்றுவரை கொண்டாடப் பட்டு வரும் திருவிழா 'கார்த்திகை விளக்கீடு' என்பதாகும். கார்த்திகை மாதத்தில், கார்த்திகை நாளன்று முருகனுக்குரிய விழாவாகத் தமிழர்களால் கொண்டாடப்பட்டு வரும் ஒளி வழி பாட்டுத் திருவிழாவே 'கார்த்திகை விளக்கீடு' என்பதாகும்.

இந்தத் திருவிழாவில், எண்ணற்ற சிறு விளக்குகளை வரிசை வரிசையாக வீடுகளிலும் வீதிகளிலும் ஏற்றி வைத்து வழிபாடு செய்வது வழக்கம்.[110] அன்று, செல்வர்கள் பல்வேறு பொருள் களைத் தானமாகக் கொடுத்து மகிழ்வது[111] சங்ககாலத்திய வழக்கம்.

மார்கழி நோன்பு

இக்காலத்தில் மார்கழி நோன்பும், தை மாதம் முதல் நாளன்று பொங்கல் விழாவும் மிகச் சிறப்பாகத் தமிழ்மக்களால் கொண்டாடப்படுகின்றன. இதனுடைய பழைய வடிவம் 'தைந் நீராடல்' என்னும் திருவிழாவாக இருந்திருக்கக்கூடும்.

தை மாதம் முதல் நாள் அன்று மேற்கொள்ளப்பட்ட புனித நீராடல், ஒருவகைத் திருநாளாகக் கொண்டாடப்பட்டது. சங்க காலத்தின் கடைசிப் பகுதியிலேயே இந்த விழா வழக்கிற்கு வந்த தாகத் தெரிகிறது. மற்றும் இது சமயத் தொடர்பான விழா என் பதும் புலனாகின்றது. திருவாதிரைத் திருநாளோடு தொடர்பு உடைய விழாவாக இதனைப் பரிபாடல் கூறுகிறது.[112]

கன்னிப் பெண்கள் இறைவனை வேண்டி, நோன்பு நோற்று, நோன்பின் நிறைவு நாளன்று நீராடுவது தைந்நீராடலாகும்.[113] 'சிறந்த கணவரைப் பெற வேண்டும்' என்னும் நோக்கத்தோடு இந் நோன்பு மேற்கொள்ளப்பட்டதைச் சங்க இலக்கியப் பாடல் கள் தெரிவிக்கின்றன.[114]

இவ்வகையில், பிற்காலத்திய 'மார்கழி நோன்பு'டன் தைந் நீராடல் திருவிழா பெரிதும் தொடர்பு உடையதாகக் காணப் படுகிறது.

---

110 அகம். 11:4-5, 141:7-11, 185:11
111 நற். 202:9
112 பரிபா. 11:9-15
113 நற். 80:7-8
114 ஷை 80:1-7; கலி. 59:13

மணமகளின் முதற்பணி

திருமணத்திற்குப் பிறகு, முதன்முதல் கணவன் வீட்டிற்கு வரும் மணமகள், மணமகனுக்கும் அவனுடைய உற்றார் உறவினருக்கும் சோறு வட்டிக்கும் (பரிமாறும்) வழக்கம் சங்ககாலம் முதல் இன்றுவரை இருந்துவருகிறது. இதனைத் தொல்காப்பியர் 'அடிசிலும் (உணவு), பூவும் தொடுதல்'[115] என்று கூறுவார். இக்காலத்தில் இதனை 'நெய் ஊற்றுதல்' என்பர்.

கூந்தல் களைதல்

சங்ககாலச் சமுதாயத்தில் கணவன் உள்ள வரையில் சிறப்புடன் மகளிர் போற்றப்பட்டனர். கணவனை இழந்தவுடன், எல்லாவற்றையும் வாழ்வில் இழந்தவர்களாக மகளிர் கருதப் பட்டனர்.

'கைம்பெண்டி'ரின் வாழ்க்கை அன்று அவலம் நிறைந்த வாழ்வாக இருந்தது. அழகூட்டும் அணிகலன்களையும் வளையல் களையும் அவர்கள் அணியவே கூடாது என்னும் காரணத்தால், கணவன் இறந்தவுடன், அவற்றை எல்லாம் கைம்பெண்கள் நீக்கி விடுவர். எனவே, கணவனை இழந்த மகளிரைக் 'கழிகல மகளிர்' என்று சுட்டுவது வழக்கமாகும்.

அடுத்து அவர்களுடைய அழகிய கூந்தல் களையப்பட்டது.

'கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்லி யுணவின் மனைவி'[116]

'ஒள்நுதல் மகளிர் கைம்மை கூர
அவிர்அறல் கடுக்கும் அம்மென்
குவையிருங் கூந்தல் கொய்தல் கண்டே'[117]

'கொய்ம்மழித் தலையொடு கைம்மையுறக் கலங்கிய
கழிகல மகடூஉ'[118]

எனும் புறப்பாடற் பகுதிகளால், மகளிருடைய கூந்தல், கணவன் இறந்தவுடன் மழிக்கப்பட்டமை புலனாகிறது. அண்மைக் காலம் வரையில், தமிழ்நாட்டுப் பார்ப்பனர் சமூகத்தில் இப் பழக்கம் வழக்கில் இருந்துவந்தது; இன்றும் அருகிய வழக்காக இருந்து வருகிறது.

---

115 தொல். பொருள். கற்பு. 5:14
116 புறம். 250:4-5
117 ஷை 25:12-14
118 ஷை 261:17-18

இச் செயலால் மகளிருடைய அழகு குலைக்கப்பட்டது என்பது உண்மை. மானிடவியல் நூலார் இதற்கு வேறு காரணம் கூறுவர். 'பெண்ணை மனைவியாகப் பெற்றவனுடைய சிறப்பு மிகு ஆற்றல் அனைத்தும், அவளுடைய தலையின் முடியில் குவிந்து கிடக்குமாம். கணவனுடைய மறைவால், அவள் அந்த ஆற்றல்கள் அனைத்தையும் இழந்துவிட்டாள் என்பதைப் புலப்படுத்தும் அறிகுறியே கைம்பெண்களுக்கு மொட்டை அடித்தலாகும்'[119] என்று விளக்கம் தருவர். 'சமுதாயத்தின் மதிப்பினை இழந்தவள்; அழகற்றவள்' என்பதை உணர்த்தவே 'கூந்தலைக் கொய்தனர்' எனலாம். எனினும், மகளிர்க்கு வழங்கப்பட்ட மாபெருந் தண்டனையே 'கூந்தல் கொய்தல்' எனக் கூறினால், இது தவறாகாது.

கணவனை இழந்த மகளிர்க்கு மறுமணம் செய்துகொள்ளும் உரிமை, சங்ககாலத் தமிழ்ச் சமுதாயத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. கைம்மை நோன்பு கொண்ட ஏழை எளிய மகளிர் நூல் நூற்கும் தொழிலில் ஈடுபட்டு, வாழ்க்கைக்கு வழிதேடிக் கொண்டனர்.[120]

வாளால் வெட்டி அடக்கம் செய்தல்

குழந்தைகள் பிறந்தவுடன் இறந்தாலோ, இறந்தே பிறந்தாலோ அவற்றை வாளால் வெட்டியே புதைப்பது அக்காலத்திய பழக்கமாகும். குழந்தை வடிவம் பெறாமல், குறை வடிவமாக வெறும் சதைப் பிண்டமாக இருந்தாலும் இப் பழக்கத்திலிருந்து தப்ப இயலாது என்பர்.

இவ்வாறு வெட்டிப் புதைக்கும் பழக்கம் இன்னொரு பழக்கத்தை அடிப்படையாகக்கொண்டது. 'பிறந்தோர் யாவரும்—சிறப்பாக ஆடவர் யாவரும்—நாட்டுக்காகப் போர்க்களத்தில் உயிரைவிட வேண்டும்' என்று சங்ககால மக்கள் கருதினர். இந்த உணர்வு, உலகின் பல்வேறு நாடுகளிலும் வீரயுகக் காலத்தில் இருந்ததை வரலாறு பேசுகிறது. இவ்வாறு இறந்தால்தான், துறக்க இன்பம்—வீர சுவர்க்கம்—கிடைக்கும் என்று அவர்கள் நம்பினர். ஆகவே, போர்க்களத்தில் இறக்கும் வாய்ப்பினைப் பெறாது, குழந்தைப் பருவத்தில் இறந்தாலும், முதுமையுற்று இறந்தாலும், இறந்த பின்னர் சங்ககாலத் தமிழ்மக்கள் வாளால் வெட்டித்தான் புதைத்தனர்.

119 Ganambal, K., Home Life Among the Tamils in the Sangam Age, Central Art Press, Madras, 1947, p. 67

120 புறம். 125:1, 326:5

நோயினால் இறந்தோரை, போர்க்களத்தில் உயிரை விடாத குற்றம் நீங்கும்படி, பசும்புல்மீது கிடத்தி, அறநெறியில் வாழும் நான்மறை முதல்வர்கள், 'வீரமே துணையாகப் போர்க்களத்தில் இறந்தோர் செல்லுமிடம் செல்க' எனக் கூறி, வாளால் வெட்டிய பிறகு அடக்கம் செய்வது பண்டைத் தமிழரின் பழக்கமாகும்.[121]

இக்காலத்தில், முதியோர் இறந்தால் இவ்வாறு செய்வது இல்லை. ஆனால், குழந்தை இறந்துவிட்டால், இடுகாட்டில் அடக்கம் செய்வதற்கு முன்பு, சிறு கத்தியாலோ, காட்டு முள்ளினாலோ கைவிரல்களில் ஓரிடத்தில்-சிறப்பாக நுனி விரலில் கீறி அடக்கம் செய்வதைக் காணலாம். சில சமூகங்களில் காதிலேனும் மூக்கிலேனும் கீறி அடக்கம் செய்யும் வழக்கம் இருந்துவருகிறது. இதனைப் பண்டைக் காலப் பழக்கத்தின் 'எச்சமிச்சம்' எனலாம்.

கல் எடுப்பு

வீரராக இறந்தோர்க்குக் கல் நடும் வழக்கம்—'நடுகல்' நாட்டும் வழக்கம் அன்று பெருவழக்கமாகும்.

'காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்
சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல்என்று
இருமூன்று வகையின் கல்லொடு புணர'[122]

என்று நடுகல் நாட்டும் பழக்கத்தின் பல்வேறு நிலைகளைத் தொல்காப்பியனார் சுட்டியுள்ளார். கல் நடுதல் தொடர்பாகப் பல்வேறு பழக்கவழக்கங்கள் உருவாகியுள்ளன. கல்லில் இறந்தோர் பெயரைப் பொறித்தலும், அவருடைய அருஞ்செயல்களை எழுதுதலும், பின்னர் அக் கல்லுக்கு மயிலிறகு, மலர்களைச் சூட்டுதலும், கள், பாற்சோறு படைத்தலும், பூவும் நெல்லும் தூவி வழிபடுதலும் நடுகல் வழிபாட்டு முறையாகும். நடுகல்லின்மீது வெண்மையான துணியினால் பந்தல் இடுவதும் உண்டு.[123]

இன்றும் ஒருவர் இறந்த பதினாறாம் நாளில் செய்யப்படும் இறுதிச் சடங்கில், 'கல் எடுத்து' வழிபாடு செய்து, பிறகு ஆற்று நீரிலோ, குளத்து நீரிலோ அதனை விட்டுவிடுவது வழக்கமாகும். இதனைக் 'கல்லினைத் தண்ணீரில் வீழ்த்துதல்' என்பர். பண்டைய நடுகல் வழிபாட்டுமுறை, பல்வேறு மாற்றமுற்று,

---

121 புறம். 74, 93:7-11
122 தொல். பொருள். புறத். 5:19-21
123 புறம். 221:13, 223:3, 232:3, 260:25-28, 261:15, 263:8 264:1-4, 306:4, 314:3, 329:1-3, 335:11-12

பெயரளவிற்கு இன்றும் பின்பற்றப்படுவதை இந்த வழக்கம் நினைவுபடுத்துகிறது.

இந்த நடுகல் வழிபாடு, பிற்காலச் சோழர் காலத்தில் இறந்தோரை அடக்கம் செய்தவிடத்தில் எழுப்பப்பட்ட கோயில் வழிபாடாக மாறியது. இத்தகைய நினைவுச் சின்னக் கோயில்களைப் 'பள்ளிப்படை' என்பர்.[124] வடமொழியில் 'அதிட்டானம்' என்பர். சங்க காலத்திற்குப் பிறகு, வீரர்களுக்குச் சிறப்பாகப் போரில் உயிர்நீத்த அரசர்களுக்கும், பொதுவாகஅறவாழ்வு நடத்தி மறைந்த சான்றோர்களுக்கும், சித்தர்களுக்கும், ஞானிகளுக்கும் அவர்களுடைய உடல் அடக்கம் செய்யப்பட்ட இடங்களில் நினைவுச் சின்னங்களாகக் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. இன்றைக்கும் புதைக்கும் பழக்கம் உள்ள சமூகத்தினர், புதைத்த இடத்தில் 'சமாதி' அமைத்து, அதன்மீது சிவலிங்கத்தை நாட்டி, வழிபாடு செய்கின்றனர்.

இன்று சிறப்புற்று விளங்கும் தமிழகத்தின் சிவனோடு தொடர்புடைய திருக்கோயில்கள் பல, இவ்வாறு அமைந்தனவாகத் தோன்றுகின்றன. தில்லைச் சிற்றம்பலத்தில் (சிதம்பரத்தில்) நடராசர் திருக்கோயில் திருமூலர் சமாதியை ஒட்டி எழுப்பப்பட்டதாகத் தெரிகிறது. நடராசருடைய திருக்கோயிலின் உள்ளே, இடப்பக்கத்தில் 'திருமூலட்டானேசுவர'ரின் கோயில் ஒன்று உள்ளதை யாவரும் அறிவர். அங்குச் சிவலிங்கம் இருப்பதைப் பார்க்கலாம். இதனையே திருமூலர் சமாதியாகக் கூறுவார்.

இன்றைக்குப் பழனியில் உள்ள பழனியாண்டவர் கோயில் உலகப் புகழ்பெற்றுள்ளது. அம் மலையடிவாரத்தில் உள்ள ஊருக்குச் சங்க காலத்தில் 'ஆவிநன்குடி' [ஆவியர் அரச மரபினரின் (பேகன்) இருப்பிடம்] என்பது பெயராகும். அங்கு ஒரு முருகன் கோயில் இருக்கிறது. சங்க காலத்தில் அக் கோயிலே சிறப்புற்று விளங்கியது.

இன்றைய பழனி மலை சங்ககாலத்தில் பொதினி என்றும், இடைக் காலத்தில் 'சித்தன் வாழ்வு' என்றும் போற்றப்பட்டது. இன்றைய தண்டபாணிசாமித் திருக்கோயில், ஒரு சித்தருடைய சமாதியின்மீது எழுப்பப்பட்டதாகும். இங்கு வழிபாடு செய்யப்படும் 'பழனியப்பன்', ஒரு மாபெருந் துறவிக் கோலத்தில் காட்சி தருவதும் இதை உறுதிப்படுத்துகிறது. மற்றும் இக் கோயி

---

124 S.I.I. Vol. 3, No. 142

லுக்குச் சிறிது தொலைவில், 'போகர்' என்னும் சித்தரின் சமாதி வழிபாடு செய்யப்படும் இடமாக உள்ளதை இன்றும் காணலாம்.

இவற்றால், பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த நச்சினார்க்கினியர் என்னும் புகழ்மிகு உரையாசிரியர், இம் மலையில் உள்ள கோயிலைச் 'சித்தன் வாழ்வு' என்று குறிப்பிட்டுள்ளதன் உண்மை புலனாகின்றது.[125]

'தென்னிந்தியாவின் திருக்கோயில்களின் தோற்றமும் வளர்ச்சியும்' பற்றி ஆராய்ந்த அறிஞர்களும், தமிழகத்தின் பெரும்பாலான கோயில்கள், நடுகல் (சமாதி) நினைவுச் சின்னங்களை அமைக்கும் பழக்கத்திலிருந்து தோன்றி வளர்ந்தன வாகவே இருத்தல் வேண்டும்[126] என்னும் முடிவிற்கு வந்து உள்ளமை இங்குக் கருதத்தக்கது.

நடுகல்லில் இறந்த வீரனுடைய வடிவத்தையும், பெயரையும், சாதனைகளையும் பொறிப்பது சங்ககாலத்திய வழக்கம். பிற்கால வீரர் கற்களில்[127] மறைந்த வீரனுடைய வடிவமும், அவனுடைய படைக்கருவிகளும், பிற பொருள்களும் செதுக்கப் பட்டுள்ளதை இன்றும் காணலாம்.[128]

சேரன் செங்குட்டுவன், பத்தினிக் கடவுளாகிய கண்ணகியின் நினைவாக வஞ்சி மாநகரில் கோயில்—பத்தினிக் கோட்டம் அமைத்தான். கோயிலின் உள்ளே கண்ணகியின் சிலையை அமைத்துக் கடவுண்மங்கல (குடமுழுக்கு) விழா நடத்தி, 'பத்தினித் தெய்வ' வழிபாட்டிற்கு வழி அமைத்தான் என்று சிலப்பதிகாரம் பேசுகிறது.

கண்ணகியின் சிலையைச் செய்வதற்கு இமயமலையில் கல்லினைத் தேர்ந்து எடுத்தான்; அதனைக் கங்கையாற்றில் திருமுழுக்கு ஆட்டினான்; பிறகு சேர நாட்டிற்குக் கொண்டு வந்து, அக் கல்லில், கண்ணகியின் சிலை வடித்தான்; பின்னர்ப் பத்தினிக் கோட்டத்தில், அச் சிலையினைத் தெய்வமாக அமைத்து விழாவெடுத்து, வழிபாடு செய்தான். இச் செயல் களைக் **காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்**, வாழ்த்து என்னும் ஐந்து காதைகளில் இளங்கோவடிகள் விரித்துரைத்துள்ளார்.

---

125 முருகு. 175-176 நச்சி. உரை

126 Venkata Ramanayaa, *Origin and Development of South Indian Templ: Architecture*, Madras, 1926, pp. 24-40

127 Hero Stones

128 Natana Kasinathan, *Hero-Stones in Tamilnadu*, Arun Publications ,Madras, 1978, pp. 1–16

இந்த ஐந்து தலைப்புகளும் **நடுகல்** வழிபாட்டில் மேற்கொள்ளப் பட்ட செயல்முறைகள் என்பதனை, நாம் முன்னரே கண்ட தொல்காப்பிய நூற்பாவால் அறிகிறோம்.

இவற்றை எல்லாம் ஒருங்கு இணைத்து நோக்குகின்ற பொழுது, உருவ (விக்கிரக) வழிபாடும், திருக்கோயில் வழி பாடும், சங்க காலத்திய தமிழ்மக்கள் போற்றிப் பின்பற்றிய நடுகல் வழிபாட்டில் இருந்தே தோன்றி, வளர்ந்து, சிறந்து பல்லவர்—நாயன்மார், ஆழ்வார்கள்—காலத்தில் திருக்கோயில் வழிபாட்டு அமைப்பாகவும் ஒரு சமுதாய நிறுவனமாகவும் பெரு வழக்கிற்கு வந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

இறை வழிபாடு

ஒவ்வொரு தேசிய இனத்தின் வாழ்விலும் வரலாற்றிலும் சமயம் முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றிருக்கிறது. இந்திய நாகரிகத்தின் உயிர்நாடியாக இருப்பது அதனுடைய சமயச் சிந்தனையாகும். தொல்பழங்காலம் முதற்கொண்டு இந்நாட்டில் வாழ்ந்துவரும் பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்களின் எண்ணங்களும் சிந்தனைகளும் ஒன்றாக இணைந்ததன் விளைவாகத் தோன்றியதே இன்றைய 'இந்து சமயமாகும்.'

> 'இந்திய சமயத்தை, நாம் திராவிட சமயம் எனக் கொள்ளுவதே மிகவும் பொருத்தமாகும். ஆரியப் படையெடுப்பாளர்களின் கருத்துகளினால் அச்சமயம் ஓரளவிற்கு மாற்றமும் திருத்தமும் பெற்றிருக்கலாம். இந்து சமயத்தின் மாண்புமிக்க தெய்வங்களான **முருகன், சிவன், கண்ணன்,** கொற்றவை முதலியன திராவிட (தமிழ்) மக்களின் தெய்வங்கள் என்பதில் கருத்து வேற்றுமைக்கே இடம் இல்லை. மேலும், இந்து சமயத்தின் சிறப்புமிக்க கோட்பாடுகள் சிலவும், ஊழைப்பற்றிய கருத்துகளும், பக்திநெறியும் வேதங்களில் இடம்பெறவில்லை. எனவே, நன்கு முதிர்ச்சி அடைந்துள்ள இந்திய சமயத்தின் முதன்மையான பண்புகள் அனைத்தும் தனிப் பட்ட ஓர் இடத்திற்கு—நாட்டிற்கு—உரியனவே ஒழிய, தனிப்பட்ட ஓர் இனத்திற்கு உரியன அல்ல. அவை பாரசீக நாட்டின் சமயத்திலோ, கிரேக்க நாட்டின் சமயத்திலோ, பிற ஆரிய மக்கள் வாழும் நாடுகளில் உள்ள சமயங்களிலோ காணப் பெறவில்லை.[129]

---

129 Elliet, Sir C., Hinduism and Buddhism, Arnold, 1921, Vol. I., p. XV

எனும் கருத்து, சங்ககாலத் தமிழ்மக்களின் இறையியலுக்கு ஒளியூட்டுவதாகும்.

இந்திய நாகரிகம் மலரத் தொடங்கிய காலத்திலேயே திராவிட (தமிழ்) மக்களின் சமய நம்பிக்கைகளும், வழிபாட்டு நெறிகளும், பழக்கவழக்கங்களும் ஆரியருடைய சமய வாழ்க்கையில் கலந்துவிட்டன. இக் காரணத்தால் அவற்றை எளிதில் இனம் கண்டு அறிய இயலவில்லை. வேதகால ஆரிய சமயத்தில் இந்திய-ஐரோப்பியருக்கும், இந்திய-ஆரியருக்கும் இடையே பொதுவாக உள்ள சமயக் கொள்கைகளை ஆராய்ந்து பார்த்த அறிஞர்கள், வேத காலத்திலேயே திராவிடர்களுடைய சமயக் கொள்கைகள், ஆரியரின் மதத்தைத் தன் வண்ணமாகத் திரிக்கத் தொடங்கிவிட்டன என்று மொழிந்துள்ளனர்.[130]

முருகன்

சங்ககாலத் தமிழகம் இந்து சமயத்திற்கு வழங்கியுள்ள மாண்புமிகு பரிசு முருக வழிபாடாகும். தமிழருடைய குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகன், சங்க காலத்தில் முதன்மையான தெய்வமாக வீறுடன் விளங்கினான். சேயோனாகிய முருகன் அன்புத் தெய்வமாக, அழகு தெய்வமாக, காதல் தெய்வமாகப் போற்றப்பட்டான்.

இவற்றோடு அவன் போரில் சிறந்த தெய்வமாகவும் கருதப் பட்டான். வெற்றித் தெய்வமான கொற்றவையே அவனுடைய தாய்.[131] கடப்ப மலர்மாலை அணிந்து, அவன் கடம்பின்கீழ் வீற்றிருப்பான்;[132] போர்வன்மை மிக்கவன்; போரையே விரும்புபவன்;[133] வெல்லும் போரில் வல்ல முருகன் எனப் போற்றப் படுகிறான்.[134] போருக்குப் புறப்படும் அரசனுடைய சீற்றம் முருகனின் கடுஞ்சீற்றத்திற்கு ஒப்பாகக் கூறுவது பண்டைத் தமிழரின் பழக்கமாகும்.[135]

சங்கப் பாடல்களில் 'முருகு' என்னும் சொல்லாலேயே, முருகன் சுட்டப்படுகிறான். 'முருகு' என்னும் சொல்லிற்கு இளமை, அழகு,

130 Chatterji, S.K., *Pre-Aryan Culture*, in the Bulletin of the School Oriental Studies, Calcutta, 1927; Vol. VIII, p. 122

131 முருகு. *258*

132 பெரும்பாண். *75 ;* அகம். *138:10-11;* புறம். *14:18-19*

133 மலைபடு. *493;* புறம். *120:21 ;* அகம். *266:21*

134 மலைபடு. *493;* அகம். *266:21* புறம். *120:21;*

135 பதிற். *26:12;* புறம். *16:11;* அகம்.*158:16;* பொருநர்.*131;* மதுரைக். *181*

இளைஞன், நறுமணம், தெய்வத் தன்மை[136] என்னும் பல்வேறு பொருள்கள் வழங்கி வருகின்றன.[137] முருகனை வேலன்,[138] கொற்றவை சிறுவன்,[139] பழையோள் குழவி,[140] குறிஞ்சிக் கிழவன்[141] என்னும் பல்வேறு பெயர்களால் புட்டுவது பழைய மரபு. 'முருகு புணர்ந்து இயன்ற வள்ளி'[142] என்பதனால், முருகனின் மனைவி வள்ளி என்னும் கொள்கையும் பண்டைத் தமிழருடையதாகும்.

ஆனால், சங்ககாலத்தின் கடைசிப் பகுதியிலேயே, தமிழருடைய தனித்தமிழ்த் தெய்வமான முருகனை, வடவாரிய தெய்வமாகிய கார்த்திகேயனோடு ஒப்புமையுடைய தெய்வமாகப் போற்றும் வழக்கம் உண்டாயிற்று. சிவனுடைய மகனாக, ஆறுமுகமும் பன்னிரு கையும் உடைய குகனாக, தேவசேனாபதியாகத் தமிழக் கடவுளான முருகன் கருதப்பட்டான். திருமுருகாற்றுப்படை எனும் பாடலில்தான், ஆரியக் கடவுளான சுப்பிரமணியனோடு தொடர்புபடுத்தி முருகன் சுட்டப்படுகிறான். வானோர் தானைத் தலைவன்,[143] அந்தணர் வெறுக்கை,[144] மங்கையர் கணவன்[145] போன்ற புதிய அடைமொழிகளோடு போற்றப்படுகிறான். 'அறுவர் பயந்த ஆறமர் செல்வன்'[146] என்று ஆறுமுகக் கடவுளின் பிறப்புப் பற்றிய செய்தியை நக்கீரர் தெரிவிக்கிறார். இதையே, சிற்சில மாற்றங்களோடு, கார்த்திகேயனின் பிறப்பைப் பற்றிய வரலாற்றை, காலத்தால் மிகவும் பிற்பட்டது (சங்க காலத்தின் கடைசிப் பகுதியைச் சேர்ந்தது) என நம்பப்படும் பரிபாடல்[147] கூறுகிறது.

திருமுருகாற்றுப்படையில் 'திருச்சீர் அலைவாய்' எனப்படும் திருச்செந்தூரில் முருகன் ஆறுமுகனாகக் காட்சி தருகிறான். இங்குச் சிவனுடைய மகனாகவும், போர்க் கடவுளுமாகப் போற்றப்படும் ஆரியக் கற்பனையில் எழுந்த கார்த்திகேயனை நக்கீரர் போற்றிப் பாடியுள்ளார். எனவே, 'முதன் முதலாக ஆரியமயமாக்கப்பட்ட முருகனின் திருக்கோயில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள திருச்செந்தூரேயாகும். இங்கே சூரனை வென்ற

---

136 ஐங். *245, 247, 249*; குறுந். *362*; பதிற். *26:12*

137 Burrow, Dr. T. & Emeneau, Dr. M.B., *A Dravidian Etymological Dictionary*, OUP, 1961, 4081-4083

138 மதுரைக். *611*

139 முருகு. *258*

140 ஷை *259*

141 ஷை *267*

142 நற். *82:4*

143 முருகு. *260*

144 ஷை *263*

145 ஷை *264*

146 ஷை *255*

147 பரிபா. *8*

முருக சுப்பிரமணியக் கடவுளை நாம் காணுகிறோம்'[148] என்னும் ஆராய்ச்சி அறிஞர்களின் கருத்து இங்குக் கருதத்தக்கதாகும்.

இவ்வாறு கி. பி. இரண்டாம் நூற்றாண்டு அளவில், ''தமிழ ரின் அழகுக் கடவுளாகிய முருகனுடைய பண்புகளோடு ஆரியர் களுடைய போர்க் கடவுளாகிய கார்த்திகேயனுடைய பண்புகளை இணைத்து, 'சுப்பிரமணியன்' என்னும் இந்து சமயத் தெய்வத்தை நம் முன்னோர்கள் படைத்துள்ளனர். குறிஞ்சிநிலக் கடவுளான முருகனுடைய மனைவியாகிய வள்ளியையும், கார்த்திகேய னுடைய பட்டத்தரசியாகிய தெய்வானையையும், சுப்பிர மணியக் கடவுளின் காதல் மனைவியாகவும், இல்லத்தரசியாகவும் கொண்டுள்ளனர்'' என்பது வரலாற்று அறிஞரின் துணி வாகும்.[149]

சிவன்

சேயோனையே சிவனாகப் போற்றும் மரபும் நாளடைவில் அரும்பியுள்ளது. ஆலமர் செல்வன்,[150] ஆல்கெழு கடவுள்,[151] முக்கண் செல்வன்,[152] மாற்றரும் கணிச்சி மணிமிடற்றோன்,[153] மழுவாள் நெடியோன்,[154] காரியுண்டிக் கடவுள்,[155] நீள்நிமிர் சடை முதுமுதல்வன்,[156] பிறவாயாக்கைப் பெரியோன்[157] எனப் பலவாறாகச் சிவனைப் போற்றி வழிபட்டுள்ளனர்.

இருக்கு வேதத்தில் அழித்தல் கடவுளாக விளங்கும் உருத்திரன் வேறு; அன்பின் ஊற்றாய், அழகின் உறைவிடமாய், அறிவுக் களஞ்சியமாய், அருளே வடிவமாய் விளங்கும் தமிழருடைய முழு முதற் கடவுளாகிய சிவபெருமான் வேறாவார். ஆரியரும் திரா விடரும் காலப்போக்கில் கொண்ட நெருங்கிய தொடர்பின் விளைவாகவும், நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளினுடைய கலப்பின் காரணமாகவும் தோன்றியதே 'சிவன்' எனும் பெருந்தெய்வ மாகும். சங்ககாலத் தமிழர்கள், முதல் காலக்கட்டத்தில் சிவனை, 'ஆலமர் செல்வ'னாக (தட்சணாமூர்த்தி என்று பிற்காலத்தவ ரால் போற்றப்பட்ட அறிவுத் தெய்வமாகவே) கருதியுள்ளனர்.[158]

---

148 Pillai, Dr. K.K., Origin of Muruga Worship in *Studies in the History of India*, with Special reference to Tamil Nadu, Madras, 1979, pp. 6?-65

149 Iyengar, P.T.S. *Pre-Aryan Tamil Culture*, pp. 21-23

150 சிறுபாண். 97

151 முருகு. 256; புறம். 198:9

152 புறம். 6:18; அகம். 181:16

153 புறம். 56:2

154 மதுரைக். 455

155 மலைபடு. 83

156 புறம். 166:12

157 சிலப். 5:169

158 Supra, No. 126-130., Karmarkar, A.P., *The Religious of India*, Vol. I, p. 53

பிற்பகுதியில் தான்இமயத்தைவில்லாகவளைத்தஇறைவனாக,[159] நீலமேனி வாலிழைபாகத்து ஒருவனாக,[160] உமையவள் ஒரு திற னாக ஓங்கிய இமயவனாக,[161] முப்புரங்களை எரித்த முதலோ னாக,[162] கடம்பமர் நெடுவேள் தந்தையாக[163] சிவனைப் பல வகையான பழங்கதைகளோடு இணைத்துப் போற்றியுள்ளனர்.

இவற்றால் கலித்தொகை, சிலப்பதிகாரம் இயற்றப்பட்ட காலத்திலேயே, ஆரியருக்குரிய 'உருத்திர'னுடைய பண்புகளை யும், தமிழருக்குரிய 'சிவபெருமா'னின் பண்புகளையும் ஒன்றாகச் சேர்த்துத் தலைசிறந்த பண்புகளைக் கொண்ட புதியதொரு 'முழுமுதற் கடவுளை'ப் பண்டைச் சான்றோர்கள்[164] போற்றி வழிபடத் தொடங்கியுள்ளனர் என்பது தெளிவாகிறது.

கண்ணனின் காதலி

முல்லை நிலத்தில் தொல்பழங்காலம் முதற்கொண்டு வாழ்ந்து வந்த தமிழர்கள், தங்கள் வழிபடு தெய்வத்தை 'மாயோன்' என்று போற்றிவந்தனர்.[165] மாநிறம் உடையவன் மாயன்—'மாயோன்' எனப்பட்டான். 'மாநிறம்' என்பதற்குக் 'கரிய நிறம்' என்பதுபொருள். இதனால் கண்ணனைக் கரியநிறம் உடை யவன் என்னும் பொருளிலேயே 'மாயோன்' என்று சுட்டினர்.

'கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே ?'[166]

என்னும் வழக்கு இதனை உறுதிப்படுத்துகிறது. வடமொழி யாளர்களும் 'கிருஷ்ணன்' எனும் சொல்லைக் 'கருமைநிறம்' என் னும் பொருளிலேயே பயன்படுத்தியுள்ளனர். கரிய நிறமுடைய தெய்வத்தைக் 'கிருஷ்ண' என்று சுட்டியுள்ளனர்.[167] இதிலிருந்தே கண்ணன் ஆரியருடைய தெய்வம் அன்று என்பது வெளிப்படு கிறது.

கண்ணனின் காதலியாக 'நப்பின்னை' எனும் நங்கை, சிலப் பதிகாரத்திலும் மணிமேகலையிலும் போற்றப்படுகிறாள்.[168] கண்ணனும்நப்பின்னையும் இணைபிரியாத 'இலட்சியக்காதலர்'

---

159 கலி. 38:1
160 ஐங்குறு. கடவுள் வாழ்த்து
161 சிலப். 28.74-75
162 புறம். 55:1-4
163 பெரும்பாண். 75
164 முருகு 256
165 Iyengar, P.T.S, *History of Tamils*, C. Coomaraswamy Naidu & Sons, Madras, 1929, pp. 46, 84
166 சிலப். 17: படர். 2
167 (a) Iyengar, P.T.S , *Life in the Age of Mantras*, 1912, pp 3-5 (b) John Dowson, *A Classical Dictionary of Hindu Mythology and Religion*, Routledge and Kegan Paul, London, 1908, p. 161
168 சிலப். 16:46-52 ; மணிமே. 19:65-66

களாகத் தமிழ்மக்களால் கருதப்பட்டனர். பிற்காலத்தில், நப்பின்னையைத் திருமாலின் சக்தியாகவே ஆழ்வார்கள் பாடியுள்ளனர்.[169] கண்ணன் நப்பின்னையொடு கூடி, ஆடிப்பாடி மகிழ்ந்த இன்பக் களியாட்டங்களைக் 'குரவைக் கூத்து' எனும் பெயரால் சுட்டுவது பண்டைத் தமிழ் மரபு.[170]

தமிழர் கண்ட 'கண்ணன் நப்பின்னை' என்னும் தெய்விகக் காதலர்களை, கி.பி. பத்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட வடமொழி நூல்களான பாகவத புராணமும் அரிவம்சமும், கண்ணன்-இராதையாகக் காட்டுகின்றன. ஆயர்பாடியில் எருமன்றத்தில் மாயவன் நப்பின்னையோடு ஆடிப்பாடி மகிழ்ந்த இன்ப விளையாட்டை, வடநாட்டுச் சூழலுக்கேற்பப் பிருந்தாவனத்தில் 'கிருஷ்ணனும்—இராதையும்' கோபியரோடு சேர்ந்து விளையாடிய இராசக் கிரீடையாக வடமொழியாளர்கள் சித்திரித்துள்ளனர்.[171] இதனால் தமிழகத்திலிருந்து வடக்கு நோக்கி வீசிய 'பக்தி நெறி' என்னும் தென்றல், பண்டைத் தமிழருடைய காதற் கடவுள் பற்றிய பழங்காலத் தொன்மத்தை[172] வடநாட்டிற்குக் கொண்டு பரப்பியமை புலனாகிறது.[173]

கொற்றவை

திராவிட மக்களிடத்தில் முதலில் தோன்றியது அன்னை வழிபாடு. வீரத்திற்கும் சீற்றத்திற்கும், வெற்றிக்கும், இனப் பெருக்கத்திற்கும், செழிப்பிற்கும் மூலமுதல் தெய்வம் கொற்றவையே என்பது பண்டைத் தமிழருடைய நம்பிக்கையாகும். அவர்கள் தாய்த் தெய்வத்தைப் பழையோள்,[174] கானமர் செல்வி,[175] காடுகெழு செல்வி,[176] கொற்றவை,[177] சூலி, பாய் கலைப் பாவை[178] முதலிய பெயர்களால் சுட்டினர். சங்க காலத்தில் 'சக்தி', வெற்றிக்குரிய வீரத்தெய்வமாகவே கருதப்பட்டாள். எனவே, சிறப்பாகக் 'கொற்றவை' என்னும் பெயராலேயே, அவளைக் குறிப்பிட்டனர். போருக்குப் புறப்படும்போது, படைவீரர்வெற்றித் திருவாகிய அன்னையை வழிபட்டுச் செல்லுவர்.

---

169 நாலா. திவ். பிரப. 3182, 3280, 3453, 3635, 3702

170 திருநாவுக்கரசு, க த., 'வாழ்வும் இலக்கியமும்', மணியகம், சென்னை, 1977, பக். 67-68

171 Harivamsa, Granthamala, Kanchipuram, 1936, II-20

172 Myths

173 திருநாவுக்கரசு, க.த., மு.கு.நூ. பக். 70-71

174 முருகு. 259

175 அகம். 345:4; பதிற். 3:1, 70:26, 74:17, 88:12, 90:19

176 மணிமே. 6:53, 18:115

177 தொல். பொருள். புறத். 4 ; முருகு. 258

178 குறுந். 218:1; சிலப். 12:70

சிலப்பதிகார காலத்தில் 'சக்திவழிபாடு' தனிச் சிறப்புற்றது. கொற்றவையைப்பற்றிப் பல்வேறு தொன்மங்கள் தோன்றி வளர்ந்துள்ளதைக் காணுகின்றோம்.

இந்த அன்னை வழிபாடு, இந்தியாவில் சிந்துவெளி நாகரிகக் காலத்திலேயே சிறப்புற்று விளங்கியதை மொகஞ்சதாரோ, அரப்பா முதலிய தொல்பொருள் ஆய்வுக்களங்களில் கிடைத்துள்ள முத்திரைகள் தெரிவிக்கின்றன. இருக்கு வேதத்தில் அன்னை வழிபாடு பற்றிய குறிப்புகள் யாதும் இல்லை. யஜுர் வேதத்தில்தான் அம்பிகை பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. தைத்திரிய ஆரணியகத்தில் முதன்முதலாக உருத்திரன், உமை எனப்படும் அம்பிகையின் கணவராகக் குறிப்பிடப்படுகிறார்.[179]

'உமா' என்னும் சொல்லைப்பற்றி ஆராய்ந்த வடமொழி அறிஞர்கள், 'வித்தியா' என்னும் பொருளிலேயே அச் சொல் யஜுர் வேதத்திலும், பிற்பட்ட நூல்களிலும் பயன்படுத்தப் பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.[180] எனவே, 'உமா' என்னும் வடமொழிப் பெயர், 'அம்மா' என்னும் தமிழ்ச் சொல்லின், வடமொழி ஆக்கமாகவே இருத்தல்வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் துணிந்துள்ளனர்.[181]

மற்றும் சக்தி வழிபாடு, வடஇந்தியாவில் பௌத்த சமயத்தில் 'தாரை' என்னும் பெண்தெய்வ வழிபாட்டிற்குப் போட்டியாக இந்து சமயத்தில் கி.பி. எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தோன்றியதைக் காணுகின்றோம். இவற்றால், சங்ககாலத் தமிழருடைய 'கொற்றவை' வழிபாடு காலத்தால் முற்பட்டதும், தொன்மையானதும் ஆகும் என்பது உறுதியாகிறது.

அறத்தின்வரு அமைந்த ஆன்மிகம்

மனிதன் வாழ்க்கையில் அடையவேண்டிய பேறுகளை—பொன்றாப் புகழ்மிக்க வாழ்வியல் நோக்கங்களை—மூவகையாகப் பண்டைத் தமிழர்கள் பாகுபடுத்தியுள்ளனர். அவை அறம், பொருள், இன்பம் என்பன. அவற்றை 'மும்முதற் பொருள்'[182] என்பர். தமிழ் மக்கள் எண்ணத் தெரிந்து, அறிவை வளர்த்து, கருத்து வகையால் உயர்ந்த நாகரிக வாழ்க்கையை வாழக்கற்ற காலத்தில், உலகப் பொருள்கள் அனைத்தையும்

---

179 Karmarkar, A.P., Op. cit., pp. 96

180 Karmarkar, A.P., Op. cit., pp. 99

181 Karmarkar, A.P., Op. cit., pp. 101, Narendranath Bhattacharya, *History of Sakta Religion*, Munshiram, New Delhi 1974, p. 21

182 தொல். பொருள். செய் 102

அகம், புறம் என்று வகைப்படுத்தினர். உயிர்கள் எல்லாம் இன்பத்தை நாடுகின்றன. உள்ளத்தால், உணர்வால், அறிவால், பண்பால், அன்பால் தம்முள் ஒத்த உணர்வுடைய ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழ்வதனால் உண்டாகும் இன்பமே, உலக இன்பங்களுள் தலைசிறந்ததாக அவர்கள் கருதினர். இவ்வின்பமோ உள்ளத்தில் தோன்றுவது; புறத் தோற்றத்திற்குப் புலனாகாத உள்ள உணர்ச்சிகளுள் தலையாயது. இதனால், இதனை 'அகம்' என்று சுட்டினர். உள்ளார்ந்த உணர்வாய், இல்லத்தின்கண் ஏரும் எழிலும் பெற்று விளங்கும் காரணத்தால் இதனை 'அகம்' என்று கருதியதாகத் தெரிகிறது. அன்புவழிப் பட்ட மனித வாழ்க்கையே அகத்தின் கருமுதலாகும்.

ஒத்த அன்புடையார் தாமே அல்லாமல், எல்லாராலும் நுகரத்தக்கதாகவும், இவை இவ்வாறு இருந்தனவெனப் பிறருக்கு எடுத்துரைக்கத் தக்கனவாகவும் உள்ளவற்றைப் 'புறம்' என்னும் பகுதியில் பண்டைத் தமிழர் அடக்கியுள்ளனர். இதனுள், அறிவு வழிப்பட்ட மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகளும், செயல்களும் சிறப்பிடம் பெறலாயின. உயிர் வாழ்க்கைக்குத் தேவையான பொருளினை ஈட்டல், வீரவுணர்வோடு நாட்டைக் காக்கப் போரிடுதல், அருள் உணர்வோடு பிறருடைய துன்பத்தைத் துடைக்க முயலல், ஈகை, உலக நிலையாமையை உணர்ந்து, அறத்தினை மதித்துப் போற்றி, அந்நெறியில் நின்று ஒழுகுதல் என்பன புறத்தினுள் அடக்கப்பட்டன. தனிமனிதனின் அனுபவங்களுக்கு மதிப்பு அளித்தும் குற்றங்குறைகளை உணரச் செய்வது, அனைத்துலகப் பண்பு வாய்ந்த ஆன்மிகப் பயன் மதிப்புகளின் மேம்பட்ட நிலைக்குத் தனிமனிதனை உயர்த்தும் பேராற்றல் வாய்ந்தது புறப்பொருள் என்று அவர்கள் கருதினர்.

காலப்போக்கில் அகம் இன்பத்தையும், புறம் அறத்தையும் பொருளையும் உணர்த்தும் வழக்கம் உண்டாயிற்று. இவ்வாறு அகம், புறம் என்னும் பொருளின் இருவகைப் பாகுபாடு, மும்முதற் பொருள் ஆகிய அறம், பொருள், இன்பம் என்று விரிந்து சிறந்ததைக் காணுகின்றோம். இன்பமும் பொருளும் அறத்தை அடைவதற்குரிய படிகளாகக் கருதப்பட்டன. அறம் ஒழுகலாற்றுப் பயன்மதிப்பையும், இன்பம் உளவியல் சார்ந்த பயன் மதிப்பையும் உணர்த்துவனவாகும். திருவள்ளுவரும் இந்த மூன்றையே தம்முடைய பொன்றாப் புகழ்வாய்ந்த நூலில், 'முப்பா'லாக விளக்கியுள்ளார். வீடுபேற்றை அறத்திலேயே அடக்கிக் கூறுவது தமிழ்ப்பண்பாட்டு வழிவந்த மரபாகும். துறவும்

வீடுபேறும் அறவொழுக்கத்தின் பாற்பட்டன என்பதே திருவள்ளுவர் போன்றோரின் துணிபாகும்.

எனவே, மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகளையும், கூறுகளையும் உள்ளார்ந்த பேராற்றலாக நின்று இயக்குவது அறமே என்பது அவர்கள் நம்பிக்கை. இதனால், அறத்தின் வழிப்பட்ட வாழ்க்கையே உண்மையான சமய வாழ்க்கையாக—ஆன்மிக வாழ்க்கையாக—தமிழ்ச் சான்றோர் போற்றினர். 'அறத்தான் வருவதே இன்பம்',[183] 'அறன்எனப் பட்டதே இல் வாழ்க்கை',[184] 'அறவாழி அந்தணன்'[185] என்று திருவள்ளுவர் அழுத்தந் திருத்தமாக அறத்தின் ஆட்சியையும், மாட்சியையும் அறிவுறுத்துவது ஆழ்ந்து சிந்தித்தற்கு உரியதாகும்.

'சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும் அறத்தின் வழிப் படூஉம் தோற்றம்'[186] என்றும், 'அறநெறி இதுவெனத் தெளிந்த'[187] என்றும், 'அறம்பா டிற்றே ஆயிழை கணவ'[188] என்றும், 'அறத்தாறு அன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி'[189] என்றும், 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்'[190] என்றும், 'அறன்கடைப் படாஅ வாழ்க்கை'[191] என்றும், 'அறந்துஞ்சு செங் கோலையே'[192] என்றும், 'அறனொடு புணர்ந்த திறனறி செங் கோல்'[193] என்றும், 'அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம்'[194] என்றும், 'அறத்தினுள் அன்புநீ!'[195] என்றும் பண்டைத் தமிழ்ச் சான்றோர் அறத்தின் பண்பையும் பயனையும் போற்றியுள்ளனர். இவை யாவும், தங்கள் வாழ்க்கையில் அறத்திற்கு அவர்கள் அளித்திருந்த மதிப்பினைப் புலப்படுத்துகின்றன.

'அறச்செயல் என்பது யாது?' என்பது குறித்து அவர்கள் கொண்டிருந்த கொள்கையும் இதனை உறுதிப்படுத்துகிறது.

> 'அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
> மறவாது இதுகேள்! மன்னுயிர்க் கெல்லாம்
> உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
> கண்டது இல்!'[196]

---

183 குறள். 39
184 ஷை 49
185 ஷை 8
186 புறம். 31:1-2
187 ஐங்குறு. 371:4
188 புறம். 34:7
189 அகம். 5:16-17
190 புறம். 55:10
191 அகம். 155:1
192 புறம். 20:17
193 பொருநர். 230
194 நற். 68:3
195 பரிபா. 3:65
196 மணிமே. 25:228-31

என்பதே அறச்செயல் பற்றிய அவர்களுடைய கோட்பாடாகும். இவை யாவும் சங்ககாலத் தமிழரின் பண்பாடு, **அறத்தின் வழிப் பட்ட ஆன்மிகப் பண்பாடு** என்பதனை எடுத்தியம்புகின்றன.

இதன் எதிரொலியையே, சங்ககாலச் சான்றோர்கள் இறைவன் (முருகன்) இடம் விடுத்துள்ள

'யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல! நின்பால்
அருளும், அன்பும், அறனும் மூன்றும்!'[197]

என்னும் வேண்டுகோளிலும் கேட்கின்றோம்.

குறைகள்

மனிதன் குறையுடையவன். இயற்கைச் சூழலும் வாழ்க்கைப் போக்கும் சில தீய பழக்கவழக்கங்களுக்கு அவனை எளிதில் இரையாக்கிவிடுகின்றன. இத்தகைய சில தீய பழக்கவழக்கங்கள் சங்ககாலச் சமுதாயத்திலும் இடம்பெற்றிருந்தன. அவற்றுள் முதன்மையானது பெண் இன்பத்தில் பேரீடுபாடு கொண்டிருந்தமையாகும். பல்வேறு வகையான பரத்தையரை நாடிச் செல்லுவது ஆடவருள் பெரும்பாலோரின் பொழுதுபோக்காக இருந்தது. காதலர் வாழ்வில் சிறு பூசலுக்குக் (ஊடல்) காரணமாகப் பரத்தையரிடம் ஆடவர் சென்றுவருவது அமைந்தது. மருதத்திணை நாகரிகத்தின்—நகர நாகரிகத்தின்—சிறப்பியல்பாகவே இதனைக் காணுகின்றோம்.

அடுத்த நிலையில் கள்ளினைக் குடித்து மகிழ்வது. வரையறையற்ற நிலையில் பண்டைத் தமிழர் குடித்து மகிழ்ந்தனர். இவற்றோடு சூதாட்டத்தில் பொழுதினையும் பொருளையும் பாழாக்கும் பழக்கம் பண்டைத் தமிழரிடம் காணப்பட்ட குறையாகும்.

இவை யாவற்றையும் முதன்முதலாகக் கண்டித்தவர் திருவள்ளுவரேயாவார். இவற்றைச் 'சமூகத் தீமைகளாகவே' வெறுத்து ஒதுக்கியுள்ளார். 'இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்'[198] தனிமனிதனை மட்டும் அல்லாமல், சமுதாயத்தையும் சீரழித்து விடும் என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை. இதனை 'வரைவின் மகளிர்',[199] 'கள்ளுண்ணாமை',[200] 'சூது'[201] என்னும் அதிகாரங்களில் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

---

197 பரிபா. 5:78-80
198 குறள். 920
199 ஷை அதி. 92
200 ஷை 93
201 ஷை 94

பண்டைத் தமிழரிடம் காணப்பெற்ற மற்றொரு குறை குறுகிய தன்மான உணர்வும், புகழாசையுமாகும். இவற்றால் அவர்களிடையே, ஒற்றுமைப்பண்பு தழைத்தோங்க இயலாமற் போயிற்று. கோவூர்கிழார்,[202] ஆலத்தூர்கிழார்[203] போன்ற புலவர்கள், போலிமானத்தால் தவறிழைத்த வேந்தர்களை அஞ்சா நெஞ்சத்துடன் கண்டித்து, நெறிப்படுத்த முயன்றுள்ளனர்.

இவை பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் காணப்பட்ட குறைகள் மட்டும் அல்ல. இன்றுவரை தொடர்ந்து தமிழரிடையே நிலைபெற்று விளங்கும் குறைகளாகவும் உள்ளன. கலையுணர்வுமிகு வாழ்க்கை வாழும் மக்களினது புலனுகர் இன்ப வேட்கை முனைப்பாக இருப்பதில் வியப்பு இல்லை. எளிதில் உணர்ச்சிவயப்படும் இயல்புடையவர் கலைஞரும் கலையார்வலருமாவர். கலையுணர்வும், அதனால் உண்டாகும் புகழ் ஆசையும் குன்றும்பொழுதே, இக் குறைகள் தமிழரை விட்டு நீங்கக்கூடும்.

முத்தமிழ்

உலகம் கண்டு வியக்கத்தக்க அழகு கலைகள் பலவற்றைத் தமிழகம் உலகிற்கு அளித்துள்ளது. தமிழருடைய முருகியல் உணர்வு, முத்தமிழாக மலர்ச்சியுற்றது. மும்மலை, முந்நாடு, மூவரசு, முப்பொருள், முப்பால் என்று மும்மூன்றாக எதையும் தொகுத்துக் கூறுவது பண்டைத் தமிழ்ப் பண்பாட்டின் தனிச் சிறப்பாகும். இம் மரபுவழியே முகிழ்த்ததே பண்டைத் தமிழருடைய 'கலையியல்' கோட்பாடாகிய முத்தமிழுமாகும். 'தெரிமாண் தமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்'[204] என்னும் பரிபாடல் பகுதியால் சங்க காலத்தின் கடைப்பகுதியில் தமிழருடைய அழகியல் உணர்வு 'முத்தமி'ழாக வளர்ச்சியுற்றதைக் காணுகின்றோம்.

பண்டைத் தமிழ்மக்களின் அழகியல் உணர்வு, அவர்கள் பேசிய மொழியின் மூலம் மூவகையாக வெளிப்பட்டது. அவை இயல், இசை, நாடகம் என்பனவாகும். இயற்றமிழ் எண்ணத்தை வளர்ப்பது; சொற்களால் எண்ணத்தை வெளிப்படுத்துவது. இசைத்தமிழ் உள்ளத்து உணர்ச்சிகளை ஒலிநயத்தால் உணர்த்துவது. நாடகத் தமிழ், உள்ளத்து உணர்ச்சிகளைக் கண்ணுக்குப் புலனாகுமாறு காட்டுவது. உடலினுள் இருந்து எழும் உணர்ச்சி ஆற்றலால், ஒலி வெளிப்படுகிறது. அவ்வொலியால் அமைவதே

202 புறம். 44, 45, 46, 47
203 ஷை 36
204 பரிபா. தி.4:1

'மொழி' என்று பண்டைத் தமிழர் கருதினர். அம் மொழியால் அமையும் இலக்கிய இலக்கணங்களை 'இயற்றமிழ்' என்று போற்றினர். கேட்போரைத்தன்வயப்படுத்தும் ஆற்றலுடன் உள்ளத்தில் எழும் உணர்வுகளை, இன்னொலியுடன் உணர்த்தும் மொழியை 'இசைத்தமிழ்' என்றும், குறித்த உணர்ச்சியையும் சுவையையும் இயலும் இசையும் இணைந்து விளங்க நடிப்பால் வெளிப்படுத்துவதை 'நாடகத் தமிழ்' என்றும் அவர்கள் பாகுபாடு செய்துள்ளனர்.

இயற்றமிழ்

இயற்றமிழ் இலக்கிய இலக்கணங்களின் வாயிலாக வளர்ந்து வருகிறது. இந்திய இலக்கியங்களுள் தமிழ் இலக்கியம் ஈராயிரம் ஆண்டுகளுக்குமேற்பட்ட தொடர்ந்த வரலாற்றையுடையதாகும். உலகச் 'செம்மொழி'யாகப் போற்றப்படுவதற்குரிய தகுதியும் சிறப்பும் வாய்ந்தது தமிழ்மொழி. இதனுடைய பழைய இலக்கியங்களான தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள் என்பன, சமயச் சார்பற்றன[205] ஆகும். மனித இனத்தின் அடிப்படை உணர்ச்சியாகிய காதலைப் போற்றிப் பாடும் அகப்பொருள் பாடல்களையும், போரையும் வீரத்தையும் போற்றிப் பாடும் 'புறப்பொருள்' பாடல்களையும் பண்டைத் தமிழ்ப் புலவர்கள் பாடியுள்ளனர். அவர்கள், குறிப்பிட்ட எச்சமயத்திற்கும் தம் பாடல்களில் முக்கியத்துவம் தரவில்லை. ஆனால், அன்றைய தமிழ்மக்களின் வாழ்க்கையையும், நாட்டுப்புறக் காட்சிகளையும், நகர வாழ்வின் வளத்தினையும், இயற்கை எழிலினையும் அவர்கள் ஏத்திப் போற்றியுள்ளனர்.

'உலக மொழிகள் பலவற்றிலும் காதல் பாடல்கள்—இலக்கியங்கள்—இடம்பெற்றுள்ளன. எனவே, சங்ககாலத்தின் தமிழ் அகப்பொருள் பாடல்களுக்கு என்ன சிறப்பு? எனும் எண்ணம் எழலாம். உலகின் பிற மொழிகளில் உள்ள காதல் இலக்கியங்கள் எல்லாம் சிதைந்த காதலை, முறிந்தகாதலை, கருகிய காதலைச்சொல்லோவியங்களாகத் தீட்டிக் காட்டுகின்றன. சங்கத் தமிழ்ப் பாடல்களோ காதலின் வெற்றியை, காதலரின் வெற்றிமிகு இன்பவாழ்வின் சிறப்பியல்புகளை மிகவும் நுட்பமாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. 'அன்பின் ஐந்திணை' என்னும் கோட்பாடு, நிறைவேறாத காதலைப்பற்றிப் பேசவில்லை; காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபட்ட இன்பவாழ்க்கையை ஐந்து நிலைகளாகப் பாகுபடுத்திக் காட்டுகிறது.

---

205 Secular

இலக்கியத்தில் இடம்பெறும் தமிழ்மக்களின் வாழ்க்கையை அகம், புறம் என்று பாகுபாடு செய்து, அவற்றைப் பல்வேறு நுட்பமான மனவுணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் விரித்து விளக்குவது தமிழுக்கேயுரிய 'பொருள் இலக்கணம்' என்பதாகும். இப் பொருள் இலக்கணத்துள் 'அகப்பொருள் இலக்கணம்' தனிச் சிறப்பு வாய்ந்தது. அவ்விலக்கண மரபை ஒட்டி இயற்றப்பட்டு உள்ளவையே அகப்பொருள் இலக்கியங்களாகும். அவற்றுள் காதலர் உள்ளத்தின் தூய அன்பின் திறத்தையும், உறுதிப்பாட்டையும், கூடல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் எனும் ஐவகை வாழ்க்கை நிலைகளால் பண்டைத் தமிழ்ச் சான்றோர் வெளிப்படுத்தியுள்ளனர். இவற்றையே குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் திணைகளாகக் கூறுவர். இத்தகைய திணைவழிப்பட்ட அகப்பொருள் இலக்கியத்தை—காதல் பாடல்களை—வேறு எம்மொழிகளிலும் காண இயலாது.

சங்க இலக்கியம் யாவும் அரசர்களுக்காகவோ, மதகுருமார்களுக்காகவோ இயற்றப்பட்டன அல்ல; மக்களின் வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்டு, பல்வகை உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வகையில் நிகழ்வியல் பாங்குடன் மக்களுக்காக இயற்றப் பட்டனவாகும்.

'சொற்சுருக்கமும், தெளிவும், இனிமையும், இன்ப எக்களிப்பும், மனித இனத்தின் உணர்ச்சித் துடிப்பும் நிறைந்த உயிரோவியங்களாக விளங்கும் இச் சங்கப் பாடல்கள், 'செம்மொழி இலக்கியங்க'ளாகப் போற்றத்தக்கன. இவற்றோடு பிண்டாரின்[206] படைப்புகளே ஒப்பிடத்தக்கன. பிண்டாரின் படைப்புகளைக் காட்டிலும் அமைதியழகும் சொல்நயமும் வாய்ந்தனவாக இவை உள்ளன. 'இந்திய நாட்டு இலக்கியங்களுள் நன்கு முதிர்ச்சியுற்றதும், மக்களுடைய உள்ளத்தின் நுட்பமான உணர்ச்சிகளைச் சித்திரிப்பதும் சங்க இலக்கியம் எனலாம். சங்க இலக்கியம் மாண்புமிக்க கிரேக்கக் கலையின் வனப்பையும், நடுவுநிலைப் பண்பையும், அமைதிப் பொலிவையும் பெற்றுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்'.[207]

பழந்தமிழ் இலக்கியங்களிலே ஒப்புயர்வற்றது திருக்குறள் என்னும் நீதி இலக்கியமாகும். இந் நூல் 'அனைத்துலக மனிதனைப் பாடுவதாகும்.'[208] "அன்பு, சமூக சேவையாக வளர்ந்து

---

206 Pindar

207 Renou, L., (ed.) P. Meile's L' Inde Classique, Paris, 1929, Part II, p. 302

208 Pope, G.U., *The Sacred Kural*, Henry Frowde, London, 1886, p. xvi

சிறக்க வேண்டும் எனும் கருத்து, திருக்குறளிலேதான் வலியுறுத்தப்படுகிறது...நெடுங்காலமாகத் தமிழ்நாட்டிலே வேரூன்றி வளர்ந்த கருத்துகளை, அவர் (திருவள்ளுவர்) குறள்வெண்பா வடிவில் எடுத்துரைத்தார். 'செயல் மூலமாகவும் சேவை மூலமாகவும் மற்றவர்களுக்கு நன்மைசெய்ய இயலுகிறதே! அதற்காகச் செயலில் ஈடுபடு!' என்பது வள்ளுவர் இடும் கட்டளையாகும்''[209] என்னும் கருத்து இங்குச் சிந்திக்கத்தக்கதாகும்.

'செயலில் ஈடுபடுவதன்மூலம் மனிதனுக்கு மகிழ்ச்சி உண்டாகிறது என்னும் கருத்து இந்திய இலக்கியங்களில் வேறு எங்கும் காண இயலாதது. இந்தக் கருத்தை வள்ளுவர் பல இடங்களிலே வற்புறுத்தியுள்ளார்'[210] என்னும் ஆய்வுரை, திருக்குறளின் 'வாழ்க்கை மறுப்பு இன்மை'க் கோட்பாட்டைக் கோடிட்டுக் காட்டுகிறது.

பழைய தமிழ் இலக்கியத்துள் சாதி, சமய, இட, இன, மொழி, காலம் ஆகிய வேறுபாடுகளை எல்லாம் கடந்து, உலக மக்களுக்கு என்றும், எப்பொழுதும் பயன்படத்தக்க 'உலகப் பொதுமறை' யாக விளங்குவது திருக்குறள்.

கற்பார் உள்ளத்தை உருக்கும், சிறப்புமிகு கவிதை நயத்தோடு, மனித இனத்தின் அன்பினை வெளிப்படுத்துவது 'சிலப்பதிகாரம்' என்னும் காப்பியமாகும். காப்பியப் பண்புகள் முழுநிறைவுபெற்றதாக, இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் முறையாகக் குழைத்துத் தருவதாக அமைந்துள்ளது இம்முத்தமிழ்க் காப்பியமாகும். இது புகழ்மிக்க உலகப் பெருங்காப்பியங்களோடு ஒப்பாக வைத்தும் போற்றத்தக்க சிறப்புடையது[211] என்பர்.

பௌத்த சமயத்தோடு தொடர்புகொண்ட உலகமொழிகள் நூற்றைம்பதிற்கு மேற்பட்டனவாக உள்ளன. ஆயினும், அச்சமயத்தின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் விளக்கும் 'காப்பியம்' அம் மொழிகளில் இன்று இல்லை. தமிழிலுள்ள பௌத்த சமயக் காப்பியமாகிய 'மணிமேகலை' ஒன்றுதான், அச்சமயத்தின் தனிப்பெருங் காப்பியமாக விளங்குகிறது.[212]

---

209 Schweitzer, Albert *Indian Thought and Its Development*, Wilco, Bombay, 1960, p. 198

210 Ibid. p. 199-201

211 Kamil Zvelebil, *A Short Note on the Tamil Contribution to World's Civilization* in Tamil Culture, Vol. v, p. 296

212 Law, B.C., *South India as a Centre of Pali Buddhism* in S.K. Iyengar's Commn Volume, Madras, 1936, p. 245

இசையும் கூத்தும்

முத்தமிழுள் இயற்றமிழ் அடைந்த வளர்ச்சியை நோக்கு கின்றபொழுது, இசைத் தமிழும் நாடகத் தமிழும் நன்கு வளர்ச்சி யுற்றிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. இவற்றின் சிறப்பு இயல்புகள் சிலவற்றை இங்குக் காணலாம். இசைத் தமிழ் பண், திறம் என்னும் இருவகைப் பிரிவுகளை உடையது. மாத்திரைகள் எனப்படும் 22 வகைச் சுருதிகளும், குரல், துத்தம், கைக்கிளை, உழை இளி, விளரி, தாரம் என்னும் எழுவகைச் சுரங்களும் தொன்றுதொட்டு இசைத்தமிழின் கூறுகளாகப் போற்றப்படு கின்றன. குழல், யாழ், முழவு எனும் இசைக் கருவிகள் அக்காலத் தில் சிறப்புற்று விளங்கின.

கூத்தும் ஆடலும் (நாட்டியம்) சங்ககாலத்தில் நன்கு வளர்ச்சி அடைந்திருந்தன. கதை தழுவிய கூத்து நாடகம் எனப்பட்டது. இது அகக்கூத்து, புறக்கூத்து என்று இருவகையாகப் போற்றப் பட்டது.

வாழ்வியல் நோக்கம்

சங்ககாலத் தமிழருடைய வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கு கின்றபொழுது அதில் மூவகை இயல்புகள் முனைப்பாக உள்ளமை புலனாகின்றன. இவ்வுலக வாழ்க்கையை நிலையானது என்னும் எண்ணப்போக்கு முதல் காலக்கட்டத்தில் தமிழரிடம் மேலோங்கி நிற்பதைக் காணமுடிகிறது. அக்காலத்தில் போரும் காதலுமே வாழ்வின் சிறப்புமிகு நோக்கங்களாகக் கருதப்பட்டன. எனவே, இலக்கியத்தின் பாடுபொருள்களாக அகமும் (காதல் வாழ்வும்) புறமும் (வீர வாழ்வும்) பெரிதும் போற்றப்பட்டன. இவ்விரு இயல்புகளும் ஒருவகைப் புலன் நுகர்வு இன்ப நாட்டத்தையும், புகழ் வெறியையும்[213] வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோள் களாகப் பண்டைத் தமிழர் கொண்டிருந்தனர் என்பதையே பறைசாற்றுகின்றன. ஆரிய நாகரிகத்தின் தாக்கமோ, ஊடுரு வலோ உண்டாகாத காலத்திலேயே இக் குறிக்கோள்கள் தமிழ ருடைய எண்ணப் போக்கை உருவாக்கி, தனிச் சிறப்பு வாய்ந்த தொரு பண்பாட்டை வளர்க்கத் தூண்டிய சக்திகளாக அமைந் திருந்தன.

சங்கப் புலவர்களுள் காலத்தால் முற்பட்டோர், 'மண்ணக வாழ்விலேயே தோய்ந்தவர்'களாக இருந்தனர். பொருளை

213 Iyengar, P.T.S., *History of the Tamils*, p. 154

ஈட்டுவது எதற்காக?' என்பதைப்பற்றி அவர்கள் கொண்டிருந்த கருத்துகள் யாவும் இந்த உணர்வையே வெளிப்படுத்துகின்றன.

'தந்நயந்து உறைவோர்த் தாங்கித் தாநயந்து
இன்னமர் கேளிரொடு ஏமுறக் கெழீஇ
நகுதல் ஆற்றார் நல்கூர்ந் தோர்.'[214]

'அறன்கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
பொருளின் ஆகும்.'[215]

'அறந்தலைப் பிரியாது ஒழுகலும் சிறந்த
கேளிர் கேடுபல ஊன்றலும் நாளும்
வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கு இல்லை.'[216]

'நட்டோர் இன்மையும் கேளிர் துன்பமும்
ஒட்டாது உறையுநர் பெருக்கமும் காணூஉ
ஒருபதி வாழ்த லாற்றுப.'[217]

'அறனும் பொருளும் வழாமை நாடித்
தற்றக வுடைமை நோக்கி, மற்றதன்
பின்னா கும்மே முன்னியது முடித்தல்.'[218]

உலகிற் பிறந்த எல்லா மக்களுமே இன்புற்று வாழவேண்டும் என்பது பண்டைத் தமிழருடைய கருத்தாகும். செய்யுள்கள் அறம், பொருள், இன்பம் பற்றியே அமையவேண்டும் என்பது தொல்காப்பியருடைய கட்டளையாகும்.[219] இம் முப்பொருள் களையே, 'அகம், புறம்' எனும் பொருள் பாகுபாட்டினுள் அடக்கி யுள்ளனர். சங்கப் பாடல்களிலே அறம், பொருள், இன்பம் பற்றிய பாடல்கள்தாம் மிகுதியாக உள்ளன.

காதல் வாழ்க்கையின் பல்வேறு நிலைகள், தாய், தந்தை, அரசன், கொல்லன், இளைஞன் ஆகியோருடைய கடமைகளைப் பற்றிய கருத்துகள்[220] விருந்தினரையும், அறவோரையும் வர வேற்று உதவுவதே இல்வாழ்வோரின் கடமை எனும் கருத்து, இவற்றைக் காத்துப் போற்றி வளர்ப்பதற்கே அரசு எனும் கொள்கை முதலியன யாவும் இவ்வுலகில் எல்லாரும் இன்புற்று

---

214 அகம். *151:1-3*
215 ஷை *155:1-3*
216 ஷை *173:1-3*
217 ஷை *279:1-3*
218 ஷை *286:10-12*
219 தொல். பொருள். செய். *102*
220 புறம் *312*

வாழவேண்டும் என்பதையே நோக்கமாகக்கொண்டு அமைந்துள்ளன.

அவர்கள் 'புத்' என்னும் நரகத்திலிருந்து தம்மைக் காப்பான் என்பதற்காக மகனைப் பெற்று எடுக்கவேண்டும் என்று நினைக்கவில்லை. 'இன்பமயக்கத்தை இவ்வுலக வாழ்க்கையில் அளிப்பவர் மக்கள். எனவே, மக்களைப் பெறாதவர்க்கு இவ்வுலக வாழ்க்கையில் பெறத்தக்க சிறப்புமிகு இன்பம் கிடைக்காமல் போகுமே' என்றுதான் அவர்கள் வருந்தினர்.[221]

தங்கள் முயற்சிக்கு உதவும் பொருட்டும், இவ்வுலக வாழ்க்கை இனிது அமையவேண்டும் என்பதற்காகவும், சங்ககாலத் தமிழர்கள் தெய்வங்களை வேண்டி வழிபட்டனர்.[222] நடுகல் வழிபாடும் போரில் வெற்றியைத் தரும் என்று அவர்கள் நம்பினர்.[223] இந்த நடுகல் வழிபாடு காலத்தால் மிகவும் பழைமையானது; ஆரியருடைய வருகைக்கு அல்லது ஆரியரோடு கலப்பதற்கு நெடுங்காலத்திற்கு முன்பு இருந்தே, தமிழரிடம் இருந்துவந்த வழிபாட்டு நெறியாகும். வேலன் வெறியாடல் முதல் பல்வேறு சமயச் சடங்குகளையும் விழாக்களையும்[224] இவ்வுலகில் இன்புற்று வாழ்வதற்காகவே பண்டைத் தமிழர்கள் நடத்தினர். இறந்த பிறகு இன்பம்—துறக்கம்—அடையவேண்டும் என்றஎண்ணத்துடன் கடவுளரைத் தமிழ்மக்கள் வழிபட்டனர் என்பதற்குரிய சான்றுகள் மிகமிகக் குறைவாகவே உள்ளன. வடவருடைய ஊடுருவலுக்குப் பிறகு இயற்றப்பட்ட பாடல்களிலேயே அவை உள்ளன. சமயக் கொள்கைகளும் தத்துவங்களும் வளர்ந்த சங்ககாலத்தின் கடைப் பகுதியில்தான், மறுமை இன்பத்திற்காகக் கடவுள் வழிபாடு செய்யும் பழக்கம் உண்டாயிற்று.

'வாழ்க்கை வாழ்வதற்கே!' என்பதுதான் தொடக்கக் காலத் தமிழ்மக்களின் கொள்கை. இதன்பொருட்டே அவர்கள் பல செயல்களைப் புரிந்துள்ளனர். கட்டுப்பாட்டுடன் வாழ்வதற்கும், நல்லொழுக்கத்துடன் வாழ்வதற்கும், இவ்வுலக வாழ்வில் அனுபவிக்க வேண்டிய இன்பங்களை நெறியோடும் முறையோடும் அனுபவிப்பதற்கும் தெய்வங்களின் துணையை, உதவியை அவர்கள் வேண்டிநின்றனர்.

---

221 புறம். 188

222 ஷை 143:1-3, 306:4-5; அகம். 98:10-13 ; பரிபா. 8; நற். 9:1-3

223 அகம். 35:4-8

224 தொல்.பொருள்.புறத்.5:1-2; மதுரைக். 613-615 ; ஐங்குறு. 241-250; குறுந். 111:1-2 ; அகம். 98:5-10

அரசர்களுக்கு அறிவுரையாகக் கூறப்பட்டுள்ள அறவுரைகள் இக் கருத்தையே வலியுறுத்துகின்றன.

'யவனர், நன்கலம் தந்த **தண்கமழ் தேறல்**
பொன்செய் புனைகலத்து ஏந்தி நாளும்
ஒண்தொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்குஇனிது ஒழுகுமதி!'[225]

'வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த
இரவல் மாக்கள் ஈகை நுவல
ஒண்தொடி மகளிர் பொலங்கலத்து ஏந்திய
தண்கமழ் தேறல் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி பெரும! **ஆங்கு அது**
வல்லுநர் வாழ்ந்தோர் என்ப'![226]

'பொற்புவிளங்கு புகழ்அவை **நின்புகழ் ஏத்த**
இலங்குஇழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
மணம்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்து இனிது உறைமதி பெரும!
வரைந்துநீ பெற்ற நல்ஊ ழியையே!'[227]

எனும் பாடற்பகுதிகள் யாவும், ஒரே வகையான அறிவுரையைக் கூறுவதைக் காணலாம். இவை யாவும் உலக இயல்பினை எடுத்துரைத்து, நன்னெறியை அறிவுறுத்தி, மனைவிமக்களோடு நல்வாழ்வு வாழுமாறு வாழ்த்துகின்றன.

மூன்றாவதாகக் கண்ட பாடற்பகுதி தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு மாங்குடி மருதனார் அறிவுரை கூறும் 'மதுரைக்காஞ்சி' என்னும் பாடலின் இறுதிப் பகுதியாகும். இங்கே நிலையாமையை மட்டும் அறிவுறுத்தி துறவுக்கோலம் பூணுமாறு வலியுறுத்தும் **காஞ்சித் திணை** சிறப்பிக்கப்படவில்லை. உலக இயல்பை உள்ளவாறு உணர்ந்து, உள்ளம் செம்மையுற்று, இன்பமாக வாழ்நாளைக் கழித்து மகிழுமாறு வாழ்த்தும் வாழ்த்து முறையே 'மதுரைக்காஞ்சி' உணர்த்தும் பண்டைத் தமிழரின் வாழ்வியல் கோட்பாடாகும்.

---

225 புறம். *56:18-21*
226 ஷெ *24:29-34*
227 மதுரைக். *778-782*

'நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்! அதுதான்
எல்லாரும் உவப்பது! அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே'[228]

எனும் கருத்தும் இதனையே வலியுறுத்துகிறது. 'நல்லது செய்ய முயலுக! இயலாவிட்டால் தீமையாகிலும் செய்யாமல் இருப்பீராக! இது எல்லாருக்கும் இன்பத்தைத் தரும். மற்றும், இது நல்ல நெறியில் வாழவும் தூண்டும்!' என்னும் கருத்து, நடைமுறை வாழ்க்கையில் சிக்கலையும் துன்பத்தையும் உண்டாக்காமல், தாமும் இன்பமாக வாழ்வதோடு, மற்றவர்களையும் மகிழ்ச்சியாக வாழவிடவேண்டும் (வாழ்! வாழவிடு!) என்னும் புத்துலகச் சிந்தனையைப்போல் ஒலிக்கிறது.

இவ்வாறு கலையுணர்வுமிக்க வாழ்க்கையை, அறநெறிப்பட்ட அன்புமயமான இன்ப வாழ்க்கையை வாழ்வதையே, 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்' என்று பண்டைத் தமிழ்ச் சான்றோர் போற்றினர். இவற்றை எல்லாம் கருத்தில்கொண்டு சங்ககாலத் தமிழருடைய வாழ்க்கை பெரிதும் 'உலகியல் சார்புடையதாக இருந்தது' எனலாம். வாழ்க்கையைத் துன்பமயமானதாக அவர்கள் கருதவில்லை. 'எல்லாம் இன்பமயம்' என்னும் மகிழ்வுநல நோக்கோடு வாழ்க்கையினை ஒவ்வொரு துளியாகச் சுவைத்து அவர்கள் மகிழ்ந்தனர் எனக் கூறினால் அது தவறு ஆகாது.[229]

இத்தகைய வாழ்க்கைப் பாங்கு, சங்ககாலத் தமிழருடைய வாழ்வில் ஆரியச் சிந்தனைகளின் ஊடுருவல் உண்டாவதற்கு முன்பு சிறப்புற்று விளங்கியது என்பது இதுவரையில் நாம் கண்ட 'சங்ககால நாகரிகமும் பண்பாடும்' என்னும் ஆய்வுரையால் எளிதிற் புலனாகும். 'இத்தகைய வாழ்க்கை முறையும் பண்பாடும் நாகரிகத்தின் தொடக்க நிலையைக் காட்டுகின்றன'[230] என்று ஓர் அறிஞர் கூறுவது பொருத்தமற்ற கருத்தாகும். மேலும், நடுவு நிலையில் நின்று ஆராய்ச்சி செய்ய விரும்பாதவரின் தவறான சிந்தனைப் போக்கையே அது பிரதிபலிப்பதுமாகும்.

முதலில் நகரங்களிலும், அரச அவைகளிலும், மேட்டுக்குடி மக்கள் இடத்தும் ஆரியருடைய செல்வாக்குப் பெருகலாயிற்று.

---

228 புறம். 195:6-9
229 Supra, No. 176
230 Nilakanta Sastri, K.A., *The Culture and History of the Tamils*, Firma K.L. Mukhopadyag, Calcutta, 1964, p. 7

சமயத் துறையில்தான், எளிதில் அவர்கள் செல்வாக்குப் பெற்றுள்ளனர். இதற்குக் காரணம் 'வைதிக சமயத்தின் தூதுவர்களாக அவர்கள் (சிறுசிறு கூட்டமாகத்) தமிழகத்திற்குள் நுழைந்தமை யாகும். முதலில் அரசரையும் நகரத்துச் செல்வமும் செல்வாக்கு மிக்க மக்களையும் தங்கள் 'புதுமை நாகரிக'த்தை ஏற்றுக்கொள்ளுமாறு செய்வதற்கு ஆரியர்கள் அரும்பாடுபட்டுள்ளதைச் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன. பையப் பைய அவர்களுடைய பண்பாட்டு ஊடுருவல் வெற்றிபெற்றதன் விளைவினைக் கலித்தொகை, பரிபாடல், பதிற்றுப்பத்துப் போன்ற நூல்களில் தெளிவாகக் காணலாம். பிற சங்க நூல்களில் அருகிய வழக்காக ஒரு சில பாடல்கள் இதற்குச் சான்று பகருகின்றன.

'சங்ககாலத் தமிழர் வாழ்க்கை, ஆரியமயமாக இருந்தது. வேத வேள்விகள், பழக்கவழக்கங்கள் சிறப்புமிக்கனவாகப் போற்றப்பட்டன. அவற்றை யாரும் எதிர்க்கவில்லை. ஒருவகைக் கலவை நாகரிகமாகவே சங்ககால நாகரிகம் காட்சி தருகிறது'[231] எனும் கருத்து இங்கு ஆராயத்தக்கதாகும். நாம் மேலே கண்ட 'ஆரியருக்கு முற்பட்ட தமிழருடைய வாழ்க்கை முறை', இந்த வரலாற்று அறிஞரின் கருத்து 'உண்மை அன்று' என்பதை மெய்ப்பிக்கப் போதிய சான்றாகும்.

சங்க காலத்தின் கடைப் பகுதியில் (கி.பி. 250 அளவில்) வடவருடைய செல்வாக்குப் பெருகியது. ஆனால், அது அரசியல், சமயவாழ்வு ஆகிய துறைகளையே பெரிதும் தாக்கியது. "சங்கப் பாடல்களில் 'வைதிக சமய எதிர்ப்பு'க்குரிய சான்றுகள் காணப்படவில்லை. எனவே, சங்ககாலத் தமிழர்கள் வைதிக சமயத்தையும் வடமொழியின் வழிப்பட்ட பண்பாட்டையும் தயக்கம் இல்லாமல் விருப்பத்தோடு ஏற்றுக்கொண்டனர்"[232] என்னும் கூற்று முற்றிலும் பொருந்தாது. முதலாவதாகச் சங்க இலக்கியம் நிலப்பிரபுத்துவ சமுதாய வாழ்க்கையைப் பிரதிபலிப்பது. 'அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி' என்னும் பழமொழிக்கேற்ப, சமுதாயத்தின் மேல்தட்டில் இருந்தவர்களுடைய எண்ணங்களையும், உணர்வுகளையும், நம்பிக்கைகளையும் எதிரொலிக்கும் வகையிலேயே அச் சமுதாய இலக்கியம் அமைந்துள்ளது. எனவே, சமுதாயத்தின் உறுப்புகளாக இருந்த எல்லா வகையான மக்களுடைய ஒருமித்த உள்ளவுணர்வுகளையே கலித்தொகையும், பரி

231 Ibid p. 7

232 Nilakanta Sastri, K.A., *Sangam Literature: Its Cults and Cultures*, Swathi Publications, Madras, 1972, p. 46

பாடலும், பிற நூல்களும் பிரதிபலிக்கின்றன எனக் கூற இயலாது.

அக்காலத்திய சிறப்புமிகு சிந்தனையாளர்கள் சிலர் புதுமைப் போக்குடைய எண்ணங்களையும், நம்பிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும் தங்களுக்கேயுரிய பெருந்தன்மையுடன் எதிர்த்துள்ளதைச் சங்கப் பாடல்கள் சிலவற்றில் நாம் காண முடிகிறது. எனவே, 'வைதிக எதிர்ப்பு' திட்டமிட்ட ஓர் இயக்கமாக நடத்தப் பெறவில்லை எனக் கூறுவதே பொருந்தும்.

'உலகம் நிலையில்லாதது; இளமை நிலையில்லாதது; யாக்கை நிலையில்லாதது; செல்வம் நிலையில்லாதது'[233] என்பதைச் சங்ககாலத்து மக்கள் அறிந்திருந்தனர். ஆனால், அதற்காகப் பயந்து, அவர்கள் முற்றும் துறந்த முனிவர்களாகவோ, துறவிகளாகவோ ஆகிவிடவில்லை; காட்டிற்கு ஓடிவிடவில்லை.

'ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பதுஒன்று இல்.'[234]
'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே.'[235]
'புகழெனின் உயிரும் கொடுக்குவர்'[236]

என்னும் பாடற்பகுதிகளில் நிலையில்லா உலகில், புகழை நிலைநிறுத்திச் செல்லுமாறு சான்றோர்கள் அறிவுறுத்துவதைக் காணலாம். இங்கு 'வாழ்வாவது மாயம்' என்னும் கொள்கைக்கு எதிராக, 'வளமாக வாழ்க! நலமாக வாழ்க! இவ்வுலகில் உங்கள் வாழ்க்கையின் பயனாகிய புகழை நிலைநிறுத்திச் செல்லுக!' என்னும் எண்ணம் மேலோங்கி நிற்கிறது. இது தமிழருடைய சிந்தனைப்போக்கின் தனித்தன்மையைக் காட்டுகிறது.

'அறம் செய்தால்—இப்பிறவியில் புண்ணியம் செய்தால்—அடுத்த பிறவியில் உயர்ந்த சுவர்க்க வாழ்வு கிடைக்கும்' என்பது வடவருடைய கொள்கையாகும். இதனைத் தமிழ்ச் சான்றோர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை!

'இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்
அறவிலை வாணிகன் ஆய்அலன் ; பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப்பட் டன்றுஅவன் கைவண் மையே'[237]

---

233 புறம். 165:1-2;
மணிமே. 22:135-136;
நாலடி. அதி. 2, 3, 1;
குறள். 333

234 குறள். 233
235 புறம். 165:1-2
236 ஷை 182:5
237 ஷை 134

என்னும் பாடலின் கருத்து, இங்கு ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும். ‘ஒன்றைக் கொடுத்து மற்றொன்றைப் பெறுவது’ வாணிக நோக்கு. இந்தப் பிறவியில் அறம் செய்தால் மறுபிறவியில் பயன்படும் என்னும் எண்ணத்தோடு அறம் செய்வோர் ‘அறத்தை விலைகூறி விற்கும் வாணிகரே’யாவர். இதைவிடப் பெருந்தன்மையான வைதிக எதிர்ப்பு வேறு எப்படி இருக்க இயலும்? இதையே மற்றொரு சான்றோர்,

> ‘எத்துணை யாயினும் ஈதல் நன்றுஎன
> மறுமை நோக்கின்றோ அன்றே!
> பிறர் வறுமைநோக் கின்று அவன் கைவண் மையே!’[238]

என்று அறிவிக்கின்றார்.

‘வறுமையால் வாடுவோருடைய துன்பத்தைப் போக்க உதவுக! அறம் செய்க! கொடுத்து உதவுவதே சிறந்த நெறி! நம்முடைய பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் பன்னெடுங் காலமாகப் போற்றிப் பின்பற்றிவரும் சிறப்புமிக்க நன்னெறி! அதை நாம் பின்பற்றுவோமாக! வாணிக நோக்குடன் அறம் செய்யும் இந்த அயலவர் வழக்கம் நமக்கு வேண்டா!’ எனும் கருத்துகள் மேற்கண்ட புறநானூற்றுப் பாடல்களில் பொதிந்து கிடக்கின்றன. இதையே வெளிப்படையாக,

> ‘நல்லாறு எனினும் கொளல்தீது; மேலுலகம்
> இல்!எனினும் ஈதலே நன்று’[239]

என்று வள்ளுவர் அறிவிக்கின்றார். ‘மேலுலகம் (சுவர்க்கம்) கிடைக்கும் என்பதற்காகத் தருமம் செய்யச் சொல்லுகிறார்கள். நீ அதற்காக அறம் செய்யாதே’ என்று அவர் அறிவுறுத்துகிறார். இங்கு வடவருடைய நம்பிக்கை தகர்க்கப்படுகிறது அன்றோ?

இதற்குமேல், திருவள்ளுவர் இக் குறட்பாவில் கடுமையான தாக்குதல் ஒன்றைச் செய்துள்ளார். வைதிகப் பிராமணர்களுடைய கடமைகளுள் ஒன்று, ‘பொருளைப் பிறரிடம் கையேந்திப் பெறுவது’ நல்லவழி என்றே—மதிப்பிற்குரிய செயல் என்றே—தரும சாத்திரங்கள் கூறுகின்றன. திருவள்ளுவர் இதற்கு உடன்படவில்லை. ‘யாசிப்பது நல்லவழி என்று சிலர் சொல்லலாம். ஆனால், அதுவும் தீமை பயக்கும். எனவே,

---

238 புறம். 114;13-15   239 குறள். 222

கொடுத்து உதவுவதே சிறந்தது! போற்றத்தக்கது!' என்னும் கருத்தமைய,

'நல்லாறு எனினும் கொளல்தீது !'

என்று அவர் எச்சரிக்கிறார்.

மனிதரிடையே பிறப்பு அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிப்பது சங்ககாலத் தமிழர் அறியாதது. அதாவது, 'வருணாசிரம' நெறி அடிப்படையில் பூணூல் அணிவதற்குரிய தகுதியும் உரிமையும் வாய்ந்தவர்கள் சத்திரியர், பார்ப்பனர், வைசியர் எனும் மூவகைச் சாதியினராவர்; அவர்களே உயர்ந்தோர். மற்றவர்கள் எல்லாம் 'சூத்திரர்' எனும் தாழ்ந்த சாதியினராவர் எனும் வைதிக சமயத்தினரின் சாதிப் பாகுபாட்டு முறையினைத் தமிழ்ச் சமுதாயத்தில் வடமொழிப் பண்பாட்டினர் சங்க காலத்தின் பிற்பகுதியில் புகுத்த முயன்றனர். இதனைத் திருவள்ளுவர் போன்ற தமிழ்நாட்டு அறவோர்கள் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.'[240]

'மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்.'[241]

'மறப்பினும் ஓத்துக் கொளலாகும்; பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.'[242]

அரசர்களிடம் செல்வாக்குப் பெற்று வேள்விகள் செய்து அவர்களுக்குப் புண்ணியம் தேடித் தருவதற்கு வைதிக சமயத்தினர் முயன்றுள்ளனர். அதே சமயத்தில், தங்கள் வருணாசிரம தருமத்தையும் புகுத்துவதற்கு அவர்கள் ஆவன செய்துள்ளனர். பிறப்பு அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் 'வருணாசிரம தரும'த்தை இடித்துரைத்த வள்ளுவரே, 'உயிர்க்கொலையும் புலைப்பசியும்' வாய்ந்த வேதவேள்விகளைச் சாடியுள்ளார்.

'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.'[243]

இவை யாவும், சங்ககாலத்தில் இரண்டாவது காலகட்டத்தில் (கி.பி.150-250)வைதிக சமயத்தினர் தங்கள் வருணாசிரமச் சாதி

---

240 குறள். 972
241 ஷை 973
242 ஷை 134
243 ஷை 259

முறையையும், வேதவேள்விகளையும், 'அடுத்த பிறவியில் ஆதாயம் கிடைக்கும் அதற்காக இந்தப் பிறவியில் தருமம் செய்க!' என்னும் வாணிக முறை அறச்செயலையும் தமிழ்மக்கள் இடையே புகுத்தியபொழுது எழுந்த எதிர்ப்பினை வெளிப் படுத்துகின்றன. எனவே, 'ஆரிய நாகரிகத்தைச் சங்ககாலத் தமிழர் மனமுவந்து ஏற்றுக்கொண்டனர்' என்னும் கூற்று, மேற் போக்கான முடிவு என்பதனை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது.

அடுத்து, 'சங்ககாலத் தமிழ்ப் பண்பாடு, ஆரியமயமாக விளங்குகிறது' என்னும் கருத்தும் பொருத்தமற்றதாகும். சங்க நூல்களில் வேதத்தை 'மறை', 'கேள்வி', 'வாய்மொழி', 'முது மொழி', 'எழுதாக் கற்பு', 'அந்தணர் அருமறை', 'நான்மறை' என்னும் தொடர்களால் சுட்டியுள்ளனர். வேத வேள்விகளைப் பற்றியும் வேள்வித்தூண் பற்றியும், முத்தீ வளர்த்தல் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. அரசர்கள் 'இராசசூயம்' போன்ற வேள்விகளைச் செய்துள்ளனர். 'வேற்றுமை தெரிந்த நாற்பால்' என்று நால்வகைச் சாதிமுறையும் குறிப்பிடப்படுகிறது. பார்ப் பனர் போற்றப்படுகின்றனர். மறுபிறப்பு, துறக்கம், நரகம் பற்றிய பல செய்திகள் பேசப்படுகின்றன. ஆரியத் தெய்வங் களைத் தமிழருடைய தெய்வங்களோடு இணைத்தும் ஒன்று படுத்தியும் புதுவடிவம் கொடுக்கப்பட்டுள்ளன[244] என்பது உண்மை. இதனை மறுப்பார் இல்லை!

ஆனால், இவை யாவும் சங்ககாலத்தின் பிற்பகுதியில் உண் டானவை என்பதை மூடி மறைத்துவிட முயலுவது அறமாகாது. இரண்டாவதாக, இவை நகரத்து மக்களுடைய வாழ்க்கையில் புகுத்தப்பட்ட புதுமைப்பாங்குகள். 'இவற்றைப் பின்பற்றுவது மதிப்பைத் தரும்' என்று மேட்டுக்குடி மக்கள் நினைத்து இருக்க லாம்; அதனால் இவற்றைப் பின்பற்ற முயன்று இருக்கலாம். சமயப் பழக்கவழக்கங்களையும் நகரவாழ்க்கை முறைகளையும் பாடிய புலவர்கள் அந்தப் புதுமை இயல்புகளைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். ஆனால், இக் கூறுகள், அன்றைய தமிழ் நாகரிகத்தின் இயல்புகளில் எத்தனை விழுக்காடாக இருந்திருக்க இயலும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 'சங்ககாலத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்' என்னும் தலைப்பில் இதுவரை யில் நாம் கண்டவை அனைத்தும் தமிழர் நாகரிகத்தின் சிறப்பு இயல்புகளேயாகும். அச் சிறப்பு இயல்புகளோடு, வடவாரியப்

---

244 சுப்பிரமணிய சாஸ்திரி, பி.எஸ்., 'சங்க நூல்களும் வைதிக மார்க்க மும்', திருச்சி, 1951, பக். 2-70

பண்பாட்டுக் கூறுகளை ஒப்பிடுவோமானால், பத்து விழுக்காடு கூட, ஆரிய நாகரிகக் கலப்பு உண்டாகி இருந்ததாகக் கூற இயலாது! பிற்காலத்தில் இது மிகுதிப்பட்டது. எனவே, 'சங்க காலத் தமிழர் நாகரிகம் ஆரிய மயமான நாகரிகம்' எனக் கூறுவது உண்மைக்கு மாறுபட்டதாகும். சில ஆரிய நாகரிகப் பண்புகள் செல்வாக்குப்பெறத் தொடங்கின. அவை பத்து விழுக்காட்டிற்கும் குறைவாக இருந்தமை இவ்வாய்வினால் புலனாகிறது.

பண்டைத் தமிழருடைய வாழ்வியல் நோக்கில் சமண, பௌத்த சமயத்தின் தாக்கத்தால், 'துன்பியல் நோக்கு' மெல்ல மெல்ல நுழையலாயிற்று. இது மூன்றாவது (கி.பி. 250-400) கால கட்டமாகும். 'வினையின் வந்தது வினைக்கு விளைவாயது என்னும் போக்கில், 'அவலக் கவலை கையாறழுங்கல், தவலா உள்ளம் தன்பால் உடையது, மக்கள் வாழ்க்கை இதுவென உணர்க !'[245] என்னும் எண்ணப்போக்கு சிலப்பதிகாரம், மணிமேகலை காலத்தில் தோன்றியதாகும். 'துறவு நெறியே' சிறந்தது எனும் உணர்வினை ஊட்டுவதற்கு அவர்கள் முயன்றுள்ளனர். ஆனால், இதற்கு வெளிப்படையாக எதிர்ப்பு இயக்கம் தோன்றியதைச் சமய மலர்ச்சிக் காலத்தில் (கி.பி. ஏழாம் நூற்றாண்டு) நாம் காணுகின்றோம்.

இம் மூவகைக் கால கட்டங்களிலும், 'தமிழர் நாகரிகமும் பண்பாடும்' வளர்ந்து சிறந்துள்ளன. இவற்றின் அடிப்படைப் பண்புகளான பிறப்பால் உயர்வு தாழ்வு அற்ற நிலை, இல்வாழ்க்கையின் மாட்சி, விருந்தோம்பலின் சிறப்பு, கலையுணர்வுமிக்க வாழ்க்கை, முருக வழிபாட்டு நெறி, சக்தி வழிபாட்டு நெறி, இவ்வுலக வாழ்க்கைப் பற்று, கொடைத்திறன், கடலக வாழ்வு, ஊராட்சி முறை, அனைத்துலக நோக்கு, மனிதநல நாட்டம் எனும் விழுமிய நாகரிகப் பண்புகள் யாவும் மேம்பாடு உடையனவாகவே போற்றப்பட்டன; இன்றும் போற்றப்பட்டுவருகின்றன.

பண்டை உலகத்தின் சிறப்புமிகு நாகரிகங்களோடு, சங்க காலத் தமிழர் நாகரிகத்தை ஒப்பிட்டு நோக்குகின்றபொழுது, சிந்தனைப் போக்காலும், கலையுணர்வாலும், ஆட்சிமுறையின் சிற்சில கூறுகளாலும் கிரேக்க நாகரிகத்தையும், அன்றாட வாழ்க்கை முறைகளாலும், போர்த்துறைப் பயிற்சியாலும் உரோமானியநாகரிகத்தையும் பேரளவிற்கு ஒத்ததாகத் தோன்றுவதைக் காணுகின்றோம்; பழமைப்பற்று, வேளாண்மைப்

245 மணிமே. 4:112, 118-120

பொருளாதாரம், ஆட்சிமுறை, அன்றாட வாழ்க்கை நிலை, சிந்தனைப்போக்கு முதலியவற்றில் ஹான் அரச மரபினர் (கி.மு. 206-கி.பி. 220) காலத்திய சீன நாகரிகத்தோடு மிகவும் நெருக்கமான ஒப்புமைப் பண்புகளைக் கொண்டதாக இது விளங்குகிறது.

சங்ககாலத் தமிழர் நாகரிகம் ஆடம்பர ஆரவாரம் அற்றது! மக்களை மக்களாக மதித்துப் போற்றும் மனிதநலன் நாடும் நாகரிகமாகும்! பண்டைத் தமிழ்ப் பண்பாடு 'உலகம் ஒரு குடும்பம்!' என்னும் அனைத்துலக ஒருமைப்பாட்டை உலகிற்கு உணர்த்துவதாகும்!

சங்ககாலச் சான்றோர் கண்ட வருங்கால உலகம்

சங்ககாலத் தமிழருடைய நாகரிகத்தின் சிறப்பு இயல்புகள் சிலவற்றைக் கண்டோம். பகற்கனவு காண்பதிலே காலத்தைக் கழிக்காத துடிப்புமிகு உள்ளவுரனும், செயல்திறனும் வாய்ந்த மக்களைக் கொண்டதாகச் சங்ககாலச் சமுதாயம் காட்சி தருகிறது. ஒளிமிகு வாழ்வும், வீரவுணர்வும், சான்றாண்மையும் நிறைந்த வாழ்க்கையை நாடும் மக்களாக அன்றைய தமிழர் வாழ்ந்துள்ளனர்.

அவர்கள் வாழ்க்கையின் விழுமிய குறிக்கோள்களாகப் போற்றிய இலட்சியங்கள் பல. அவற்றை வாழ்க்கையில் கடைப் பிடித்து வாழ்ந்த பெரியோர்கள் பலர், அவர்கள் இடையே வாழ்ந்தும் வந்தனர். அவர்களை 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்'[246] என்று போற்றினர். அச் சான்றோர்கள் பண்டைத் தமிழ்ச் சமுதாயத்திற்குத் தேவையான வாழ்க்கைத் தத்துவம் ஒன்றை நன்கு வகுத்துத் தந்துள்ளனர். அவ் வாழ்க்கைத் தத்துவம், 'மறு உலகை'—துறக்கத்தை—அடைவதற்குரிய வழிவகைகளைக் கூறுவதாக அமையவில்லை; வாழ்க்கையைத் துன்பியல் நோக்குடனும் அணுகவில்லை. ஆனால், முற்றிலும் நடைமுறைக்கு உகந்த வாழ்க்கை நெறியைக் காட்டுவதாக வகுக்கப்பட்டுள்ளதைக் காணுகின்றோம். அவர்களுடைய வாழ்க்கைக் கோட்பாடு குறுகிய நோக்குடையது அன்று; தனிமனிதர் சிலரின் செழிப்பிற்கும் சிறப்பிற்கும் வழிகாட்டுவதும் அன்று; அது அனைத்துலக எண்ணப்போக்கும், நடைமுறையில் உண்டாகும் சிக்கல்களைத் தீர்க்கும் திறனும் வாய்ந்

246 புறம். 191:6

தது. படைப்பு ஆற்றலின் உயர்ந்த கொடுமுடியை எட்டிப் பிடித்த சங்ககாலத் தமிழரின் வாழ்க்கை அறவழியில் சிறப்புறவும், உள்ளொளி பெற்று உயர்வுறவும், ஆன்மிக அனுபவத்தில் ஆழ்ந்து இன்புறவும் அச் சான்றோர்கள் சிறப்புமிகு வாழ்க்கைத் தத்துவத்தை வகுத்து அளித்துள்ளனர்.

அல்லற்பட்டு, ஆற்றாது, அழுது புலம்பும் மனித குலத்திற்கு அவர்களுடைய 'நற்செய்தி' இன்றும் பிணிதீர்க்கும் மருந்தாகப் பயன்படுகிறது; என்றும் வாழ்க்கையைச் செம்மைப்படுத்திச் சிறப்புறத் தூண்டும் உந்துதல் சக்தியாக விளங்கும் பேராற்றல் வாய்ந்ததாகவும் விளங்குகிறது; வாழ்க்கையில் எதையும் அளவாக மிதமாகச் சுவைக்க வேண்டும் என்னும் நடுவழிக் கோட்பாட்டை, 'உலகக் குடிமக'னுக்குப் பயன்படத்தக்க வகையில் அவர்கள் நன்கு அறிவுறுத்தியுள்ளனர்.

வாழ்க்கை, துன்பமும் இன்பமும் நிறைந்ததாகும். அதனைத் துய்க்கும்பொழுது துன்பத்தால் சோர்வுறலோ, இன்பத்தால் செருக்கு அடைதலோ வேண்டா;[247] துன்பம் நிறைந்ததே வாழ்க்கை! எனும் சோர்வினால் மனம் தளர்ந்துவிடாது, அதில் இடம்பெற்றுள்ள இனிமையைக் கண்டறிந்து, வாழ்க்கையில் நம்பிக்கையும் புத்துணர்ச்சியும் பெறவேண்டும் என்பதை,

'இன்னாது அம்மஇவ் வுலகம்!
இனிய காண்கஇதன் இயல்புஉணர்ந் தோரே!'[248]

என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

'வாழ்க்கை வாழ்வதற்கே! துன்பத்தைக் கண்டு துவள வேண்டா! வாழ்க்கையில் இன்பத்திற்கும் இடம் உண்டு! துன்பத்திடையே இன்பம் காணும் மனப் பண்பாட்டைப் பெற்றால், வாழ்க்கையில் நம்பிக்கை ஒளி உண்டாகும்! எனும் மகிழ்வு நலக்[249] கோட்பாட்டைப் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் போற்றியுள்ளமை இதனால் புலனாகின்றது.

'மக்களிடையே பிறப்பாலோ, செய்தொழிலாலோ வேற்றுமை பாராட்டக்கூடாது' எனும் நோக்கம் உடையவர்களாக அவர்கள் வாழ்ந்தனர். நாடாளும் வேந்தனுக்கும் காட்டிலே வேட்டையாடி வயிற்றுப் பிழைப்பை நடத்தும் வேட்டுவனுக்கும் இடையே

---

247 குறள். 627
248 புறம். 194:6-7
249 Optimistic view

பிறப்பினாலோ, செய்தொழிலாலோ 'உயர்வு தாழ்வு' கற்பிப்பது அறிவுடைமையாகாது! அவர்கள் உண்பதற்குத் தேவைப்படுவது நாழி (லிட்டர்) அரிசிச் சோறு! உடுப்பதற்குத் தேவைப்படுவன இரண்டு துண்டுகளே! இவற்றைப்போலவே வாழ்க்கையின் மற்றத் தேவைகளும் ஒத்த இயல்புடையனவாகும். எனவே, செல்வத்தை ஒருசிலர் சேமித்து வைத்துக்கொண்டு, தாங்களே வளமாக வாழவேண்டும் என்று நினைப்பது தவறு! செல்வத்தைப் பெற்றதன் பயன், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புவதேயாகும்[250] எனும் கருத்து, புத்துலகச் சிந்தனையைப்போல் ஒலிக்கிறது. இங்கே மனிதகுலச் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் எக்கால மக்களுக்கும் ஏற்றவகையில் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் எடுத்து உரைத்துள்ளமை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது! மனிதநல நாட்டம் சங்ககாலத் தமிழருக்கு உயிர் மூச்சாக இருந்ததை இப் பாடல் தெரிவிக்கிறது.

'உலகில் ஒற்றுமை நிலவவேண்டும்' மக்களிடையே இன்று காணப்படும் வெறுப்பும் பிரிவுகளும் ஒழிக்கப்படவேண்டும்! இதற்குரிய ஒரே வழி 'எல்லா மக்களும் அன்புடன் ஒன்றுபட்டு வாழவேண்டும்! அதற்கு ஆவன செய்யவேண்டும்!' என்று இன்றைய அறிஞர்கள் செயல்படத் துடிக்கின்றனர். இதற்குரிய வழி யாது?

> எமக்கு எல்லா ஊரும் சொந்த ஊர்தாம்; எல்லா மக்களும் உறவினர்தாம்; தீமையும் நன்மையும் பிறரால் வருவன அல்ல; துன்பம் உண்டாவதும், துன்பம் தீர்வதும் கூட இவைபோன்றவையே. சாவதும் புதுவது அன்றே! பிறந்தவர் இறந்துதான் ஆகவேண்டும்! 'வாழ்வது என்றும் நிலையானது; இன்பமானது' என மகிழ்ச்சி அடையத் தேவை இல்லை! யாதாகிலும் வெறுப்பு உண்டாகின்றபொழுது மட்டும் 'இவ்வுலக வாழ்வு துன்பம் உடையது!' எனச் சலிப்படைய மாட்டோம். மின்னுகின்ற மேகம் குளிர்ந்த மழையைப் பெய்வதால், எப்போதும் கல்லிலே மோதி ஒலித்துக்கொண்டு ஓடுகின்ற நீர்வளம் பொருந்திய பேராற்றிலே, நீர் ஓட்டத்தின் போக்கிலே, அதில் விடப்பட்ட தெப்பம் மிதவை– ஓடிக்கொண்டே இருக்கும். அதைப்போல, நமது அரிய உயிரும், நாம் செய்த வினைக்குத் தக்கவாறு இன்பமோ,

---

250 புறம். 189:7-8

துன்பமோ அடையும். இவ்வுண்மையை அறிஞர்களின் நூல்களால் தெளிவாக அறிந்தோம். ஆதலால், நன்மை செய்யும் பெரியோரைக் கண்டு வியப்பு அடையவும் மாட்டோம்! சிறியோரைப் பழிக்கவும் மாட்டோம்![251]

எனும் மனநிலையைப் பெற முயலுவதே மக்களுடைய குறிக்கோளாக அமையவேண்டும். அப்பொழுதுதான் 'உலகில் அமைதி நிலவும்! ஒற்றுமை தழைக்கும்!' என்பது சங்ககாலச் சான்றோரான கணியன் பூங்குன்றனாரின் உறுதியான நம்பிக்கையாகும். இத்தகைய 'ஓர் உலகம்' பற்றிய எண்ணம் சங்ககாலத் தமிழரிடம் அரும்பியதோடு அமையவில்லை! இன்றைய உலகப் பேரறிஞர்களின் எண்ணத்தில் எழுச்சியையும் இதயத்தில் மலர்ச்சியையும் உண்டாக்கும் விழுமிய இலட்சியமாக அது வீறுடன் விளங்கி வருவதையும் காண்கின்றோம்.

---

251 . புறம். 192

இயல் 4

அறிவியற் கோட்பாடுகள்

கல்லொடு மண்தோன்றிக் கவின்பெறாத அத்துணைப் பழங் காலத்திலேயே வாளை வடித்தெடுத்துக் கையில் ஏந்தும் பண் பாட்டினைத் தமிழன் கொண்டிருந்தான். கரிகாலன் காலத்தில் ஒரு கல்லணையும், இராசராசன் காலத்தில் ஒரு பெரிய கோயி லும் எழவேண்டுமானால் எந்த அளவிற்கு நம் நாட்டுப் பழம் பெரும் அறிஞர்கள் அடிநாள்தொட்டு அறிவியல்பற்றி ஆர்வத் துடன் எண்ணியிருத்தல் வேண்டுமென்று நம்மால் ஊகிக்க முடி கிறது. இன்று நம்மிடையே உள்ள இலக்கியங்களும் அவ்வுண் மையைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டுகின்றன. கண் ணுடையவர் எல்லோரும் காணலாம். காட்சித்திறனும் ஆராய்ச்சி உள்ளமும் இருக்கும் எந்த ஒரு நாட்டிலும் அறிவியல் தோன்றி வளரவே செய்யும். அறிவியல் கலையினை முற்றிலும் அயல் நாட்டுச் சரக்கு என்னும் அளவில் அறிமுகப்படுத்துவதோ, மேற் கத்திய நாடுகளின் தொடர்பு தமிழ்நாட்டில் ஏற்பட்ட பின்பே, விஞ்ஞானம் இங்கே தலைகாட்டத் தொடங்கிற்று என முடிவு செய்துவிடுவதோ வரலாற்றிற்கு முற்றிலும் ஒவ்வாத செயல் களாகும்.

உடல், உயிர்பற்றிய அறிவு

பல்வகைப் பொருள்களும் பல்வகை ஆற்றல்களும் நிறைந்து காணப்படும் மண், வான், வளி, தீ, நீர் என ஐம்பெருந் தொகுதி களாக நம் முன்னோர் பகுத்துக் கண்டனர். பேரண்டத்தின்[1] பகுதியாக உள்ள இவ்வுலகில் தோன்றி வளர்ந்து இனம்பெருக் கும் உயிர்ப்பொருள்கள் யாவற்றிலும் இவ்வைம்பெரும் கூறு களில் சிலவோ, பலவோ இடம் பெற்றுள்ளதையும் கண்டு தெளிந் தனர். தனிமப் பொருள் இணைந்து முன்னேறி வளர்ந்து வாழும் நிலையினையே அவர்கள் உயிர் என்று குறிப்பிட்டனர். உயிர் என்பது வாழும் இயல்புநிலையே என்ற தெளிவு தமிழர்க்கு

---

1 Universe

இருந்தது. வாழும் நிலையைக் கடந்துவிட்ட ஒரு நிலையையே அவர்கள் இறப்பு என்று குறிப்பிட்டனர். வாழாத நிலையிலிருந்து தனிமப் பொருள்கள் இணைந்து முன்னேறி வாழும் நிலையை எய்துவது போன்று வாழ்ந்துகொண்டிருக்கும் பொருள்களும் அந் நிலை கடந்து, பின் சிதைந்து தனிமப்பொருள்களாகிவிடும் என்ற தெளிவும் அவர்களுக்கு இருந்தது. இவ்வுண்மையினையே வள்ளுவரும்,

'உறங்கு வதுபோலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு'[2]

என உவமை தந்து விளக்குகிறார். இறப்பு என்னும் நிலை தவிர்க்க முடியாத ஒன்று என்பதையும் தமிழர்கள் நன்குணர்ந் திருந்தனர். அக் கருத்தினையே பின்னாளில் ஔவையாரும்,

'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ? மாநிலத்தீர்'[3]

என்று தெளிவுபடுத்திச் சொல்கிறார்.

மருத்துவக் கலை

இருந்தாலும் வாழ்வை நீட்டிக்க விரும்பின், அதற்கு அடிப் படையாக வேண்டப்படுகின்ற உடல்நலத்தைக் காத்து ஊனோம்ப உதவும் மருத்துவக் கலையினைத் தமிழர்கள் பெரிதும் போற்றி வளர்த்து வந்தனர். உடலிலுள்ள பொருள்களில் குறை தோன் றும்போது அதனை நீக்குவதென்பது வெளியிலிருந்து ஏற்ற பொருள் வந்து இணைந்து செயல்பட்டால்தான் முடியும் என்ற கொள்கையினராய்த் தமிழர் மருந்தினைக் கண்டனர். உடற் பொருளின் நிலைகுலைவைச் சமன்செய்ய வெளிப்பொருள்கள் சென்றிணைந்தேயாக வேண்டும் என்ற இக் கருத்தை,

'உடன்பிறந்தே கொல்லும் வியாதி உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்'[4]

என்று ஔவையாரும் பின்னாளில் வற்புறுத்தியுள்ளார். இந்த மருந்தைத் தேர்ந்து காண்பதிலும் தமிழர்கள் கொண்டிருந்த நுட்பம் எந்நாட்டினரும் போற்றிப் பாராட்டும் வகையில் இருந் தது. முதலில் நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோயின் காரணம் எது என்பதை ஆராய்ந்து, அதனைத் தணிப்பதற் குரிய வழியை ஆராய்ந்து, அந்த வழியையும் நோயாளியின்

---

2 குறள் 339
3 நல்வழி, 10
4 மூதுரை, 20

உடலுக்குப் பொருந்தும் வகையில் மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் தெளிந்திருந்தனர். இவ்வுண்மையினை,

'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்'[5]

என வள்ளுவர் மருந்து என்னும் அதிகாரத்தில் விளக்குகிறார். மேலும், மருத்துவக் கலைஞன் நோயுற்றவனின் வயதளவையும், நோயின் அளவையும், காலத்தையும் ஆராய்ந்தே செயல்பட வேண்டும் என்பதனை,

'உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்'[6]

என்னும் குறளில் வலியுறுத்தியுள்ளார். அனைத்திலும் மேலாக, மருத்துவ முறையினை மதிப்பிடும்போது நோயுற்றவனையும், நோய் தீர்க்கும் மருத்துவனையும், மருந்தினையும், மருந்தை அருகிலிருந்து கொடுக்கும் செவிலியையும் மனத்துட்கொண்டே காணவேண்டும் என்னும் உண்மையினையும் தமிழர்கள் அறிந் திருந்தனர் என்ற செய்தியை,

'உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து'[7]

என வள்ளுவர் வகைப்படுத்திக் கூறுகிறார். தமிழர்கள் மருத்துவக் கலையில் வல்லுநர்களாக இருந்ததோடு தீர்ப்பதிலும் தடுப்பதே நன்கு[8] எனக் கருதினர். முன்னர் உண்ட உணவு செரித்த வகையை உணர்ந்த பிறகு தக்க அளவில் உணவை உண்ணும் பழக்கத்தை மேற்கொண்டு வந்தால் உடம்பிற்கு மருந்து என ஒன்று தனியாக வேண்டுவதில்லை எனக் கண்டனர்.

'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்'[9]

என்னும் குறள் இதனைத் தெளிவுறுத்துகிறது.

அறிவியல் முறைமை

இயற்கைச் சூழலிலே வாழ்ந்த தமிழர் இயற்கை நிகழ்வு களைக் காண்பதிலும், அவற்றின் காரணம் அப்படி இருக்குமா, இப்படி இருக்குமா என்று ஐயுறுவதிலும், இப்படித்தான் இருக்க வேண்டும் என்று துணிவதிலும், அடுத்துத் தோன்றும் சான்று

---

5 குறள். 948
6 ஷை 949
ஷை 950
8 Prevention is better than cure
9 குறள். 942

களைக்கொண்டு துணிந்ததை உண்மையெனத் தெளிவதிலும் காலத்தைப் பயன்படுத்தி வந்தனர். காட்சி, ஐயம், துணிவு, தெளிவு[10] என்னும் நான்கு படிகளைக்கொண்ட தமிழரின் இந்த ஆய்வுமுறையினையே இன்று பேகனின் முறை[11] என்று அறிவியலார் அழைத்துப் பின்பற்றி வருகின்றனர். ஆராய்ச்சியில் ஈடுபடும் அறிவிற்கு இலக்கணம் கூறும் வள்ளுவரும்,

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு'[12]

என்றும்,

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு'[13]

என்றும் விளக்கம் தருகிறார். அறியாமை இருளை அகற்றிக் கொண்டு முன்னேறும் அறிவொளியின்முன் இன்னும் அறிய வேண்டிய பகுதியும் இருக்கிறது என்பதை உணரும் அறிவின்பத்தினையே தமிழர்கள் பேரின்பம் என அழைத்தனர். உள்ளத்தைக் கடந்து நிற்கும் பொருள்பற்றி அறிவைச் செலுத்தும்போது அதற்கு மேலும் உள்ளத்தைக் கடந்து நிற்கும் பொருள் இருப்பதைக் கண்டனர். அதனையே தமிழர் கடவுட்காட்சி என்று கொண்டனர். அத்தகைய கடவுட் காட்சியினை 'அறிதோறும் அறியாமை காண்டல்' என வள்ளுவர் அறிமுகப்படுத்தியுள்ளார். அறிவியல்வழி நின்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திருந்த தமிழர்கள் வானையும், விண்மீனையும், நாளையும், கோளையும், பொருளின் இயல்பையும், இயக்கத்தையும்பற்றி நன்கு ஆய்ந்து உள்ளனர் என்பதனை இன்று கிடைக்கும் இலக்கிய நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

வானநூல் அறிவு

சங்ககால மக்களின் வானநூலறிவு புறநானூறு, பரிபாடல், சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலிருந்து தெரியவருகிறது. புறநானூற்றுப் பாடல்களில் பல 'வானத்து மீன்'[14] 'வானம் மீன் பல பூப்பின்'[15], 'பன்மீன் இமைக்கும் மாக விசும்பின்',[16] 'வானத்து வயங்கித் தோன்றும் மீனினும்'[17] என்று கூறுகின்றன;

---

10 'Observation, Interpretation, Prediction and Realisation' என்பன அறிவியலின் அடிப்படை ஆய்வு முறைகளாகும்

11 Baconic Method

12 குறள். 355

13 ஷை 423

14 புறம். 109:9-10

15 ஷை 129:7

16 ஷை 270:1

17 ஷை 367:15-16

வானத்தில் காணப்பெறும் இம் மீன்கள் நாள்மீன், கோள்மீன் என இருவகைப்படும். பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனைப் பொருள்மொழிக்காஞ்சியாகப் பாடிய மாங்குடி மருதனார்,

'நின்று நிலைஇயர்நின் நாண்மீன் நில்லாது
படாஅச் செலீஇயர்நின் பகைவர் மீனே'[18]

எனப் பாடியுள்ளார். இதன் பொருள் 'நின்று நிலைப்பதாக நினது நாளாகிய மீன்; நில்லாது பட்டுப் போவதாக நின் பகைவருடைய நாளாகிய மீன். நினது நாளாகிய மீன் என்பது நீ பிறந்த நாளாகிய மீன் என விரியும். ஒருவர் பிறந்த நாளன்று விண்ணில் மதிநின்ற இடத்தில் இருந்த மீன்தான் நாள்மீனாகும்; அது நின்று நிலைப்பதாக என்று கூறுவது, நீ நீடு வாழ்வாயாக என வாழ்த்துவதாம். சங்ககால அறிஞர்கள் விண்ணில் மதி செல்லும் வட்டத்தை இருபத்தேழு பிரிவுகளாகப் பிரித்து, அப் பிரிவுகளை அறிந்துகொள்ளும் அடையாளங்களாக இருபத்தேழு விண்மீன் தொகுதிகளைக் குறித்தமைத்தனர்.[19] இந்த நாள்மீன்கள் இயற்கை ஒளியுடையவை. அவை ஒவ்வொன்றும் நாம் காணும் சூரியனைப்போல் ஒவ்வொரு சூரியன் என ஆராய்ச்சியாளர் கூறுவர். இயற்கை ஒளியுடைய நாள்மீன்களின் ஒளியைக் கொண்டு விளங்குவன கோள்மீன்கள் எனப்பெறும்.[20] 'கோள் மீன் அன்ன பொலங்கலத் தளைஇ' என்று புறநானூற்றில் கூறப் பட்டுள்ளது.[21] ஞாயிற்றின் ஒளியைக் கொள்ளுவதால் ஒளியுடன் காணப்பெறுவன கோள்கள். அவை திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்பவையாகும். இராகுவும் கேதுவும் நிழற்கோள்கள் எனப் பெறுகின்றன. சூரியன் மற்றக் கோள்களுக்கு ஒளி தருவதாகும். சூரியனையும் சங்ககாலத்து மக்கள் மற்றக் கோள்களுடன் சேர்த்தனர். நாம் வாழும் பூமியும் ஒரு கோளே. அது ஞாயிற்றைச் சுற்றி வருகின்றது. ஆனால் பூமி நிலையாக இருப்பதுபோலவும், சூரியன் நிலைபெயர்ந்து பூமியைச் சுற்றி வருவதுபோலவும் நாம் காண்கிறோம். ஞாயிற்றின் பெயர்ச்சி என்பது உண்மையில் பூமியின் இடப்பெயர்ச்சியே. சூரியன் அசையாது நிற்பதாக இருந்தாலும், பூமியின் சுழற்சியினால் அசைந்து செல்வதுபோலக் காணப்பெறுகிறது உண்மையில் சுழல்வது உலகமே. தமக்கென்று இயற்கை ஒளியில்லாமல், ஞாயிற்றின் ஒளியையே கொள்ளும் கோள்களாகிய திங்கள்,

18 புறம். 24:24-25
19 'புறநானூற்றுச் சொற் பொழிவுகள்', பக். 239
20 ஷெ
21 புறம். 392:17

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய கோள்களுக்கு அருகில் இருந்தாலும், விட்டுவிட்டு மின்னாமல் மற்றக் கோள் களுக்கெல்லாம் பிறப்பிடமாகி, மற்றக் கோள்களெல்லாம் தன் னைச் சுற்றிவர நடுவே அசையாது விளங்குவதாகிய சூரியன் 'கோளரசு' என்னும் பெயர்பெற்றது.[22]

சூரியனும் சந்திரனும்

சூரியனிடமிருந்து சிதறிய பூமியிலிருந்து சிதறி வீழ்ந்த ஒரு சிறு உருண்டையே சந்திரனாகும். ஆகையால் அது சூரியனைச் சுற்றுகிறது; தனக்குப் பிறப்பிடமாகிய பூமியையும் சுற்றுகிறது. கோள்மீனாகிய திங்கள் வானில் அன்றன்று நிற்கும் நிலையே 'நாள்மீன்' என்று கூறப்படுகிறது. திங்கள் சூரியனோடு ஒன்று சேர்வதும், பிரிந்து எதிர்ப்பக்கத்தை அடைவதும் ஆகும்பொழுது அதன் ஒளி நாளுக்கு நாள் வளர்ந்து முழுவட்டமாகக் காணப் பெறுகிறது. இங்ஙனம் சந்திரனுடைய வளர்பிறையைப் பற்றிப் புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது.

'மாகவிசும்பின் வெண்டிங்கள்
மூவைந்தான் முறைமுற்ற'[23]

என்னும் வரிகள் சந்திரன் பதினைந்து நாள்களில் முழுமைஒளி பெறுகிறதென்பது பெறப்படுகிறது. சந்திரனுடைய ஒளி வளர் வது வளர்பிறையென்றும், தேய்வது தேய்பிறை என்றும் சொல் லப்பெறும். 'எண்ணாட் டிங்கள் அனைய'[24] என்னும் புற நானூற்றுச் சொற்றொடர்க்கு எட்டாம் புக்கத்துப் பிறை போலும் என்று உரை கூறப்பெற்றுள்ளது. மூன்றாம் பிறை, நான்காம் பிறை என்னும் உலக வழக்கும் ஈண்டுக் காணத் தகுவ தாகும். சூரியனுடைய ஒளியைப் பெற்ற சந்திரன் முழுமதி அல்லது உவவுமதி எனவும் பெயர் பெறும்.

'உவவுமதி உருவின் ஓங்கல் வெண்குடை' எனப் புறநானூற் றின் வரியும் காணப்படுகிறது.[25] உவாமதியன்று அதாவது, முழு நிலவன்று ஞாயிறும் திங்களும் எதிர்எதிராக நிற்கும். சந்திரன் தோன்றும்போது சூரியன் மறையும் இச்செய்தி புறநானூற்றில்,

'உவவுத் தலைவந்த பெருநாள் அமயத்து
இருசுடர் தம்முள் நோக்கி ஒருசுடர்
புன்கண் மாலை மலைமறைந் தாங்கு'[26]

எனக் கூறப்பட்டுள்ளது.

---

22 'புறநானூற்றுச் சொற் பொழிவுகள்' புக். 237
23 புறம். 400;1-2
24 ஷை 118:2
25 ஷை 3:1
26 ஷை 65:6-8

வெள்ளி அல்லது சுக்கிரன்

வெள்ளி அல்லது சுக்கிரன் என்ற கோள்மீன், விட்டுவிட்டிமைக்காது, கண்ணாடிபோலச் சூரியனிடமிருந்து தான் பெற்ற ஒளியைக் காட்டும். ஆறுமாதங்களுக்கு மாலையிலும், ஆறு மாதங்களுக்கு விடியற்காலையிலும் காணப்படும். காலையிற் றோன்றும் வெள்ளி, 'விடிவெள்ளி' எனப்படுகிறது. புறநானூற்றில், 'வெள்ளி தோன்ற புள்ளுக்குரல் இயம்ப', 'வெள்ளியும் இருவிசும் பேர்தரும்', 'மதிநிலாக் கரப்ப வெள்ளி ஏர்தர' என்னும் வரிகள் விடிவெள்ளியைக் குறிப்பனவாகும்.[27] வெள்ளி மழைக் கோள் ஆகும். இது தெற்கே விலகி இருப்பது மழை இன்மைக்கு அறிகுறியாகும்.

> 'வெள்ளி தென்புலத் துறைய விளைவயற்
> பள்ளம் வாடிய பயனில் காலை'[28]

என வரும் அடிகளைக் கொண்டு காணலாம். சுக்கிரன் தென் திசையில் விலகிப்போவது மழைவளம் குறைவதற்கு அறிகுறியாகும். அவ்விதமே தூமம் என்னும் வால்வெள்ளி தோன்றுவதும், சனி என்னும் கோள் புகைவதும் தீய குறிகளாகக் கருதப் பெற்றன.

> 'மைம்மீன் புகையினும், தூமம் தோன்றினும்
> தென்திசை மருங்கில் வெள்ளி ஓடினும்
> வயலக நிறையப் புதற்பூ மலர'[29]

இப் பாட்டின் அடிக்குறிப்பாகப் பின்வரும் செய்திகள் காணப் பெறுகின்றன. 'சனி கரிய நிறமுடையதாதலின் மைம்மீன் எனப் பெற்றது. சனி புகைதலாவது இடபம், சிம்மம், மீனம் இவற்றொடு மாறுபடுதலாகும். இவற்றுள் சனி தனக்குப் பகைவீடாகிய சிம்மராசியிற் புகின் உலகிற்குப் பெருந்தீங்கு விளைவிப்பன என்பதை, 'மகத்திற் புக்கதோர் சனிஎனக் கானாய்' என்னும் சுந்தரருடைய தேவார வரியினால் அறியலாகும். தூமம் புகைக் கொடியென்றும் கூறப்படும். தூமகேது என்பதும் இதுவே. இது வட்டம், சிலை, நுட்பம், தூமம் என்னும் கரந்துறை கோள்கள் நான்கனுள் ஒன்று. இதன் தோற்றம் உலகிற்குப் பெருந்தீங்கு விளைவிக்கும் என்பர்.[30]

---

27 புறம். 385:1, 397:1, 398:1
28 ஷை 388:1-2
29 ஷை 117;1-3
30 'புறநானூற்றுச் சொற்பொழிவுகள்,' பக். 240

இவ்வாறே ஞாயிறு வேறுபடத் தோன்றுவதும், எரிகொள்ளி விழுதலும் தீமை குறிக்கும் அடையாளங்கள் ஆகும். இச் செய்தி

'அலங்குகதிர்க் கனலி நால்வயின் தோன்றினும்
இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
அந்தண் காவிரி வந்துகவர்பு ஊட்ட'[31]

என்னும் அடிகள் சங்ககால மக்களின் வானநூலறிவிற்குச் சான்று பகர்கின்றன.

செவ்வாய்

இக் கோள் சிவந்த நிறத்தையுடையது. இதன் சிறப்பை மருத்துவன் தாமோதரனார் என்ற புலவர் 'முந்நீர் நாப்பண் திமிற்சுடர் போலச் செம்மீன் இமைக்கும் மாக விசும்பின்' என்று கூறுவார்.[32] இதன் பொருள் கடல் நடுவே தோன்றுகின்ற திமிலின்கண் இடப்பட்ட விளக்குப்போலச் செவ்வாய் மீன் விளங்கும் மாகமாகிய விசும்பினது செம்மீன் — திருவாதிரையும் ஆம்.[33]

வடமீன்

வடமீன் என்பது கற்பிற்கு எடுத்துக்காட்டாகக் கருதப் பெறும் அருந்ததியாகும். 'வடமீன் புரையும் கற்பின் மடமொழி' என்று மலையமான் திருமுடிக்காரியின் மனையாளின் சிறப்புக் கூறப்பெற்றுள்ளது.[34]

கணியன்

வானநூலறிவு கணிதத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆகையால் வானநூல் வல்லவர் கணியன், கணி என்று சங்க காலத்தில் அழைக்கப்பெற்றனர். பின்விளைவெல்லாம் கண்ணி யுரைப்பவன் கணியன் எனப் பெயர் பெற்றான்; பின்வருவன வெல்லாம் கண்ணியுரைக்கும் திறமையுடைமையால் கணியன் பூங்குன்றன் எனப் பெயர் பெற்றார். மூலம் என்ற நாளில் பிறந் தமையால் ஆவூர் மூலங்கிழார், ஐயூர் மூலங்கிழார் என்ற பெயர் கள் சங்ககாலத்தில் வழங்கியுள்ளன. கூடலூர் கிழார் என்ற புலவர் வானநூல் அறிவில் மேன்மையுற்றிருந்தார் என்பதை அவருடைய பாடல் ஒன்றன்மூலம் அறியமுடிகிறது. அதனை ஆராய்ந்து பார்க்கும்பொழுது சங்ககாலத்திய வானநூல் கலை யின் திறம் தெளிவாகிறது.

---

31 புறம். 35:6-8
32 ஷெ. 60:1-2
33 'புறநானூற்றுச் சொற் பொழிவுகள்', பக். 241
34 புறம். 122:8

'ஆடியல் அழற்குட்டத்து
ஆரிருள் அரைஇரவின்
முடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயம்காயப்
பங்குனி உயர்அழுவத்துத்
தலைநாண்மீன் நிலைதிரிய
நிலைநாண்மீன் அதன்எதிர் ஏர்தரத்
தொன்னாண்மீன் துறைபடியப்
பாசிச் செல்லாது ஊசி முன்னாது
அளக்கர்த்திணை விளக்காகக்
கனைஎரி பரப்பக் கால் எதிர்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்றால் விசும்பி னானே.'[35]

இதன் பொருள் பங்குனி மாதம் முதல் பதினைந்து நாள்களில் கார்த்திகை நட்சத்திரம் நிறைந்த நள்ளிரவில், உத்தரம் உச்சியிலிருந்து சாய, மூலம் எழ மிருக சீரிடம் மறைய ஒரு விண்மீன் கிழக்கும் வடக்கும் போகாது இடை நடுவே தீப்பொறி பரக்க விழுந்தது. இதைக் கண்ட புலவர் பெருமான் கூடலூர்கிழார், சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை அதன் ஏழாம் நாள் இறப்பன் என வானநூல் விதிப்படி எண்ணினார். அவர் நினைத்தபடியே அவ்வரசன் இறந்தனன். இப் பாடலிலிருந்து சங்ககாலத்திய வானநூலறிவும் அவ்வறிவினைக் கொண்டு கணியர்கள் எவ்விதம் பின்னர் நடக்கப்போவதை முன் கூட்டியே உணர்ந்தனர் என்பதும் தெளிவாகின்றன.

பரிபாடல் கூறும் வானநூலுண்மைகள்

மேற்குத் தொடர்ச்சி மலைகளில் பெருமழை பெய்து வையை ஆற்றில் வெள்ளம் பெருகுவதற்குச் சில கோள்நிலைகள் பற்றிய செய்திகள் பரிபாடலில் காணப்பெறுகின்றன. அப் பாட்டில், 'அகன்ற வானத்தின்கண் ஒளிபரப்பும் சந்திரனோடு கார்த்திகை, திருவாதிரை, பரணி ஆகிய விண்மீன்கள் முறையே இடபவீதி, மிதுனவீதி, மேடவீதி ஆகிய மூன்று வீடுகளிலும் $(3 \times 9) 27$ விண்மீன்களும் தங்குவது முறையாகும். இவற்றுள் வெள்ளிக்கோள் இடபராசியிலும், செவ்வாய்க்கோள் மேடராசியிலும், புதன் மிதுனராசியிலும் நின்றன. கார்த்திகை நாள் உச்சமாகிப் பொழுது விடிந்தது. வியாழன் என்ற குரு சனியின் இரட்டை வீடுகளாகிய மகர கும்பங்களுக்கு மேலே உள்ள மிதுன ராசியைச் சேர்ந்தது. சனிக்கோள் மகரராசியில் நிற்கச் சந்திர

35 புறம். 229:1-13

கிரகணம் உண்டாகியது. அகத்தியன் என்னும் விண்மீன் மிதுன ராசியைச் சேர்ந்தது. இவ்விதம் தோன்றிய கோள்களின் நிலைமையால் மேற்குத்தொடர்ச்சி மலைகளில் பெருமழை பெய்து வையை ஆற்றில் வெள்ளம் பெருகியது.[36]

இந் நிகழ்ச்சி கி.மு. 161ஆம் ஆண்டு கலி 2941, பிரமாதி ஆவணித்திங்கள் 12ஆம் நாள், வியாழக்கிழமை சதுர்த்தசி திதி அவிட்ட நட்சத்திரம் கூடிய நாளென்று வான நூலறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர்.[37] பரிபாடலில் கூறப்பெற்றுள்ள இச் செய்தி கொண்டு சங்ககாலத் தமிழகத்தில் நிலவின வான நூலறிவின் நுண்மையை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

பிறைநிலவுக் காட்சி

நிலவுலகின் தோற்றத்திற்கும் உயிர்களின் வளர்ச்சிக்கும் ஞாயிறே முதற்பொருள் என்பதனை உணர்ந்த தமிழர்கள், செஞ்ஞாயிற்றைச் சிவம் எனவும், அதன் அடியில் தேய்ந்தபடி சென்று ஒடுங்கிய திங்கள் வட்டம் அதனைக் கடந்து மீண்டும் வளர்பிறையாகி வளர்ந்துவரும் காட்சியினைப் பிறைசூடிய பெருமான் என்றும் அழைத்து மகிழ்ந்தனர். பிறையின் உருவத்தையும் தோற்றத்தையும் தமிழர்கள் நன்கு அறுதியிட்டுத் தெளிந்திருந்தனர். பிறையின் வெளிவிளிம்பு திங்களில் உள்ள மேடு பள்ளங்களுக்கேற்ப ஒளியும் இருளும் மாறிமாறி நீண்டும் குறைந்தும் படிந்திருப்பதால் அவ்வளவு ஒழுங்காக இராது. இதற்குச் சரிவான நிலப்பரப்பில் அமைந்து நீர் வற்றிக்கொண்டிருக்கின்ற அல்லது நிறைந்துகொண்டிருக்கின்ற வளைந்த கரையுடன் கூடிய ஏரியை உவமையாகக் கூறலாம். அத்தகைய ஓர் ஏரியை உயரமானதோர் இடத்தில் நின்று பார்த்தால் ஏரியின் வளைந்த கரையானது பிறையின் வெளிவிளிம்பு போன்றும், மேடுபள்ளங்களுக்கேற்ப நீர் நீண்டும் சில இடங்களில் குறுகியும் இருப்பதால் அமைகின்ற நீர்விளிம்பு பிறையின் உள்விளிம்பு போன்றும் இருக்கும் நுட்பத்தைத் தமிழர்கள் உணர்ந்திருக்கின்றனர் என்பதனை,

'எண்ணாள் திங்கள் அனைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளம்'[38]

என்னும் புறநானூற்று அடிகளால் அறிகிறோம்.

---

36 பரிபாடல் 11:1-15
37 பரிபாடல் கழகப் பதிப்பு 1969, பக். 185
38 புறம். 118:2-3

வளர்பிறை நாள்களில் ஞாயிறு எழுவதற்கு முன்னர்த் திங்கள் சென்று மறைந்துவிடும் உண்மையினை,

'வான்கண் விழியா வைகறை யாமத்து
மீன்திகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்
காரிருள் நின்ற கடைநாட் கங்குல்'[39]

எனவும், முழுமதி நாளில் திங்கள் வட்டமும், ஞாயிற்று வட்டமும் எதிர் எதிராக இடம்பெற்றுத் தோன்றும் வானநூல் உண்மையினை,

'குணதிசை மருங்கின் நாண்முதிர் மதியமும்
குடதிசை மருங்கில் சென்றுவீழ் கதிரும்
வெள்ளிவெண் தோட்டொடு பொற்றோ டாக'[40]

புவிநல்லாளுக்குப் பொருந்தித் தோன்றின எனவும் தமிழர்கள் விளக்கிச் சென்றுள்ளார்கள். செஞ்ஞாயிற்றைச் சிவமென்றும், ஞாயிற்றின் நேர் எதிரில் முழுமை பெற்று நின்று எது பெரிது என்று மருட்டுத் திங்களைத் சக்தி என்றும், அது தேய்ந்தபடி சென்று தன் இருண்ட வட்டத்தால் ஞாயிற்றின் பகுதியினை மறைக்கும் நிகழ்ச்சியினைச் சிவத்தில் ஒடுங்குதல் என்றும், இருண்ட திங்களைப் பகுதியாகக்கொண்டு காட்சிதரும் ஞாயிற்றை மங்கைபாகன் என்றும் உருவகித்து மகிழ்ந்தனர்.

மறைக்கும் திங்களும் மறையும் திங்களும்

திங்கள் வட்டம் ஞாயிற்றை மறைப்பதை 'ஞாயிற்று மறைவு' என்றும், பூமியின் நிழலில் திங்கள் வட்டம் அகப்பட்டு இருண்டுவிடுவதைத்'திங்கள் மறைவு' என்றும் சொல்கிறோம்.[41] இருமறைவுகளும் அடிப்படையில் வேறுபடுவதால் அவற்றை நாம் காண்பதிலும் ஒரு வேறுபாடு உள்ளது ஞாயிற்றைக் கண் விழித்துக் கண்டுகொண்டிருக்கும் உலகத்தின் பகுதியிலுள்ள அவ்வளவு பேருக்கும் ஞாயிற்று மறைவு தெரிவதில்லை. ஆனால், இரவுக்காலத்தில் திங்களைக் காணும் வாய்ப்புடைய உலகப் பகுதியிலுள்ள அவ்வளவு பேருக்கும் திங்கள் மறைவு புலப்படும். இவ்வுண்மையினைத் தமிழர்கள் அறிந்திருந்தனர் என்பன தலைவனை ஒருநாள் சந்தித்த அளவில் தன்னைப் பற்றிய அலர் அதிகமான அளவில் பலரும் அறியும்படி பரவிற்று என்பதை வற்புறுத்த விரும்பும் தலைவி,

---

39 சிலப். *10:1-3*
40 மணி. *5:119-121*
41 Solar Eclipse, Lunar Eclipse

'கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று,'[42]

என ஞாயிற்று மறைவை விடுத்துத் திங்கள் மறைவை உவமையாகத் தேர்ந்து கூறுவதாக வள்ளுவர் அமைத்துள்ளார்.

இருபத்துநான்கு மணிக்கு ஒருமுறை தன்னைத்தானே சுற்றிக்கொண்டு ஆண்டுக்கொருமுறை ஞாயிற்றைச் சுற்றியபடி இருக்கும் நம் பூமியின் அச்சுமுனைகளும் 25,000 ஆண்டுகளுக்கு ஒருமுறை தலையாட்டங் கண்ட பம்பரம்போல் மெல்லச் சுழன்று கொண்டிருப்பதால் ஒருசில ஆயிரம் ஆண்டு இடைவெளியில் வானத்து மீன்களை நோக்க, பூமியின் வடதிசை தாழ்ந்து தென் திசை உயர்வதாகவும், மீண்டும் தென்திசை தாழ்ந்து வடதிசை உயர்வதாகவும் தோன்றும். தெற்கு வானத்தில் நிலைபெற்றிருக்கும் அகத்திய விண்மீனை நிலையாகக்கொண்டு பார்த்த தமிழர்கள் கடலுக்கும் விண்மீனுக்கும் உள்ள கோணத்தொலைவு மிகுந்ததைக் கண்டு அகத்தியர் கடலை உண்டுவிட்டார் எனக் கற்பனை கலந்து பேசத் தொடங்கினர். கடலைக் காண முடியாத நிலையில் இந்திய நாட்டின் வடபகுதியில் வாழ்ந்திருந்த மக்கள், அகத்தியர் தெற்கிலுள்ள விந்தியமலையின் உயரத்தைக் குறைத்து அடக்கிவிட்டார் எனப் பேசி வந்தனர். பொதுவாகச் சங்ககாலத்தில் வானியற் கலையிலும் வானநூலிலும் தமிழர்கள் கொண்டிருந்த ஈடுபாடும் ஆர்வமும்,

'செஞ்ஞா யிற்றுச் செலவும்அஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரி தரு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்றளந்து அறிந்தோர் போல என்றும்
இனைத்துஎன் போரு முளரே'[43]

என்னும் பாடலால் இனிது புலப்படும்.

மேலும், நாடோறும் மாறுபட்டு நிலவும் தட்பவெப்ப நிலைகளை ஆய்வதிலும், முன்கூட்டியே துணித்தறிவதிலும் தமிழர்கள் சிறந்திருந்தனர் என்பது,

'பனியும் வெயிலும் கதிரும் யாவும்
துனியில் கொள்கையொடு தொன்மை யெய்திய
தனிவுற் றறிந்த கணிவன் முல்லை.'[44]

---

42 குறள். 1146
43 புறம். 30:1-6
44 பன்னிருபடலம்

என்னும் வரிகளாலும் அறிகின்றோம். காலநிலையைக் கணித்தறிவோனைக் 'கணிவன்' என்று அழைத்தனர்.

வளிதொழில் ஆண்டு கப்பலோட்டும் கலை

தமிழர்கள் காற்றின் ஆற்றலைத் துணையாகக்கொண்டு கடற்பரப்பில் நெடுந்தொலைவு கலம்விட்டுச் சென்று அயல்நாடுகளுடன் வாணிகம் செய்துவந்தனர் என்பதற்கு வரலாற்றுக் குறிப்புகள் நிறைய உள்ளன. காற்று எத்திசையிலிருந்து வீசினாலும் அதன் ஆற்றலைக்கொண்டு தாம் விரும்பிய திசையில் தமிழர்கள் கலம் செலுத்தக் கற்றிருந்தனர் என்பது,

'நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக'[45]

என்னும் பாடலால் இனிது விளங்கும். தமிழகத்தின் மூன்று பக்கங்களிலும் கடல்கள் அமைந்திருப்பதுடன் நான்கு திசைகளிலிருந்து காற்று வீசும் ஓர் இயற்கைச் சூழ்நிலை, காற்றின் இயல்புகளை அறிந்து கடலிலே கலம் செலுத்தும் கலையில் தமிழர்களை வல்லவர்களாக்கியது. இவ்வுண்மை தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு ஆகிய திசைகளினின்றும் வெவ்வேறு காலங்களில் வீசும் காற்றுக்கு முறையே தென்றல், வாடை, கொண்டல், கோடை என்று தனித்தனிப் பெயர்களிட்டுத் தமிழர்கள் அழைத்ததிலிருந்து தெரிகிறது. திரைகடல் ஓடுவதற்கென்று தமிழர்கள் வகுத்துக்கொண்ட கலங்கள் பலவகைப்பட்டன. பரிசல், ஓடம், தோணி, படகு, திமில் போன்ற சிறுகலங்களும், நாவாய், கப்பல், வங்கம் போன்ற பெருங்கலங்களும் இருந்துவந்தன. எகிப்து, பாபிலோனியா, ஆசியா ஆகிய இடங்களில் ஆழ்ந்து எடுக்கப்பட்ட பொருள்கள், தமிழர் தம் கடல் வாணிகத்தின் சிறப்பினை வலியுறுத்துகின்றன. கப்பல்களின் தலைவன் 'நாய்கன்' என அழைக்கப்பட்டான். கண்ணகியின் தந்தை பெயர் மாநாய்கன் என்பதை இங்கு நினைவிற் கொள்ளலாம். பழங்காலத்துத் தமிழகத் துறைமுகங்களான முசிறி, கொற்கை, பூம்புகார் ஆகியவை அகன்றும் ஆழ்ந்தும் அமைந்த நீர்நிலைகளைப் பெற்றிருந்தன. அயல்நாட்டுக் கரைகளைச் சென்று தொட்டுத் திரும்பும் கப்பல்கள் விரிந்த பாய் களையாமல், நிறைந்திருந்த பண்டங்களைக் குறைக்காமல் தமிழ்நாட்டுத் துறைமுகங்களில் புகுந்த காட்சியைப் புறநானூற்றில்,

'கூம்பொடு, மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலம்......'[46]

---

45 புறம். 66:1-2 46 ஷை 30:11-13

என்னும் அடிகளால் காணலாம். இன்றுங்கூடக் கப்பல்கள் துறை முகத்துள் நுழையும்போது இயந்திரத்தை நிறுத்திவிடுகின்றனர். தரை தட்டாமல் இருப்பதற்காக மிகுதியாக இருக்கும் பாரத்தை முன்கூட்டியே குறைத்துவிடுகின்றனர்.

கலத்தினின்றும் இறக்கப்பட்டு உள்நாடு செல்லக் காத்துக் கிடக்கும் பொருள்களும் உள்நாட்டிலிருந்து வந்து கடல்வழிச் செல்லக் கலத்தின் வரவு பார்த்துக் காத்திருக்கும் பொருள்களும் துறைமுகத்தருகே மலையாகக் குவிந்து காணும் காட்சியைப் பட்டினப்பாலையில்,

'நீரின்நின்று நிலத்தேற்றவும்
நிலத்தின்நின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்புஅறியாமை வந்துஈண்டிய'[47]

என்னும் அடிகள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

பழங்காலத்தில் கலங்கரை விளக்கங்கள் ஏணிசாத்தப்பட்டிருப்பினும் எவரும் எளிதில் அடையமுடியாத உயரத்திற்கு எழுந்து நின்றன; வான்முகட்டைத் தாங்குவதற்கென்று நிறுத்தி வைத்த நெடுந்தூண்கள்போலக் காட்சி தந்தன. இரவு முழுவதும் அவற்றின் உச்சியில் நின்று எரியும் பெருவிளக்குகள் அலைகடலிலே வழிதவறும் கலங்களைத் துறைமுகத்திற்கு அழைத்தபடி இருந்தன. கல்லாலும் காரையாலும் கட்டப்பட்ட அத்தகைய ஒரு கலங்கரை விளக்கத்தை,

'வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவின் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலங் கரையும்'[48]

என்னும் பெரும்பாணாற்றுப்படை அடிகளால் காணலாம்.

புயலின் கொடுமை

அடிக்கடி கீழைக்கடலிலே அன்றும் புயல் உருவாகிக் கலங்களை அலைக்கழித்து வந்தது. அக்காலங்களில் கப்பலின் கயிறுகள் அவிழ்ந்து பாய்ச்சீலை கிழிந்துபோனதுடன் பாய்மரமே அடியோடு முறிந்துபோதலும் உண்டு. இரக்கத்திற்குரிய அத்தகைய

---

47 பட்டினப். 129-132

48 பெரும்பாண். 346-350

கலங்கள் தலைவன் நடுங்கும்படி திக்குத்திசை தெரியாமல் நாட் கணக்கில் அலைகடலிலே ஓடிக்கொண்டிருப்பதும் உண்டு. இந் நிகழ்ச்சிகளை மணிமேகலையில்,

'கூம்புமுதல் முறிய வீங்குபிணி அவிழ்ந்து
கயிறுகால் பரிய வயிறுபாழ் பட்டாங்கு
இதைசிதைந்து ஆர்ப்பத் திரைபொரு முந்நீர்
இயங்குதிசை அறியாது யாங்கணும் ஓடி.'[49]

என்னும் அடிகளால் உணரலாம்.

கலங்கவிழ்ந்த காலத்தில் இறந்தவர்கள் போக எஞ்சியவர்கள் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டுக் காட்டுமக்கள் வாழ்ந்து வரும் கண்காணாத் தீவுகளிலே ஒதுக்கப்பட்டனர். அத்தகைய மக்களுடன் வாழ்ந்து அவர்களைப் பண்பாடு பெறும்படி செய்த தமிழ் 'இராபின்சன் குருசோ'க்களை,

'நளிஇரு முந்நீர் வளிகலன் வௌவ
ஓடிமரம் பற்றி ஊர்திரை உதைப்ப
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கம் சார்ந்தவர் பான்மையன் ஆயினன்'[50]

என்னும் மணிமேகலை அடிகளால் காணலாம்.

பறத்தல் பற்றிய ஆராய்ச்சி

கடல்வழிக் கலம் செலுத்துவதில் வல்லுநராகத் திகழ்ந்த தமிழர்கள் வானவழிக் கலஞ்செலுத்துவது பற்றியும் ஆய்ந்து வந்துள்ளனர். 'வலவன் ஏவா வான ஊர்தி'[51] என்னும் தொடரினையும் சங்க இலக்கியங்களில் காண்கின்றோம். நெடுங்காலமாகவே காற்றை உதைத்து முன்னேறிப் பறந்து செல்லும் பறவைகள்மீது மனிதனின் நாட்டம் சென்றதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. இருந்தாலும், காற்றைவிட இலேசான ஒரு பொருள்தான் காற்றில் உயர்ந்து பறக்கமுடியும் என்று மேலை நாட்டார் பதினெட்டாம் நூற்றாண்டு வரையில் நம்பிவந்தனர். அந்த அடிப்படையிலேயே பறவைகள் பறப்பதற்கும் விடைகாண முயன்ற அவர்கள், பறவைகளின் எலும்புக்குழல்களுள் அடைபட்டிருக்கும் காற்று, உடல் வெப்பத்தால் சூடேறி விரிந்து திண்மை குறைவதாலேயே பறவைகள் இலேசாகிக் காற்றில் மிதந்து பறக்கின்றன என்று முடிவுசெய்தனர். இந்த முடிவு பொருத்தமற்றது

---

49 மணிமே. 4:30-33
50 ௸ 16:13-16
51 புறம். 27:8

என்பதைக் காண மிகத் தொலைவு செல்லவேண்டுவதில்லை. பறவைகளின் உடல் வெப்பத்தால் அதற்கு ஏற்படும் 'எடைக் குறைவு' மிகவும் சிறிதாகத்தான் இருக்கமுடியும். இந்த மாற்றத்தால் பறவைகள் வானத்தில் எழுந்து பறக்கின்றன என்பதை இந்நாளில் யாரும் ஏற்க முன்வர மாட்டார்கள்.

கால அளவுகள்

கண் இமைத்தலுக்கும் கைநொடித்தலுக்கும் செல்லும் சிறு நேரமாம் மாத்திரையிலிருந்து பல தலைமுறைகள் வாழ்ந்து மடியும் பெருங்காலமான ஊழிவரையிலும் தமிழர்கள் அறுதியிட்டு எண்ணி வந்துள்ளனர். இத்தகைய கால அளவுகள் சங்க இலக்கியங்களிலும் தொல்காப்பியத்திலும் குறுகிய கால அளவைக் குறிக்கும் கண்இமை, கைநொடி, மாத்திரை ஆகிய சொற்கள் காணப்படுகின்றன. 'கணம்' என்னும் சொல்லும் திருக்குறளில் காணப்படுகிறது. அடுத்துப் பெரிய கால அளவு நாழிகை அல்லது கடிகை என்பதாகும். ஒரு நாட்காலத்தை அறுபது நாழிகைகளாகப் பிரித்திருந்தனர். நாழிகையை அறிந்து கொள்ளப் பயன்பட்டுவந்த ஒரு கருவியை 'நாழிகை வட்டில்' எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இது நீர் சொட்டுச் சொட்டாக மேலுள்ள பகுதியிலிருந்து கீழுள்ள பகுதிக்கு இறங்குவதற்கு காலத்தைக் எடுத்துக்கொள்ளும் என்னும் தத்துவத்தை அடியாகக் கொண்டு அமைக்கப்பட்ட ஒருவகைப் பாத்திரம். இதனைக் 'குறுநீர்க் கன்னல்'[52] எனச் சங்க இலக்கியம் குறிப்பிடுவதைக் காண்கிறோம். அடுத்த, பெரிய அளவு யாமம் என்பதாகும். இரவு, நான்கு யாமங்கள் கொண்டது என்று சொல்லப்படுவதால் பகலும் நான்கு யாமங்கள் கொண்டது எனக் கொண்டிருத்தல் வேண்டும். எனவே, ஒரு யாமம் என்பது $7\frac{1}{2}$ நாழிகைகள் கொண்ட ஒரு காலமாகும். மேலும் 10 நாழிகைகள் கொண்ட வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் என்று நாளைப் பிரிக்கும் வழக்கமும் இருந்துவந்தது என்பதைச் சங்க இலக்கியங்களில் காண்கிறோம்.[53]

விண்மீன்களிடையே நாளுக்குநாள் கிழக்காக நகர்ந்து செல்லும் திங்களின் இயக்கத்தை அடியாகக்கொண்டு திங்கள் அல்லது மதி என்ற காலத்தைக் கணக்கிட்டுப் பின்பற்றி வந்தனர். திங்கள் என்னும் சொல் மாதத்தைக் குறிக்கும் வகையில் புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில்

52 முல்லைப். 58; அகம். 43:6; மணிமே. 7:64
53 தொல். பொருள். அகத். 6-11; குறுந். 32:1-2

எடுத்தாளப்பட்டுள்ளது. ஒரு மாதத்தில் எந்த விண்மீனோடு முழுத் திங்கள் இணைந்து திகழ்கிறதோ, அந்த விண்மீனின் பெயரால் அந்த மாதம் அழைக்கப்படுகிறது. சித்திரை, வைகாசி என்னும் பெயர்கள் அப்பொருளில் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. மேலும், திங்கட் காலத்தைப் பதினைந்து நாள்களைக்கொண்ட வளர்பிறைத் திங்கட் காலம் என்றும், தேய்பிறைத் திங்கட் காலம் என்றும் இரு பகுதிகளாகக் குறிப்பிட்டும் பின்பற்றி வந்துள்ளனர். இப் பகுதிகளைப் பக்கங்கள் என அழைத்தனர் என்பதும் சிலப்பதி காரத்தால் அறியப்படுகிறது. திங்கட்காலத்தை ஏழு நாள்கள் கொண்ட வாரம் என்று நான்கு பகுதிகளாக்கி அதன் ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு கோளின் பெயரால் அழைக்கும் வழக்கத் தையும் சிலப்பதிகாரத்தில் முதன்முதலாகக் காண்கிறோம்.

அடுத்து, ஞாயிறு தென்திசை நோக்கிச் செல்வதாகத் தோன்றும் ஆறு மாத காலத்தைத் தெற்கு ஓட்டம் (அயனம்) என்றும், வடதிசை நோக்கிச் செல்வதாகத் தோன்றும் ஆறு மாத காலத்தை வடக்கு ஓட்டம் (அயனம்) என்றும், ஞாயிறு மீண்டும் விண்மீன்களிடை ஒரு குறிப்பிட்ட நிலைக்கு வருவதற்கு எடுத்துக்கொள்ளும் 12 மாத காலத்தை (365¼ நாள்) ஓர் ஆண்டு என்றும் அழைத்துப் பின்பற்றியுள்ளனர்.

ஞாயிறு விண்மீன்களிடை நகர்வதாகத் தோன்றும் பாதை வட்டத்தைப் பன்னிரண்டு பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியிலும் காணும் விண்மீன் தொகுதிகள் அவர்கள் உள்ளத்தில் எழுப்பிய கற்பனை உருவங்களின் பெயரை அவற்றிற்கு இட்டு மேழம், விடை, ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலாம், நளி, சிலை, சுறவம், கும்பம், மீனம் என அழைத்தனர். இந்த இராசி வட்டத்தைப் பின்னணியாகக் கொண்டு இயங்கியபடி அவ்வப் பொழுது சேர்ந்தும் பிரிந்தும் தோன்றும் கோள்களின் நிலை களை மனத்திற்கொண்டு அவற்றிற்கு வேறுவேறு பலன்களைக் கற்பித்துக் கூறும் சோதிடக் கலையும் ஒருபுறம் வளர்ந்து பின் னாளில் அறிஞர்களால் கைவிடப்பட்டது.

விண்பொருள்களின் நிலைகளைக்கொண்டு காலத்தைக் கணித்தறிவதுடன் எளிய மக்களுக்கும் அவ்வப்பொழுது கழிந்த காலஅளவை உணர்த்துவதற்கெனக் 'குறுநீர்க் கன்னல்' போன்ற கருவிகளையும் பயன்படுத்தி வந்துள்ளனர். காலத்தை ஊர்மக்கள் அனைவரும் அறியும்பொருட்டு ஒலியெழுப்பி உணர்த்தும் பணி யாளர்களும் இருந்துவந்தனர்.

எடை

எப்பொருளையும் பூமி இழுத்து விழும்படி செய்துகொண்டிருப்பதாலேயே பொருள்கள் தம்மைத் தாங்கி நிற்கும் தடைகளை அழுத்திக்கொண்டிருக்கின்றன என்பதைத் தமிழர்கள் நன்கு தெரிந்திருந்தார்கள். வீழ்தல் என்னும் சொல்லுக்குக் கவர்தல், விரும்புதல் என்னும் பொருள்கள் உண்டு. அந்த விழும் பொருள் கற்பாறைத் துண்டானாலும், கவின்மயிலின் தோகையானாலும் ஒரே வேகத்தில் விழத்தொடங்கி, வேகவளர்ச்சியை எய்தும் என்பதையும் கண்டிருந்தனர். பொதுவாகச் சொல்ல வேண்டுமானால் பூமியின் இழுப்பாற்றலால் உணரப்படும் எடை பற்றிய கருத்துத் தெளிவு அவர்களுக்கு நல்ல முறையில் இருந்தது. இன்றும் ஒரு கிலோ பஞ்சு, ஒரு கிலோ இரும்பு ஆகியவற்றுள் எது பளுவாக இருக்கும் என்றால் இரும்பே பளுவாக இருக்கும் என்று விடை கூறும் அரிஸ்டாட்டில் கொள்கையினை அவர்கள் என்றும் ஏற்றதில்லை. ஆனால், தமிழர்கள் வீழ்கின்ற எப்பொருளையும் பூமி ஒரே அளவில் வேகவளர்ச்சி பெறச் செய்துகொண்டிருக்கின்றது என்னும் உண்மையை உணர்ந்திருந்ததால்,

'பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்'[54]

என்று கூறமுடிந்தது. வள்ளுவர் வற்புறுத்தும் இதே கருத்தைத் தான் பின்னாளில் கலிலியோ, பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரத்திலிருந்து இருவேறு பொருண்மையுள்ள இரு குண்டுகளை விடுவித்து விழச்செய்து, அவை ஒரே வேகவளர்ச்சியுடன் தரையில் வந்து சேர்ந்ததைச் சான்றாகக் காட்டி நிறுவினார், மேலும், ஒரு குறிப்பிட்ட சிறுவகைப் பொருளின் எடையைக் காண்பதற்கு ஒத்த இயல்புள்ள ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களின் கூட்டு எடையைக் கண்டு பின்னர் அதனைப் பொருள்களின் எண்ணிக்கையால் வகுத்துக் காணும் முறைநுட்பத்தையும் தமிழர்கள் அறிந்திருந்தனர் என்பது இக் குறளால் தெளிவாகிறது. ஆம், ஒரு மயில் தோகையின் எடையைக் கண்முன் கொணர்ந்து காட்டுகிறார்.

இனி, ஒன்றே ஒன்று என்ற நிலையில் உள்ள கனிப்பொருளின் எடையை அறுதியிட்டுணர்வதற்கு இக்கூட்டுமுறை பயன்படாது என்பது வெளிப்படை. அதற்குச் சமன்கோலின் நுட்பத்தினையே நாம் அடியாகக் கொண்டாக வேண்டியுள்ளது. சமன்செய்து சீர்தூக்கும்கோல், பொருள் அளவில் சிறிது மிகுந்திருந்தாலும்

[54] குறள் 475

அதனைச் சமநிலை குறைந்து பெரிது அசைந்து ஆடிக் காட்டி யாக வேண்டும். அத்தகைய தராசின் நுட்பத்தினைச் சொல்ல வும் வேண்டுமோ? மோப்பக் குழைந்துவிடும் மென்மைகொண் டது அனிச்சமலர். அதன் காம்பினும் நுட்பமான ஒன்றைக் காண் பதும் அரிதாகும். அனிச்சப் பூவை மட்டுமே துவண்டு நின்று சமன் செய்து தாங்கும் பெண்நல்லாளின் நுண்ணிடை, அனிச்சப் பூவின் காம்பினையும் தாங்கிச் சமன்செய்து நிற்க முடியுமோ? அந்தக் கூடுதல் எடையைத் தாங்க முடியாமல் இடையே முறிந்து விடுகிறது.

'அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை'[55]

எனக் கூறும் வள்ளுவர் நுட்பமான எடையைக் காண நுட்பமான தராசைத் தேடும் அறிவியல் உணர்வுமிக்கவராய்த் திகழ்கின்றார் என்பதை யார்தாம் மறுக்க இயலும்.

சமன்செய்து சீர்தூக்கும் கோலின் இயல்பை நன்கு உணர்ந் திருந்த தமிழர்கள் சமன்செய்து சீர்தூக்கும் கோலுக்கு அடிப்படைத் தத்துவமாக அமைந்து நிற்கும் நெம்புகோலின் இயல்பினை உணர்ந்தே இருத்தல்வேண்டும். மேலும், கிரேக்க நாட்டோடு பழங்காலத்திலேயே தொடர்பு கொண்டிருந்த தமிழர்கள் 'போதுமான அளவிற்கு நீளமானதொரு கோலையும், ஊன்றுவதற்கு ஓரிடமும் கொடுத்தால், நான் உலகத்தையே புரட்டி விடுவேன்', எனக் கூறிய அறிவியலறிஞர் ஆர்க்கிமிடீசை யும் அறிந்தே இருந்தார்கள். நெம்புகோல் தத்துவத்திற்கு எடுத் துக்காட்டாக இயங்கும் ஏற்றக்கருவி[56] தொன்றுதொட்டுத் தமிழ கத்தில் செயல்பட்டுவந்துள்ளது. நெம்புகோல்களின் சேர்க்கை களால் மிகவும் சிக்கலாகப் படைக்கப்பட்ட போர்க்கருவிகள் பல வற்றினை,

'மிளையும் கிடங்கும் வளைவிற் பொறியும்
கருவிரல் ஊகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் உலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை அடுப்பும்
கவையும் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெயர் ஊசியும்
சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்
எழுவும் சீப்பும் முழுவிறல் கணையமும்
கோலும் குந்தமும் வேலும் பிறவும்'[57]

55 குறள். 1115.

57 சிலப். 15:207-216

இடம்பெற்றிருக்கும் மதுரைக்கோட்டையை இளங்கோவடிகள் நம்மைக் காணச் செய்கிறார்.

ஒளியும் ஒலியும்

ஒருவர் உள்ளத்தை ஒருவர் புரிந்துகொள்வதுதான் உலகிலேயே உயர்ந்த ஒரு பண்பாகப் பேசப்படுகின்றது. உள்ளத்தில் எழும் கருத்துகள் கண்களால் ஒளிக்குறிப்பாகவும், வாயால் ஒலிக்குறிப்பாகவும் வெளிவருகின்றன. ஒளியும் ஒலியும் ஒன்றுபோல அலைகளாக அசைந்து பரவினாலும் அவற்றினிடையே வேற்றுமைகள் மிகுதியாக உள்ளன. திருவள்ளுவர் ஒளியையும் ஒலியையும் நுட்பமாக வேறுபடுத்தி ஒரு கோட்பாட்டினைத் துணிந்து கூறிவிட்டார்.

> 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
> என்ன பயனும் இல'[58]

என்பதே அது. இக் கொள்கையைச் சோதனைவழி நிறுவ முற்பட்ட சாத்தனார் கண்ணுக்கு வழியும், காதுக்குத் திரையும் கொண்ட ஒரு சோதனைக்கூடத்தையே உருவாக்கிவிட்டார். மணிமேகலையையும் உதயகுமாரனையும் பிரித்துவைக்க இருவருக்கும் இடையில் அவர் எழுப்பிய புதுமைச் சுவர் ஒளிக்கு வழி விடும்; ஆனால், ஒலியை உள்நுழையாமல் தடுத்து நிறுத்திவிடும். இச் சோதனைக் கூடத்தை,

> 'விளிப்பறை போகாது மெய்புறத் திடூஉம்
> பளிக்கறை மண்டபம்'[59]

எனச் சாத்தானார் அறிவியல் மொழிப்படுத்தி அறிவிக்கின்றார். உதயகுமாரன் மணிமேகலையைப் பார்த்தான். மணிமேகலை உதயகுமாரனைப் பார்த்தாள். ஆனால் உதயகுமாரன் பேசிய ஆர்வ மொழிகள் மணிமேகலையின் செவிகளைச் சேரவில்லை. மணிமேகலை பேசியிருந்தாலும் உதயகுமாரன் கேட்டிருக்க மாட்டான். கண்ணும் கண்ணும் உறவாடின. வாய்ச்சொற்கள் பயனற்றுப் போகும்படி பளிங்குச் சுவர் வழியடைத்துவிட்டது. வாய்ச்சொல் பயனற்றுப் போன நிலையிலும் உதயகுமாரன், மணிமேகலை காதல் வளரவே செய்தது. வள்ளுவர் கோட்பாடு அறிவியல் அடிப்படையில் தக்க சோதனைவழி நிறுவப்பட்டுவிட்டது. அதனால் கம்பர் போன்ற பிற்காலத்தோரும்,

---

58 குறள். 1100

59 மணிமே. 3:63-64

'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்'
'இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்'

என்று எளிதில் சொல்லிச் செல்ல வழிபிறந்தது.

மூளையறியாச் செயல்

ஒத்த உணர்ச்சிதான் நட்புத் தோன்றுவதற்கு வேண்டிய உரிமையைத் தரும். நண்பனுக்குத் துன்பம் நேர்ந்தவிடத்து அதனை அப்பொழுதே சென்று களையவேண்டும் என்பதை வள்ளுவர் ஓர் அறிவியல் தத்துவத்தை எடுத்துக்காட்டிக் கூறுகிறார். நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் நம் மூளையின் கட்டளையின்படியே செய்கிறோம். ஆனாலும், நம் மூளையின் கட்டளைக்குக் காத்திருக்க முடியாத சில நெருக்கடியான நேரமும் உண்டு. எடுத்துக்காட்டாக, நெருப்பு கையில் படுகிறது எனக் கொள்வோம். சூடு நம் உணர்ச்சி நரம்புகள் வழிச்சென்று மூளையை எட்டுகிறது. பின்னர் மூளை 'கையை அப்பால் எடுக்க' எனச் செயல் நரம்புகளுக்குக் கட்டளை பிறப்பிக்கின்றது. உடனே செயல் நரம்புகள் செயல்பட்டுக் கையை அப்பால்நகர்த்துகின்றன. இவ்வளவும் மிக விரைவில் நடந்தாக வேண்டும். வழக்கத்தில் மூளையின் கட்டளைக்காகக் கையானது காத்திராமல் தானே அப்பால் நகர்ந்துகொள்கிறது. இங்கு மூளையின் வேலையை முதுகெலும்பினுள் உள்ள முள்ளந்தண்டே செய்துவிடுகிறது. இச் செயலை அனிச்சைச் செயல் என்பர். நண்பனுக்கு நேர்ந்த துன்பத்தை உடனே சென்று களைய வற்புறுத்தும் வள்ளுவர், இதுபோன்றதொரு 'மூளையறியாச் செயலை' உவமையாக எடுத்துக் காட்டி,

'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு'[60]

என்று கூறுகிறார். உடுக்கை இழந்தவன் கையானது மூளையின் கட்டளைக்காகக் காத்திருப்பதில்லை. உடனே சென்று உடுக்கையை நழுவாமல் தாங்குகிறது. இதுவே அறிவையும் கடந்த அன்பாகும்.

உயரம் தரும் ஆற்றல்

ஓடிக்கொண்டிருக்கும் ஒரு பொருளுக்கு, வழியில் எதிர்ப்படும் தடையை மோதித் தள்ளும் ஆற்றல் உண்டு என்பதை நாம் அறிவோம். அதனை இயக்கஆற்றல் என்கிறோம். ஆனால்,

60 குறள். 788

நிலையில் திரியாது நின்றுகொண்டிருக்கும் பொருளுக்கு ஆற்றல் உண்டா? ஆம், உண்டு. அது இருக்கும் நிலையில் உயரத்தைப் பொறுத்து அதற்கு ஆற்றல் அமைகிறது என்று வள்ளுவர் சொல்கிறார். உயரத்தில் தேங்கியுள்ள நீர் புவியீர்ப்பின் ஆற்றலால் விழுந்து பெருஞ் செயலாற்றுவதை நாம் அறிகின்றோம். ஒரு பாறைத்துண்டு தரையில் கிடந்தால் அதுபற்றி யாரும் கவலைப்படுவது இல்லை. ஆனால், அதே கல் சற்று உயரத்தில் ஒரு சுவரின்மேல் இருந்தால் நாம் எச்சரிக்கையுடன் இருக்கின்றோம். இனி, உயர்ந்த மலைமுடிகளில் நின்றுகொண்டிருக்கும் கல் லுருண்டைகளைப்பற்றி நாம் என்ன நினைப்பது? அவை தம் எடைக்கும், புவியீர்ப்புக்கும், உயரத்திற்கும் ஏற்ப ஆற்றலைப் பெற்றுத் தம்முள் அடக்கிவைத்திருக்கின்றன. அக் கற்கள் நிலையில் திரியாது நின்றுகொண்டிருக்கும் வரையில் எவர்க்கும் இன்னல் இல்லை. ஆனால், சிறிது நிலை பெயர்ந்தாலோ நிகழ்ச்சி நொடிநேரம் மட்டுமே நீடித்தாலும் விளைவு சொல்லவும் முடியாத அளவிற்கு மிகுதியாகிவிடும். உயரத்தில் இருக்கும் பொருள்கள் தம்முள் மறைத்து வைத்திருக்கும் ஆற்றலை உள்ளாற்றல் என்கிறோம். வள்ளுவர் குன்றின்மீது நிற்கும் கல் லுருண்டைகளைக் கண்டு பழகியவர்; அவற்றில் தேங்கி நிற்கும் ஆற்றலையும் உணர்ந்தவர். கற்குன்றின்மீது நிற்கும் உணர்ச்சி அற்ற கற்களுக்கே அவ்வளவு ஆற்றல் உண்டென்றால், குணக் குன்றின்மேல் நிற்கும் பெரியோர்களின் நிலைபற்றிச் சொல்லவும் வேண்டுமா? அச் சான்றோர்கள் சினந்தால் அதாவது நிலையில் சிறிது திரிந்தால் அச் சினம் இமைப்பொழுதே நிற்குமாயினும் அதைத் தடுத்துக் காத்தல் என்பது எவர்க்கும் இயலாது. குன்றேறி நின்றாரின் அத்தகைய ஆற்றலை,

> ‘குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
> கணமேயும் காத்தல் அரிது’[61]

என்னும் குறட்பாவால் குறிப்பிடுகின்றார்.

ஒருகால நிகழ்ச்சிகள்

ஐன்ஸ்டைன் கண்ட காட்சிபற்றி நம் அறிவியலார் அடுக்கிப் பேசுகின்றனர். ஆனால், ஐன்ஸ்டைன் காணாத காட்சியையும் தமிழன் கண்டிருக்கின்றான்! ஒரே சமயத்தில் நிகழ்வனவற்றை ‘ஒருகால நிகழ்ச்சிகள்’[67] என்கிறோம். அறிஞர் ஐன்ஸ்டைன் ஒருகால நிகழ்ச்சிகள் என்பதில் பொருளே இல்லை என்று சொல்லு

---

61 குறள். 29

வார். விரைந்து செல்லுகின்ற ஒரு வண்டியின் இரு கோடிகளில் 'ஒரே காலத்தில்' நடக்கும் நிகழ்ச்சிகள், வண்டியின் நடுவில் இருந்து பார்ப்பவனுக்கு ஒருகால நிகழ்ச்சிகளாகத் தெரிந்தாலும், வண்டிக்கு வெளியே தரையில் நின்றபடி பார்ப்பவனுக்கு முன்கோடியில் நிகழ்ந்த நிகழ்ச்சி காலத்தால் முன்னர் நிகழ்ந்த ஒன்றாகவும், பின்கோடியில் நிகழ்ந்த நிகழ்ச்சி பின்னர் நிகழ்ந்த ஒன்றாகவும் தெரியும் என்று எடுத்துக் காட்டுகிறார். ஆனால், வள்ளுவர் கூறும் ஒரே கால நிகழ்ச்சிகள் ஐன்ஸ்டைன் ஆராய்ச்சிக்கும் அடங்காதவை. வண்டியில் இருப்பவனும் அவற்றை ஒரு கால நிகழ்ச்சிகளாகக் காண்பான். தரையில் நிற்பவனும் அவற்றை ஒருகால நிகழ்ச்சிகளாகக் காண்பான். அந் நிகழ்ச்சிகள் தாம் யாவை? தலைவனைப் புல்லிக்கிடந்த தலைவி புடைபெயர்வது; அவ்வளவில் பசப்பு தலைவியை அள்ளிக்கொள்வது. இவ்விரு நிகழ்ச்சிகளும் ஒருகால நிகழ்ச்சிகள் என்பதை வற்புறுத்த விரும்பிய வள்ளுவர் யாவரும் ஏற்கும் வகையில் ஓர் உவமையைக் கூறி விளக்குகிறார். அதுவே விளக்கற்றம் பார்க்கும் இருள் ஆகும்.

'விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு'[62]

விளக்கு அணைவதும், இருள் தோன்றுவதும் ஒருகால நிகழ்ச்சிகள் என்று ஐன்ஸ்டைனும் கூறுகிறார்.

துணிதலும் தெளிதலும்

'ஒற்றாடல்' பற்றிக் கூறும் வள்ளுவர் அரசர்கள் ஓர் ஒற்றனை மற்றோர் ஒற்றன் அறியாதபடி ஆளவேண்டும் என்றும், அவ்வாறு ஆளப்பட்ட ஒற்றர் மூவரின் முடிவான சொல்லும் ஒத்திருந்தால் மட்டுமே அவர் கொணர்ந்த செய்தியினை உண்மையாகக் கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார். வள்ளுவரின்,

'ஒற்றொற் றுணராமை ஆள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும்'[63]

என்னும் குறளைக் காணும் நாம், உண்மையைக் காண வள்ளுவர் ஒற்றர் இருவரையோ, ஒற்றர் நால்வரையோ கொள்ளாமல், ஒற்றர் மூவரைக் கொள்வது ஏன் என்ற கேள்வியை எழுப்பாமல் இருக்க முடியாது. ஒற்றாடல்பற்றிப் பேசும் வள்ளுவர் தொடக்கத்திலேயே, ஒற்றும் உரைசான்ற நூலும், மன்னனது கண்கள்

62 குறள். 1186 63 ஷை 589

எனச் சுட்டிச் செல்கின்றார். இங்கு 'உரைசான்ற நூல்' என்பதற்கு முறைவழி அமைந்த அறிவியல் ஆய்வுநூல் என்பதே பொருந்தும். ஒரு பொருள்பற்றிய உண்மையைக் காண வேண்டுமானால், முதலில் அப் பொருளைக் காணவேண்டும். கண்ட பின்னர் அது இப்படித்தான் இருக்க முடியும் என்று துணியவேண்டும். துணிந்த பின்னர், துணிந்தது சரிதானா என்பதைத் தெளிய வேண்டும். இவ்வாராய்ச்சிப் படிகளை விளக்கும் நூல்தான் 'உரைசான்ற நூல்' எனப்படும்.

நாம் ஒரு புள்ளியை மையமாகக்கொண்டு ஒரு வட்டத்தையோ, வட்டத்தின் பகுதியையோ[64] எளிதில் வரைந்துவிடலாம். ஆனால், வட்டத்தின் பகுதியை வைத்துக்கொண்டு அதன் மையப் புள்ளியைக் கண்டுபிடிப்பது அவ்வளவு எளிதான செயல் அன்று. அதற்கு 'ஒற்றாடல்' தேவைப்படுகின்றது. வட்டப் பகுதியின் ஓரிடத்திலிருந்து செங்குத்துக் கோட்டுப் பாதையில் ஓர் ஒற்றனை நடந்து முன்னேறச் செய்யவேண்டும். இப்பொழுது அவன் சென்ற பாதையில் எங்கோ ஓரிடத்தில் நாம் தேடுகின்ற மையம் இருக்கிறது எனக் கொள்ளலாம். ஆனால், எவ்வளவு தொலைவில் இருக்கிறது என்று மட்டும் நம்மால் முடிவு செய்து விடமுடியாது. அதற்கு வட்டப் பகுதியின் முற்றிலும் வேறானதோர் இடத்திலிருந்து செங்குத்துக் கோட்டுப் பாதையில் இரண்டாவது ஒற்றன் ஒருவனை அனுப்பவேண்டும். அவன் சென்ற பாதையிலும் நாம் தேடுகின்ற அந்த மையம் இருந்தாக வேண்டும். மையம் முதல் ஒற்றன் பாதையிலும் உள்ளது; இரண்டாவது ஒற்றன் பாதையிலும் உள்ளது என்றால், அவ்விரு பாதையும் சந்திக்கும் இடத்தில்தான் அந்த மையம் இருக்கவேண்டும் என்று முடிவு செய்துவிடலாம். ஆனால் ஒன்று, ஒற்றர் இருவரில் ஒருவன் வட்டப் பகுதிக்குச் செங்கோட்டுப் பாதையில் செல்லாமல் சற்று நழுவியிருந்தாலும்கூட வட்டப்பகுதியின் மையம்பற்றி நாம் கொண்ட முடிவு பொய்த்துவிடும். ஒற்றர் இருவரும் தம் கடமையினின்றும் தவறவில்லை என்பதை எப்படி அறிவது? இங்குத்தான் அரசனுக்கு மூன்றாவதாக ஓர் ஒற்றனின் உதவி தேவைப்படுகிறது. மூன்றாம் ஒற்றன் மற்ற ஒற்றர்கள் இருவர் பற்றிய எந்தச் செய்தியுமறியாதவனாக, வட்டப் பகுதியின் முற்றிலும் புதியதோர் இடத்திலிருந்து செங்கோட்டுப் பாதையில் சிறிதும் நழுவாமல் செல்கிறான். அவன் செல்லும் பாதையும் மற்ற இருவர் பாதையும் சந்திக்கும் இடத்தில் சென்று சந்தித்தால், முதல் இருவரும் சரியாகச் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதுடன், அரசன் கொண்ட முடிவும் சரியானது என ஏற்படுகிறது.

---

64 Arç

வட்டப்பகுதியின் மையத்தைக் காண இரு செங்குத்துக்கோடுகள் தேவை. கண்ட முடிவைச் சரிபார்க்க மூன்றாவது செங்குத்துக் கோடு பயன்படுகிறது. நான்காவது கோடு தேவையில்லை. ஆயிரம் செங்கோடுகள் ஆயிரம் இடங்களிலிருந்து வரைந்தாலும் அவை மையத்தின் வழியாகவே செல்லும். மேற்கொண்டு புதிய செய்தி எதனையும் அவை தரமாட்டா. அரசனுக்கும், உண்மையாக ஒருவரை ஒருவர் அறியாத மூன்று ஒற்றர்கள் தேவை!

'சினத்தைச் சேர்ந்தாரைக் கொல்லி' என்று அழைக்கின்றோம். நெருப்புக்குச்சி உராய்ந்து நெருப்பை உண்டாக்குகிறது. இருப்பினும் அஃது உண்டாக்கிய நெருப்புக்கு முதலில் அதுவே எரிந்து இரை ஆகிறது. கொண்டவனையே திருப்பித் தாக்கிக் கொல்லும் சினத்தின் இத்தகைய எதிர்த்தாக்கும் இயல்பினை விளக்குவதற்கே வள்ளுவர் 'நிலத்தறைந்தான் கை'யினை உவமையாகத் தேர்ந்து,

'சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று'[65]

என்று கூறுகிறார்.

அச் செயலின் எதிர்விளைவிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது என்பதனையே வள்ளுவர் உவமையாக ஆண்டுள்ளார். கையானது நிலத்தை அறைந்தால், நிலமும் கையினை அதே வேகத்தில் திருப்பி அறையும். ஒவ்வொரு செயலுக்கும் நேராக எதிர்விளைவு உண்டு என்று நியூட்டன் கூறிய மூன்றாம் இயக்க முறைமையை வள்ளுவர் பல நூற்றாண்டுகட்கு முன்னரே உணர்ந்து ஆண்டிருக்கிறார்.

தமிழ் இலக்கியம் அறிவியல் மணம் கமழும் பசுஞ்சோலையாகத் திகழ்கின்றது. அறிவியல் கண்கொண்டு தமிழர்கள் அதனைக் காண முன்வருதல் வேண்டும்.

---

65 குறள். 307

இயல் 5

மெய்ப்பொருளியல்

இவ்வுலகில் கண்ணுக்குக் காட்சியாக அறியக் கூடியனவும், அறிய முடியாதனவுமாகப் பலபொருள்கள் உள்ளன. அவற்றைச் செவ்வனே ஆய்ந்து, அவற்றிலடங்கிய உண்மையினைக் காண்பதே 'மெய்ப்பொருள் காணும்' கலையாகும். இதனையே 'மெய்ப்பொருள் இயல்' எனக் காணப் புகுகிறோம். வழக்காற்றில் மெய்ப்பொருளியல் 'தத்துவம்' என்றே அறியப்படுகிறது. 'தத்துவம்' என்னும் சொல் 'தத்', 'துவம்' என்னும் இரு சொற்களின் சேர்க்கையாகும். 'அதன் தன்மை' என்னும் பொருளது. பொதுவாக, **'பொருள் தன்மைகளை ஆராய்ந்து மெய்மையினை நிலைநாட்டும் அறிவுக்கலை**'யே தத்துவம் எனும் குறியீட்டாலறியப்படுகிறது. மெய்ப்பொருளியல்பற்றிச் சங்க காலத்திலேயே புலவர் அறிந்திருந்தனர்.

இவ்வாறு, பொருள் தன்மைகளை ஆராய்ந்து மெய்ம்மையினை உணர்த்த வல்லவரை 'மெய்ப்பொருளறிஞர்' என்றனர். உலகப் பொருள்களின் உண்மைகள் எவையாயினும் அவை அழியக் கூடியவையே எனும் நிலை மக்கள் மனத்திலே தோன்றியபின், அழியாத உண்மைப் பாதை யாதென உசாவி அது ஆன்மாவோடு தொடர்புடைய 'சமயமே' எனக் கண்டனர். சமயப் பொருளின் உண்மைகளைக் கண்டுரைக்க வல்லாரைச் 'சமயக் கணக்கர்'[1] என்றனர். 'உலகியல் பொருள்களைக் காணுந்தோறும் சமயத்தின் உண்மையினையே உணர்தல் வேண்டும்' என்னும் மெய்ப்பொருள் தாகம் மக்களிடையே வளர்ந்தது. இதனால்தான் தமிழ்மறையாம் திருக்குறளிலும் வள்ளுவப் பெருந்தகையார் 'மெய்யுணர்தல்' என்னும் ஓர் அரிய அதிகாரத்தையே வகுத்து, அதில் 'மெய்ப்பொருள் காண்பதே வாழ்வின் குறிக்கோள்' என வலியுறுத்தியுள்ளார். வள்ளுவர் பெருந்தகை தமக்குப் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன் தமிழரிடையே நிலவி நின்ற மெய்ப்பொருளியலை மீண்டும் நயம்பட எடுத்துரைத்

---

1 மணிமே 27:2

துள்ளார். இதனால் இத்தகைய மெய்ப்பொருள் காணும் தத்துவம் உலகிலேயே முதன்முதல் தமிழரிடையேதாம் தோன்றியதென்கிறோம்.

மெய்யறிவுபற்றிய உயர்சிந்தனைகளை உலகில் முதலில் மொழிந்தவர் தமிழரே எனக் கூறினோம். இதனைச் சிந்துவெளிச் சின்னங்கள் மெய்ப்பிக்கின்றன. உலகியல் சார்ந்த பொருளியல் கோட்பாடுகள் இந்திய மண்ணில் குறிப்பாகத் தமிழ் நிலத்தில்தான் அரும்பி மலர்ந்து, உலகெங்கும் மணம் பரப்பின; பரப்பியும் வருகின்றன. ஆன்மா, பரமான்மா, விதி, மோட்சம் இவற்றைப் பற்றிய சிந்தனைகளோ, கருதுகோள்களோ பழங்காலத் தமிழர்களுக்கு இருந்ததில்லை. நிலையான உண்மைகளை ஆய்ந்து, இயல்பு நவிற்சிகளையே இவர்கள் கொண்டிருந்தனர். இப் புவியின் தோற்றம், இயற்கை நெறிகள், மனிதனின் உண்மை உணர்வு ஆகியவற்றை ஆய்ந்தனர். உயிரும், உணர்வுமற்ற பொருள்களின் நீண்டகால மாற்றத்திற்குப் பிறகே உயிர் தோன்றியது எனக் கண்டனர். ஐம்புலன்களைத் தவிர அறிவுக்கு வேறு தோற்றுவாய் இல்லையென்பதும், எல்லாம் இயற்கையைச் சார்ந்தவை, அதற்கு அப்பாற்பட்டவை இல்லையென்பதும், வெப்பும் வெளிச்சமும் நெருப்பின் கூறேபோல் உயிரின் வினைப்பாட்டு நிலையே உணர்வென்பதும், அவர்கள் கண்ட மெய்யறிவுப் பட்டாங்கு ஆகும். எண்ணத்திற்கும் பொருளுக்குமுள்ள உறவை விளக்குவதே அந்த மெய்யறிவின் அடிப்படையாகும். பூதங்களின் சிறப்பியல்பே உயிர், பூத அழிவிற்குப்பின் உயிரில்லை, எல்லாம் இயற்கையின் தோற்றம் என்பதே அவர்கள் உயிரைப்பற்றிக் கொண்டிருந்த மெய்யறிவாகும். உலக உயிர்களனைத்தையும் பரம்பொருளான பிரம்மம் படைத்ததென்னும் பிறர் கருத்தினை வெல்லவேண்டி, உலகியல் சார்ந்த மெய்யறிவுக் கோட்பாட்டை வேறுவகையில் விளக்க முன்வந்தனர் தமிழர். அறிவியல் வளர்ச்சி இல்லாத அக்காலத்திலேயே மாந்தர் வாழும் இஞ்ஞாலத்தைப் பற்றியும், பிற உலகங்களைப் பற்றியும் ஆய்ந்து அறிந்த அவர்கள், பிறர் கூறிய பிரபஞ்சம் ஒரு மாயை முற்பிறவியில் செய்த வினை பிற்பிறவியிலும் தொடர்ந்து துன்பங்களைத் தரும் என்பனபோன்ற கோட்பாடுகளைச் சாடினர். இதற்கு அவர்கள் கொண்ட எதிர்ப்புக் கருவி இயற்கையின் இயல்பு நவிற்சியேயாகும். இதனைப் 'பொருளியம்' என்றும் கூறலாம். இப் பொருளியமே தமிழரின் மெய்ப்பொருளியலாகும். எனினும் பிறர் கருத்துகளின் தாக்கத்தால் பிறவிக்கோட்பாடுகளையும், வினைப்பயனையும் நாளடைவில் ஏற்றுக்கொண்டனர் எனத் தெரிகிறது.

பின்னர் உயிர் உடலோடு இணைந்து உலகில் வாழும்போது பலவகையான பொருள்களையும் துய்த்து, அவ்வாறு துய்த்தலின் வழி (செயல்வழி) இன்ப துன்பங்களைப் பட்டு, கடைசியில் உடலைப் பிரிந்துவிடுகிறது என்னும் கோட்பாட்டைக் கொண்டனர். அது உடலோடு கூட்டுச்சேர்ந்து இயங்கிய காலத்தில் தன் செயல் வழிப் பெற்ற பலனுக்கேற்ப மறுபிறவியெடுக்கிறது அல்லது இறைவனோடு கலக்கிறது. இத்தகைய நீண்ட பயணத்தை ஒரு சங்கிலித் தொடராகவும், அச் சங்கிலித் தொடரால் இழுத்துச் செல்லப்பெறும் உயிரின் சேருமிடத்தை 'வீடுபேறு' அல்லது 'இறைநிலை' என்றும் கொண்டால், அச் சங்கிலியின் ஒவ்வொரு வளையமும் (செயலும்) செம்மையாக அமைந்தால்தான் அது சேருமிடத்தைச் செவ்வனே அடைய முடியும் என்பதை உணருகிறோம். எனவேதான், தமிழர்கள் சேருமிடமாகிய இறைவனை அடையுமுன் உள்ள உலகவாழ்வில் துய்க்கும் பொருள்களிலும், வாழ்வியல் செயல்களிலும் நெறியான பண்புகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றனர். உலகில் வாழும்போது எப்படியும் வாழலாம். இறைவனை வணங்கினால் போதும் என்று உலகச் சமயங்கள் உறுதி கூறியபோது, உலக வாழ்வில் செம்மையான பண்புகளைக் கடைப்பிடித்தால் உயிர் தானே அவ்விறைவனை அடையுமென்ற மெய்ப்பொருள் தத்துவத்தைக் கண்டவர் தமிழரே. தாம் போய்ச் சேரவேண்டிய ஊருக்குரிய சரியான வண்டியில் ஏறினால், தாமே அவ்வூரை அடைவதைப்போல் இவ் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதால் வானுறையும் தெய்வத்துள் தாமே வைக்கப் பெறுவர் என்பதே தமிழர் கண்ட தத்துவம். இதனால்தான் ஈண்டுச் சங்ககாலத் தமிழரின் சமயக் கோட்பாடுகளையும், அவர்கள் வழிபட்ட கடவுளரையும், வழிபாட்டு முறைகளையும் மட்டும் கூறி அமையாமல், அவர்கள் உலக வாழ்வில் கடைப்பிடித்த மெய்யுணர்வு நெறிமுறைகளையும் (தத்துவங்களையும்) கூறுகிறோம்.

தொல்காப்பியர் கண்ட தத்துவம்

சங்க இலக்கியங்களில் மிகவும் தொன்மையான தொல்காப்பியத்தில் கடவுட் கொள்கையும், வினைப்பயன் கோட்பாடும் தெற்றென விளக்கப்பெற்றுள்ளன. பழந்தமிழர் இத்தகைய கடவுள் கொள்கையினையும் நிலையாமைக் கோட்பாட்டையும், இவற்றின் பல்வேறு திறங்களையும் ஒட்டுமொத்தமாகக் 'காஞ்சி' என்றே குறித்தனர். தொல்காப்பியர் கூறும் பொருள்மொழிக் காஞ்சி, வாயுறை வாழ்த்து, செவியறியுறூஉ முதலிய துறைகள் பழந்தமிழரின் மெய்ப்பொருள் உணர்விற்கும், ஒழுக்க நெறிக்கும்

சான்று பகருகின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டே மற்றப் புறப்பாடல்களும் திகழ்வதைக் காண்கிறோம். செய் வினைக்கேற்ப உயிர்கள் கூடுவிட்டுக் கூடுபாயும் என்பதனைக் கல்லாடனார், 'பறவைகள் கூடுவிட்டுக் கூடுசென்று வசிப்பது போல' எனும் எடுத்துக்காட்டால் விளக்குவது,[2] தொல்காப்பிய ரின் இலக்கணத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டான இலக்கிய மாகும்.

இத்தகைய கடவுட் கோட்பாட்டைக் கொண்டு தமிழர்தாம் வேதங்களுக்கும் இதிகாசங்களுக்கும் உயிர்மூச்சான பல அரிய தத்துவங்களைத் தந்தனர் எனலாம். வேதப் பண்புகளைப் பிரதிபலிப்பவையே இதிகாசங்கள். இவற்றை ஒட்டுமொத்த மாக 'இந்து நாகரிகம்' என்கிறோம். இதில் உருவ வழிபாடு முழுச் சிறப்பாகக் காணப்படுகிறது. இத்தகைய பண்புகளையும், நாகரிகத்தையும், உருவ வழிபாட்டையும் ஆரியருக்கு அளித்தவர் திராவிடரே (தமிழரே) என்பதும், இவற்றில் காணப்பெறும் கிருட்டிணன், திருமால், சிவன், காளி வழிபாடுகள் தொடக்க நிலையில் திராவிடருக்கே (தமிழருக்கே) உரியவையென்றும் தத்துவமேதை டாக்டர் இராதாகிருட்டிணன் கூறுவது[3] ஏற் புடையதேயாகும்.

இறைவன் செயல்

அவரவர் செய்த வினையை அவரவரே நுகரும்படி செய் வது இறைவனது செயலாகும். இதனைப் 'பாலது ஆணை' என்று தொல்காப்பியர் அழைக்கிறார்.[4]

அரசனாகிய இறைவன் நல்லதன் நலனும் தீயதன் தீமையும் செய்தவருக்கே கிட்டச் செய்யப் பல அலுவலர்களைத் தனக்குத் துணையாகக் கொண்டிருப்பதுபோல, இறைவன் தன் பாலது ஆணையைச் செய்யப் 'பால்வரை தெய்வங்'களைக் கொண்டுள் ளான் என்பது அவர் தரும் விளக்கமாகும்:[5]

உழவனுக்கு உழைப்பால் மட்டும் பயன்கிட்டாது. விளை நிலத்தின் தன்மையும் பயனுக்குத் துணைசெய்யும். அதுபோல நல்லன செய்தால் நன்மை விளைந்துவிடும் என்பது உறுதி

---

2 கல்லாடம்

3 Radhakrishnan, S, *Hindu view of Life*, pp. 40-41

4 தொல். பொருள். களவு. 2

5 தொல். சொல். 57

யில்லை. அதனைப் பெறப் 'பால்வரை தெய்வம்' உதவும் என்கிறார்.[6]

இறைவன்

இறைவன் நல்லன தீயனவற்றைத் தான் விரும்பியோ வெறுத்தோ செய்பவன் அல்லன்; நல்லனவற்றிற்கு நன்மையும் தீயனவற்றிற்குத் தீமையும் விளையும்படி செய்துவிட்டுத் தான் செயலற்று இருப்பவன். இதனை 'வினையின் நீங்கினான்'[7] என்றும் 'பற்றற்றான்'[8] என்றும் குறிப்பிட்டுள்ளார். இறைவன் எல்லாம் அறிந்தவன் என்பதை 'விளங்கிய அறிவின் முனைவன்'[9] என்றும், 'வாலறிவன்'[10] என்றும் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய இறைவனுக்குப் பிறப்பு இல்லை என்றும் கருதினார்.[11]

வழிபாட்டால் நன்மை உண்டு

தெய்வத்தை வழிபட்டால் அத் தெய்வம் வழிபடுவோரின் புறத்தே நின்று அவரைக் காத்து வரும் என்று தமிழர்கள் நம்பினர். நல்லவர்கள் வாழ்ந்தாலும் வாழ்த்தப்படுவோர்க்கு இப்பேறு கிடைக்குமென்று நம்பினர்.[12]

உருவ வழிபாடு

தெய்வங்களுக்கு உருவம் சமைத்து வழிபடும் வழக்கம் கிரேக்கர்கள் இந் நாட்டிற்கு வந்தபின்தான் வழக்காற்றில் வந்தது என வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். ஆனால், கிரேக்கத் தொடர்பு இல்லாத காலத்திலேயே தெய்வங்களுக்குக் கோயில்கள் எடுத்தும், உருவங்களைச் சமைத்தும் தமிழர்கள் வழிபட்டதைச் சங்க இலக்கியங்களால் அறிகிறோம்.

இத்தகைகய உருவ வழிபாடும் இயற்கை வழிபாட்டின் வழியேதான் தோன்றியது. முல்லைநில மக்கள் தம்மைச் சூழ்ந்த

---

6 வெள்ளை வாரணன், க., 'தொல்காப்பியத்தில் தத்துவநெறிக் கொள்கைகள்; திருக்கோயில், நவம்பர், 1978

7 தொல். பொருள். மரபு. 94

8 குறள். 350

9 தொல். பொருள். மரபு. 94

10 குறள். 2

11 சிதைவில என்ப முதல்வன் கண்ணே' - (தொல். மரபு. 108)

12 'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே'
(தொல். பொருள். செய். 106)

இயற்கை எழிலையும், அதன் பின்னே அடர்ந்து காணும் கரு நிறப் பண்பையும், காட்டிடை மலர்ந்த காயாம்பூவினையும் கடவுளுக்கு ஏற்றித் திருமாலாக வழிபட்டனர். இதனைத் தொல் காப்பியர் 'பூவைநிலை' என்பார்.[13] பூவை என்பது காயாம்பூவைக் குறித்தது. அதனை உருவகமாக்கித் திருமாலை இப் பாடல் உணர்த்துகிறது. இதனைப் போலவே தொல்காப்பியம் கடவுளைக் கருப்பொருளாக வைத்து ஐவகை நிலங்களிலும் வணங்கப்பெற்றுத் தெய்வங்களை அவற்றின் நிறத்திற்கேற்ப மாயோன், சேயோன் என்றும், இடத்திற்கேற்ப வேந்தன், வருணன் என்றும் குறித்தமை காணலாம்.[14] இதனால் உருவ வழிபாடு தமிழரிடையே தொன்றுதொட்டே இருந்தமை புலனா கிறது.

தெய்வத்திற்குத் தனி உருவம் அமைத்து அவ்வுருவத்தின் முன்னின்று வழிபடுதல் தமிழர் மரபு.[15] தெய்வத்தின் முன்னின்று சூளுரை செய்யும் வழக்கமும் தமிழரிடம் உண்டு.[16] சூளுரை யிலிருந்து தவறினால் தீமை விளையும் என்றும் நம்பினர்.[17]

திருமணமும் தெய்வமும்

ஒருவனும் ஒருத்தியும் ஒன்றுசேர்ந்து நடத்தும் திருமண நிகழ்ச்சி தெய்வத்தால்தான் நிகழ்கிறது என்று தமிழர் கருதினர்.[18]

தெய்வக் கடன்

தெய்வம் தமக்குச் செய்யும் நன்மைக்காகத் தெய்வத்திற்குக் கைம்மாறாக ஏதாவது செய்யவேண்டும் என்று விரும்பினர்.

---

13 'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்' (தொல். பொருள். புறத். 5:9-10)

14 'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.' (ஷெ அகத். 5)

15 'தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே' (ஷெ செய். 138)

16 'திருமணி விளக்கின் அலைவாய்ச்
செருமிகு சேஎயொ டுற்ற சூளே.' (அகம். 266:20-21)

17 'இன்னாத் தொல்சூள்' (தொல். பொருள். கற்பு. 6:35)

18 'நாமக் காலத்து உண்டெனத் தோழி,
ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்' (ஷெ கற்பு. 5:8-9)

இதனைத் தெய்வம் ஏற்றுக்கொள்கிறதா என்று பார்ப்பது அவர்கள் நோக்கம் அன்று. தம் நன்றி உணர்வைச் செயலால் வெளிப்படுத்தத் துடித்த தமிழரது உணர்வே அது ஆகும்.[19]

எல்லாம் இறைவன் செயல்

அரசன் பகைவனை வெல்லல் (கொடிநிலை), பகைவனின் வலிமையை அழித்தல் (கந்தழி), எல்லோருக்கும் கொடை வழங்குதல் (வள்ளி) ஆகிய செயல்கள் எல்லாம் இறைவன் திருவருளால் தான் நிகழ்கின்றன என்று கருதினர்.[20]

கடவுளைக் கணவனாக எண்ணல்

கடவுளைக் கணவனாகவும் தன்னை மனைவியாகவும் எண்ணிப் போற்றுவது பழந்தமிழருடைய மரபாகும்.[21]

மக்கள் அடையும் உறுதிப்பொருள்

மக்கள் அடையும் உறுதிப்பொருள்கள் மூன்றே. வேட்கை முறையில் இன்பம், பொருள், அறம் என்றும்[22] செய்கை முறையில் அறம், பொருள், இன்பம் என்றும்[23] அவை வரிசைப்படுத்திக் கூறப்படும். இவை மூன்றுமே வாழ்க்கையின் பகுதிகள்.[24]

தெய்வம் ஏறி ஆடல்

மக்கள்மேல் நின்று தெய்வம் அவர் வாழ்வழி உரைப்பதாகத் தமிழர் எண்ணினர்.[25] தொடர்பின்றி அறியாமல் பிறர் வாயிலிருந்து வெளிவரும் விரிச்சிச் சொல்லையும் அவ்வாறு நம்பினர். புள்நிமித்தம், கழற்சிக்காய் விழுதலின் பயன்,[26] பல்லி ஒலி முத

---

19 'அற்ற மில்லாக் கிழவோற்குச்
சுட்டிய தெய்வக் கடத்தினும்' (தொல். பொருள். 148:3-4)

20 'கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே' (ஷை 85:1-3)

21 'காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்' (ஷை 81)

22 'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு' (ஷை 89)

23 'அறமுத லாகிய மும்முதற் பொருட்கும்'
திருக்குறள் அமைப்பு முறை (ஷை 411)

24 'மூன்றன் பகுதி' (ஷை 44:17)

25 'வெறியாட்டம்' (ஷை 109:24)

26 'கட்டினும் கழங்கினும்' (ஷை 113:3)

லான பல்வேறு வகைகளில் தெய்வத் திருவாக்குக் கிடைப்பதாகக் கருதினர்.

ஒழுக்கம்

அறநெறியில் வழுவாமை 'கட்டமை ஒழுக்கம்'[27] எனப்பட்டது. அந்தணர், சான்றோர், மற்றையோர் முதலான எல்லாரிடத்திலும் ஒழுக்க நெறி தவறாது நடந்துகொள்ளவேண்டும்.[28] பெரியோர்களின் ஒழுக்கம் மிகவும் பெரிதாகப் போற்றப்பட்டது.[29] ஒழுக்கம் உயிரைக் காட்டிலும் சிறந்தது.[30] ஒழுக்கத்திலிருந்து தவறுதல் கொடுமை எனவும், இவ்வொழுக்கக் கேடே அவனைத் தாக்கும் என்பதும் பண்டைய தமிழரின் நம்பிக்கை.[31]

துறந்தார் பண்பு

ஐம்புல நுகர்ச்சியில் தமக்குள்ள பற்றினைத் துறப்பது துறவு.[32] இத் துறவினர் உலகிலுள்ள உயிர்களிடத்திலுள்ள அருளுடைமையைத் துறந்தவர்கள் அல்லர்.[33] குணக்குன்றாய் விளங்கும் இவர்கள் சினம் கொள்ளின், அதனை யாராலும் மாற்றவோ தாங்கிக்கொள்ளவோ முடியாது;[34] இவர்கள் எண்வகை இயல்புகளை உடையவர்.[35]

---

27 தொல். பொருள். 75:18

28 'அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்
அந்தமில் சிறப்பிற் பிறர்பிறர் திறத்திலும்
ஒழுக்கம் காட்டிய குறிப்பு' (தொல். பொருள். 144:15-17)

29 'பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து' (ஷை 148:16)

30 'உயிரினும் சிறந்தன்று நாணே, நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றுஎனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு' (ஷை 111:13)
'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.' (குறள். 131)

31 'கொடியோர் கொடுமை சுடும்' (தொல். பொருள். 145:25)

32 'காமம் நீத்தபால்' (ஷை 75:23)

33 'அரும்பகை தாங்கும் ஆற்றல் (ஷை 75.8)

34 'குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி,
கணமேயும் காத்தல் அரிது' (குறள். 29)

35 'நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும்' (தொல். பொருள். 74:6
1. நீராடல், 2. நிலத்திடைக் கிடத்தல், 3. தோலுடுத்தல், 4. சடைபுனைதல், 5. எரியோம்பல், 6. ஊரடையாமை, 7. காட்டில் கிடைத்தன உண்ணல், 8. கடவுள் வழிபாடும் விருந்தோம்பலும் என்பவை அந்த எட்டு இயல்புகள் என்பர். இளம். உரை

தமிழரின் இந்தத் துறவுக் கோட்பாடு இளமைத் துறவை அடிப்படையாகக் கொண்டது அன்று (வடமொழியாளரின் பிரம்மசரியத் தத்துவம் இளமைத் துறவின் பாற்படும்). இல்லற வாழ்வில் எல்லா இன்பங்களையும் துய்த்து, பின்பு துய்க்கும் நாள்களைத் தம் மக்களுக்கு விட்டுவிட்டு முதுமையில் துறக்கும் துறவே தமிழரின் துறவுத் தத்துவமாகும்.[36] 'சிறந்தது' என்று அவர்கள் கடவுளைக் கொண்டனர். 'மெய்ப்பொருள்' என்றும் அதனைக் கூறினர்.[37] பிறவா நெறி வேண்டியே இவர்கள் துறவு பூண்டனர் எனலாம்.[38] இத்தகைய துறவு, உலகைத் துறப்பதன்று; மனத்தால் தன்னலத்தைத் துறப்பதாகும்.

புறநானூறு கூறும் பட்டாங்குகள்

உலக அமைப்புப்பற்றிய கோட்பாடு

மக்கள் வாழும் இப் பெரிய பூவுலகம் கடலால் சூழப்பெற்றதென்பதும், அக் கடல் ஆலிலை போன்றதென்பதும் சங்கத் தமிழர்கள் கொண்டிருந்த இவ்வுலக அமைப்புப் பற்றிய கருத்து ஆகும்.[39]

இவ்வுலகத்திற்கு மேலே கோள்களுடன் புலப்படும் விண்வெளியை 'ஆனிலை உலகம்' என்றும், கீழே உயிரினங்கள் வாழும் ஆழ்கடலை 'நீர்நிலை நிவப்பின்கீழ்' என்றும்,[40] 'ஆங்கு நிறையும் உலகம்' என்றும்[41] அழைத்தனர். கோள்களுடன் தோற்றமளிக்கும் விண்வெளியை மேலுலகமென்றும், நீருடன் கூடிய ஆழ்கடலை அளறு[42] அல்லது கீழுலகமென்றும் அழைத்தனர்.

---

36 'காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.'
(தொல். பொருள். 190:1-4)

37 குறள். 358

38 ஷை 356, 357

39 'இருங்கடல் உடுத்தஇப் பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவணது' (புறம். 363:1-2)

40 'கீழது, முப்புண ரடுக்கிய முறைமுதற் கட்டின்
நீர்நிலை நிவப்பின் கீழும் மேலது
ஆனிலை யுலகத் தானும்' (ஷை 6:5-7)

41 ஆன்நிலை உலகம், ஆ - சேய்மைக்கட்டு
ன் - போலி

42 சேறு

இயற்கைத் தோற்றத்தைக்கொண்டே இத்தகைய பாகுபாடுகளைக் கண்டனர்.

ஊழ்வினைக் கோட்பாடு

இவ்வாறு, இயற்கையினடிப்படையில் மேலுலகு (வான் உலகு), கீழுலகு (பாதாள உலகு) எனக் கண்ட தமிழர் காலப் போக்கில் மேலுலகத்தை நல்லுலகமாகவும், கீழுலகத்தைத் தீய உலகமாகவும் கற்பித்துக் கொண்டனர்.

ஒருவன் செய்யும் நல்வினை, தீவினைக்கேற்ப நன்மை தீமையை அடைவான் என்ற கோட்பாடு காலப்போக்கில் ஊழ்வினை, மறுபிறப்பு, மோட்சம், நரகமென உருவாயிற்று. ஊழ்வினையால் ஒருவன் மோட்சத்தையோ நரகத்தையோ அடைவானென்றும், மோட்சம் இன்பமயமானதென்றும், நரகம் மீளாத் துன்பமுடையதென்றும் கொள்ளப்பெற்றன.

இந்த உலகத்தில் புகழைத் தேடிக்கொண்டவர்கள் மேல் உலகை அடைவார்கள்.[43] இவர்கள் ஆள் இருந்து ஓட்டாத 'வான ஊர்தி'யின் வழியே மேலுலகம் செல்வர்.[44] போரில் மாண்டவர் மேலுலகிலுள்ள குற்றமற்ற மகளிரை மணந்து மகிழலாம்.[45]

அன்பும் அருளும் இல்லாது உயிர்களைத் துன்புறுத்துவோர் கீழுலகமாகிய நிரயத்தில் நீங்காத துன்பத்தை அடைவர்[46] என்றெல்லாம் கொண்டனர்.

ஊன்றி நோக்கும்போது நல்ல செயல்களைச் செய்து புகழ் அடைவோர் வானத்து மீன்களைப்போல் புகழால் ஒளிபெற்றுத்

43 'இவண்இசை உடையோர்க்கு அல்லது அவணது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்' (புறம். 50:14-16)

44 'புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான வூர்தி
எய்துப என்பதம் செய்வினை முடித்துஎனக்
கேட்பல்' (ஷை 27:7-10)

45 'ஓடல் செல்லாப் பீடுடை யாளர்
நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை
....
மாசின் மகளிர் மன்றல் நன்றும்
உயர்நிலை உலகத்து நுகர்ப' (ஷை 287:7.12)

46 'அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவர்' (ஷை 5:5-6)

திகழ்வாரென்றும், தீயசெயல் செய்து மடிவோர் இருண்டு கிடக்கும் நீருள் வாழும் உயிரினங்களைப்போல் ஒளியற்றுக் (புகழற்று) கிடப்பரென்றும் கொண்ட கோட்பாடே பின்னர் மோட்சம் நரகமாகின எனலாம்.

மனிதன் சோம்பித் திரிதல் கூடாது; செயற்கரிய செயல்களைச் செய்தல்வேண்டும். அச் செயலும் பிறருக்கு நன்மை பயக்கக்கூடியதாயிருத்தல் வேண்டுமென்னும் கருத்தை வலியுறுத்தவே எல்லோரும் நல்ல செயல்களையே செய்யவேண்டும்; அவ்வாறு செய்யாதிருந்தால் மறுபிறவியில் தாழ்ந்த மக்களாகவோ, இழிந்த உயிராகவோ பிறந்து துன்புற வேண்டிவரும்[47] என்றனர்.

செய்ய வேண்டுவதற்கான செயல்களைத் தேர்ந்தெடுக்கும்போது உயர்ந்த செயல்களையே தேர்ந்தெடுக்க வேண்டும்.[48] அற்பமான எளியவரும் செய்யக்கூடிய செயலில் வெற்றி பெறுவதைக் காட்டிலும் செயற்கரிய செயலைச் செய்ய எண்ணி முயன்று, அம் முயற்சியில் தோல்வி கண்டாலும் அதுவே மிகவும் நல்லது. முயல் வேட்டையில் வெற்றி காண்பதைவிட யானை வேட்டையில் தோல்வியுற்றாலும் யானை வேட்டையே சிறந்தது.[49] யானை வேட்டைக்குச் சென்றவன் தோல்வியுற்றுத் தான் திரும்புவான் என்பதில்லை. அவன் யானையை வீழ்த்தி வெற்றியடையவும் முடியும். அதே நேரத்தில் காடை போன்ற சிறு பறவையை வேட்டையாடச் சென்று வெறுங்கையுடன் வருபவர்களும் உண்டு. எனவே, உயர்ந்ததைச் செய்து உயர வேண்டும். இவ்வாறு உயர்ந்தவர்களுக்கு மேலுலக இன்பம் கிடைக்கும். (தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்.) அவ்வாறன்றி மறுபிறவி அவர்களுக்கு வாய்க்காமல் போய்விடுமாயினும் பரவாயில்லை. இந்த உலகில் அவர்களது புகழ் என்றும் நின்று நிலவும்.[50]

---

47 'தென்புலங் காவலின் ஒரீஇப்பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே.' (புறம். 71:18-19)

48 'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து'. (குறள். 596)

49 'கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது' (குறள். 772)

50 'யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால், உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கின் எய்தல் உண்டெனின்
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்'. (புறம். 214:3-8)

சிலர், மறுபிறவி உண்டென்று நம்பினர். சிலர், மறுபிறவி இல்லை என்று கூறினர். எப்படியாயினும் நல்வினையாலும், உயர்ந்த செயலாலும் இந்த உலகத்தில் புகழ் நிலைபெறும். புகழே இல்லாமல் போனாலும் நற்செயல் புரிவோரின் யாக்கைக் குத் திண்மை உறுதியாகும். தீதற்ற வாழ்க்கை வாழ்வதே மிக உயர்ந்த பேறாகும் என்பது தமிழரின் பட்டாங்காகும்.[51]

தனது செயல் சிறந்ததாகவும், பிறருக்கு நன்மை பயக்கக் கூடியதாகவும், அதனால் தனக்கு அழியாத ஒளிதரும் புகழைச் சேர்க்கக் கூடியதாகவுமிருத்தல் வேண்டும். இத்தகைய உயர்ந்த குறிக்கோளுடனேயே வாழ்தல் வேண்டும், இத்தகைய குறிக்கோள் (பூட்கை) இல்லாதவனுடைய உடம்பு அற்பத்தன மாய் வாடி இருந்த இடம் தெரியாமல் (புகழின்றி) அழியுமாம்.[52]

ஒருவனை நன்னிலையில் வாழச் செய்வது அவன் செய்த நல் வினையே. அந்த நல்வினை என்னும் தெப்பம் ஒன்றுதான் அவன் இறக்கும்போது உதவி, மறுபிறவியில் நலமடையச் செய்யும்.[53]

'இறைவனது திருவடியாகிய தெப்பம் பிறவிக்கடலைக் கடக்க உதவி, பிறவா நெறியை உண்டாக்கும்'[54] என்று கடவுளின் அடியார்கள் நம்பியது போலவே, நற்செயல்கள் புரிவதால் அடை யும் விளைவு நற்செயல் செய்பவன் இறந்த பின்பும் நன்னிலை அடையச் செய்யும் என்றும் கருதினர்.

மறுப்புக் கோட்பாடு

நல்லன செய்வோர் நன்மை அடைவர் என்றும், தீயன செய் வோர் தீமை அடைவர் என்றும் தமிழர்களுள் பெரும்பாலோர்

---

51 'தொய்யா உலகத்து நுகர்ச்சி இல்லெனின்
மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்
மாறிப் பிறவா ராயினும் இமயத்துக்
கோடுஉயர்ந்தன்ன தம்இசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தறவத் தலையே.' (புறம். 214:9-13)

52 'பூட்கை யில்லோன் யாக்கை போலப்
பெரும்புல் லென்ற இரும்பேர் ஒக்கல்' (ஷெ 69:5-6)

53 'வாழச் செய்த நல்வினை யல்லது
ஆழுங் காலைப் புணைபிறிது இல்லை
....
யான்அறி அளவையோ இதுவே' (ஷெ 367:10-15)

54 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.' (குறள். 10)

நம்பினர். அதே நேரத்தில் நல்லன செய்து செம்மையுடன் வாழ்பவர்களும் வாழ்க்கை நிலையில் கெட்டுச் சீரழிந்து துன்பமுடன் வாழ்ந்துகொண்டிருந்த நிலையும் உண்டு.[55] இதனை எண்ணிப் பார்த்த சிலர் நல்லனவற்றால் நன்மையடைதலோ தீயனவற்றால் தீமையடைதலோ உறுதியாக நிகழும் செயல் அன்று என்று மறுத்தனர்.[56] எனினும், இவர்களைச் சான்றோர்கள் மதிக்கவோ நண்பர்களாக ஏற்கவோ இல்லை.

செயல்திட்டம் உடையவராய்ச் செயலாற்றின் எண்ணிய ஒன்றை எண்ணியவாறே அடையலாம் என்று தமிழர் நம்பினர்[57] எனினும், யாராலும் முடியாத செயல் ஒன்றைச் செய்ய முடியும் என்று சொல்லிப் பிறரைக் கெடுக்கும் மக்களும் இருந்தனர். இவர்களைப் போலவே தங்களால் செய்யமுடியும் ஒன்றைச் செய்ய இயலாது என்று கூறுபவர்களும் இருந்தனர். இவர்களது செயலால் மற்றவர்கள் துன்புற்றனர்.[58]

வாழ்க்கை இன்பமுடன் வாழ்வதற்கே

இந்த உலக வாழ்வு நிலையில்லாதது.[59] உலகம் ஒரு நாடக மேடை. உலகிலுள்ள மக்களெல்லாம் அதில் ஆடும் ஆட்டக்காரர்கள். இவர்கள் தத்தம் நாடகம் முடிந்தவுடன் போய்விடுவார்கள். எனவே, இந்த உலகில் வாழும்பொழுதே இன்பமுடன் வாழ்ந்து மகிழவேண்டும்.[60]

---

55 'அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்' (குறள். 169)

56 'நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
இல்லை யென்போர்க்கு இன்னா கிலியர்' (புறம். 29:11-12)

57 எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.' (குறள்.666)

58 'ஒல்லுவது ஒல்லும் என்றலும் யாவர்க்கும்
ஒல்லாது இல்என மறுத்தலும் இரண்டும்
ஆள்வினை மருங்கின் கேண்மைப் பாலே
ஒல்லாது ஒல்லும் என்றலும் ஒல்லுவது
இல்என மறுத்தலும் இரண்டும் வல்லே
இரப்போர் வாட்டல்' (புறம். 196:1-6)

59 'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே' (ஷை 165:1-2)

60 'விழவில்,
கோடியர் நீர்மை போல முறைமுறை
ஆடுநர் கழியும்இவ் வுலகத்துக் கூடிய
நகைப்புறன் ஆகநின் சுற்றம்
இசைப்புறன் ஆகநீ ஓம்பிய பொருளே.' (ஷை 29:23-26)

நாடாண்ட மன்னர்கள் ஆனாலும் (சுடு)காடு செல்வது உறுதி.[61] இந்த நிலையில் ஈசல்போல் ஒருநாள் வாழ்க்கைக்காக உல்லாசமாகத் திரியும் மக்களும் உள்ளனர். அவர்கள் நிலைமை மிகவும் வருந்தத்தக்கது.[62]

வாழ்வோடு, உடலிலுள்ள இளமைகூட நிலையில்லாதது; ஆண்டுகள் மாண்டுகொண்டேயிருப்பதால் இது நிகழ்கிறது.[63] செல்வமும் எப்பொழுதும் ஒருவனுக்கே துணையாக இருப்பதில்லை. துணை செய்யாவிட்டாலும் ஒருவனிடம் அது நிலைத்தாவது நிற்குமா என்றால் நிலைத்தும் நிற்பதில்லை அச்செல்வம்.[64]

உலகத்தில் முன்பு பிறந்தவர்கள் செத்துவிட்டனர். பின்பு பிறந்து வாழ்பவர்கள் சாகப் போகிறார்கள். தான் உயிர்வாழ்வதை எண்ணி நிலம் என்னும் பெண்ணும் அழுவதாக உலகியலை நன்கு எண்ணிப் பார்த்தனர்.[65]

உலக வாழ்வு நிலையில்லை. வாழுங்கால இளமை நிலையில்லை. வாழ்வுக்குத் துணையாகும் செல்வம் நிலையில்லாதது. இவ்வாறு எல்லாமே நிலையில்லாதபோது இருக்கும்வரை இன்பமாக வாழ்ந்து மகிழவேண்டுமெனக் கொண்ட தமிழர், நிலையானது என்று கருதியது ஒன்று உண்டு. அதுதான் புகழ் அல்லது இகழ்.[66]

---

61 'காடுமுன் னினரே நாடுகொண் டோரும்' (புறம். 359:8)

62 'நுண்பல சிதலை அரிதுமுயன் றெடுத்த
செம்புற்று ஈயல் போல
ஒருபகல் வாழ்க்கைக்கு உ லமரு வோரே.' (ஷெ 51: 9-11)

63 'பொதுமை சுட்டிய மூவர் உலகமும்
பொதுமை இன்றி ஆண்டிசி னோர்க்கும்
மாண்ட அன்றே யாண்டுகள் துணையே
வைத்தது அன்றே வெறுக்கை.' (ஷெ 357:2-5)

64 'செல்வமு மன்னி நில்லாது
இன்னும் அற்றுஅதன் பண்பே' (ஷெ 360:11-12)

65 'முன்னோர் செல்லவும் செல்லாது இன்னும்
விலைநலப் பெண்டிரின் பலர்மீக் கூற
உள்ளேன் வாழியர் யான்எனப் பன்மாண்
நிலமகள் அழுத காஞ்சியும்
உண்டென உரைப்பரால் உணர்ந்திசி னோரே.' (ஷெ 365:7-11)

66 'வசையும் நிற்கும் இசையும் நிற்கும்
அதனால், வசைநீக்கி இசைவேண்டியும்
நசைவேண்டாது நன்றுமொழிந்தும்
... ...
கொள்என விடுவை ஆயின், வெள்ளென
ஆண்டுநீ பெயர்ந்த பின்னும்
ஈண்டுநீடு விளங்கும்நீ எய்திய புகழே.' (ஷெ 359:10-18)

இன்பமும் துன்பமும் இயற்கையின் நியதிப்படியே வரும்

ஒரே நேரத்தில் ஒரு வீட்டில் அழுகை ஒலி; மற்றொரு வீட்டில் மண முழக்கம். இதனை எண்ணும் மற்றையோருக்கு உலக வாழ்வின் கொடுமை புரியும். அவ்வாறு புரியும்போது என்ன செய்யவேண்டும்? துன்ப நிகழ்ச்சிகளையும் இன்ப உணர்ச்சிகளாகக் கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.[67]

சாவு என்பது இந்த உலக மக்களுக்குப் புதியது அன்று. அதற்காக வாழ்வே வேண்டா என்று கூற முடியாது. பிறந்துவிட்டோம் வாழ்ந்துதான் ஆகவேண்டும். இந்த வாழ்வு இன்பமும் துன்பமும் நிறைந்தது. மகிழ்வு வரும்போது உலக வாழ்வைப் போற்றுவதோ, துன்பம் வரும்போது பழிப்பதோ கூடாது. இன்பமோ, துன்பமோ பிறரால் நமக்கு வருவதில்லை. இயற்கையின் நியதிப்படியே இன்பமும் துன்பமும் வருகின்றன. நமக்குத் துன்பம் வருவதும், அந்தத் துன்பம் நீங்குவதும் மலையருவியில் மிதந்துவரும் தெப்பக்கட்டைபோல அதன்போக்கில் போய்க்கொண்டிருக்கும். இதனை மெய்யுணர்வுக் காட்சியால் தெளிந்து வாழ்வாங்கு வாழ்ந்து இன்புற்றிருக்கவேண்டும்.[68]

இந்தத் தத்துவத்தை உணர்ந்த தமிழர்கள் வாழ்க்கையில் எந்த அளவுக்கு எந்த வகையில் இதனைக் கடைப்பிடித்தனர்?

---

67 'ஓரில் நெய்தல் கறங்க ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
... ...
படைத்தோன் மன்றஅப் பண்பி லாளன்
இன்னா தம்மஇவ் வுலகம்
இனிய காண்கஇதன் இயல்புஉணர்ந் தோரே.' (புறம். 194)

68 'யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்,
இன்னாது என்றலும் இலமே மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ... ...' (புறம். 192;1-11)

உலகில் எந்த இடமானாலும் அது தாம் வாழும் ஊர்தான்; எங்கு வாழ்ந்தாலும், எப்படி வாழ்ந்தாலும், உலகில் வாழும் மக்கள் அனைவரும் உறவினர்கள்தாம் என்று கொண்டனர்.[69]

உலகில் சிலர் தம் மாட்சிமை மிக்க செயலால் பெரியோராகு விளங்கலாம். அவர்களைக் கண்டு வியப்படையும் செயல் பெரிது அன்று. சிலர் சிறியோராய்த் தாழ்வுற்றிருக்கலாம். அவர்களை இகழ்வதென்பது அறவே கூடாது. பெரியோரை வியந்து பாராட்டும்போதுகூடச் சிறியோரை இகழ்ந்துரைத்தல் வேண்டா.[70] இது தமிழர் கடைப்பிடித்த தலையாய தத்துவங்களில் ஒன்று.

துறவு

துறவு என்பது பற்றற்ற வாழ்க்கை. அந்த வாழ்க்கை தவம் என்று கூறப்படும். ஒருவரது தவத்தின் மதிப்பையும் இவ்வுலகிலுள்ள செல்வங்கள் எல்லாவற்றின் மதிப்பையும் சீர்தூக்கிப் பார்த்தால் தவத்தின் மதிப்பே மேலானது. திருமகள் பற்றற்ற தவமுடையாரிடம் சென்று அவரை விடாது வாழ்கிறாள். பிறரோ செல்வத்திடம் பற்றுக்கொண்டு அவளை அழைக்கின்றனர். அவளோ அவர்களை விட்டுவிட்டுச் சென்றுவிடுகிறாள்.[71]

தமிழரின் துறவு, மக்களையோ செல்வத்தையோ புறத்து ஒதுக்கிவிட்டுக் காட்டிற்குச் சென்று தவம் செய்வது அன்று. மக்களோடு மக்களாய், செல்வ நலங்களுடன் வாழும்போதே அவற்றின்மீது பற்றில்லாமல், அதாவது மக்களும் செல்வமும் தமக்கே உரியன என்று கொள்ளாமல் எல்லாருக்கும், எல்லா உயிர்களுக்கும் உதவும் வகையில் தம் மக்களையும் செல்வத்தையும் வழங்கி வாழ்வதாகும்.

செல்வமும் நுகர்தலும்

எல்லாரும் உண்டும், தின்றும் இன்பமுடன் வாழவே விரும்புகின்றனர். தாமும் உண்டு பிறருக்கும் உண்ணக் கொடுத்து அவர்

---

69 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' (புறம். 192:1)

70 'மாட்சியின்,
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.' (ஷை 192:11-13)

71 'வையமும் தவமும் தூக்கின் தவத்துக்கு
ஐயவி அனைத்தும் ஆற்றாது ஆகலின்
கைவிட் டனரே காதலர் அதனால்
விட்டோரை விடாஅள் திருவே
விடாஅ தோர்இவள் விடப்பட் டோரே.' (ஷை 358:3-7)

மகிழ்வதைக் கண்டு தாமும் மகிழ்தல் வேண்டும். இவ்வாறு மகிழ்வதற்கே செல்வம் நம்மிடையே ஒப்படைக்கப்பெற்றது என்பதே தமிழரின் கோட்பாடாகும்.[72]

அரசரானாலும், கல்லாதவரானாலும் உண்பவை நாழி அளவே. உடுப்பவை (அக்காலத்தில்) உடை, மேலாடை என்னும் இரண்டே. எனவே, மிகுதியாகச் செல்வம் இருந்தாலும் அச் செல்வம் முழுவதையும் ஒருவனே துய்க்க முடியாது. துய்ப்பதற்குக் காலமும் போதாது. எனவே, செல்வம் பெற்றதன் பயன் பிறருக்குக் கொடுத்துத் துய்க்கும்படி செய்தல்வேண்டும்.[73]

இத்தகைய செல்வமும், செல்வத்தாலும் பிறவற்றாலும் பெறும் இன்பமும் ஒருவருக்கு அறவழியில் கிடைக்கின்றன என்றும், அவ்வழியில்தான் அவற்றைப் பெற முயலவேண்டும் என்றும் தமிழர் விரும்பினர்.[74]

இந்த வகையில் அறம், பொருள், இன்பம் என்னும் பேறுகளில் அறப்பேறே தமிழர் தத்துவத்தில் தலைமையிடம் பெறுகிறது.

இயற்கையை வெல்ல முடியாது

உலகில் இயற்கையாக அமைந்துள்ள நீர், நெருப்பு, காற்று முதலான பொருள்கள் வலிமைமிக்கவை. அவற்றை வெல்லும் ஆற்றலை மனிதன் பெற்றிருக்கவில்லை என்பது தமிழர்களுடைய கோட்பாடு.[75]

வெற்றி-தோல்வி, உயர்வு-தாழ்வு பற்றிய தத்துவம்

ஒருவர் வெற்றி அடைந்தால் யாராவது ஒருவர் தோல்வி அடைந்தே தீரவேண்டும். ஒருவர் உயர்ந்தவராய் இருந்தால் மற்றொருவர் தாழ்ந்தவராய் இருந்தாகவேண்டும். இரு தரப்

---

72 'உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே.' (புறம். 189:5-8)

73 ஷை

74 'சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம்' (ஷை 31:1-2)

75 'நீர்மிகின் சிறையும் இல்லை தீமிகின்
மன்னுயிர் நிழற்று நிழலும் இல்லை
வளிமிகின் வலியும் இல்லை' (ஷை 51:1-3)

பினரும் வெற்றி பெற்றுவிடுவதோ, எல்லோரும் உயர்ந்தவராய் இருப்பதோ உலக வாழ்வில் முடியாத செயலாகும்.[76] எனவே, உயர்வு-தாழ்வு பற்றியும் வெற்றி-தோல்வி பற்றியும் கவலைப் படாது நல்லனவற்றைத் தொடர்ந்து செய்துகொண்டே இருக்க வேண்டும்.

சிறந்த அறிவு நலமுடையவர்கள் தம் வாழ்க்கையைச் செம்மையாக அமைத்துக்கொண்டு செல்வச் செழிப்போடு வாழ்வார்கள் என நாம் எதிர்பார்க்கலாம். என்றாலும் இது எல்லா நிலையிலும் பயன்படுவது இல்லை. சிலர் வறுமையில் வாடத்தான் செய்கின்றனர். இதற்கான காரணத்தையும் நம்மால் அறிந்து கொள்ள முடியவில்லை; மேலும் மேலும் எண்ணிப் பார்க்கக் கூடிய ஒன்றாக உள்ளது.[77]

உடல், உயிர் பற்றிய தத்துவம்

மனிதனின் உடல், உணவு உண்டு வளர்வதால் அதனை உணவின் பிண்டம் எனக் கூறலாம். உடம்பு இருந்தால்தான் உயிர் அதில் இருக்கமுடியும். உயிரே மேலானது என்றாலும் உடம்பைப் பாதுகாத்தல் இன்றியமையாதது. எனவே, ஒருவருடைய உயிரைப் பாதுகாக்க விரும்பினால் வேண்டிய உணவை அவருக்குக் கொடுத்து அவரது உடலைப் பேணினாலே போதும். இவ்வாறு தமிழர் தத்துவத்தில் உணவுக்கொடை உயிர்க்கொடையாகக் கருதப்பட்டது.[78]

நல்லதும் தீயதும்பற்றிய தத்துவம்

எல்லோருக்கும் நல்லது பயக்கக் கூடியவற்றைச் செய்ய வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும். சில வேளை நல்லது செய்ய முடியாவிட்டால் அவருக்குத் தீமையாவது செய்யாதிருக்க வேண்டும்.[79]

---

76 'இருவீர் வேறல் இயற்கையும் அன்று' (புறம். 45:6)

77 'நல்லறி வுடையோர் நல்குரவு
உள்ளுதும்' (ஷை 197:17-18)

78 'நல்லிசை நிறுத்தல் வேண்டினு மற்றதன்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்' (ஷை 18:16-20)

79 'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே.' (ஷை 195:7-10)

இத்தகைய நல்லவர் நாட்டிலும் காட்டிலும் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் வாழும் இடம் சிறந்த இடமாக எல்லோராலும் கருதப்படும்.[80]

இனம் இனத்தைச் சாரும் என்னும் தத்துவம்

உலகில் நல்லவர்கள் நல்லவர்களையே சார்ந்து வாழ்வார்கள். தீயவர்கள் தீயவர்களையே சார்ந்து வாழ்வார்கள். நல்லவர்களைத் தீயவர்கள் சார்ந்து வாழ்வார்களேயானால், அந்த வாழ்வில் உள்நோக்கம் நன்னோக்கமாய் இருக்க முடியாது. நல்லவர்கள் தீயவர்களைச் சார்ந்து வாழ்வார்களேயானால் தாம் நல்ல பெயரை இழப்பதோடு மட்டுமன்றி, அந்தத் தீயவர்களைக் கெடுக்கக்கூடிய தோல்வியையே தாமும் காணவேண்டிவரும்.[81]

வல்லாண்மைக் கோட்பாடு

ஒருவனை ஒருவன் அடித்துத் தாக்குவதும் அப் போரில் ஒருவனோ இருவருமோ தொலைதலும் இந்த உலகத்தில் புதிதாக நடக்கும் செயல் அன்று. என்றென்றும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.[82] இதனை நீக்க முடியாதென்றாலும் சிறிது மாற்றம் செய்ய முயலலாம்.

உலக நிலைபேற்றுத் தத்துவம்

முன்பு அறிமுகமான ஒருவர்மீது இயல்பாகத் தோன்றும் மன ஈடுபாடு கண்ணோட்டம் எனப்படும். இந்தக் கண்ணோட்டம் மக்களிடத்தில் இருப்பதால்தான் உலகம் இன்றும் இருந்து கொண்டிருக்கிறது.[83]

---

80 'நாடா கொன்றோ காடா கொன்றே
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.' (புறம். 187)

81 '..................சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலர்ஆ குபவே.' (ஷை 218:5-7)

82 'ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவ தன்றுஇவ் வுலகத் தியற்கை' (ஷை 76:1-2)

83 'கண்ணோட்டம் என்னும் கழிபெரும் காரிகை
உண்மையான் உண்டுஇவ் உலகு.' (குறள். 571)

அன்புடையவர்கள் இந்த உலகத்தில் இருப்பதால்தான் இந்த உலகம் இன்று இயங்கிக்கொண்டிருக்கிறது; இல்லாவிட்டால் மண்ணோடு மண்ணாகப் போய்விடும்.[84]

உலகில் நிலைபேற்றுக்கான தத்துவங்களை இந்த வகையில் கண்ட தமிழர்கள் பிறருக்காகவே உலகில் வாழும் நல்லவர்கள் வாழ்வதால்தான் உலகம் நிலைபெற்று இருக்கிறது என்றும் கண்டனர். அந்த நல்லவர் சோர்வின்றி உழைப்பவர்கள் என்றும், புகழுக்காக உயிரையே கொடுப்பவர்கள் என்றும், பழி என்றால் உலகையே பரிசாகத் தந்தாலும் ஏற்கமாட்டார்கள் என்றும், இவர்களது முயற்சி தன்னலம் கருதி என்றுமே இராது என்றும், பிறரது நலன் கருதியே அமைந்திருக்கும் என்றும், இவர்கள் கொடையாளர்கள் என்றும் சிறப்பித்துப் போற்றப்படுகிறார்கள்.[85]

முயற்சி பற்றிய தத்துவம்

முயற்சி, தன்னலம் நோக்கியே அமைந்திருக்கக் கூடாது; பிறரது நலன் நோக்கியே அமைந்திருக்கவேண்டும் என்பது தமிழர்களின் கோட்பாடு என்பதை மேலே கண்டோம். இந்த முயற்சி எலிகள்போல் பதுக்குவதாக இருக்கக்கூடாது என்றும், தான் வேட்டையாடிய உணவு இடப்பக்கம் வீழ்ந்தால் உண்ணாது பசியோடிருந்து மறுநாள் மீண்டும் முயலும் புலி போன்றதாக இருக்கவேண்டுமென்றும் கருதினர்.[86]

---

84 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.' (குறள். 996)

85 'உண்டா லம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.' (புறம். 182)

86 'விளைபதச் சீறிட நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி யுள்ளதம்
வளன்வலி யுறுக்கு முளமி லாளரொடு
இயைந்த கேண்மை யில்லா கியரோ
கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென
அன்றவ ணுண்ணா தாகி வழிநாட்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்து
இருங்களிற் றொருத்தல் நல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்து
உரனுடை யாளர் கேண்மையொடு
இயைந்த வைக லுளவா கியரோ.' (ஷை 190)

இத்துணைப் பெருமிதத்தோடுகூடிய முயற்சியைத் தமிழர் விரும்பினர் என்பது இதனால் பெறப்படும்.

அரசாட்சியும் மழையும்

நாட்டில் அரசன் நீதி தவறாதவனாகச் செங்கோல் செலுத்தி வந்தால் அந்த நாட்டில் பருவமழை தவறாது பெய்யும் என்று தமிழர் நம்பினர்.[87]

சிவனும் சைவமும்

சைவத்தின் தொன்மை

தமிழர்களின் வழிபாடுகளில் சிவவழிபாடு அல்லது சிவநெறி (சிவனியம் அல்லது சைவம்) மிகவும் தொன்மையானது. பண்டைத் தமிழரின் மெய்ப்பொருளியல் என்றவுடனேயே நாம் நினைவுகொள்வது சைவத்தையேயாகும். சிந்துவெளி அகழ் வாராய்ச்சியில் காணும் சமயச் சின்னங்களான இலிங்கம், பசுபதி முதலியவற்றை ஆய்ந்த சர் ஜான் மார்ஷல், ஈராசுப் பாதிரியார் முதலியோர் தமிழர்களின் சைவம் அங்குப் பரவியிருந்த பாங் கினைப் பேசுகின்றனர். இருக்கு வேதத்தில் சிவன் விராத்தியரின் கடவுளாகவும், 'சிசினதேவன்' என்றும் குறிப்பிடப்படுகிறார்.[88] சிந்துவெளியில் காணப்பெறும் சைவம் சுமேரியா, பாபி லோனியா, அக்கேடியா, எகிப்து, கிரேக்கம், மெக்சிகோ முதலிய நாகரிகத் தொட்டில்களிலும் காணப்பெறுகிறது. இன்றளவும் உலகில் பல நாடுகளில் சைவம் சிறந்து நிற்பதைக் காணலாம்.

சிந்துவெளிச் சிவனும், சங்கத் தமிழர் பின்பற்றிய சைவமும் ஒன்றாகவே உள்ளன. ஆனால், வேதகாலச் சிவன் இதிலிருந்து வேறுபடுகிறார். சங்கத் தமிழர் வழிபட்ட சிவன் முழுமுதற் கடவுள்; நலமே பயக்கும் நற்கடவுள். ஆனால், வேதகாலச் சிவன் 'உருத்திரன்' என அழைக்கப்பெற்றவர்; நோய்க்கும், அச்சத்திற் கும், அறிவுக்கும் கருத்தாவாக உள்ளவர். இவ்விரு சிவனும் (சிவனும் உருத்திரனும்) ஒன்றாக இணைந்து ஒரே கடவுளாக வழிபடும் வழக்கம் பிந்திய வேதகாலத்தில் ஏற்பட்டது. வேதங் களுக்கு மிகவும் பிற்பட்ட இதிகாசங்களிலும் தொன்மங்களிலும்

---

87 'மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகன் ஞாலம்' (புறம். 35:27-29)

88 Karmarkar, Dr. P., *The Religions of India*, Vol. I. p. 82

சிவனை முழுமுதற் கடவுளாகவும், சூரியனாகவும், எட்டு மெய் களை உடையவனாகவும், முத்தொழில் புரிபவனாகவும், முக்கண்ணனாகவும் கொண்டு வழிபடும் காட்சியைக் காண் கிறோம். இவ்வாறு வேதகால உருத்திரனும் பண்டைத் தமிழரின் சிவனும் நன்றாகக் கலப்புண்டு வழிபடப்பட்ட காட்சியினை உப நிடதங்களிலும் காண்கிறோம். இஃது ஆரிய திராவிடரின் நாகரிகக் கலப்பினையே சுட்டுகிறது.[89] வேதங்களிலும், உப நிடதங்களிலும் பற்பல தெய்வங்களைக் காண்கிறோம். ஆயினும், சிவனே முழுமுதற் கடவுள் என்பதை அவை முடிவாகக் கூறு கின்றன.

சங்க இலக்கியங்களில் சைவம்

சிவன் தமிழரின் கடவுள். சைவம் தமிழரின் மெய்ப்பொருள் நெறி. இதனைச் சிவன் என்னும் சொல்லே மெய்ப்பிக்கிறது. 'சிவன்' என்னும் சொல் 'சிவப்பு' என்னும் பண்பின் அடியாகப் பிறந்தது. 'சிவப்பு' என்பது தமிழ்ச்சொல்.[90] எனவேதான் சங்கப் பாக்களில் சிவன் தெளிவாக அறியப்படுகிறார்.

புறநானூற்றில் சிவன்

சங்ககாலப் பாண்டிய மன்னன் பெருவழுதியைச் சிவநெறிச் செம்மலென வாழ்த்த முற்பட்ட காரிகிழார் என்னும் புலவர் 'பணியியர் அத்தைநின் குடையே முனிவர் முக்கட் செல்வர் நகர் வலம் செயற்கே'[91] என வாழ்த்துகிறார்.

நீண்டநாள் உயிர்வாழவைக்கும் நெல்லிக்கனியைத் தான் உண்ணாமல் தமிழைப் பரவிய அதியமான் தமிழ் வாழ ஔவை யாருக்கு அளித்தான். அதனைப் பெற்ற ஔவையார் திருப்பாற் கடலைக் கடைந்து அமிழ்தம் பெற்றபோது அதனைத் தான் உண்ணாது (நஞ்சுண்டு) அமரர்க்கு ஈந்து அவர்களின் சாவை ஒழித்த சிவனைப்போல நிலைபெற்று நற்புகழுடன் வாழுமாறு வாழ்த்துகிறார்.[92]

சிவனுக்கு மூன்று கண்களிருப்பதைப்போலவே தமிழ்க் காவலர்கள் மூவர். அவர்கள் சேர, சோழ, பாண்டியராவர். மூன்று கண்களில் நெற்றிக்கண்ணே மெய்ஞ்ஞானக் கண்ணாகத்

---

89 Ibid, pp. 38-57

90 Ibid, pp. 49, Estilin Carpenter, J., *Theism in Mediaeval India*, p. 351.

91 புறம். 6:17-18

92 ஷெ 91

திகழ்வதைப்போல் பாண்டியன் தமிழின் புரவலனாகத் திகழ்ந் தான்[93] என்று மதுரை மருதனிளநாகனார் பாண்டியனைப் புகழ்ந்துரைக்கிறார்.

பிற சங்க இலக்கியங்களில் சிவன்

வள்ளல் ஆய் அண்டிரன் கொடைக்குணமும், சைவநெறியும் உடையவன். தான் அரிதில் பெற்ற கலிங்க ஆடையை ஆலமர் செல்வனுக்குப் படைத்தான்[94] என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது. முக்கண்ணன் ஆலமரத்தைப்பற்றி அகநானூறும் பேசுகிறது.[95] திருமுருகாற்றுப்படையில் செவ்வேள், சிவன் ஆகியோர் பெருமைகள் பேசப்படுகின்றன. இருவரும் செம்மேனியராகவே ஏத்தப்படுகின்றனர். பரிபாடலில் சைவம் தெளிவாக அறியக்கிடக்கிறது.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் புத்த, சமண சமயங்களைக் கருப்பொருளாகக் கொண்டவையாயினும் சிவனே அவற்றிலும் முழுமுதற் கடவுளாக ஏற்றப்படுகிறார்.

'பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்',[96]

'நுதல்விழி நாட்டத் திறையோன் கோயில்'[97]

எனச் சிவனுடைய திருக்கோயில்கள் பற்றிச் சிலப்பதிகாரம் பேசுகிறது.

'நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக'[98]

என மணிமேகலையில் சிவனார் பதிகொண்டமை போற்றப்படுகிறது.

இவற்றால் புத்த, சமண சமயங்கள் தமிழனால் அறியப்படும் முன்பே, சைவம் இம் மண்ணில் செல்வாக்குப் பெற்றிருந்ததைக் காண்கிறோம். வேதங்களிலும் ஆகமங்களிலும்கூடச் சிவன் வீடுபேற்றிற்குரியவனாகவே போற்றப்படுவதும், வீடுபேறு 'சிவகதி' என்றே குறிக்கப்படுவதும் உணரத்தக்கதாகும். மணிமேகலையில் பல்வேறு சமயக் கோட்பாடுகள் அறியப்படுகின்றன. சைவக் கோட்பாடு தெளிவாகவும் விரிவாகவும் பேசப்படுகிறது. சித்தாந்தம் என்றாலே நிலைநிறுத்தப்பெற்ற முடிவு அல்லது உண்மை என்பது பொருளாகும். சைவசித்தாந்தம் கி.பி.

93 புறம். 55:1-6
94 சிறுபாண். 96-99
95 அகம். 181:16-17
96 சிலப். 5:169
97 ஷெ. 14:7
98 மணிமே. 1:54-55

ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பின்னரே தெளிவாக அறியப்படுகிறது. ஆயினும், இதனைச் சங்ககாலக் கருப்பொருளில் முளைத்ததெனக் கொள்ளவேண்டும். சங்க இலக்கியங்களில் நாம் காணும் மெய்ப்பொருட் கோட்பாடுகளே இதிலும் காணப்படுதல் வெளிப்படை.

சைவசித்தாந்தம் அறிவியலடிப்படையில் பதி (இறைவன்), பசு (உயிர்), பாசம் (தளை) ஆகிய மூன்றின் கூறுபாடுகளையும் ஆய்ந்துரைக்கிறது. எங்கும் நிறைந்து, என்றும் நின்று முழுமுதலாய்த் திகழ்வது பதி; உடலின் வேறாய், யான், எனது எனும் இருவகைப் பற்றுக்கொண்டு ஆற்றலும், அவத்தைகளும், மும்மலங்களால் பிணிக்கப்பட்டது பசு; உயிருக்கும் உடலுக்குமுள்ள தொடர்பு, பறவைக்கும் கூட்டிற்குமுள்ள தொடர்புபோலாகும்.

இதில் 'சைவம்' என்னும் நெறியைப் பின்பற்றுவோன் 'சைவன்' என்றும், அந்நெறியில் வல்லான் 'சைவவாதி' என்றும் தெளிதல் காண்க. மேலும், சைவக்கோட்பாட்டையும் இது தெளிவாகப் பேசுகிறது.[99] 'சைவம்' என்னும் சொல் முதன்முதலில் சாத்தனாரால் கையாளப்படுவதை மணிமேகலையால் அறிகிறோம். சிலர் இக்காலத்தில்தான் முதல் தமிழ் ஆகம நூலான 'திருமந்திரம்' எழுதப்பெற்றதென்பர். இத்தகைய கூறுபாடுகளிலிருந்துதான் சைவசித்தாந்தம் பிற்காலத்தில் உருவானது.

பிற சமயங்களின் கோட்பாடுகளெல்லாம் காணவிழையும் முடிபுகளுக்கெல்லாம் ஒரு முடிந்த முடிபைக் காண்பதே சைவ சித்தாந்தம். உயிர், மலங்களை நீக்கி இறையோடு கலக்க வல்லது. அதற்கான தளைகளை அறுத்தல் வேண்டும். அத்தளைகளை அறுக்க உயிர் நல்வழிகளைக் கடைப்பிடித்தால் தானே அது நிலைபேறு அடைந்துவிடும்.

பொதுவாகப் பார்க்கும்போது சைவநெறி எல்லாச் சமயங்களிலும் காணப்பெறும் நெறிகளை உள்ளடக்கி ஒரு பொதுவான முடிந்த முடிபைத் தருவதாகும். எனவேதான், 'வினைக் கோட்பாடும், உயிர்கள் பல பிறவிகளெடுக்கும் கோட்பாடும், யோக நெறியும், சிவன், உமை, திருமால்பற்றிய சமய தத்துவக் கோட்பாடுகளும், வேதங்கள் கூறும் ஓமவிதிகளுக்கு மாறாக நிகழும் வழிபாட்டு முறைகளும், இந்து சமயத்தில் அதிகமாகக் காணப்பெறும் சமயச் சிந்தனைகளும் ஆரியர் அல்லாதவருடையவை'

99 மணிமே. 27:86-95

என டாக்டர் சுநித்குமார் சட்டர்ஜி கூறுவதிலிருந்து[100] சைவ சமய நெறியே வேத ஆகம நெறிகளுக்குக் கருவூலமானதென்பதைத் தெளியலாம். 'சிவனை மிகப் பெரிய யோகியாகவும், பசுபதியாக வும் கொண்டு அம்மைஅப்பனாகவும் போற்றும் கோட் பாட்டினை முதலில் கொண்டவர் திராவிடரே'[101] என டாக்டர் சட்டர்ஜி கூறுவது சைவம், தமிழரின் சொத்து என்பதை வலி யுறுத்தவேயாகும்.

இயற்கையின் பின்னணியில் இறைவனைக் கண்ட சங்ககால மக்கள் சிவனைச் செம்மேனியனாகவும், அறிவுக் கடவுளாகவும், தங்கள் உயிர்கள் ஒடுக்கம் பெற்றபின் இன்பக் கூத்தாடுபவனாக வும் கொண்டனர். சைவ வேதக் கோட்பாடுகளை ஆட்கொண்ட பின் சிவ உருத்திர இணைப்பு ஏற்பட்டதும் வேதக் கோட்பாடு களை வெல்லச் 'சைவ நெறி' பலமுறை மறுமலர்ச்சி பெற வேண்டியதாயிற்று.

திருமாலும் வைணவமும்

பரிபாடலிலும் பிற தொகைநூல்களிலும் திருமால்

தொகைநூல்களில் ஒன்றாகிய பரிபாடல் தரும் திருமால், செவ்வேள், பலதேவன் முதலிய தெய்வங்களைப் பற்றிய செய்தி கள் நம்மை வியப்பிலாழ்த்துகின்றன. வேதங்களில் வரும் இந்திரன் முதலான தேவர்களைப் பற்றிய வருணனைகளைவிட மிகத் தெளிவாகப் பரிபாடல், இத்தெய்வங்களின் நிறம், உருவத் தோற்றம் முதலிய பண்புகளை வர்ணிக்கின்றது. எனவேதான், பரிபாடலின் காலத்தைப் பலரும் பலவாறு குறிப்பிடுகின்றனர். இது கடைச் சங்ககாலத்து நூலேயென்பதும், இதன் காலம் சுமார் கி.பி. இரண்டாம் நூற்றாண்டாக இருக்கக்கூடுமென்பதும் அறிஞர் கண்ட முடிபாகும். எனவே, பரிபாடல் தரும் தத்துவக் கருத்துகளைச் சங்ககாலக் கருத்துகளெனக் கோடலே சாலும்.

பரிபாடல், தமிழர்களால் வழிபாடு செய்யப்பெற்ற தெய்வங் கள்பற்றியும் அத் தெய்வங்களுக்கு அமைத்த கோயில்களைப் பற்றியும் தெளிவாகக் கூறுவதால் கோயிலெடுத்து, உருவ வழி பாடு செய்யும் வழக்கம் தமிழருக்குப் பண்டைக்காலம் முதலே உண்டென்பதைத் தெளிவாக அறியலாம். இக் கோயில்கள் இயற்கையெழில் சூழ்ந்த இடங்களில் அமைந்திருந்தன. இயற்கை யினூடே இறைவனைக் கண்ட தமிழர்கள் அவ்வியற்கைச்

100 Chatterji, Dr. S.K., *Indo-Aryan and Hindi*, pp. 33-34
101 Ibid, p. 47

சூழலில் 'கோயில்' கண்டனர். கோயில் என்னும் சொல்லுக்கு நல்ல வீடு, தலைவன் வீடு, இறைவன் வீடு என்றெல்லாம் பொருளுண்டு. இயற்கை ஐம்புலன்களையும் ஈர்க்கும் ஆற்றலுடையது. கண்ணுக்கினிய பசுமை, காதுக்கினிய ஒலி, மூக்கிற்கினிய மணம் ஆகிய பண்புகளை இயற்கை எழிலாடும் சோலைகளில் காணலாம். சோலைகளைக் கொண்ட குன்றுகளிலும், மலைச்சரிவுகளிலும், உச்சிகளிலும் இறைவனுக்குத் திருக்கோயில் எடுத்துத் தங்களையும் அவ்வியற்கையோடு இணைத்து இன்பம் கண்டனர் தமிழர். குறிப்பாக, ஒரு மரத்தடியில் இறைவனை இருக்கச் செய்தனர். மரப்பொந்தையே கோயிலாகவும் கொண்டனர். இதனடிப்படையில்தான் இன்றும் ஒவ்வொரு கோயிலிலும், 'தலமரம்' (ஸ்தல விருட்சம்) உள்ளது. ஆற்றங்கரைகளிலும், ஆறுகள் கடலோடு கலக்குமிடங்களிலும், கடற்கரையிலும், இயற்கை எழில் சூழ்ந்த பகுதிகளிலும் கோயிலெடுத்தனர். இயற்கைச் சூழலில் இறைவனைக் கண்ட தமிழர் அவ்விறைவனைப்பற்றிக் கொண்ட மெய்ப்பொருள் தத்துவம் என்ன என்பதையும், அவ்வியற்கையோடு இயற்கையாக இறைவனுக்கு வண்ணம், உருவம் முதலியவற்றை எவ்வாறு படைத்துக் கொண்டாடினரென்பதையும் பரிபாடல் தெளிவாக விளக்குகிறது.

திருமால்

பரிபாடலில் நாம் சந்திக்கும் முதன்மைத் தெய்வம் திருமால். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய எல்லாச் சங்க இலக்கியங்களிலும் திருமால் அறியப்படுகிறார். மால், மாயோன், நெடியோன் என்னும் பெயர்களால் சங்க இலக்கியங்களில் அறியப்பெறும் இவர் பரிபாடலிலும் அவ்வாறே அறியப்படுகிறார். 'மால்' என்னும் சொல்லுக்குக் 'கருமை' என்பது பொருள். 'திரு' என்பது அடைமொழி. பசும்புல்வெளியும், கரிய அடவியும் மிக்க முல்லைத் திணைக்குக் கருநிறக் கடவுள் இயற்கைவழி உருவான தோற்றமாயிற்று.

திருமாலைப்பற்றிப் பரிபாடல் தரும் கருத்துகளை ஐங்குறுநூறு, குறுந்தொகை தவிர்த்த பிற தொகைநூல்களில் காண்கிறோம். முல்லைக்கலியில் திருமால் பல புராணக் கதைகளோடு பின்னிக் காணப்படுகிறார். பொதுவாகச் சங்கநூல்கள் யாவும் திருமாலின் நிறம் கருமையென்பதை வலியுறுத்தியுள்ளன. கலித்தொகை, திருமால் மயில்கழுத்து வண்ணமுடையவரென்று கூறுகிறது. இவர் பாம்பால் விழுங்கப்பட்ட மதியை உய்வித்தவர் என்றும், அவுணர் இவர்ந்துவந்த களிற்றின் நுதலில் ஆழியை

அழுத்தி அவர்களை அஞ்சியோடச் செய்தவரென்றும், நெடி யோன், மாயோன், கரிய திருமால் முதலிய பெயரினரென்றும் கலித்தொகை கூறுகிறது.

அகநானூறு திருமாலைக் கண்ணனாகவும், அவன் ஆய மகளிரொடு தொழுநையாற்றில் நீராடிக் களித்ததையும் கூறு கிறது. மேலும் இராமன், பரசுராமன், சிவன், திருமால் தோற்றம் முதலியவற்றையும் அகநானூற்றில் காண்கிறோம். புறநானூற் றில் திருமால், பலதேவன், அவுணரின் அடாத செயல்கள், சீதையை இராவணன் தூக்கிச் சென்ற நிகழ்ச்சி முதலிய செய்தி கள் காணப்படுகின்றன.

பரிபாடலில் திருமாலின் நிறம், வடிவம், அவதாரங்கள் ஆகியவை விளக்கப்பெற்றுள்ளன. திருமால் குள்ள வடிவினர்; பேருருவங்கொண்டு அனைத்துலகையும் தம் அடியால் அளந் தவர்; அவருடைய உந்தியில் மலர்ந்த தாமரையினின்றும் அயன் தோன்றினார்; ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடன்மீது பள்ளிகொண்டார்; கருடக் கொடியையுடையவர்; அனைத்துல கிலும் பரவியிருப்பவர்; அழிக்கும் படையாகிய ஆழியைக் கையிலுடையவர்; துளசிமாலை அணிந்தவர்; மார்பிலே திரு மகளை உறையச் செய்தவர்; குதிரை வடிவில் தோன்றிய 'கேசி' என்னும் அரக்கனைக் கொன்றவர்; சங்கினால் முழக்கம் செய் தவர்; அவர்தம் மார்பில் அணிந்த மாலை வானவில் போன்றது; நீலமணி நிறமுடையவர்; பலதேவனும் கண்ணனும் ஒன்றியிருப் பவர் என்றெல்லாம் பரிபாடலில் திருமாலைப்பற்றிக் கூறப்படும் செய்திகள், பிற சங்க இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. பரிபாடல் பாடிய புலவர்கள் திருமாலின் உருவத்தை அடிமுதல் முடிவரை அழகுபட வர்ணிக்கின்றனர். அவரின் நின்ற கோலமும் கிடந்த கோலமும் பலபடப் பேசப்படுகின்றன. நிறம், தலை, வாய், கண், கை, தோள், உந்தி, பிற உறுப்புகள் பற்றிய வர்ண னைகள் நம்மை வியப்பிலாழ்த்துகின்றன. மேலும், அவர் அணிந்த ஆடை, அணிகலன்கள், படைகள், கொடி, கருடவூர்தி முதலி யனவும் வர்ணிக்கப்படுகின்றன.

பிற்கால நூலாகிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் கூறப்பெறும் திருமாலின் பத்து அவதாரங்களில் வராகவதாரம், நரசிங்க அவதாரம் ஆகியவைபற்றிப் பரிபாடல் கூறுகிறது. பரிபாடல் திரட்டில் கூர்மவதாரம் பேசப்படுகிறது. பொதுவாக நோக்குமிடத்துப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களில் மச்ச

அவதாரம், கல்கி அவதாரம் தவிர்த்த மற்ற எட்டு அவதாரங்களும் பேசப்படுகின்றன.

திருமால் கோயில்கள்

பரிபாடலில் திருமாலுக்குக் கோயில்கள் (பதிகள்) இருந்த திருமாலிருஞ்சோலைமலை, இருந்தையூர், குளவாய் ஆகிய மூன்று இடங்கள் சிறப்பிக்கப்பெறுகின்றன. இவை யாவும் பாண்டிய நாட்டிலிருந்தன. சேர, சோழ நாடுகளிலிருந்த திருமால் பதிகள் பரிபாடலில் குறிப்பிடப்பெறவில்லை. சிலப்பதிகாரம் முதலியவற்றில் திருமாலிருஞ்சோலைமலை, திருவேங்கடம், திருவரங்கம் ஆகியவை திருமால் பதிகளாகச் சிறப்பிக்கப் பெற்றுள்ளன.

திருமாலிருஞ்சோலைமலையை திருவரை, இருங்குன்று, மாலிருங்குன்று எனும் வேறு பெயர்களாலும் பரிபாடல் சுட்டுகிறது. சிலப்பதிகாரத்தில் இது திருமால்குன்று எனக் குறிப்பிடப் பெறுவதோடு இங்குச் சரவணம், பவகாரணி, இட்டசித்தி ஆகிய மூன்று புண்ணியப் பொய்கைகள் உண்டென்பதும், அவற்றில் மூழ்குவதால் அடையும் பயன்களும் கூறப்படுகின்றன. இங்குத் திருமால், பலதேவன் ஆகிய இரட்டையர் கோயில், செவ்வேள் கோயில் ஆகிய இரண்டு கோயில்களிருந்தனவாகப் பரிபாடல் கூறுகிறது.

மதுரைக்கருகில் உள்ள இருந்தையூரில், திருமால் இருந்த வண்ணமிருந்ததாகப் பரிபாடல் திரட்டுக் கூறுகிறது. திருமால் இருந்ததைக் கொண்டுதான் இவ்வூர், 'இருந்தையூர்' எனப் பெற்றது. வேங்கை, மராம், மகிழ், அசோகு முதலிய மரங்கள் அடர்ந்த சோலைகளும் மீன்கள் நிறைந்த சுனைகளும் இங்குக் காணப்பெற்றனவாம்.

அடுத்து, பரிபாடலில் கூறப்படும் குளவாய்ப் பதி மதுரைக் கண்மையிலுள்ளது. இது 'மாடக்குளக்கீழ் மதுரை' எனவும் அழைக்கப்பெறும். இங்கு ஆதிசேடனுக்கும் தனிக்கோயிலிருந்ததைப் பரிபாடல் சிறப்பித்துக் கூறுகிறது.[102]

பரிபாடலில் திருமாலின் திருவுருவங்களையும், அவர் உறையும் பதிகளையும், அவருடைய தோற்றரவுகளையும் (அவதாரங்கள்) பற்றிக் கண்டோம். திருமாலைப் பரவும் பாடல்களின் கருப்பொருளைக் காண்போம்.

---

102 பரிபா. தி. 1;59

திருமால் யாண்டும் பரவியுள்ளாரென்பதனை ‘எவ்வயி னோயும் நீயே’[103] எனப் பரிபாடல் குறிப்பிடுவதிலிருந்து ‘முழுமுதற் கடவுள்’ தன்மையை இது விளக்குகிறதென் பதை அறியலாம். ஐம்புலன்களிலும், ஐம்பொறிகளிலும், ஐம் பூதங்களிலும் திருமால் விரவியுள்ளாரென்பதைப்[104] பரிபாடல் வலியுறுத்துவதோடு, அனைத்துலகத்தையும், அனைத்துயிரையும் படைத்தவர் அவரே[105] எனவும் கூறுகிறது. அயனாகவும், பல தேவனாகவும், சிவனாகவும் விளங்குபவர் திருமாலேயென்றும், அவர் மூவேழுலகையும் அருளோடும் அறத்தோடும் ஆட்சி புரிந்து அனைத்துயிர்களையும் காத்துவருகிறார் என்றும்,[106] அவர் பல பிறப்புகளை(அவதாரங்களை) எடுத்தாலும் அவரைப் பிறப்பித்தோர் இலர்[107] என்றும் பரிபாடல் கூறுகிறது.

மேலே அவர் வதியும் மூன்று திருப்பதிகளைச் சுட்டினோம். ஆயினும், அவர் எங்கும் நிறைந்தவராதலின் அவருக்கெனச் சில திருப்பதிகளைச் சுட்டுதல் வேண்டாவெனவும் பரிபாடல் வலி யுறுத்துகிறது.[108] நெருப்பில் சூடாகவும், பூவில் மணம் ஆகவும், கல்லில் ஒளியாகவும், அறத்தில் அன்பாகவும் மறத்தில் வன்மையாகவும், வேதத்தில் மறைபொருளாக வும், பூதத்தில் விண்ணாகவும், சூரியனின் வெளிச்சமாகவும், திங்களில் குளிராகவும், உலகப் பொருள்களுள் பொருளாக வும் எங்குமே திருமால் விளங்குகிறார்.[109] இவர் உலக உயிர் களின் தோற்றத்திற்கும், நிலைபேற்றுக்கும், ஒழுக்கத்திற்கும் காரணமாவார்.[110] உலக உயிர்கள் அவரிடமிருந்தே பிறந்து, அவராலேயே காக்கப்பெற்றுப் பின், அவரிடமே சென்று தங்கி விடுகின்றன என்பதும் பரிபாடல் கருத்து. இத்தகைய கருத்து களே பகவத்கீதையிலும் பிரதிபலிப்பதால்தான் தத்துவமேதை டாக்டர் இராதாகிருட்டிணன், ‘தமிழர்களின் செல்வாக்கினால் வேத நாகரிகம் இதிகாசங்களில், இந்து நாகரிகமாகவே உரு மாற்றம் அடைந்துள்ளது; தமிழருக்கே உரிய உருவ வழிபாட் டினை ஆரியர் ஏற்றனர்; தமிழருக்குரிய ஆகம மரபுகள் வேத மரபுகளை ஆதிக்கம் செய்தன’ என்கிறார்.[111]

பரிபாடலின் கருப்பொருளையே பிற்கால ஆழ்வார்கள் விரித்துரைத்து நாலாயிரப் பிரபந்தமாக்கினர். பாண்டிய

---

103 பரிபா. 2:59, 4:25-35
104 ஷை 3:4]
105 ஷை 3:9, 1:43-46
106 ஷை 3:74-76
107 ஷை 3:72
108 ஷை 3:68-70
109 ஷை 3:63-66
110 ஷை 4:25-32
111 Radhakrishnan, Dr. S., *The Hindu View of Life*, pp. 40-41

நாட்டில் மட்டுமிருந்த திருமாலிருஞ்சோலை, இருந்தையூர், குளவாய் ஆகிய மூன்று பதிகளை மட்டுமே பரிபாடல் சுட்டினாலும், ஆழ்வார்கள் தமிழ்நாடு முழுவதுமிருந்த நூற்றெட்டுத் திருமால் திருப்பதிகளையும் பாடியுள்ளனர். பரிபாடலில் காணும் திருமாலே பிரபந்தத்திலும் பலவாறு பேசப்பெற்றுக் கடைசியில் 'திருமால் முழுமுதற் கடவுள்' என்பதனை இரண்டு நூல்களும் கூறுகின்றன. முழுமுதற் கடவுள் கோட்பாடே தமிழர் கோட்பாடாகும். பிற்கால மாலியத்திற்குத் (வைணவம்) தமிழிலும் தெலுங்கிலும் உள்ள மாலிய இலக்கியங்களே முழுமையான அடிப்படைச் சான்றுகளாயுள்ளன[112] என்னும் கருத்து கூர்ந்து ஏற்கக்கூடியதாகும்.

பொதுவாக நோக்குமிடத்து, சங்க இலக்கியங்களில் மிகுதியாகப் பேசப்படும் கடவுள் திருமாலே. அவரை முழுமுதற் கடவுளாகவே தமிழர் கண்டனர். தொல்காப்பியர் திருமாலை முல்லைத் திணைக்குரிய கடவுளாகக் கொண்டாலும் காக்கும் கடவுளாகவும், முழுமுதற் கடவுளாகவும் அவரைக் காட்டுகிறார்.

பலதேவனையும் திருமாலையும் ஒன்றாகவே கொண்டு தொல்காப்பியர் பாடுவதிலிருந்து இஃது அவர் காலத்துத் தமிழர் வழிபட்ட கடவுள் கோட்பாடு எனலாம். பலதேவனுக்குரிய பனைக்கொடிபற்றித் தொல்காப்பியரின் நூற்பாவில்[113] கூறப்படுகிறது. ஆயினும், பலதேவனும் திருமாலும் காக்கும் தெய்வங்களென்பதைப் பரிபாடல் நன்கு விளக்குகிறது.[114] 'இந்திரன், பலதேவன் வழிபாடுகள் பண்டைத் தமிழர்களுடையன; பிற்காலத்தில் இவை மறைந்தொழிந்தன' என்பது கனகசபைப் பிள்ளையின் கூற்றாகும்.[115] கலித்தொகையில் பலராமன் (பலதேவன்), கண்ணன் (திருமால்) ஆகியோர் மலர் முதலிய இயற்கைப் பொருள்களுக்கும், வீரர், காளை முதலியவற்றிற்கும் உவமைகளாகப் பாடப்பெற்றுள்ளனர். எப்பொருளைக் கண்ணால் கண்டாலும், மனத்தில் நினைத்தாலும் திருமாலாகவே காணும், உன்னும் பாங்கு அக்காலத் தமிழர்களிடமிருந்ததை இக் கலித்தொகை விவரிக்கின்றது.

பெரும்பாணாற்றுப்படையில் திருமால் பாம்பணையில் பள்ளி கொண்ட காட்சியும்,[116] முல்லைப்பாட்டில் மாவலிமுன் குறுகிய

---

112 Dasgupta, Prof. *History of Indian Philosophy*, Vol. III, p. VII

113 தொல். எழுத்து. 286

114 பரிபா. 15;11-13

115 Kanakasabai Pillai, S., *The Tamils 1800 Years Ago*, p. 238

116 பெரும்பாண். 372-73

வடிவமுடையவனாகச் சென்று மூவடியால் மண் இரந்து பெற்று நெடியோனாய்க் காட்சியளித்ததையும்[117] காணும்போது புராணக் கதைகள் சங்க இலக்கியங்களில் பரவிக் கிடப்பதைக் காண்கிறோம். முருகனுடைய புகழைப் பாடும் திருமுருகாற்றுப் படையிலும் திருமால் 'புள்ளணி நீள்கொடிச் செல்வன்'[118] எனப் பரவப்படுகிறார். திருமாலுக்குரிய நாள் 'ஓண நன்னாள்' எனச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.[119] ஆழ்வார்களும் பிற்காலத்தில் இந் நாளைப் போற்றுகின்றனர். சிலப்பதிகாரம் 'ஆய்ச்சியர் குரவை' திருமாலை வாழ்த்துகிறது.

இவ்வாறு, தொல்காப்பியர் மாயோனாகவும், முல்லைநில மக்களின் தெய்வமாகவும் சுட்டிய திருமால் பின்னர்ப் பலவாறு வளர்ந்து வைணவத்தில் இடம்பெற்றாலும், அவர் தமிழர் இயற்கையினூடே கண்ட முழுமுதற் கடவுளே எனலாம். திருமால்பற்றிய தமிழர் தத்துவம் புத்த சமயத்திலும் காணப் படுகிறது. கிரேக்க நாட்டுத் தூதுவனான ஹெலியோதொரர் என்பவன் சிறந்த திருமால் அடியானென்பதைக் கி. மு. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கோசுண்டிக் கல்வெட்டால் அறிகிறோம். பலராமன், கண்ணன், முருகன் ஆகியோர் வழிபாடுகள் சுமேரியா, பாபிலோனியா ஆகிய பழம்பெரும் நாகரிகம் படைத்த நாடுகளிலும் பரவிக் காணப்படுகின்றன[120] என்பதிலிருந்து தமிழர்களின் மெய்ப்பொருளியலின் தொன்மையினை ஓர்ந்து உணரலாம்.

பிற்காலத்தில் வேதப் பண்பாடுகளும் தமிழரின் மெய்ப் பொருட்கோட்பாடுகளும் ஒன்றிணைந்துவிட்டன. உருத்திரனும் சிவனும் இணைந்ததைப்போலவே விஷ்ணுவும் திருமாலும் இணைந்தனர். 'ஆரியரல்லாதாரின் கடவுள்கள் ஆரியர் கடவுள் களின்மேல் ஆதிக்கம் பெற்றன. வேதக் கடவுள்களின் தலைவனான இந்திரனைத் திராவிடரின் தலைவனான (கறுப்பன்) கிருட்டிணன் போரிட்டு வெற்றிகண்டான். தக்கன் வேதநெறித் தலைவன். இவன் சிவனுடன் போரிட்டு வெற்றிகண்டான். இவ்வாறு ஆரிய திராவிடப் பண்புகள் கலப்புண்டன.[121] ஆயினும், கி.பி. எட்டாம் நூற்றாண்டில்தான் வைணவம் என்னும் சொல் வழக்காற்றில் வந்தது. இச் சொல்லைப் பெரியாழ்வார்தான் முதலில் கையாண்டுள்ளார்.

117 முல்லைப். 1-3
118 முருகு. 151
119 மதுரைக். 590-01
120 Ramachandra Dikshitar, V.R., *The Origin and Spread of the Tamils*
121 Radhakrishnan, Dr. S., Op. cit., p. 40

'வன்மை யானதுன் கோயிலில் வாழும்
வைட்டண வன்என்னும் வன்மைகண் டாயே'[122]

என்பது பெரியாழ்வார் வாக்கு.

பரிபாடலிலும் மற்றும் சங்க இலக்கியங்களிலும் கூறப்பெற்ற திருமாலின் நிறம், வண்ணம், கொடி, ஊர்தி முதலியனவும் நாலாயிரப் பிரபந்தத்தில் 'பச்சைமா மலைபோல் மேனி, பவள வாய் கமலச் செங்கண்'[123] முதலியனவாக உருவகப்படுத்தி விரித்துரைப்பதைக் காண்க.

செவ்வேள் வழிபாடு

சங்க இலக்கியங்களில் அறியப்பெறும் கடவுள்களில் 'செவ்வேள்' சிறப்பானவர். தமிழர் இயற்கையை வழிபட்டனர் என்பதற்குச் செவ்வேள் வழிபாடு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். 'கல்தோன்றி மண்தோன்றாக் காலம்'பற்றித் தமிழர் அறிவர். உலகில் மண்தோன்றுவதற்கு முன் கல் (பாறை)தானிருந்ததென்பது இன்றைய அறிவியலாரும் காணும் முடிபாகும். இதனை மதுரைக்காஞ்சி,[124] புறப்பொருள் வெண்பாமாலை[125] முதலிய நூல்கள் தெளிவுபடுத்துகின்றன. உலகில் முதன்முதல் தோன்றிய மனிதன் இப் பாறையைக் கண்டான். அதனையே பின்னர் வழிபட்டான். தொல்காப்பியரும் மலைவாழ் மக்கள் சேயோனை வழிபட்டதாகக் கூறுகிறார்.[126] மலைமீது உறைந்த மக்கள் கடலினின்று எழும் காலைக் கதிரவன் காட்சியையும், மாலையில் மறையும் காட்சியையும் கண்டு உள்ளத்தைப் பறிகொடுத்தனர். இக் காட்சிகளே அவர்களின் மனத்தில் நின்று இறைவனாகிவிட்டது. இக் காட்சியினூடே நீலமயில்மீது அமர்ந்து வரும் செவ்வேளைக் கண்டனர். எனவே, சேயோன் முருகன் எனவும் போற்றப்பட்டான். முருகன் என்னும் சொல் மணம், அழகு, இளமை, இறைமை என்றெல்லாம் பொருள்படும்.[127] 'மணங்கமழ் தெய்வத்தின் இளநலம் காட்டி' என்னும் தொடரும் மேற்கூறிய பொருளையே தருதல் காண்க. எனவேதான், முருகனை இயற்கை இன்பத்தில் திளைத்த இயற்கையின் எழில் வடிவமானவன் எனக் கொள்வர்.

122 நாலா. பிர. 435
123 ஷெ 684
124 மதுரைக். 1-4
125 பு. வெ 35
126 தொல். பொருள். அகத். 5
127 திரு.வி.க., 'முருகன்' அல்லது 'அழகு' பக். 24

முருகன் மலையும் மலைசார்ந்த நிலமுமான குறிஞ்சிநில மக்களுக்கு மட்டும் கடவுள் என்ற நிலை சங்க இலக்கியங்களை ஆய்ந்து நோக்கும்போது இல்லை. இயற்கையின் அழகில் உருவான செவ்வேளைச் சங்ககால மக்கள் அனைவரும் நில வேறுபாடின்றிப் போற்றுவதைக் காண்கிறோம். திருமுருகாற்றுப் படையிலேயே இதற்கான சான்றுகளைக் காணலாம்.[128]

வேட்டையாடும் தொழிலைச் செய்து வாழ்ந்த மக்களுக்கு 'வேல்' தொழிற்கருவியாகப் பயன்பட்டது. தங்களின் உயிர் காக்கும் வேற்படையைத் தாங்கள் வழிபட்ட முருகன் கையிலிறுத்தினர். எனவே, வேலேந்திய முருகன் 'வேலன்' ஆனான். அவனைப் பூசனை புரியும் பூசாரியும் கையில் வேலை வைத்துக் கொண்டான். இது அவனுக்குப் புனித சின்னமாயிற்று. இப்பூசாரியே பின்னர் 'வேலன்' என்றும் அழைக்கப்பட்டான். அவன் மீது முருகன் ஆவிவடிவில் இறங்கி அடியார்களுக்கு அருள்வாக்குத் தருவதாக நம்பினர். அப்பொழுது வேலன் தன்னை மறந்து கூத்தாடுவான். இதனை 'வேலன் வெறியாடல்' என்பர். முருகன் மலைவாழ் மக்களின் தெய்வமானதும் அம் மக்கள் தங்களின் வேற்படையை அவனுக்களித்ததோடு, தாங்கள் வதியும் காட்டிலுள்ள மிகப்பெரிய விலங்கான யானையை அவனுக்கு ஊர்தியாகவும் ஆக்கினர். மலையிலே வதிந்த மயிலும் அவனுடைய ஊர்தியாயிற்று. சேவல், கொடியாயிற்று. மலைவாழ் குறவர் மகளான வள்ளியை அவனுக்கு மணம் செய்வித்தனர். மலைவாழ் மக்கள் பெரும்பாலும் குளிரில் வாழ்பவர். ஆதலின் அவர்களுக்கு எரிதீயும், கதிரவனும் இன்றியமையாத சக்திகளாயின. இவற்றையே அவர்கள் முருகனுக்கு உவமையாக்கி வழிபட்டனர். மலைநாட்டிலுள்ள காந்தள், கடம்பு, வெட்சி முதலிய மலர்களைத் தூவி வழிபட்டனர். தாங்கள் உண்ட தேன், தினை, மறியின் குருதி ஆகியவற்றையே முருகனுக்கும் படைத்தனர். இவ்வாறு, மலைவாழ் மக்கள் தங்களின் சூழலில் கண்ட, உண்ட பொருள்களாலேயே முருகனைக் கண்டனர். இதனால்தான் செவ்வேளை இயற்கை வழிவந்த தெய்வமாகக் கொள்கிறோம்.

பரிபாடலில் வரும் பாடல்கள் மேற்கண்ட கருத்துகளைப் பின்னணியாக வைத்தே பாடப்பெற்றுள்ளன. செவ்வேளின் மேனி, கதிரவன் ஒளி போன்றது என்பதை 'ஞாயிற்றேர் நிறத் தகை'[129] யெனவும் 'உருவும் உருவத் தீயொத்தி'[130] யெனவும் கொழுந்துவிட்டெரியும் தீயின் நிறத்திற்கு ஒப்பிட்டுப்

128 முருகு. 12-21
129 பரிபா. 5:12
130 ஷை 19:99

பாடினர். அவனுடைய ஆறு தலைகளுக்கும் (ஆறு முகத்திற்கும்) காலைக் கதிரவனின் ஒளி மண்டலத்தையும்[131] உவமையாகக் கூறியுள்ளனர். தாங்கள் பயன்படுத்தும் படைகளான வேல், வாள், ஈட்டி, கோடரி முதலியவற்றையும் மறி, சேவல், மான் முதலிய சின்னங்களையும் ஆறுமுகனின் பன்னிரு கைகளிலும் தங்கும் படைகளாகப் படைத்தனர்.[132] அவனுடைய பன்னிரண்டு தோள்களையும் குறிஞ்சி நிலத்திற்குரிய 'முழவு' என்னும் இசைக்கருவிக்கு ஒப்பிட்டுப் பாடினர்.[133] மலைவாழ் மக்களான மறவர்கள், தங்களின் உடலில் வீரத்தழும்புகள் நிரம்பியிருப்பதையே வீரப்பண்பாகவும் மாண்பாகவும் கொண்டவர்கள். இதையே செவ்வேளுக்கும் ஏற்றி மலையை ஒப்ப ஆற்றலும் அகலமும் கொண்டது அவன் மார்பு என்றும், அம் மார்பில் வெற்றித்தழும்புகள் நிரம்பிக்கிடந்தன என்றும் புலவர்கள் பாடினர்.[134] இவ் வீரமார்பிலே நறுமணம் கமழும் சந்தன மாலையும் முத்துமாலையும் திகழ்ந்தன.[135]

இத்தகைய அழகுடைச் செவ்வேள் கானவர்போல் காட்டில் நடந்தால் கல்லும் முல்லும் காலில் தைக்குமல்லவா? அவனை வெறுங்காலோடு நடக்க விடுவார்களா? அவனுடைய திருவடித் தாமரைக்கு மயில்தோகையாலான செருப்பை அணிவித்தனர்.[136]

இவ்வாறு இயற்கையோடு இயற்கையாக இயைந்த பண்டைய தமிழர் அவ்வியற்கையினூடே செவ்வேளைக் கண்டனர். 'வேள்' என்னும் சொல்லுக்கே விழைதல் என்பது பொருளாகும். எனவே, முருகனைச் செவ்வேள், நெடுவேள், வேள் என்றெல்லாம் ஏத்தினர். தொல்காப்பியரால் 'சேயோன்' எனக் குறிப்பிடப்பட்ட முருகன் பரிபாடலில் 'செவ்வேள்' எனக் குறிப்பிடப்படுகிறான். தொல்காப்பியர் விளித்த 'சேயோன்' எனும் பெயரும் பரிபாடலில் 'சேய்'[137] என விளக்கப்படுகிறது. சேய் என்னும் சொல்லுக்கு 'மகன்' (குழந்தை) என்றும், சேய்மை என்றும், செந்நிறம் என்றும் பொருளுண்டு. மனம், மொழி, மெய், உலகங்கள் ஆகியவற்றைக் கடந்து நிற்றலின் முருகன் சேய், சேயோன், செய்யோன், வேந்தன் முதலிய பெயர்களால் அறியப்படுகிறான். நீண்ட உருவமும் ஆறு முகமும் உடையவன் ஆதலால் நெடியோன் என்றும் அறியப்படுகிறான். பிறரைத்

---

131 பரிபா. 5:10
132 ௸ 5:63-68
133 ௸ 5:11
134 ௸ 9:56-57
135 ௸ 9:28-29
136 ௸ 21:3-7
137 ௸ 5:13

தன் எழிலால் கவரும் தன்மையுடையவனாதலின் 'வேள்' என்றும், செந்நிறமுடையவனாதலின் 'செவ்வே'ளென்றும் அறியப்படும் இவன், என்றும் இளமை ததும்பும் அழகன் ஆதலின் 'குமரன்' என்றும் 'முருகன்' என்றும் அறியப்படுகிறான்.

அழகே முருகு, முருகே அழகு எனக் கண்ட தமிழரின் தெய்வமான முருகன் சங்கத் தமிழரை இயற்கை வாழ்விலே அறம் பிறழாது வாழச் செய்து பிறவாமையைத் தந்தான். இவன் வேண்டும் வரங்களைத் தருவான். பிறவிப் பிணியறுக்கும் முழுமுதற் கடவுளாவான். இவையே செவ்வேளைப் பரவிய தமிழர் கண்ட மெய்ப்பொருளியலாகும். வேதப் பண்பின் கலப்பால் செவ்வேளின் செயல்கள் புராணக் கதைகளாகிவிட்டன. கந்த புராணம் பரிபாடலையும் திருமுருகாற்றுப்படையையும் திரித்துக் கூறிவிட்டது.

சங்ககாலத் தமிழர்கள் காடு, மலை, இயற்கை வளங்கள், ஆறுகள், சோலைகள் முதலியவற்றை எழில், உய்யும் வகை முதலியவற்றிற்காகத் தெய்வங்களாகக் கருதி வழிபட்டனர். அவர்கள் கண்டுகளித்த வையை ஆற்றைப் பலவாறு போற்றினர். இதனை நற்றிணை, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகம், புறம் முதலிய எட்டுத்தொகை நூல்களிலும் பொருநராற்றுப்படை, குறிஞ்சிப்பாட்டு, ஐங்குறுநூறு முதலிய பத்துப் பாட்டுத் தொகைநூல்களிலும் விரிவாகக் காணலாம்.

அரசன், கடவுள் ஆகியோரை மலைவளத்திற்கும், சந்திர சூரியருக்கும், வையை முதலிய ஆறுகளுக்கும் உவமைக் காட்டிப் புலவர்கள் பாடியுள்ளனர். எனவே, இயற்கையே எல்லாம் என்பதே அவர்களின் தத்துவமாகும். காலப்போக்கில் இயற்கைச் சக்திகள் ஐம்பூதங்களாகவும், அரசன் இந்திரனாகவும் திருமால் ஆகவும், அவனுடைய நல்லாட்சி வானுலகமாகவும், தீய ஆட்சி நரகலோகமாகவும் மருவிப் பழங்கதைகளாகிவிட்டன.

நல்லதைச் செய்வோர் நன்மையே அடைவர். தீயதைச் செய்வோருக்குத் தீங்கே விளையும். நல்லோரை மன்னவரேயன்றி, மன்னவரின் மனத்தில் நிலைத்த முன்னவரும் (விண்ணவரும்) ஏத்திப் போற்றுவர். போற்றும் புகழுடையோர் இறந்தும் இறவாது நிற்கும் புகழுடம்பையுடையவராவர். இஃதிலார் இருந்தும் இல்லாதவரே. அவர்கள் வாழும் நாளிலும், வாழ்ந்து மடிந்த பின்னும் யாருடைய நினைவிலும் நில்லாதவர். இவரே இருள் சூழ் உலகில் (நரகத்தில்) வதைவோர். வாழ்வின் இத்தகைய இருவேறு கூறுபாடுகளையே உயிர்கள் பல பிறவிகளெடுப்பதாய்க்

கூறினர். இக் கூறுபாடுகளின் சுழற்சியைக்கொண்டே மறுபிறவி யென்றும், உயிர் கூடுவிட்டுக் கூடு பாய்கிறதென்றும் கருதும் அவ் வியக்கத்தக்க கற்பனை தமிழரிடத்தே தோன்றியது. இயற்கையின் சூழலில் வாழ்வாங்கு வாழ்ந்த இவர்களுக்கு இவ்வுலகிலேயே இன்ப துன்பப் பண்பின் கூறுபாடுகளை ஒருங்கே காணும் 'உலகியல் மாண்பு' மறைந்து காலப்போக்கில் இவை மோட்ச நரகமாயின.

கொற்றவை வழிபாடு

பாலைநில மக்கள் தங்கள் தொழில்வழிக் கடவுளாகக் கொற்றவையை வழிபட்டனர். இதுவும் பண்பின் அடிப்படையில் தோன்றிய கடவுளே. தொல்காப்பியரும் கொற்றவையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[138] பிரிந்தவர் மீண்டும் வந்து கூடிய பின், மீண்டும் பிரியாதிருக்கவேண்டுமெனக் கொற்றவையை வேண்டுவரெனக் குறுந்தொகையால் அறிகிறோம்.[139] இதற்கு அவர்கள் கையில் காப்புநூல் கட்டி நோன்பு நோற்பர். கொற்றவையைப் பற்றிய பல செய்திகளைக் கலித்தொகை விவரிக்கிறது. அவள் எல்லாம் உணர்ந்தவளென்றும், பேய்க்கணங்கள் சூழக் காட்டிடையே வாழ்பவளென்றும், 'கொற்றி' எனும் பெயருடையவளென்றும் கலித்தொகை[140] கூறுகிறது.

சிலப்பதிகாரத்தில் 'கொற்றவை' தமிழ்ச் சமுதாயத்தில் பெற்றிருந்த முதன்மையினைத் தெளிவாக அறிகிறோம். காட்டில் வாழ்ந்த வேடர்களின் தெய்வமாகத் திகழ்ந்த கொற்றவையை அவ் வேடர்கள் பலவாறு தொழுதேத்துவதைச் சிலப்பதிகாரம் சிறப்பித்துக் கூறுகிறது. அவள் கவுரி, சமரி, சூலி, நீலி, மாலின் தங்கை, நெற்றிக்கண்ணை உடையவள் என்பனவாகப் பலபடப் பாராட்டப்படுகிறாள். அவள் நஞ்சுண்டும் சாகாதவள் என்றும் சிலப்பதிகாரம் செப்புகிறது.[141]

மதுரை மாநகரின் மேற்கு வாயிலிலிருந்த கொற்றவை கோயிலில், கணவனை இழந்த கண்ணகி தன் கைவளையல்களை உடைத்தாளென்னும் செய்தி சிலப்பதிகாரத்தால் அறியப்படுகிறது.[142] இதனால் காட்டினைப் பதியாகக்கொண்ட வேடர்களால் மட்டுமே வணங்கப்பெற்ற கொற்றவைக்கு நகரிலே கோயில்கட்டி

138 தொல். பொருள். புறத். 4
139 குறுந். 218:1
140 கலித். 89:8
141 சிலப். 11:214, 12:55, 67-68
142 ஷ 23:181

எல்லோரும் வணங்கினரென்பதும், கணவனை இழந்த பெண்கள் தங்களின் பொட்டையும், பூவையும், வளையல்களையும் இழந்து கைம்மை நோன்பு நோற்பதாகக் கொற்றவைமுன் வீரவஞ்சினம் கூறுவரென்பதும் புலனாகிறது. பெண்களின் கற்பிற்கும், நோன்பிற்கும் காப்பாக நிற்பவள் கொற்றவை. காலப்போக்கில் இக் கொற்றவையே 'சக்தி'யாக வழிபடப்பட்டாள். சக்தி வழிபாடு முழுமுதற் கடவுள் (சைவம்) வழிபாடாகி, நடுப்பிரிவான வாமம் (சாக்தம்) எனப் பெயர்பெற்றது.

திருக்குறளில் மெய்ப்பொருளியல்

திருக்குறளில் தத்துவங்கள்

திருவள்ளுவர் ஒரு சிறந்த மெய்யறிவாளர் (தத்துவஞானி) என்பதையும், அவர் கண்ட தமிழ்ச் சமுதாயம் மெய்ப்பொருளை அடைய வகுத்துக்கொண்ட உலகியலையும் வள்ளுவர் வாய் மொழியால் நன்கறியலாம்.

திருவள்ளுவர் அறத்தை முதலாகக்கொண்டு தம் நூலைத் தொடங்கித் துறவறத்தை அதன் பின் வைத்து, இல்லறத்தால் துறந்தாரைப் பேணி, அவரைத் துணையாகக்கொண்டு நல்லறத்தில் நடந்துசெல்லச் செய்கிறார்; இல்லறத்தாரையும் துறவறத்தாரையும் காத்து, அறம் பிறழாமல் நடத்துகின்ற அரசையும் அவ்வரசுக்குத் துணையான அமைச்சு முதலியவற்றையும் கூறிய பின் சான்றோர், குடிப்பிறப்பாளர், உழவர், மருத்துவர் முதலியவர்களைப்பற்றிச் சிறப்பித்துக் கூறுகிறார்; இவர்களின் அக ஒழுக்கமாகிய காதல் வாழ்வை ஈற்றில் வைத்து முடிக்கிறார். இல்லறத்தாருக்கு அறன் வலியுறுத்தலையும், துறவறத்தாருக்கு நீத்தார் பெருமையினையும் எடுத்துக்கூறி மெய்யறிவு நிலைக்கு அழைத்துச் செல்லுகிறார். இதுவே வள்ளுவம் காணும் வாழ்க்கைப் பட்டாங்கு ஆகும்.

துறவு

வள்ளுவர் கூறும் துறவு, உலகை முற்றிலும் துறந்து காடு சென்று வாழும் வாழ்வு அன்று. இல்லறத்திலே இருந்துகொண்டு மெய்ப்பொருள் உணர்ந்து, தெளிவான உள்ளம் கண்டு, 'யான்,' 'எனது' எனும் செருக்கினை அறுப்பதே அவர் கூறும் துறவாகும். இதுவே வள்ளுவர்காலத் தமிழ்ச் சமுதாயம் கடைப்பிடித்த துறவுக் கோலமாகும். 'துறவறமானது இல்லறத்தில் வழுவாதொழுகி அறிவுடையவராய்ப் பிறப்பினையஞ்சி, இறுதிக் காலத்தில் வீடுபேற்றின்பொருட்டுத் துறந்தாருக்கு உரித்தாய அறம்'

என்பது துறவறம் என்பதற்குப் பரிமேலழகர் தரும் விளக்க மாகும்.

துறவோர்

ஆகவேதான், அத்தகைய துறவறத்தாரை இருமைவகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டவர்; நோற்றலின் ஆற்றல் தலைப் பட்டவர்களாய்க் கூற்றத்திற்கும் அஞ்சாதவர்; உரனென்னும் தோட்டியால் ஐம்புல யானைகளையும் அடக்கியவர்; செயற்கரிய செய்யும் பெரியவர்; மெய்யுணர்ந்த நிறைமொழி மாந்தர்; குண மென்னும் குன்றேறி நின்றவர்; எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்; மருள் தீர்ந்த மாசறு காட்சியவர்; புலம்வென்ற புன்மையில் காட்சியவர்; யான், எனது எனும் செருக்கு அறுத்தவர்; ஆரா இயற்கை அவா நீத்துப் பேரா இயற்கை பெற்றவர்; செயிரின் தலைப்பிரிந்த காட்சியவர்; ஆமை போல் ஐந்தடக்கியவர்; நிலையில் திரியாதடங்கிய மலையினும் சிறந்த மாட்சிமையுடையவர்; அளவென்னும் ஆற்றல் புரிந்தவர்; தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்றெல்லாம் வள்ளுவர் பெருமான் ஏத்திப் போற்றுகிறார்.

இல்லறம்

ஆண் தனக்குத் தக்கதொரு பெண்ணைத் துணையாகக் கொண்டு வாழும் வாழ்க்கையே இல்லறம்; அஃது அல்லது நல்லற மன்று. ஆணுக்குப் பெண் துணையாதல்தான் இயற்கையின் விதி யாகும். ஆண் உடல் என்றால் பெண் உயிராகிறாள். உடலுடன் சேரும் உயிரே நிலைபேறாகிறது. இதுவே வள்ளுவர் காணும் ஆன்மநேய உறவாகும். இதனை அவர்,

'உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு'[143]

என்கிறார்.

தலைவனும் தலைவியுமாகிய இவர்கள் ஓருயிர் ஈருடலாய் ஒன்றி மக்கட் செல்வத்தையும் உலகியல் செல்வங்களையும் பெற்று வாழ்வர். ஆண் பிறனில் நோக்காப் பெருந்தகையாள னாயும், பெண் தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகை சான்ற சொற்காத்து வாழ்பவளாயும் வாழும் இவர்கள், தென் புலத்தார், தெய்வம், விருந்து முதலானோரை ஓம்பி நிற்பர்.

143 குறள். 1122

இவர்களின் வழுவிலா வாழ்க்கை முயற்சிக்குத் தெய்வம் முன்னின்று உதவும். இதனை வள்ளுவர்,

'குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்'[144]

என்கிறார்.

இவர்களுக்குத் துணைநிற்கும் எல்லோரிடத்திலும் இவர்கள் நன்றியறிதலோடு வாழ்வர். நன்றி கொன்றார் உய்வடைய மாட்டாரென்பது வள்ளுவம்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வுஇல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'[145]

எனக்கூறும் வள்ளுவர் துறவுபூண்டு கடுந்தவம் புரிவோராயினும் நன்றிகெட்டவர் வீடுபேறு அடையார் என்பதையும், இல்லறத்தானும் நன்றியறிதலோடு வாழ்வானாயின் வீடுபேற்றை அடைவான் என்பதையும் கூறி மெய்ப்பொருளை அடைய இல்லறமே நல்லறம் என்பதை வலியுறுத்துகிறார்.

நல்குரவால் (வறுமையால்) வாடுவோருக்கு ஈதலே நல்லறம். அந்த நல்குரவை ஆக்கியவன் ஆண்டவனே ஆனாலும் அழிக எனக் கூறும் வள்ளுவம் உலகியல் தத்துவங்களில் தலையாயது. இதனால்தான் மேலுலகமே கிட்டாதாயினும் ஈந்து, கெடுக என்கிறார்.

இல்வாழ்வதெல்லாம் வேளாண்மை செய்தற்பொருட்டு என்றும், அழிபசி தீர்த்தல் பொருள் வைப்புழி என்றும், ஈதல் அல்லது ஊதியமில்லை என்றும், மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று என்றும் அவர் கூறும் ஈதலறம் உயிருக்கு வீடு பேற்றை நல்கும் என்னும் திடமான உறுதிமொழியாகும்.

இவ்வாறு, அறம் பிறழாது வாழும் இல்லறத்தால் இல்லறத்திலேயே துறவறத்தையும் கடவுள் நிலையையும் காண்கிறான். இது விழித்துக்கொண்டே துயில்கொண்டு இன்பம் துய்ப்பது போலாகும். அவன் இல்லறத்திலிருந்துகொண்டு செய்யும் ஒவ்வோர் அறமும் இறைநிலையை அடைய ஏறிச் செல்லும் படிகளாக உதவுகின்றன. இதனால் அவனுடைய இருளென்னும் நிலை நீங்கி மாசற்ற இறைவனது காட்சியைக் காண முடிகிறது. இதனை வள்ளுவப் பெருந்தகை,

---

144 குறள். 1023 145 ஷை 110

'இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசுஅறு காட்சி யவர்க்கு'[146]

என்கிறார். அறம் வழுவாது வாழும் இல்லறத்தான் பொன்மனத்தானாகிறான். இப் பொன்மனம் உள்ளத்தால் உள்நோக்கி உள்ளதாகிய மெய்ப்பொருளைக் (இறைநிலை) காணுமானால் அவன் உயிர் மீண்டும் இந்த மண்ணில் பிறவாது. ஏனெனில், அந்த உயிரைப் படர்ந்து நின்ற ஆணவ இருள் அவன் உள்ளொளியால் நீங்கிவிடுவதால் உயிர் தானே இறையருளில் தோய்ந்துவிடுகிறதென்கிறார் வள்ளுவர்.

இறைவன்

தமிழ் எழுத்துகளுக்கெல்லாம் அகரமே முதலாகவும் உயிரெழுத்துகளுக்கு உயிராகவும், மெய்யெழுத்துகளுக்கு அடிப்படையாகவும், இவற்றை இயக்கியும், துணையாக நின்றும் உதவுவதுபோல இறைவனும் தன்னிலையினால் தானே இயங்கியும், ஏனைய உயிருக்கு உயிராக இருந்து இயக்கியும், மெய்களில் கலந்து நின்றும், அவற்றுக்கு உறுதுணையாகவும் விளங்குகிறான்.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.'[147]

இதுவே வள்ளுவர் காணும் இறைவனின் நிலையாகும். இதனால் இறைவன் உலகத் தோற்றத்தில் முதலாய் நின்றும், உலகத்தின் வேறாக நின்றும், ஒன்றாக நின்றும், உலகம், உயிர் இவற்றை இயக்கியும், உடன்நின்று துணைசெய்தும் திகழ்கிறான். எல்லாப் பொருள்களுக்கும் தான் சார்பாக இருந்து, தனக்கொரு காப்பும் இல்லாமலிருத்தலும், எல்லாப் பொருள்களுக்கும் பற்றாக நின்று, தனக்கு ஒரு பற்றுமில்லாமல் நிற்பதும் இறைவனது முதன்மையாகும்.

இவ்வாறு இறைவனை உயிரோடும், உயிரோடு கூடிய உடம்போடும், இவை இரண்டும் சேர்ந்த ஆண் பெண்களோடும் கண்ட வள்ளுவர் இவர்களின் வாழ்க்கையிலும், வாழ்க்கைப் பாதையிலுமே இறைவனை நிறையச்செய்து வாழ்க்கை சென்றடையும் அல்லது முடியும் நிலையை இறைவனது 'அடி' அல்லது வீடுபேறு என்கிறார். இதனால் இறைவன் உலகியலுக்கு அப்பாற்பட்டவனெனக் கூறாமல் இல்லறத்தோடு இயைந்த நடுவனாகவே உள்ளானென வள்ளுவர் சுட்டுகிறார்.

146 குறள். 352 147 ஷை 1

வானவர் உலகம்

வள்ளுவர் காலத்துத் தமிழ்ச் சமுதாயத்தில் 'வானவர் உலகம்' (மேலுலகம்) பற்றிய, திடமான நம்பிக்கை நிலவிவந்தது. அதனை அடைவதற்கான பல்வேறு வழிவகைகள் கூறப்பட்டன. மக்களும் பல்வகை நெறிமுறைகளைக் கடைப்பிடித்து அதனை அடையும் நோக்கில் வாழ்ந்தார்கள். ஆனால் இல்லறத்திலேயே நல்லறத்தையும், இறையுலகத்தையும் கண்ட வள்ளுவர் இதே கருத்தில் மக்களுக்கு மேலுலகத்தைப் (இறைவதியுமிடம்) பற்றிக் கூறுகிறார். அவ்வாறு, வானுலகமே இருப்பதாயினும் வாழ் வாங்கு வாழும் வையமே சிறந்ததென அவர் கூறுவதிலிருந்து இது புலனாகிறது.

வானுலகத்தையும் வானுலகத்திலுள்ள அமரரையும் குறிப் பிடும்போது, வள்ளுவர் புத்தேளிர் வாழும் உலகு, அடக்கம் அமரருள் உய்க்கும், அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை, கள்ளார்க்குத் தள்ளாது புத்தேளுலகு, மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று, புத்தேளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே, வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்றெல்லாம் கூறு கிறார். வானவர், அமரர் முதலிய பெயர்களால் குறிப்பிடப் படுவோர் வாழ்வாங்கு வாழ்ந்து இவ்வுலக மக்களின் மனத்திலே இடம்பெற்றவரே என்பது பலரது முடிபாகும். இதனால்தான்,

> 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும்'[148]

என்றார். இன்பமயமான இந் நிலையைத் 'தாமரைக் கண்ணான் உலகு' என்றும் போற்றுகிறார். செய்யவள், செய்யாள், தாமரை யினாள், திரு முதலிய பெயர்களால் குறிப்பிடப்பெறும் 'திருமகள்' நெறிபிறழா உலக இன்பத்தின் மறுபெயரே யெனலாம்.

இருள் உலகம்

வள்ளுவர் காலத்து மக்கள் மேலுலகத்தில் நம்பிக்கை வைத்திருந்ததைப் போலவே கீழுலகத்தைப்பற்றியும் நம்பினர். இது துன்பத்தின் இருப்பிடம் என்பது அவர்களின் நம்பிக்கை. வள்ளுவர் வாழ்வாங்கு வாழாமல் மனத்திற்கு அடிமையாகி அது செலுத்தும் போக்கெல்லாம் சென்று, வாழ்க்கையில் செம்மை காணாதவரே 'இருள்சூழ் உலகடைவர்' என்கிறார். அவர்களது மனம் தூய்மையற்றதாதலால் வாழ்வும் ஒளியற்று, இருள்சூழ்ந்து

148 குறள். 50

இருக்கிறது என்கிறார். நீருக்குக்கீழ் வாழும் உயிர்களுக்கு நிறைந்த ஒளி கிடைக்காமல் அவை இருளிலேயே உழன்று கிடப்பதைப்போல, இவர்கள் வாழ்க்கை அமையுமென்கிறார். இவர்கள் நீருக்குமேல் வந்து ஒளிகாண முயலாமல் மேலும்மேலும் தீயவற்றைச் செய்து நீருக்குக் கீழுள்ள சேற்றிலேயே (விடுபடாத் துன்பம்) உழன்று கிடப்பரென்பதே வள்ளுவர் காணும் கீழுலகமாகும். இதனை அவர் 'அண்ணாத்தல் செய்யா தளறு', 'பூரியர்கள் ஆழும் அளறு' என்றெல்லாம் கற்பித்தலைக் காணலாம்.

வஞ்ச மனமுடையவனுடைய வாய் தீயனவற்றையே பேசும். மெய்வழி நிற்கும் அவனுடைய செயல்களும் தீயனவாக இருக்கும். நல்லனவற்றையே நினைத்துப் பேசிச் செயல்படுவதற்காகவே புலன்கள் இவனிடமிருந்தும், கனியிருப்பக் காய் கவர்ந்தாற்போல் தீயனவற்றையே நினைத்து, பேசி, செய்து, அத்தகைய தீச்செயல்களால் மீளாத் துன்பமடைவதால் இவனைப் பிறர் பார்த்து ஏளனம் செய்து நகைக்க வேண்டியதில்லை: அவனுள் உள்ள பூதங்களே (புலன்களே) நகும் என்கிறார்.

'வஞ்ச மனத்தான் படிற்றுஒழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்'[149]

என்பது வள்ளுவர் வாக்கு. 'புலனடக்கத்தால் புத்தொளி கண்டு இவ்வுலகில் இன்பம் துய்க்காமல், புலன்களைத் தம் இச்சை போல் திரியவிட்டு, அவற்றின் தீயசெயல்களால் அவதியுறுபவன் இவ்வுலகையே நரகமாக்கிக் கொள்கிறான்' என்னும் மேதை மில்டனின் தத்துவம் வள்ளுவர் வழிவந்ததாகும். மோட்சம் என்றோ, நரகம் என்றோ தனித்தனியாக ஏதுமில்லை. ஒருவன் அமைத்துக்கொள்ளும் வாழ்க்கை முறையைப் பொறுத்து இவை இவ்வுலகிலேயே அமையுமென்பதாம்.

வாழ்வாங்கு வாழ்பவன் மனம் நிறைவுபெறுகிறது. அமைதியில் அவன் தெளிகிறான். தெளிந்த அவனுடைய உள்ளொளி வானத்தையும் ஊடுருவி அப்பாலுள்ள காட்சிகளையும் காணுகிறது. இதனை வள்ளுவர்,

'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து'[150]

என்கிறார்.

இத்தகைய கருத்துகளை ஊன்றி நோக்கும்போது வள்ளுவர் வானவர் உலகம் (மோட்சம்), இருள்சேர் உலகம் (நரகம்) ஆகிய

---

149 குறள். 271 150 ௸ 353

வற்றைத் தனித்தனி உலகமாகக் கொள்ளாமல் நல்வினையால் நன்மையடைவதை வானவர் உலகமென்றும், தீவினையால் தீமையடைவதை இருள் உலகம் என்றும் கற்பித்துக் கூறுகிறார் எனலாம். உயிர், ஊழ் ஆகியவைபற்றி அவர் கண்ட தத்துவங் களை ஊன்றிநோக்கினால் மேற்கூறிய மோட்சம், நரகம் ஆகிய அவருடைய தத்துவங்களை நன்கு தெளியலாம்.

உயிர்

உயிர் என்றுமுள்ளது; இயல்பாகவே இருள் கலப்புள்ளது; சார்ந்ததன் வண்ணமானது; உணர்த்த உணருவது; வினைக் கேற்பப் பலனை நுகர்வது ஆயினும் இறுதியில் வானுலகையே அடைவது என்பதே உயிர்பற்றி வள்ளுவர் கண்ட தத்துவமாகும். நிலைபேறுடைய உயிருக்கு, உடம்பு நிலைபேறாக அமைய வில்லையேயென வள்ளுவர் வருந்துகிறார். 'புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு'[151] என்பது அவர் கொள்ளும் குறளாகும். உடம்பின் நிலையாமையை எண்ணி வருந்திய வள்ளுவர், உயிர் துன்பமடையக் காரணம் அது தன்னைப்போலவே பிற உயிரை ஓம்புதலை ஒழித்ததால் ஆகுமென்கிறார்.

'மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்என்ப
தன்னுயி ரஞ்சும் வினை.'[152]

பிற உயிர்களுக்கு ஊறு விளைவிக்காதவன் தன் உயிருக்கு அஞ்ச வேண்டியதில்லை என்பதே அவர் கூறும் திடமான உறுதிமொழி யாகும். ஏனைய உயிருக்கு இரங்கித் துன்பம் துடைத்துக் கொண்டு செய்வதால்தான், தான் இன்பமாக வாழ முடியு மென்பதனை,

'தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்'[153]

என்கிறார். மேலும், தன் இன்னுயிரைத் துறக்க நேர்ந்தாலும் பிற உயிரை நீக்கி அதன்வழித் துன்பத்தைத் தேடிக் கொள்ளாதே என்பதனை,

'தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை'[154]

என்கிறார்.

---

151 குறள். 340
152 ஷை 244
153 ஷை 318
154 ஷை 327

மேற்கூறியவற்றால் தன்னுயிர்போல் மன்னுயிரை மதித்து வாழ்வோர் நிலையான் உயிரைப் போலவே உடலும் நிலையாகூ இல்லையே என வருந்தாமல், தாம் கண்ட இன்பம் பெறுக இவ்வையம் என இன்புற்று இருப்பர் என்ற தத்துவத்தை வள்ளுவர் விளக்கக் காண்போம்.

ஊழ்வினை

'ஊழ்' என்னும் சொல்லுக்கு மலர்கள் என்றும், உதிர்தல் என்றும் இருவேறு பொருள் உண்டு. மலர்வதே உதிர்ந்தும் உதிர்வதே மலர்ந்தும் தொடர்ந்து நிகழும் செயலை 'ஊழ்வினை' என்றனர். அஃதாவது ஒருநிலையால் (செயலால்) ஒரு பயன் ஏற்படும். அப் பயனால் மீண்டும் ஒரு செயல் தொடரும். அத் தொடர்ச்சியால் ஒரு பயன் ஏற்படும். இவ்வாறு அறுபடாச் சங்கிலித் தொடர்போல் பிறப்பும், பிறந்தபின் செய்யும் செயலின் பயனால் மீண்டும் பிறப்பும் ஏற்படுவதையே 'ஊழ்வினை' சுட்டுகிறது. இதற்குத் தனக்குத்தானே காரணம் தவிர வேறு பொருளோ, வல்லமையோ அன்று. இதனை அறியாதார்தாம் 'அன்று எழுதியவன் அழித்து எழுதுவானா?' என்று கூறுகின்றனர். ஊழ் என்பதற்குப் 'பால்' என்றும், இதனை நடத்திச் செல்லும் கடவுளருக்குப் 'பால்வரை தெய்வம்' என்றும் தொல்காப்பியர் உரைக்கக் காணலாம். ஒருவன் தான் செய்த வினைக்கேற்ற பலனைத் தானாகவே அடைவான் என்பதே பால்வரை தெய்வ விதிமுறையாகும். இயல்பாக உயிரோடு ஆணவ இருள் கலந்திருக்கிறதென்பதும், இந்த இருள் உயிரைத் தன் இச்சை போல் ஆட்டிப் படைப்பதால் (உடலோடுகூடிய) உயிர் விரைந்து செயல்பட்டுப் பால்வினைகளைச் செய்து அவற்றிற்கேற்ற பலன்களைத் துய்க்க நேர்கிறதென்றும், ஊழ்வினையின் ஆட்சியை விவரிப்பர். பேதமை கொண்ட உயிர் இவ்விருளின் உந்துதலால் ஒரு பிறவியிலேயே ஏழு பிறவிகளில் செய்யக் கூடிய வினைகளைச் செய்துவிடுகிறதென்றும் வள்ளுவர் கூறுவதை நோக்கலாம்.

> 'ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
> தான்புக் கழுந்து மளறு.'[155]

ஒரே பிறவியில் அதிவேகத்தில் ஆராயாது செய்யும் வினைகள் தீயவையாகவே இருக்குமாதலின், பேதை உயிர் மீளாத் துன்பமாகிய பிறவிக்கடலில் வீழ்கிறது என்ற ஊழ்வினைத் தன்மையினை வள்ளுவர் மேற்கண்ட குறட்பாவால் விளக்குகிறார்.

---

155 குறள். 835

ஒருவன் சோம்பலின்றி உழைக்கவேண்டும். அவ்வுழைப்பால் பொருள் சேரும். பொருளால் இவ்வுலக இன்பத்தைப் பெறலாம். இவ்வுலக இன்பத்திலும் நெறிபிறழாது வாழ்ந்தால் பிறவிப் பயனை அடையலாம். சோம்பல் உள்ளவன் உழைக்கமாட்டான். உழைக்காதவனிடம் பொருள் சேராது. ஏற்கெனவே சேர்ந் திருந்த பொருளும் போய்விடும். இதனால் இவ்வுலக இன்பத் தையும் பிறவிப் பயனையும் அவனால் பெறமுடியாது. சோம்ப லின்றி உழைப்பதால் அவன் நல்வினையைச் செய்து நல்ல பயனை அடைகிறான் (பொருள் சேருகிறது). இதனை வள்ளுவர் 'ஆகூழ்' என்கிறார். சோம்பித் திரிவதால் தீவினையைச் செய்து பொருளு மின்றித் துன்பமடைகிறான். இதனைப் 'போகூழ்' என்கிறார்.

'ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி.'[156]

என்பதே 'ஊழ்' என்னும் அதிகாரத்தில் கூறப்படும் முதற் குறளாகும். எனவே, நன்மை தீமைகளுக்கு ஒருவனது செயலே காரணமாகிறது. வினைப் பயனென்பது 'செயலின் பயன்' என்பதையே குறித்தது. காலப்போக்கில் இது பிறவிப்பயனைக் குறிப்பதாயிற்று. ஒருவன் பொருளற்று அழிவதற்குமுன் அவனுடைய நல்லறிவு கெடும். அஃதாவது அறிவில்லாமல் செயல்படுவான் என்றும், மேலும் மேலும் முன்னுக்கு வருபவன் மேலும்மேலும் தன் அறிவை வளர்த்துக்கொண்டு நல்லறிவோடு செயல்படுவானென்றும் ஒருவனுடைய ஆகூழுக்கும் போகூழுக் கும், அவன் அறிவே மூலகாரணமாகிறதென்றும் வள்ளுவர் கூறு வது உன்னி உன்னி உணரத்தக்கதாம்.

'பேதைப் படுக்கும் இழவூழ் அறிவ கற்று
ஆகலூழ் உற்றக் கடை.'[157]

இத்தகைய அறிவுநூல்கள் பல கற்பதால் மட்டுமே செல்வம் சேர்ந்துவிடாது. செல்வம் அறிவில்லாதாரிடத்தும் இருப்பதை யும், அறிவுடையார் வறியவராயிருப்பதையும் காணும்போது அறிவால்தான் செல்வத்தைத் தேடமுடியும் என்பதைவிட முயற்சியால்தான் முடியும் என்பதை உணர்கிறோம். அறிவுடை யார் உரிய செல்வத்தை இழந்து வாடுவதையும், பொருள் கோடி சேர்த்தோர் அதனைத் துய்க்க முடியாமல் வருந்துவதை யும், பொருளே இல்லாதவர் இன்பமாய் வாழ்வதையும் காணும் போது அவரவர் மனநிலையே இவற்றுக்குக் காரணமென்பதை

156 குறள். 371 157 ஷெ. 372

அறியலாம். அஃதாவது நன்மை, தீமை எதுவரினும் அவற்றைப் பக்குவமாகத் துய்க்கும் மனப்பாங்கு வேண்டும்.

'நன்றாங்கா லல்லவாக் காண்பவ ரன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்.'[158]

இஃது ஊழ்வினையை வெல்ல வள்ளுவர் கூறும் வழியாகும். மனமே ஆகூழுக்கும், போகூழுக்கும், இன்பத்திற்கும் (மேலுலகத் திற்கும்), துன்பத்திற்கும் (கீழுலகத்திற்கும்) இருப்பிடமென்பதை இதனால் தெளியலாம்.

இதுகாறும் வள்ளுவரின் வாய்மொழியால் நாம் கண்ட தத்துவம், வாழ்க்கையைச் செவ்வனே நடத்துகிற எவனும் வாழ்வின் பயனைத் தானே அடைவான் என்பதேயாகும். இவ் வுலகமும், இவ்வுலகப் பொருள்களும் 'இறைவன்' என்னும் ஒரு முழுமுதல் சக்தியால் படைக்கப் பெறவில்லை என்பதே வள்ளுவர் காணும் முடிவு. ஆனால், இறைவனை வள்ளுவர் 'வாலறிவன்' என்று குறிப்பிடுகிறார். அறிவு நம்மிடமே இருந்து நமக்கு உதவுகிறது. அதுபோல இறைவனும் நம்மோடு நாமாகவே இருந்து நமக்கு உதவுகிறான் என்கிறார்.

உலக வாழ்க்கைக்கு வேண்டிய செல்வங்களும், அவற்றைப் பெற்று வாழும் வாழ்க்கை நெறிகளும், நன்னெறிகளைப் பிறழ்ந்து வாழ்வதால் சூழும் கேடும் (போகூழ்) வள்ளுவத்தில் தெளிவுபடுத்தப் பெற்றுள்ளன. ஆகவேதான் அறம், பொருள், இன்பம் கூறி வீட்டைக் கூறாது விடுத்தார். ஆயினும், இந்த முப்பாலிலுமே வீடு விரவிக் காணப்படுகிறதென்று கூறி, தாமரைக்கண்ணான் உலகு, அளறு, உலகு முதலியவற்றை அவர் குறிப்பிட்டுள்ளதைச் சுட்டிக் காட்டுவர். இதற்கு, மேலே கடைசி யாகக் கூறிய ஒருவனுடைய மனமே மோட்சமும் நரகமுமாயுள்ள தென்பதை ஊன்றி உணர்வதால் தெளிவுபெறலாம். தாமரைக் கண்ணான் உலகுபோன்ற உவமைகளையும், ஊழ்வினைபற்றிய உவமைகளையும் அன்றைய மக்கள் மனத்திலே படியும்படி (ஏற் கெனவே அவர்கள் அறிவிக்கப்பட்டிருந்தவாறு) விளக்கினார்.

சங்ககாலச் சமுதாயத்தில் ஐவகை நிலத்தாரும், இரவலன் முதல் இறைவன் (அரசன்) வரை யாவரும் கள்ளுண்டு களித்தனர். அந்தணரான கபிலர் புலால் தின்று, கள் குடித்து மகிழ்ந்தார்[159] என்பதனையும், வள்ளல் அண்டிரன் முள்ளம்பன்றிக் கறியைச்

---

158 குறு. 379   159 புறம். 14:12-16

சமைத்துப் பன்னூல் புலவருக்கும் மெய்யறிவாளருக்கும் படைத்ததையும் அறிகிறோம். கள்ளும் கறியும் சங்ககால மக்களின் வாழ்வில் இரண்டறக் கலந்தவை. இவற்றை உண்ணுதல் அக்கால நாகரிகமும் பண்பாடுமாகும். விழாக்களில் நிணச்சோறும் (பிரியாணி), கள்ளும் அளவுக்குமீறிக் கிடந்ததைக் காண்கிறோம். இறைவழிபாட்டு விழாவிலும் இவை படைக்கப்பெற்றதை நக்கீரர் உட்படப் பலரும் கூறக் கேட்கிறோம். சங்கப் புலவர் பலரும் கள் குடித்தலையும், புலால் உண்ணுதலையும் பெருமையாகப் பாடியுள்ளனர்; ஒருவரும் கண்டித்துப் பேசவில்லை. ஆனால், வள்ளுவர் காலத்தில் கட்குடியால் நேரும் தீமைகள் சமுதாயத்தில் மலிந்துவிட்டதால் இவர் கள்ளுண்ணாமையைப் போற்றி, கள் உண்ணுதலைக் கண்டிக்கிறார். அவ்வாறே, கொல்லாமையை ஏற்றிப் பேசுகிறார். வேள்வியில் உயிர்க்காவு கொடுத்து உண்ணும் வேதவழியையே இவர் அவ்வாறு சாடி, கொல்லாமையை வலியுறுத்தியுள்ளார். இதனால், இவர் காலத்தில் வேதவழிபாடுகளும், வேதவிதிகளும் (தத்துவங்களும்) மெல்ல மெல்லத் தமிழ்ச் சமுதாயத்தில் குடிகொண்டு ஆட்சி பெற்றதை அறிகிறோம். வள்ளுவர் காலத் தமிழர் கருமவினை, வினைப்பயன், மோட்சம், நரகம் முதலியனவாகப் பல வேதக் கருத்துகளால் ஆளப்பட்டனரென்பதால்தான் வள்ளுவரும் தம் நூலில் மேற்கண்ட உவமைகளைக் காட்டித் தமக்கே உரிய தமிழ்ப் பண்பால் மெய்ப்பொருளுண்மையை விளக்கினர்.

சங்ககாலத்தில் பரத்தையர் வாழ்ந்தனர். இவர்களுடன் தொடர்புகொண்டு வாழ்வதை அக்கால மக்கள் நாகரிகமாகவே கருதினர். ஆயினும், வள்ளுவர் இதனைக் கண்டித்து, அவர்களின் தொடர்பால் நேரும் காமசோக வினைப்பயன்களை விளக்குகிறார். அதே நேரத்தில் இல்லறத்தான் பிறன் மனைவியை விழையாமலிருக்க வேண்டுமென்றும், துறவறத்தான் முற்றிலும் காமத்தை விலக்கவேண்டுமென்றும் கூறி, இவற்றால் வரும் வாழ்க்கை இன்பத்தைக் (ஆகூழ்) கூறுகிறார். பொய்யாமையும் கள்ளாமையும் இவர் காலத்தில் உண்டு. இவற்றை வைதிகர் முறையில் வள்ளுவர் விளக்குவதிலிருந்து இவரை ஒரு வேத வித்தகரென்று கூறுதல் கூடாது.

இதனாற்றான் வள்ளுவம் கூறும் தத்துவங்கள் சங்கத் தமிழரின் வாழ்க்கைப் பட்டாங்கை உள்ளபடியே பிரதிபலிக்கும் தத்துவங்கள் என்கிறோம். இத்தகைய வள்ளுவத் தத்துவங்களைக் கபிலரின் சரங்கியத் தத்துவத்திலும், துவைத, விசிட்டாத்துவைதத் தத்துவங்களிலும், பிற சங்க இலக்கியங்களிலும் காண

லாம். ஆனால், திருக்குறள் தவிர்த்த மற்றச் சங்க இலக்கியங்களில் வேதகாலத் தத்துவங்களும் விரவிக் காணப்படுவதால், சங்ககாலச் சமயம் வேதவழி வந்ததே எனக் கூறுவாருமுளர். சங்க இலக்கியங்களை ஊன்றி உணரும்போதும், அன்றைய தமிழரின் வாழ்க்கை முறைகளையும் நெறிகளையும் வேதகால மக்களோடு ஒப்பிட்டு நோக்கும்போதும் இவை ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்டு நிற்பதைக் காணலாம். காலப்போக்கில் வேதக்கருத்துகள் தமிழ் மண்ணில் ஆட்சி கொண்டனவேயொழிய அவை தமிழரின் கருத்துகளல்ல.

ஓரளவு வள்ளுவரின் தத்துவங்களைப் பிரதிபலிக்கும் இருமைக் கோட்பாடு (துவதைம்), அதனையொட்டிய விசிட்டாத்துவைதம் ஆகியவற்றை அறிவதால், இவை ஆயப் பெறும் சங்க இலக்கியங்களில் காணப்பெறும் பாங்கினைக் காணலாம்.

பண்டைத் தமிழகத்தில் மெய்ப்பொருள் பற்றிய ஒரு சிறந்த நூலிருந்ததாக அறிகிறோம். இதனைப் 'பட்டாங்கு நூல்' என வழங்கினர். அக்காலத் தமிழர்கள் உடல்பற்றி ஆய்ந்து கண்ட மெய்யறிவினைத் தொண்ணூற்றாறு மெய்ப்பொருள்களாகப் (தத்துவங்களாகப்) பிரித்தனர். அவற்றுள் ஆன்மாவைப் பற்றியவை இருபத்து நான்கு; நாடிகளைப் பற்றியவை பத்து; நிலை அல்லது அவத்தை பற்றியவை ஐந்து; மலம் பற்றியவை ஐந்து; குணம் பற்றியவை மூன்று; மண்டலம் பற்றியவை மூன்று; பிணி பற்றியவை மூன்று; திரிவு அல்லது விகாரம் பற்றியவை எட்டு; நிலைக்களம் அல்லது ஆதாரம் பற்றியவை ஆறு; தாது பற்றியவை ஏழு; உறை அல்லது கோசம் பற்றியவை ஐந்து; வாயில் பற்றியவை ஒன்பது என வகுத்து வகைப்படுத்தி ஒவ்வொன்றையும் தெளிவாக ஆய்ந்தனர். ஆன்ம மெய்ப்பொருள் பற்றிய இருபத்து நான்கு தத்துவங்களில் பூதம் பற்றியவைஐந்து; புலன் பற்றியவை ஐந்து; அறிவுப்புலன் பற்றியவை ஐந்து; கருமப் புலன் பற்றியவை ஐந்து; காரணம் பற்றியவை நான்கு ஆகும். இவற்றை ஆன்மா, இறைவன் என்னும் இருபெரும் கூறுகளாக்கி இருமைக்(துவைதம்) கோட்பாடாகவும், ஆன்மாவும் இறைவனும் ஒன்றிய கோட்பாடாகவும் (விசிட்டாத்துவைதம்) கொண்டு இறைநெறியை வளர்த்தனர். ஆன்மாவும் இறைவனும் ஒன்றே (அத்துவைதம்) என்ற தத்துவம் தமிழருடையதன்று. எல்லாப் பொருளும் ஐம்பூதமாய் அடங்குமென்னும் கோட்பாடும், பதி, பசு, பாசம் என மூன்றாக அடங்கும் எனும் தத்துவமும், உயிர், உடம்பு என இரண்டாக அடங்கும் எனும் தத்துவமும் தமிழ

ருடையதன்று. இவை, பிற்காலத்தில் பிற சமயங்களின் கூட்டுறவால் ஏற்பட்டவை என்பதைக் காண்போம்.

இருமைக் கோட்பாடு (துவைதம்)

உலகமும் உயிரும் இறைவனால் ஆளப்பெற்று, அவனுக்காகவே இருப்பவை என்பதும், ஆனால் அவற்றால் அவனுக்கு ஒரு பயனும் இல்லை என்பதுமே இக் கோட்பாட்டின் சிறப்புக் கருத்தாகும். உலகமும் உயிரும் இறைவனால் படைக்கப்படவில்லை. ஆயினும், இவை இறைவனைப்போல் இறைவனுடைய அருளில்லாமல் தனித்திருக்க முடியாது. இறைவன் தான்மட்டும் தனித்தும், உலகம், உயிர்களோடு கலந்தும் நிற்பவன். ஆனாலும், உலகத்திற்கும் உயிருக்கும் இறைவன் உறுதுணையாகவே இருப்பான்; அவற்றை அழிக்கவும் மாட்டான். அவன் எங்கும் பரந்துள்ளதால் அவனோடு உயிரும் சார்ந்துள்ளது. உயிர் அணுவைப் போன்றது. ஆயினும், அஃது உலகம் முழுவதும் பரந்து கிடக்கிறது. ஒவ்வோர் உயிரும் தான் உடலோடு கலந்து பெறும் பட்டறிவால் ஒன்றுக்கொன்று வேறுபடுகிறது என்பதே இருமைக் கோட்பாடு அல்லது துவைதத் தத்துவமாகும்.

விசிட்டாத்துவைதம்

உயிருக்கும் (ஆன்மாவிற்கும்) உடம்புக்கும் உள்ள தொடர்பு வேறுவேறு அன்று. அவை ஒன்றேயாகும். அதாவது, ஒன்றுக்கொன்று கலந்து இரண்டற நிற்கின்றது என்பது அத்துவைதக் கோட்பாடாகும். ஆனால், உயிருக்கும் இறைவனுக்கும் உள்ள இரண்டற்ற தொடர்பு, உயிருக்கும் உடம்பிற்கும் உள்ள இரண்டற்ற முறையைவிட விசிட்டமானது, அல்லது மேலானது என்பதே விசிட்டாத்துவைதம் ஆகும். சீவாத்மா உரிமையற்றது என்றும் பரமாத்மா உரிமையுடையதென்றும் இத் தத்துவம் வரையறுக்கிறது. இவ்வாறு சீவாத்மாவைவிடப் பரமாத்மா சிறந்தது அல்லது விசேடமானது என்பதால்தான் இத் தத்துவம் விசிட்டாத்துவைதம் எனப்பட்டது.

வீடுபேறு அடையத் தமிழர்கள் வகுத்துக்கொண்ட நெறிமுறைகளும், அவற்றைக் கடைப்பிடித்த பாங்குகளும், பண்பாடுகளும் பின்னர்ச் சமயம் ஆயிற்று. ஆன்மா வீடுபேற்றினை அடையப் பக்குவமாதலையே 'சமைதல்' என்றனர். இச் 'சமைதல்' என்னும் சொல் 'சமைய'மாகி இன்று 'சமயம்' எனத் திரிபு வழங்குகிறது.

சாங்கியம்

'சாங்கியம்' என்னும் சொல்லுக்குப் பகுத்தறிதல் அல்லது எண்ணுதல்[160] என்பது பொருள். உலகம் எப்படித் தோன்றியது? அதன் மூலக்கூறுபாடுகள் யாவை? என்பனவற்றை அறிய உலகப் பொருள்களைப் பல மூலக் கூறுபாடுகளாகப் பிரித்துக்கொண்டு ஆய்ந்து இருபத்தைந்து விதத் தத்துவங்களைக் கபிலர் கண்டார். இவையே சாங்கியம் அல்லது சாங்கியத் தத்துவங்கள் ஆகும். உலகத்திற்கும் மனிதனுக்குமுள்ள உறவுகளை ஆய்ந்து அவனுடைய துன்பத்திற்கான காரணத்தைத் தெளிந்து, அதனைப் போக்கும் வழியைக் காணுதலே சாங்கியத்தின் நோக்கமாகும். பகுத்தறிவால் உலகத்தோற்றத்தையும், பொருள்களின் கூறுபாடுகளையும், மனிதனின் வாழ்க்கை நெறிகளையும் ஆய்ந்த முதல் மேதை கபிலரே. எனவே தான், ஜான் டேவிஸ் என்பார் 'மிகப் பழங்காலத்திலேயே பகுத்தறிவைக்கொண்டு உலகம் எப்படி உண்டாயிற்று? இயற்கைக்கும் மனிதனுக்குமுள்ள உறவென்ன? இதனால் அவனுடைய எதிர்கால முடிவு என்னவாகும்?' என்பன போன்ற புதிர்களுக்கு விடை கண்டு அவற்றை நிலைநாட்டியது சாங்கியமே[161] என்கிறார்.

'உலக வரலாற்றிலேயே கபிலரின் தத்துவமே முதன்முதலில் மனிதனின் மனத்தில் முழு விடுதலையையும், சுதந்தரத்தையும் வாழ்க்கையில் நம்பிக்கையையும் ஏற்படச் செய்தது'[162] என்று இரிச்சர்டு கார்பே என்பார் கூறுவதால் இது புத்த, சமணங்களுக்கும் முற்பட்ட தத்துவம் என்பதைத் தெளியலாம்.

சாங்கியத்தை உருவாக்கியவர் கபிலரே. இவர் கி. மு. 7 அல்லது 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவருடைய தத்துவங்கள் செவிவழிச் செய்திகளாகக் காலந்தோறும் கைமாறி வந்தன. 'கபிலர்' என்னும் பெயர் தமிழ்ப் புலவர்களின் பெயர்களாகக் காலந்தோறும் இருந்துவந்திருப்பதை எண்ணும்போது, சாங்கியத்தின் படைப்பாளராகிய கபிலரும் தமிழரே என்பது தேற்றம். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் பாடற் கருத்துகள் யாவும் சாங்கியக் கருத்துகளென்பதை உய்த்துணரலாம். வேத வழக்கங்களைக் கண்டிக்கும் 'கபிலர் அகவல்' என்னும் நூலை யாத்தவரும், சாங்கியத் தத்துவத்தை உரைத்தவரும் ஒருவர்தாம் என்பது ஐயத்திற்குரிய ஒன்றாகும். ஆனாலும், சாங்கியம் சங்க இலக்கியங்களில் குறிப்பாகத் திருக்குறளி

160 Reasoning or Numbering
161 John Devis, *History of Indian Literature*, p. 5
162 Richard Garbe, *Philosophy of Ancient India*, p. 30

லும் பரிபாடலிலும் பரந்து காணப்படுகிறது. பிற்கால நூல் களான பெருங்கதை, சிவஞானசித்தியார் முதலியவற்றிலும், சமண, சைவ தத்துவங்களிலும் சாங்கியம் விரவிக் கிடப்பதைக் காண்கிறோம். இத் தத்துவம் தமிழரால் சீனம் முதலிய நாடு களிலும், புத்தம், சமணம், ஆரியம் முதலிய சமயங்களிலும் பரப் பப்பட்டது. 'சிந்தனை வரலாற்றில் எந்த ஒரு தத்துவமும் தனி ஒருவரின் படைப்பன்று. காலந்தோறும் வாழ்ந்த சிந்தனை யாளர்கள் விட்டுச்சென்ற சிந்தனைகளின் கோவையைப் பிற்கா லத்தில் அறிவுமுதிர்ந்த ஒருவர் முழுமையாகத் தொகுத்தளிப் பார்'[163] என்று சிந்தனையாளர் டாக்டர் இராதாகிருட்டிணன் கூறுவதை ஈண்டு எண்ணிப் பார்க்கலாம்.

சாங்கியத்தின் சிறப்புக் கோட்பாடுகள்

உலகம் இறைவனிடமிருந்து தோன்றியது அல்லது இறைவ னால் படைக்கப்பெற்றது என்ற உலக உற்பத்திக் கோட் பாட்டைச்[164] சாங்கியம் ஏற்கவில்லை. உலகமானது பிரகிருதி யாகிய ஒரே மூலத்திலிருந்து இயல்பாகவே (பரிணாம விதிப்படி) தோன்றியது என்பதே சாங்கியத் தத்துவமாகும். பிரகிருதி (மூலப்பகுதி)யிலிருந்து தோன்றிய இவ்வுலகம் தனித்து இயங்கு கிறது. இதைப்போலவே இவ்வுலகில் தோன்றிய உயிரும் (புருடன்) தனித்து இயங்குகிறது என்பது சாங்கியமாகும். இத்தகைய தன்மைகளைக் கொண்டுள்ளதால் இத் தத்துவம் பொருள்முதல் வாதம், பரிணாம வாதம் அல்லது சுபாவ வாதம், கபிலதரிசனம், துவைதம் என்னும் பெயர்களால் அழைக்கப்பெறுகின்றது. தன்வயப்படுத்தி ஊன்றி நோக்கும் போது இவை ஒன்றுக்கொன்று பலவேறுபட்ட உட்கருத்து களைக் கொண்டிருந்தாலும் ஒட்டுமொத்தத்தில் இவை யாவும் சாங்கியச் சாற்றையே பிழிந்து தருகின்றன.

சாங்கியம் புத்த இலக்கியங்கள் அனைத்திலும் காணப்படு கிறது. இதைப்போலவே சமணம், வைணவம், சைவம் முதலிய வற்றிலும் இஃது இரண்டறக் கலந்துள்ளது. சாத்தனார் தமது மணிமேகலையில் இத் தத்துவத்தை மிகுதியாகக் கையாண்டுள் ளார். இதனால்தான் இந்தியாவில் தோன்றிய எல்லாவகைத் தத்துவங்களும் சாங்கியத்தை நிலைக்களனாகக் கொண்டவை என்பர். இதில் வரையறுக்கப்பெற்றுள்ள இருபத்தைந்து

[163] Radhakrishnan, Dr. S., *Indian Philosophy*, pp. 249-51
[164] Theory of Creation

பொருட் பாகுபாடுகள் பெரும்பாலும் இந்தியத் தத்துவங்கள் எல்லாவற்றிற்கும் அடித்தளமாய் உள்ளன.

புத்த, சமண சமயங்களில் காணும் தமிழர் தத்துவங்கள்

தமிழருக்கு இன்றளவுள்ள ஒரு கேடு தமிழிலேயுள்ள கருத்துகள் பலவற்றை இன்னமும் பிறரிடமிருந்து கடன் வாங்கியதாகக் கொள்ளும் மனப்பாங்கேயாகும். உலகின் பல்வேறு மொழிகளிலுமுள்ள பல்லாயிரம் சொற்கள், தமிழின் மூலக்கூறுகளிலிருந்தே கடன் வாங்கப் பெற்றவையென மொழிஇயலார் கூறுகின்றனர். ஆனால், நம்மில் பல மேதைகள் பல தமிழ்ச் சொற்களின் மூலக்கூறுகள் வேற்று மொழிகளிலிருந்து வந்தவென்கின்றனர். சங்க இலக்கியங்களை ஆய்ந்து அதன் காலத்தின் தொன்மையினை மனத்திற்கொண்டு நோக்கும் எவரும் இக் கருத்தை ஏற்கமாட்டார்.

பௌத்தம், சமணம் ஆகிய நம் நாட்டுச் சமயக் கோட்பாடுகள் கி.மு. ஆறாம் நூற்றாண்டிற்குப் பின்னரே தோன்றியவை. ஆயினும், அவை பாலி, பாகதம், சமஸ்கிருதம் முதலிய மொழிகளினூடே பரவி, விரவி வந்தபோது தமிழ் பல நுண்ணிய கருத்துகளைக்கொண்ட இலக்கியங்களைப் பெற்ற மொழியாகத் திகழ்ந்திருந்தது. எனவே, இச் சமயக் கோட்பாடுகள் பயணம் செய்த காலம், இடம், தொலைவு முதலியவற்றையும், தாண்டி வந்த தடைகளையும் கருத்திற்கொண்டு நோக்கும்போது அவற்றின் நெடும்பயணத்தில் ஆங்காங்கே நிலவிய பல வண்ணங்களையும் உடன் சேர்த்துக்கொண்டு வளர்ந்ததைக் காணலாம். இச் சமயங்கள் மக்கள் மொழியிலே மக்களைக் கவர்ந்த, மக்களுக்காகவே வளர்ந்த அறநெறிக் கோட்பாடுகளைக் கொண்டவை. எனவே, இக் கோட்பாடுகள் யாவும் இவற்றின் மூலக்கூறுபாட்டினை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு வளராமல் நீண்ட பயணத்தினூடே கண்ட நல்லனவற்றையும் உடன்சேர்த்துக் கொண்டு வளர்ந்துள்ளன. இதனடிப்படையில்தான் பிற சமயங்களில் காணப்பெறும் தமிழரின் தத்துவங்களை நமதெனச் சொந்தம் கொண்டாட விழைகிறோம்.

வள்ளுவம்

திருக்குறளில் வள்ளுவர் காணும் 'ஆதிபகவன்', மணிமேகலையில் 'ஆதிமுதல்வன்' என்றும், 'ஆதிசினேந்திரன்' என்றும் குறிக்கப்படுகிறான்.[165] இது புத்தனையே சுட்டுகிறதென்றும், எனவே

165 மணிமே. *6:11, 29:47*

வள்ளுவர் புத்த நெறியாளரென்றும் கூறுவர். மணிமேகலையில் புத்தரைக் குறிக்கும் இச் சொல் சிலப்பதிகாரத்தில் அருகனைக் குறிக்கிறது.

வள்ளுவர் 'மாணடி, அடி, தாள்' எனக் குறிப்பிடும் இறை வணக்கம் பௌத்த சமயத்தார் புத்தரின் 'பாதபீடிகை'யை வணங்கும் பாங்கினைக் குறிப்பிடுகிறது என்பர். 'அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு' எனும் வள்ளுவரின் கோட்பாடு உருவமற்றவராய்த் திகழும் புத்தபகவான் உலக மக்களைக் காக்க அவ்வப்பொழுது மனித வடிவில் தோன்றுவார் என்னும் மகாயானக் கோட்பாட்டைச் சுட்டுகிறதென்பர். 'அற வாழி அந்தணன்' என வள்ளுவர் சுட்டுவதை அறம் என்னும் ஆழியை உடைய ஆதி முதல்வனாகிய புத்தனே என பௌத்தர்கள் கூறுவர். ஈண்டு 'அந்தணன்' என்னும் சொல் குறிப்பிட்ட ஒரு சாதியாரைக் குறிப்பிடவில்லை. 'அந்தணர் என்போர் அறவோர், மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்' என வள்ளுவரே 'அந்தணர்' என்னும் சொல்லுக்குப் பொருளும் விளக்கமும் தந்துள்ளார். இத்தகைய அன்புடையவர் தங்களின் இன்னுயிரை ஈந்தும் பிறரைக் காப்பரென்பதை 'அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என வள்ளுவம் விளக்கி நிற்றலைக் காண்க. வள்ளுவர் கூறும் இத்தகைய அன்பின் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர் புத்தரெனக் கொண்டு வள்ளுவர் சுட்டும் 'அந்தணர்' புத்தரே என்பர். துன்பம், துன்பத்திற்குக் காரணம், துன்பத்தினின்று விடுபட வழி என்றவாறு ஆய்ந்து, ஆசையே இதற்குக் காரணமென்றும், ஆசையை அடியோடு ஒழித்தால் துன்பமே இராது என்றும் கண்டவர் புத்தர். இவ்வாறு மெய்யறிவினைக் கண்டதால்தான் புத்தரை 'வாலறிவன்' என்பர். இதனாற்றான் வள்ளுவர் சுட்டும் 'வாலறிவன்' புத்தரே என்பாருமுளர். புத்தர் அரசனின் மகனாய்த் தோன்றியவர். குழவிப் பருவத்தில் அவர் நடந்துசெல்ல அரண்மனையில், பாதைகளில் தாமரை மலர்களைத் தூவி வைப்பர். அவர் அம் மலர்மீதே நடப்பார். இதனால் 'மலர்மிசை ஏகினான்' என்று அவரை அழைப்பர். வள்ளுவர் குறிப்பிடும் 'மலர்மிசை ஏகினான்' என்பது புத்தரையே சுட்டுகிறதென்பர்.

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களின் செயல்களால்தாம் ஆசை (அவா) தொடருகிறது. அவாவினால்

தான் பிறவித்துன்பமேற்படுகிறது. இந்த ஐந்து புலன்களையும் வென்றவனுக்குத் துன்பமில்லை யென்கிறது வள்ளுவம். இதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவர் புத்தர். எனவே, வள்ளுவர் கூறும் 'ஐந்தவித்தான்' புத்தரே என்பர்.

எட்டு நற்குணங்களையுடையவரை வள்ளுவர் 'எண்குணத் தான்' என்கிறார். அவ்வாறு அவர் குறிப்பிடும் எட்டு நற்குணங் களையுடையவர் புத்தரேயென்று புத்த சமயத்தவரும், அருகனே என்று சமண சமயத்தவரும் வாதிடுவர். இளங்கோவடிகள் சமணச் சாரணரைக் குறிப்பிடும்போது 'பண்ணவன், எண் குணன்' என வள்ளுவரின் சொற்களைக் கையாண்டுள்ளார்.[166] சாத்தனார் புத்தரை 'எங்கோன் இயல்குணன் ஏதமில் குணப் பொருள்' எனப் போற்றுகிறார். எனவே, குணக்குன்றுகளான அருகனையும் புத்தனையும் 'எண்குணத்தான்' என்னும் சொல் சுட்டுகிறது. ஈண்டு, எண்குணங்கள் யாவை என்பதைக் காலந் தோறும் வந்த உரையாசிரியர்கள் முறையே அருகன், புத்தன் ஆகியோருக்கும், சைவ சமய நோக்கிலும் குறிப்பிட்டுள்ளனர்.

அடியார்க்குநல்லாரும் மற்றும் பழைய அரும்பத உரை காரரும் அருகனுக்குரிய அநந்தஞானம், அநந்ததரிசனம், அநந்த வீரியம், அநந்தசுகம், நிர்நாமம், நிர்க்குலம், நிராயுஷ்யம், சற் பாலனை எனும் எட்டுக் குணங்களைக் குறிப்பிட்டனர். புத்த னுக்குரியதாகக் கொள்ளும் நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடிப்பு, நல்லார் இணக்கம் ஆகிய எண்குணங்களைக் குறிப்பிட்டு 'எண்குணத்தான்' என்றது புத்தனையே என்றனர். பரிமேலழகர் தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வின னாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல், பேரருள் உடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை எனும் எட்டுக் குணங்களும் சைவநெறி யில் காணப்படுவன என்கிறார்.[167]

'பற்றுக பற்றற்றான் பற்றினை' என்பதிலுள்ள 'பற்றற்றான்' யார் எனும்போது பற்றைத் துறந்தவர்களாகிய அருகனும் புத்த னுமேயாவர் என அவ்விரு சமயத்தவருமே வாதிடுவர்.

ஐம்புலன்களையும் வென்றவன், பற்று நீங்கியவன், வினை நீங்கியவன், விருப்புவெறுப்பற்றவன் என்பன 'பற்றற்றான்'

---

166 சிலப். 10:188 167 குறள். 9 பரிமே. உரை

என்பதன் பொருளாகும். இவற்றுக்குப் பொருந்துமாறு நிற்பவர் அருகனும் புத்தனுமே என இவ்விரு சமயத்தவரும் கூறுவர்.

ஊழ்வினை, தானே சென்று கருத்தாவைத் தொடரும் என்பது சமண புத்த நெறியாகும். ஆனால், சைவநெறி ஊழ் வினையை ஊட்டுவான் ஒருவன் வேண்டுமென்கிறது.

'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது'[168]

என்னும் குறளில், 'வகுத்தான் வகுத்தவகை' என்பதற்கு ஏற்கெனவே இது இது இப்படித்தான் ஆகவேண்டுமென்று தெய்வம் வகுத்தபடியே முடியும் என்ற கருத்தைவிட, வினைக் கேற்ப விளைவு ஏற்படும் என்னும் பொருளே சிறத்தலால், என்னும் ஊழ்வினை அதிகாரத்தில் வரும் இழவூழ் பேதைப் படுக்கும், ஆகலூழ் அறிவகற்றும், ஊழ்முந்துறும் முதலியன வர்க வரும் சொற்றொடர்கள் 'ஊழ்தான் முந்திச் சென்று ஊட்டும்' என்னும் கருத்திலேயே வருகிறதென்றும் எனவே, இது சமண புத்த சமய நெறியையே குறிக்குமென்றும் கூறுவர்.

பிறவியை ஒரு பெருங்கடலுக்கு ஒப்பிட்டு அதனை நீந்திக் கரைகாண வேண்டுமென்கிறார் வள்ளுவர். பற்றற்றார் தாம் அதனை நீந்தி வெற்றிபெற முடியுமென்பதும் அவர் கருத்து. சாத்தனாரும் புத்தருடைய அடியினை அடைக்கலமடைவோரே பிறவியாகிய பெருங்கடலை நீந்துவரென்கிறார்.

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.'[169]

'அறவியங் கிழவோன் அடியிணை ஆகிய
பிறவி என்னும் பெருங்கடல் விடூஉம்
அறவி நாவாய்'[170]

வாழ்க்கையை அறத்தினடிப்படையில் நடத்தும் எவரும் வாழ்வின் பயனை அடைவரென்பது வள்ளுவரும் புத்தரும் கூறும் மெய்ப்பொருளியலாகும். இவ்விருவருமே கடவுள்பற்றியும், வீடு பற்றியும் விளக்கம்கூறிச் சோர்வடையச் செய்யாமல் வாழ்க்கை நெறிகளைக் கூறிப் பலன் (வீடுபேறு) தானே கிட்டுமாறு வழி வகுத்தனர்.

168 குறள். 377 170 மணிமே. 11:23-25
169 ஷெ. 10

கள்ளுண்டு களித்தல் சங்ககால மக்களின் வழக்கமாகும். ஆனால், வள்ளுவர் கள்ளுண்ணுதலைக் கண்டிக்கிறார்.

'யவனர், நன்கலம் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத்து ஏந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி ஓங்குவாண் மாற'[171]

என்னும் புறநானூற்றுப் பாடல் யவனக் குவளையில் மணங்கமழ் கள்ளை ஊற்றி, மகளிர் அருகிருந்து அருந்த அளித்த காட்சியால் கள்ளுண்டு களித்தல், அக்காலத்திய சமுதாயத்தில் பெற்றிருந்த இடத்தினை அறியலாம். ஆனால், வள்ளுவர் கள்ளுண்ணாமைக்கு ஓர் அதிகாரத்தையே வகுத்து, அதை உண்பதால் வரும் கேடு களையும், உண்ணாமையால் வரும் நன்மைகளையும் விளக்கு கிறார்.

'ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.'[172]

'துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.''[173]

'களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ அற்று.'[174]

மேற்கூறிய மூன்று குறள்களும் புத்தநெறியில் வரும் பிடகக் கருத்தினை அப்படியே கூறுகின்றன.

இதைப்போலவே, சங்ககாலத்தில் புலால் உண்பது வழக்க மாக இருந்தது. தாங்கள் மட்டும் உண்டுகளிக்காமல் தேவர் களையும் உண்பிக்கச் செய்யும்பொருட்டு வேள்விகள் செய்த தமிழ் வேந்தர்களையும் காண்கிறோம். பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதி, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி முதலியோர் வேள்விகள் பல செய்துள்ளனர். சங்க இலக்கியங் களில் வேள்விகள்பற்றிய செய்திகள் பல வருகின்றன. ஆவூர் மூலங்கிழார் என்னும் புலவர் இருபத்தொரு விதமான வேள்வி முறைகளைப்பற்றி விளக்குகிறார். இத்தகைய வேள்வி முறையை முதன்முதலில் கண்டித்துப் பேசி வேதநெறிகளைச் சாடியவர் புத்தபிரானே.

---

171 புறம். 56:18-21
172 குறள். 923
173 ஷை 926
174 ஷை 929

தனது பாவமன்னிப்புக்கு அல்லது தனது வேண்டுதலுக்குத் தானே மனமுருகி மனம்திரும்ப வேண்டுமேயொழிய வேள்வியில் ஆடு, மாடு, குதிரை முதலிய உயிர்களைப் பலியிடுவது அறமன்று என்பதனை அவர் எடுத்துக்காட்டினார். இதுவே புத்தசீலத்தில் முதலிடம் பெறுவதாயிற்று. வழிகாட்டும் வள்ளுவரும் நான்கு வேதத்திலும் கூறப்பெறும் வேள்வி முறையை வெறுத்து,

'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று'[175]

என்னும் குறளில் உயிர்க்கொலை செய்து வேள்விகள் செய்வதை விடக் கொல்லாமை விரதமே சிறப்பானதென்கிறார்.

இவ்வாறே புத்தரும் வள்ளுவரும் காமமின்மை, பொய் யாமை, கள்ளாமை முதலியவற்றில் ஒருமித்த கருத்துடைய வராய்த் திகழ்கின்றனர். இதனைச் சாத்தனார் பத்துவகைக் குற்றங்களென[176] வகைப்படுத்தி வள்ளுவர் வாய்மொழிபோல் கூறுகிறார்.

'அற்றார் அழிபசி தீர்த்தல்' என்று கூறும் வள்ளுவரின் வாய் மொழிக்கு நடைமுறை இலக்கியமாகத் திகழ்வது மணிமேகலை யில் வரும் பசிதீர்க்கும் பேரறமாகும். இதனையே புத்தரின் சுத்த பீடகத்தில் மிகுதியாகக் காண்கிறோம்.

வருணபேதங்களால் வேறுபட்டு, சாதிகளால் உயர்வுதாழ்வு களையுடைய சமுதாயத்தில், உலகிலேயே சமத்துவம்நாடி நின்ற முதல் தத்துவஞானி புத்தபிரானே. மணிமேகலையிலும் ஆபுத்திரன் வாயிலாகச் சமத்துவம் பேசுகிறார் சாத்தனார். பழங்குடியில் பிறந்த வள்ளுவரும்,

'பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்'[177]

என்கிறார்.

'வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே.'[178]

'துடியெறியும் புலைய
எறிகோல் கொள்ளும் இழிசின'[179]

---

175 குறள். 377
176 மணிமே. 30:66-72
177 குறள். 972
178 புறம். 183:8-10
179 ஷை 287:1-2

எனவரும் சங்கச் சான்றுகளால் சங்ககாலச் சமுதாயத்தில் மக்களிடையே உயர்வுதாழ்வுகளிருந்தன என்பது தெளிவாகிறது.

இதனால்தான் ஒழுக்கத்தையும் அறத்தையும் அடிப்படையாகவைத்து வள்ளுவர் சமுதாயத்தில் சமத்துவம் கண்டார். இவர் கருத்தினைக் கொண்ட புத்தரும் இவரைச் சொந்தம் கொண்டாடியதில், இவருடைய கருத்துகளைத் தம்முடையதாக ஏற்றுக் கொண்டதில், இவரைப் புத்தராகவே ஏற்றுப்போற்றியதில் வியப்பில்லை. வேதநெறிப்படி பிறந்தே வீடுபேறு அடைய முடியும் என்பது வருணாசிரம விதியாகும். இதனை அடியோடு கண்டித்து ஒழுக்கமும் அறமுமே வீடுபேற்றுக்கு வழிசெய்யுமென்றும், மனிதருக்குள் உயர்வுதாழ்வு இல்லையென்றும் கூறியவர் புத்தரும் வள்ளுவருமேயாவர். இவர்கள் கூறிய சீலங்கள், பற்றற்ற தன்மை முதலியன வேதக் கருத்துகளுக்கும் மேலானவை; சமத்துவமுடையவை. நிலையாமை, துறவு, அவாவறுத்தல் ஆகியவையே இந்திய மெய்ப்பொருள் இயலுக்கு அடித்தளமானவை. இவற்றை வள்ளுவரும் புத்தரும் ஏற்கின்றனர்.

'உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு'[180]

என்னும் குறட் கருத்தும்,

'பிறந்தவர் சாதலும், இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது'[181]

எனச் சாத்தனார் புகலுவதும் நோக்கத்தக்கதாகும்.

பிறப்புக்குக் காரணம் அவாவேயெனக் கண்ட புத்தருடைய மெய்ஞ்ஞானமே வள்ளுவர் கூறும் மெய்யுணர்தல் ஆகும்.

'பிறப்புஎன்னும் பேதைமை நீங்கச் சிறப்புஎன்னும்
செம்பொருள் காண்பது அறிவு'[182]

என்னும் குறட்பாவை நோக்கினால் இது நன்கு புலனாகும். பிறவியாகிய நோய் தீர மருந்தாக,

'காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்'[183]

என்கிறார் வள்ளுவர். இதே கருத்தினைப் புத்தரும் கூறுவதை அறிகிறோம். மேற்கண்ட ஒற்றுமைகளால் வள்ளுவரும் பௌத்

180 குறள். 339
181 மணிமே. 16:86-87
182 குறள். 358
183 ஷெ 360

த்தைத் தழுவி மெய்ப்பொருளியல்களைக் கூறுகிறாரென்று சொல்லமுடியாது. புத்தரும் வள்ளுவரும் உண்மையான மெய்யறிவாளர்கள். இருவருமே உயர்வுதாழ்வு, உயிர்ப்பலி (வேள்வி) முதலிய வேதக் கோட்பாடுகளை வெறுப்பவர்கள். எனவேதான், இவர்களின் மெய்ப்பொருட் கோட்பாடுகளில் இத்தகைய ஒற்றுமைகளைக் காண்கிறோம். மெய்யறிவாளர் ஒரேவிதமாய்ச் சிந்திப்பது இயற்கையே.

வள்ளுவர் காணும் மெய்ப்பொருளியலும் அருகன் காணும் மெய்ப்பொருளியலும் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. குறிப்பாகக் கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறனில் விழையாமை, தேவைக்குமேல் பொருள் தேடாமை முதலிய வள்ளுவரின் சீலங்களை அருகரும் வலியுறுத்தி இருப்பதை நோக்குக. நமது கோட்பாடுகளான நிலையாமைக் கொள்கையும், நிலைக் கொள்கையும், வீடுபேறும் சமணத்திலும் உள்ளன. சமணர் கடவுளை வணங்குவதில்லை. முக்தி பெற்ற ஆவியை அருகன் வடிவில் கண்டு வணங்குவர். இக் கோட்பாடு வள்ளுவத்திலுள்ளதைக் கண்டோம். வாழ்வாங்கு வாழ்ந்து வீடுபெற்றவரை வள்ளுவர் 'வானுறையும் தெய்வ'மாகக் கொண்டுள்ளார். சங்க இலக்கியங்களில் வரும் இயற்கை வழிபாட்டு நெறிகளும், ஞாயிறு, திங்கள், மழை முதலிய வழிபாடுகளும் சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களில் காணப்படுகின்றன.

சங்க இலக்கியங்களில் கோயில் எடுத்துப் பரவும் பழக்கத்தினைக் கண்டோம். புறச்சமயத்தினரான சமணரும் பௌத்தரும் தமிழர் வாழ்ந்த ஊர்களுக்கு வெளியில் தத்தம் கோயில்களை அமைத்தனர். அவை 'புறநிலைக் கோட்டம்' எனப்பட்டன. அவற்றில் சமயம் பரப்பும் அறவோராகிய துறவிகள் வதியுமிடமும், சமயப்பரப்பு சொற்பொழிவு மண்டபங்களுமிருந்தன. தமிழ்வேந்தர் பலர் இத்தகைய சமணத் துறவிகளுக்குக் கற்படுக்கைகளையும் குகைகளையும் சமைத்து அளித்ததையும், பள்ளிகளுக்குச் சந்தம் அளித்ததையும் காண்கிறோம். காவிரியின் இருமருங்கிலும் இத்தகைய நிலைக்கோட்டங்கள் பல இருந்ததைச் சிலம்பும் மேகலையும் விவரித்தலைக் காண்கிறோம். அவற்றுள் திருவரங்கம், உறையூர், மதுரை முதலிய இடங்களிலிருந்த பள்ளிகள் சிறப்பாகப் பேசப்படுகின்றன.

சங்க இலக்கியங்களில் பல்வேறு கோயில்களைக் காண்கிறோம். அவை 'கோட்டம்'என்னும் சொல்லாலேயே குறிப்பிடப்படுகின்றன. முருகன் கோயிலை 'அணங்குடை முருகன் கோட்டம்'

எனப் புறநானூறு[184] குறிப்பிடுகிறது. இதனடியொற்றித்தான் சிலப்பதிகாரமும் 'அமரர் தருக்கோட்டம், வெள்யானைக் கோட்டம், புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம், பகல்வாயில் உச்சிக்கிழான்கோட்டம், ஊர்க்கோட்டம், வேற்கோட்டம், வச்சிரக் கோட்டம், புறம்பணையான் வாழ்கோட்டம், நிக்கந்தக் கோட்டம், நிலாக்கோட்டம்' எனப் பல்வேறு கோயில்களைக் குறிப்பிடுகிறது.[185] பொதுவாகச் சமணர் வழிபடும் அருகன் கோயிலை 'நிக்கந்தக் கோட்டம்' என்பர்.

ஆசீவகத் தத்துவங்கள், தமிழர் தத்துவங்களே

இந்தியாவில் தோன்றிய சமயத் தத்துவங்களைத் தமிழர் தத்துவங்கள், வேதநெறித் தத்துவங்கள், வேதநெறியைப் புறக் கணித்த தத்துவங்களென மூவகையாகப் பிரிப்பர். தமிழரின் மெய்ப்பொருளியல் தனித்தன்மை வாய்ந்தது. அதில் வினைக் கொள்கை (கர்மவிதி) புதைந்திருந்தது. இதனை வேதநெறி ஆட்கொண்டு தன்மயமாக்கிவிட்டது. இதன்வழித் தமிழர் நெறி யில் வேள்வியும், பல தெய்வங்களும் புகுந்துவிட்டதால், அவர் களின் நெறியில் வைதிகமே எஞ்சி நிற்கிறது. இதனால்தான் தமிழரின் மெய்ப்பொருளியலை ஆய்ந்துணர முற்படும் எவரும் அசல் எது, நகல் எது என அறியமுடியாமல் திண்டாடுகின்றனர். வேதநெறியில் வைதிகமே மேம்பட்டுக் காணப்பட்டதால் கருப் பொருளாகிய மெய்ப்பொருளியல் (மெய்ஞ்ஞான மார்க்கம்) மறையத் தொடங்கியது. அம் மெய்ஞ்ஞானத்தை நிலை நாட்டவே உபநிடதங்கள் தோன்றின. மெய்ப்பொருளியலை அறிவியலடிப்படையில் வளர்த்த பெருமை உபநிடதங்களுக்கே உண்டு. இதனால்தான் பாரதியாரும் 'பன்னரும் உபநிடத நூலெங்கள் நூலே, பார்மிசை ஏதொரு நூலிது போலே' என வினவுகிறார். வைதிக நெறிகளைச் சாடி சமயச் சீர்திருத்தம் கண்டது இந்த உபநிடத நெறிகளே. வேதங்கள் மொழிந்த பல கடவுள் கொள்கையினை மறுத்து 'ஒன்றே கடவுள்' எனக் கண்டதும் உபநிடதங்களே.

உபநிடதங்களைப் போலல்லாமல் எதிரிடையாக மாறி வேதங்களைச் சாடிநின்றவை பௌத்தமும், சமணமும், ஆசீவக மும் ஆகும். இவை வேத விதிமுறைகளையும், அவற்றால் அனுமதிக்கப்பட்ட வேள்விகளையும், வருணாசிரமங்களையும், பலகடவுள் வழிபாட்டையும் அடியோடு மறுத்தன. உபநிடதங் களால் கொள்ளப்பட்ட ஒரே கடவுள் கோட்பாட்டையும் இவை

184 புறம். 299;6

185 சிலப். 9;9-13

மறுத்தன. வேதங்களில் கூறப்பட்ட அண்டவெளிக் கடவுள்கள், ஆகாயவெளிக் கடவுள்கள், சுற்றுப்புற அல்லது எல்லைக் கடவுள்கள் ஆகியவற்றையும், இயற்கைச் சக்திகளையும் இவை ஏற்க மறுத்தன. உபநிடதங்கள் பலகடவுள் கோட்பாட்டையும், மேற்கூறிய இயற்கைச் சக்திகளையும் மறுத்து மேலானவற்றிற் கெல்லாம் மேலான பராபரக் கொள்கையை வலியுறுத்தின. இப் பராபரக் கொள்கைகளையும் புத்த, சமண, ஆசீவக நெறி யாளர் மறுத்தனர். அண்ட அமைப்பியல் நியதி அல்லது முறை யின்படிதான் எல்லாமும் நடக்கும் என்பதே இவர்களின் தத்துவம். அதாவது, அண்டத்தின் இயற்கை விதியை இவர்கள் மதித்தனர்; பிற இயற்கைச் சக்திகளை மறுத்தனர்.

பௌத்த சமணக் கோட்பாடுகளைப்பற்றி நாம் அறிவோம். ஆசீவகத்தின் மேற்கூறிய மறுப்புக் கோட்பாடுகளையும், பிற மெய்ப்பொருள் கோட்பாடுகளையும் சுருங்கக் கூறலாம்.

இக் கோட்பாடுகளை யாத்தவர் மகிகலிகோசாலர் என்பவ ராவார். இவர் மகதநாட்டவரென அறிகிறோம். மகதமும் சங்க காலத் தமிழகமும் நெருங்கிய தொடர்புகொண்டிருந்ததைப் புறநானூற்றுப் பாடல்களால் அறிகிறோம். மணிமேகலை, நீலகேசி முதலிய நூல்களில் மகிகலிகோசாலர்பற்றி அறி கிறோம். தமிழர் வேதநெறிக்கு மாறுபட்டவர். பௌத்தர், சமணர், ஆசீவகர்போல் தமிழரும் வேதநெறிகளை மறுப்பவர். மகதமும் சங்கத் தமிழகமும் தொடர்புகொண்டிருந்தவை. இதனால் ஆசீவகத்தில் காணும் நெறிகளில் பல, தமிழர் நெறியே யெனத் துணிதல் பிழையாகாது.[186]

ஆசீவகத்தில் முதன்மைக் கொள்கை நியதிக் கொள்கை யாகும். உலோகாயதம் தவிர மற்ற இந்திய நெறிகள் யாவும் வினைக்கோட்பாட்டையும் மறுபிறப்புக் கோட்பாட்டையும் சிறந்த கோட்பாடுகளாகக் கொண்டுள்ளதைக் கண்டோம். ஆனால், ஆசீவகம் ஒருவன் முற்பிறவியிலோ இப் பிறவியிலோ செய்த நல்வினை, தீவினைகளுக்கேற்பவே இன்பதுன்பங்களை நுகர்வான் என்னும் வினைக்கொள்கையை (கர்மவினை) மறுக் கிறது. வினைகள் தனிமனிதனின் இன்பதுன்பங்களை ஆக்க வில்லையென்பதும் உலக நிகழ்ச்சிகள் அனைத்தும் நியதியின் ஆற்றலால் நடக்கின்றனவாதலால் நல்வினையால் நன்மையோ,

186 தமிழர்கள் வேதநெறியை மறுப்பவர் என்னும் கூற்று ஆராயத் தக்கது. (ப—ர்.)

தீவினையால் தீமையோ உடனே விளையும் என்னும் முடிவு தவறானது என்பதும், எவ்வளவுதான் முயன்றாலும் எதுவும் நியதியின் முறைப்படிதான் நடக்குமென்பதும் ஆசீவகர் கோட்பாடாகும். அதாவது, ஒவ்வொருவரும் நன்மை செய்தாலும் தீமை செய்தாலும் அதற்கேற்றபடி நன்மையினையும், தீமையினையும் நுகர்வர் என்பது தவறு. மாறாக, நன்மை செய்வோர் தீமையையும், தீமை செய்வோர் நன்மையையும் நுக்ர்வதைக் காண்கிறோம். வாழ்வில் ஒருவர் நுகரும் நன்மையும் தீமையும் அவர் வினையால் அமைவதில்லை. இயற்கையின் நியதிப்படி அவர் அதனை நுக்ர்ந்தே ஆகவேண்டும். ஆகவே, உயிர்கள் நியதியின் சுழற்சிக்கேற்ப நன்மை தீமைகளில் சுழன்று, முடிவில் நியதியின் முடிவுப்படி முடிகின்றன என்பதே ஆசீவகர் கோட்படாகும்.

வினைக்கொள்கை வேறு, நியதிக்கொள்கை வேறு. இவை இரண்டுமே பழந்தமிழரின் கோட்பாடுகள். வினைக்கொள்கையினைப்பற்றி மிக விரிவாக நாம் ஏற்கெனவே கண்டோம். நியதிக் கொள்கையினைப் புகழ்ந்தவர் கணியன் பூங்குன்றனார் ஆவார்.

அவர்,

'யாதும் ஊரே யாவரும் கேளிர்

....

சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'[187]

என வரும் புறநானூற்றுப் பாடலில் இதனை விளக்கியுள்ளதைப் புறநானூறு கூறும் பட்டாங்குகளில் பார்த்தோம். நீரில் மிதக்கும் ஒரு மிதவை தன்செயலற்றுக் கிடக்கிறது. நீர் ஓடும் போக்கில் அத் திசைநோக்கி மிதந்தவாறே தானும் ஓடுகிறது. இப்படி அஃது ஓடுவதைத்தான் 'நியதி' என ஆசீவகர் அழைப்பர். கணியன் பூங்குன்றனார் இதனை 'முறை' என்னும் சொல்லால் அழைக்கிறார். மனிதரின் செயல்கள் நியதியாய் முடிவுகட்டப் படுபவை. நியதியை மீறியோ, எதிர்த்தோ எவரும் செல்ல இயலாது எனும் தமிழர் தத்துவத்தைக் குன்றனாரின் வாயிலாக அறிகிறோம். இதனையே மகிகலிகோசாலரும் தமது ஆசீவகக் கொள்கையின் முதுகு எலும்பாகக் கொண்டுள்ளமை காண்க. இதுவே ஆசீவகத்தின் 'நியதி வாதம்' ஆகும்.

அடுத்து, அண்டமும் பிறவும் அதனதன் சுபாவத்தால் தோன்றியவையென்றும், முயற்சியால் எதனையும் மாற்ற

---

[187] புறம். 192:1-13

முடியாதென்றும், ஆனால் அதனதன் சுபாவத்திற்கேற்பவே எல்லாம் நடக்குமென்றும் ஆசீவகம் கூறுகிறது. இதனைச் 'சுபாவவாதம்' என்பர்.

மேற்கூறிய நியதிவாதம் தனிமாந்தன் தனக்குப் புறம்பே உள்ள நியதியின் ஆற்றலால் கட்டுப்படுத்தப் பெறுகிறான் என்கிறது. சுபாவவாதம் தனக்குள்ளே பொதிந்துகிடக்கும் சுபாவத்தால் தீர்மானிக்கப் பெறுகிறானென்று கூறுகிறது.

வீடுபேறுபற்றி ஆசீவகம் கவலைப்படவில்லை. 'பிறப்பு, இறப்புப்பற்றிக் கவலைப்படாதே! எல்லா உயிரும் நியதிப்படி முடியும்' என்பதே ஆசீவகம் கொள்ளும் வீடுபேறு கோட்பாடு ஆகும்.

மேற்கூறிய கோட்பாடுகள் யாவும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஆசீவகர் வானவியல், புவியியல், உயிரியல் முதலிய பல்வேறு அறிவியல்களை வளர்த்துள்ளனர். இவற்றின் பலன்களையும் சங்க இலக்கியங்களில் காண்கிறோம்.

சங்ககாலத்தில் ஐவகைச் சமயம், அறுவகைச் சமயம் எனப் பேசப்பட்ட பல சமயங்களிருந்தன. சாத்தனார் அளவைவாதம், சைவவாதம், பிரமவாதம். வைணவவாதம், வேதவாதம், ஆசீவகவாதம், நிகண்டவாதம், சாங்கியவாதம், வைசேடிகவாதம், பூதவாதம் எனும் பத்துவகையான சமயத் தத்துவங்களைக் குறிப்பிடுகிறார்.

இவற்றுள் ஆசீவகம், நிகண்டம், பூதவாதம் ஆகிய மூன்றும் வேதங்களை மறுப்பனவாகும். இவற்றை 'நாத்திகவாதம்' என்றனர். மற்ற ஏழும் 'ஆத்திகவாதம்' எனப்பட்டன. இவை யாவும் காலந்தோறும் மருவி, மாற்றம் பெற்று வளர்ந்துள்ளன. இவற்றின் தத்துவங்கள் பிற்காலத்தில் தமிழகத்தில் தோன்றிய பல்வேறு சமயவளர்ச்சிகளுக்கும் குறிப்பாகச் சைவ, வைணவ மறுமலர்ச்சிகளுக்குப் பயன்பட்டுள்ளன. காப்பிய காலத்தில் பல்வேறு சமயத் தத்துவங்கள் தத்தம் கோட்பாட்டினை நிலைநாட்ட முற்பட்டதையறிகிறோம். இரட்டைக் காப்பியங்களில் சமயப் போராட்டங்கள் குறித்துக் காணலாம்.

முடிவுரை

சங்ககால மெய்ப்பொருளியலை நாம் தெளிவாகவும் திட்டமாகவும் அறிவதற்குச் சங்க இலக்கியங்களே தக்க சான்றுகளாய்

உள்ளன. பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் முதல், காப்பிய நூல்கள் ஈறாக உள்ள சங்கநூல்களில் காணும் மெய்ப்பொருள் இயல்களை ஆராய்ந்தோம். தொல்காப்பியத்திலேயே வேதப் பண்புகள் தோய்ந்திருப்பதையும், பிற சங்க இலக்கியங்களில் வேதப் பண்புகளோடு இதிகாசங்களில் வரும் பல்வேறு கதைகளும் விரவி வருவதையும் கண்டோம். ஐந்நில மக்களின் கடவுள் வழிபாடுகளைக் காணும்போது அவை இயற்கை வழிப் பட்டனவாகவே உள்ளதைக் காண்கிறோம். ஆயினும், திருமாலும் விஷ்ணுவும், செவ்வேளும் கந்தனும், சிவனும் உருத்திரனும், கொற்றவையும் சக்தியும் ஒன்றுபட்ட கடவுள் தன்மைகளைச் சங்க இலக்கியங்கள் விளக்கிநிற்பதை நாம் மறுக்க முடியவில்லை. அத்தோடு இக் கலப்புப் பண்பில் வேறுபாடு காண முடியவில்லை.

வினைக்கோட்பாடு, கூடுவிட்டுக் கூடுபாய்தல், வீடுபேறு ஆகியவை தமிழரின் உடைமைகளாயினும் இவை வேதக் கோட்பாடுகளாகவும், சமண, பௌத்த, ஆசீவக சமயங்களின் கோட்பாடுகளாகவும் இருப்பதைக் காண்கிறோம். இவை இந்தியா முழுமைக்குமுள்ள தேசியக் கோட்பாடுகளென்று கூறியே நிம்மதியடைய முடிகிறது.

தமிழ்மறையாம் திருக்குறளைத் தமிழ்ப் பண்பாட்டுக் கண்ணோட்டத்தோடு ஓர்ந்து நோக்கும்போது, ஒருவாறு சங்கத் தமிழரின் வாழ்வியல் நமக்குத் தெளிவாகிறது. வாழ்வாங்கு வாழ்தலே வானுறையும் தெய்வமாக்கும் என்ற உயர்ந்த, முடிவான மெய்ப்பொருள் நமக்குப் புலனாகிறது.

திருக்குறளில் வரும் அரிய கருத்துகள் சமணம், பௌத்தம், ஆசீவகம் முதலிய புறச்சமயங்களிலும், சைவத்திலும், வைணவத்திலும், சாங்கியத்திலும் பரவலாகக் காணப்படுகின்றன. உபநிடதங்கள் கூறும் பரம்பொருள் தத்துவங்கள் அளவை முறையில் குறளிலும், பிற சங்கநூல்களிலும் காணப்படுகின்றன. கொல்லாமை, கள்ளாமை, காமமின்மை, பொய்யாமை, கள்ளுண்ணாமை, இன்னா செய்யாமை ஆகிய குறளின் முதன்மைத் தத்துவங்கள் உபநிடதங்களிலும், சமண, பௌத்த தத்துவங்களிலும் பொதிந்து கிடப்பதைக் காண்கிறோம்.

வேதவிதிகள், வேள்விமுறைகள், வருணாசிரமங்கள், குல தருமங்கள் முதலிய வேதப் பட்டாங்குகளைச் சங்க இலக்கியங்

களில் காண்கிறோம். வேள்விகளைச் செய்து புகழ்பெற்ற வேந்தர்களையும், அந்தணரை ஓம்பிய மன்னர்களையும் பார்க்கிறோம். தூய வைதிக நெறிகளையும் அறிவியலுக்கும் அளவை இயலுக்கும் ஒத்த இயற்கை நெறிகளையும் காண்கிறோம். காட்டுநில மக்கள் வழிபட்ட திருமாலும், மலைநாட்டவர் வழிபட்ட செவ்வேளுமாகத் தொடங்கும் கடவுளர்கள் தொல்காப்பியருக்குப் பின் தொல்கதை (புராணம்), இதிகாசக் கடவுள்களாகக் காட்சியளிக்கின்றனர். தொல்காப்பியத்தில் நானிலக் கடவுளரும் கொற்றவையும் அறிமுகமாகின்றனர். சிவனைப் பற்றிய குறிப்புகள் வெளிப்படையாக இல்லை. மக்கள் கோயிலெடுத்துப் பூசனை புரிந்த செய்திகளும், படிமைகளின் வகைகளும், விழாக்கள் எடுத்தது பற்றியும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

தொகைநூல்களிலும் 'சிவன்' என்னும் பெயர் காணப்படவில்லை. ஆயினும் தாழ்சடை பொலிந்த அருந்தவத்தோன், முக்கட்செல்வன், கறைமிடற்று அண்ணல், பைங்கட் பார்ப்பான் முதலிய பெயர்களால் சிவன் சுட்டப்பெறுகிறான்.

சடைமுடி தரித்து, அதில் பிறையையும், கங்கையையும், கொன்றையையும் அணிந்தவன் முக்கண்ணன்; வேதம் ஓதும் வாயான்; வேதத்தை அந்தணருக்குச் சொன்னவன்; எட்டுக் கைகளிலும் மான், மழு, கபாலம், சூலம் முதலிய படைகளையும் உடுக்கையையும் உடையவன்; உமையொரு பாகன்; காளை வாகனன்; காக்கும் கடவுள்; அழிக்கும் கடவுள்; முப்புரம் எரித்தவன்; உலகை அழித்து உயிர்களைத் தன்னுள் அடங்கச் செய்து 'கொடுகொட்டி' என்னும் களிக்கூத்தாடுபவன்; புலித்தோல் அணிந்து, பிரமன் தலைகளிலொன்றைக் கையிலே கபாலமாக ஏந்தி, சாம்பலை உடல் முழுவதும் பூசிச் சுடலையிலாடுபவன்; உமையொருபாகனாய் இமயத்திலமர்ந்து இராவணன் அம்மலையைப் பெயர்க்க முடியாமல் அல்லலுறச் செய்தவன்; ஆலமுண்ட நீலகண்டன் முதலியனவாகப் பல்வேறு சம்பவங்கள் தொகைநூல்களில் சிவனைப்பற்றிக் குறிப்பிடப்படுகின்றன. இவற்றை ஊன்றிநோக்கும்போது சிவனோடு தொடர்புடைய பல கதைகளும், இதிகாசக் கதைகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

இதைப் போலவே, திருமாலும் தொல்கதைகளோடும், இதிகாசங்களோடும் இணைப்புண்டு இருப்பதை இத் தொகைநூல்

களில் கண்டோம். மலைநாட்டு மக்களின் இயற்கைநெறிக் கடவுளான செவ்வேள், கார்த்திகைப் பெண்கள் அறுவரால் காக்கப்பட்டவன். கொற்றவையின் மகன், உமையின் மகன், சிவகுமாரன் என்பனவாகப் பரிபாடல், கலித்தொகை, திருமுருகாற்றுப்படை முதலிய தொகைநூல்களில் காண்கிறோம். திருமுருகாற்றுப்படை முருகனுடைய ஆறு படைவீடுகளையும் அவற்றின் வரலாறுகளையும் கூறுகிறது. திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய்(திருச்செந்தூர்), திருஆவினன்குடி(பழநி), திருவேரகம் (சுவாமிமலை), பழமுதிர்சோலை (அழகர்மலை), குன்றுதோறாடல் ஆகிய ஆறும் அத் திருப்பதிகள் ஆகும்.

பரிபாடலில் வரும் எட்டுப் பாடல்களில் முருகன் சூரபத்மனை வென்றவன்; ஆறு தலைகளையும் பன்னிரண்டு கைகளையுமுடைய சேனாதிபதி; மும்மூர்த்திக்கும் முதல்வன்; வள்ளி தெய்வயானை கணவன் முதலிய தொல்லியல் கதைகள் காணப்படுகின்றன.

மாயோனும் பலராமனும் பற்றிய கதைகள் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றன. அகநானூற்றில் இராமன், கண்ணன் பற்றிய குறிப்புகள் உள்ளன. திருமாலின் இராமாவதாரம், கிருட்டிணாவதாரம், திருவிக்கிரம அவதாரம் முதலிய பிறப்பியல் கதைகள் சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையில் காணப்படுகின்றன. வைணவம் சிறப்புற்றதையும், வைணவத் தலங்களையும் பரிபாடலில் வரும் ஆறு பாடல்கள் குறிப்பிடுகின்றன. சிலப்பதிகாரத்தில் இந்திரன், அகலிகை முதலியோரின் கதைகளும் சுட்டப்படுகின்றன.

இவற்றைப் போலவே இதிகாசங்களிலும் தமிழ்க் கடவுள்களும் கோயில் மன்னர் வரலாறுகளும் பின்னி வருதலைக் காண்கிறோம். இதனால்தான் டாக்டர் இராதாகிருட்டிணன் போன்ற தத்துவமேதைகள்'இந்திய இலக்கியங்கள் இந்தியாவின் ஒருமைப்பாட்டினை உருவாக்கவே எழுந்தவை. அவ்விலக்கியக் கருத்துகளின் அடித்தளமாய் அமைந்தவை தமிழரின் இலக்கியங்களே' என்று கூறுகிறார்.

ஞாயிறு, திங்கள், மழை ஆகியவற்றை வாழ்த்தி இளங்கோவடிகள் தம் சிலப்பதிகார நூலைத் தொடங்குகிறார். இது தமிழர் நெறியில் அமைந்த வழிபாட்டு முறை ஞாயிறு, திங்கள், தீ ஆகிய முச்சுடர் வழிபாட்டு முறை; கொடிநிலை, வள்ளி,

கந்தழி என்னும் பெயர்களால் தொல்காப்பியத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.[188] பிற சங்கப் பாடல்களிலும் இச் சுடர் வழிபாடு பற்றிய குறிப்புகள் உள்ளன. விண்மீன் வணக்கம்,[189] காற்றுத் தெய்வ வணக்கம்,[190] கடல் தெய்வ வணக்கம்[191] முதலான வழி பாடுகளும், கடவுள், பனையடிக் கடவுள், கள்ளிமரத்தடிக் கடவுள்[192] உன்னமரக் கடவுள்[193] முதலான மரத்தடிக் கடவுளும் சங்ககாலத்தில் வழிபடு கடவுளராய் விளங்கினர். சங்ககால மக்கள் வீட்டுத் தெய்வ வழிபாடு செய்தனர்.[194] தெய்வங்கள் பல்வேறு உருவங்களைக் கொண்டவையாக விளங்கின. பொதி யில், சாவடி, மன்றம், தூண், வீட்டுத் திண்ணை, மரத்தடி முத லான பல இடங்களில் கடவுளின் திருவுருவங்கள் வைத்து வழிபடப் பட்டன. சேயோன்(முருகன் அல்லது சிவன்), மாயோன்(திருமால்), வேந்தன் (இந்திரன்), வருணன் (கடல் தெய்வம்) ஆகிய தெய்வங் களைத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. இத் தெய்வங் களுடன் பலராமன், காமன். (சாமன்), பிரமன், மாநிதிக் கிழவன், கூற்றுவன் முதலான தெய்வங்களும் சங்ககாலத் தமிழர்களால் வழிபடப்பெற்றன.[195] பெண்தெய்வங்களில் கொற்றவை, திரு மகள், மாயவள், கலைமகள், சூலி, கடல்தெய்வம், வரையர மகளிர், சூரர மகளிர் முதலான தெய்வங்களும் வழிபடப் பட்டன.[196]

மற்றும் கொல்லிப்பாவை, தாதுசெய் பாவை, வண்டற் பாவை, உப்பியற் பாவை, மன்றங்களில் அமைந்த மண்சிலை[197] முதலான பாவை உருவங்களும் வழிபடப்பட்டன.

---

188 தொல். பொருள். புறத். 85
189 நற். 231:2
190 கலி. 16:17-18
191 அகம். 240:4-8
192 புறம். 260:5
193 தொல். பொருள். புறத். 5:8
194 அகம். 282:17-18; நற். 9:2, 367:3-4; கலி. 132;21
195 கலி. 26:1, 36:1, 12:42, சிலப். 9:10, பரிபா.13:32-33; கலி. 26:3, 84;24, 140:8, 147:42, 59, சிலப். 7:பாடல் 51, கலி. 26:4; கலி. 2:1, 129:2, குறள். 1062; அகம். 66:17; புறம். 3:12, 4:12, 361:2
196 தொல். பொருள். புறத். 4, சிலப். 12:64; சிலப். 12:69, கலி. 44:6-7; கலி. 35:3; தொல். சொல். 57 சேனா. உரை, மணிமே. 14 5 17-19; சிலப். 12:68, குறுந். 218:1; சிலப். 7:பாடல் 51; கலி. 131:1; அகம். 370:12; ஐங்குறு. 191:4, 204:2; அகம். 162:25; முருகு. 41; நற். 34:4
197 அகம். 62:13-15; நற். 201:5-6; குறுந். 48:1; அகம். 392:6; அகம். 269:19; கலி. 138:16; அகம். 157:11-13

அச்சந் தரத்தக்கவற்றைப் பேய், கழுது, அணங்கு, சூர் முதலான பெயர்களால் குறிப்பிட்டும் சங்ககால மக்கள் வழிபாடு செய்துவந்தனர்.

மக்களைக் காக்கப் போரிட்டு மாய்ந்த வீரர்களுக்குக் கல் நட்டுத் தெய்வமாக்கி வழிபட்ட நடுகல் வழிபாடு சங்ககால வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற ஒன்று. இது கோயில் கட்டி வழிபடும் நிலைக்கு வளர்ந்ததைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது.

வழிபடும் முறை

பச்சிலை, மலர் முதலானவற்றைத் தூவியும், நறை விரை புகைத்தும், பொங்கலிட்டுப் படைத்தும், அறுகம்புல், பூலாம்பூ, நெல், தினை முதலானவற்றைத் தூவியும் சங்ககால மக்கள் கடவுளை வழிபட்டனர்.[198] நீராடிய பின்னரே அவர்கள் வழிபாடு செய்தனர்.[199] சம்மணம் போட்டு உட்கார்ந்துகொண்டும், நின்றுகொண்டும் இவர்கள் வழிபாடு செய்தமைக்கான குறிப்புகள் உள்ளன.[200] கடவுளின் முன்னர் யாழ் மீட்டியும் வழிபாடு செய்தனர்.[201] மகளிர் கூட்டம் கூட்டமாகக் கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்தனர். நடுகல்லுக்குப் பீலி சூட்டியும், துடி முழக்கியும், தோப்பி, கள் முதலானவற்றைப் படையல் செய்தும் வழிபாடு செய்தனர்.[202] வெள்ளாட்டுக்குட்டி முதலான விலங்குகளைக் காவு கொடுத்து வழிபட்டதும் உண்டு.[203] சந்தன மாலையை வழிபாட்டின்போது ஒரு மாலையாகப் (செபமாலையாக) பயன்படுத்தியதாகவும் தெரிகிறது.[204] மழை பெய்வதற்காகவும், பெய்யும் மழையை நிறுத்துவதற்காகவும் அவர்கள் வழிபாடு செய்ததுண்டு.[205] இவை தமிழர் வழிபாட்டு முறைகள்.

ஆரிய முறைப்படி சிலர் வடமொழி வேதம் ஓதி, காலையிலும் மாலையிலும் வழிபாடு செய்தனர். அவர்கள் தீ வளர்த்து வேள்வி செய்து வழிபட்டனர். உருத்திரன், சுப்பிரமணியன், கிருட்டிணன் முதலான தெய்வங்கள் தொடர்பாகக் கட்டுக்கதைகளைத் தமிழர் தெய்வங்களுக்கு இட்டுக்கட்டி இணைத்துவிட்டனர். இதனால், சங்ககாலத்திற்குப் பின்னர் சைவம், வைணவம் என்னும் சமயங்கள் வளர்ந்தோங்கின.

---

198 புறம். *106:2*; முருகு. *37*; குறிஞ்சிப். *5-7*; சிலப். *9:1-3*
199 பதிற். *88:24-25*
200 முருகு. *185, 229*
201 நற். *189:3-4*
202 அகம். *35:6-10*
203 ஷை *156:13-15*
204 ஷை *13:3-4*
205 புறம். *143:1-3*

இயல் 6
கலைகள்

இன்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்குமுன் திகழ்ந்த கிரேக்க, உரோம, எகிப்திய, சிந்துவெளி, பாபிலோனிய நாகரிகங் களைக் கண்டு வியக்கும் அகழ்வாராய்ச்சியாளர்களுக்குக் கருப் பொருளாய்த் திகழ்வன இவ் வகழ்வாய்வுகளில் காணப்பெறும் கல்வெட்டுகளும் கலைப்பொருள்களுமேயாகும். அம் மக்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் தெற்றென அறிவதற்கு அவர் கள் விட்டுச்சென்ற கலைச் செல்வங்களே உதவுகின்றன.

விலங்குகளைப்போல் வாழ்ந்த தொல்மாந்தனின் மனம் மென்மையானபோது, அவனுடைய விலங்குத் தன்மை குறைந் தது. விலங்குத் தன்மையினின்று வேறுபட்டு நின்றபோது, அவனுடைய உள்ளத்தில் தோன்றிய ஒளியே 'கலை' என்னும் கருவூலத்தைக் கண்டது. அதுவே பின்னர், அவனுள்ளத்தில் அன்பையும் பண்பையும் வளரச் செய்தது. இத்தகைய பண்பு களால் பக்குவப்பட்ட மாந்தன் தன் வாழ்வியலோடு கலையிய லையும் ஒருங்கே வளர்த்தான். இவ்வாறு கலை, மாந்தனின் வாழ்வோடு, அன்றுமுதலே பின்னிக்கிடப்பதைக் காண்கிறோம். மேற்கூறிய அகழ்வாராய்ச்சிகளைப் போன்று பெருமளவில் தமிழகத்தில் இன்றளவும் நடக்கவில்லையாயினும் அரிக்கமேடு, பூம்புகார் முதலிய இடங்களில் நடந்த சிறிதளவிலான ஆய்வு களில் நாம் வியத்தகு முடிவுகளைக் காண்கின்றோம். மற்ற அகழ்வாய்வுகளால் காணப்பெறும் நாகரிகங்களை ஒப்புநோக்கி உறுதிப்படுத்தப் போதிய இலக்கியச் சான்றுகள் இல்லை. ஆனால், தமிழரின் நாகரிகத்தை விரித்துக் கூறவும் அகழ்வாய்வு களில் கண்டவற்றை ஒப்புநோக்கி அறியவும் சங்க இலக்கியங்கள் உள்ளன. ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னும், காவிரி, வையைக் கரைகளில் வாழ்ந்த தமிழரின் நாகரிகத்தை நம் சங்கநூல்களால் தெற்றென அறிகிறோம். இதனடிப்படையில்தான் தமிழர் நாகரிகம் உலகில் எப்பகுதிகளில் தோன்றிய பண்டைய நாகரிகங் களுக்கு எவ்வகையிலும் குறைந்ததன்று எனக் கூறுவர்.

கலைகள் அறுபத்து நான்கு

மாந்தனின் வாழ்வில் காணப்பெறும் ஒவ்வோர் அசைவும் ஒவ்வொரு கலையேயாகும். சங்கத் தமிழரின் வாழ்வியலில் காணப்பெறும் உழவு, வாணிகம, நெசவு, மருத்துவம் முதலிய தொழில்களும், காதல், வீரம், சமயம் முதலிய பண்புகளும், இன்னபிறவும் கலைகளேயாகும். இவர்கள் குறைவிலா வாழ்வைப் பெற்றவர்கள். எனவே, மனநிறைவு பெற்றிருந்தனர், இதனால் அக்காலத்திலேயே பலவகையான கலைகளை அவர்கள் படைத்து வளர்த்தனர். இவ்வாறு வளர்ந்த கலைகளின் எண்ணிக்கை அறுபத்து நான்கு என மணிமேகலை கூறுகிறது. மணிமேகலையின் காலம், சங்கம் மருவிய காலம். ஆகவே, அதற்கும் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே வளர்ந்த அறுபது கலைகளை அது குறிப்பிடுகிறது. வாத்சயாயனர் என்பார் எழுதிய 'காமசூத்திரம்' எனும் வடமொழி நூலில் இவ்வறுபத்து நான்கு கலைகளின் பெயர்ப் பட்டியல் தரப்பெற்றுள்ளது. இதைப் போலவே புத்தர் வரலாற்றைக் கூறும் 'இலவித விஸ்தரம்' என்னும் நூலிலும், சமண நூல்கள் சிலவற்றிலும் அறுபத்து நான்கு கலைகள் குறிப்பிடப்பெறுகின்றன. இவற்றில் அறுபத்து நான்கு கலைகளின் பெயர்களும் ஒரேசீராகக் காணப்பெறவில்லை. சில மாறியும், பல கூடியும் காணப்பெறுகின்றன. இதனால் தமிழர் கலைச்செல்வத்தைப் பெற்றதில் பிறருக்குப் பிந்தியவர் அல்லரென்பது திட்டவட்டமாக அறியப்பெறுகின்றது.

பாகுபாடு

கலைகளை இருவகையாகப் பாகுபடுத்திக் கூறுவர். காலத்தால் அழியாமல் என்றும் நிலைபேறுடன் திகழும் கலைகளை நிலைக்கலைகள்[1] என்பர். சிற்பம், ஓவியம் முதலியன காலத்தால் நிலைபேறுடையவை. காலந்தோறும் மாறுதல்பெற்று வளர்ச்சியடையும் இசை முதலிய கலைகளை வளரும் கலைகள்[2] என்பர். 'கலை' என்னும் சொல் 'அழகு' என்னும் பொருளைத் தருகிறது. குறைவற்ற ஒரு பொருள் கண்ணையும் கருத்தையும் கவரவல்லது. கண்ணை மட்டுமன்றி மூக்கு, செவி ஆகிய மற்றப் புலன்களையும் கவருவது அல்லது தன்பால் ஈர்ப்பதே கலையாகும். இவ்வாறு ஈர்க்கப்படுவதால் ஈர்க்கப்படுவோரின் உணர்வு பெருகுகிறது. இவ்வுணர்ச்சியின் பெருக்கால் வாழ்வில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. அழகை, அறிவியல் முறையில் போற்றினால் வாழ்வு

1 Static Arts 2 Dynamic Arts

மலரும்; உணர்ச்சி வயப்பட்டு நுகர்ந்தால் வாழ்வு மங்கும். கலை, அறிவையும் வளர்ச்சியையும் கிளர்ச்சியுறச் செய்யவல்லது. எதையும் அளவோடு, அறிவின் அடிப்படையில் உணர்ந்தால் அழகைக் காணலாம். இன்றேல் அழிவையே காணவேண்டிவரும். ஆங்கிலப் பாவலர் கீட்ஸ், 'கருத்துகள் மலிந்த வாழ்விட உணர்ச்சி மல்கிய வாழ்வையே கலைஞர்கள் விழைவர்' என்கிறார். இதனாற் றான் பல கலைஞர்கள் வாழ்வியலின் பயனை நுகராமல் அழிந்து படுகின்றனர்.

மேற்கூறிய விளக்கத்தை அடிப்படையாகக்கொண்டு கலையை இருவகையாகப் பகுக்கலாம். உணர்ச்சிகளைத் தூண்டி அழகையும் இன்பத்தையும் நல்கும் கலைகளை 'அழகு கலைகள்' எனலாம். இவற்றை இன்கலை, நுண்கலை, கவின்கலை, நற்கலை[3] என்றும் அழைப்பர். இக் கலைகள் புலன்களால் நுகர்வதால் மட்டுமேயன்றி, மனத்தால் கற்பனை செய்வதாலும் அமையும். சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், இலக்கியம் முதலான கலைகள் இவ்வகையினவாகும். வாழ்க்கைக்குப் பயன்படும் உழவுத்தொழில், மாழைத்தொழில் (உலோகத் தொழில்), நெசவுத் தொழில் முதலியவற்றைப் 'பயன்கலைகள்' என்பர்.

அழகு கலைகள்

அழகு கலைகள் அழகையும் இன்பத்தையும் ஒருங்கே அளிப் பவை. அஃதாவது, இவை காண்போர் அல்லது உணர்வோர் மனத் தில் உணர்ச்சியை எழுப்பி அழகு காட்சிகளைத் தந்து இன்பங் களை நுகரச் செய்ய வல்லவையாகும். சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் ஆகியவற்றையும் அழகுகலைகள் அல்லது நுண்கலைகள் என்பர். இலக்கியமும் நுண்கலையோடு எண்ணத் தக்கதாகும். ஆனால், இஃது ஏனைய நுண்கலைகளைப் போலல் லாமல் மொழி அறிவுடையவர்கள் மட்டுமே நுகரும் கலையாகும். ஆயினும் இது காலத்தால் அழியாது நிற்கும் கலையாகும். மொழியும் மாந்தனும் இரண்டறக் கலந்து நிற்றலால் இலக்கியம் புலவாயிரம் ஆண்டுகட்குப் பின்னும் அழிவுறாமல் காட்சியளிக் கும். சிற்பக்கலை, ஓவியக்கலை, நாடகக் கலை ஆகியவை ஒன்றி னைப்போலச் செய்யப்படுவதால் 'ஒப்புமைக் கலைகள்'[4] எனப் படும். இசை பாட்டுடன் கலக்கும்போது கருத்துடன் மிளிரும். கருத்து உள்ளத்தைக் கவர்ந்து உணர்ச்சியைத் தூண்டும். சொற்கள் கலவாத தனியிசையில் அறிவான கருத்து இல்லை. சொற்கள் கலந்த பாவிசையில் அறிவுக் கருத்துகள் உண்டு.

---

[3] Fine Arts [4] Minetic Arts

நாடகக் கலையிலும், இலக்கியக் கலையிலும் உணர்ச்சியே மிக்குக் காண்பதால் அவற்றை உணர்ச்சி மல்கிய கலைகளென்பர்; இலக்கியக் கலை, இசைக்கலை ஆகிய இரண்டையும் இயல். இசை, நாடகமென மூன்று கூறுகளாய்ப் பிரித்த சங்கத் தமிழர் இலக்கியத்தை 'இயல்' என்றும், பாநயத்தை இசையோடு பாடும் போது 'இசை' என்றும், இயலும் இசையும் கலந்து கருத்தைத் தழுவி வரும்போது 'நாடகம்' என்றும் கூறினர். செய்யுள், உரை நடை ஆகிய இருவகையாலும் அமைவது இயல். நடனம் நாட்டியம், கூத்து எனும் உறுப்புகளைக் கொண்டது நாடகம். உலகத்திலுள்ள இயற்கைப் பொருள்களைப் போலிகைகளாயும், கற்பனைகளாயும் கல், மண், மரம், மாழை முதலியவற்றாலான உருவங்களைச் சமைப்பது சிற்பக் கலையாகும். இவற்றைக் கண்ணால் கண்டு களிக்கலாம்; அறிவால் அறிந்து இன்புறலாம். இதற்கு நீளம், அகலம், பருமன் எனும் மூன்று அளவுகள் உண்டு.

சிற்பக்கலையைப் போலவே உலகப் பொருள்களையும் கற்பனைப் பொருள்களையும் போலிகைகளாகக் கீற்று,வண்ணம் ஆகியவற்றால் சமைப்பது ஓவியக்கலையாகும். இலக்கியம் பல் வேறு கருத்துகளை நல்கி மனத்தைக் கவரும்போது 'சொல்' எனப்படுகிறது. கவிதைகளைப்போல் ஓவியம் பலவாயிரம் கருத்துகளையும், உணர்ச்சிகளையும் தூண்டுவதால் 'ஊமைக் கவி'[5] என்றும், பலவாயிரம் கருத்துகளையும் உணர்ச்சிகளையும் சொல்லாமல் சொல்லுவதால் 'பேசும்கவி' என்றும் அழைக்கப் படுகிறது. இதற்கும் நீளம், அகலம், பருமன் ஆகிய அளவுகள் உண்டு இதனையும் கண்ணால் கண்டும், உள்ளத்தால்உணர்ந்தும் மகிழலாம்.

ஒலியாலான இசைக் கலை, செவிப்புனலால் நுகரத்தக்கது; நீளம், அகலம், பருமன் ஆகிய அளவுகள் இதற்கு இல்லை. ஆனால் 'காலம்' என்னும் அளவை மட்டும் உடையது. நடனக் கலை உடம்பின் அசைவுகளாலும் குறிப்புகளாலும் அமைவது. பெரும்பாலும் இசையோடு கூடி இயல்வது; சிறுபான்மை இசை யின்றித் தனித்தும் இயங்குவது; கண்ணால் கண்டு களிக்கக் கூடியது; நீளம், அகலம், காலம் என்னும் அளவுகளை உடையது. நாடகக் கலை பெரும்பாலும் உடம்பின் அசைவுகளாலும் சொற் களாலும் அமைவது; மற்றக் கலைகளுடன் கலந்து இயல்வது; கண், செவி, மனம் ஆகியவற்றால் உணரத்தக்கது; நீளம்,அகலம், காலம் முதலிய அளவுகளை உடையது.

---

5 Dumb Poetry

இலக்கியக் கலை ஒலியால் அமைவதாயினும் அந்த ஒலி பொருளுடைய சொற்களால் அமைவது. இசையோடு கூடி இயலும் இக் கலையைச் செவியால் உணரலாம். இதற்குக் காலம் என்னும் ஓரளவை மட்டுமே உண்டு.

கலையின் உணர்ச்சி

மாந்தனின் உள்ளம் விலங்குத் தன்மையினின்று மாறி மென்மைத் தன்மையடைந்த போதுதான், 'கலை உணர்வு' ஏற்பட்டதெனக் கூறினோம். அவ்வாறு தோன்றிய கலை உணர்வு காலந்தோறும் ஒரேவிதமாய் வளர்ச்சியடையவில்லை. அந்தந்த நாட்டின் இயற்கையமைப்பு, தட்பவெப்பநிலை, சுற்றுச்சார்பு, பழக்கவழக்கங்கள், மனவளர்ச்சி, சமயச்சார்பு முதலியவற்றின் அடிப்படையில் கலைகள் வளர்ச்சியடைந்தன. இவற்றுள் மன வளர்ச்சி அல்லது அகஉணர்ச்சியே வாழ்க்கையை எளிதில் மாற்றியமைக்கக்கூடியது. வாழ்வோடு தொடர்புடையதே கலை. புறத்தே உள்ள பொருள்களைவிட அகத்தே எழும் உணர்ச்சிகள் முதாமை வாய்ந்தவையாகையால் தொல்காப்பியர் உணர்ச்சிக் குரியவற்றை 'உரிப்பொருள்' என்றார்.[6]

வாழ்வு, இன்பமாய் அமையவேண்டுமெனில் அறிவும் பண்பும் தேவை. இதனைப் பண்பட்ட அறிவு என்பர். உணர்ச்சிகளைச் செம்மைப்படுத்தி, அறிவின் திறன்கொண்டு வாழும் வாழ்வே முழு வாழ்வாகும். அறிவு மிகுந்து உணர்ச்சி குன்றியவர்களை வள்ளுவர் மரம் போன்றவரென்றும்,[7] அறிவு குன்றி உணர்ச்சி மிகுந்தவரை விலங்கு போன்றரென்றும்[8] கூறுகிறார். எனவே, அறிவும் உணர்ச்சியும் ஒழுங்காக வளர்ந்து பண்பட்டவனே முழு மாந்தனென்பது வள்ளுவர் கண்ட வாழ்க்கைப் பட்டாங்கு ஆகும். மாந்தன் அறிவுக்குரிய மூளையோடு மட்டும் பிறக்காமல், உணர்ச்சிகளும் கற்பனைகளுமுடைய மனத்தோடும் பிறந்துள்ளான்[9] எனும் வாக்கு ஈண்டு ஓர்ந்து உணரத்தக்கதாகும். இந்த உணர்ச்சிகளையும் கற்பனைகளையும் வளர்த்து, தான் மிளிர்வதே கலையின் பண்பு. எதையும் அளவோடு சுவைத்தலே சிறந்தது என்றோம். கலைஞனும் இவ் விதிக்கு விலக்காகக் கூடாது. அழகே கலையென்போம். கலைஞன் உள்ளவாறும், கற்பனையாலும் அவ்வழகைக் கண்டு உலகில் நிலைத்து நிற்கு

---

6 தொல். பொருள். அகத். 3, 5, 16, 18
7 குறள். 997
8 ஷை 410
9 Brown, S. H., *The Realm of Poetry*, p. 54

மாறு அதனைத் தன் கலை வன்மையால் படைக்கிறான். மேலும், அவன் அழகே இல்லாத பொருள்களிலும் அழகைப் படைக்கிறான். அவனுடைய கலைத்திறனே அப் பொருள்களில் அழகு உணர்ச்சியை வளர்க்கிறது. இவ்வாறு இயற்கையாகவும் மிகுதியாகவும் அவன் படைக்கும் கலையழகு எத்தன்மைத்தாயினும் அதனைச் சுவைக்குமாறு படைத்தல் வேண்டும். அத்தகைய படைப்பே கலை இன்பம் நல்கும். கலை தருகின்ற இச் சுவைகளைத் தொல்காப்பியனார் எண்வகையாகப் பிரித்துக் கூறுகிறார். வாழ்வின் பட்டறிவில் இவை புலப்படும்போது எண்வகை மெய்ப்பாடுகளெனப்பட்டன.[10] இவ்வாறு இவை எண்வகையாகப் பிரித்துக் கூறப்படினும் இவை ஒட்டுமொத்தமாக நல்குவது 'கலை இன்ப'மேயாகும். கலை இன்பத்திற்குக் காரணம் ஒரு பொருளின் கவர்ச்சித் தன்மையாகும். அது கண்ணுக்குப் புலன் ஆகும்போது 'அழகு' ஆகிறது. கலைஞன் அதனை ஆராதனை செய்கிறான்; நம்மையும் ஆராதிக்கச் செய்கிறான். விபுலானந்த அடிகளார் நாடகத் தமிழ் என்பதற்கு 'நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை' என்னும் மெய்ப்பாடுகளை நிலைக்களமாகக் கொண்டு, உள்ளத்துணர்வினாலும் உடலுறுப்பினாலும் அவை நம்மைத் தொழிற்படுத்தி இருவகைக் கூத்து, பத்துவகை நாடகம் என்னும் இவற்றைத் தோற்றுவித்து, உள்ளத்திற்கு உவகை அளிப்பதாகும் எனப் பொருள் கூறுகிறார்.[11]

சுருங்கக்கூறின் மென்மையான மனம் படைத்த எவரும் கலையைப் படைக்கவும் சுவைக்கவும் முடியும். மனம் மென்மைத் தன்மையடையும்போது பிறருடைய துன்பம் கண்டு வருந்தும். பிறருடைய உணர்வுகளை உணர்ந்து, அவற்றோடு தானும் ஊர்ந்து செல்பவன் கலைஞன். அவனுடைய படைப்புகளே கலைகள். இவை உணர்ச்சிகளுக்கு மட்டுமே விருந்தல்ல; பண்பைப் பயக்கும் கலமும் ஆகும்.

ஓவியக்கலை

'ஓவியம்' என்னும் சொல் 'ஒவ்வு' என்னும் வினைச்சொல்லிலிருந்து பிறந்ததாகும். 'ஒவ்வு' என்பதற்கு, ஒன்றைப் பற்று அல்லது

10 'நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப.' (தொல். பொருள். மெய்ப். 3)

11 விபுலானந்தர், 'யாழ் நூல்', பக். 361-62

ஒன்றைப் போலவே இருப்பது என்பது பொருள். இதிலிருந்து பிறந்த ஒப்பு, ஓவம், ஓவியம் என்னும் சொற்கள் ஒன்றன் மறு உருவமாக இருக்கின்ற மற்றொன்றைக் குறிக்கப் பயன்படும் சொற்களாகும். அஃதாவது, கண்ணால் கண்ட ஒரு பொருளை மனத்திலிருத்திப் பின்னர் அதன் உருவத்தைச் சுவரிலோ, பிற பொருள்களின் மீதோ தீட்டி மூலப்பொருளின் தன்மையை அதில் எதிரொளிக்கச் செய்வதே ஓவியமாகும். நடனநூலாரும் இதே பொருளில்தான், 'எது ஒன்றன் பிரதிரூபமாக இருக்கிறதோ அதுவே சித்திரம்' என்று கூறினார்கள். தாம் காணுகின்ற காட்சியை அப்படியே எழுதுவது 'காட்சி ஓவியம்' ஆகும். தன் மனத்தில் ஒரு காட்சியைக் கற்பனை செய்து பின்னர் அதனை எழுதிக் காட்டுவது 'கற்பனை ஓவியம்' ஆகும். இதனை வட நூலார் முறையே திருஷ்டம், அதிருஷ்டம் என்பர். அதாவது காணப்படுவது, காணப்படாதது என்பதே இவற்றின் பொரு ளாகும். ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்குமுன் விஷ்ணு தர் மோத்திரம் என்னும் ஓவிய நூலில் கூறப்பட்டுள்ள விதிகள் யாவும், காணப்படாத பொருள்களுக்கே பொருந்தும் என்றும், மற்றும் காணப்படும் பொருள்கள் யாவும் அவற்றின் தன்மை மாறாது வரையப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆகவே, ஓவியன் உள்ளதை உள்ளவாறே எழுதவேண்டும் என்பதும், இதனை இவ்வாறுதான் எழுதவேண்டும் என்ற விதி யைப் பின்பற்றக்கூடாது என்பதும் இதனால் அறியப்படுகிறது. சாளுக்கிய அரசரான சோமேசுவரன் என்பவன் தனது 'அபில சித்தாந்த சிந்தாமணி' என்னும் நூலில் ஓவியங்களை இருவகை யாகப் பிரித்துக் கூறுகிறான். ஓர் உருவம் கண்ணாடியில் தெரிவதைப்போல் எழுதும் ஓவியத்தை 'வித்தம்' என்றும், கற்பனையினின்றும் எழும் ஓவியத்தை 'அவித்தம்' என்றும் அவன் வகைப்படுத்துகிறான்.

ஓர் உள்நோக்கத்தைக் கொண்டு வரைந்து அந் நோக்கத் தைப் பிறரும் அறியவும் பின்பற்றவும் செய்வதே ஒரு தலை சிறந்த கலைஞனின் திறமையாகும். குறிப்பாக நம் நாட்டில் தோன்றிய பக்தி இயக்கத்தின்போது தெய்வத் திருவுருவங்கள் பல ஓவிய வடிவில் எழுந்தன. அவ்வாறு எழுந்தபோது ஒருமித்த கருத்துகளும் மரபுவழி விதிகளும் பின்பற்றப்பட்டன. இன்னின்ன கடவுளர்களுக்கு இன்னின்ன உறுப்புகளும், ஆடைகளும், வண்ணங் களும், படைகளும், ஊர்திகளும்தாம் இருக்கவேண்டும் என்றும், அவர்கள் இன்னின்ன மாலைகளையும், மணிகளையும், அணி களையும் அணிவார்கள் என்றும் கற்பனை வடிவிலான விதி

முறைகள் தோன்றலாயின. பக்தி இலக்கியங்கள் இவற்றிற்கு மூலங்களாய் நின்றன. இதனாலேயே கி.பி. 10ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'சுக்கிரநீதி' என்னும் நூல், வழிபடுவோரின் மனத் திற்கிசைந்தபடி தெய்வத் திருவுருவங்களை இலக்கணம் பிழை யாது தீட்டவேண்டுமென்றும், அவ்வாறு தீட்டுமுன் ஓவியன் அத் திருவுருவத்தை மனப்பாடம் செய்து பன்முறை மனத்திலேயே திரும்பத் திரும்ப நினைத்துப் பதிந்துவைத்துக் கொள்ளவேண்டு மென்றும், இத்தகைய யோகப் பழக்கமே அவன் தொழிலுக்கு உறுதுணையாகும் என்றும் கூறுகிறது.

ஓவியம் என்று தோன்றியது? இந்த வினாவிற்கு விடைகாண வேண்டுமானால் நாம் தொல்பழங்காலத்து மாந்தனின் வரலாற் றுக்குச் செல்லவேண்டும். அவன் தன் மனத்தில் தோன்றிய எண்ணங்களை வெளியிடச் சொற்களை அறியும் முன்பே தான் கண்ட காட்சிகளைப் பிறருக்கு உணர்த்தக் கற்றுக்கொண்டான். அஃதாவது, அவன் எழுத்தறிவு பெறுவதற்கு முன்பே கலையறி வைப் பெற்றுவிட்டான். வனவிலங்குகளைக் கட்டுப்படுத்தி, தான் இட்ட வேலைகளைச் செய்ய அவற்றைப் பழக்குவதற்கு முன்பே தான் கண்ட காட்சிகளை ஓவியங்களாகத் தீட்டக் கற்றுக் கொண்டான். இதனை, அவன் வாழ்ந்த குகைகளிலே இன்றும் காணலாம். பழங்கால மனிதன் விலங்குகளை வேட்டையாடி வாழ்ந்தான். இவனுடைய இத்தகைய வேட்டைக் காட்சிகளே இவன் வாழ்ந்த குகைகளில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இதற்காக இவன் வரிகளையும் வண்ணங்களையும் குகைச் சுவர் களிலே பயன்படுத்தினான். பச்சிலைச் சாறு, செம்மண், விலங்கு களின் கொழுப்பு ஆகியவற்றைக் குழைத்துத் தனக்கு மகிழ்ச்சி யளித்த வேட்டைக் காட்சிகளையும், பிற விலங்குகளின் உருவங் களையும், தன்னுடன் வாழ்ந்த மாந்தர்களின் உருவங்களையும் தான் வாழ்ந்த இயற்கையான மலைக் குகைகளில் தீட்டினான். இத்தகைய விலங்கு மாந்தப்போர்க்களக் காட்சிகளுக்குப் பின்னே, தான் வாழ்ந்த மலைகளின் இயற்கைக் காட்சிகளையும் தீட்டி னான்.

மேலே கண்ட உண்மை வரலாற்றின் படிவங்களாக இன்று பல ஓவியக் காட்சிகள் இந்தியாவெங்ணும் காணப்படுகின்றன. மத்தியப் பிரதேசத்தில் உள்ள சிங்கன்பூர் மலைச்சரிவில் இத்தகைய வேட்டைக் காட்சிகள் காணப்படுகின்றன. அவற்றுள் காட்டெருமையை வேட்டையாடும் காட்சியே மிகவும் சிறப் பாகக் காணப்படுகிறது. இதில் தடியும் ஈட்டியும் தாங்கிய

மனிதர்கள் காட்டெருமையை விரட்டித் தாக்குகிறார்கள். இந்த ஓவியத்திற்குக் கீழே பன்றியை விரட்டும் ஒரு காட்சியும், மற்றோரிடத்தில் ஒரு கரடி ஒரு வேடனைப் பிடித்துக்கொள்ள, அவனை அதன் பிடியிலிருந்து தப்புவிக்க மற்றொரு வேடன் பின் புறத்திலிருந்துகொண்டு அக்கரடியைத் தடியால் அடிக்கும் காட்சியும் சித்திரிக்கப்பட்டுள்ளன. மற்றோர் இடத்தில் ஒரு நாய் சினத்தோடு கவ்வியெழுந்து குரைக்கும் காட்சி சித்திரிக்கப் பட்டுள்ளது. இக் காட்சிகளைத் தீட்டுவதில் பயன்படுத்தப் பட்டுள்ள வண்ணப் பொருள்களில் செம்மண் அதிகமாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய வண்ண ஓவியங்களை ஸ்பெயின்[12] நாட்டிலுள்ள கோகுல்[13] என்னுமிடத்தில் காணப் படும் தொல்பழங்காலத்து ஓவியங்களோடு ஒப்பிடலாம் எனத் திரு. சி. சிவராம மூர்த்தி குறிப்பிடுகிறார்.

சிங்கன்பூரைத் தவிர மத்தியப் பிரதேசத்தில் மிர்சாபூர், பாந்தா ஆகிய இடங்களிலும் பண்டேல்கண்டில் விந்திய மலைத் தொடரில் உள்ள மகாதேவ மலைச்சரிவுகளிலும், பாகேல் கண்டிலுள்ள கைமூர் மலைச்சரிவுகளிலும், ஆந்திராவிலுள்ள பெல்லாரியிலும் இத்தகைய தொல்பழங்காலத்து ஓவியங்கள் காணப்படுகின்றன. மிர்சாபூரில் பால்தூரியா மாவட்டத்தில் ஒரு கலைமானை வேட்டையாடும் காட்சி சித்திரிக்கப் பட்டுள்ளது. லோகிரி என்னும் குகையில் ஒரு கயிற்றின் முனை யில் ஈட்டிபோன்ற ஒரு படைக்கலத்தைக்[14] கட்டி ஒரு விலங்கின் மீது வீசியெறிந்து வேட்டையாடும் காட்சி சித்திரிக்கப்பட் டுள்ளது. இதைத் தவிர கல்லாலான ஈட்டிகளும் வேட்டைக்குப் பயன்பட்டன என்பதை லிக்குனியா, போர்மங்கள், அரின் அர்னா முதலிய குகைகளிலும், விந்தியமலைப் பகுதியிலுள்ள சர்க்காத், குரியா, கர்புதியா ஆகிய குகைகளிலும், ஒசங்காபாதிலுள்ள பாச்சு மாக்கி குகைகளிலும் காணலாம். பாச்சுமாக்கி குகைகளிலுள்ள ஓவியங்களில் ஒரு குரங்கு புல்லாங்குழல் வாசிக்கும் காட்சியைச் சிறப்பானதாகக் கூறலாம். பெல்லாரி மாவட்டத்தில் காப்பல் லூர்க் குகையில் வேட்டைக் காட்சிகளோடு, காட்டெருமைகள் மோதிக்கொள்ளுவதும் சித்திரிக்கப்பட்டுள்ளன. யானைகள், பறவைகள், கூடாரக் கொம்புகள், சடை, எருதுகள் முதலிய வற்றின் உருவங்களும் தீட்டப்பட்டுள்ளன. மேலைக்கரையிலுள்ள மலைவாரத்தில் (மலபாரில்) வயநாடு என்னும் இடத்தில் காணப் படும் ஏதக்கல் குகையில் மாந்த உருவங்களும் விலங்குகளின் உருவங்களும் மிக எளிமையாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

12 Spain
13 Gogul
14 Harpoon

அதோடு இடைக்காலத்தைச் சேர்ந்த பல கல்வெட்டுகளும் இதில் காணப்படுகின்றன. வரலாற்று ஆசிரியரான திரு. ஏ. எல். சிரீவத்சவா என்பவர் விந்தியமலைச் சரிவுகளில் உள்ள பண்டைய குகைகளில் பல ஓவியங்களைக் கண்டுபிடித்துள்ளா ரென்பது குறிப்பிடத்தக்கது.

நாம் இதுவரை வரலாற்றுக் காலத்திற்கு முந்திய ஓவியக் கலையையும் அதில் காணப்படும் ஓவியக் காட்சியையும் குறிப் பிடவேண்டியுள்ளது. இங்குக் கிடைத்துள்ள முண்டப் படிமத் திலும், மட்பாண்டங்களிலும், கல்லறைச் சுவர்களிலும், பறவைகள், விலங்குகள் முதலியவற்றின் உருவங்கள் ஓவியங் களாகத் தீட்டப்பட்டுள்ளன. சுமேரியர், எகிப்தியர் முதலி யோரின் புதைபொருள்களில் காணப்படும் ஓவியங்களுக்கு இவை சற்றேனும் தரத்தில் குறைந்தவை அல்ல.

இலக்கியச் சான்றுகள்

இத்தகைய ஓவியக் கலையைப்பற்றிப் பொதுவாக இந்திய இலக்கியங்களிலும் சிறப்பாகச் சங்கத் தமிழ் இலக்கியங்களிலும் குறிப்புகள் உள்ளனவா என்பதுபற்றிச் சுருக்கமாக அறிவோம். சிந்துவெளி நாகரிகத்தை அழித்துத் தங்களின் வாழ்விடமாக இந்தியாவை ஆக்கிக்கொண்ட ஆரியர்களின் வேதங்களிலும், ஓவியம்போன்ற கலைகளைப்பற்றிய குறிப்புகள் காணப்படு கின்றன. தச்சுவேலை, மாழை(உலோக வேலை, பொன் வேலை முதலியன பற்றியும், ஆடை அணிகலன்களைப் பற்றியும் இருக்குவேதம் குறிப்பிடுகிறது. உபநிடதங்களில் ஒன்றான சாந்தோக்கிய உபநிடதத்திலும், வேதங்களிலும், உபவேதாங்கங் களிலும் போர்க்கலை, மருத்துவக்கலை, எழுத்துக்கலை முதலிய பல்வேறு கலைகளைப்பற்றிய குறிப்புகள் வருகின்றன. 'எது ஒன்றன் பிரதி உருவமாக இருக்கிறதோ அதுவே சிற்பம்' என்று சதபத பிராம்மணம் கூறுகிறது. சிற்பிகளை இராச சிற்பிகள், ஊர்ச்சிற்பிகள் என இருவகையாகப் பிரித்துக்கூறும் பாணினி, அவர்களின் இலக்கணங்களையும் விவரித்துள்ளான். கணிகை களும் நடிகைகளும் ஓவியக் கலையையும் கற்றுத் தேறவேண்டு மென்றான் சாணக்கியன். இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களிலும், புத்த சமண நூல்களிலும் ஓவியத்தைப் பற்றிய விரிவான செய்திகள் காணப்படுகின்றன.

இன்று தமிழ்நாட்டில் காணப்படும் ஓவியங்களில் தொன்மை யானவை பல்லவர்கால ஓவியங்களே. ஆயின் தமிழகத்தில் கி.பி. ஏழாம் நூற்றாண்டுவரை 'ஓவியம்' அறியப்படவில்லையா யென்ற வினா நம்மிடையே எழக்கூடும். மேற்கூறிய

இலக்கியங்கள் யாவற்றிற்கும் முந்திய பண்டைய இலக்கியமான தொல்காப்பியத்தில் ஓவியம்பற்றிய செய்தி விவரிக்கப்பட்டுள்ளது. போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரனுக்கு 'நடுகல்' எடுத்து அதில் அவ் வீரனின் உருவத்தைச் செதுக்கி வழிபடும் வழக்கத்தைத் தொல்காப்பியம் விவரிக்கிறது. கல்லில் இவ்வாறு ஓர் உருவத்தைச் செதுக்குமுன் அதை ஓவியமாக வரைந்து கொண்டு செதுக்குவர் என்பதால் ஓவியக்கலை பழந்தமிழகத்தில் சிறப்புற்றிருந்ததை அறிகிறோம்.[15]

'தமிழ்' என்றால் இனிமை என்பது பொருளாதல்போல, 'எழுத்து' என்றால் 'ஓவியம்' என்றே பொருள் கொள்வர். பழந்தமிழ்மக்கள் ஓவியங்களை எழுதி அவற்றின்வழிக் கருத்துகளை வெளிப்படுத்தினர். அவற்றை 'ஓவிய எழுத்துகள்'[16] என்றே அழைத்தனர். பரிபாடல், குறுந்தொகை ஆகிய சங்க இலக்கியங்களில் இதுபற்றிய விவரங்களை நன்கு அறிகிறோம்.

ஓவிய நூல்

ஓவியக் கலையைப்பற்றிய அரிய நூல் ஒன்று இருந்ததென்பதனைச் சாத்தனார் தெளிவுபடுத்துகிறார். மாதவி ஒரு நாடக மகள், தனது தொழிலுக்கேற்பப் பல கலைகளையும் கற்றுத் தேறினாள். அவற்றுள் ஓவியக் கலையும் ஒன்று என அவர் குறிப்பிடுவதும், ஓவியக் கலைக்கெனத் தனி நூலொன்று இருந்ததை அவர் சுட்டிக் காட்டுவதும் தமிழிலிருந்த ஓவிய நூல்பற்றி அறிய உதவுகிறது.[17] சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் காலத்திலும் இந்த ஓவிய நூலிருந்துள்ளது. அடியார்க்கு நல்லார் இந் நூலிலிருந்து ஒரு பாட்டை மேற்கோள் காட்டுவதிலிருந்து இந் நூல் அவர் காலம்வரை இருந்ததென்பதை அறிகிறோம். அந்த ஓவிய நூலில் ஓவியம் வரைதல்பற்றிய பல்வேறு உத்திகளும் இலக்கணங்களும் காணப்பட்டன.

கிடத்தல், இருத்தல், நிற்றல், இயங்குதல் ஆகிய கோலங்களும், இவற்றின் விகற்பங்களும் அந்த ஓவிய நூலில் விவரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இருத்தல் என்பது திரிதரவுடையன, திரிதரவில்லன என இரு வகைப்படும். யானை, குதிரை, தேர், பூனை முதலியன திரிதர உடையனவாகும். பதுமுகம், உற்கட்டி

---

15 தங்கவேலு, கோ., 'இந்தியக் கலை வரலாறு', 2ஆம் பாகம்

16 Pictographic

17 'ஓவியச் செந்நூல் உரைநூல் கிடக்கையும்
கற்றுத்துறை போகிய பொற்றொடி நங்கை' (மணிமே. 2:31-32)

தம், ஒப்படியிருக்கை, சம்புடம், அயமுகம், சுவத்திகம், தனிப் புடம், மண்டிலம், ஏகபாதம் எனும் ஒன்பதும் திரிதரவில்லன வாம். இந்த ஒன்பதினை உணர்த்தவே அந்த ஓவிய நூலிலிருந்து அடியார்க்குநல்லார் பாடலொன்றை மேற்கோள் காட்டியுள் ளார்.[18] இளங்கோவடிகள் கூறும் அதே கருத்தினைச் சாத்தனாரும் கூறுகிறார். நாடக மகளிர் ஓவியம் கற்றனர். அக் கலைக்கெனச் சிறப்புமிக்க தனி நூலொன்று இருந்தது என்பதே அவர் கூறும் கருத்தாகும்.[19]

ஓவியம் தீட்டப்பெற்ற இடங்கள்

பாண்டியனின் சித்திர மாடம் : பண்டைத் தமிழ் மன்னர்கள் ஓவியம் தீட்டுவதற்கென்றே தங்கள் அரண்மனைகளில் தனியாக 'ஓவிய மாடம்' (சித்திரக் கூடம்) ஒன்றனை ஒதுக்கினர். அம் மாடச் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்பெற்றன. பாண்டியன் நன்மாறன் தனது சித்திரமாடத்தில் தங்கியிருந்தபோது உயிர் நீத்தான். இதனால் அவனைப் 'பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்' என்று புறநானூறு சுட்டுகிறது. பாண்டிய ரின் சித்திரமாடம் பெயர்பெற்றுத் திகழ்ந்ததாகும். இதனைப் புலவர் பலரும் வியந்து பாடியுள்ளமை நோக்கத்தக்கதாம். பாண்டியரின் சித்திரமாடத்தைக் கண்டு வியந்த மாங்குடி மருத னாரெனும் புலவர் அதனைக் குளிர்ந்த குளத்தின் காட்சிக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். சித்திரம் தீட்டப்பெற்ற சுவர் செப்புத் தகட்டைப்போல் சிவந்து பளபளத்துக் காட்சியளித்ததெனவும் விளக்கினார்.[20] பாண்டியரின் சித்திரமாடத்தைக் கண்ட நக்கீரர் அம் மாடம் வெண்சாந்தால் பூசப்பட்டதென்றும், அதன் தூண் கள் நீலமணியைப்போல் கருமையும் திரட்சியும் உடையன வென்றும், சுவர்கள் செம்பினால் செய்யப்பட்டவைபோல் சிவந்த நிறமுடையனவென்றும் கூறி, அவற்றில் இருந்த பல்வேறு வண்ண

---

18 'பதுமுக முற்கட் டிதமே யொப்படி
யிருக்கை சம்புட மயமுகஞ் சுவத்திகம்
தனிப்புட மண்டில மேக பாத
முனப்பட வொன்பது மாகுந்
திரிதர வில்லா விருக்கை யென்ப' (சிலப். 8:26-26 அடியார். உரை)

19 'நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரை நூல் கிடக்கையும்' (மணிமே. 2:30-31)

20 'கயங்கண் டன்ன வயங்குடை நகரத்துச்
செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து' (மதுரைக். 484-5)

ஓவியங்களில் பல பூக்களையுடைய வள்ளியென்னும் உயர்கொடி படர்ந்துள்ள ஓவியத்தைக் காட்சிக்கினியதாய்ச் சிறப்பித்துக் கூறுகிறார்.[21]

திருப்பரங்குன்றத்துச் சித்திரமாடம்: பாண்டியரின் அரண்மனைகளில் தனியாகச் சித்திரக்கூடங்கள் அமைந்திருந்ததைப் போலவே கோயில்களிலும் சித்திரக்கூடங்களிருந்தன. மதுரைக்கு அண்மையிலுள்ள திருப்பரங்குன்றத்து முருகன் கோயிலில் சித்திர மாடமொன்று இருந்ததைக் குன்றம்பூதனார் என்னும் புலவர் குறிப்பிடுகிறார். 'முருகப் பெருமானே, நின் குன்றத்தின்கண் எழுதிய அழகையுடைய அம்பலம், அம்பினது ஏத்தொழில் நிலை பெற்ற காமவேள் சிரமச்சாலையை (படைப் பயிற்சிக் கூடம்) ஒக்கும்'[22] என்று குன்றம்பூதனார் கூறுகிறார்.

இந்தச் சித்திரக்கூடத்தில் சிறந்து விளங்கிய ஓவியக் காட்சியைக் கோயிலுக்கு வரும் பக்தர்கள் கண்டு களித்த காட்சியை நம்பண்ணனார் என்னும் புலவர் வருணிக்கிறார் இக் கூடத்தில் இரதி, மன்மதன் ஆகியோரின் உருவங்கள் தீட்டப்பெற்றிருந்தன. அகலிகையைக் களவில் புணரச் சென்ற இந்திரன் அகலிகையின் கணவனான கவுதமனைக் கண்டதும் பூனை உருக்கொண்டு ஓடும் காட்சி முதலிய பல்வேறு காட்சிகள் இக் கூடத்திலிருந்தன. இத்தகைய ஓவியக் காட்சிகளைக் கண்ட மக்களில் அறிந்தவரை அறியாதவர் 'இது என்ன? இது என்ன?' எனக் கேட்க, அறிந்தவர், இது இது இன்னின்ன ஓவியமென விளக்கிக் கூறினார்களென் நம்பண்ணனார் கூறுகிறார்.[23]

---

21 'வெள்ளி யன்ன விளங்கும் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரட் டிண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்யுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பின் நல்லில்' (நெடுநல் 110-114)

22 'நின் குன்றத்து
எழுதெழில் அம்பலங் காமவேள் அம்பின்
தொழில்வீற் றிருந்த நகர்' (பரிபா. 18:27-29)

23 'இரதி, காமன் இவளிவன் எனாஅ,
விரகியர் வினவ வினாவிறுப் போரும்
இந்திரன் பூசை இவளக லிகைஇவன்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிதென் றுரைசெய் வோரும்
இன்ன பலபல வெழுத்துநிலை மண்டபம் (பரிபா. 19:48-53)

வளமனைகள்: விழாக் காலங்களில் மதுரைக்குச் செல்லும் மக்கள் அக் கோநகரிலுள்ள செல்வர் வாழும் வளமனைச் சுவர்கள் மீதும் மாடங்களின்மீதும் தேவர் முதல் எல்லா உயிரிகளின் உருவங்களும் ஓவியங்களாகத் தீட்டப்பெற்றிருப்பது கண்டு வியந்து நிற்பார்களென மணிமேகலை கூறுகிறது.[24]

பள்ளியறைச் சுவர்கள்: உதயணன் தன் பள்ளியறையுள் இருந்தபோது அவ் வறையின் சுவர்களிலிருந்த ஓவியங்களைக் கண்டு வியந்தான். அவன் கண்ணைக் கவர்ந்த பச்சைக் கொடியை வைத்த கண் வாங்காமல் பார்த்து அது என்ன கொடி? அதன் வகை, பண்புகள் யாவை? எனத் தேர்ந்தான்; மான், மறி முதலியவற்றின் உருவங்களையும் கண்டு உவகை பூத்தான்.[25] இது சங்ககால மரபைத் தழுவியதாயினும் கொங்குவேள் கூறும் இத்தகைய ஓவிய உண்மை சங்ககாலத்தில் சிறப்புற்றுக் காணப் பட்டது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ் செழியன் மனைவி கோப்பெருந்தேவி, தன் கணவனைப் பிரிந் திருந்த காலத்தில் தனது படுக்கையறைச் சுவர்களில் தீட்டப் பெற்றிருந்த ஓவியங்களைக் கண்டு அவலமுற்றாள். அவ்வோவி யங்களில் திங்களின் பக்கலில் உரோகிணி இருப்பது போன்ற ஓவியம் அவள் மனத்தைப் பெரிதும் உலுக்கி அவலமடையச் செய்ததாம். 'உரோகிணியைப் போலத் தானும் தன் கணவ னுடன் என்றுமே இணைந்திருக்க முடியவில்லை'யே என ஏங்கினாள்.'[26]

மேற்கூறியவற்றுள் முன்னது உவகையெனும் மெய்ப் பாட்டையும், பின்னது அவலமெனும் மெய்ப்பாட்டையும் விளக்குகின்றன.

---

24 'வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்
சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியங் கண்டுநிற் குநரும்' (மணிமே. 3:126-131)

25 'வித்தகர் எழுதிய சித்திரக் கொடியின்
மொய்த்தலர் தாரோன் வைத்துநனி நோக்கிக்
கொடியின் வகையும் கொடுந்தாள் மறியும்
வடிவமை பார்வை வகுத்த வண்ணமும்
திருத்தகை யண்ணல் விரித்துநன் குணர்தலின்
மெய்பெறு விசேடம் வியந்தனன் இருப்ப'
(பெருங். மகத காண்டம்-நலனாராய்ச்சி, 97-102)

26 நெடுநல். 161-64

கோயிற் சுவர்கள் : "பல தேர்கள் ஓடுகையினால் துகள் படிந்து வேறுபட்ட தொழில்களையுடைய சித்திரங்களை யுடைய வெள்ளிய கோயில்களின் சுவர்களை, புழுதியை மேலே பூசிக்கொண்ட யானையைப்போல் அழுக்கேறப் பண்ணியதாம்'[27] எனப் பட்டினப்பாலை கூறுவதிலிருந்தும் கோயில் சுவர்களில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்ததை அறியலாம்.

விதானங்கள் : மாளிகைகள், அரங்குகள் முதலியவற்றின் கூரைப்பகுதிகளிலும் (விதானங்கள்) அக்காலத்தில் ஓவியங்கள் தீட்டப்பெற்றன. சிலப்பதிகாரக் காவியத்தில் மாதவி நாட்டிய மாடிய அரங்கின் மேனிலத்தே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனும் நால்வகை வண்ணப்பூதங்களை எழுதி யாவரும் வணங்குமாறு படைக்கப்பட்டிருந்த காட்சியை இளங்கோவடிகள் சித்திரிக்கிறார்.[28] சிலம்பு, 'ஓவியவிதானம்' என்றே இதனை அழைக்கிறது. 'ஓவிய விதானத் துரைபெறு நித்திலத்து' என்பது இளங்கோவடிகளின் வாயுரை.

தவச்சாலைகள் : மணிமேகலையில் வஞ்சிமா நகரத்திலிருந்த புத்த தவச்சாலைகளிலும் ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்த செய்தி குறிப்பிடப்படுகிறது.[29] கோவலன் தந்தையான மாசாத்துவான் தவமியற்றிய தவச்சாலையில் ஓவியங்கள் தீட்டப் பெற்றிருந்தன வென்று சாத்தனார் கூறுகிறார். கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் (சங்கம் மருவிய காலம்) வஞ்சி, காஞ்சி முதலிய நகரங்களில் புத்த தவச்சாலைகளில் சிறந்த ஓவியங்களிருந்தன. இவை அஜந்தா, எல்லோரா ஓவியங்கட்கும் முற்பட்டவை.

பிற்காலத்திய நூலான பெருங்கதையிலும் தமிழகத்தில் சித்திரச் சாலைகள் இருந்தமைபற்றிக் குறிப்பிடப்படுகிறது.[30]

---

27 'தேரோடத் துகள்கெழுமி
நீறாடிய களிறுபோல
வேறுபட்ட வினையோவத்து
வெண்கோயில் மாசூட்டும்' (பட்டினப். 47-50)

28 'தோற்றிய வரங்கின் றொழுதன ரேத்தப்
பூதரை எழுதி மேனிலை வைத்து' (சிலப். 3:106-107)

29 'சாலையும் கூடமும் தமனியப் பொதியிலும்
கோலங் குயின்ற கொள்கை யிடங்களும்' (மணிமே. 28:66-67)

30 'வித்தக வினைஞர் பத்தியிற் குயிற்றிய
சித்திரச் சாலை ... ...' (பெருங். 3:4:15-15)

இவைபோலும் ஓவியக் கூடங்கள் பல்லவர், பாண்டியர், சோழப் பெருவேந்தர், பிற்காலப் பாண்டியர், விசயநகர மன்னர்கள், நாயக்கர் காலங்களிலும் தொடர்ந்து காணப்பெற்றன.

பாவிக்கும் பொருள்கள் : அன்றைய மக்கள் அன்றாடம் பயன் படுத்தும் பொருள்களின்மீதும் ஓவியம் தீட்டி மகிழ்ந்தனர். படுக்கும் கட்டில், ஆளும் ஏனங்கள் முதலியவற்றிலும் ஓவியங் களிருந்தன.[31] கேடயம், வாட்பிடி, அணிகலன்கள், ஆடைகள் முதலியவற்றிலும் ஓவியங்களிருந்தன. 'எழுத்து' என்னும் சொல் லுக்கே ஓவியம் என்பது பொருளென்று கண்டோம். தமிழர், 'தமிழ் வேறு தாம் வேறு' என வாழாதவர். எனவே, தமிழி லெழுந்த நாற்கவிகளில் சித்திரகவியும் ஒன்றாயிற்று. சித்திர கவி, சித்திரசபை, சித்திரநதி, சித்திரத்தடாகம் எனக் காணு மிடங்கள் எல்லாவற்றையும் ஓவியக் கலையாகவே கண்டு களித் தனர்.

தனியே சீலையில் தீட்டப்பெறும் ஓவியம் அந்நாளில் 'படாம்' எனப் பெற்றது. இதுவே இன்று 'படம்' என்று மருவி வழங்கு கிறது. உவவனத்தின் தோற்றம், கைதேர்ந்த ஓவியன் ஒருவன திரைச்சீலையில் அழகுபட எழுதிய வண்ண ஓவியம்போல் காட்சி யளித்ததாம்.[32] இதனைச் சாத்தனார் ஓவியச் சீலையை அம் மலர் வனத்தின்மேல் போர்த்து வைத்தாற் போலிருந்ததெனக் கூறி, இயற்கையாகவுள்ள மலர்வனத்தில் காணப்பெறும் செடி, கொடி, மரம் நீரோடை, குளம், மலர், மொட்டு முதலிய இனிய காட்சிகளைவிட நேர்த்தியாக ஓவியன் தீட்டிய சீலை இருக்கு மெனச் சுட்டுவது ஈண்டு நோக்கத்தக்கதாம்.

அக்கால மக்கள் வெளிப்புறங்களில் தங்கும்போது திரையை வளைத்து மேற்கட்டில் (கூடாரம்) தங்குவது வழக்கம். அத் திரையிலும் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. கடலாடு காதை யில் மாதவி புன்னைமர நிழலில் அழுக்கற்ற மணல் பரந்த நிலத்தே சித்திரத் திரையை வளைத்து மேற்கட்டுங்கட்டி, இடப் பட்ட வெண்கால் அமளிமிசை கோவலனுடன் சேரவிருந்து

---

31 'மரங்கொல் தச்சரும் மண்ணீட் டாளரும்
வரந்தர எழுதிய ஓவிய மாக்களும்' (மணிமே. 28:37-38)

32 'வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம்..........' (ஷை 3:167-169)

யாழை வாசித்தாள்.[33] இந்தச் சித்திரத் திரையை 'ஓவிய எழினி' என இளங்கோவடிகள் சிறப்பித்துக் கூறுகிறார். கோவலனும் மாதவியும் இருந்த கட்டிலின் விதானத்திலும், பக்கங்களிலுமிருந்த கட்டிலின் திரைகளிலும் ஓவியங்கள் எழுதப் பெற்றிருந்தனவாம்.

சீவகசிந்தாமணியில் சித்திரச் சீலை 'படம்' என்றே வழங்கப்பெறுகிறது. தக்க நாட்டின்கண் சீவகன் பயணம் செய்தபோது அந்நாட்டில் காட்சியளித்த தாமரைக் குளங்கள், திரைச்சீலையில் ஓவியக் கலைஞன் தீட்டிய தாமரைக் குளங் களைப் போலவே தோற்றமளித்தனவாம்.[34]

வண்ண ஓவியங்கள்

மேற்கண்ட உவவனக் காட்சியில் செடி, கொடி, இலை, மலர்கள் முதலியனவும், நீரோடையும், குளமும், திட்டும், தீவுத் திடலும், பிறவும் உண்மையாகவே இருந்ததையும், அவற்றின் போலிகையாக வியத்தகு வண்ண ஓவியம் திரையில் பல்வேறு வண்ணங்களால் தீட்டப் பெற்றதையும் உணருகிறோம். எனவே, வண்ணங்களைக் குழைத்துப் பல வட்டிகளில் (குமிழ் அல்லது சிப்பிகளில்) வைத்துக்கொண்டு பல்வேறு வண்ணந் தீட்டும் கோல்களைப் பயன்படுத்தி ஏற்றவாறு வண்ணங்களைத் தீட்டினரென்பதை அறிகிறோம்.

வண்ணந்தீட்டும் கோல்கள் தூரிகை, துகிலிகை[35] என இரு வகைப் பெயர்களால் அறியப்பட்டன. இப் பெயர்கள் கோலின் வகைக்கேற்ப வழங்கப்பெற்றிருக்கலாம். வண்ணம் குழைத்துப் பார்க்கும் பலகையை வட்டிகை, மணிப்பலகை என்றனர். வட்டிகை என்பதும் ஒருவகை வண்ணக்கோலே என்பாருமுண்டு. தூரிகை அல்லது துகிலிகை பாதிரிப்பூவைப் போலிருந்ததெனப் பாலை பாடிய பெருங்கடுங்கோ கூறுகிறார்.

---

33 'புன்னை நீழற் புதுமணற் பரப்பில்
ஓவிய எழினி சூழவுடன் போக்கி
விதானித்துப் படுத்த வெண்கால் அமளிமிசை' (சிலப். 6:168-170)

34 'படம்புனைந் தெழுதிய வடிவில் பங்கயம்
தடம்பல தழீஇயது தக்க நாடு' (சீவக. 1439)

35 'ஓவ மாக்கள் ஒள்ளரக் கூட்டிய
துகிலிகை யன்ன துய்த்தலைப் பாதிரி' (நற். 118:8-10)

ஓவியம் தீட்டும் முறை

புனையா ஓவியம்: குறிப்பிட்ட ஓர் உருவத்தை ஓவியமாகத் தீட்டும் முன், அதனை வண்ணம் தீட்டாமல் கோடாக வரைவர். இது புனையா ஓவியம் எனப் பெறும். இதனை 'வரி வடிவ ஓவியம்' என்றும் அழைப்பர். காதலன் ஒருவன் காதலி ஒருத்தியைக் களவுக்குப்பின் கடிமணம் புரிய முடியாவிட்டால், அவளுடைய உருவத்தைப் பனை ஓலையில் எழுதி ஊரார் அறிய வலம்வரும் வழக்கத்தை 'மடலேறுதல்' என்பர். இது பண்டைத் தமிழகத்திலிருந்த பனை ஓலையில் வரைந்த கோடுகளால் மட்டுமே ஆன வரிவடிவ ஓவியமாகும். மணிமேகலையில் வரும் 'புனையா ஓவியம்' பற்றிய விவரத்தை அறியும்போது சாத்தனார் காலம்வரை தமிழகத்தில் வண்ணம் தீட்டப்பெறாத வரி வடிவ ஓவியமே வழக்காற்றில் இருந்ததென அறிகிறோம்.

நெடுநல்வாடையில் வரி வடிவ ஓவியம்பற்றிய குறிப்பு முதன் முதலில் காணப்படுகிறது.[36] 'புனையா ஓவியம் கடுப்ப-வண்ணங் களைக் கொண்டெழுதப்படாத ஓவியம் போன்று' என இதற்கு நச்சினார்க்கினியர் பொருள் கூறுகிறார். சாத்தனார் புனையா ஓவியம்பற்றித் திரும்பத்திரும்பத் தம் நூலில் குறிப்பிட்டு உள்ளார்.[37]

முழு ஓவியம்: நாம் மேலே கண்ட பல்வேறு எடுத்துக்காட்டுகளால் வரி வடிவ ஓவியம் வரைந்தபின் அதனதன் வண்ணங் களுக்கேற்ப வண்ணங்கள் தீட்டப்பெற்ற பின் அது முழு ஓவியம் ஆகும். இதற்குமுன் ஓவியக் கலைஞன் அதனதன் மெய்ப்பாடு களும், விருத்திகளும் தோன்றுமாறு கோடுகளையும் வண்ணங் களையும் அமையுமாறு தீட்டுவான். அவற்றைக் காண்போர் உண்மையான உருவத்திற்கும் ஓவியத்திற்கும் வேறுபாடு தெரியாமல் மயக்கமுறுவர். அவ்வாறு தீட்டுபவனே சிறந்த ஓவியன். இவனைச், சாத்தனார் 'கைவினைஞன்' என்கிறார். தருமதத்தனும் விசாகையும் இளமை முறுவலிப்பப் பெற்றிருந்த , வனப்பு,

---

36 'புனையா வோவியங் கடுப்பப் புனைவில்' (நெடுநல்.147)

37 'மனையகம் புகுந்து மணிமே கலைதான்
புனையா ஓவியம் போல நிற்றலும்' (மணிமே. 16:130-131)
'புனையா ஓவியம் புறம்போந் தன்ன' (ஷை 22:88)

கைதேர்ந்த புலவர்களால் தீட்டப்பெற்ற ஓவியங்களை ஒத்திருந்தது என்கிறார் கந்தரத்தனார்.[38]

நற்றிணையில் வரும் பல பாடல்கள் நல்லதோர் ஓவியத்திற்கு எடுத்துக்காட்டுகளாயுள்ளன.[39]

ஓவியப் புலவன்

நிறைந்த ஓவியத்தைத் தீட்டுபவனே சிறந்த புலவன். இவனை 'முழு ஓவியன்' எனலாம். வித்தகன்,[40] கண்ணுள் வினைஞன்,[41] கைவினைஞன், ஓவியப் புலவன்,[42] ஓவிய வல்லோன் முதலிய பெயர்களால் இவன் அறியப்படுகிறான்.

'கண்ணுள் வினைஞர்' என்பதற்கு நச்சினார்க்கினியர் 'கண்ணுள் வினைஞர் நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோர்' எனப் பொருள் கூறியுள்ளார். பார்ப்பவரின் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கத்தக்க ஓவியங்களைத் தீட்டுவோர் என்பதே இதன் பொருளாகும்.

காண்போர் தம்மை மறந்து ஓவியத்தின் அழகிலீடுபடுமாறு ஒரு கனவு உலகைக் கற்பிப்பவனே ஓவியப் புலவன். பட்டினத்துப் பிள்ளையார் என்பவர் தாம் உலகக் காட்சியை மறந்து கடவுள் காட்சியில் மறைந்ததை ஒரு சுவரில் எழுதப்பட்ட ஓவியத்துக்கு

---

38 'நல்லேம் என்னும் கிளவி வல்லோன்
எழுதி யன்ன காண்டகு வனப்பின்' (நற். 146:8-9)

39 'சிறுதோள் கோத்த செவ்வரிப் பறையின்
கண்ணகத் தெழுதிய குரீஇப் போல' (ஷை 58:2-3)
'தேம்பெய் தீம்பால் வெளவலின் கொடிச்சி
எழுதெழில் சிதைய அழுத கண்ணே' (ஷை 379:5-6)

40 'வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கை' (மணிமே. 3:167-8)
'வித்தக வினைஞர் பத்தியிற்.........
சித்திர சாலை.........' (பெருங். 3:4:14-15)

41 'எவ்வகைச் செய்தியும் உவமங் காட்டி
நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கின்
கண்ணுள் வினைஞரும் பிறரும் கூடி' (மதுரைக். 516-18)
'கண்ணுள் வினைஞரும் மண்ணீட் டாளரும்' (சிலப். 5:30)

42 'ஓவியப் புலவன் சாயல்பெற எழுதிய'
(திருக்கழுமல மும்மணிக் கோவை-10)
'ஒண்வினை யோவியர் கண்ணிய விருத்தியுள்' (பெருங். 1:35:46)

உவமை கூறுகிறார். சுவரில் தீட்டிய ஓவியங்களைக் காண்போர் தம்மை மறந்து அவற்றில் மனத்தைப் பறிகொடுத்து நிற்பர். நினைவு வந்தவுடன் அச் சுவரைத் தொட்டுப் பார்க்கும்போது அது வெறுஞ்சுவராகவே இருப்பதைக் காண்பர் என்பதே பிள்ளையார் கூறும் உவமையாகும்.

இந்த அளவுக்கு எவனொருவன் ஓவியம் தீட்டுகிறானோ அவனே ஓவியப் புலவன் ஆவான். இன்னும் தமிழகத்தில் 'நாயைக் கண்டால் கல்லைக் காணோம்? கல்லைக் கண்டால் நாயைக் காணோம்' என்னும் பழமொழி இதே கருத்தைத்தான் விளக்கு கிறது. கல்லால் செய்யப்பெற்ற நாயின் சிலையைக் கல்தானே எனும் உணர்வோடு நோக்கினால், நாய் நம் கண்ணுக்குத் தெரி வதில்லை. அது நாய்தான் என்னும் உணர்வோடு நோக்கினால் 'கல்லால் செய்த நாய்' என்னும் உணர்வு மறைந்துவிடுகிறது. கலைஞர்கள் வரையும் தனி விதிகள் சங்க காலத்திலிருந்தன. பல திறப்பட்ட ஓவியர்களும் ஒன்றிணைந்து மாபெரும் ஓவியப் பணி களை மேற்கொண்டு செய்வது இக்கால வழக்கம். இவர்கள் தங்களுக்குள் ஒன்றிணைந்து கலைஞர் குழுக்களை[43] ஏற்படுத்திக் கொண்டனர். இவற்றிற்கு 'ஓவ மாக்கள் குழு'[44] அல்லது 'ஓவிய மாக்கள் குழு' என்பது பெயர். இத்தகைய குழுவினர் மக்கள் கூட்டம், பலதிறப்பட்ட இயற்கைக் காட்சிகள் முதலிய பெரும் படங்களைத் தீட்டினர். இத்தகைய ஓவியங்கள்தாம் பிற்காலத் தில் புத்த சமணக் கலைவளர்ச்சியிலும், பல்லவர், பாண்டியர், சோழப் பெருவேந்தர், விசயநகரமன்னர், நாயக்கர் காலங் களிலும் பெரும்புகழ் பெற்றன.

இத்தகைய பெரும் படம்[45] ஒன்றினை இளங்கோ அடிகள் நமக்குச் சுட்டிக் காட்டுகிறார். சிலப்பதிகாரம் அழற்படுகாதை யில் பாண்டியன் நெடுஞ்செழியன் சிம்மாசனத்தில் மடிகிறான். அருகிலிருந்த ஆசான் (புரோகிதன்), நிமித்திகன், அறக்களத்து அந்தணர், மந்திரக் கணக்கர், ஏவலாளர் முதலிய பலரும் திகைத்துச் சோகமடைந்து கண்ணீர் மல்கி நிற்கின்றனர். இவர் களின் வெருளி, அவலம், அச்சம், அழுகை முதலிய மெய்ப்பாடுகள் தோன்ற இளங்கோ அடிகள் படம்பிடித்துக் காட்ட முயல்கிறார். கடைசியில் இவர்கள் யாவரும் சித்திரப் படங்களில் எழுதப் பட்டுள்ள மக்கள் எந்தவிதம் அசைவற்று, பேச்சற்றுக் காட்சி

---

43 Craft Guilds
44 'ஓவ மாக்கள் ஒள்ளரக் கூட்டிய' (நற் 118:7)
45 Group photo

யளிப்பரோ அவ்விதமே அரசனைச் சேர்ந்தோர் திகைத்து நின்றார்கள்[46] என்கிறார். ஈண்டு 'ஓவியச் சுற்றத் துரையவிந் திருப்ப' என்பதற்கு 'ஓவியத்தில் காணப்படும் மக்கள் கூட்டத் தையொப்ப' என்பது பொருள்.

இத்தகைய மக்கள் கூட்டத்தைக் காட்டும் ஓவியங்கள் 'பிரதிமை' எனப் பெற்றன. தெய்வ உருவங்களைக் காட்டும் ஓவியங்கள் 'படிமை' எனப் பெற்றன. இவற்றோடு இயற்கைக் காட்சிகளையும்[47] சங்ககால ஓவியர்கள் தீட்டினர். மணிமேகலை மலர்வனம் புக்க காதையில் வரும் 'உவவனம்' இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டாகும். தெய்வ உருவங்களும், அவற்றோடு தொடர்புடைய செய்திகளும் ஓவியங்களாகத் தீட்டும்போது அவை 'கற்பனை ஓவியங்கள்'[48] எனப் பெறும்.

இத்தகைய ஓவியங்களே பிற்காலத்தில் புகழ்பெற்ற ஓவியங் களாயின. பரிபாடலில் வரும் இரதி, காமன், இந்திரன், கவுதமன் ஆகியோர் உருவங்களும், இந்திரன் அகலிகையைப் புணர முயலும்போது கவுதமனைக் கண்டு பூனை வடிவாகி ஓடும் காட்சி[49] முதலியனவும் கற்பனை ஓவியங்களே. மாமல்லபுரத் திலுள்ள பல்லவர் காலத்துக் கங்கைக்கரைக் காட்சிப் புடைப்பு ஓவியமும், தஞ்சைப் பெரியகோயிலிலுள்ள சோழர் காலத்துக் கைலைமலைக் காட்சி ஓவியமும் கற்பனைவகையைச் சேர்ந்த வையே. கங்கை, யமுனை முதலிய ஆறுகளைத் தேவதைகளாகக் கற்பித்து எழுதிய பிற்கால ஓவியங்கள் மக்களிடையே நல்ல புகழ் பெற்றன. புத்தரின் பிறப்பியல் கதைகள் (சாதகக் கதைகள்) திருமால் முதலியோரின் தோற்றரவுக் (அவதாரம்) கதைகளைக் காட்டும் ஓவியங்களும் கற்பனை ஓவியங்களே. வண்ண ஓவியங்கள் காண்போர் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே ஈர்த்தன. இத்தகைய வண்ணங்களைத் தீட்டுவதிலும், ஆண் பெண் முதலி யோரின் உருவங்களைப் படைப்பதிலும், தனி உருவங்களைச்

46 'இருநில மடந்தைக்குச் செங்கோல் காட்டப்
புரைதீர் கற்பின் தேவி தன்னுடன்
அரைசு கட்டிலில் துஞ்சியது அறியாது
ஆசான், பெருங்கணி, அறக்களத்து அந்தணர்,
காவிதி மந்திரக் கணக்கர் தம்மொடு
கோயில் மாக்களும் குறுந்தொடி மகளிரும்
ஓவியச் சுற்றத்து உரையவிந் திருப்ப' (சிலப். 22:5-11)

47 Natural scenery

48 Imaginary drawings

49 பரிபா. 19:48-53

சித்திரிப்பதிலும், தெய்வ உருவங்களைச் சமைப்பதிலும் தனித் தனியே கைதேர்ந்த கலைஞர்கள் இருந்தனர். கட்டடங்களின் மீதும், அரங்குகளின்மீதும், விதானங்களிலும், சுவர்களின்மீதும், படுக்கையறைகளிலும் தீட்டும் ஓவியங்களும், நுண்ணிய பொருள் களின்மீது தீட்டும் ஓவியங்களும், இயற்கைக் காட்சிகளைச் சித்திரிக்கவே எழுதப்படும் திரைச்சீலை ஓவியங்களும் உயிரோட்டம் உள்ளவையாகக் காட்சியளித்தன. இதற்குக் காரணம் அக்காலக் கலைஞர்களின் கைவண்ணத்தில் திகழ்ந்த கோடுகள், கீறல்கள், புள்ளிகள், வண்ணங்கள் முதலியனவே ஓவியத்தை உயிரோட்ட முள்ளதாக்கின. இவற்றில் மாறுதல் களைப் பெற்றே பல்லவர், பாண்டியர், சேரர், சோழர், விசய நகரமன்னர், நாயக்கர்கால பிற்கால ஓவியங்கள் தனித் தன்மை களுடன் வளர்ச்சியடைந்தன. அவ்வக் காலங்களில் வளர்ந்து வந்த பண்பாடுகள். சமயத் தத்துவங்கள், நடை, உடை, பாவனை கள், நாகரிகம் முதலியவற்றைத் திட்டவட்டமாக அறிய மேற் கூறிய கால அளவிலான ஓவியங்கள் உதவுகின்றன. இதைப் போலவே மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய சங்க மருவிய காலத்து நாகரிகத்தையும், தொல்காப்பியம், மற்றும் சங்க இலக்கியக் கால நாகரிகத்தையும், சிந்தாமணி, பெருங்கதை முதலிய கால நாகரிகத்தையும் அறிய இவற்றில் வரும் ஓவியங்கள் நமக்குப் பயன்படுகின்றன.

மெய்ப்பாடுகளும் விருத்திகளும்

மேற்கூறிய கோடுகளும், கீறல்களும், புள்ளிகளும், வண்ணங் களும் மட்டுமே சிறந்த ஓவியங்களைப் படைத்துவிட முடியாது. ஒவ்வொன்றுக்கும் உயிரோட்டம் வேண்டுமெனில் மெய்ப்பாடு களும் விருத்திகளும் தேவை. உள்ளத்திலெழும் உணர்வுகளை மெய்வழிப்படுத்திக் காட்டுவது மெய்ப்பாடாகும் ஒருவன் நகைப் பதையும், அழுவதையும், வெகுண்டு நிற்பதையும், அச்சத்தோடு பார்ப்பதையும்உள்ளவாறு படைக்கவேண்டுமானால் அவனுடைய ஐம்புலன்களில் மாறுபாடுகளைக் காட்டுவதால் அமையும். புடைத்து நிற்கும் தோள்கள், கனல் தெரிக்கும் பார்வை, துடிக் கும் மீசை, படையேந்திய கைகளுடன் அரிமாப்போல் நிற்கும் ஓர் உருவத்தை நாம் வீரன் எனலாம். தலைவிரி கோலம், கசங்கிய உடை, கண்ணில் நீர், நடையில் சோர்வு முதலியவற்றுடன் காணும் ஓர் உருவம் அவல நிலையில் உள்ளதெனக் கூறலாம். இவ்வாறு நகை, உவகை, வீரம், வெகுளி, இளிவரல், மருட்கை, பெருமிதம், அச்சம், அழுகை ஆகிய உணர்வுகளை மெய்வழிக்காட்டி ஓவியத்தைப் படைப்பவனே சிறந்த ஓவியன்.

பிற்கால நூலான பெருங்கதை இத்தகைய மெய்ப்பாடுகள் எட்டு வகைப்படும் எனக் குறிப்பிடுகிறது.[50]

ஓர் உருவத்தை அமர்ந்து இருப்பதைப் போலவும் (இருத்தல்), படுத்திருப்பதைப் போலவும் (கிடத்தல்), நிற்பதைப் போலவும் (நிற்றல்) மூவிதமாய் ஓவிய வடிவில் அமைக்கலாம். படுப்பதில் மல்லாந்து படுத்தல், ஒருபுறம் ஒருக்கணித்துப் படுத்தல், பாதிஉடல் மேலும் பாதிஉடல் சற்றுத் தாழ்ந்தும் இருக்கப் படுத்தல் முதலியனவாகவும் அமைத்து ஓவியம் தீட்டலாம். நிற்பதில் ஒரு புறமாய் சாய்ந்து நிற்றல், கால், உடல், தலை ஆகியவை ஒரே நேர்கோட்டில் அமையுமாறு நேரே நிற்காமல் கால் ஒரு கோணல், உடல் ஒரு கோணல், தலை ஒரு கோணலென முக்கோண வடிவில் (திரிகோணம்) நிற்றல், குனிந்து நிற்றல், வளைந்து நிற்றல் முதலியனவாகவும் ஓவியம் தீட்டலாம். இவ்வாறு ஓவியம் (பருப்பொருள்) அமையும் கோணத்தைப் (கோலத்தை) பாவனை அல்லது விருத்தி யென்பர். இத்தகைய விருத்திகளை ஒன்பதாக வகுத்துப் பெருங்கதை ஆசிரியர் கொங்குவேள் கூறுவதைக் காணலாம்.[51] தாவுதல், தாண்டுதல், பறத்தல், மிதத்தல் முதலியனவும், பருத்தல் (விசுவரூபம்), சிறுத்தல் (அகத்தியரூபம்) முதலியனவும், பல கைகள், பல தலைகள் முதலியவற்றுடன் கூடிய இயற்கைக்கு மாறுபட்ட கலப்புருவங்களும் தொல்கதை ஓவியங்களுக்கே பொருந்துவனவாம். அச்சம் எனும் மெய்ப்பாடு தோன்றச் சீவகன் வரைந்த ஓர் ஓவியத்தைச் சிந்தாமணியின் ஆசிரியர் திருத்தக்கதேவர் நமக்குக் காட்டுகிறார். குணமாலை என்பவள் பல்லக்கில் ஒரு வீதி வழியே சென்றபோது மதங்கொண்ட யானையொன்று எதிரே ஓடி வந்தது. பல்லக்கைச் சுமந்து சென்றோர், பல்லக்கைக் கீழே வைத்துவிட்டு ஓடிவிட்டனர். யானை குணமாலையை நெருங்கும்போது தற்செயலாய் அங்கு வந்த சீவகன் யானையை அடக்கித் துரத்தி குணமாலையைக் காப்பாற்றினான். பின்னர் அவளைப் பிரிந்து சென்று தன் அரண்மனையை அடைந்து, அழகான அவள் முகத்தில் யானையைக் கண்டதால் தோன்றிய

50 'எண்மெய்ப் பாட்டினுள் இரக்கம் மெய்ந்நிறீஇ
ஒண்வினை ஓவியர் கண்ணிய விருத்தியுள்' (பெருங். 1:35:45-46)

51 'ஒன்பது விருத்தி நற்பதம் நுனித்த
ஓவவினை யாளர் பாவனை நிறீஇ
வட்டிகை வாக்கில் வண்ணக் கைவினை
கட்டளைப் பாவை.........' (ஷ 2:7:40-43)

அச்சமெனும் மெய்ப்பாடு தோன்ற அவளுடைய உருவத்தை ஓவியமாகச் சீலையில் சீவகன் வரைந்தான்.[52]

பெண் ஓவியர்

சங்க இலக்கியத்தில் பெண்களின் அழகிய உருவங்களைக் கைதேர்ந்த கலைஞன் தீட்டிய ஓவியங்களுக்கு ஒப்பிட்டுப் பேசுவதைக் கண்டோம். ஐம்பெருங் காப்பியங்களிலும் பின்னர்த் தோன்றிய நூல்களிலும் இது மிக அதிகமாய்க் காணப்படுகிறது. சீவக சிந்தாமணியில் வரும் அத்தகைய ஒருசில பாடல்களைக் காணலாம்.[53]

பெண்களை ஓவியத்திற்கு ஒப்பிட்டுப் பேசுவதைக் கண்டோம். ஆனால், பெண்களே ஓவியர்களாக இருந்ததையும் சங்க இலக்கியங்களில் காண்கிறோம். பெண் கவிஞர்கள். வீரத்தாய்மார்கள், மற்றும் எல்லாக் கலைகளிலும் தேர்ந்த சங்க மகளிரைக் காணும் நாம் ஓவிய மகளிரையும் கண்டு களித்தல் வேண்டும்.

பெண்கள் கண்ணுள் வினைஞராவர். கண்ணுள் வினைஞர் என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறிய பொருளைக் கண்டோம். ஆனால், ஈண்டுக் கண்ணுள் வினைஞர் என நாம் பெண்களை அழைப்பது அவர்கள் கண்ணிமையால் தம் காதலரைத் தங்கள் கண்களின் திரையில் ஓவியமாகக் கொண்டு மகிழ்வதால் ஆகும். கண்ணுக்கு மைதீட்டுவதற்காகச் சிறிது நேரம் இமையை மூடினால், கண்ணுள்ளிருக்கும் காதலர் மறைந்து விடுவாராதலால் பெண்கள் கண்ணுக்கும் மைதீட்ட மாட்டார்கள்.[54] பெண்கள்

---

52 'கூட்டினான் மணிபல தெளித்துக் கொண்டவன்
தீட்டினான் கிழிமிசைத் திலக வாள்நுதல்
வேட்டமால் களிற்றிடை வெருவி நின்றதோர்
நாட்டமும் நடுக்கமும் நங்கை வண்ணமே' (சீவக. 1003)

53 'உரைகிழித் துணரும் ஒப்பின் ஓவியப் பாவை ஒத்தார்' (ஷை 699:4)
'ஓவியர்தம் பாவையினோ டொப்பரிய நங்கை' (ஷை 2016)
'உயிர்பெற எழுதப் பட்ட ஓவியப் பாவை யொப்பாள்' (ஷை 2048)
'வடுப்பிள வனைய கண்ணாள்
வல்லவன் எழுதப் பட்ட
படத்திடைப் பாவை போன்றோர்
நோக்கின ளாகி நிற்ப' (ஷை 1573)

54 'கண்ணுள்ளார் காத லவர்ஆகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து.' (ஷை 1127)

தங்கள் காதலரைத் தங்களின் கண்திரையில் ஓவியமாகத் தீட்டியுள்ளனர். கண் இமைத்தால் கண்ணுள் உள்ள காதலர் மறைந்துவிடுவார் என்பதற்காகக் கண்ணையும் இமைக்க மாட்டார்கள்.[55] காதலன் தங்களைத் தாற்காலிகமாகப் பிரிந்து அயலகம் சென்றாலும், அவர்களைத் தங்கள் கண்ணுள்ளே வைத்துக் காப்பர் காதலியர். ஆனால், ஊரார் 'அவள் கணவன் கண்காணாத் தேசம் போய்விட்டான். அவள் கண்ணில் அவன் படவில்லை' என அறியாமையால் கூறித் திரிவர். இவர்களோ தம் காதலரைக் கண்ணுள் வைத்துக்கொண்டிருப்பவர்கள். கண்ணிமைகளைச் சிறிது மூடித் திறந்தாலும் கண்ணுள் பதிந்து விட்ட அக் காதலர்கள் கண் திரையினின்று மறையவே மாட்டார்கள்.[56]

எனவேதான், பாவலர்கள் பெண்களின் கண்ணுள்ளே ஓவியம் உள்ளது என்பர் அவர்கள் ஓவியத்திற்கு ஒப்பாகவும் ஓவியத் திற்குப் பிறப்பிடமாகவுமிருப்பதோடு ஓவியப் புரப்பாளராகவும் உள்ளனர். சீவகசிந்தாமணியின் ஆசிரியரான திருத்தக்கதேவர் சோழர் குடியில் பிறந்தவர். இவர் அரண்மனை வாழ்வை நன்கறிந்தவர். அந்தப்புரத்து மகளிரும், செல்வப் பெண்டிரும் ஓவியக்கலையைப் பயின்றனர் என்கிறார். அவர்கள் கலைக்கே யன்றிப் பொழுதுபோக்காகவும் ஓவியம் பயின்றனரென்கிறார். அவ்வாறு ஓவியம் பயின்ற பெண்களை அவர் சுட்டிக் காட்டு வதை அறியலாம்.

மகளிர் சிலர் தமது இல்லங்களில் வண்ணங்களைக் குழைத்து, துகிலிகையால் தொட்டு ஓவியப் பலகையில் தடவிப்பார்த்து வரையப்போகும் ஓவியத்திற்கேற்ற வண்ணத்தையும், வரைய வேண்டிய உத்தியையும் ஓர்ந்துகொண்டிருக்கும்போது திடீரெனத் தெருவில் சந்தடி கேட்கவே தாங்கள் எழுதிக்கொண்டிருந்த ஓவியங்களை அப்படியே விட்டுவிட்டுத் தெருவாயிலில் வந்து நின்றனராம்.[57] சங்ககாலத்தில் தச்சுவேலை, கருமார் வேலை, தட்டார வேலை முதலிய பயனுள்ள கலைகளிலும், கட்டட வேலை, சிற்பவேலை முதலிய நுண்கலைகளிலும் பெண்கள்

55. 'இமைப்பிற் கரப்பாக் கறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும்இவ் வூர்.' (குறள். 1129)

56 'கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர்.' (ஷை 1126)

57 'வட்டிகை மணிப்பலகை வண்ணநுண் துகிலிகை
இட்டிடை நுடங்கநொந் திரியலுற்ற மஞ்ஞையின்
கட்டழ லுயிர்ப்பின்வெந்து கண்ணிதீந்து பொன்னுக
மட்டவிழ்ந்த கோதையர்கள் வந்துவாயில் பற்றினார்.' (சீவக. 1107)

தேர்ச்சி பெற்றிருந்தனர். போர்க்களப் பயிற்சியும் இவர்களுக்கு உண்டு. இத்தகைய கலைகளுக்கெல்லாம் ஓவியக்கலை இன்றி யமையாததொன்றாகும். எனவே, இக் கலைகளில் பெண் கலை ஞர்கள் ஓவியக் கலைஞர்களாகவும் இருந்தரெனலாம்.

நாடக மகளிர் தமது நாட்டியப் பயிற்சிக்காக ஓவியக் கலை யும் கற்றுத் தேறினரென்பதைக் கண்டோம். நாட்டியத்திற்கு இன்றியமையாதனவாகும் அபிநயங்களும், விரல் முத்திரைகளும் ஓவிய உருவங்களில் அமைக்கப்பெற்று வந்தமையால், அக்கால நாடக மகளிர் ஓவியங்களையும் கற்றுத் தேறினர். மாதவி ஒரு சிறந்த நாடக மகளாவதற்குமுன் கற்ற பல கலைகளில் ஓவிய மும் ஒன்று எனச் சாத்தனார் கூறுகிறார். மேலும், மணி மேகலையில் பெண்கள் ஓவியம் பயின்ற சான்றுகள் பல உள்ளன.

வரையும் முறை

ஓர் ஓவியத்தை வரையுமுன் அதன் மெய்ப்பாடுகளையும், விருத்திகளையும் மனத்தில் பதியவைத்துக் கொள்ளவேண்டும். வரையவேண்டிய இடத்தில் (சுவர், கூரை, விதானம் முதலிய வற்றை)நன்கு குழைத்த வெண்சாந்தைப் பூசி மெழுகவேண்டும். அவ் வெண்சாந்து 'வெள்ளியன்ன விளங்குஞ் சுதை'யாக விருக்க வேண்டும். பின்னர் அவ்விடம்[58] 'வெள்ளி வெண்சுதை இழுகிய மாட'மாக அமையும். அதன்மீது தீட்டப்படும் ஓவியமே 'வெண் சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய கண்கவர் ஓவிய'மாகத் திகழும்.

ஓவியங்களைத் தீட்டப் பலதரப்பட்ட தூரிகைகள்[59] வேண்டும். அவை பாதிரிப் பூவைப்போல் தலைவிரித்து மிருது வாக இருக்க வேண்டும். முதன் முதலில் மேலோட்டமாக வண்ணத்தைத்[60] தீட்ட உதவும் தூரிகை சற்று அகலமாகவும் தடித்தும், கரடுமுரடாகவும் இருக்கலாம். இதற்குத் 'துகிலிகை' எனப் பெயர். பின்னர் மிக நுண்ணியதாயுள்ள தூரிகையினால் கோடுகள், புள்ளிகள், கீறல்களைப் படைத்து உருவத்தை உயிரோட்டமுள்ளதாய்ச் செய்யவேண்டும். இந்த நுண்ணிய தூரிகை 'வட்டிகை' எனப் பெற்றது. இதுவே ஓவியத்தின் கருத்தை விளக்குவது ஆதலால், இதனால் வரையப்பெற்ற ஓவியம் 'வட்டிகைச் செய்தி' எனப் பெற்றது.

---

58 Surface

59 Brushes

60 Rough coating

ஓவியம் தீட்டப்பட வேண்டிய இடம் துணி அல்லது திரைச் சீலையாயின், அக் கிழி தடித்த நூலால் நெருக்கமாக நெய்யப் பெற்றதாயிருக்க வேண்டும். அதன்மீது மெழுகை முதலில் பூசி, நூலிழைகளுக்கிடையிலுள்ள இடைவெளிகளை அடைத்து, மேற் பரப்பை வழவழப்புள்ளதாக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் நீர் ஊற்றி ஈரத்தால் தாக்கப்படாமல்[61] சீலை காக்கப்பட்டு வண்ணம் உறிஞ்சப்படாமலும், நாளாவட்டத்தில் மங்கிப்[62] போகாமலும் காக்கப்படும். பின்னர், துகிலிகை கொண்டு ஓவியத்தைத் தீட்டவேண்டும். முதலில் திரைச்சீலையில் ஓவியம் தீட்ட இந்த நுண்ணிய தூரிகை பயன்பட்டதால்தான் துகிலிகை (துகில்-துணி) எனப்பட்டது. திரைச்சீலை ஓவியங்கள் பெரும் பாலும் இயற்கைக்காட்சிகளாகவும், வண்ண ஓவியங்களாகவுமே இருக்கும். இவை அரங்கம், பள்ளியறை முதலிய இடங்களில் திரையாகப் பயன்பட்டன. யானையின் முகத்தில் போர்க்கும் ஓவியச் சீலை 'முகபடாம்' எனப்பட்டது. திரைச்சீலைகள் ஒப்பனைக்காகவே (அலங்காரம்) பயன்பட்டன.

வண்ண ஓவியங்களைத் தீட்டுமுன் வேண்டிய அளவுகளில் வண்ணங்களைச் சேர்த்துக் குழைத்துக்கொள்ள வேண்டும். வட்டிகைமணிப் பலகையில் அவற்றை முதலில் பரிசோதனை[63] செய்து பார்த்துக் கொள்ளவேண்டும். ஓவியம் வரையவேண்டிய உருவத்தை முதலில் வரைகோடாக[64] வரைந்துகொள்ள வேண்டும். இந்நிலையில் இது வண்ணம் பூசப்பெறாத அல்லது முடிவுபெறாத ஓவியம் எனும் பொருளில் 'புனையா ஓவியம்'[65] எனப்படும். மேற்கண்டவாறு வண்ணங்களைக் குழைத்து, வட்டி கைப் பலகையில் சிறிது பூசிச் சரிபார்த்த பின்னரே, தயார் செய் துள்ள வண்ணங்களை ஏற்றவாறு இந்தப் புனையா ஓவியத்தின் மீது பூசி முழு ஓவியமாக்கி[66] மெய்ப்பாடுகளையும் விருத்திகளை யும் படைத்து உயிரூட்ட வேண்டும்.

பலகையில் வண்ணங்களைக் குழைத்துப் பார்க்க 'வட்டிகை' எனும் தடித்த தூரிகை பயன்பட்டதால் அப் பலகை 'வட்டிகைப் பலகை' எனப்பட்டது. நுண்ணிய வேலைப்பாடுகளை வரையும் துகிலிகையால் வண்ணங்களைக் குழைத்தல் கூடாது.

---

61 Water proof
62 Fade
63 Experiment or trial
64 Line drawing
65 Unfinished or uncompleted drawing
66 Finished or completed drawing

மேற்கூறிய முறைகள் யாவும், சங்க இலக்கியங்களில் உள்ள வாறு தொகுக்கப்பட்ட செய்திகளால் புனையப் பெற்றவை யாகும். சுவர்களில் வண்ண ஓவியங்களைத் தீட்டவேண்டு மானால், முதலில் வெண்சுதை பூசி வழவழப்பாக்க வேண்டும்; பின்னர் அப் பரப்பில் சிவப்பு வண்ணத்தைப்[67] பூசவேண்டும். இவ்வாறு சிவப்பு வண்ணம் பூசப்பெற்ற ஓவியப் பரப்பு[68] செப்புத் தகட்டைப்போல் சிவந்து மின்னும். இதற்குப் பின்னரே வண்ண ஓவியங்களைத் தீட்டவேண்டும். இதனை இதுவரை மேற்கோள் களாகக் கூறப்பட்ட சங்கப் பாக்களால் தெளியலாம்.

வண்ணங்களைக் கூட்டிக் குழைக்கும் முறைகளும்,[69] அவற்றைப் பூசும் முறைகளும்,[70] அவற்றின் எதிரொளிகளும்,[71] இன்னின்ன உருவங்களுக்கு இன்னின்ன வண்ணங்களைப் பூச வேண்டுமென்ற விதிகளும் சங்க இலக்கியங்களில் காணப்பெறு கின்றன.

அகழ்வாய்வுச் சான்றுகள்

இதுகாறும் சங்ககால ஓவியங்களுக்குக்கான இலக்கியச் சான்றுகளைக் கண்டோம். அதாவது சங்க இலக்கியங்களில் கண்டவாறு அக்கால ஓவியக்கலை வரலாற்றை அறிந்தோம். இலக்கியச் சான்றுகளைவிட அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் தலை யாயதும் வரலாற்று ஆசிரியர்களால் நேரடியாக ஒப்புக்கொள்ளக் கூடியனவுமாகும். எனவே காவிரிப்பூம்பட்டினம், அரிக்கமேடு, காஞ்சிபுரம், செங்கம் முதலிய இடங்களில் நடந்த அகழ்வாராய்ச்சி களில் கிடைத்த காசுகள், ஓடுகள் முதலியவற்றின்மீது காணப் படும் புடைப்போவியங்களைக் கொண்டு சங்ககால ஓவியக் கலைத் திறனை உணரலாம்.

சங்க காலத்தில் புழக்கத்திலிருந்த பொற்காசுகளைக் 'காணம்' என்றழைத்தனர். இவற்றில் புலி, யானை முதலிய சின்னங்களிருந்தன. செப்புக் காசுகள் சதுர வடிவிலானவை. இவற்றில் புலி, யானை, கற்பகத்தரு முதலிய சின்னங் களிருந்தன.[72] இவை இலக்கியங்கள் தரும் செய்திகளாகும். இவற்றைப் பரிசீலிப்பது[73] எப்படி? காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த அகழ்வாராய்ச்சியில் கிடைத்த செப்புக் காசுகளில் ஒரு புறம் புலி உருவமும், மறுபுறம் யானை உருவமும் உள்ளன.

---

67 Red oxide
68 Surface
69 Combination of colours
70 Methods of application
71 Glaring reflections
72 தங்கவேலு, கோ., 'இந்திய வரலாறு', தொகுதி 1; பக். 578
73 Cross checking

வடார்க்காடு மாவட்டம் திருவண்ணாமலைக்கு அண்மையிலுள்ள செங்கம் என்னுமிடத்தில் நடந்த அகழ்வாராய்ச்சியில் 120 ஈயக் காசுகள் கிடைத்துள்ளன. இவற்றில் 'தின்னன் எதிரான் சேந்தன் ஆ' என்று பொறிக்கப்பெற்றுள்ளன. இவ்வெழுத்துகள் 'தாமிழி' எனும் முந்தைத் தமிழ் எழுத்துகளே. இக் காசுகள் ஏறக்குறையக் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்பது ஆராய்ச்சியாளரின் முடிபாகும்.

கோவை, சேலம், நெல்லை, மாமல்லை, அரிக்கமேடு, திருவொற்றியூர், காவிரிப்பூம்பட்டினம், உறையூர் முதலிய இடங்களில் கிடைத்துள்ள பொன், வெள்ளி, செம்பு ஆகியவற்றாலான உரோமாபுரிக் காசுகள் மேற்கூறிய சங்ககாலக் காசுகளோடு ஒப்பிட்டு அறியும் சமகால அயலக ஆவணங்களாய்[74] உதவுகின்றன. உரோமரின் பொற்காசுகள் 'ஆரியசு' என்றும், வெள்ளிக் காசுகள் 'தினேரியா' என்றும் வழங்கப்பட்டன. இவற்றில் பொறிக்கப்பெற்றுள்ள உரோம மன்னர்களின் உருவங்களைப்போல் சங்ககாலக் காசுகளில் இல்லை. பெரும்பாலான சங்ககாலக் காசுகளில் உருவங்களோ, எழுத்துகளோ காணப்பெறவில்லை. அரிக்கமேட்டில் கிடைத்துள்ள கண்ணாடி, பளிங்கு, பவழம், பொன்மணிகள், சாடிகள் முதலியனவும் மட்பாண்டங்கள் முதலியவற்றின்மீது காணப்படும் குறியீடுகளும் யவனரும் தமிழரும் கொண்டிருந்த வணிகத்தொடர்பையும் தமிழரின் கலைத்திறனையும் காட்டுகின்றன.

இவ்வாறு ஓவியத்திற்கு இலக்கணமும், அதை விளக்க இலக்கியங்களும், நடைமுறை ஓவியங்களும் படைத்த தமிழர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றித்தான் பிற்கால ஓவியங்கள் அமைந்தன. இன்று நாம் காணுமாறு உள்ளவை சங்க ஓவியத்தின் மறுமலர்ச்சியாய் விளங்கும் பல்லவரின் ஓவியங்களே. அவை சித்தன்னவாசல் குடைவரையிலுள்ள ஓவியங்கள், காஞ்சி கைலாசநாதர் கோயில் ஓவியங்கள், பனைமலைக் கோயில் ஓவியங்கள் ஆகியவையாகும். இவையும் சிதைந்துதான் காணப்படுகின்றன இவற்றைத் தொடர்ந்துதான் சோழர், பாண்டியர், நாயக்கர்கால ஓவியங்கள் தோன்றின. சங்ககாலம் முதல் இன்றுவரை தமிழகத்தில் வளர்ந்து வரும் ஓவியங்கள் அன்னியர் ஆட்சியாலும், நாகரிகப் பரிவர்த்தனையாலும் நடை, உடை, பாவனைகளில்

---

74 Contemporary foreign records

மாறுபட்டுக் காணப்பட்டாலும் இவற்றின் படைப்பும், திறனும் தமிழர்தம் சொத்தேயாகும்.

சிந்துவெளி நாகரிகம் தமிழருடையது என முடிவு செய்யப் பெறின், அங்குக் கிடைத்துள்ள எண்ணிறந்த கலைச்செல்வங்கள் தமிழருடையதாகும். சிறப்பாக, சிற்ப ஓவியச் செல்வங்கள் சிந்து வெளியில் தாராளமாய்க் கிடைத்துள்ளன. அங்குக் காணப்படும் எழுத்துகள் ஓவிய எழுத்துகள்தாம். மட்பாண்டங்களிலும் முத்திரைகளிலும் பதிந்துள்ள ஓவியங்கள் நாலாயிரம் ஆண்டு கட்கு முற்பட்ட தமிழரின் கலைத்திறனை விளக்குவதாய் அமையும்.

சிற்பக் கலை

நாம் கண்ணால் காணும் மாந்தர், விலங்குகள், பறவைகள், நீர்வாழ் உயிர்கள், செடிகொடிகள் மற்றும் பல்வேறு உருவங் களையும், கண்ணால் காணாத-காண முடியாத கற்பனை உருவங் களையும், கல்,மண், மரம், சுதை, உலோகம், தந்தம் முதலிய பல்வேறு பொருள்களில் (வடித்து) உருவங்களை அமைக்கின்ற னர். இவ்வாறு உருவங்களைச் சமைத்துக் கண்ணுக்கும் உள்ளத் திற்கும் இன்பமூட்டும் கலை, ‘சிற்பக் கலை’ எனப்படுகிறது. முதலில் கல்லால் செய்த உருவத்தைக் ‘கற்சிலை’ என்றனர். நாளடைவில் இது ‘சிலை’ என வழங்கலாயிற்று. பின்னர்க் கல்லால் மட்டுமேயல்லாது மண்ணாலும், மரத்தாலும், சுதை யாலும், உலோகத்தாலும், தந்தத்தாலும் மற்றும் கலப்புப் பொருள்களாலும் செய்யப்பெற்ற உருவங்களையும் ‘சிலை’ என்றே அழைத்தனர். செய்யப்படும் பொருளின் தன்மையை நோக்கிக் கற்சிலை, மண்சிலை, வெண்கலச் சிலை என்பன போன்றும் வழங்கினர். ஆயினும் ‘சிலை’ என்னும் சொல் குறிப் பாக ஒன்றன் உருவத்தைக் குறிப்பதாகவே நின்றது.

சிற்பக் கலையறிவு தமிழரிடையே சிறப்புற்று வளர்ந்திருந்த தைப்பற்றித் தொல்காப்பியத்தால் நன்கு தெளியலாம். போரில் அல்லது வீரச் செயலில் மடிந்த தமிழ்வீரனுக்கு அவனுடைய உற்றார், உறவினர், நண்பர் முதலியோரும், அரசனும் கல்கெழு சுரத்திற் சென்று கல் கண்டு, அதனைக் கொணர்ந்து, நீரில் படுத்துத் தூய்மை செய்து, அவ் வீரனது பெயரும் பீடும் அதில் எழுதி நாட்டி, அதனை வீரப்பண்பின் குறியாக வழிபட்டனர். இது ‘வீரக்கல்’ எனப்பட்டது. நட்டு வழிபாடு செய்யப்பட்டதால்

'நடுகல்' எனப்பட்டது. இவ் விழாவைக் 'கல்லெடுப்பு' என்றும் அழைத்தனர். கல்லில் வீரனுடைய உருவத்தைப் பொறித்து, அவனுடைய பெயரையும் அதில் எழுதி, பூச்சூட்டிப் பாணரைக் கொண்டு அவனுடைய புகழையும் பாடச் செய்தனர். இதுவே தொல்காப்பியம் காணும் தமிழரின் சிற்பக்கலை உருவமாகும்.[75] பின்னர் இங்கு 'வீரசாலை' எனப்படும் கட்டடமும் எழுப்பப் பட்டது. அரசர் இறந்துவிட்டாலும் அவரைப் புதைத்த இடத்தில் இத்தகைய ஒரு கல்லை நடுதல் அக்கால மரபாகும். கோப்பெருஞ்சோழனைப் புதைத்த இடத்தில் நடப்பட்ட ஒரு கல்லைக் கண்டு வருந்திய உறையூர் பொத்தியார் எனும் புலவர் தம்மைக் காத்த புரவலன் நடுகல்லாய் நின்றனனே என்று வருந்துகிறார்.[76] அதில் அவனுடைய பெயரையும், வீரப் பண்புகளையும் பொறித்து நட்டுள்ளதைக் கண்டு இரங்கினார்.[77]

இவ்வாறு தொல்காப்பியர் அக்காலத் தமிழகத்திலிருந்த வழக்கமான நடுகல் நாட்டும் மரபு இலக்கணத்தைக் கூறியுள்ளதையும், அதற்கு இலக்கியமாய் அமைந்த புறநானூற்று நிகழ்ச்சிகளையும் காணும்போது இவ் வழக்கு அக்காலத்தில் தமிழக முழுதும் நன்கறியுமென்பதையும் உணருகிறோம். அகநானூற்றுப் பாடலொன்றிலும் இத்தகைய நடுகல்பற்றிய செய்தி குறிக்கப் படுகிறது. அதில் ஆடவருக்கே இத்தகைய நடுகல் நாட்டப்படு மென்றும் கூறப்படுகிறது.[78]

நடுகல் சிற்ப வழிபாட்டினை வள்ளுவரும் உணர்த்துகிறார்.

'என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கல்நின் றவர்.'[79]

---

75 'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்த மரபிற் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று மரபிற் கல்லொடு புணரச்
சொல்லப் பட்ட எழுமூன்று துறைத்தே'
(தொல். பொருள். புறத். 63)

76 'கெடுவில் நல்லிசை சூடி
நடுக லாயினன் புரவலன் எனவே' (புறம். 221:12-13)

77 '.........பெயர்பொறித்து
இனிநட் டனரே கல்லும்' (ஷை 264:3-4)

78 '............ஆடவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்' (அகம். 131:9-11)

79 குறள். 771

'பகைவர்களே! என் தலைவன் எதிர்நின்று வெல்லாது, இறந்துபட்டுக் கல்லாக நாட்டப்பட்டவர் பலராவர். நீங்கள் உயிரோடிருக்க விரும்பினால் என் தலைவன்முன் நில்லாதீர்' என்பது இதன் பொருள். இதில் போரில் பட்டோருக்கு நடுகல் நடப்படும் வழக்கம் தெளிவாகிறது அன்றோ? கணவனை இழந்த கற்புடைய பெண்கள் தங்களைத் தாங்களே மாய்த்துக்கொள்வர்; உடன்கட்டை ஏறலுமுண்டு.[80] தங்கள் சுற்றத்தோடு எரிபுகுந்து மாயும் வழக்கமும் உண்டு.[81] கைம்பெண்களாகிக் கடும் நோன்பு நோற்று வாழ்வதைக் காட்டிலும் எரிபுகுந்து கணவனுடன் மடிவதையே கற்புடைய மகளிர் விழைந்தனர்.[82] இத்தகைய பெண்டிற்கும் தமிழர்கள் கல்லெடுக்கும் வழக்கமுண்டு. இதற்கு 'மாசதிக்கல்' என்று பெயர். கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் இமயம் சென்று கல்லெடுத்து, கங்கையில் நீராட்டி, சிலையமைத்ததை நாம் ஈண்டு நினைவுகூர்தல் வேண்டும். இத்தகைய வழக்கம் சங்கம் மருவிய காலத்திலும் சிறப்பாகக் காணப்பட்டதை மணிமேகலையிலும் காண்கிறோம்.[83]

போரில் இறந்தோரின் பண்பை 'வீரப் பண்பு'[84] எனப் போற்றி இன்றும் குறும்பர்கள் விழா எடுக்கின்றனர். இவர்களைப் போலவே இதிகர், கொல்லர், போயர் முதலிய பழங்குடியினரும் வீரப்பண்பை ஏத்திப் போற்றி நடுகல் நாட்டியும், கல்லறையமைத்தும் கோயிலெழுப்பி வழிபடுகின்றனர்.[85] வடார்க்காடு மாவட்டம் சோழபுரம் என்னும் ஊரில் இராசாத்தித்திய சோழன் தன் தந்தையின் புதைகுழிக்கருகில் ஒரு சிவன்கோயிலைக் கட்டினான். முதலாம் இராசராசன் தன் மனைவி பஞ்சவன் மாதேவியாருக்குப் பழையாறை என்னும் முடிகொண்ட சோழபுரத்தில் பஞ்சவன் மாதேவீச்சுரம் என்னும் கோயிலைக் கட்டினான். இவை யாவும் தொல்காப்பியர் சுட்டும் 'நடுகல்' பண்பு, படர்ந்து பரவி வந்ததைக் காட்டுவனவாகும்.

---

80 'காதற் கணவனொடு கனையெரி மூழ்கும்
மாதர்மெல் லியலின் மலிபுரைத் தன்று.' (பு. வெ. 82 கொளு)

81 'தாங்கிய கேளொடு தானும் எரிபுகப்
பூங்குழை யாயம் புலர்கென்னும்……' (ஷை 82)

82 'பல்சான்றீரே……
உயவல் பெண்டிரே மல்லேம் மாதோ' (புறம். 246:10

83 'காதலர் இறப்பின் கனையெரி பொத்தி
……………………………………
உடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்' (மணிமே. 2:42-47)

84 Verika

85 தங்கவேலு, கோ., 'இந்தியக் கலை வரலாறு', மடலம் 1, பக்.329

பல்வகைச் சிற்பங்கள்

நடுகல் என்பதைக் கல்லால் ஆன பண்டைய தமிழரின் சிற்பம் என்பர். சிற்பங்களைச் செய்வதற்கு மாசில்லாத மரமும், நல்ல மண்ணும், நல்ல கல்லும் பயன்படுத்தப் பெற்றமையை மணிமேகலை விவரிக்கிறது.[86] தெய்வப் படிமங்களை மண், கல், மரம் முதலியவற்றால் செய்து வழிபட்டமையையும் மணி மேகலையில் கண்ணுறுகிறோம்.[87] கல், மண், மரம், மாழை ஆகியவற்றால் தெய்வப் படிமங்களும், பாவை உருவங்களும் செய்தனர். சுதையினாலும் பலவகைச் சிற்பங்களைச் செய்து வாழ்மனைகளின்மேல் வைத்துத் தம் இல்லங்களையே கலைக் கோயில்களாக்கிய தமிழர் வாழ்வை மணிமேகலை சுட்டிக் காட்டு கிறது. ஆண்டுதோறும் நடக்கும் இந்திரவிழாவைக் காண அண்மையிலும், சேய்மையிலுமுள்ள மக்கள் சோழரின் கோநகராம் காவிரிப்பூம்பட்டினம் வருவர். அந் நகரைச் சுற்றிப் பார்க்கும் அவர்களுக்கு மாளிகைகளில் தேவர், மக்கள், விலங்கு கள், புள்ளினங்கள், ஊர்வன முதலான உயிாகளின் உருவப் படிமங் கள் சிற்பங்களாகக் காட்சியளிப்பதைக் கண்டு வியந்ததை மணி மேகலை படம்பிடித்துக் காட்டுகிறது.

தெய்வப் புலவர் திருவள்ளுவர், பல நூல்களைக் கற்று நுண்ணிய அறிவு பெறாதவன், தன் அறிவாற்றலைக் காட்ட எழுச்சியுறும் தன்மையை, சுதையால் செய்யப்பெற்ற பாவை எழுச்சி பெறுதலுக்கு ஒப்பிட்டு உவமம் காட்டுகிறார்.[88] இதில் இருந்து சங்கத் தமிழர் சிற்பம் செய்வதற்கு வண்ணச் சுதையைப் பயன்படுத்தியதை அறிகிறோம்.

இவ்வாறு சங்ககாலத்தில் சிற்பங்கள் செய்யப் பயன்படுத்திய பொருள்களையே இன்றும் பயன்படுத்துகின்றனா. ஆகவே, இன்றுள்ள சிற்பக்கலை மரபுவழிக் கலையே எனலாம். கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த திவாகர நிகண்டில் கல், மாழை, செங்கல், மரம், மண், சுதை, மருப்பு, சருக்கரை, அரக்கு, மெழுகு

---

86 'வழுவறு மரனும் மண்ணும் கல்லும்
எழுதிய பாவை..................' (மணிமே. 21:115-16)

87 'மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும்
கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுக்க' (ஷெ 21:125-6)

88 'நுண்மா ணுழைபுல மில்லா னெழினலம்
மண்மாண் புனைபாவை யற்று.' (குறள். 407)

ஆகிய பத்துப் பொருள்களைக்கொண்டு சிற்பங்கள் செய்யப் பட்டனவென்பதைக் காண்கிறோம்.[89]

அமைந்த இடங்கள்

நடுகல்லைச் சிற்பமாகக்கொண்டு காணும்போது அது இடுகாடு அல்லது புதைகுழியில் அமைக்கப்பெற்றதைக் காண் கிறோம். இதுவே 'பள்ளிப்படை' என்னும் சமாதிக் கோயிலாகப் பின் காட்சியளித்தது. மணிமேகலையில் சுட்ட செங்கற்களால் கட்டப்பெற்ற மாளிகைகளின்மேல் தேவர், மாந்தர், விலங்குகள் முதலான பல்வேறு உருவச் சிற்பங்களைக் கண்டோம். இதைப் போலவே பெரும்பாணாற்றுப்படையில் வானளாவிய மாடி வீடு களிலும், மாளிகைகளிலும், மாடங்களிலும், நிலாமுற்றங்களிலும் பலதரப்பட்ட சிற்பங்கள் காணப்பட்ட விவரங்களைக் காண் கிறோம்.[90]

கோயில்கள்

சங்ககாலத்தில் பல்வேறு தெய்வங்களுக்கும் கோயில்கள் இருந்தன. அக் கோயில்களில் அத் தெய்வங்களின் படிமங்கள் இருந்தன. தெய்வ உருவங்களைப் 'படிமை' என்றும், மாந்த உருவங்களைப் 'பிரதிமை' என்றும், பெண் உருவங்களைப் 'பாவை' என்றும் சிற்ப நூலார் அழைத்தனர்.

இவ்வாறு நடுகல்லாகத் தொடங்கிய தமிழர் சிற்பக்கலை கண்ணகிக்குச் சிலை வடிக்கும் முறையிலும், பாவைத் தெய்வங் கள் வடிவிலும் பள்ளிப்படை (சமாதிக் கோயில்) அமைக்கும் வழக்கிலும் தன் போக்கில் வளர்ச்சிபெற்றது. இத்தகைய நடுகல் தமிழகம் தவிர்த்த மற்ற எந்தப் பகுதியிலும் இதுவரை கண்டு எடுக்கப்படவில்லை. எனவேதான், சிலைக்குத் தாயகம் தமிழகம்

---

89 'கல்லும் உலோகமும் செங்கலும் மரமும்,
மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்
கண்ட சருக்கையும் மெழுகும் என்றிவை
பத்தே சிற்பத் தொழிற்குறுப் பாவன.'
(திவா. நி. தொகுதி 12-சிற்பத் தொழில் பத்துறுப்பின் பெயர், பக். 303)

90 'வான மூன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து' (பெரும்பாண். 346-48)

'சுடும ணோங்கிய நெடுநகர் வரைப்பின்' (ஷை 405)

என்பர். கிரேக்கரும் உரோமானியரும் இந்திய நாட்டுடன் தொடர்புகொண்ட பின்னரே உருவ வழிபாடு இந்தியாவிற்கு இறக்குமதியாயிற்று என்று வரலாற்றறிஞர்கள் கூறுவர். இத் தொடர்பு முதலில் கிரேக்கப் பண்பில் குழைத்த புத்தரின் உருவச் சிலைகளைப் படைத்ததாகவும், பின்னரே புத்தரை வணங்கும் 'உருவ வழிபாட்டுமுறை' ஏற்பட்டதாகவும் கூறுவர். சங்க காலத்தில் தமிழகத்திற்கும் கிரேக்க நாட்டுக்குமிடையே தொடர்பு இருந்ததைக் கண்ணுறும் நாம், 'நடுகல் பண்பே' கிரேக்கம் சென்று, கிரேக்கப் பண்பாகத் திரும்பி, புத்தக் கலையை மலரச் செய்ததெனலாம். சிந்துவெளியில் காணும் 'அரப்பன்' பண்பு தமிழர்களுடையது என முடிவுசெய்யப் பெறுமானால் இக் கருத்து அசைக்கமுடியாத அளவு வலுப்பெற்றுவிடும். கோயில்களில் இத்தகைய உருவங்கள் காணப்பெற்றன. உள்ளத்தை ஈர்க்குமாறும், மறைகளில் உள்ளவாறும் சமைக்கப் பெற்ற தெய்வ உருவங்கள் ஒன்றுக்கொன்று வேறுபாடு காணு மாறு அமைக்கப்பெற்றன. சிவன், திருமால், செவ்வேள், பலராமன் முதலியோரின் படிமைகள், கண்டவுடன் அடையாளம் தெரியும்படி அமைக்கப்பெற்றவையாகும். இப் படிமைகள் நிலவிய கோயில்கள் சங்ககாலத்திலிருந்தன.[91]

மன்னரின் உறைவிடம் அரண்மனையாகும். இதனைச் சங்க கால மக்கள் 'மன்னவன் கோயில்' என்றே அழைத்தனர். மன்னரின் கோயிலை அமைக்கும் கட்டடக் கலைஞன் 'நூலறி புலவன்' எனப்பட்டான். இவன் கணிதம், வானநூல், நிமித்திகம், பொறியியல் முதலிய எல்லா அறிவியற் கலைகளிலும் தேர்ந்த வனாவன். இவன் தனது அறிவியல் ஆற்றலின் துணைகொண்டு அரசனுக்கு அமைக்கும் அரண்மனை பாதுகாப்பு, தட்பவெப்பம், சுற்றுப்புறச் சூழல் முதலிய எல்லாவற்றிற்கும் ஏற்றதாயிருந்த தோடு தெய்விகமும், அழகும் சொட்ட நின்றது. இவன் நல்ல தொரு நாளில் கயிறுகொண்டு அரண்மனைக் கட்டுமாடத்தை அளந்து வரைவுபடம்[92] வரைவான். அதன்படி கட்டடத்தைக் கட்டிமுடிப்பான். அக் கட்டடத்தின்மேல் திசைக்கேற்றவாறு

---

91 'பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்' (சிலப். 5:169-173)

92 Plan

தெய்வப் படிமைகளையும் அமைத்துத் தெய்விகக் கலையைப் படைப்பான்.[93]

உலகம் உருண்டை வடிவமானது என்பதைப் பண்டைத் தமிழர் அறிந்திருந்தனர். அதனோடு உலகில் அடங்கிநின்ற பொருள்களைப்பற்றியும், அதனைச் சூழ்கின்ற சுற்றுப்புறங் களைப் பற்றியும் அறிந்திருந்தனர். சிற்பக் கலைஞன் உலக உருண்டையை மண்ணால் செய்து சக்கரவாளக் கோட்டத்தில் வைத்திருந்த காட்சியை மணிமேகலை சித்திரிக்கிறது. உலகைச் சுற்றிலும் கடல் சூழ்ந்து நிற்க, நடுவில் ஏழுவகைக் குன்றுகளால் சூழப்பெற்ற மேருமலையும், நான்கு வகை நிலங்களையுடைய பெருநிலப்பரப்பும், அதனைச் சுற்றிலும் ஓராயிரம் தீவுகளும், இவை ஒவ்வொன்றிலுமிருந்த நில அமைப்புகளும், வாழ்ந்த உயிர்கள் முதலியனவும், சுற்றுப்புறச் சூழல்களும் இந்த உலக உருண்டையில் செவ்வனே காட்சியளித்தன. மயன் என்னும் பொறியாளனால் அமைக்கப்பட்ட மாயா உலகம்போல் இது காட்சியளித்ததென மணிமேகலை கூறுகிறது.

எனவே, இக்காலச் சிற்பிகள் படிமைகளையும், பிரதிமை களையும், புற உருவங்களையும் உயிரோட்டமுள்ளவையாய்ச் சமைத்ததைப் போலவே கட்டடங்களையும், உலக உருண்டை போன்ற அறிவியல் கற்பனைகளையும் அமைத்ததை அறி கிறோம்.

தெய்வத்திற்கு உருவங்களேயன்றித் தெய்வச் சின்னங்களும் சிற்பமாகச் செய்யப்பெற்று, படிமங்களாகத் தொழப்பெற்றன. புத்தரை வணங்குவோர் 'பாதபீடிகை'ப் படிமையைத் தொழு தனர். புத்தருக்கு முழு உருவம் சமைத்து (தத்ரூபம்) அவரை நின்ற கோலத்திலும், இருந்த கோலத்திலும், கிடந்த கோலத் திலும் வணங்கியது சற்றுப் பிந்திய காலமாகும். புத்தரைப் போலவே திருமாலுக்கும் இத்தகைய மூன்று கோலங்களைச் சிற்பிகள் சமைத்தனர். இவ்விருவருடைய இத்தகைய கோலங் களைப்பற்றி மணிமேகலையும் சிலம்பும் செப்புகின்றன. ஆயினும், சங்ககாலத்தில் தெய்வத் திருவுருவங்கள் பெரும் பாலும் புடைப்பு உருவங்களாகவே இருந்தன. புத்தருக்குப்

93. 'பொருதிறஞ் சாரா அரைநா ளமயத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்பமனை வகுத்து' (நெடுநல். 75-78)

பாதபீடிகையைப் போலவே முருகனுக்கு வேலும், மயிலும், சேவலும் சின்னங்களாயின. இந்திரனுக்கு வச்சிரப்படை, வெள்ளையானை, கற்பகத்தரு ஆகியவை சின்னங்களாயின. இவற்றினடிப்படையில் அமைந்த வேற்கோட்டம், வெள்ளை யானைக் கோட்டம், வச்சிரக் கோட்டம், அமரர் தருக்கோட்டம் முதலிய கோட்டங்களைச் சிலப்பதிகாரத்தால் அறிகிறோம்.

சங்ககாலத்தில் பாவைச் சிற்பங்களைப் படைப்பது ஒரு சிறப்பான கலையாகவும் மரபாகவுமிருந்தது. வீரனுக்கு நடு கல்லைப்போல் கற்புடைய மகளிருக்கு மாசதிக்கல்லை நாட்டு வதிலிருந்து பாவைச் சிற்பங்கள் பிரபலமடைந்தன. கண்ணகிக்குச் சிலையெடுத்த சம்பவம் பாவைச் சிற்ப வரலாற் றில் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். புகார் நகரத்தில் பெண்கள் வழிபட்ட 'கந்திற் பாவை' இருந்ததை மணிமேகலை யால் அறிகிறோம். கொல்லிமலையில் 'கொல்லிப் பாவை' எனும் பெண்தெய்வத்தின் உருவச்சிலை இருந்தது. அதன் அழகும் தோற்றமும் அனைவரையும் கவர்ந்தன. கவிஞர்கள் அழகான பெண்களைக் 'கொல்லிப்பாவை அன்னாய்' என வருணித்தனர். இவ்வாறு கற்புடைய பெண்களை ஏத்திப்போற்றும் பண்பாடு தமிழரிடையே வளர்ச்சியடைந்தபோது வீடு, கோயில் முதலிய வற்றிற்கேற்றும் விளக்குகளையும் பாவை உருவில் படைத்தனர். இவை 'பாவை விளக்குகள்' எனப்பட்டன. கற்புடைய மகளிர் என்றும் அழியாத் தீபமாகி உலகப் பெண்களை வழிநடத்திச் செல்லுகின்றனரென்னும் தெய்விகக் கோட்பாடு தூண்டா விளக்காகியது.

சிற்பியர்

தெய்வப் படிமைகளையும், பாவை உருவங்களையும் புடைத்து சங்கத் தமிழர் ஆண், பெண், செடி, கொடி, விலங்கு கள், பறவைகள், கதிரவன், திங்கள் முதலிய பல்வேறு உருவங் களைப் படைப்பதிலும் சிறப்புற்று விளங்கினர். கைத்திறன் மிக்க சிற்பக் கலைஞன் 'வல்லான்'[4] எனப்பட்டான். கவிஞர்கள் குறையுற்ற ஆடவனை வண்ணிக்கும்போது, அவன் வல்லான் இயற்றிய பாவை[5] போலிருந்தானென வண்ணிப்பாரென்பதை மதுரைக்காஞ்சியில் காண்கிறோம். பொதுவாக, சிற்பக் கலைஞரைச் சிற்பியர் என அழைப்பர். அவர்களின் தொழில், நுட்பத் தேர்ச்சி,[94] சிற்பம் செய்யும் பொருள்[95] (மண், மரம் மாழை) முதலியவற்றைக் கொண்டு அவர் பல்வேறு பெயர்களால் கட்டுவர்.

---

94 Specialist 95 Skilled art

கண்ணகிக்குக் கோயிலெடுத்தபோது செங்குட்டுவனுடன் இமயம் சென்று சிலைக்கேற்ற கல்லைத் தேர்ந்தெடுத்து அதில் கண்ணகியின் (பத்தினியின்) உருவத்தைப் பொறித்த சிற்பியர், சிற்ப நூலறிவில் தலைசிறந்து நின்றவர்கள். இவர்கள் அரசவைச் சிற்பிகள் சிலப்பதிகாரம் இவர்களைக் கம்மியர் என்றும், மேன் மக்கள் பலநாளும்விரும்பிப் போற்றப்பட்ட நூல்நெறி யறிந்த பெருமக்கள் என்றும் போற்றுவதைக் காண்கிறோம்.[96]

அரசனுக்கு அரண்மனையமைக்கும் சிற்பி கட்டடக் கலை, சிற்பம், ஓவியம் முதலியவற்றோடு மெய்ப்பொருளியலையும் அறிவியற் கலைகளையும் அறிந்தவனாதல் வேண்டும். எனவே, இவனை 'நூலறி புலவன்' என நெடுநல்வாடை சுட்டுதலைக் காண்கிறோம்.

தெய்வங்கள், மாந்தர், விலங்குகள் உள்ளிட்ட பல்வேறு உருவங்களையும் விதவிதமாகவும், வேடிக்கையாகவும், கற்பனை வளத்துடனும் சமைக்கும் சிற்பியரை 'வித்தகர்' என மணி மேகலை விளிப்பதைக் காண்கிறோம்.

மண்ணால் சிறபங்களைச் செய்த சிற்பியர் மண்ணீட்டாளர் எனப்பட்டனர்.[97] சுதையால் சிற்பம் செய்தவர் கொத்தர் என்றும், கல்லால் சிற்பம் செய்தவர் கல்தச்சர் என்றும் அழைக்கப் பெற்றனர். மரத்தால் பதுமைகளைச் செய்வோர் பதுமைத் தச்சரெனப்பட்டனர்.

பெரிய மாளிகைகள், கோயில்கள் போன்ற கட்டடங்களைக் கட்டிச் சிற்பங்களை அமைக்கும்போது கட்டடக் கலைஞர், பொறியாளர், தச்சர், சிற்பிகள் முதலிய பலதிறப்பட்ட கலைஞர்களும் ஒன்றுசேர்ந்து பணியாற்றுவர்.

இவர்களுக்கெல்லாம் தலைமையேற்கும் சிற்பி 'பெருந், தச்சன்' எனப்பட்டான். இத்தகைய ஒரு கூட்டணித் தலைவரைப் பற்றி மணிமேகலை வர்ணிப்பதைக் காணலாம். தேர், சகடம்

---

96 'அறச்களத் தந்தணர் ஆசான் பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடுஞ் சென்று
மேலோர் விழையும் நூனெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்' (சிலப். 28:222-25)

97 'மரங்கொல் தச்சரும் மண்ணீட் டாளரும்' (மணிமே. 28:37)

வட்டில், கட்டில், இருக்கை, மணிமுடி முதலியன செய்யும் கலைஞரும், வாள் வேல் முதலியன செய்யும் கம்மியரும், கட்டடப் புலவரும், மண்ணீட்டாளரும், கல்தச்சரும், பொற்கொல்லரும் கூட்டாகச் சேர்ந்து பணிபுரிந்தபோது இவர்களுக்குத் தலைமை யேற்ற சிற்பி 'பெருந்தச்சன்' என மணிமேகலை கூறுகிறது. இவர்போலும் பலதிறப்பட்ட சிற்பியர் வழிவழி வளர்ந்து திறம் பெற்று நின்றவரெனப் பெரும்பாணாற்றுப்படையும், அக நானூறும், சிலப்பதிகாரமும், பிற இலக்கியங்களும் கூறுகின்றன. இத்தகைய கலைஞர்கள் தாங்கள் ஒன்றுசேர்ந்து கலைஞர் சங்கங் களை[98] ஏற்படுத்திக்கொண்டு அவற்றின் தலைவராகப் பெருந் தச்சனைக் கொண்டிருந்தனர். இவர்கள் பிறநாட்டுக் கலைஞர் களின் தொழிற்சங்கங்களோடு இணைந்து பேரிணையமாகச்[99] செயல்பட்டதை மணிமேகலை வர்ணிக்கிறது.[100] மகதநாட்டு நகைத் தொழிலாளர், மராத்திய நாட்டுக் கொல்லர், அவந்தி (மாளவம்) நாட்டுக் கருமார், யவன நாட்டுத் தச்சர் ஆகியோர் தமிழகக் கலைஞர்களுடன் இணைந்து காவிரிப்பூம்பட்டினத்தில் மன்னனின் பூங்கா மண்டபத்தை அமைத்தனரென மணிமேகலை யில் காணப்படும் இச் செய்தியிலிருந்து ஒவ்வொரு நாட்டாரும் ஒவ்வொரு தொழிலில் சட்டமும் திட்டமும் பெற்று விளங்கி யதையும், இத்தகைய கலைத்திறன் மரபுவழி வளர்ந்ததென் பதையும் சங்க இலக்கியங்களால் தெளியலாம். மரபுவழித்திறன் நாட்டுவழிச்(இடம்) சிறப்புற்று நிற்றலைக் காணலாம். இவ்வாறு தனித்தனிக் கலைத்தொழிலில் நுண்திறம் படைத்தோரை நுண் கலைக் கம்மியர், கைவினை முற்றிய நுண்கலைக் கொல்லர், கருந்தொழிற் கொல்லர் முதலிய தனித்தனிப் பெயர்களால்[101] அறிகிறோம். பாவை விளக்கைச் செய்வதில் யவனரே நுண்திறன் பெற்றுத் திகழ்ந்தனரென நெடுநல்வாடை கூறுகிறது.

---

98 Craft Guilds

99 Federation

100 'மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினைப்
பவளத் திரள்காற் பன்மணிப் போதிகைத்
தவள நித்திலத் தாமந் தாழ்ந்த
கோணச் சந்தி மாண்வினை விதானத்துத்
தமனியம் வேய்ந்த வகைபெறு வனப்பிற்
பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்டபத்து
இந்திர திருவன் சென்றினி தேறலும்' (மணிமே. 19:107-116)

101 Specialists

இவ்வாறு சங்ககாலத்தில் மண், மரம், சுதை, கல், மாழை மற்றும் கலப்புப்பொருள்களால் சிற்பங்களைச் செய்து சிற்பக் கலையில் சிறந்து விளங்கியதைக் காண்கிறோம். கலைஞர்கள் சமுதாயத்தில் உயர்வாக மதிக்கப்பெற்றனர். கலைஞர்களின் தொழிற்சங்கம், கூட்டணி, பேரிணையம் ஆகியவற்றையும் காண்கிறோம்.

இன்றைய அகழ்வாராய்ச்சியாளர்கள் புகார், உறையூர், காஞ்சி, அரிக்கமேடு, கொற்கை ஆகிய இடங்களில் நடத்திய அகழ்வாராய்ச்சிகளில் சங்ககாலச் சுடுமண் ஓடுகளையும், சிற்பங் களையும் கண்டெடுத்துள்ளனர். இன்றும் தமிழகத்தில் காணப் படும் மதுரைவீரன், ஐயனார், சுடலைமாடன் முதலிய தெய்வங் களையும் அவற்றின் பரிவாரங்களையும் (யானை, குதிரை, நாய் முதலியன) சுடுமண்ணால் செய்து வழிபடுதல் சங்ககால மரபுவழியை[102] உறுதிப்படுத்துகிறது எனலாம்.

பதுமைகள்பற்றிய செய்திகளைப் பரிபாடல் முதலிய சங்க இலக்கியங்களில் காண்கிறோம். அவை பெரும்பாலும் மரத்தால் செய்யப்பெற்றன. கோயில்களிலும் மாடங்களிலும் இத்தகைய மரப்பதுமைகளிருந்தன. நகரங்களில் முகாமை இடங்களில் சதுக்கப்பூதங்களைச் சமைத்தனர். இவை மரத்தாலும் சுதை யாலும் செய்யப்பெற்றன. இப் பூதங்கள் தீயோரை ஒறுத்து நல்லோரைக் காத்து நயன்மையின் காவலராய்த் திகழ்ந்தனவாக மக்கள் நம்பினர். தேர்களிலும் வியத்தகு சிற்ப வேலைப்பாடுகள் காணப்பெற்றன. நீராடச் செல்வோர் கிடையினாலான பதுமை களையும், பொறிகளையும் கொண்டுசென்றனரெனப் பரிபாடல் கூறுகிறது. இத்தகைய மரச் சிற்பங்கள் காலப்போக்கில் அழிந்து பட்டிருக்க வேண்டும். இன்னும் பழங்காலக் கோயில்களில் மரத் தாலான தெய்வப் படிமைகளும், பதுமைகளுமிருப்பதைக் காண் கிறோம். சங்ககாலக் கோயில்களில் பல மரத்தாலானவையே.

இவ்வாறு சங்ககாலத்தில் வளர்ந்த சிற்பக்கலை பிற்காலத் தில் அதன் மரபுவழியில் வளர்ந்தோங்கியது. அவ்வாறு வளர்ந்த உருவச்சிலைகளை முழு உருவம் (ஆளுருவம் – தத்ரூபம்) என்றும், உடைப்புருவம் (பெரும்பாலும் சின்னங்களும், நடுவத்தின் ஒரு பகுதியும்) என்றும் பிரித்தறிந்தனர். இவை இரண்டுமே உண்மை உருவங்கள் பாற்படும். தெய்வஉருவங்களைப் படிமைகளென்றும் மாந்தர் உருவங்களைப் பிரதிமையென்றும் அழைத்தனர்.

102 Traditional Arts

மறைகளில் கூறப்பட்டவாறு அமைக்கப்பெறுவன தெய்வ உருவங்களாகும். உள்ளபடியே சமைக்கப்பெற்றவை மாந்த உருவங்களும், மற்ற உயிர்களின் உருவங்களும், இயற்கைக் காட்சி களுமாகும். இவையாவும் தம்போக்கில் இயற்கையாக வளர்ச்சி யடைவன.[103] கற்பனை உருவங்கள் கலைஞரின் கைத்திறனால் படைக்கப்பெற்றவை. இவை கருத்தின் வளர்ச்சிக்கும், கற்பனை யின் வேகத்திற்கும் ஏற்பப் புரட்சிகரமாக வளரக்கூடியவை.[104] இவ்வாறு தெய்வ உருவம் (படிமை), மாந்தர் உருவம் (பிரதிமை), இயற்கை உருவம், கற்பனை உருவம் ஆகிய நான்குவிதப் பிரிவு களும் அவற்றின் தனித்தனி வளர்ச்சியும் தமிழுக்கு ஆக்கம் தேடின.

ஒரே பொருளால் செய்யப்பெற்ற சிற்பம் தூய்மை உருவம் (சுத்தம்) எனப்பெற்றது. எடுத்துக்காட்டு: கல்லால் மட்டும், சுதையால் மட்டும், மண்ணால் மட்டும், மாழையால் மட்டும் செய்யப்பட்டவை இவ்வகையைச் சேர்ந்தவையாகும். இரு பொருள்களால் செய்யப்பெற்ற சிற்பம் இருபொருள் உருவம் (மிஸ்ரம்) எனப்பெற்றது. எடுத்துக்காட்டு: செங்கல்லும் சுதை யும் சேர்ந்து செய்த உருவம். இரண்டுக்கும் மேற்பட்ட பொருள் களால் செய்யப்பெற்ற சிற்பம் கலப்பட உருவம் (சங்கீரணம்) எனப்பெற்றது. எடுத்துக்காட்டு: கல், மண், சுதை முதலிய வற்றாலான உருவம்; பொன், செம்பு முதலிய கலப்பு மாழை களால் செய்த உருவம்.

சங்ககாலத்தில் தொடங்கிய சிற்பவளர்ச்சி பல்லவர் காலத் தில் கல்லால் ஆன சிலைகளாகவும், சோழர் காலத்தில் மாழை யாலான (வார்ப்பு) சிலைகளாகவும் சிறப்புற்று வளர்ந்து இன்று உலக அரங்கில் தமிழகச் சிற்பக் கலை முதலிடம் பெற்று நிற்கிறது. குறிப்பாகக் கூத்தரசரின் சிலையும், திருமாலின் சிலை யும், அம்மன் சிலைகளும் உலகம் வியத்தகு வகையில் கலைப் பொருள்களாகக் காட்சியளிக்கின்றன.

சுதை உருவம், சதுக்கப்பூதம்

காவிரிப்பூம்பட்டினத்தில் காணப்பெற்ற சம்பாபதி அம்மன் கோயில் சிதைந்து காணப்பெற்றாலும், சங்ககாலச் சுதை உருவங் களை நினைவுகூரும் சிதைந்த சுதை உருவங்களைக் காண் கிறோம். இங்கு முசுகுந்தன் எனும் சோழ மன்னனால் சமைக்கப் பெற்றதாகக் கூறப்பெறும் சதுக்கப்பூதத்தின் கோயில்பற்றி

---

103 Evolutionary growth 104 Revolutionary growth

இலக்கியத்தில் காண்கிறோம். அத்தகைய பூதத்தின், கல்லால் செய்யப்பெற்றுள்ள சிலையொன்று கொச்சிக்கு வடக்கே 1.3 கி.மீ. தொலைவிலுள்ள பழைய வஞ்சி மாநகரத்தில் அகழ் வாராய்ச்சியாளரால் கண்டெடுக்கப்பெற்றுள்ளது. இச் சிலை மிகப் பெரியதாகவும் சிறந்த வேலைப்பாடுகளுடனும் காணப் படுகிறது.

குடிமல்லம் இலிங்கம்

ஆந்திர நாட்டில் சித்தூர் மாவட்டத்திலுள்ள ரேணுகுண்டா விற்கருகில் குடிமல்லம் என்னும் ஊர் உள்ளது. இங்குப் பரசு ராமேசுவரன் கோயில் என்னும் கோயில் உள்ளது. இது ஒரு தூங்கானைமாடக் கோயில்.[105] இதிலுள்ள மூலவர் இலிங்க வடிவில் உள்ளார். இந்த இலிங்கம் வழவழப்பாகச் செதுக்கப் பட்ட கல்லால் ஆனது. இதன் அடியில் மேடையும் கோமுகமும் (ஆவுடையார்) இல்லை.

இதுபோன்ற இலிங்கம் தமிழகத்திற்குப் புதியதன்று. ஆயினும், உலகில் வேறெங்கிலும் இதைப்போன்ற இலிங்கம் இல்லை என்பது இலாங்கர்சு கருத்தாகும்.[106]

'இந்த இலிங்கத்தின் முனை ஆண்குறியின் முனைபோல் உள்ளது. அதன் கீழ்ப்பகுதியில் சிவன் நின்றவண்ணமுள்ளார். சடைமுடி தரித்து இடக்கையில் நீண்ட காம்பையுடைய போர்க் கோடரியை உடம்போடு அணைத்துக்கொண்டு நீர்க் கமண்டலத் தைப் பிடித்துக்கொண்டுள்ளார்; வலக்கையில் ஒருவகைத் தகர்ப் படையை ஏந்தியுள்ளார் கழுத்தில் அட்டிகைப் பட்டையும், கழுத் தணியும் காணப்படுகின்றன. இரு கைகளிலும் பல கடகங்களை (வளையல்களை) அணிந்துள்ளார். பட்டாலான சிற்றாடையை வரிந்து கட்டிக்கொண்டுள்ளார். இது பார்ப்பதற்கு ஆடையின்றி இருப்பதைப்போல் காணப்படுகிறது. அவருடைய இருபாதங் களும் ஓர் அரக்கனின் தலைமீது உள்ளன. அவ் வரக்கன் மிதிபட்டு நசுக்கப்படுவதுபோல் காட்சியளிக்கிறான். அவனுடைய காதுகள் மிக நீண்டு, விலங்கின் காதுகளைப் போன்றுள்ளன.'[107]

இத்தகைய இலிங்கத்தின் வடிவமைப்பும் அதில் காணப் பெறும் சிவனின் உருவமும் மிகப் பழைமையைக் காட்டுகின்றன.

---

105 Apsidal

106 Longhurst, *Pallava Architecture*

107 தங்கவேலு, கோ., 'இந்தியக் கலை வரலாறு' மூன்றாம் மடலம் - சிற்பக்கலை, பக். 235-36

மிகப் பழங்காலக் கோடரிப்படையுடன் காட்சியளிப்பதிலும், கைகள் நிறைய வளையல்களும், கழுத்தில் அட்டிகைப் பட்டையும் தரித்து ஒருவகைத் தலைப்பாகையுடன் காணப்படும் காட்சி ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காட்சியாகும்.

'இலிங்கத்திலேயே சிவன் உருவைப் படைத்திருப்பதும், அதுவும் மிகப் பழைமையான உருவோடு அவரைக் காட்சியளிக்கச் செய்திருப்பதும் இஃதொன்றில்தான் காணமுடிகிறது.'[108]

குடிமல்லம் இலிங்கத்தையும் சங்க இலக்கியங்கள் தரும் சைவப் பட்டாங்குகளையும் அடிப்படையாகக் கொண்டுதான் அரப்பா அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பெற்ற இலிங்க வழிபாடு தமிழருடையதென்கிறோம்.

எழுத்து

மொழி, மனித இனத்தின் பொதுச்சொத்து. எனினும், அது மிகப் பலவாய் உலகில் வழங்கப்படுகிறது. அதனைப் பேச்சு நிலையிலும் பதிவு நிலையிலும் மக்கள் வழங்கிவருகின்றனர்.

மொழி, மக்களின் கருத்தை வெளியிட உதவும் கருவி. இந்தக் கருவி ஒலிவடிவில் அதாவது, பேச்சுவடிவில் வெளிப்படும்போது, வெளிப்படும் அந்த நேரத்தில் மட்டும்தான் கேட்கமுடியும். மொழி, பதிவு வடிவம் பெறும்போது, காலம் கடந்த நிலையிலும் தன் கருத்தை வெளிப்படுத்துகிறது.

பேச்சுமொழி தொடக்க நிலையில் சொற்களையே வாக்கியங்களாகக்[109] கொண்டிருந்தது. பின் அது கலைநிலை ஒலிமொழியாக[110] வளர்ச்சியுற்றது.

பதிவுமொழி பல்வேறு நிலைகளில் வெளிப்பட்டது. அடையாளப் பொருள் வடிவம், எழுத்துவடிவம் என்பன அவை.

அடையாளப் பொருள் வடிவம்[111]

சீதை இராவணனால் தூக்கிச் செல்லப்பட்டபோது தன் அணிகலன்களை வழிநெடுக அடையாளப் பொருளாக எறிந்து

---

108 இலிங்கம் உருவாகிய காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு ஆகலாம்.
109 Word sentences
110 Articulated sound sentences
111 Jensen, Object-Writing, *Sign, Symbol and Scripts*, p. 24

கொண்டே சென்றாள் என்று கூறப்படுகிறது.[112] இது சீதை இராமனுக்குத் தெரிவித்த பதிவுமொழி வகையின் பாற்படும்.

அடர்ந்த காடுகளில் வழி இன்னது என்பதை அறிவிக்கும் அடையாள மொழியாகச் சங்ககால மக்கள் பக்கங்களில் தடையாக இருந்த மரங்களை வெட்டிச் சரிசெய்து காட்டினர். மேலும், புல்லை முடிந்துவைத்துவிட்டுச் செல்வதன் மூலமும் இது வழி என்பதைத் தெரிவித்தனர்.[113]

சிந்துவெளியில் கிடைக்கும் முத்திரைச் சின்னங்கள், நாணயங்களில் பொறிக்கப்படும் அடையாளச் சின்னங்கள், இன்று பயன்படுத்தப்படும் தேர்தல் சின்னங்கள் முதலானவையும் இந்த வகையான அடையாளப் பொருள் வடிவ மொழியேயாகும். இன்று கிடைத்துள்ள நாணயங்களில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டு இருப்பது சங்ககாலச் சோழன் நாணயம்[114] போல், மீன் சின்னம் பொறிக்கப்பட்டிருப்பது சங்ககாலப் பாண்டியன் நாணயம் என்று நாம் கொள்வது இந்த வகையான மொழி அறிவினாலேயே ஆகும்.

இதனைப் புடைப்போவிய எழுத்து வகையிலும் சேர்த்துக் கொள்ளலாம். புழங்கு பொருள்களில் அடையாளச் சின்னங்களைப் பொறிக்கும் பாங்கும் இந்த வகையைச் சேரும். (பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மனைவி வீற்றிருந்த கட்டில் தகட்டில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டிருந்த செய்தி,[115] இவள் சோழர்குடி மகள் என்பதைக் காட்டும் எழுத்து வகையாகும்.)

சங்ககாலத்தில் கல்லிலும், மரத்திலும், தாழம்பூ மடலிலும், பனை ஓலையிலும், துணியிலும் மக்கள் எழுதினார்கள்.

கல்லெழுத்து

நடுகல்லில் பெயரும் பெருமைமிக்க செயலும் விளக்கி எழுதப்பட்டன. இந்த எழுத்துகளை அவர்கள் கூரிய உளி கொண்டு தோண்டிப் பொறித்தார்கள்.[116] தோண்டி எழுதப்

---

112 புறம். 378:18-20
113 மலைபடு. 393
114 I.A. 1963-64. No. 35
115 நெடுநல். 126
116 'செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட
... ... கல்' (மலைபடு. 388-89)
'பெயரும் பீடும் எழுதி......நடுகல்' (அகம். 67:9-10)

பட்டமையின் அந்த எழுத்துகள் 'குயில் எழுத்துகள் என்று வழங்கப்பட்டன.[117] கல்லில் எழுதப்பட்ட எழுத்துகள் 'கோடுமாய் எழுத்து' என்று கூறப்பட்டமையால் கோடு மாயாத ஒருவகை எழுத்து இருந்தது என அறியலாம். கோடு, கோல் என்னும் சொற்கள் ஒரு பொருளன. 'வளைவு' என்னும் பொருளை அவை தரும். கல் அல்லாத பிற பொருள்களில் கோடு மாயாத-வளைவு மாயாத வளைவுடன் கூடிய கோலெழுத்து எழுதப்பட்டது எனலாம்.

மர எழுத்து

பச்சை மரத்தில் கூரிய கற்களைக்கொண்டு சாலை எந்த ஊருக்குச் செல்கிறது என்பதைத் தமிழர்கள் பொறித்து வைத்திருந்தனர். வழிப்போக்கர்களுக்கு உதவியாக எழுதப்பட்டவற்றைச் சாதாரண மக்களும் படித்தறியும் அளவுக்கு எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்பது புலனாகும்.[118]

தாழை மடல்

தாழைமடலை ஏடாகவும், செம்பஞ்சுக் குழம்பை மையாகவும், பித்திகை மலரின் மொட்டை எழுதுகோலாகவும் கொண்டு கடிதம் எழுதிய நிலையும் உண்டு.[119]

பனை ஓலை

கோலெழுத்து பனையோலைகளில் எழுதப்பட்டது. பனையோலையில் தேர்தல் வேட்பாளர் பெயர் எழுதப்பட்டதையும்,[120] அரசன் ஒருவன் தன் பகையரசனுக்கு அனுப்பிய சமாதானச் செய்தி ஓலையில் எழுதப்பட்டிருந்ததையும்[121] சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

துணி

துணிகளில் பெரும்பாலும் ஓவிய எழுத்துகளே எழுதப்பட்டன. பாண்டிமாதேவியின் படுக்கை மேல்விரிப்புத் துணியின்

117 '... ... ... நடுகல்,
பெயர்பயம் படரத் தோன்றுகுயில் எழுத்து' (அகம். 297.7 8)

118 'செல்லும் தேஎத்துப் பெயர்மருங் கறிமார்
கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த' (மலைபடு. 394-395)

119 சிலப். 8:45-55

120 கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்,
பொறிகண்டு அழிக்கும் ஆவண மாக்கள்' (அகம். 77-7-8)

121 'தூதுஒய் பார்ப்பான் மடிவெள் ளோலை' (அகம். 337:7)

மீது மான்வேட்டை ஆடுவது போன்ற காட்சியும்,[122] அவளது கட்டிலுக்கு மேலே கட்டியிருந்த மெழுகு பூசப்பட்ட துணியில் திங்கள் உரோகிணி மீனைத் தழுவும் காட்சியும்[123] ஓவியமாகத் தீட்டப்பட்டிருந்தன இந்த ஓவியங்களை நாம் ஓவிய எழுத்து என்று கொள்ளமுடியாவிட்டாலும், அந்த ஓவியங்களும் கருத்தை வெளிப்படுத்தியவை ஆதலால் இவற்றைக் 'கருத்தோவியங்கள்' எனலாம்.

ஏறத்தாழக் கி.மு. 250-ல் உலகிலேயே முதன்முதலாகச் சீன மக்கள் மூங்கில் பொத்தகங்களில் மூங்கில் பேனாக்களைக் கொண்டு எழுதினார்கள் என்று கூறப்படுகிறது. அவர்கள் கி.மு. 209-ல் விலங்கின் மயிர்களாலான தூரியம்[124] கொண்டு எழுதினார்கள். கி.பி. 105-ல் பட்டுத் துணியில் எழுதினார்கள்; கி.பி. 150, 200-250, 400 ஆகிய ஆண்டுவாக்கில் காகிதம் செய்து பயன்படுத்தினார்கள்.[125] மேலைநாடுகளில் கி. மு. 5ஆம் நூற்றாண்டுக்கு முன்பே களிமண் ஏட்டுப் புத்தகங்களை எழுதப் பயன்படுத்தினார்கள். அந்தக் காலங்களிலெல்லாம் தமிழர்கள் பனையோலைகளில் எழுதிவந்தனர்.

சங்ககாலத்தில் பார்ப்பனர்கள் ஓதிவந்த வேதமொழி எழுத்துருவம் பெறாமலேயே இருந்தது என்பது சங்கப் பாடலில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.[126] இது சங்கப் பாடல்கள் எழுத்துருவம் பெற்றிருந்தன என்னும் உண்மையை வெளிப்படுத்துகிறது.

உலகில் பல்வேறு இடங்களில் பல்வேறு காலங்களில் பல்வேறு வகையான எழுத்துகள் தோன்றிவந்துள்ளன. அவை காலந்தோறும் உருமாறி வளர்ச்சி பெற்றுள்ளன. எழுத்தின் வளர்ச்சிக்கும் மாறுதலுக்கும் மனித நாகரிக வளர்ச்சியே மூல காரணமாகும். அதன் வழியேதான் மொழிவளர்ச்சி ஏற்பட்டது.

தமிழ்நாட்டில் இன்று கிடைத்துள்ள எழுத்துகளில் மிகப் பழமையானது 'தாமிழி' எழுத்தாகும். மீனாட்சிபுரம் முதலான இடங்களிலுள்ள மலைப் பொடவுப் பாறைகளில் அவை எழுதப்

---

122 நெடுநல். 128-129

123 ஷெ 159-163

124 *An Outline History of China*, Foreign Language Press, Peking, 1958, p.9

125 Ibid, p. 71

126 '... ... ... பார்ப்பன மகனே,
எழுதாக் கற்பின் நின்சொல் லுள்ளும்' (குறுந். 156:4-5)

பட்டுள்ளன. அந்தக் கல்வெட்டுகள் தமிழ்மொழியில் அக்காலத் தமிழ் எழுத்துகளில் எழுதப்பட்டுள்ளன. இந்த எழுத்துகள் கி.மு. 400-100 காலத்தைச் சேர்ந்தவை. உலகளவில் கிடைத்துள்ள பழைமையான எழுத்துகளின் காலத்தை இதனுடன் ஒப்பு நோக்கி இதன் பழைமையை உணரலாம்.[127] இன்று கிடைத்துள்ள எழுத்துகள் படவெழுத்து,[128] கருத்தெழுத்து,[129] அசையெழுத்து,[130] ஒலியெழுத்து[131] முதலான நிலைகளில் காணப்படுகின்றன.[132]

யானை, புலி, மீன் முதலான சின்னங்களுடன் இன்று தமிழ்நாட்டில் கிடைத்துள்ள நாணயங்கள் படவெழுத்தைக் கொண்டவை எனலாம். கொங்கர் புளியங்குளம் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள பொன்மதிப்புக் குறியீடுகளும், அழகர்மலைக் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ள கால மதிப்புக் குறியீடுகளும் கருத்தெழுத்து வகையைச் சேர்ந்தவை; மற்றும் தமிழ்நாட்டில் கிடைத்துள்ள பானைக்கீறல் குறிகளும்[133] இந்த வகையைச் சேர்ந்தவை. தமிழர் நாகரிகத்தின் முன்னோடியும், எழுத்துகளின் மூலமுமான சிந்துவெளி எழுத்துகள் அசையெழுத்து வகையின. பிற நிலையில் தமிழ்நாட்டில் ஏன் இந்தியா என்ற பரந்த அளவிலும்கூடக் கிடைத்துள்ள எழுத்துகள் எல்லாம் ஒலியெழுத்துகளே.

பழைமை

இந்திய வரலாற்று அடிப்படையில் காணும்போது நமக்குக் கிடைத்துள்ள எழுத்துகளில் பழைமையானவை அசோகன் கல்வெட்டுகளில் காணப்படுபவை. அசோகன் தன் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் புத்த நெறியைப் பின்பற்றி அதன் கொள்கைகளைப் பரப்புவதற்காகப் பாறைகளில் எழுதும்படி செய்துள்ளான். அந்த எழுத்துகள் பொதுவாக இந்தியா முழுவதும் குறிப்பாகத் தமிழ்நாடு நீங்கலாகக் காணப்படுவதோடு இலங்கையிலும் காணப்படுகின்றன. இந்தக் கல்வெட்டுகள் கி.மு. 3ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்தவை.

---

127 'கல்வெட்டுகள்' - மீனாட்சிபுரம் கல்வெட்டு

128 Pictogram

129 Ideogram

130 Syllabary

131 Phonetic characters

132 தேவநேயன், ஞா., 'தமிழ் வரலாறு' பக். 106 (இந்த எழுத்துகள் கி. மு.12,000 ஆண்டு முதல் ஒன்றன்பின் ஒன்றாகத் தமிழில் தோன்றி வளர்ந்தன என்று இவர் குறிப்பிடுகிறார்.)

133 'தொல்பழங்காலம்', பக். 321

பழங்கால எழுத்து வகைகள்[134]

எழுத்து வகை	நாடுகள்	காலம்
ஓவிய எழுத்து	எகிப்து	கி.மு. 4000
ஆப்பெழுத்து	சுமேரியன்	கி.மு. 2600 – 2500
('குன்னிஃபாம்' எழுத்து)	பாலினேசியன்	
(ஓவிய எழுத்து)	அஸ்ஸிரியன் எழுத்து	
ஆப்பெழுத்து	மெசபதோமியா	கி.மு. 1300 – 600
(ஓவிய எழுத்து)	பாபிலோனிய மொழியை மாற்றியமைத்த சுமேரிய மொழியில்	
ஆப்பெழுத்து (ஒலியெழுத்து)	பாபிலோனிய மொழி	கி.மு. 600 – 1
பழைய நடுநிலக் கடல் பகுதி எழுத்து	பழைய கிரீத்தியர் எழுத்து	கி.மு. 600 – 400
	சைப்பிரஸ் நாட்டார் எழுத்து	கி.மு. 7-5 நூற்றாண்டு
	ஹிட்டில் ஓவிய எழுத்து	கி.மு. 2000-ன் இடைப்பகுதி
	லைபியர் எழுத்து	கி.மு. 2 அல்லது 1 நூ.
சீன ஓவிய எழுத்து		கி.மு. 2000
சிந்துவெளி அசையெழுத்து		மு.கி. 2000 முதல் பகுதி
கரோஸ்தி எழுத்து	இந்தியாவுக்கு வடமேற்கில்	கி.மு. 3 — கி.மு. முதல் நூ.
தாமிழி எழுத்து	பிராகிருத மொழியில் (பட்டிப்புரோலு)	கி.மு. 400–100
தாமிழி எழுத்து	தமிழ்நாடு (தமிழ்மொழியில்)	கி.மு 400–100 (கி.மு. 5ஆம் நூ. என்பதே மிகப் பொருத்தம்)
அமெரிக்க எழுத்துகள்	அஸ்டாஸ் எழுத்து	கி. பி. 6, 7 அ. 12 நூ.
வட ஆசிய எழுத்துகள்		கி. பி. 3 – 10 நூ.

134 Jensen, *Sign, Symbol and Scripts*, p. 162

இந்த எழுத்துகளே இந்தியாவில் கிடைத்துள்ள எழுத்துகளில் காலத்தால் முற்பட்டவை என்று கூறப்படுகிறது. ஆனால், இந்த எழுத்துகளுக்கும் முற்பட்ட கால எழுத்துகள் தமிழ்நாட்டுக் கற்குகைகளில் காணப்படுகின்றன. இவை அசோகன் பயன்படுத்திய அதே வகையான எழுத்துகளைப்போல் காணப்படுகின்றன. இந்த எழுத்துகளையும் அசோகன் கல்வெட்டில் காணப்படும் எழுத்துகளையும் முதலில் 'பிராமி' எழுத்துகள் என்றே குறிப்பிட்டு வந்தனர்.

தமிழ்நாட்டில் உள்ள பிராமி எழுத்துகளில் தமிழ்மொழிக்கே உரிய சிறப்பு எழுத்தான ழ, ற, ன, எ, ஒ ஆகியவை பல்வேறு நிலைகளில் காணப்படுகின்றன. வடஇந்தியாவில் உள்ள பிராமி எழுத்துகளில் வடமொழிக்கே உரிய சிறப்பு எழுத்துகளான வல்லின மெய்யில் நான்கு வர்க்க எழுத்துகள் உள்ளன. வட இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் உள்ள பிராமி எழுத்துகளின் பொதுத் தன்மையையும் சிறப்புத் தன்மையையும் எண்ணிப் பார்க்கும்போது பிராமி எழுத்து என்பது ஒரு மொழிக்கே உரிய எழுத்து அன்று என்பது தெரியவரும். (வடமொழி என்பது சமஸ்கிருதத்தையோ, தமிழ் என்பது இப்போது வழங்கும் தமிழ் மொழி ஒன்றை மட்டுமோ குறிக்கும் நிலையில் இங்கு இந்தச் சொற்கள் பயன்படுத்தப்படவில்லை. வடமொழி என்பது அக்காலத்தில் வடஇந்தியாவில் வழங்கிய மொழிகளையும், தமிழ் என்பது அக்காலத்தில் தென்னிந்தியாவில் வழங்கிய மொழிகளையும் குறிக்கும் வகையில் இங்குக் கையாளப்பட்டுள்ளன.) அது இந்திய நிலப்பரப்பு முழுவதிலும் வழங்கப்பட்ட ஒருவகை எழுத்து என்பது தெரியவரும். இந்தப் பிராமி எழுத்தைத் தவிர அக்காலத்தில் வேறு எழுத்து வடிவங்கள் இருந்தன என்பதைத் தெளிவாகக் காட்டத்தக்க வகையில் இதுவரையில் சான்றுகள் கிடைக்கவில்லை.

தமிழ்நாட்டில் கிடைத்துள்ள பிராமி எழுத்துகளில் தமிழ் மொழிக்கே உரிய சிறப்பு எழுத்துகள் இடம்பெற்றுள்ளன என்று கூறினோம். இதனால் இந்த எழுத்துகளை அக்கால மக்கள் 'தாமிழி' அல்லது 'திரவிடி' என்னும் தனிப்பெயரால் வழங்கி வந்துள்ளனர்.

பிராமி, தாமிழி என்னும் எழுத்துக் குறியீடுகள் இகர இறுதியைப் பெற்றுள்ளன. இந்த இகர இறுதி, பெண்பால் இகர இறுதியாகத் தமிழ்மொழி நெறியில் இரண்டு சொற்களுக்கும்

அமைந்துள்ளது. (வடமொழி நெறியில் அமையவில்லை.) எனவே, இந்த இரண்டு குறியீடுகளையும் இட்டு வழங்கியவர்கள் தமிழர்களே என்பது தெரிகிறது. (தாமிழி தமிழ்நாட்டு எழுத்துகளுக்குத் தமிழர் இட்டு வழங்கிய வழக்கு. திரவிடி—திரவிட மொழி எழுத்துகளுக்குப் பிறர் இட்டு வழங்கிய வழக்கு. பிராமி—வடநாட்டு எழுத்துகளுக்குத் தமிழர் இட்ட வழக்குப் பெயர்.)

இதுவரை கிடைத்துள்ள பிராமி எழுத்துகள் மூன்று மொழிகளில் எழுதப்பட்டுள்ள நிலையைக் காண்கிறோம். தமிழ், பாலி, பிராகிருதம் என்னும் இந்த மூன்றுமே அந்த மொழிகள். பழமையான மொழி என்று கூறப்படும் ரிக்வேத சமஸ்கிருத மொழியில் ஒரு கல்வெட்டுக்கூட இல்லை என்பதையும், அந்த மொழியில் உள்ள கல்வெட்டுகள் கி.பி. 3ஆம் நூற்றாண்டிலிருந்துதான் தோன்றியுள்ளன என்பதையும் நாம் இவ்விடத்தில் நினைவுகூர வேண்டும்.

அசோகனது பிராமி எழுத்துகளைக்காட்டிலும் தமிழ்நாட்டிலுள்ள 'தாமிழி' எழுத்துகள் பழைமையானவை என்று கூறினோம். இந்த உண்மை எழுத்து அமைவால் தெளிவாகும் ஒன்றாகும்.

இந்த எழுத்து அசோகன் கல்வெட்டுகளிலும், தமிழ்நாட்டிலுள்ள புகழூர், ஆறுநாட்டார் மலைக்குகையில் உள்ள கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன. இக் குறியைக் 'க' என்று படிக்கவேண்டும்.

தமிழ்நாட்டில் இந்த எழுத்தின் பழைமையான மற்றொரு வடிவம் உள்ளது. அது மதுரை மாவட்டப் பகுதிகளில் மீனாட்சிபுரம் முதலான இடங்களில் உள்ள கல்வெட்டுகளில் காணப்படுகிறது. அந்த வடிவம் இவ்வாறு இருக்கும். (பக். 390-ல் முதல் 2 எழுத்துகளின் வடிவம்.)

இதனையும் 'க' என்றே படிக்கவேண்டும். ஆறுநாட்டார் மலை எழுத்து அசோகன் கல்வெட்டெழுத்து ஆகியவற்றில் இந்த வடிவம் காணப்படுமானால் இதனைக் 'க' என்று படிக்கக் கூடாது; 'கா' என்று படிக்கவேண்டும். அசோகன் கல்வெட்டு கி.மு. 3ஆம் நூற்றாண்டு. ஆறுநாட்டார் மலைக் கல்வெட்டு கி.பி. 100-150 (ஆறுநாட்டார் மலைக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 3 சேர அரசர்களில் கடைசி அரசன் 'இளங்கடுங்கோ.' இவனது காலத்தைச் சேர அரசர்களின் காலநிரல் பகுதியில்

காணவாம்). எனவே, கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 2ஆம் நூற்றாண்டுவரை வழக்கத்தில் இருந்த ஒருவகை எழுத்து களையும், அதற்கு முந்திய ஆண்டுகளில் வழக்கத்தில் இருந்த ஒருவகை எழுத்துகளையும் நாம் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில் காணமுடிகிறது. ஆதலால், தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகள் தாம் இதுவரை இந்தியாவில் கிடைத்துள்ள எழுத்து வடிவங் களில் பழைமையானவை என்பது தெரிகிறது.

இந்த எழுத்துகளைக்கொண்டு செய்தியை விளக்கப் பயன் படுத்தப்பட்டுள்ள மொழி 'தமிழ்மொழி' என்பதை மட்டும் இவ் விடத்தில் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். இந்தத்



வரைபடம் 1

தமிழ்மொழியின் எழுத்துகளில், தமிழ் எழுத்துகளின் பல சிறப்புக் கூறுகள் உள்ளன. இவற்றைப் படத்தில் காணலாம்.

1. ழகரம்: தமிழ்மொழியின் சிறப்பெழுத்தான இதன் வரிசை எழுத்துகள் முன்பக்கத்தில் கண்டவாறு குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

2. றகரம்: இந்தச் சிறப்பெழுத்தின் பிற உயிரின எழுத்துகளும் முன்பக்கத்தில் கண்டவாறு குறிக்கப்பட்டுள்ளன.

3. னகரம்: இந்தச் சிறப்பெழுத்தின் பிற உயிரின எழுத்துகளும் தாமிழிக் கல்வெட்டுகளில் உள்ளன.

4. ஒகரம், ஓகாரம்—எகரம், ஏகாரம் இந்த உயிர் எழுத்துகள் உயிர்மெய் எழுத்து வடிவில் இடம்பெறும்போது வேறுபாடு தோன்றத் தாமிழி எழுத்துகளில் வருகின்றன.

வரைபடம் 2

[இவ்வாறு காட்டப்பட்டுள்ள இரண்டு வடிவங்களில் முதலில் உள்ளதைக் 'கொ' என்றும் இரண்டாவதாக உள்ளதைக் 'கோ' என்றும் படிக்கவேண்டும். வடமொழியில் 'கொ' என்னும் எழுத்து இல்லை. எனவே, இந்த எழுத்துகள் தமிழ் எழுத்துகளே என்பது தெளிவாகிறது.]

இதேபோன்று வடமொழிக்கே உரிய சிறப்பு எழுத்துகளும் அம்மொழிக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன என்று குறிப்பிட்டோம். எனவே, இந்தப் பொது எழுத்து எந்த மொழிக்கு உரியது என்று கூறவியலாத நிலை உள்ளது. எனினும், தமிழ் எழுத்துகளே இவை என்றும், அசோகன் காலத்திற்குமுன் இந்த எழுத்துமுறை இந்திய நிலப்பரப்பு முழுவதும் பரவியிருந்தது என்றும் நாம் கொள்ள இடமுண்டு; கொள்வதற்கான காரணங்கள் வருமாறு:

1. மேலைநாட்டு ஆரிய மொழிகளில் குறில்நெடில் வேறுபாடுகள் இல்லை. கீழைநாட்டு ஆரிய மொழியான சமஸ்கிருதத்தில் குறில் நெடில் வேறுபாடுகள் உள்ளன. எனவே, சமஸ்கிருதம் தன் தாயகத்திலிருந்து (மைய ஆசியா) வரும்போது குறில் நெடில் எழுத்துகளை ஒலிக்கத் தெரியாமல் இருந்து, இந்தியாவுக்கு வந்தபின் இந்தியாவில் அப்போது வழங்கிவந்த மொழி

யிடமிருந்து (தமிழ்) குறில் நெடில் ஒலிகளைக் கற்றுக்கொண்டது. (ஆனால் தமிழ், ரிக்வேத மொழியின் நான்கு வர்க்க ஒலிகளை ஏற்க மறுத்துவிட்டது.) பிராமி எழுத்துகளில் குறில்நெடில் வேறுபாட்டைக் காட்டத் தனித்தனி எழுத்துகள் இருக்கின்றன. எனவே, பிராமி எழுத்தின் பிறப்பிடம் தமிழ் எனலாம்.

2. மேலே கூறியவாறு பிராமி எழுத்தின் மிகப் பழைமை யான வடிவம் தமிழ்நாட்டிலேயே உள்ளது.

3. தமிழ்நாட்டில் உள்ள எழுத்துகள் சமணர் குகைகளில் உள்ளன. அசோகன் எழுத்துகள் பௌத்தக் கொள்கைகளைப் பரப்புவன. பௌத்தமதத்தைக் காட்டிலும் சமணம் பழைமை யானது.

4. தமிழ்நாட்டிலுள்ள சமணர் குகைகளில் இன்னான் இன்ன வனுக்கு இன்னது செய்தான் என்னும் குறிப்புகளே உள்ளன. இந்த நிலைக்கு மாறாகக் கொள்கைகளையே விரிவாக எழுதி வைத்த பாங்கை அசோகன் எழுத்துகளில் காணலாம். பெயர் எழுதும் நிலையின் வளர்ச்சியே கொள்கை எழுதும் நிலை என்று கருதலாம்.

இவற்றால் பிராமி எழுத்துகள் தமிழ்மொழிக்கே உரியன என்றும், பாலி மொழியும், பிராகிருத மொழியும் தமிழ் எழுத்து களைக் கடன்வாங்கிக் கொண்டன என்றும், சமஸ்கிருதம் இந்தப் பிராமி எழுத்துகள் வழங்கப்பட்ட காலத்தில் செல்வாக்குப் பெற வில்லை என்றும், பிராமி எழுத்து வளர்ச்சிபெற்று வேறு வடிவங் களாக ஆங்காங்கே திரிந்தபோதுதான் சமஸ்கிருதம் எழுத்து உருவம் பெற்றது என்றும் தெரிகின்றது.

இவ்வாறு தமிழர்களது எழுத்துகளைப்பற்றிச் சங்கப் பாடல் களிலிருந்தும் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளிலிருந்தும் தெரிய வருவதோடு மட்டுமன்றித் தொல்காப்பியத்திலிருந்து தமிழ் எழுத்தின் உருவமைப்புகளும் தெரியவருகின்றன.

ஆய்த எழுத்து இன்று எழுதப்படுவதுபோல மூன்று புள்ளி யிட்டு எழுதப்பெறும்.[136] அளபெடை, அளபெடுக்கும் உயிர் எழுத்தைக் கூட்டி எழுதப்படும்.[137] மகரம் குறுகும்போது உள்ளே

136 '... ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும்' (தொல், எழுத்து. 2)

137 'நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்.' (ஷை 6)

புள்ளியிட்டு எழுதப்பெறும்.[138] மெய்யெழுத்துகள் எல்லாம் புள்ளிவைத்து எழுதப்படும்.[139] எ, ஒ ஆகிய இரண்டு குறில் எழுத்துகளும் அவ்வாறே புள்ளியிட்டு எழுதப்பெறும்.[140] புள்ளி யில்லாவிட்டால் மெய்யெழுத்துகள் அகர உயிர் சேர்ந்த உயிர் ஆகப் படிக்கப்படும். பிற உயிரோடு மெய்யெழுத்துச் சேரும் போது உருவம் மாற்றி எழுதப்படும்.[141]

இவற்றால் தமிழ் எழுத்தின் தொன்மையைத் தெளிவாக அறியலாம்.

அசோகன் காலத்திற்கு முந்திய தமிழ் எழுத்து

அசோகன் காலம் கி.மு. 273-236. இந்தியாவில் கிடைத்துள்ள பழமையான எழுத்துகளில் (கி.மு. மூன்றாம் நூற்றாண்டு). அசோகன் கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளே மிகப் பழமை யானவை என்று கருதப்பட்டுவருகிறது.

அசோகன் பௌத்த மதக் கொள்கைகளைக் கற்பாறை களிலும் கல்தூண்களிலும் பொறித்துவைத்தான். அதற்கு அவன் பயன்படுத்திய எழுத்துகள் 'பிராமி' எழுத்துகள் என்று அழைக் கப்படுகின்றன.

இதுவரை கிடைத்துள்ள பிராமி எழுத்துகள் மூன்று மொழி களுக்குப் பொதுவானவையாய் விளங்குகின்றன.

பிராகிருதம் — தமிழ்நாட்டுக்கு வடபால் உள்ளது — அசோகன் காலத்தது.

தமிழ் — தமிழ்நாட்டில் உள்ளது.

பாலி — இலங்கையில் உள்ளது.

(சமஸ்கிருத மொழியில் உள்ள எழுத்துகள் கி.பி. முதல் நூற் றாண்டுதொட்டே கிடைக்கின்றன. எழுத்து பிராமி அன்று.)

---

138 'அரையளபு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகும் தெரியும் காலை' (தொல். எழுத்து. 13)
'உட்பெறு புள்ளி உருவா கும்மே' (ஷ 14)

139 'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்' (ஷ 15)

140 'எகர ஒகரத் தியற்கையும் அற்றே' (ஷ 16)

141 'புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை உயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல உயிர்த்த லாறே.' (ஷ 17)

கொடுக்கப்பட்டுள்ள படத்தில் உள்ள எழுத்துகள் பிராமி எழுத்துகள். அவற்றை இவ்வாறு படிக்கவேண்டும்.



வரைபடம் 3

1,2,	—	க
3	—	கா
4	—	கொ
5	—	கோ
6	—	ழ
7	—	ற
8	—	ன

அவற்றுள் 6,7,8 எண்ணிட்ட மூன்று எழுத்துகளும் தமிழ் மொழிக்கு மட்டுமே (சில சில திராவிட மொழிகளுக்கும்) உரியவை என்பது தெரிந்ததே.

இதேபோல் அசோகன் கல்வெட்டுகளில் வடமொழிக்கு மட்டுமே உரிய சிறப்பு எழுத்துகள் காணப்படுகின்றன.

இந்த உண்மைகள் இந்த எழுத்துகளுக்கு உரியவர் யார் என்று தெளிவதற்குத் தடையாக உள்ளன.

படத்தில் 1 எண்ணிட்டது போன்ற எழுத்தும், அந்த அமைப்பில் உள்ள பிற எல்லா எழுத்துகளும் அசோகன் கல்வெட்டிலும், தமிழ்நாட்டிலுள்ள புகளூர், ஆறுநாட்டார் மலைக் குகைக் கல்வெட்டிலும் காணப்படுகின்றன. அசோகன் கல்வெட்டுகள் கி.மு. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. புகளூர்க்

கல்வெட்டு கி.பி. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இவற்றில் உள்ள எழுத்து அமைப்புகள் ஒருவகையின. கிடைத்துள்ள எழுத்துகளையும் காலச் சான்றுகளையும் நோக்கும்போது இந்த எழுத்தமைப்புகளின் காலம் கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 2ஆம் நூற்றாண்டு வரை எனலாம்.

தமிழ்நாட்டில் மீனாட்சிபுரம் (மதுரை மாவட்டம்) முதலான இடங்களில் உள்ள கல்வெட்டுகளில் பிராமி எழுத்துகளில் வேறொரு எழுத்தமைப்புக் காணப்படுகிறது. படத்தில் 1 எண்ணிட்ட எழுத்து அந்த அமைப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ளது.

இந்த அமைப்பினைக்கொண்ட எழுத்து அசோகன் கல்வெட்டிலோ, புகழூர்க் கல்வெட்டிலோ காணப்படுமானால், அதனைக் 'க' என்று படிக்காமல் 'கா' என்று படிக்கவேண்டும். எழுத்தமைப்புகளில் உள்ள இந்த வேறுபாட்டைத் திரு. ஐராவதம் மகாதேவன், நாகசாமி, மயிலை சீனி. வேங்கடசாமி முதலான பல அறிஞர்களும் பிற தொல்பொருள் துறை அறிஞர்களும் கண்டறிந்து செவ்விய முறையில் படித்துள்ளனர். அவர்கள் 1, எண்ணிட்ட எழுத்தின் அமைப்புமுறைக்குத் 'தாமிழி' என்று பெயர் சூட்டியும் மகிழ்ந்துள்ளனர். இந்தத் 'தாமிழி' எழுத்து முறை அசோகன் எழுத்துகளில் இல்லை.

தாமிழி எழுத்துமுறைப் புகழூர்ப் 'பிராமி' எழுத்துமுறைக்கு முந்தியது என்பது இதுவரை எல்லாராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட உண்மை. இதுவும் புகழூர்ப்பிராமி எழுத்து முறையும் என்பதை எழுத்துகளை ஒப்பிட்டுப் பார்த்து அறியலாம். எனவே, தாமிழி எழுத்துமுறை அசோகன் எழுத்துமுறைக்கு முந்தியது என்பது தெளிவாகிறது.

ஆகவே, தமிழ்நாட்டில் மீனாட்சிபுரம் முதலான இடங்களில் காணப்படும் 'தாமிழி' எழுத்து கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்கு முந்தியது என்பது வெளிச்சம். இதனால் இந்தியாவில் கிடைத்துள்ள பழைமையான எழுத்துகளுக்கெல்லாம் காலத்தால் முந்தியது தமிழ்நாட்டிலுள்ள 'தாமிழி' எழுத்துகள் என்னும் உண்மை பெறப்படுகிறது.

இந்தத் தொன்மையான எழுத்துமுறை தமிழ்மொழியில் உள்ளதாலும் பிற மொழிகளில் இல்லாததாலும் இந்த எழுத்து

கள் தமிழ்மொழிக்கே உரியவை என்றும், பிறமொழிகள் தமிழ் மொழியிடமிருந்து கற்றுக்கொண்டன என்பதும் தெளிவாகின்றன.

இந்தத் தொன்மையான எழுத்துகள் சமணர் குகைகளில் உள்ளன. சமணரின் 24ஆவது தீர்த்தங்கரராகிய வர்த்தமான மகாவீரர் கி.மு. 6ஆம் நூற்றாண்டினர். இவரது காலத்தை அடுத்து அசோகன் காலத்திற்கு முன்பே தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்ற சமணத்தின் தாக்குதலே இந்த எழுத்துகளைப் பின்பற்றின.

திரு. ஐராவதம் மகாதேவன் கோட்பாடு ஏற்றுக்கொள்ளப் பட்டுச் சிந்துவெளி எழுத்துகள் பிராமி எழுத்துகளின் மூலங்கள் என்பது தெளிவாகுமானால், சிந்துவெளி எழுத்துகளில் அடுத்த வளர்ச்சியில் கிடைத்துள்ள எழுத்து 'தாமிழி' எழுத்து என்றும், அதன் பின்னர்த் தோன்றியது அசோகன் 'பிராமி' எழுத்து என்றும் மேலும் வலிமையுடன் தெளிவுபெறும்.

இலக்கியக் கலை

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், களவழி ஆகியவற்றைச் சங்ககால நூல்கள் என்று எடுத்துக்கொண்டுள்ளோம். இவற்றிற்கெல்லாம் காலத்தால் முந்திய தொல்காப்பியத்தையும் சங்ககால நூலாகக் கொண்டுள்ளோம். மணிமேகலை, முத்தொள்ளாயிரம் ஆகிய நூல்கள் தோன்றிய காலம்பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவிவந்தபோதிலும், அவற்றில் கூறப்படும் செய்திகள் சங்ககால வரலாற்று நிகழ்ச்சிகளோடு மட்டும் தொடர்புடையனவாகக் காணப்படுவதால் அவற்றையும் சங்ககால வரலாற்றுக்கு உதவும் சான்றாகவே கொள்கிறோம். இந்த நோக்கில் இந்த மூன்று நூல்களும் தோன்றிய காலம் சங்ககாலம் என்று நாம் எல்லை வகுத்துக்கொண்ட கி.பி. 250-க்கு முற்பட்டவையாயின் அவற்றைச் சங்ககால வரலாற்றுக்கான அகச்சான்றுகள் எனக் கொள்ளுதல் பொருந்தும். இந்த நூல்களை எல்லாம் ஒன்றுதிரட்டி எண்ணி, இலக்கியக்கலை சங்ககாலத்தில் எத்தகைய நிலையினைப் பெற்றிருந்தது எனக் காணலாம்.

தொல்காப்பியத்தில் ஏழு வகையான இலக்கியங்கள் பாகுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன. பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பவை அந்த ஏழு வகையான

இலக்கியங்கள்.[142] 'பாட்டு' என்பது 'பத்துப்பாட்டு' நூலில் உள்ள பாட்டுகளைப் போன்ற பாடல்கள். 'உரை' என்பது உரை நடை நூல்களை உணர்த்தும். இறையனார் களவியல் நூலுக்கு அமைந்த உரைபோல அக்காலத்தில் வேறு உரைநூல்கள் இருந்து அவற்றைத் தொல்காப்பியர் 'உரை' என்று குறித்தாரோ என்றும் எண்ண வேண்டியுள்ளது. நூல் என்னும் இலக்கிய வகையாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவது இலக்கண நூல்களை ஆகும். இந்த மூன்று பாகுபாட்டுக் குறியீடுகளும் செய்யுளின் வடிவ அமைதி நோக்கி அமைந்தவை. ஏனைய நான்கு வகைப் பாகுபாடுகளும் செய்யுளில் அமைந்துள்ள பொருளை அடிப்படையாகக் கொண்டவை.

'வாயுறை' என்னும் சொல் 'மருந்து' என்னும் பொருளைத் தரும். மருந்துபோல வாழ்க்கைக்குப் பயன்படும் கருத்துகளைக் கூறும் நூல் வாய்மொழி என்னும் வகையைச் சாரும். திருக்குறளை இந்த வகையான நூல் எனலாம். 'பிசி' என்பது விடுகதைகளைக் கொண்ட நூல். 'அங்கதம்' என்பது ஒருவனை இழித்துப் பேசும் ஒருவகை மொழிக்கலை. இதில் ஒருவனைப் பழிப்பது போலப் புகழ்வதும், வெளிப்படையாகக் கூறலும், மறைமுகமாகக் கூறலும் நிகழும். 'முதுசொல்' என்பது பழமொழிகளைக் கூறும் செய்யுள் வகை. பழமொழி நானூறு என்னும் பிற்கால நூலை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். விடுகதைச் செய்யுளைக் கொண்ட பிசிநூலும், அங்கதப் பொருளைக் கொண்ட செய்யுள் நூலும் எடுத்துக்காட்டாகத் தரும் அளவுக்குக்கூட நமக்குக் கிடைக்கவில்லை.

இவையேயன்றித் தொல்காப்பியர் 'அந்தணர் மறை', 'நரம்பின் மறை', 'மந்திரம்' முதலான நூல்களைப்பற்றியும் குறிப்பிட்டுள்ளார். செய்யுளின் வடிவ உட்பிரிவு வகைகளாக ஆசிரியம், வெண்பா ஆகிய இரண்டு வகைகளைக் காட்டுகிறார். கலிப்பா, வெண்பாவைப் போன்ற நடையினை உடையது என்றும், வஞ்சிப்பா, ஆசிரியப்பா போன்ற நடையினை உடையதென்றும் அவர் குறிப்பிடுகிறார். மற்றும் மருட்பா, பரிபாடல், பண்ணத்தி ஆகிய பாடல் வகைகளையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

142 'பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்.' (தொல் பொருள். செய். 75)

செய்யுள் நோக்கிலும், செய்யுளின் உட்பிரிவு நோக்கிலும் மேலே காட்டப்பட்ட வகைகளைத் தவிர, செய்யுளால் அமைந்த நூலை முழுமையான அளவில் நோக்கி அவற்றின் பொருள் அமைதிகொண்டு எட்டுவகையான வனப்பின்கீழ்க் காட்டியுள்ளார். அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்பவை அவர் குறிப்பிடும் எட்டுவகை இலக்கியங்களாகும்.[143]

இந்த இலக்கியங்களில் காணப்படும் மொழிநடையைக் கருத்தில்கொண்டு 20 வகையான வண்ணங்களையும் அவர் விளக்கிச் சென்றுள்ளார்.[144] இவையெல்லாம் முன்னோர் வரையறுத்துத் தந்துள்ள சங்ககால இலக்கிய வகைகள். இனிச் சங்ககால இலக்கியங்கள் என்று நாம் எடுத்துக்கொண்டவற்றுள் காணப்படும் இலக்கியக் கலைப்பாங்குகளைக் காணலாம்.

வரையறுத்த எண்ணிக்கைகொண்ட பாடலாலான நூல்கள்

சங்கப் பாடல்களில் தனிப்பாடல்கள் மிகுதி. அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல் ஆகிய நூல்களில் உள்ள பாடல்கள் உதிரிப் பாடல்கள். பல்வேறு மன்னர்கள் பல்வேறு காலங்களில் பாடிய பாடல்களை ஒன்றுதிரட்டிப் பொருள் நோக்கிலும் அளவுநோக்கிலும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் தொகுக்கப்பட்ட பாடல்களால் ஆனவையே இந்த நூல்கள். இது சங்ககால இலக்கியங்களில் ஒருவகை.

தனிப்பாடல்களின் தொகுப்புப்போலவே பத்துப் பத்துப் பாடல்களின் தொகுப்பினைக் கொண்ட பாடல்களைத் திரட்டி ஒரு தொகை நூலாக்கிய இலக்கியமும் சங்ககாலத்தில் உண்டு. பதிற்றுப்பத்து என்னும் நூல் இந்தவகையில் அமைந்துள்ளது. ஒரு புலவர் ஓரரசன்மீது பத்துப் பாடல்கள் மட்டும் பாடியுள்ளார். இவ்வாறு பத்து அரசர்கள்மேல் பாடப்பட்ட நூறு பாடல்களைக் கொண்ட இலக்கிய வகைதான் இந்தப் பதிற்றுப்பத்து.

ஒரு தலைப்புக்குப் பத்துப் பாடல்கள் என்ற முறையில் பத்துத் தலைப்புகளில் ஒரு பொருளின்மேல் நூறு பாடல்கள் பாடித் தொகுக்கப்பட்டிருக்கும் இலக்கியக் கலைப்பாங்கை **ஐங்குறுநூறு** என்னும் தொகுப்பு நூலில் நாம் காணமுடிகிறது. இவ்வாறு ஐந்து திணைமீதும் ஐந்து புலவர்கள் பாடியுள்ள பாடல்களின் தொகுப்பே இந்த நூல்.

---

143 தொல். பொருள். செய். 227-34   144 ஷெ செய். 205

பத்துப் பத்துப் பாடல்களாகப் பாடும் இந்த இலக்கியக் கலை நுட்பத்தைத் திருக்குறள் நூலிலும் நாம் காணமுடிகிறது. ஆனால், நூறு என்னும் வரையறையோ ஆயிரம் என்னும் வரை யறையோ இதில் காணப்படவில்லை. 133 அதிகாரம், 1330 பாடல்கள் என்னும் அளவில் அதன் தொகைநிலை உள்ளது. ஐங்குறுநூற்றுப் பாடல்களை ஐந்து புலவர்கள் பாடியுள்ளனர். ஆனால், திருக்குறளை ஒருவரே பாடியுள்ளார்.

பத்துப் பத்துப் பாடல்களாகப் பாடும் இந்த இலக்கியக் கலை நுட்பத்தைப் பிற்கால நாலடியார் தொகுப்பு நூலிலும் காணலாம். நாலடியார் தொகுப்பு நூலிலுள்ள ஒவ்வொரு பாட லும் ஒவ்வொரு புலவரால் பாடப்பட்டு, இந்த இலக்கியக் கலை நுட்பத்தைப் பின்பற்றித் தொகுப்புப் பணி செய்யப்பட்ட தாகும். கி. பி. ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளிலும் இந்த இலக்கியக் கலை நுட்பம் நாயன்மார்களாலும், ஆழ்வார் களாலும் கடைப்பிடிக்கப்பட்டது. மேலும், இந்தக் கலை வளர்ச்சியுறும்போது பத்துப்பாட்டுப் போன்று 100 பாடல்கள் ஒருவன்மேல் பாடப்படும் பிள்ளைத்தமிழ் போன்ற இலக்கியங் களாக மலர்ந்தது.

ஒருதிணைப் பாடல் வகை

ஐங்குறுநூற்றுத் தொகுப்பில் ஒரு திணையின் பாடல்கள் எல்லாவற்றையும் ஒரே புலவர் பாடினார் என்றும், அதுவும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள பாடல்கள்தாம் பாடவேண்டும் என்று வரையறுத்துக்கொண்டு பாடியுள்ளார் என்றும் மேலே கண்டோம். அதேபோல் கலித்தொகை என்னும் தொகுப்பு நூலில் காணப்படும் ஒவ்வொரு திணைப் பாடல்கள் எல்லா வற்றையும் ஒரே புலவரே பாடியுள்ளார். ஆனால், இந்த நூலில் பாடல்களின் எண்ணிக்கையில் வரையறை காணப்படவில்லை. கலிப்பா என்னும் செய்யுள் வடிவில்தான் ஒப்புமை உண்டு. திருக்குறள் 100, 1000 என்பன போன்ற வரையறை இன்றி அமைந்திருப்பதுபோலக் கலித்தொகை 10 என்பதுபோல் எண்ணிக்கை வரையறையின்றி அமைந்துள்ளது. பிற்கால இலக் கியங்களில் ஒருதுறைக் கோவை முதலான நூல்களில் இந்த இலக்கியக் கலைநுட்பம் பின்பற்றப்பட்டுள்ளது.

இசைக்கலை

பதிற்றுப்பத்து நூலில் காணப்படும் ஒவ்வொரு பாடலும் இன்ன 'தூக்கு' வகையினைக் கொண்டது என்னும் குறிப்பினைக்

கொண்டுள்ளது; 'செந்தூக்கு', 'வஞ்சித்தூக்கு', 'செந்தூக்கும் வஞ்சித்தூக்கும்' என்பனபோன்ற இந்தத் தூக்குக் குறிப்புகள் பாடல் இசைத்துப் பாடவேண்டிய முறையைச் சுட்டுவன. பரிபாடலில் உள்ள ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு பயன் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் பாடலைப் பாடிய புலவர் ஒருவர், பின் இசை வகுத்துத் தந்தவர் மற்றொருவர். இக் காலத்துத் திரைப்படப் பாடல்களைப் பாடுவோரும் இசை யமைப்பாளரும் போன்று பரிபாடல் நூலில் காணப்படும் பாடல்கள் இசைக்கலைப் பாங்கைக் கொண்டுள்ளன. இந்தக் கலைமரபு பிற்காலத்தில் நாயன்மார், ஆழ்வார் பாடல்களுக்கு இசையமைக்கும் பாங்கில் பின்பற்றப்பட்டுள்ளன. எனினும், பரிபாடலுக்குப் பாடலாசிரியரும், இசையமைப்பாளரும் வெவ் வேறு ஆள் என்பதையும், ஆழ்வார் நாயன்மார் பாடல்களுக்கு, பாடல் இயற்றிய ஆசிரியர் பாடிய இசையே அவற்றிற்குரிய இசை யாகக் குறிக்கப்பட்டுள்ளது என்பதையும் நாம் நினைவில் நிறுத்தவேண்டும்.

தாழிசை அமைப்புக் கலை

ஒரு பொருள்மேல் ஒத்த வடிவமைதிகொண்ட பாடல்கள் மூன்றாக அடுக்கிப் பாடப்பெறுமாயின் அது தாழிசை எனப் படும். கலித்தொகையில் உள்ள பாடல்களிலும், சிலப்பதிகாரத் தில் கானல்வரி, குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை முதலான காதைகளிலும் இத்தகைய தாழிசைப் பாடல்களை நாம் காண முடிகிறது. இத்தகைய முறை பிற்காலத்தில் அருகிவிட்டது என்றே கூறவேண்டியுள்ளது. மூன்று அடுக்கு எண்ணிக்கை வரையறை சில கலித்தொகைப் பாடல்களிலும், சிலப்பதிகார ஊர்சூழ்வரியிலும் குறைந்தும் காணப்படுகின்றது இந்த மூன்று சுருக்கு முறைக்கும் முன்பு நாம் கண்ட பத்தடுக்கு முறைக்கும் ஒரு வகையில் தொடர்பு உண்டு.

கொச்சக அமைப்புக் கலை

கலித்தொகைப் பாடல்களில் சேலையில் கொய்சக மடிப்புப் போல் அமைந்துள்ள ஒருவகைப் பாடல் அமைப்புப் பகுதியை நாம் காணமுடிகிறது. இந்த அமைப்பு, நீரில் கல்லைப் போட் டால் தோன்றும் அலைகள் படிப்படியாக விரிந்தும், சிறுத்தும் செல்வதுபோல் அமைந்துள்ளது. இத்தகைய பாடற்கலைப் பாங்கும் பிற்காலத்தில் அருகிவிட்டது. சிலப்பதிகாரத்தில்கூட இத்தகைய அமைப்பு இல்லை.

முருகியல் அமைப்புக் கலை

மொழியில் காணப்படும் சுறுசுறுப்பான நடையமைப்பு என்று இந்த முருகியலைக் கூறலாம். கலித்தொகையிலும் சிலப்பதிகாரத்திலும் இத்தகைய மொழிநடையுள்ள பகுதிகள் உள்ளன. பிற்காலத்து (கி. பி. 15ஆம் நூற்றாண்டு) அருணகிரிநாதர் பாடல்களில் இந்த முருகியல் நடை இசையுடன் கலந்து ஏற்றம் பெற்றுத் திகழ்வதைக் காணலாம். இக்காலக் கீர்த்தனைப் பாடல்களில் சிலவற்றிலும் இதன் வளர்ச்சிக் கூறுகள் காணப்படுகின்றன.

தொகுத்துக் காட்டும் கலை

கலித்தொகை, பரிபாடல் நூல்களில் தொகுத்துக் காட்டும் இலக்கியக் கலை காணப்படுகிறது. 'சுரிதகம்' என்று பெயரிட்டு இந்தத் தொகுத்துக் காட்டும் உறுப்பை இலக்கண ஆசிரியர்கள் அழைப்பர். சிலப்பதிகார வரிப்பாடல்கள், குரவைப் பாடல்கள் முதலானவற்றிலும் இந்த அமைப்பு தனிப்பாடல்களுக்கு அமைந்த தொகுத்துச் சுட்டும் முறை என்னும் நிலையில் காணப்படுகின்றது. பதிற்றுப்பத்து நூலில் பதிகம் என்னும் பெயரால் பத்துப் பாடல்களைத் தொகுத்துச் சுட்டும் ஓர் இலக்கியக் கலை உறுப்புக் காணப்படுகிறது. இந்த அமைப்பின் வளர்ச்சிப் பாங்காகத் தேவாரப் பாடல்களும் (அப்பர் தேவாரம் நீங்கலாக) ஆழ்வார் பாடல்களும் அமைந்துள்ளன.

இயல் 7

இசைக்கலை

'அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்'[1]

எனக் கூறுகிறது தொல்காப்பியம். ஆகவே, இசையிலக்கணத்தி னடிப்படை இயலிலக்கணத்திலும் உரிய இடத்தே கூறப்பெற் றிருப்பது அறிந்துணரலாம். உலகில் எம்மொழியிலும் இலக்கியந் தோன்றி நெடுங்காலம் வழக்கில் இருந்தாலன்றி இலக்கணம் இயம்புதல் இயலாது என்பர்.

மொழியைச் செப்பமாகப் பொருளோடு ஒருவருக்கொருவர் நன்கு விளங்கிக்கொள்ளத் தக்கவாறு பேசும் வழக்கினைக் கொண்ட நெறி நாகரிகமுடைய மக்களிடத்தேதான் இயற்கலை யும், இசைக்கலையும், நாடகக்கலையும் இயற்கைப் பண்போடு நன்கு விளங்கும்.

'யாழினது இசைநூற் கண்ணும்'

எனும் உரையாசிரியர்களின் கருத்தினை உளங்கொளுமிடத்து இசைநூல்கள் தனித்தும் பல விளங்கின என்பது போதரும்.

'வடிம்பலம்ப நின்றானும் அன்றொருகால்
ஏழிசை நூல் சங்கத் திருந்தானும்'[2]

எனும் ஆன்றோர் வாக்கினை நுனித்தறியுமிடத்து ஒரு பாண்டிய மன்னன், ஏழிசைகளைப்பற்றிய கருத்துச்செறிந்து தனித்துப் பல நூல்கள் மட்டும் தொகுத்துவைத்த இசைத்தமிழ்ச் சங்கமொன் றில் காலத்தைக் கழித்தான் என்பதும் விளங்கும்; முத்தமிழினை யும் நன்காராய்ந்தோர் பாண்டிய மன்னர்கள் என்பதும் விளங்கும்.

ஓசையும் ஒலியும் இசைக்கலைக்கு அடிமனையாகும். சிறப் புடைய உயிர்களான மக்களினத்திற்கே நுட்பமான ஓசையுணர் வும் ஒலியுணர்வும் தோன்றுவதியல்பு. ஓசை, ஒலிவழியே எழுத்

---

1 தொல். எழுத்து. 33 2 நள. வெ.

தறிவும் இசையறிவும் தோன்றுகின்றன என்பதும் மூதறிஞர் உணர்ந்த நிலையாகும். ஒரு மனிதன் சிறப்புடையவனாகவிளங்கு வதற்கு, கால அளவோடு மொழியறிவும், இசையறிவும், ஓலி யறிவும், ஏனைய கலையறிவுமே காரணம் ஆகும். காரணங் கள் ஒருபுறமிருக்க, பெயரளவிற்கூடத் தமிழ் என்னும் சொல் லையும் இவ்வாறே எழுதியறியலாம். 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'[3] என்பதுமிலக்கணமே.

தமிழ்

இயல்	தமிழ்	இயற்றமிழ்
இசை	தமிழ்	இசைத்தமிழ்
நாடகம்	தமிழ்	நாடகத்தமிழ்
தமிழ்	இயல்	தமிழியல்
தமிழ்	இசை	தமிழிசை
தமிழ்	நாடகம்	தமிழ்நாடகம்

என அமைகின்றமை ஓர்க. இசைத்தமிழும் தமிழிசையும் மக்க ளின் பல்வேறு சூழ்நிலைகளில் தோன்றின; குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் திணைவகைகளிலும் தோன்றின.

தமிழ்மொழிபற்றிய வகையில் இயற்றமிழும், இலக்கியமும், இலக்கணமும் தோன்றித் திகழ்ந்த காலவரையறை என்பது நுண்மாண் நுழைபுலமுடையார்க்கே விளங்குமென்பது ஒருதலை. 'இசையொடு சிவணிய' என்பது இசையோடு பொருந்திய எனப் படுவதால் 'நரம்பின் மறை' எனப் பெயரிய பன்னூல்கள் இசைத் தமிழ் நூல்களாக விளங்கியிருத்தல் வேண்டும். முதல், இடை, கடை என்னும் முச்சங்கங்களிலும் ஆராய்ந்துணரப்பெற்றதும், அவ்வக்காலத்து மக்களிடையே வழக்கில் இருந்துவரப்பெற்றதும் ஆகிய முத்தமிழ் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனும் பாகுபாட்டில் நூல்கள் ஆக்கப்பெற்றன என்பது விளங்கும்.

சடப்பொருள்களாகிய திண்ம, நீர்ம, நொய்மப் பொருள் களின் வழியே ஓசை பரவும்; ஒலியும் அவ்வாறே. தமிழ்மொழியின் எழுத்துகள் நீண்டு ஒலிக்கத்தக்கன. அவ்வொலிப்பு, மக்கள் வாழ்வின் அமைப்பில் விளித்துக் கூறுகின்ற நிலையில் அறிந் துணரப் பெறுவதாகும். குறுகிய நிலையில் ஒலிப்பது என்பது மொழிப்பயிற்சிக் காலத்தேதான் என்பது வெளிப்படை. இளஞ் சிறார்களுக்குப் பயிற்றுவிக்கும்போழ்துகூட எழுத்துகள் நீண்டு ஒலிக்கத்தான் செய்யும். அவ்வாறான உயிரும், மெய்யும் நீண்டு

3 தொல். சொல். பெயர். 1

ஒலித்தல் யாழ் நூல் இடத்தன என்பது பழைய உரை. யாழும் குழலும் பண்டைய இசைத்தமிழ்க் கருவிகள். குழல் முந்தியது; யாழ் பிந்தியது.

குறிஞ்சி முறை பாடுங்கால் கபிலர் என்பார்,

'ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கில்
கோடை யவ்வளி குழலிசை யாக'[4]

என்றார். எயினந்தை மகனார் இளங்கீரனார்,

'ஆடமைத் தும்பி குயின்ற
அகலா அந்துளை கோடை முகத்தலின்'[5]

என்றார். தமிழகத்து முல்லைநில மக்களாகிய ஆயர்பெருமக்கள் ஆநிரை மேய்க்கப் போந்து, காட்டில் தங்கி இன்புறுங்காலை, தும்பி எனப்படும் ஒருவகை வண்டுகளால் இயல்பாக துளைக்கப் பட்ட கழைகளின்வழி எழும் ஒலியைச் செவிமடுத்து நாளும் நாளும் உணர்ந்துவந்த பெரும் உணர்வால் ஓர்ந்தறிந்து அவ் வொலியின் நினைவின் விளைவாகவே சின்னஞ்சிறு மூங்கில் துண்டுகள் (கழைத்துண்டுகள்) நறுக்கியெடுத்து துளை இட்டுச் சிறியதும் பெரியதுமாய கருவிகளைக் கண்டனர்; வாய்வைத்து ஊதி மகிழ்ந்தனர். முதன்முதல் அவை 'தூம்பு' எனப்பட்டன. 'கழைவளர் தூம்பு' எனவும் கூறப்பெற்றன. அந்தத் தூம்புக் குழற்கருவிகள் வாய் வைத்தூதும் துளை மட்டுமே உடையவை; விரல் உளர் துளை இல்லாதவை என அறிதல் வேண்டும். தூம்பு என்னும் சொல்லின் பொருள், உள்ளே பொய்யானது எனவும், தூம்பு எனப்பட்ட கருவியொன்று இளி என்ற பண்ணோசையை உடையது எனவும் சங்ககாலப் புலவர் பெருமக்களாலேயே நன்கு தெளிவுறுத்தப்பெற்றுள்ளது.

தூம்பினைப் பருமனாகவும் குறுமனாகவும் செய்த நிலையில் நீட்சி, வளைவு என்ற நிலையிலும் ஆக்கி ஊதிமகிழ்ந்து பழை யோர் விரலுளர் துளையுடனும் சிறு கழைத்துண்டினை ஆக்கவே குழற்கருவி செப்பமாகவும், வல்லிசைகளை ஒலிக்கத்தக்கதாகவும் அமைந்துவரலாயிற்று; அதை ஊதுகின்ற முறையிலும், காற்றுக் கொடுக்கும் நிலை, அழுத்தம், மென்மை எனும் உணர்வாலும் தெளிவுறக் கேட்கத்தக்கதாயிற்று.

குழல், குழல்வகை, குழற்கருவிகள், குறுங்குழல், குறுவங்கியம், நெடுவங்கியம், பெருவங்கியம் எனப் பெயர் முறைகளும்

4 அகம். 82:1-2 5 அடி 225:5-6

தோன்றின. அவையும் பலவே. கொன்றைக் குழல், ஆம்பற் குழல், குமுதக் குழல் எனவும் பலவே. இக்காலத்துங்கூடத் தமிழகத்துக் குழற்கருவிகள் பற்பல அமைதியில் இருப்பதனை யறியலாம்.

மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி இவற்றால் குழற்கருவிகள் செய்தல்வேண்டும் என்பது மரபு. இவற்றுள் மூங்கிலாற் செய்வது உத்தமம் எனப்படும்.

புழையும் குழலும் துளையுடைப் பொருளே. மூங்கிலாற் செய்த குழலே வேய்ங்குழல் எனப்படும். 'வங்கியம்' எனவும் குழற்கருவிகளுக்குப் பெயர் கூறுவர்.

'வாரி வங்கிய மற்றிவை இசைக் குழல்' எனவும் கூறுவர். வங்கியம், கொம்பு, தாரை, குழல், காளம், சங்கு எனப்படும் கருவிகள் பற்பலவாம். தமிழகத்தில் முல்லைநிலத்து ஆயர் மக்களே முதன்முதல் குழற்கருவியைக் கண்டனர் என்னும் வரலாற்றினைப் பெரும்பாணாற்றுப்படையில் கடியலூர் உருத்திரங் கண்ணனார்,

'ஒன்றமர் உடுக்கைக் கூழார் இடையன்
கன்றமர் நிரையொடு கானத் தல்கி
அந்நுண் அவிர்புகை கமழக் கைமுயன்று
ஞெலிகோற் கொண்ட பெருவிறல் ஞெகிழிச்
செந்தீத் தோட்ட கருந்துளைக் குழல்......' [6]

என எடுத்துக் காட்டினார்.

இத்தகைய குழற்கருவிகளும் ஐம்புழைக் குழல், ஏழ்புழைக் குழல் என இரு வகைப்படும் என்பதை 'ஏழ்புழை ஐம்புழை யாழிசைகேழ்த் தன்ன'[7] என்று நல்லந்துவனார் பாடினார். இப் பகுதிக்கு உரை, 'ஏழு துளையான வங்கியத்தும், ஐந்து துளையான வங்கியத்தும், யாழிலும் பிறந்த இசை சுருதி யொத்தது எனக் கூறப்பட்டது. இவ் வங்கியத்துள் ஐம்புழைக் குழலே முந்தியது; ஏழ்புழைக் குழல் பிந்தியது. இவையும் பலவே. மிக்க பிற்காலத்திய வகையில் தமிழகத்தில் விளங்கிய ஏழ்புழைக் குழலின் இலக்கணம் பொதுவான முறையில் அடியார்க்குநல்லாரால் நன்கு விளக்கப்பட்டுள்ளது. அவ் விளக்கம் சில பழைய மரபினையும் காட்டவல்லது.

---

6 பெரும்பாண். 175-179 7 பரிபா. 8:22

ஒருசில விளக்கம் வருமாறு:

'குழல்—வங்கியம். அதற்கு மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி என ஐந்துமாம். மூங்கிலில் செய்வது உத்தமம். இதன் பிண்டியிலக்கணம். நீளம் இருபது விரல்; சுற்றளவு நாலரை விரல். இது துளையிடுமிடத்து, நெல்லரிசியில் ஒரு பாதி மரநிறுத்திக் கடைந்து வெண்கலத்தாலே அணைசு பண்ணி இடமுகத்தை அடைத்து வலமுகம் வெளியாக விடப் படும்.' இத்தகைய குழற்கருவிகள் பலவற்றாலும் எழுப்பப் பெற்ற இசையொலி வகைகளே சங்ககால இசைக்கு அடிமனை. இக்காலத்து இசைகள் அதனடிப்படையில் அமைந்தவையே. குழற்கருவிகளையும் அவற்றை ஆக்குவோரையும், ஊதுவோரை யும் பலவகைப் பாகுபாட்டுடன் தமிழகத்தில் இன்றும் நன்கு உணரலாம்.

யாழ்க்கருவிகள்

பத்துப்பாட்டில் (பெரும்பாணாற்றுப்படை) கடியலூர் உருத் திரங்கண்ணனாரே 'செந்தீத் தோட்ட கருந்துளைக்குழல்' கண்ட ஆயர் மகனே, முதன்முதல் வில்யாழ் என்னும் கருவியையும் தன் பேரறிவினால் ஆக்கிக்கொண்டான் எனவும் கூறினார்.

> 'குழலின், இன்தீம் பாலை முனையின் குமிழின்
> புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
> வில்யாழ் இசைக்கும் விரலெறி குறிஞ்சி'[8]

என்பதே அப் பகுதி. சங்ககால இசைக்கு ஆதி யாழ்க்கருவி, வில்யாழே என்பது விபுலாநந்த அடிகளார் கண்ட உண்மை.

வில்யாழ் என்ற கருவிகளும், குறிஞ்சி நிலத்தவர் கையில் இருந்த வில்லின் நாணொலி கேட்ட உணர்வினால் எழுந்தவை எனக் கூறுதலும் உண்டு. வில்யாழின் நரம்புகளைக் குழற் கருவியை அறிந்தோன் ஊதி ஊதிக் குழலொலிக்கேற்ப, யாழ் நரம்பொலி ஒத்திசைக்கத் தக்கவாறு நெடுமையாகவும், குறுமை யாகவும், மிகவும் நுண்ணிய வகையில் வலித்து முடுக்கிக் கட்டித் தெறித்தறிந்தான் அல்லது தெறித்து அறிவான் என்ற வழக்கு முறையை ஒருவர் உவமையாக எடுத்தாண்டார்.[9]

ஆகவே, யாழ்க்கருவிகளில் நரம்பமைதிகள் குழற்கருவிகள் ஊதி எழுப்பிய ஒலி வகைக்கேற்ப வரையறை செய்யப்பெற்ற

---

[8] பெரும்பாண். 179-182

[9] சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ

தால் யாழ்க்கருவிகளும் சிறுபான்மை, பெரும்பான்மை என இரு வகையாகும். 'நரம்பின் இனிய இசையைத் தானத்திலே நிறுத்தும் வங்கியம் போல' என்பார் உரைகாரர். குழல்யாழ் அதாவது குழல்வகை, யாழ்வகை என்ற இருவகைக் கருவிகளே சங்ககால இசைக்கருவிகள். முறைபிறழாது இயல்வகையில் வைப்பு முறையாகக் கூறுமிடத்தும் 'குழலினிது யாழினிது' எனவும், 'குழல்வழி நின்றது யாழே' எனவும், 'குழலொலி யாழொலி' எனவும் கூறப்பெற்ற வழக்குமுறைகளையும் நன்குணரலாம். குறிஞ்சியாழ், முல்லையாழ், பாலையாழ், மருதயாழ், நெய்தல் யாழ் அல்லது விளரியாழ் என்ற கருவிகளும் மற்றும்,

'பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்[10]
சீர்பொலியும் செங்கோடு செப்பினார்—தார்பொலிந்து
மன்னுந் திருமார்ப வன்கூடற் கோமானே
பின்னு முளவே பிற'

என்றும் ஓர் இடத்தில் கூறப்பட்டதால், யாழ்ச்கருவிகளும் பல வென்பது தெற்றெனப் புலப்படும். யாழ் உறுப்பு முதலான வற்றின் விளக்கங்களை யாழ்நூலில் காணலாம். ஆராய்ச்சி உணர்வு படைத்த அறிவை இயல்பானும் பன்மொழிப் புலமை யானும் கொண்ட அருட்டிரு விபுலாநந்த அடிகளார், யாழ் நூலில், 'இடையனமைத்துக் கொண்ட வில்யாழ் ஏழு நரம்போடு கூடிக் குறிஞ்சிப்பண் வாசித்தற்குத் தகவுடையதாக இருந்தது. அதற்குமுன் ஐந்து நரம்போடு கூடிய கருவியும் இருந்திருக்க வேண்டும். அவ்வாறு கொள்வதற்கு ஆதாரம் நமக்குப் பரி பாடலிலே கிடைக்கிறது. எட்டாம் பரிபாடலிலே ஏழ்புழை, ஐம்புழை என வருவன ஏழு துளையுடைய குழற்கருவியையும் ஐந்து துளையுடைய குழற்கருவியையும் குறிப்பன. ஐந்து துளைக் கருவியே முன்னர் உண்டாயிருக்கவேண்டும். அதனோடுகூட ஐந்து நரம்புடையதாய் வில்யாழ் போன்ற அமைப்பினை உடைய கருவியும், மகளிரது குரலினையொத்த குரல் எனுமிவற் றோடு உழை, இளி, துத்தம் என்னும் மூன்றும் கூடிய ஐந்து நரம்புகளுமே முதலில் உண்டானவை' எனத் தெளிவாகவும், இசைக்கணித முறையாலும் கூறிப்போந்தார்.

அவரே 'யாழ்நூல்' பக்கம் 41-ல், 'கடைச்சங்க காலத்திலும் அதற்கு முன்னுந் தோன்றிய சான்றோர் செய்யுள்களுள் வில் யாழும், சீறியாழும், பேரியாழுமே குறிக்கப்பட்டு இருக்கின்றன. சகோடயாழும், மகரயாழும், செங்கோட்டியாழும் சிலப்பதி

10 செம்முறைக் கேள்வி

காரத்திலும், மணிமேகலையிலும் பெருங்கதையிலும், சீவக சிந்தாமணியிலும் காணப்படுகின்றன எனக் கூறினார். நுணுகி யாராய்ந்து அளவை முறைப்படி அறியப்பெறும் கருவியறிவு இசைக்கலைக்கு மிகவும் வேண்டற்பாலதாகும். ஐம்புழைக் குழல், ஏழ்புழைக் குழல்வழி இசை கண்டுணர்ந்து தோற்றுவித்த யாழ்க்கருவிகள், ஐந்து நரம்புடைய வில்யாழ்க் கருவி முதல் ஆயிரம் நரம்புகளைக் கொண்ட யாழ்வரை இருந்ததாகச் சங்க கால இலக்கியங்கள் குறிக்கின்றன.

இனி, இசைகளைப்பற்றி அறியலாம்.

முதலைந்திசை

ஐம்புழைக் குழல்வழியும் ஐந்து நரம்புடை வில்யாழ்வழியும் எழுந்த ஒலிகள், எழும் ஒலிகள் இயல்பாகவே அக்கால வழக்கு முறையானும் இக்கால இசைக்கணித முறையானும் எவ்வாறு இருந்தன, இருப்பதியல்பு என்பதை யாழ்நூலில் விபுலாநந்தர் மிகத் தொன்மையான முறையில் எடுத்துக்காட்டி நிறுவினார்.

தார நரம்பே முதலில் தோன்றியதென்பது பழந்தமிழிசை நூற்றுணிபு. தலையின தாரஞ் செய்யுந்தாரம். இவற்றுள் முற்றோன்றியது தாரம்; தாரம் என்னும் சொல் சங்ககால இசையில் முதலிசை 'தாரம்' என்பதேயென நன்கு வலியுறுத்தும்.

ஏழிசையுள் தாரம், குரல், துத்தம், உழை, இளி என்னும் ஐந்திசைகளுமே முதலைந்திசைகளாகும்.

ஐந்து நரம்புகளும் மேற்றானத்துத் தாரமும் பின்வருமாறு அமைந்து நின்றன:

தாரம்	குரல்	துத்தம்	உழை	இளி	தாரம்
81	72	64	54	48	$40\frac{1}{2}$

எண்கள் நரம்பின் நீளத்தினைக் குறிப்பன. இவற்றின் அதாவது' நரம்பு நீள விகிதவெண்கள், நீள விகிதங்களின் தலைப்பின்கீழ்ப் பின்னங்களாய அசைவெண் விகிதங்கள், அதன் பிரிப்புக் கணித முறை என்ற முடிபுகளைத் திரட்டிவைக்கக் கிடைப்பது,

9/8	9/8	32/27	9/8	32/27

என்ற வகையில் அந்தந்த இசையினது அலகுமுறைகளையும் நன்கு விளக்கினார் நம் விபுலாநந்தர்; பழக்கமுறையும் அதுவே

ஐந்திசைப் பண் என்று கொள்ளத்தக்க இசைப்பாங்கு ஒன்று சங்ககாலக் கல்வெட்டு ஒன்றில் காணப்படுகிறது. அக் கல்வெட்டு ஈரோட்டிலிருந்து காங்கேயம் செல்லும் பாதையில் அரசலூரை அடுத்துள்ள நாகமலை ஆண்டிப் பாறையில் உள்ளது. இது கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கல்வெட்டு இசையைத் தெரிவிக்கும் எழுத்துகள் பிராமி எனப்படும் 'தாமிழி' எழுத்துகளில் உள்ளன.

கல்வெட்டில் காணப்படும் இசை எழுத்துகளை அடியில் காணலாம்:

முதல் கல்வெட்டு

த	தை	தா	தை	த
தை	தா	தே	தா	தை
தா	தே	தை	தே	தா
தை	தா	தே	தா	தை
த	தை	தா	தை	த

இரண்டாம் கல்வெட்டு

கை	த	தை	த	கை
த	தை	(த)	தை	த
தை	த	தை	த	தை
த	தை	(த)	தை	த
(கை	த	தை	த	கை)

மூன்றாம் கல்வெட்டு

எழுத்துப் புணருத்தான் மணிய
வண்ணக்கண் தேவன் சாத்தன்.

முதலேழிசை

மேலும், அவரே இதேயளவில் துத்தத்திற்கும் உழைக்கும் இடையே தோன்றிய கைக்கிளையும், இளிக்கும் தாரத்திற்கும் இடையே தோன்றிய விளரியும் சேர, அதன் பெயர்முறை அலகு நிலை யாவும்,

தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி
0	4	8	12	13	17	21

எனவமைந்த பழைய நிலையையும் புதிய கணிதமுறையில் காட்டிவிட்டார். இவ்வமைப்பு முறையே சங்ககால முதலைந் திசை, முதலேழிசை இவற்றின் ஒலிப்பகுதியாகும்.

இசையொலி முறையை இக்காலத்தாரும் அறிந்துகொள்வ தற்கு அலகறிவு இன்றியமையாததே. அளவிடுங்கருவி அலகே ஆகும். அலகு, சுருதி, மாத்திரை என்பன ஒருபொருட்கிளவி பிற்கால முறையில் குரல் முதலாக ஏழிசைகளுக்குரிய அலகு களின் அமைதி,

'குரல்துத்தம் நான்கு கிளைமூன் றிரண்டாம்
குரையா உழையிளி நான்கு—விரையா
விளரியெனின் மூன்றிரண்டு தாரமெனச் சொன்னார்
களரிசேர் கண்ணுற் றவர்'

என்று கூறப்பெற்றது. இவ்வாறு கூறியது ஒரு முறை. முன் தோன்றியது தார முறை; பின்தோன்றியது குரல் முறை; அதன் பின்னர்த் தோன்றியது இளிமுறை. இளி முறையினலகுகள் இளி முதலாக 4 3 2 4 4 3 2 என நிற்பன. இந் நிலையிலேயே குரல் முதலாக எடுக்க, 4 4 3 2 4 3 2 என நிற்கும். இதனை மேற் காட்டிய வெண்பா எடுத்துக் கூறிற்று. மூவகை முறைகளிலும் முதலிற்றோன்றியது தாரமுறையானதால், அதுவே இருபத் தொரு நரம்புகளையுடைய பேரியாழில் முதன்முதல் அமைக்கப் பெற்றதால், 0 4 4 4 1 4 4 1 என நிற்பதியல்பு.

இவையெல்லாம் விபுலாநந்தரால் அறியப்பெற்ற உண்மை. பழந்தமிழாராய்ச்சி தற்கால நிலையை அறிவதற்கும் சிறந்த சாதனமாக இருப்பது என்ற ஆராய்ச்சியாளர் கருத்துப்படி, நம் அருட்டிரு விபுலாநந்தர் அவர்களால், இசைக்கணித முறையில்,

'சமன்தாரத்தின் அசைவெண் 320. வலிவுத்தாரத்தின் இசைவெண் 640. இவற்றின் இடையே அமைந்த இடைவிகிதம் 640/320—2. இஃது ஏழிசைகளின் இடைவிகிதங்களைப் பெருக்கிப் பெற்ற பேறாகும். இதனைத் தானத்திடை விகிதம் என்பாம்.

9/8 9/8 32/27 9/8 32/27 — 2

எனத் தானத்திடை விகிதம் வேறுபடாதிருந்தது.

நம் முன்னோர்கள் கையாண்ட அலகெண் முறையினை இப் பொழுது ஆராய்வோம். 9/8 என்னும் இடைவிகிதத்தினை

அலகு என வைத்தார்கள். 256 243 என்னும் விகிதம் ஓர் அலகு எனக் கொள்ளப்பட்டது. அங்ஙனமாதலின் தாரம் முதல் தாரம் ஈறாக நின்ற எட்டு நரம்பினிடையே அமைந்த இடைவிகிதங்களேழும்,

4 4 4 1 4 4 1— 22 என நின்றன.

'இத்தகைய நரம்புநிரல் தாரக்கிரமம் எனப்பட்டது' என்று யாழ்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது அறியத்தக்கது.

தார நரம்பிற்கு நீளம் இன்னதுதான் என்ற உறுதிப்பாடு அதனை அளந்து ஆக்கி நிறுவுகின்ற வினையின் நீங்கிய முதல்வனைப் பொறுத்ததேயாம். யாழ்நூல் பக்கம் 67-ல் தாரம் முதல் தாரம் ஈறாக அமைக்கப்பெற்றுள்ள அட்டவணையை மறுபக்கம் காண்க.

அட்டவணையின் கருத்து

0		22	
தொடக்க இசை தாரம்		மேனிலைத் தொடக்க இசை தாரம	
தாரம் 1,	குரல் 4,	துத்தம் 4,	கைக்கிளை 4,
உழை 1,	இளி 4,	விளரி 4	ஆக 22

முதலைந்திசை தாரம் குரல், துத்தம், உழை, இளி என நின்றதால், அதன் தொகுதி தாரம் என்றே கூறப்பெற்று, அதனைப் பண்ணிப்படுத்திய தொழில்முறைக்குத் தாரப்பண் என்றே பெயரும் அமைக்கப்பெற்றது இதுவே. இசைத்தமிழ்க் கலைக்கு— நரம்பின் மறைக்கு—முதற்பண்ணான பெற்றிமையில் 'ஆசான்' எனவும் கூறப்பெற்று ஐந்திசைகளையே உடைமையினாலே 'திறம்' என்னும் சொல் சேர்த்து 'ஆசான்திறம்' எனவும் அழைக்கப்பெற்று, தாரத்திசைக்கு உயிர்க் குறியீட்டெழுத்து 'ஆ' ஆதலால் ஆதாரம் ஆதாரப்பண் எனவும் காலநிலையில் குறிக்கப்பெற்று, தாரத்திற்கேயுரிய மெய்க்குறியீட்டு எழுத்து 'கா' ஆதலால் கா—தாரம், 'கா' எனும் குறியீட்டெழுத்தினை உடைய தாரம்-காவலாகிய தாரம்-காவாந்தாரம் – காந்தாரம் எனக் கூறப்பெற்றது. ஆசான் திறம் என்னும் பெயரே சங்க காலப் பெயர்.

பண்டைய இசைத்தமிழ் அலகுமுறைகளை
இக்காலத் துறைமையிலும் அலகறியும் நிலை

சங்ககாலப் பெயர்	அலகு எண்	பிற்கால இசைப் பெயர்	தற்காலம் கொள்ளும் பெயர்
தாரம்	0	(ஆதார இசை) காந்தாரம்	ஷட்ஜம்
ஓரலகு குரல்	1		ஒரு சுருதிச் சுத்த ருஷபம்
ஈரலகு குரல்	2		இரண்டு சுருதிச் சுத்த ருஷபம்
மூவலகு குரல்	3		மூன்று சுருதிச் சுத்த ருஷபம்
குரல்	4	மத்யமம்	சதுச்ருதி ருஷபம்
ஐந்தாமலகு துத்தம்	5		ஐந்து சுருதிச் சாதாரண காந்தாரம்
ஆறாம் அலகு துத்தம்	6		ஆறு சுருதிச் சாதாரண காந்தாரம்
ஏழாமலகு துத்தம்	7		ஏழு சுருதிச் சாதாரண காந்தாரம்
துத்தம்	8	பஞ்சமம்	அந்தர காந்தாரம்
ஒன்பதாமலகு கைக்கிளை	9		சுத்த மத்யமம்
பத்தாமலகு கைக்கிளை	10		பத்துச் சுருதிப் பிரதி மத்யமம்
பதினோராமலகு கைக்கிளை	11		பதினொரு சுருதிப் பிரதி மத்யமம்
கைக்கிளை	12		பன்னிரண்டு சுருதிப் பிரதி மத்யமம்
உழை	13	நிஷாதம்	பஞ்சமம்
பதினான்காமலகு இளி	14		பதினான்கு சுருதிச் சுத்த தைவதம்
பதினைந்தாமலகு இளி	15		பதினைந்து சுருதிச் சுத்த தைவதம்
பதினாறாமலகு இளி	16		பதினாறு சுருதிச் சுத்த தைவதம்
இளி	17	ஷட்ஜம்	சதுச்ருதி தைவதம்
பதினெட்டாமலகு விளரி	18		பதினெட்டுச் சுருதிக் கைசிகி நிஷாதம்
பத்தொன்பதாமலகு விளரி	19		பத்தொன்பது சுருதிக் கைசிகி நிஷாதம்
இருபதாமலகு விளரி	20		இருபது சுருதி கைசிகி நிஷாதம்
விளரி	21	ருஷபம்	காகலி நிஷாதம்
மேனிலைத் தாரம்	22	காந்தாரம்	தாரஸ்தாயி ஷட்ஜம்

சிலப்பதிகாரம், புறஞ்சேரியிறுத்த காதையில் இளங்கோ வடிகள்,

'ஆடியல் கொள்கை யந்தரி கோலம்
பாடும் பாணரிற் பாங்குறச் சேர்ந்து
செந்திறம் புரிந்த செங்கோட்டி யாழில்
தந்திரி கரத்தொடு திவவுறுத் தியாஅத்து
ஒற்றுறுப் புடைமையிற் பற்றுவழிச் சேர்த்தி
உழைமுதற் கைக்கிளை இறுவாய்க் கட்டி
வரன்முறை வந்த மூவகைத் தானத்துப்
பாய்கலைப் பாவை பாடற் பாணி
ஆசான் திறத்தின் அமைவரக் கேட்டுப்
பாடற் பாணி அளைஇ'[11]

என்னும் பகுதியில் ஆசான்திறம் என்னும் பண்ணைக் குறிப்பிடுவதை நன்கறியலாம். செங்கோட்டியாழிற்கு நரம்புகள் ஏழேயாம். ஏழு நரம்புடைய கருவியில் முதலைந்திசையின் முதற் பண்ணைக் கோவலன் இசைத்தான் என்பது கருத்து. இப் பண் பற்றி அரும்பத உரையாசிரியர் ஆசான் திறம், காந்தாரம், ஆசானென்னும் ஒரு பண்ணிற்குப் பேராகவும் இசைத் தமிழிற் கூறுப எனக் கூறியதோடமைந்தார்.

அடியார்க்குநல்லாரோவெனில், 'ஆசான் சாதி நால்வகை யாவன. ஆசானுக்கு,

அகச்சாதி காந்தாரம்,
புறச்சாதி கிகண்டி,
அருகுசாதி தசாக்கிரி,
பெருகுசாதி சுத்தகாந்தாரம்

எனக்கொள்க' என்றெடுத்துக்காட்டிப் 'பண் நூற்றுமூன்று. அவை நால்வகைப்படும்: பண், பண்ணியற்றிறம், திறம், திறத்திறம் என்பன. அவற்றுள் இது திறங்கூறிற்று' எனத் தெளிவுபடுத்தி விட்டார். இச் சீரிய உரைப்பகுதியால் முதல் ஐந்திசையில் முதலமைப்பாம் தாரப்பண், ஆசான் திறம், காந்தாரம் என்னும் பெயர்களில் வழங்கிவந்தது என்பது எத்துணைத் தெளிவாகிறது எனப் புரிந்துகொள்ளலாம். அன்றியும் அவர், 'செந்திறம் புரிந்த' என்னுமிடத்து 'தன் பண்ணியல் அத்திறமாய்த் தனக்கினமான செந்திறத்தோடு புரிந்த வெங்க' எனவும் கூறி, என்றது பண், பண்ணியற்றிறம் (பண்ணியம்), திறம், திறத்திறம் என்னுமிவை சம்பூரணம், சாடவம், ஔடவம், சதுர்த்தமென வடமொழிப்

11 சிலப். 13:104-113

பெயரானும் வழங்கும். அவற்றுட் செந்திறம் என்றவாறு எனவும் கூறிவிட்டார்.

இவ்வுரையால் பண் என்றால் ஏழிசைகளை உடையது எனவும், பண்ணியற்றிறம் என்றால் ஆறு இசைகளை உடையது எனவும், திறமென்றால் ஐந்து இசைகளை உடையது எனவும், திறத்திறம் என்றால் நான்கு இசைகளை உடையது எனவும் நன்கு புலப்படுவது அறியலாம். இவ்வுரைப் பகுதியாலும் ஆசான் திறமான காந்தாரம் ஐந்து இசைகளையே உடையது என்றும், செந்திறம் என்ற பண்ணும் ஐந்திசைகளையே உடையதென்றும் மிகவும் ஐயமின்றித் தெளிவாகிறது.

தாரப்பண்ணிற்குரிய ஐந்திசைகளைத் தற்கால முறையில் அறியலாம். அலகறியும் நிலையை உற்றுநோக்கத் தாரம் தொடங்குமிசை குரல் 4; துத்தம் 4; உழை 5; இளி 4; ஆதலால்,

தாரம்	குரல்	துத்தம்	உழை	இளி
0	4	8	13	17

என்ற அமைதி ஷட்ஜம், சதுச்ருதிருஷபம், அந்தர காந்தாரம், பஞ்சமம், சதுச்ருதிதைவதம் என அமைந்து இக்காலம் மோகனம் என்னும் இராகமாதலை நன்கு அறிந்துகொள்ளலாம். இவ்வாறு ஆகிய ஐந்திசைகளைப் பத்து நரம்புடைய வில்யாழில் இசைத்துக் காணக் காணப் பண்டைய தமிழ் மகனுக்கு ஏற்பட்ட நுண்ணறிவு ஒன்று. அதுவே பத்து நரம்புகளில் முதலிலிருந்து ஒவ்வொன் றாய் விட்டுவிட்டறிந்து ஒரே பண் ஐந்து பண்ணாகும் தன்மையை ஐந்திசையில் வெவ்வேறாக அறிந்த அறிவேயாகும். அந்தப் பேரறிவு இன்றைக்கும் இசைநூல் வல்லார்மாட்டு மிகவும் எளிமையாக இருந்து வருவதேயாம். அந்நிலையில் முதலைந்திசையைக் குரல் முதலாக அதாவது, இரண்டாம் நரம்பு முதலாக இசைக்க வேறொரு பண் தோன்றும். அது,

குரல்	துத்தம்	உழை	இளி	தாரம்
0	4	9	13	18

என நின்று முன்பிருந்தவாறே அலகுகளைக் கொள்வதால் முதல், இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்னும் இடங்கள் மாறி விட்டதால் தாரப்பண்ணே வேறொரு பண்ணாயிற்று. இப் பண்ணிற்குக் குரற்பண் செந்திறம் என்றும் பெயர். அதுவே சங்க காலப் பெயர். பிற்காலத்தில் இப் பண்ணைச் செந்துருத்தி

என்றனர். இதனலகிசைகள் இக்கால முறையில் ஷட்ஜம், சதுச்ருதி ருஷபம், சுத்தமத்யமம், பஞ்சமம், கைசிகிநிஷாதம் என நின்று மத்யமாவதி இராகமாதலை நன்கு புரிந்துகொள்ளலாம்.

இயல்பாகவமைந்த ஐந்திசைகளில் முதலிசை விட்டு இரண்டாமிசை முதலாக எடுக்க ஒரு புதிய பண் தோன்றுவதை அறிந்த அறிஞன், பின்னரும் ஒவ்வொன்றையும் நீக்கி இசைக்க மற்ற மூன்று இசைகளுக்குரிய மூன்று வேறு பண்களை அறிந்துவிடலாம் என நினைப்பது இயற்கையறிவின் விளக்கமாகும். அந்நிலையில் தாரப்பண்ணையே துத்தம் முதலாக எடுக்க அதாவது, குரற் பண்ணை இரண்டாமிசையிலிருந்து இசைக்க,

துத்தம்	உழை	இளி	தாரம்	குரல்
0	5	9	14	18

பண்டைய தாரப்பண்ணின் அலகுநிலை மாறாதே நின்றும், மூன்றாம் பண்ணாக வேற்றுரு எய்தியது. ஒலிநூற்பகுதியில் இவை யாவும் பெருவிந்தையாக உணரப்பெறுவனவேயாகும். இப் பண்ணைத் துத்தப் பண் என்றனர்; அதுவே சங்ககாலப் பெயர். பிற்காலத்தார் இந்தளம் எனவும் வடுகு எனவும் கூறினர். இதனலகிசைகள், தற்கால முறையில் ஷட்ஜம், சாதாரண காந்தாரம், சுத்தமத்யமம், சுத்ததைவதம், கைசிகிநிஷாதம் என நின்று இந்தோள ராகம் ஆன தன்மையை அறிந்து மகிழலாம். இந் நுண்மையைச் செவ்வனேயறிந்த தெய்வச் சேக்கிழார்,

'முறையால்வரு மதுரத்துடன் மொழிஇந்தளம் முதலில்
குறையாநிலை மும்மைப்படி கூடுங்கிழ மையினால்[12]

என, இப் பண்ணின் தோற்ற முறைமையை விளக்கிக் கூறியருளினார்.

முதலைந்திசையில் நான்காம் நரம்பாம் உழை முதலாக அதாவது தாரம், குரல், துத்தம் என்னும் மூன்று நரம்பையும் விடுத்து (பத்து நரம்பில்) ஆறு, ஏழு, எட்டாம் நரம்புகளைச் சேர்த்து இசைக்க,

உழை	இளி	தாரம்	குரல்	துத்தம்
0	4	9	13	17

என நிற்கும். இப் பண் உழைப்பண் என்று கூறப்பெற்றது. இடைக்காலத்தில் 'சாதாளி' என்னும் பெயரில் இப் பண்ணைக் கூறிவந்தனர். இதனலகிசைகள் பண்டைய முதற்பண்ணாய

12 பெரியபு. தடுத்தாட். 75

தாரப் பண்ணின் நிலையிலேயே ஷட்ஜம், சதுச்ருதிருஷபம், சுத்த மத்யமம், பஞ்சமம், சதுச்ருதிதைவதம் என நின்று இக்காலம் சுத்தசாவேரி என வழங்கி வருவதை இசைப் புலவர்கள் நன்கே அறிவார்கள்.

இதுபோன்றே முதலைந்திசையில் ஐந்தாமிசையாகிய இளி முதல் வில்யாழில் நரம்புகளை இசைக்க,அதாவது மேல்நிலையில்

இளி	தாரம்	குரல்	துத்தம்	உழை
0	5	9	13	18

என இசைக்கும். இப் பண், இளிப்பண் என்றே கூறப்பெற்றது. இதனையே மிகவும் பிற்காலத்தார் தனாசி எனக் கூறினர். இவை யாவும் தென்னிந்திய வழக்கே என்பதில் ஐயமில்லை. முன்னைய நான்கு பண்களைப் போன்றே இப் பண்ணினமைதியான அலகு இசைகள், இக்கால முறையில் ஷட்ஜம், சாதாரண காந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், கைசிகிநிஷாதம் என அமைந்து இன்றைய தென்னிந்தியச் சங்கீத முறையில் சுத்ததன்யாசி அல்லது உதயரவிச்சந்திரிகை என வழக்கில் இருப்பது நன்கே விளங்கும்.

முதலேழிசை

தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி என்னும் அமைப்பே முதலேழிசையின் முதல் அமைப்பாகும். இவ்வமைப்பினை ஏழிசை நரம்புகளின் நரம்பு நீளங்கள், நரம்பு நீளவிகிதங்கள், இசைவெண் விகிதங்கள், அசைவெண்கள், அலை நீளங்கள் என்று இவற்றை அட்டவணைப்படுத்தி இடைவிகிதம் கணித்த விபுலாநந்தர்,

தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி
0	4	8	12	13	17	21

எனத் தெரிநிலையில் வகைப்படுத்தினார். இவ்வமைதியும் முதலைந்திசையோடு நான்கு நான்கு அலகாகவே பண்டை நிலையில் அறியப்பெற்றதேயாம்.

துத்தத்திலிருந்து நான்காமலகில் கைக்கிளையும், இளியில் இருந்து நான்காமலகில் விளரி இசையும் தோன்றவே, முதலைந்திசை முதலேழிசையாயின. இவற்றின் முதற்றொகுதி (மேலே குறித்தது) ‘மேற்செம்பாலை’ எனக் கூறப்பெற்றது. பண்டைய

முதல் ஏழிசை நிரல் (ஏழ் பெரும் பாலை)

பெரும்பண்கள் ஏழு	திணை ஏழு	யாழ் ஏழு	அறியும் முறை ஐந்து
முதற் பெரும்பண்	பெருந்திணை — தாரம் 0	பேரியாழ்	பண்டைய இசைத்தமிழ்ப் பெயர்கள் உரிய அலகுகள் அலகுக் கூட்டெண்கள் பிற்கால இசைப்பெயர்கள் தற்கால வழக்கு முறையிற் கொள்ளப்பெறும் இசைப் பெயர்கள்
இரண்டாம் பெரும்பண்	குறிஞ்சித் திணை — குரல் 0	குறிஞ்சியாழ்	பண்டைய இசைத்தமிழ்ப் பெயர்கள் உரிய அலகுகள் அலகுக் கூட்டெண்கள் பிற்கால இசைப்பெயர்கள் தற்கால வழக்கு முறையிற் கொள்ளப்பெறும் இசைப் பெயர்கள்
மூன்றாம் பெரும்பண்	முல்லைத்திணை — துத்தம் 0	முல்லையாழ்	பண்டைய இசைத்தமிழ்ப் பெயர்கள் உரிய அலகுகள் அலகுக் கூட்டெண்கள் பிற்கால இசைப்பெயர்கள் தற்கால வழக்கு முறையிற் கொள்ளப்பெறும் இசைப் பெயர்கள்
நான்காம் பெரும்பண்	கைக்கிளைத் திணை — கைக்கிளை 0	நெய்தலியாழ் அல்லது யாமயாழ்	பண்டைய இசைத்தமிழ்ப் பெயர்கள் உரிய அலகுகள் அலகுக் கூட்டெண்கள் பிற்கால இசைப்பெயர்கள் தற்கால வழக்கு முறையிற் கொள்ளப்பெறும் இசைப் பெயர்கள்
ஐந்தாம் பெரும்பண்	பாலைத்திணை — உழை 0	பாலையாழ்	பண்டைய இசைத்தமிழ்ப் பெயர்கள் உரிய அலகுகள் அலகுக் கூட்டெண்கள் பிற்கால இசைப்பெயர்கள் தற்கால வழக்கு முறையிற் கொள்ளப்பெறும் இசைப் பெயர்கள்
ஆறாம் பெரும்பண்	மருதத்திணை — இளி 0	மருதயாழ்	பண்டைய இசைத்தமிழ்ப் பெயர்கள் உரிய அலகுகள் அலகுக் கூட்டெண்கள் பிற்கால இசைப்பெயர்கள் தற்கால வழக்கு முறையிற் கொள்ளப்பெறும் இசைப் பெயர்கள்
ஏழாம் பெரும்பண்	நெய்தற்றிணை — விளரி 0	விளரியாழ் அல்லது செவ்வழியாழ்	பண்டைய இசைத்தமிழ்ப் பெயர்கள் உரிய அலகுகள் அலகுக் கூட்டெண்கள் பிற்கால இசைப்பெயர்கள் தற்கால வழக்கு முறையிற் கொள்ளப்பெறும் இசைப் பெயர்கள்

பெரும்பண்கள் ஏழு	தார முறையில் முன்றோன்றிய பெரும்பண்கள் ஏழு								
முதற் பெரும்பண்	தாரம் முதல் தாரமீறாக	தாரம் 0 0 காந்தாரம் ஷட்ஜம்	குரல் ச 4 மத்யமம் சதுச்ருதி ருஷபம்	துத்தம் ச 8 பஞ்சமம் அந்தர காந்தாரம்	கைக்கிளை ச 12 தைவதம் பிரதி மத்யமம்	உழை க 13 நிஷாதம் பஞ்சமம்	இளி ச 17 ஷட்ஜம் சதுச்ருதி தைவதம்	விளரி ச 21 ருஷபம் காகலி நிஷாதம்	தாரம் க 22 காந்தாரம் தாரஸ்தாயி ஷட்ஜம்
இரண்டாம் பெரும்பண்	குரல் முதல் குரலீறாக	குரல் 0 0 மத்யமம் ஷட்ஜம்	துத்தம் ச 4 பஞ்சமம் சதுச்ருதி ருஷபம்	கைக்கிளை ச 8 தைவதம் அந்தர காந்தாரம்	உழை க 9 நிஷாதம் சுத்த மத்யமம்	இளி ச 13 ஷட்ஜம் பஞ்சமம்	விளரி ச 17 ருஷபம் சதுச்ருதி தைவதம்	தாரம் க 18 காந்தாரம் கைசிகி நிஷாதம்	குரல் ச 22 மத்யமம் தாரஸ்தாயி ஷட்ஜம்
மூன்றாம் பெரும்பண்	துத்தம் முதல் துத்தமீறாக	துத்தம் 0 0 பஞ்சமம் ஷட்ஜம்	கைக்கிளை ச 4 தைவதம் சதுச்ருதி ருஷபம்	உழை க 5 நிஷாதம் சாதாரண காந்தாரம்	இளி ச 9 ஷட்ஜம் சுத்த மத்யமம்	விளரி ச 13 ருஷபம் பஞ்சமம்	தாரம் க 14 காந்தாரம் சுத்த தைவதம்	குரல் ச 18 மத்யமம் கைசிகி நிஷாதம்	துத்தம் ச 22 பஞ்சமம் தாரஸ்தாயி ஷட்ஜம்
நான்காம் பெரும்பண்	கைக்கிளை முதல் கைக்கிளையீறாக	கைக்கிளை 0 0 தைவதம் ஷட்ஜம்	உழை க 1 நிஷாதம் சுத்த ருஷபம்	இளி ச 5 ஷட்ஜம் சாதாரண காந்தாரம்	விளரி ச 9 ருஷபம் சுத்த மத்யமம்	தாரம் க 10 காந்தாரம் பிரதி மத்யமம்	குரல் ச 14 மத்யமம் சுத்த தைவதம்	துத்தம் ச 18 பஞ்சமம் கைசிகி நிஷாதம்	கைக்கிளை ச 22 தைவதம் தாரஸ்தாயி ஷட்ஜம்
ஐந்தாம் பெரும்பண்	உழை முதல் உழையீறாக	உழை 0 0 நிஷாதம் ஷட்ஜம்	இளி ச 4 ஷட்ஜம் சதுச்ருதி ருஷபம்	விளரி ச 8 ருஷபம் அந்தர காந்தாரம்	தாரம் க 9 காந்தாரம் சுத்த மத்யமம்	குரல் ச 13 மத்யம் பஞ்சமம்	துத்தம் ச 17 பஞ்சமம் சதுச்ருதி தைவதம்	கைக்கிளை ச 21 தைவதம் காகலி நிஷாதம்	உழை க 22 நிஷாதம் தாரஸ்தாயி ஷட்ஜம்
ஆறாம் பெரும்பண்	இளி முதல் இளியீறாக	இளி 0 0 ஷட்ஜம் ஷட்ஜம்	விளரி ச 4 ருஷபம் சதுச்ருதி ருஷபம்	தாரம் க 5 காந்தாரம் சாதாரண காந்தாரம்	குரல் ச 9 மத்யமம் சுத்த மத்யமம்	துத்தம் ச 13 பஞ்சமம் பஞ்சமம்	கைக்கிளை ச 17 தைவதம் சதுச்ருதி தைவதம்	உழை க 18 நிஷாதம் கைசிகி நிஷாதம்	இளி ச 22 ஷட்ஜம் தாரஸ்தாயி ஷட்ஜம்
ஏழாம் பெரும்பண்	விளரி முதல் விளரியீறாக	விளரி 0 0 ருஷபம் ஷட்ஜம்	தாரம் க 1 காந்தாரம் சுத்த ருஷபம்	குரல் ச 5 மத்யமம் சாதாரண காந்தாரம்	துத்தம் ச 9 பஞ்சமம் சுத்த மத்யமம்	கைக்கிளை ச 13 தைவதம் பஞ்சமம்	உழை க 14 நிஷாதம் சுத்த தைவதம்	இளி ச 18 ஷட்ஜம் கைசிகி நிஷாதம்	விளரி ச 22 ருஷபம் தாரஸ்தாயி ஷட்ஜம்

பெரும்பண்கள் ஏழு	இசையேழ் தொகுதியின் பழைய பெயர் முறைகள்	வகையும் வழக்கும்	தற்காலச் சக்கர முறையில் மேளகர்த்தா ராகங்களின் பெயர்களில்
முதற் பெரும்பண்	தாரப் பெரும்பண் தாரப் பாலை **மேற் செம்பாலை** **ஆசான்** **பேரிசைப் பாலை**	தாரம் தாரமாய தாரவாய்ப் பாலை வகையில் தாரங் குரலாய **மேற் செம்பாலை** என்பதே வழக்கு	ருத்ரச் சக்கரம் 5-மா அதாவது 65ஆவது மேளமான **மேச கல்யாணி** போன்றது
இரண்டாம் பெரும்பண்	குரற் பெரும்பண் குரற் பாலை **செம்பாலை**	குரல் குரலாய குரல் வாய்ப் பாலை வகையில் குரல் குரலாய **செம்பாலை** என்பதே வழக்கு	பாணச் சக்கரம் 4-பூ அதாவது 28ஆவது மேளமான **ஹரிகாம்போதி** போன்றது
மூன்றாம் பெரும்பண்	துத்தப் பெரும்பண் துத்தப் பாலை **படுமலைப் பாலை**	துத்தம் துத்தமாய துத்தவாய்ப் பாலை வகையில் துத்தங் குரலாய **படுமலைப் பாலை** என்பதே வழக்கு	வேதச் சக்கரம் 2-ஸ்ரீ அதாவது 20ஆவது மேளமான **(நர) நட பைரவி** போன்றது
நான்காம் பெரும்பண்	கைக்கிளைப்பெரும்பண் கைக்கிளைப் பாலை **செவ்வழிப் பாலை** பண்கண்டு திறனெய்தாப் பண்	கைக்கிளை கைக்கிளையாய கைக்கிளைவாய்ப் பாலை வகையில் கைக்கிளை குரலாய **செவ்வழிப் பாலை** என்பதே வழக்கு	இப் பாலையை, பிற்காலத்தார் ஒருமேளமாகக் கொள்ளவில்லை. காரணம் பஞ்சமம் இல்லாததே. அருட்டிரு. விபுலாநந்தஅடிகளாரும் தமது 'யாழ் நூலில்' **சுத்தத் தோடி** எனப் புதுப் பெயர் கொடுத்து நிறுவினார்.
ஐந்தாம் பெரும்பண்	உழைப் பெரும்பண் உழைப் பாலை **அரும் பாலை**	உழை உழையாய உழைவாய்ப் பாலை வகையில் உழை குரலாய **அரும்பாலை** என்பதே வழக்கு	பாணச் சக்கரம் 5-மா அதாவது 29ஆவது மேளமான **தீர சங்கராபரணம்** போன்றது
ஆறாம் பெரும்பண்	இளிப் பெரும்பண் இளிப்பாலை **கோடிப் பாலை** அல்லது **கொடிப் பாலை**	இளி இளியாய இளிவாய்ப் பாலை வகையில் இளி குரலாய **கோடிப் பாலை** என்பதே வழக்கு	வேதச் சக்கரம் 4-பூ, அதாவது 22ஆவது மேளமான **கரஹரப்பிரிய** போன்றது
ஏழாம் பெரும்பண்	விளரிப் பெரும்பண் **விளரிப் பாலை** **சிற்றிசைப் பாலை**	விளரி விளரியாய விளரிவாய்ப் பாலை வகையில் விளரி குரலாய **விளரிப் பாலை** என்பதே வழக்கு	நேத்திரச் சக்கரம்2-ஸ்ரீ அதாவது 8ஆவது மேளமான **ஹநுமத்தோடி** போன்றது

முதல் ஐந்திசை நிரல்கள்

முன்றோன்றிய திறப் பண்கள்—ரு

முதற் பண்

தாரம் முதல் தாரமீறாக

பண்டைய இசைத்தமிழ்ப் பெயர்கள்	தாரம்	குரல்	துத்தம்	உழை	இளி	தாரம்
உரிய அலகுகள்	0	ச	ச	ரு	ச	ரு
அலகுக் கூட்டெண்கள்	0	4	8	13	17	22
பிற்கால இசைப்பெயர்கள்	காந்தாரம்	மத்யமம்	பஞ்சமம்	நிஷாதம்	ஷட்ஜம்	காந்தாரம் தாரஸ்தாயி
தற்கால வழக்குமுறையிற் கொள்ளப்பெறும் இசைப்பெயர்கள்	ஷட்ஜம்	சதுச்ருதி ருஷபம்	அந்தர காந்தாரம்	பஞ்சமம்	சதுச்ருதி தைவதம்	ஷட்ஜம்

இப் பண்ணின் பழைய பெயர்கள்

தாரப் பண்
ஆசான் திறம்
காந்தாரம்

தற்காலப் பெயர்
மோகனம்

இரண்டாம் பண்

குரல் முதல் குரலீறாக

பண்டைய இசைத்தமிழ்ப் பெயர்கள்	குரல்	துத்தம்	உழை	இளி	தாரம்	குரல்
உரிய அலகுகள்	0	ச	ரு	ச	ரு	ச
அலகுக் கூட்டெண்கள்	0	4	9	13	18	22
பிற்கால இசைப்பெயர்கள்	மத்யமம்	பஞ்சமம்	நிஷாதம்	ஷட்ஜம்	காந்தாரம்	மத்யமம் தாரஸ்தாயி
தற்கால வழக்குமுறையிற் கொள்ளப்பெறும் இசைப்பெயர்கள்	ஷட்ஜம்	சதுச்ருதி ருஷபம்	சுத்த மத்யமம்	பஞ்சமம்	கைசிகி நிஷாதம்	ஷட்ஜம்

இப் பண்ணின் பழைய பெயர்கள்

குரற்பண்
செந்திறம்
செந்துருத்தி

தற்காலப் பெயர்
மத்தியமாவதி

மூன்றாம் பண்

துத்தம் முதல் துத்தமீறாக

பண்டைய இசைத்தமிழ்ப் பெயர்கள்	துத்தம்	உழை	இளி	தாரம்	குரல்	துத்தம்
உரிய அலகுகள்	0	ரு	ச	ரு	ச	ச
அலகுக் கூட்டெண்கள்	0	5	9	14	18	22
பிற்கால இசைப்பெயர்கள்	பஞ்சமம்	நிஷாதம்	ஷட்ஜம்	காந்தாரம்	மத்யமம்	பஞ்சமம் தாரஸ்தாயி
தற்கால வழக்குமுறையிற் கொள்ளப்பெறும் இசைப்பெயர்கள்	ஷட்ஜம்	சாதாரண காந்தாரம்	சுத்த மத்யமம்	சுத்த தைவதம்	கைசிகி நிஷாதம்	ஷட்ஜம்

இப் பண்ணின் பழைய பெயர்கள்

துத்தப்பண்
இந்தளம்
வடுகு

தற்காலப் பெயர்
இந்தோளம்

நான்காம் பண்

உழை முதல் உழையீறாக

பண்டைய இசைத்தமிழ்ப் பெயர்கள்	உழை	இளி	தாரம்	குரல்	துத்தம்	உழை
உரிய அலகுகள்	0	ச	ரு	ச	ச	ரு
அலகுக் கூட்டெண்கள்	0	4	9	13	17	22
பிற்கால இசைப்பெயர்கள்	நிஷாதம்	ஷட்ஜம்	காந்தாரம்	மத்யமம்	பஞ்சமம்	நிஷாதம் தாரஸ்தாயி
தற்கால வழக்குமுறையிற் கொள்ளப்பெறும் இசைப்பெயர்கள்	ஷட்ஜம்	சதுச்ருதி ருஷபம்	சுத்த மத்யமம்	பஞ்சமம்	சதுச்ருதி தைவதம்	ஷட்ஜம்

இப் பண்ணின் பழைய பெயர்கள்

உழைப்பண்
சாதாளி

தற்காலப் பெயர்
சுத்த சாவேரி

ஐந்தாம் பண்

இளி முதல் இளியீறாக

பண்டைய இசைத்தமிழ்ப் பெயர்கள்	இளி	தாரம்	குரல்	துத்தம்	உழை	இளி
உரிய அலகுகள்	0	ரு	ச	ச	ரு	ச
அலகுக் கூட்டெண்கள்	0	5	9	13	18	22
பிற்கால இசைப் பெயர்கள்	ஷட்ஜம்	காந்தாரம்	மத்யமம்	பஞ்சமம்	நிஷாதம்	ஷட்ஜம் தாரஸ்தாயி
தற்கால வழக்குமுறையிற் கொள்ளப்பெறும் இசைப்பெயர்கள்	ஷட்ஜம்	சாதாரண காந்தாரம்	சுத்த மத்யமம்	பஞ்சமம்	கைசிகி நிஷாதம்	ஷட்ஜம்

இப் பண்ணின் பழைய பெயர்கள்

இளிப் பண்
தனாசி

தற்காலப் பெயர்
சுத்த தன்யாசி
அல்லது
உதய ரவிச்சந்திரிகா

ஓரேழ்பாலை (சங்ககால இசைத்தமிழ்ப் பாலையேழு) என்னும் தொகுதியில் முதற்பாலை இதுவே.

இவற்றின் அலகிசைகளை இக்கால முறையில் கூறினால் ஷட்ஜம், சதுச்ருதிருஷபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்யமம், பஞ்சமம், சதுச்ருதிதைவதம், கைசிகிநிஷாதம் என அமையும். இதனைப் பிற்காலத்தார் கல்யாணி ராகம் எனக் கூறினர். அதாவது, கல்யாணி ராகமாவதை அறிந்துகொள்ளலாம். பண்டைய பண்முறைப் பெயர்கள் பிற்காலத்தாரால் பெயர் மாற்றமடைந்தன அவ்வளவே.

முதலைந்திசையை ஒவ்வொன்றாக நீக்கி எடுத்து இசைப் பதே போன்று இவ்வேழிசையிலும் ஒவ்வொன்றை நீக்கிக் காண வெவ்வேறு பாலைகள் தோன்றுவதியல்பு ஏழிசை நிரலை மூன்று நிலையாக இருபத்தொரு நரம்புகளில் அமையத்தக்கவாறு பேரி யாழ் என்ற கருவியில் கட்டியதைத் தமிழிலக்கியங்கள் சிறப்புறக் கூறுகின்றன. இவற்றைக் குரல் முதலாகக் கொள்ள, அதாவது மேற்செம்பாலையைக் குரல் முதலாக இசைக்க,

குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்
0	4	8	9	13	17	18

எனவே அமைவதால், இது செம்பாலையெனச் சங்ககாலத்தில் கூறப்பெற்றது. குரல் முதலிய ஏழிசை எனக் கூறுவது இப் பாலையையே. இவ்வலகு முறைகள் இக்கால வழக்கில் ஷட்ஜம், சதுச்ருதிருஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், சதுச்ருதிதைவதம், கைசிகிநிஷாதம் என நின்று இக்கால அரிகாம் போதி இராகமாதல் தெளிவு.

மேற்செம்பாலையைத் துத்தம் முதலாக இசைக்க,

துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்	குரல்
0	4	5	9	13	14	18

என நின்ற தன்மை படுமலைப் பாலை எனச் சங்ககாலத்தில் கூறப்பெற்றது. இக்கால வழக்கில் ஷட்ஜம், சதுச்ருதிருஷபம், சாதாரண காந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், சுத்ததைவதம், கைசிகிநிஷாதம் என அமைந்து நடபைரவி இராகமாதலை அறிய லாம்.

மேற்செம்பாலையைக் கைக்கிளை முதலாக எடுத்திசைக்க அந்நிலை,

கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்	குரல்	**துத்தம்**
0	1	5	9	10	14	18

என நிற்கும். இப் பாலையே சங்ககாலத்தவரால் செவ்வழிப் பாலை எனப்பட்டது. இக்கால நிலையில் ஷட்ஜம் ஒரு சுருதிச் சுத்தருஷபம், சாதாரண காந்தாரம், சுத்தமத்யமம், பத்துசுருதிப் பிரதி மத்யமம், சுத்ததைவதம், கைசிகிநிஷாதம் என அமைவதால் பிற்காலத்தாரால் இதனை ஓர் இராகமாக அதாவது, ஒரு மேளமாகக் கொள்ளமுடியவில்லை. ஆனால், பழைய நிலையில் ஏழிசைகளைக் கொண்ட பாலைவகையில் இஃதும் ஒரு பாலையே என்பதில் ஐயமில்லை. இக்காலம் கருவியில் செவ்வகையாக இசைத்துக் காட்டலாம். இப் பண்ணினையே, பண் கண்டு திறன் எய்தாப் பண் என்றனர் சங்ககாலத்தார்.

மேற்செம்பாலை ஐந்தாமிசை முதலாக அதாவது, உழை முதலாக எடுத்திசை ல் அவ்வமைதி,

உழை	இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை
0	4	8	9	13	17	21

என நின்று 'அரும்பாலை' எனச் சங்ககாலத்தாரால் போற்றப் பெற்றது. இக்கால நிலையில் இதனலகிசைகள் ஷட்ஜம், சதுச்ருதி ருஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், சதுச்ருதி தைவதம், கைசிகிநிஷாதம் எனவமைந்து தீரசங்கராபரணம் அதாவது, சங்கராபரண ராகம் எனக் கூறப்பெறுவதையறியலாம். இப் பாலைகொண்டே ஏனைய யாழ்க்கருவிகளில் நரம்புகள் கட்டும் முறை செப்பம் செய்யப்பெற்றதால் 'உழைமுதற் கைக்கிளை யிறுவாய்க் கட்டி' என்னும் தொடர் இப் பாலை வழியே முதன்முதலில் தோன்றியதாகும். இவற்றின் விரிவுகள் பற்பலவாம்.

மேற்செம்பாலையை இளி முதலாக எடுக்க அந்த இசைகள்,

இளி	விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை
0	4	5	9	13	17	18

என அமைந்த நிலையறிந்து சங்க காலத்தார் கோடிப்பாலை அல்லது கொடிப்பாலை எனக் கூறினர். இதனலகிசைகள் இக்காலம் ஷட்ஜம், சதுச்ருதிருஷபம், சாதாரண காந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், சதுச்ருதிதைவதம், கைசிகிநிஷாதம் என நிற்பதால், இதனைக் கரகரப்பிரியா எனக் கூறுதல் வேண்டும். ஆனாயர் தமது குழலில், 'மாறுமுதற் பண்ணின்பின் வளர் முல்லைப் பண்ணாக்கிக் கூறிய பட்டடைக் குரலாங் கொடிப்

பாலையில் நிறுத்தினார்' எனச் சேக்கிழார் இப் பாலையைச் சுட்டினார். அடியார்க்குநல்லார் கூறுகின்ற வங்கியம் இசைக்கணித முறைப்படி இளி முதலாக இசைப்பது என்பதை விபுலாநந்தர் யாழ்நூல் இசை நரம்பியலில் தெளிவுபடுத்தினார். ஆங்குத் தாரம் ஆறாம் அலகிலும், உழை பத்தொன்பதாம் அலகிலும் நிற்கும்.

மேற்செம்பாலையை இறுதியிசையாய விளரி முதல் இசைக்க விளரிப்பாலை தோன்றும். அதன்நிலை,

விளரி	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி
0	1	5	9	13	14	18

என அமைவதறியலாம். இக்கால இசைப்பெயர் முறையில் ஷட்ஜம் ஒரு சுருதி சுத்தருஷபம், சாதாரண காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சுத்ததைவதம், கைசிகிநிஷாதம் என நின்று அனுமத்தோடி அல்லது தோடி ராகமாதலை நன்கு அறிந்து கொள்ளலாம். மேற்செம்பாலையில் எல்லாம் பெரிய இசைகளாகவே அப் பாலை பேரிசைப் பாலையாகும். விளரிப் பாலையில் எல்லாம் சிறிய இசையாகவே இப் பாலை சிற்றிசைப் பாலை. மிகப் பழங்காலத்திய இந்த ஏழு பாலைகளைச் சங்க இலக்கியங்கள் சுட்டிக் கூறுகின்றன. அவை இன்னவை என்பதை இந் நூற்றாண்டில் அருட்டிரு விபுலாநந்த அடிகளார் ஒருவரே கணிதமுறை கொண்டு உறுதிப்படுத்தினார்.

மேற்காட்டிய பாலையேழினையும் தாரமுறையில்,

தாரங்	குரலாய	மேற்செம்பாலை
குரல்	,,	செம்பாலை
துத்தம்	,,	படுமலைப்பாலை
கைக்கிளை	,,	செவ்வழிப்பாலை
உழை	,,	அரும்பாலை
இளி	,,	கோடிப்பாலை
விளரி	,,	விளரிப்பாலை

எனச் சிலப்பதிகார உரை பகரும். இவற்றிற்குரிய அலகுநிலை ஒன்பது ஒன்பதாகக் கூட்டிச் செல்வதும், பதின்மூன்று பதின்மூன்றாகக் கூட்டிச் செல்வதும் ஆகிய இருமுறையே, சங்ககாலத்தில் நரம்புகளை அளவுபடுத்தும் முறையில் இருந்தன. முன்னைய நட்புமுறை, பின்னைய கிளைமுறை எனப்படும். இவற்றின் தொகுப்பில் அலகுகள் நிற்குமுறை,

கிளை 13— 4—17 8—21—12
நட்பு 9—18— 5—14— 1—10

இதனால் கிளையும், நட்பும் ஒன்றினையொன்று பற்றி நிற்கும் முறைமை நன்கு அறியப்படுவதாகும். ஏழிசைகளை வரையறைப்படுத்தியபின் முன்தோன்றிய ஐந்திசைகளை இடைவெளியில் ஒப்பாக நிறுத்தி அவற்றை அந்தரம் எனக் கூறினர். அந்தரம் என்னும் சொல் ஒப்பு என்னும் பொருளைத் தரும்.

ஏழும் ஐந்தும் பன்னிரண்டாகிய இசைநிலைகளை இராசி வட்டத்தில் வைத்து, 'அரியிடைத் தாரம் அணைவுறக் கொளலே' என்ற பழைய அமைப்பின்வழி சிம்மராசியில் முதல் நரம்பாய தாரம் என்ற இசையை வைத்து, வலவோட்டாகவும், இடவோட்டாகவும் கணித்துச் சங்ககாலத்தார் (இசைப்பாணர்கள்) ஏழு பாலையைப் பன்னிருபாலையாக்கினர். இப் பாலைகளின் முதல் அமைப்பாய சிங்கப்பாலை,

0 1 4 5 8 9 12 13 14 17 18 21 22

என அலகு நிலைகளைக் கொண்டு நிற்கும் பேரிசைகள் கிளை முறையில் தோன்றுபவை. சிற்றிசைகள் நட்புமுறையில் தோன்றுபவை. 'சிலப்பதிகாரம் வேனிற்காதை' யுரையிலே 'அந்தரம் ஐந்தும் நீக்கி உறழ்ந்து கண்டுகொள்க' என்று ஏழ்பெரும்பாலை பிறக்கும் முறை கூறப்பட்டதாதலின், அந்தரம் ஐந்துஞ் சேர்த்து உறழுமிடத்துப் பன்னிருபாலையும் பிறக்கும் என்பது தெளிவாகின்றது என விபுலாநந்தரின் இசைக்கணிதமுறை பன்னிருபாலைப் பொது உருவத் தலைப்பில் பேசுகிறது. மேலும், இவற்றின் விதிமுறைகளையெல்லாம் ஈண்டு விளக்க இயலாது எனவும் அறிக.

'பன்னிருபாலையில் உருத் தொண்ணூற்றொன்றும் பன்னிரண்டுமாய்ப் பண்கள் நூற்றுமூன்றாதற்குக் காரணமாமெனக் கொள்க' என்றே உரையாசிரியர் இருவரும் (அரும்பதவுரைகாரர், அடியார்க்குநல்லார்) சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதை யாழாசிரியன் அமைதியுள் கூறுகின்றனர். இவ்வேழு பெரும் பாலையினையும் முதலெடுத்து நூற்றுமூன்று பண்ணும் பிறக்கும் என அடியார்க்குநல்லார் தனித்து வேனிற்காதை உரையின் உள்ளே கூறினார். நூற்றுமூன்று பண்களின் பெயர்முறை தெரிய வருமாறு அவற்றையெல்லாம் செவ்விய முறையில் யாழ்நூலில் எழுதிப் பாதுகாத்த பெருமை விபுலாநந்தப் பெருந்தகைக்கே உரியது. தாரத்துறை தோன்றப் பாலையாழ். பாலையாழ் என்ற

கருவியில் அரும்பாலைக்குரிய நரம்பமைதிகள் முதல் நிலையாகக் கட்டப்பெற்றன.

தன்குரல் ஒரும் உழை தோன்றக் குறிஞ்சியாழ். குறிஞ்சி யாழ் என்னும் கருவியில் செம்பாலைக்குரிய நரம்பமைதிகள் முதல் நிலையாகக் கட்டப்பெற்றன. நேரே இளி குரலிற்றோன்ற மருத யாழ். மருதயாழ் என்ற கருவியில் கோடிப்பாலைக்குரிய நரம் பமைதிகள் முதல்நிலையாகக் கட்டப்பெற்றன. துத்தம் இளியிற் பிறக்க நெய்தலியாழ். பிற்காலத்தார் நெய்தலியாழினைச் செவ் வழியாழ் என்றனர். நெய்தலியாழ் என்ற கருவியில் படுமலைப் பாலைக்குரிய நரம்பமைதிகள் முதல்நிலையாகக் கட்டப் பெற்றன; முல்லையாழ் என்றும் இக் கருவி பெயர்பெறும். இப் பகுதியினை 'நால்வகை யாழாம் நாற்பெரும் பண்ணே' எனவும் கூறினர். பாலையாழ்த்திறன் ஐந்து. அவை: அகநிலையாக நின்று தமக்குரிய புறநிலை ஐந்து, அருகியல் ஐந்து, பெருகியல் ஐந்து என இருபதாகி நிற்கும்.

குறிஞ்சித் திறன் எட்டு. அவை அகநிலையாக நின்று தமக்கு உரிய புறநிலை எட்டு, அருகியல் எட்டு, பெருகியல் எட்டு என எல்லாம் முப்பத்திரண்டாகி நிற்பன. மருதயாழ்த் திறன் நான்கு. அவை அகநிலையாக நின்று தமக்குரிய புறநிலை நான்கு, அருகியல் நான்கு, பெருகியல் நான்கு என எல்லாம் பதினாறாகி நிற்பன. செவ்வழியாழ்த்திறன் நான்கு. அவை அகநிலையாகி நின்று தமக்குரிய புறநிலை நான்கு, அருகியல் நான்கு. பெருகியல் நான்கு எனப் பதினாறாகி நிற்பன. இவையன்றி, முற்கூறிய பெரும்பண்கள், பாலையாழ் அகநிலையாக நின்று தமக்குரிய புறநிலை, அருகியல், பெருகியல் என நான்காகி நிற்கும். குறிஞ்சி யாழும் அகநிலையாகி தமக்குரிய புறநிலை, அருகியல், பெரு கியல் என நான்காகி எல்லாம் பதினாறாகி நிற்பன.

இவை அல்லாத மூன்று தனியே உணரப்பெற்று எல்லாமாய்க் கூடிக்கூடி நூற்றுமூன்று பண்கள் ஆயினவாம். இவற்றின் சரியான பெயர்முறைகளை விபுலாநந்தரின் யாழ்நூலில் பரக்கக் காண லாம்.

நூற்றுமூன்று பண்களும் தெளிவான இசையை உடையவை; பண், பண்ணியற்றிறம், திறமெனவே நிற்பன. திறத்திறங்கள் மேனிலை இசையோடு கூடியே அறியப்படும். முற்கூறிய ஏழு பாலைகளில் செவ்வழிப்பாலை திறம் தோன்றுவதற்கு அன்றா தலின், ஏனை ஆறு பாலைகள் விளரிப்பாலை, படுமலைப்பாலை,

கோடிப்பாலை, செம்பாலை, அரும்பாலை, மேற்செம்பாலை ஆகிய பாலைகளில் கணிதமுறையில் திறப்பண்களின் இசையமைதியினைக் கணித்துப் பெரும்பண் 7, பண்ணியற்றிறம் 31, திறம் 65 ஆகிய 103 உருச்கள் என, நூற்றுமூன்று பண்களின் எடுத்தல், படுத்தல் இரண்டிற்குரிய இசை யாவை என்பதையும் விபுலாநந்தர் யாழ்நூலில் அட்டவணைப்படுத்தியமைத்தார்.

எந்தப் பண் பெயருக்கு எந்தெந்த எடுத்தல், படுத்தல் என்பதை அலகு நிலைகளைக் கொண்டேதான் அறியவேண்டும் அவற்றில் விபுலாநந்த அடிகளார் வகுத்துக் காட்டிய இசைக் கணித முறைப்படி முற்றோன்றிய திறப்பண்களான ஆசான் தூறம் செந்திறம், இந்தளம், சாதாளி, தனாசி என்னும் ஐந்து திறங்களும், மேற்செம்பாலை, செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை ஆகிய ஏழுபாலைகளும் இக்கால முறையில் எந்தெந்த இராகங்கள் ஆகின்றன என்பதை ஈண்டு விளக்க நேர்ந்தது.

தமிழ்நாட்டின் தனித்த இசைக்கலையை, அதன் நுட்பத் தன்மையோடு நுண்ணிய ஒலிப்பகுதிகளை வளர்க்கவேண்டி மிகவும் அரும்பாடுபட்டு உழைத்து, பெருநூல்களில் இருந்து இசைவிளக்கக் கருத்தினைத் திரட்டி இசைப் புலவர்களோடு வாதிட்டும் பெருநூலாய 'கருணாமிர்த சாகரம்' என்னும் தொகுப்பை வெளியிட்டவர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதராவார். அவரே தமிழிசைக்கலை விளக்கந்தந்த பெரியவர். அருட்டிரு விபுலாநந்த அடிகளாரின் யாழ்நூல், எல்லா ஐயத்தையும் போக்கி இசையலகு உறுதிப்பாட்டைத் தெளிவுபடுத்தியது.

ஆகவே, சங்ககால இசை இயல்பாகவே தமிழ்மக்களால் கண்டுணரப் பெற்று, ஓரிசை, மூன்றிசை, ஐந்திசை, ஏழிசை என வளர்ந்து பன்னிருபாலைகளாகி, பொதுமுறையில் நூற்றுமூன்று பண்களாக, பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்றென ஆதிஇசை, மிகவும் விரிவுபடுத்தியறியப் பெற்றதாக அறியக்கிடக்கின்றது.

'கடல்வாய்ப் பட்டனவும் காலத்தின் மாறுதலினாலே மறைந்து போயினவுமாகிய நூல்கள் மிகப்பல. அந் நூற்பெயர்களைக் கூறிப் பழைமை பாராட்டுவதோடு அமைந்து இருப்போமா? இல்லை. முன்னிருந்த கலைச் செல்வத்தை மீட்டும் பெறுதற்கு முயல்வோம். அத்தகைய முயற்சி நமது நாட்டிற்கு

ஆக்கம் அளிக்கும்' என்றும் கூறினார் விபுலாநந்தர் அண்மையில் ஈரோட்டினைச் சார்ந்த தமிழ் ஆசிரியப் பெருந்தகை பதிப்பித்து உள்ள அறிவனார் இயற்றிய 'பஞ்சமரபு' என்னும் நூலில் மிகப் பழைய இசைத்தமிழ்க் கருத்துகள் பல புலப்படுகின்றன.

பரத சாத்திரம் வரைந்த பரதர், தாம் சொல்லும் அக் கலை தென்தேசத்தில் மிகவும் பல்கிக் கிடக்கின்றது என்கிறார். பரதக்கலை, நாட்டியக்கலைபற்றிக் கூறும் அந்நூல் எழுதப் பெற்ற காலம் கி.மு. நான்காம் நூற்றாண்டு என்கின்றனர். இக்காலத்திற்கும் முந்திய வழக்கே சங்ககால இசை வழக்காகும்.

பண்டைய சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தத்தம் அரண்மனைகளில் அந்தந்தப் பொழுதுக்குரிய பண்களை இசைக்கும் பாணர்களை அமர்த்திக்கொண்டிருந்தனர். அவருள் பளளியெழுச்சி பாடுவோர் என்பார் விடியற்காலை புறநீர்மைப் பண்பாடியே மன்னனைத் துயிலெழுப்புவர் என்பது வரலாறு. அஃதேபோன்று இரவு, மன்னன் துயில்கொள்ளும்வரை கால முறையோடு சிற்சில பண்கள் இசைக்கப்பெற்றன. தோற்கருவி களும் தனித்தனியே கொட்டப்பெற்றன. யாழ்வகை போன்று முழவு வகைகளும் பலவே. இவை யாவும் தனித்தனியே வகைப் படுத்தி எழுதிப் பதிவுப்படுத்த வேண்டுபவையாகும்.

சங்ககால மன்னர்களின் முன்னர் அமர்ந்திருந்த பாண்பெரு மக்கள் குழல்வழியும், யாழ்வழியும், ஊதி, இசைத்த பண் வகைகள்,

> 'வெளிப்படுவன,
> வெளிப்படாதன,
> ஒலிக்குரியன,
> வண்ணத்திற்குரியன,
> வன்மைக்குரியன,
> மென்மைக்குரியன
> இருவயனமும் பெயர் நெறிக்குரியன,
> தமிழ் நெறிக்குரியன,
> போலி திறத்தன'

எனும் பாகுபாட்டினாலும் பண்களை வரையறை செய்துள் ளனர் என்பதும் தெரியவரும்.

இயல் 8

கட்டடக் கலையும் நகரமைப்பும்

கட்டடக் கலை

சங்ககாலத்து மக்கள் சிற்றூர், பேரூர், நகரம் ஆகிய முத்திறப்பட்ட வாழ்க்கை முறைகளையும் அறிவர். இவையே யன்றி இயற்கையோடியைந்த வாழ்க்கை நெறிகளையும் அறிந் திருந்தனர். வரலாற்று அடிப்படைச் சான்றுக்கு மிகச் சிறந்த தாகக் கொள்ளப்படும் கட்டடக் கலை சங்ககாலத்தில் சிறப்பாக வளர்ச்சியடைந்திருந்தது. இதனைச் சங்க இலக்கியங்களில் தெளிவாகவும் விரிவாகவும் காண்கிறோம். இது படிப்படியாக ஈண்டு அறியப்படும்.

பந்தல்

கட்டட அமைப்பிற்கு முதல் படியும், முன்னோடியும் பந்தல் ஆகும். பாதைகளில் அமைந்த நடுகற்களுக்கு விழா எடுக்கையில் பந்தல் அமைத்தனர். பந்தலின் மேற்புறத்தைத் துணிகளால் மூடி (மேற்கட்டி அமைத்து) அழகு செய்தனர்.[1] கோவலனும் மாதவியும் கடற்கரை மணல் பரப்பில், புன்னையின் நிழலில் அமைந்த பந்தலில் கானல்வரி பாடினர். பந்தலுக்குள்ளே இருந்த கட்டிலைச் சுற்றிலும் ஓவியங்கள் வரையப்பட்ட திரைச்சீலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன.[2]

வீட்டின்முன் நிழலுக்காக அமைத்த பந்தலுக்குப் புன்னை மரத்தின் வளைந்த கொம்புகளை வெட்டிக் காலாக நட்டுப் பந்தலிட்டுப் பந்தலின் நிழலில் புதுமணல் பரப்பி வைத்தனர்.[3] பந்தற்கால்கள் ஒரே வரிசையில் அமைந்திருந்தன. அப் பந்தல் மிகவும் குளிர்ச்சியாக இருந்தது.[4] பந்தலுக்குள் தாளரிகொண்டு வேய்வதும், உள்தளத்தை இளஞ்சேறு கொண்டு மெழுகுவதும் மரபு.[5]

---

1 புறம். 260:28
2 சிலப். 6:168-170
3 பெரும்பாண். 266-7
4 அகம். 86:2-3
5 பெரும்பாண். 297-99

பசுங்கொடிகளைப் படரவிட்டு அமைக்கும் உயிர்ப் பந்தலும் இருந்தன. பசுங்கொடிகள் செறிவாக வளர்ந்து பகலவனின் வெண்கதிர்களைத் தடுத்து நிறுத்தின.[6] கோவலன் கண்ணகியின் திருமணப் பந்தலும் குறிப்பிடத்தக்கது. தூண்கள் வயிர மணிகள் கொண்டு அணி செய்யப்பட்டிருந்தன. நீலவண்ணத்தில் விதானம் அமைக்கப்பட்டிருந்தது முத்தாலான பூக்களால் அலங் கரிக்கப்பட்டிருந்தது. மாலைகள் தாழத் தொங்கவிடப்பட்டு அணிசெய்யப்பட்டிருந்தன.[7]

போர்க்களத்தில் முரசம் வைக்கப்பட்டிருந்த பந்தலும் துணி யால் அமைக்கப்பட்டிருந்தது. சேரன் செங்குட்டுவன் போர்க்கள முரசத்தின் பந்தல் துகிற்கொடியால் ஆகி, வெயிலின் கதிரை விழுங்கி நின்று முரசத்தைக் காத்ததாம்.[8]

தாற்காலிகமாக நிழல் தரும் எளிமையான அமைப்பு பந்தலே ஆதலின், விழாக் காலங்களில் பந்தல் போட்டுப் பிரித்தனர். வீடுகளில் பசுங்கொடிப் பந்தல் அமைத்தனர். தேவைப்படும் போது போட்டுப் பிரித்துக்கொள்ளும் ஆயத்தப் பந்தல்களும்[9] இருந்தன.

சிற்றில்

ஏற்றத்தாழ்வு எக்காலத்திற்கும் பொது. ஏழையும் செல்வ ரும் எல்லாக் காலத்திலும் இருந்தனர். மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் கொடிகட்டிப் பறந்த சங்ககாலத்தில் சிற்றில் மலிந்த சிற்றூர்களும் இருந்தன. சிற்றில்கள் குடில், குரம்பை, இருக்கை எனப்பட்டன. மீனவர், பாணர், எயினர், உழவர், வேடர் முதலான பல்வேறு எளிய மக்கள் குடில்களில் வசித்தனர்.

மிளகுகொடி, கூரையிலுள்ள மரக்கொம்புகளைக் கட்டுவ தற்குக் கட்டுக்கொடியாகப் பயன்படுத்தப்பட்டது.[10] கூரைவேயப் பயன்படுத்தப்பட்ட சாதனங்களில் வரகு தாளரிகள்,[11] இலை தழைகள்,[12] ஈச்சமரத்தின் ஓலைகள்,[13] தருப்பைப் புல்,[14] புதிய வைக்கோல்[15] முதலான பல்வகைப் பொருள்கள் முதலிடம் பெறுகின்றன. குடிசைகள் உயரம் குறைந்து தாழ்வாக இருந்தன.[16] கூரை முள்ளம்பன்றியின் முதுகுபோல் ஈச்ச ஓலை

6 சிலப். 14:214-216
7 ஷை 1:48-49
8 ஷை 26:192
9 Ready-madepandal
10 பெரும்பாண். 148
11 பதிற். 30:22
12 மதுரைக். 310
13 பெரும்பாண். 88
14 ஷை 264
15 ஷை 225
16 ஷை 148

களால் வேயப்பட்டிருந்தது. அஃது அணிலோ எலியோ புக முடியாதபடி பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்தது.[17] எருதுகள் பூட்டின பெரிய வண்டிகளின் கூடுகள்கூடக் கருநிறப் பாய் அல்லது புல்லால் வேயப்பட்டு இருந்தன. இதுவும் கூரை ஒத்த அமைப்பே ஆகும்.[18]

குடிசைகளைச் சுற்றிலும் வெட்டி நட்டு வளர்த்த முள் வேலி[19] இருந்தது. 'வாழ்முள்வேலி' என்றும் இவை அழைக்கப் பட்டன.[20] பெரும்பாலும் ஊர் எல்லையில் இருந்த குடிசை களுக்கு இவ்வாறு முள்வேலி இட்டுக் காத்தனர்.

ஆடுகளுக்குப் பட்டிகள் வைத்திருந்தனர். பட்டிகளின் கதவுக்காக, கழிகளை நெருங்க வைத்து, அவற்றை ஒரு குறுக்குச் சட்டத்தால் பிணைத்துக்கொண்டனர். இன்று படல் என வழங்கப்படுவது அக்காலத்தில், 'செறி ழிக் கதவு' எனப்பட்டது. இப் பட்டிகளில் ஆள் படுத்துறங்க ஓர் உயரமான கட்டிலும், அதற்குக் குளகு கொடியால் வேய்ந்த கூரையும் உண்டு. அதை ஒவ்வொரு நாளும் இடம் மாற்றி வைக்கவும் இயலும்.[21]

சோலைகள், பூங்காக்கள் இடையிலேயும் சில குடிசைகள் இருந்தன. அவை 'குச்சரக் குடிகை' எனப்பட்டன.[22]

மாளிகைகள், மாடங்கள்

வாணிகர்கள், அரசர்கள் முதலான செல்வர்கள் மாட மாளிகைகளில் வாழ்ந்தனர். கூடுதல் வசதிகள் பலகொண்டு அவர்களது மாட மாளிகைகள் விளங்கின. வான்தோய் மாடம்,[23] நிரைநிலை மாடம்,[24] மலைபுரை மாடம்,[25] நெடுநிலை மாடம்,[26] மங்குல்தோய் மாடம்,[27] வேயா மாடம்,[28] முகில்தோய் மாடம்[29] நீரணி மாடம் (கப்பல்களில்) முதலான சொற்கோவைகளி லிருந்து அக்கால மாடங்கள் எவ்வளவு உயரமாக இருந்தன வென்பதை அறியலாம்.[30] இதுபோன்ற பல மாடங்கள் இருந்தன. 'மாடமலி மறுகிற் கூடல்' என மதுரையும்,[31] மாட மலிமறுகிற் பீடிகைத் தெரு'[32] எனப் புகாரும் புகழப்படுகின்றன.

17 பெரும்பாண். 85-88
18 ஷை 46-50
19 ஷை 154
20 ஷை 126
21 ஷை 149
22 மணிமே. 18:145-152
23 பெரும்பாண். 333
24 மதுரைக். 451; சிலப். 2:27
25 ஷை 406
26 சிலப். 2:13
27 மணிமே. 5:58
28 சிலப். 5:7
29 ஷை 14:98
30 இக்காலத்தில் – Sky scrapers என்று வழங்குவர்.
31 முருகு. 71
32 சிலப். 6:122

அக்கால மாடங்களின் தரைத்தளம் பரந்து விரிந்ததாகவும், மேலே செல்லச்செல்ல மனைப்பரப்பு குறைந்துகொண்டு சென்றதாகவும் தெரிகின்றது. சிகரம் கண்ணால் காண முடியாத அளவு உயரமாக இருந்தது.[33] பறக்கும் பருந்துகளும் உயரத்திலேயே அமர்ந்து ஓய்வு எடுக்கும் அளவு அவை உயர்ந்திருந்தன.[34]

செங்கல், சுண்ணாம்பு

கட்டடங்கள் கட்டுவதற்குப் பெருவழக்காகப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் செங்கலும் சுண்ணாம்பும் ஆகும். சுவர்கள் திண்மையாகவும் அகலமாகவும் இருந்தன.[35] சுண்ணாம்புச் சாந்துகொண்டு கட்டடங்களைக் கட்டினர். சுண்ணாம்பாலேயே பூச்சுவேலையும் செய்தனர். அவை வெள்ளிபோலப் பளிச்சென்று இருந்தன. சுண்ணாம்பு கலந்து வெள்ளை அடிப்பதும் காவி கலந்து செம்பு போன்ற வண்ணம் பூசிப் புனைவதுமுண்டு.[36] சுண்ணாம்புப் பூச்சு, நல்ல ஓவியங்கள் தீட்டி அழகுபடுத்துவதற்கு வசதியாக இருந்தது.[37]

'இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம்'[38] என வருதல் கொண்டு சுவர்களின்மீது விட்டம் அமைத்து அதன்மேல் மாடம் அமைத்தது விளங்கும். பெரும்பாலும் மர உத்திரங்கள் பயன்பட்டன இரும்பு உத்தரங்களும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்பது பெரும்பாணாற்றுப்படை வரிகளால் அறியப்படுகிறது.[39]

அகழ்வாராய்ச்சிகள்

தமிழகத்தில் பல இடங்களில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் செங்கல் கட்டடங்கள் கிடைத்துள்ளன. இலக்கியங்களோடு அவை சாலப் பொருந்தி வருகின்றன.

திருக்காப்புலியூர்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலை வட்டத்தில் (நேர்வரை 10 57' நிரைவரை 78.15) திருக்காம்புலியூரில் நடைபெற்ற அகழ்வுகளில் சுட்ட செங்கற் கட்டடம் ஒன்றும், சுடாத

---

33 அகம். 181:21
34 மதுரைக். 501-502
35 ஷை 667
36 நெடுநல். 110-12; மணிமே. 6:43
37 'எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி,
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம்' (மணிமே. 3:129-131)
38 அகம். 167:13
39 'கருங்கைக் கொல்ல னிரும்புவிசைத் தெறிந்த
கூடத் திண்ணிசை வெரீஇ மாடம்' (பெரும்பாண். 437-8)

செங்கற்கட்டடம் ஒன்றும் கிடைத்துள்ளன. ஒரு முனையில் ஒரு மீட்டர் அகலமும் மறுமுனையில் 53.5 செ.மீ. அகலமும் உள்ள பச்சைக்கல் சுவரின் ஒரு பகுதி 61 செ.மீ. உயரம் கிடைத்துள்ளது அதில் ஆறு அல்லது ஏழு வரிசைச் செங்கற்கள் இருந்தன. செங்கல் அடுக்கியமுறை சிறப்பாக இருந்தது. அடிமட்டத்தில் 30 செ.மீ. உயரத்திற்குக் கெட்டிப்படுத்தப்பட்ட மண்தளம் இருந்தது. சுவரின் அருகில் பந்தற்கால் துளைகள் காணப்பட்டன. இதுபோன்ற சுவர்கள் இன்னும் சில பிற அகழ்வாய்வுகளிலும் காணப்பட்டனவாம்.

ஒரு சுட்ட செங்கற் கட்டடமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதில் களிமண் சாந்து பயன்படுத்தப்பட்டிருந்தது. இரண்டு அறைகளும், முன் தாழ்வாரமும் கொண்ட அங்குள்ள கட்டடம் 6.4 மீட்டர் நீளமும், 3.7 மீட்டர் அகலமும் கொண்டது. சுவரின் அடியில் கருங்கல் சல்லி, மண்ணுடன் கலந்து கெட்டிப்படுத்தப்பட்டு அடித்தளம் அமைக்கப்பட்டிருந்தது. சுமார் 13 வரிசைச் செங்கற்கள் அதில் இருந்தன. கிடைத்துள்ள கட்டடத்தின் பகுதி 1.06 மீட்டர் உயரம் ஆகும்.

கட்டடச் சுவரில் நிலைவாயில் ஏதும் காணப்படாமை குறித்து, இது தானியக் களஞ்சியமாக இருக்கலாம் என ஆய்வு அறிக்கை கருதுகிறது.[40] அது பொருத்தமாகத் தெரியவில்லை. தற்போதும் நாட்டுப்புறத்தில் இதுபோன்று இரண்டு அறைகளும் முன்தாழ்வாரமும் கொண்ட வீடுகளைக் காணலாம். உயரம் ஒரு மீட்டர் அளவே காணப்படுவதாய் நிலத்திற்குள் அடித்தளமாகப் போனதற்குமேல் எஞ்சியுள்ளது தளமட்டம்கூட இல்லையாதலின் இங்குக் கதவுகளுக்கான திறப்புகளை எதிர்பார்க்க இயலாது. எனவே, இது களஞ்சியம் அன்று; குடியிருக்கும் வீடுதான். திருக்காம்புலியூரில் ஆதிமக்கள் குடியேற்றம் தொடங்கிய காலம் ஏறக்குறைய கி.மு. 500 ஆகும். இதனால் கி.பி. பதினாறாம் நூற்றாண்டு வரை வாழ்ந்த தமிழர்களின் வாழ்க்கையைப்பற்றியும் தெரிந்துகொள்ள முடிகிறது.

அரிக்கமேடு

புதுச்சேரிக்கு அருகில் உள்ள அரிக்கமேட்டிலும் சில செங்கற் கட்டடங்கள் கிடைத்துள்ளன. இங்கு உரோமானியர் குடியிருந்ததாகத் தெரிகிறது. இங்குக் களஞ்சியம் ஒன்றின் மிகப் பெரிய சுவர் காணக்கிடக்கின்றது. இது சுமார் 46 மீ. நீளம் உள்ளது.

---

40 Mahalingam, T.V., *Excavations at Lower Cauvery Valley*, p. 18



ஒளிப்படம் 4

செங்கல் கட்டட அமைப்பு
(அரிக்கமேடு, புதுச்சேரி)

நன்றி : இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை – 9

தரைமட்டத்திற்குக்கீழ் 1½ மீ ஆழத்திலிருந்து இது எழுப்பப் பட்டுள்ளது. சல்லியோடு மண் கலந்து கெட்டிப்படுத்தப்பட்ட அடித்தளம் சுவரின் அடியில் காணப்படுகிறது.

தண்ணீர்த் தொட்டி ஒன்றும் இங்கு உள்ளவற்றில் குறிப் பிடத்தக்கது. சுமார் 3 மீ. ஆழம் உடையது இந்தத் தொட்டி. அடியில் அகலம் குறைந்தும் மேலே வரவர அகன்றும் இது இருந்தது. மண்ணினையே சாய்வாக வெட்டிவைத்துக்கொண்டு அதன்மீது செங்கல் அடுக்கிச் சுவர் அமைக்கப்பட்டு இருந்தது. பல புதைசாக்கடைகள் செங்கல் கட்டடங்களாக அமைக்கப் பட்டிருந்தன. பரந்த இடத்திற்குத் தளம் பாவப்பட்டும் இருந்தது. இந்த இடம் துணிகளுக்குச் சாயம் தோய்க்கும் தொழிற்சாலையாக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதன் காலம் சுமார் கி.மு. முதல் நூற்றாண்டுக்கும் கி.பி. முதல் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதாகும்.

புகார்

காவிரிப்பூம்பட்டினத்திலும் பல செங்கற் கட்டடங்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளதை முன்னரே கூறினோம். குறிப் பாகப் புத்தவிகாரையின் கட்டடங்கள் மிகச் சிறப்பாக உள்ளன.

இந்த அகழ்வாய்வுகள் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள கட்டடங்களின் பொறியியல் நிலைகள் உயர்வுநவிற்சி அன்று என்பதை வெளிக்காட்டி உறுதிப்படுத்தும் செய்திகளாக அமைந் துள்ளன.[41]

அழிவுகள்

எனினும் தமிழகத்தில் பெருநகரங்கள், பெரிய மாளிகைகள் ஏதும் அகழ்வுகளில் கிடைக்கவில்லை. தீவிரமாக அகழ்வு ஆராய்ச்சிகள் தொடர்ந்து மேற்கொண்டால் கிடைக்கலாம். தானாகவே அழிந்துபோனவை தவிர, பகை காரணமாக மன்னர் களால் போர்க்காலங்களில் அழிக்கப்பட்டவையும் மிக அதிகம். நகரங்களை அழித்ததோடன்றிக் கழுதை ஏர் பூட்டி உழுதல் மன்னர்களின் வெற்றிச் சிறப்பாகப் பேசப்படுகிறது.[42] மக்க

---

41 புறம். 15:3, 392:6; மணிமே. 3:127 மதுரைக். 351:58; அகம். 167:4; நெடுநல். 110.11,

42 Indian Archaeology, 1963-64; 1964-65; 1965-66; A Review

ளிடையே பழைமைச் சிறப்பைப் பாதுகாக்கும் பண்பு குறைந் திருந்தமை அழிவுக்கு ஒரு காரணமாகும்.[43]

குவிமாடம்

நெடுநிலை மாடங்களில், இறுதி மாடம் குவிமாடங்களாக இருந்தன அவற்றின் வடிவம் அரைவட்ட வடிவமாக இருந்தது. வெண்சுதையால் அவை ஆக்கப்பட்டிருந்தன.[44] குவிமாடங்கள் பொறியியல் முறைகளின்படி இரண்டு வகையாக அமைக்கப்படும். கல்லுக்குக்கல் நீட்டிக்கொண்டே வந்து அமைத்தல் ஒரு வகை. இதைக் காரபெல்[45] என்று ஆங்கிலத்தில் கூறுவர். தமிழகத்தில் இந்த முறையே இருந்ததாகத் தெரிகிறது. அந்தப் பழக்கம் தொடர்ந்துவந்து தஞ்சைப் பெரியகோயில், கங்கைகொண்ட சோழபுரம் கோயில்கள் முதலிய விண்ணை முட்டும் பெருங் கோயில்களாக எழக் காரணமாக அமைந்தது. கற்களைத் தாங்கி களின்மீது வளைவாக அடுக்கிக்கொண்டே வந்து, கடினமான தலைக்கல் போட்டு மூடுதல் வளைவு[46] எனப்படும்.

மதலை மாடம்[47]

பெரிய கட்டடங்களில் தெருவோரத்து நெடுஞ்சுவரில் தனி யாக ஒரு மாடம் துருத்திக்கொண்டு இருக்கும். இங்கிருந்து பெண்கள் வீதியில் வருகின்ற ஊர்வலங்களைக் காணுவர்.[48] தூண்களின் தலைப்பில் அமைந்த போதிகைக்கு மேலே அதற்கு மேலே வரும் உத்திரங்களைத் தாங்குவதற்கு ஒரு நீட்டித்த பகுதி இருக்கும். இதற்கு 'மதலை' என்று பெயர். இதுபோன்ற மதலை

---

43 கங்கைகொண்ட சோழபுரத்தில் இராசேந்திர சோழன் முதலாகப் பல சோழ மன்னர்கள் இருந்து ஆண்ட சோழ மாளிகை இன்று மண் மேடாக உள்ளது. அந்த மாளிகையின் அடித்தளத்திற்குப் பயன்பட்ட செங்கற்களைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பெயர்த்து எடுத்துச் சென்று வீடு கட்டுவதற்குப் பயன்படுத்துகின்றனர். பின் ஒரு காலத்தில் அகழ்வு செய்யும்போது அங்கு அடித்தளம்கூட மிஞ்சாது. மதுரையில் திருமலை நாயக்கர் காலத்து மதில் ஒன்றும் அவ்வாறே அழிக்கப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியின்போது மதுரையை விரிவுபடுத்தும்போது அந்த மதில் இடையூறாக இருக்கவே அதை இடிக்கவேண்டுமென முடிவு செய்தனர். எளிய வழியாக அதில் உள்ள கற்களை இலவசமாக இடித்து எடுத்துக்கொண்டு போகலாமென அறிவித்தார்கள். விரைவில் பொது மக்கள் தத்தம் தேவைக்கு வேண்டிய கற்களை எடுத்துச் சென்று விட்டனர். மதிலும் அகன்றது. தமிழகத்தின் பண்டை நிலைமையைக் காட்டும் வரலாற்றுச் சின்னங்கள் பல இவ்வாறே அழிந்துபோயின.

44 புறம். 378:6

45 Corbel – தண்டியக்கட்டு

46 Arch

47 Balcony

48 பெரும். 2:7:45-47

களின்மீது அமைக்கப்படும் சிறிய மாடம் 'மதலை மாடம்' எனப் படும். வீட்டுப் புறா இரைதேடுவதற்கு மன்றம் செல்லாமல் தன் பேடையுடன் இரவுபகல் பாராது இன்புற்று மயங்கி இம் மதலையில் தங்கியதாக இலக்கியம் கூறுகிறது.[49]

அரமியம், நிலா முற்றம்

இவை கட்டடங்களிலிருந்த நிலாக் காயும் பகுதி. பல மாளிகை களில் இறுதி மாடம், வேயா மாடமாக-நிலா முற்றமாகப்-பயன் பட்டது.[50] வேனிற்காலத்தில் இரவுப்பயன் துய்த்து இன்பம் காணும் இடமாக இஃது அமைந்திருந்தது. 'கதிர் மாடம்' என்று அவை அழைக்கப்பட்டன.[51] மாதவி வீட்டில் 'நிலவுப்பயன் கொள்ளும் நெடுநிலா முற்றம்' இருந்தது[52] வேறுபல பொது மகளிர் வீடுகளிலும் நிலாமுற்றங்கள் சிறப்பாக அமைந்திருந்தன. மாடங்களில் மட்டுமன்றி வீட்டின் முன்னாலும் முற்றங்கள் அமைக்கும் பழக்கம் இருந்துள்ளது. 'பொற்கொடி மூதூர்ப் பொழிலாட் டமர்ந்தாங்கு, எற்படு பொழுதின் இளநிலா முன்றில்'[53] எனவும் 'இளநிலா முன்றிலின் இளவெயில் நுகர'[54] எனவும் கூறப்படுகின்றன.

அந்தப்புர மாளிகை முன்னால் அமைந்த நிலாமுற்றம் ஒன்றினை நெடுநல்வாடையில் காண்கிறோம்.[55] நிலைவாயிலை அடுத்துள்ள பரந்த நிலப்பரப்பில் புதிய ஆற்றுமணல் பாவப் பட்டிருந்தது. ஒருபுறம் அன்னப்பறவைகள் ஆடிக் களித்தன. பிறிதொருபுறம், ஆண்புரவிகள் போருக்குச் சென்றதனால். பெண்பரிகள் தனிமைத் துயரில் புல் மேய்ந்துகொண்டே எழுப் பும் ஒலிகள் கேட்டன. நடுவில் செயற்கையாய் அமைத்த அருவி வீழ்ந்துகொண்டிருந்தது. அதைக் கண்ணுற்ற மயில்கள் முகில் கண்டாற்போன்று தோகை விரித்து ஆடின. இவற்றையெல் லாம் எண்ணும்போது எத்தகு துயரையும் மாற்றவல்ல இயல் புடைய இன்பச் சூழல் அமைவதில் கருத்தைச் செலுத்தினர். என்று தெரிகின்றது.

நிலாமுற்றத்தின் சிறப்பு அதற்கு வேண்டிய தனிமையே ஆதலின், அது சாதாரண மக்கள் வீடுகளின் மாடங்களில் அமைந் திருந்தன. மன்னர்களின் மாளிகைகளிலும், பொதுமகளிர் வீடு

---

49 நெடுநல். 45-48
50 சிலப் 5:7
51 பெருங். 1:33:60
52 சிலப். 4:31
53 ஷ 14:82-83
54 ஷ 14:103
55 நெடுநல். 95

களிலும், இல்லத்தின் முன்பகுதியிலும் நிலாமுற்றம் அமையும் வகையில் தொட்டிக்கட்டு வீடுகளாக[56] அமைந்தன.

முன்றில், முற்றம்

அரச மாளிகை, கோயில் ஆகியவற்றின் முன்னால் அமைந்த முற்றம் வேறு பலவகைகளிலும் பயன்பட்டது. பொதுமக்கள் திரள, போர்வீரர்கள் கூட, உற்றார் உறவினர் ஒன்றுசேர, ஆடல் மேடைகள் அமைக்க, இன்னும் எண்ணற்ற செயல்களுக்கு இந்த முற்றம் பயன்பட்டது.

பெருநகரத்தின் முற்றம் ஒன்றில் யானை கட்டுவதற்கான தறிகள் அமைக்கப்பட்டு யானைகள் கட்டப்பட்டிருந்தன.[57] எழில் மிக்க இன்னொரு மாடத்தின்முன் மகளிர் கழங்காடும் காட்சி கூறப்படுகிறது.[58]

முற்றங்களின்முன் மணல் பரப்பி அழகுபடுத்துதல் பெரு வழக்காக இருந்தது.[59] அவ்வப்போது பழைய மணலை மாற்றி விட்டுப் புதிய மணல் பரப்புவது வழக்கம்.[60]

பள்ளியறை

மாளிகைகள், பயன்பாட்டிற்கேற்பப் பல அறைகள்கொண்டு விளங்கின. குறிப்பாகப் பள்ளியறைகள் வசதியாக அமைக்கப் பட்டிருந்தன. பருவ காலங்களுக்கு ஏற்பவும் பள்ளியறைகள் இருந்தன. குளிர்காலத்திற்குத் தனியாகவும் வேனிற்காலத் திற்குத் தனியாகவும் பள்ளியறைகள் இருந்தன.

வேனிற்காலப் பள்ளியறை மேல்மாடத்தில் அமைந் திருந்ததை 'வானுற நிவந்த மேனிலை மருங்கின், வேனிற் பள்ளி ஏறி மாணிழை' என்னும் அடிகளால் உணரலாம்.[61] குளிர்காலப் பள்ளியறை மாடங்களின் இடைநிலத்தில் இருந்தன. மாதவி 'நெடுநிலை மாடத்து இடைநிலத் தாங்கோர், படையமை சேக் கைப் பள்ளியுள் வீழ்ந்தாள்'[62] என்றும், கண்ணகி 'வேனிற்பள்ளி

---

[56] இதனைச் சதுரக்கட்டு வீடுகள் என்றும் கூறுவர். நான்குபுறமும் கட்டடங்களும் நடுவில் திறந்தவெளி முற்றமும் கொண்டு வை அமைந்திருக்கும்.

[57] பெரும்பாண். 435-36

[58] ஷை 332-5

[59] நெடுநல். 90; மணிமே. 1:58

[60] மணிமே. 1:51

[61] சிலப். 8:17

[62] ஷை 13:69-70

மேவாது கழிந்து, கூதிர்ப்பள்ளி குறுகினாள்'[63] என்றும் வருவன கொண்டு இவற்றை அறியலாம். பள்ளியறைகள் தென்றல் தவழும்வண்ணம் அமைந்திருந்தன.[64] பள்ளியறைகளில் பல ஓவியங்கள் வரையப்பட்டு அணி செய்யப்பட்டிருந்தன. வஞ்சியில் வேண்மாளின் பள்ளியறை விதானமும்,[65] மதுரையில் பாண்டிமா தேவியின் பள்ளியறை விதானமும்[66] ஓவியங்கள் பல தீட்டப்பட்டு எழிலோடு விளங்கின.

அந்தப்புரம்

மாளிகையில் மகளிர் தங்குமிடம் தனியாகவும் ஒதுக்குப் புறமாகவும் அமைந்திருந்தன. பாண்டியன் நெடுஞ்செழியன் தன் அமைச்சரவைக் கூட்டம் முடிந்ததும், பணிப்பெண்டிர் சூழக் கோப்பெருந்தேவியின் கோயிலை நோக்கிச் சென்றான்[67] என்பதிலிருந்து தனி அந்தப்புரம் அமைந்திருந்ததை அறியலாம். இது மிகுந்த காவலை உடையதாக இருந்தது. பெருமைமிக்க தலைவனைத் தவிர, பிற ஆண்கள் அந்தப்புரத்திற்குச் செல்ல முடியாது.[68]

காற்றோட்டம்

இல்லங்கள், மனைகள், மாளிகைகள், மாடங்கள் ஆகியவற்றில் காற்றோட்டத்திற்கான ஏற்பாடுகள் விரிவாகஇருந்தன. குறிப்பாகத் தென்றல் காற்றுத் தடையின்றித் தாராளமாக வருவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. காற்று எளிதாக வர வாய்ப்பாக வீடுகள் பல புழைகளுடன் அமைக்கப்பட்டிருந்தன.[69] காற்று வரும்படி சாளரங்கள் நேருக்கு நேர் அமைக்கப்பட்டிருந்தன.[70] பொன்னால் அணி செய்யப்பட்ட மாடத்தில் கல்லைக் குடைந்து அமைக்கப்பட்ட காற்று வழிகள் அமைக்கப்பட்டிருந்தன.[71] வானம் முட்ட வளர்ந்த மாடத்தின் மேல்நிலையிலுள்ள வேனிற்காலப் பள்ளியறையில் தென்றல் காற்றுத் தடையின்றிவரும் அமைப்புகள் இருந்தன.[72] வண்டுடன் இணைந்த தென்றல், சாளரங்களின் குறுகிய கண்களின் வழியாக வந்தனவாம்.[73] இந்தச் சாளரத்தின் புழைகள் மானின் கண்

---

63 சிலப். 4:60-61
64 ஷெ 4:27-28, 6:110
65 ஷெ 27:203-204
66 நெடுநல். 159-65
67 சிலப். 16:137-139
68 நெடுநல். 106-107
69 மதுரைக். 358
70 நெடுநல். 61-62
71 மணிமே. 4:52-53
72 நெடுநல். 60-61
73 சிலப். 23:24

களைப்போல அமைந்திருந்தனவாம்.[74] குளிர்காலத்திற்கு ஏற்ப இந்தக் கண்கள் மிகவும் சிறியனவாகவும் அமைந்திருந்தன.[75] சாளரங்கள் வரிசையாக மணி கோத்து அழகு செய்யப்பட்டு இருந்தன.[76]

விசிறி, தறி

இயற்கையாக வரும் காற்று, போதிய அளவு வராத இடத்தில் பனை ஓலையால் ஆன விசிறியைப் பயன்படுத்தினர். அந்த விசிறியின் அழகே தனி. பனை ஓலையால் ஆன விசிறியில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. முத்துகள் முனையில் பதிக்கப்பட்டு இருந்தன. சிறற்பறவையின் சிறகு விரித்தாற்போன்று அவை இருந்தன. அதன் கைப்பிடியில் பவளம் பதிக்கப்பட்டிருந்தது.[77] கைதேர்ந்த கம்மியனால் அவை செய்யப்பட்டன. விசிறியைச் சுருக்கிச் சுவரில் உள்ள ஒரு தறியில் மாட்டுவது வழக்கம்.[78] 'ஆலவட்டம்' எனவும், 'செங்கேழ் வட்டம்' எனவும் அதனை அழைத்தனர்.

சுவரில் தறி ஏற்கெனவே பொருத்தப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது. விசிறி மாட்டுவதற்குள்ள தறிபோல வேறு பல பொருள்களை மாட்டுவதற்கும் ஏற்பாடுகள் இருந்திருக்கும். அவ்வப்போது சுவரில் ஆணி அடிக்கும் பழக்கத்தினும் வேண்டும் இடங்களில் முன்னரே தறிகள் அமைப்பது சிறந்ததன்றோ!

தூண்கள்

மாளிகைகளில் அமைந்துள்ள தூண்கள் வனப்பு மிக்கனவாக இருந்தன. பீடம், குடம், கால், பொதியல் எனப் பல அழகு உறுப்புகளைக்கொண்டு அவை மிளிர்ந்தன. நன்கு முதிர்ந்த மரங்களில் தூண்கள் செய்யப்பட்டன. அதன் தலைப்பு மலர்ந்த குவளை மலர் போன்ற உருவில் அமைந்திருந்தது.[79] தூண்களுக்கு மேலும் கீழும் பொன் பட்டையிட்டுப் பாதுகாப்புச் செய்தனர்.[80] வேங்கை மரத்தால் தூண்கள் செய்தனர். பெரியதாகவும் உயரமாகவும் அழகான பொதியல் உடையதாகவும் அவற்றை அமைத்தனர்.[81] மரகதமணி, வயிரம், பவளம் முதலியன பொன்னோடு சேர்த்து அணிசெய்த வேதிகைகளுடன் கூடிய

---

74 சிலப். 15:8; இவ்வமைப்பு தற்கால 'reinforced cement concrete jelly, and steel grill' போன்று கருங்கல் அல்லது கல்லால் ஆனதாகும்.

75 சிலப். 14:101

76 ஷி 2:22

77 பெருங்: 1:33.214-15

78 நெடுநல், 57-58

79 ஷி 82-83

80 பெருங். 1.34:135

81 பெரும் பாண். 252

தூண்கள் இருந்தன.[82] சித்திரக்கூடத்துத் தூண்களுக்குப் பொற் இடுகு அணிவித்திருந்ததோடு, முத்துவடம் கோக்கப்பட்டும் இருந்தது [83] விழாக் காலங்களில் முத்துமாலைகளைப் புதுப்பித்து அணி செய்தலும் வழக்கம்.[84]

இங்குப் பொற்கிடுகு என்றது உலோகத் தகடுகளாகும். அவை நன்கு தேய்க்கப்பட்டு மின்னும் வகையில் இருந்தன. போதிகைகளை மலர்ந்த மலர்கள்போல் அமைப்பதில் ஒரு பொறியியல் சிறப்புண்டு. தூண்களின் குறுக்குவெட்டுத் தோற்றத்துப் பரப்புச் சிறியதாக இருக்கும். மேலே வரும் உத்திரத்தின் பாரத்தை நேரடியாக மாற்றுவது நல்லதன்று. அதனால் அதிகப் பரப்புடைய பொதியலை மேலே வைத்து, உத்திரத்தின் பாரத்தைத் தூணுக்குப் பாதுகாப்பாக மாற்றினர். மலர்ந்த மலரின் பீடம் குறுகியும் மேலே விரிந்தும் உள்ளதால் போதிகைகள் மலர் வடிவத்தில் அமைக்கப்பட்டன எனத் தெரிகிறது. செய்வோரின் அழகு உணர்விற்கேற்ப எழில் சேர்ப்பதற்காக எந்த மலரை வேண்டுமாயினும் தேர்ந்தெடுத்து அதன் உருவில் போதிகை அமைத்தனர். பார மிகுதியால் தூண்கள் பிளந்து விடாமல் இருப்பதற்காக மாழைத் (பொன்) தகட்டால் காப்புகள் அமைத்தனர்.

அணிசெய்வதில் மனிதனின் உணர்வு காலங்கள்தோறும் மாறிக்கொண்டே வந்ததால், தூண் அமைப்பில் ஒருவித வளர்ச்சியைக் காணலாம். அந்த வளர்ச்சியை முறையாக ஆராய்ந்து, காலங்களை நிர்ணயிக்கின்றனர். கட்டடக்கலை மூலம் காலங்களை ஆராய்வது இன்னும் தொடக்கநிலையிலேயே உள்ளது. சீரிய, தொடர்ந்த ஆராய்ச்சி இதில் நல்ல பலன் தரும்.

கதவு, நிலைகள்

காலதர் (சாளரம்) சிறந்து விளங்கியதுபோலவே நல்ல வேலைப்பாடு மிகுந்த கதவுகளும் இருந்தன. கதவுகள் மரத்தால் செய்யப்பட்டன; எண்ணெய் பூசப்பட்டுக் கருமை வண்ணத்துடன் திகழ்ந்தன. கொற்றவையின் உருவம் படங்குப்[85] பகுதியில் (கதவுநிலையின் மேல்சட்டத்தில்) பொறிக்கப்பட்டிருந்தது.[86] சோழர் மாளிகைகளின் கதவுகளில் புலியின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது.[87] கதவுகள் நிலைகளில் பொருத்தப்பட்டிருந்தன.

---

82 சிலப். *5:147-149*
83 பெருங். *1:34-135*
84 மணிமே. *1:48-49*
85 Lintel
86 மதுரைக். *353-354*
87 பட்டினப். *40*

அவை முதிர்ந்த மரத்தால் ஆனவை. கதவுப் பலகைகள் பல வற்றைக் கைதேர்ந்த தச்சர் இணைப்புத் தெரியாமல் இணைத் தனர். நெய் பூசி அவை அணிசெய்யப்பட்டிருந்தன.[88] கதவுகள் கெட்டியாக இருப்பதற்காக இரும்புப் பட்டைகள் கொண்டு இணைக்கப்பட்டிருந்தன.[89] கதவுகளை நிலையுடன் பொருத்திப் பூட்டிக்கொள்ள வாய்ப்பான தாழ்ப்பாள்கள் இருந்தன.[90] நிலை யுடன் பொருந்திய கதவுகள் திறக்கும்போதும் மூடும்போதும் ஓசையிட்டன.[91] ஓசையை நீக்க எண்ணெய் இட்டனர்

வாயில் கதவுகள் மிக உயரமாக அமைக்கப்பட்டன. முழுக் கதவையும் திறத்தல் வேண்டாக் காலங்களில், உள்ளே நுழையக் கதவுக்குள் கதவாகச் சிறிய கதவுகள் இருந்தன. அது 'புதவம்' என்றும், 'புதவக் கதவம்' என்றும் சொல்லப்பட்டது.[92] சிறிய வீடுகளில்கூடப் புதவம் இருந்ததைச் சிலம்பில் வரும் கீரந்தை வீட்டைக்கொண்டு அறியலாம்.[93]

விளக்குகள்

வீட்டையும் நகரத்தையும் ஒளிமயமாக்கும் விளக்குகள் அமைப்பும் அக்காலத்தில் சிறந்து விளங்கியது. இருளகற்றும் விளக்குகள் வகைவகையாக அமைந்திருந்தன. எண்ணெயும் திரியும்கொண்டு அவை எரிந்து சுடரொளி தந்தன. மண்ணாலும், இரும்பாலும், பிற உலோகங்களாலும் ஆன அகல்விளக்குகள் புழக்கத்திலிருந்தன.[94] இடங்களில் நிலையாக அமைக்கும் விளக்குகள் பாவை விளக்காக இருந்தன. அப் பாவைகள் பேரெழில் வாய்ந்தவையாக இருந்தன. தமிழ்நாட்டுத் தச்சர்கள் செய்தது மட்டுமன்றி, யவன நாட்டுக் கலைஞர்கள் செய்த பாவை விளக்குகளும் புழக்கத்திலிருந்தன. பாவை உருவத்தில் கையில் ஏந்திய அகலில், எண்ணெயும் திரியும் இட்டு ஏற்றிய விளக்கு 'பாவை விளக்கு' எனப்பட்டது. இவ்வகை விளக்குகள் இன்றும் தமிழகத்துத் திருக்கோயில்களில் ஏராளமாக உள்ளன.

மாலைவேளையில் வீதிதோறும் விளக்குகள் ஏற்றப் பட்டன.[95] இரவில் எல்லாக் கடைகளிலும் ஒளிவிளக்குகள் மிளிர்ந்தன. புகார் நகரத்தின் அல்லங்காடி விளக்குகள் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தன. அங்கு மிகுந்த வேலைப்பாடு

---

88 நெடுநல். 82–86
89 ஷை 80
90 ஷை 62–63
91 மதுரைக். 667
92 நெடுநல். 63; சிலப். 11:119
93 சிலப். 23:43
94 நெடுநல். 42
95 சிலப். 6:128

அமைந்த 'கைவினை விளக்கு', துளையில் திரியமைத்து ஏற்றி வைத்த 'ஊழுறு விளக்கு', அணையாது எரிந்துகொண்டிருந்த 'ஒழியா விளக்கு' முதலியவை இருந்தன.[96]

கலங்கரைவிளக்கம்

கடற்கரை ஊர்களிலும் நகரங்களிலும் முதன்மையான உறுப்பு அதன் கலங்கரைவிளக்கமே ஆகும். புகார் நகரிலும் கலங்கரைவிளக்கு கடற்கரையின் ஓரத்தில் அமைந்திருந்தது.[97] கலங்கரைவிளக்கங்கள் வானத்தையே தாங்கும் மதலைகள் போல உயர்ந்திருந்தன. இவை இருந்த இடம் கூரை வேயாத மாடமாக இருந்தது. ஏறி இறங்குவதற்கு ஏணி அமைப்புகள் அங்கு இருந்தன.[98]

இருக்கை, கட்டில்

கட்டடக் கலையோடு சேர்த்து எண்ணப்படுவது கட்டில் அமைப்புகளாகும். கட்டில்கள் தந்தந்தால் செய்து மணிகள் பதிக்கப்பட்டிருந்தன. பெருந்தச்சன் மயன் செய்தாற் போன்ற மணிக்கால் கட்டிலில் கோவலனும் கண்ணகியும் இருந்தனராம்.[99] கால்கள் சிம்மம்போல அமைந்திருந்தனவாம். அரசுகட்டில் எனப்படும் கொற்றவனிருக்கை 'அரிமான் ஏந்திய அமளி' எனப் படுகிறது.[100] அரசுகட்டிலிலேயே வெண்கொற்றக் குடையும் பொருத்தப்பட்டிருந்தது.

பாண்டியன் மாளிகையின் அந்தப்புரக் கட்டிலின் வேலைப் பாடு கூர்ந்து கவனிக்கத்தக்கது. நாற்பது வயதுடைய யானையின் திரண்ட கொம்புகளை எடுத்துக் கட்டிலுக்குக் கால்கள் செய் தனர். திறம் மிக்க கம்மியர் கூர் உளிகொண்டு அதனைச் செதுக்கி எடுத்தனர். கால்களின் அடிப்பாகம் உள்ளிப்பூண்டைப்போல இருந்தது. இடையிடையே புடைதிரண்டு, குடங்கள் அமைக்கப் பட்டு எழிலோடு அமைந்திருந்தன. கட்டிலின் மேற்பகுதியில் முத்துப் பதித்த தொங்கல்கள் மாட்டப்பட்டிருந்தன. கட்டிலின் அடிப்பலகையில் புலியின் உருவம் செதுக்கப்பட்டிருந்தது. பக்கங் களில் மான்வேட்டையாடும் காட்சி செதுக்கப்பட்டிருந்தது. அக்

---

96 சிலப். 6:134-145
97 ஷெ 6:141
98 பெரும்பாண். 346-51
99 சிலப். 2:12
100 ஷெ 20:22, 26:1-2

கட்டிலின்மேல் பஞ்சணை விரிக்கப்பட்டிருந்தது. அன்னங்களின் சேர்க்கையின்போது உதிரும் தூவிகள் நிறைந்த மெத்தை, அதில் காம்பாய்ந்த முல்லைப்பூ தூவப்பட்டிருந்தது; எழிலும் இனிமையும் ஒருங்குசேர அமைந்திருந்த கட்டில் அது.[101] வஞ்சியில் அமைந்திருந்த வேண்மாளின் பள்ளியறைக் கட்டிலும் இதே போன்று பொலிவு பெற்றிருந்தது.[102]

பூங்கா மண்டபம்

அரசன் வீற்றிருந்த மண்டபம் ஒன்றின் முழுப் படத்தைச் சாத்தனார் வாயிலாக அறியலாம். மகத வினைஞர், மராட்டக் கம்மர், அவந்திக் கொல்லர், யவனத் தச்சர், தமிழ்நாட்டுக் கலைஞர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு கட்டிய கண்கவர் மண்டபம் அது. இந்த மண்டபத்தின் கால்கள் பவளம் பதித்து அமைக்கப்பட்டிருந்தன. போதிகை பல்வகை மணிகளால் அழகு செய்யப்பட்டிருந்தது; போதிகை கூடும் கோணச் சந்திகள் முத்துமாலைகள் தொங்கவிடப்பட்டு அழகுடன் விளங்கின. அதன் கூரை பொன்னால் வேயப்பட்டிருந்தது. மண்டபத்தின் மேற்பகுதி (விதானம்) சிறந்த கலை வேலைப்பாடுகளுடன் விளங்கியது. தரைப்பகுதியும் பொன்னால் அமைந்திருந்தபடியால் பைஞ்சேறு கொண்டு மெழுகும் நிலை அதற்கு இல்லை.[103] இந்த மண்டபம் பூங்காவின் மையப்பகுதியில் அமைந்திருந்தது. இது இக்காலத்துப் பூங்காக்களின் மையத்தில் அழகுக்காக அமைக்கப்படும் மண்டபத்தைப் போன்றது.

பாடிவீடு

சேரன் செங்குட்டுவன் கங்கை வெற்றிக்குப்பின் அமைத்துக் கொண்ட பாடிவீடு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. தாற்காலிகத் தங்குமிடமாயினும் எல்லா வசதிகளும் உடையதாக அஃது அமைந்திருந்தது. அது 'வெள்ளிடைப் பாடி' என்று அழைக்கப்பட்டது. **மன்பெருங்கோயில், மணிமண்டபங்கள், பொன் அரங்கம், புனைபூம் பந்தர், உரிமைப்பள்ளி, விரிபூஞ் சோலை, திருமலர்ப் பொய்கை, வரிகாண் அரங்கம்** முதலான இடங்களுடன் பெருமன்னர்க்கேற்ற அனைத்து வசதிகளும் கொண்ட அமைப்புகள் உடையனவாய் அது அமைக்கப்பட்டது.

---

101 நெடுநல். *115-135*
102 சிலப். *27:200-209*
103 மணிமே. *19:107-115*

இந்த வசதிகள் அனைத்தும் ஆரிய மன்னர் அழகுற அமைத்துத் தந்தவை.[104] பாண்டியன் நெடுஞ்செழியனின் பாசறையின் காட்சியும் நெடுநல்வாடையில் காணப்படுகிறது.

பீடிகை

பீடம் என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது பீடிகை ஆகும். இது தரைமட்டத்திற்கு மேலே சற்று உயரமாக இருந்தது. இதுவே பின்னர் 'அதிட்டானம்' என வழங்கப்படுகிறது.

புகார் நகரத்தில் நாளங்காடிப் பூதத்தின் முன்பு ஒரு பீடிகை இருந்தது. முதுபெரும் பெண்டிர் பொங்கலிட்டுப் பூவும் புகையும் வைத்து இப் பீடிகைகளில் படைப்பது வழக்கம். வீரர்கள் தம் தலையை அரிந்துவைத்து உயிர்ப்பலி அளிப்பதுவும் இங்கே தான்.[105] வணிகர் தெருவில் பீடிகை இருப்பது பெருவழக்காக இருந்தது. மாடங்கள் பல மலிந்த தெருவாயினும் அது 'பீடிகைத் தெரு' என்றழைக்கப்பட்டது. புகாரிலும் மதுரையிலும் அவை இருந்தன.[106]

மன்றங்கள்

ஒவ்வொரு நகரத்திலும் பலவகை மன்றங்கள் இருந்தன. புகார் நகரத்தில் இருந்த ஒருசில மன்றங்கள் குறிப்பிடத்தக்கன. வெள்ளிடை மன்றம் என்பதில் போவோர் வருவோரெல்லாம் தம் பெயர் பொறித்து வந்தனர். இலஞ்சிமன்றத்தின்முன் ஒரு திருக் குளம் இருந்தது. 'நிழல்கால் நெடுங்கல் நின்ற மன்றம்' என்பதி லிருந்து இது வெறும் தூண்களைக்கொண்டு சுவர் இன்றி நின்ற மன்றம் என்று கொள்ளலாம். தூண்களின் நிழல் படிந்ததிலிருந்து சுற்றுச்சுவர் இல்லை என அறியப்படுகிறது. நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம் போன்று இது இருந்திருக்கும் என்று தோன்றுகிறது. பூதசதுக்கத்தில் பலிபீடம் இருந்தது. ஆனால், படிமம் இருந்ததா எனத் தெரியவில்லை. பாவை மன்றத் தில் பெண்ணின் படிமம் இருந்திருக்கலாம்.[107]

கோட்டங்கள்

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா' என்பது மிகவும் பிற்கால வழக்கு. எனினும், சங்ககாலத்திலும் பல

---

104 சிலப். 27:17-24
105 ஷெ 5:59-88
106 ஷெ 15:60-61, 16:102-104, 22:77
107 ஷெ 5:111-138

கோயில்கள் இருந்ததை இலக்கியங்கள் காட்டுகின்றன. கோயில்கள் 'கோட்டங்கள்' எனப்பட்டன. காடு, சோலை, ஆற்றிடைக் குறை, ஆற்றங்கரை, குளக்கரை, ஊரின் நடுவே அமைந்திருந்த சதுக்கங்கள், பல சாலைகள் கூடிய சந்திகள், பொது மன்றங்கள், தூண்கள் போன்ற பல்வேறு இடங்களில் வேலன் கோயில்கள் இருந்தன.[108]

வீரங்காட்டி மடிந்த மறவர்களுக்கு வீரவாழ்த்துப் பாடி, நடுகல் எடுத்து வழிபடுவது அக்கால வழக்கம். நடுகற் கோயில்கள் பெரும்பாலும் பாதையோரத்தில் அமைந்திருந்தன.[109] நடுகற்களுக்குக் கட்டுக்கோயில்கள் ஏதும் இருந்ததாவெனத் தெரியவில்லை. எனினும் இரண்டு பக்கக் கற்கள், பின்னால் ஒரு கல், தலையில் ஒரு மூடுகல் போன்ற அமைப்பு இருந்திருக்கும் என்று தெரிகின்றது. பின்னங்கல்லில் வீரனின் உருவம் செதுக்கப்பட்டு இருக்கும். பக்கக் கற்களில் அவ் வீரனின் பெருமை எழுதப்பட்டு இருக்கும். சங்ககால நடுகற்கள் ஏதும் தமிழகத்தில் கண்டுபிடிக்கப்படவில்லையாயினும், சங்கம் மருவிய காலத்தில் கிடைத்தவை கொண்டு இவற்றின் முற்கால நிலைமையை ஊகித்து அறிய முடிகிறது.

மதுரைப் புறஞ்சேரியில் ஐயைகோட்டம் அமைந்திருந்தது. நடுவூரில் மன்றம் அமைத்து அதைச் சுற்றிலும் பிடுங்கி நட்ட முள்வேலி அமைந்திருந்தது; தெய்வம் மேற்கொண்ட பெண்கள் ஆடிச் சுற்றிவர வசதியாகப் பரந்து விரிந்திருந்தது.[110]

மேலும் நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயில், உவணச்சேவல் உயர்த்தோன் நியமம், மேழி வலனுயர்த்த வெள்ளை நகரம், கோழிச்சேவல் கொடியோன் கோட்டம், அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளி முதலியன இருந்தன.[111]

புகாரில் பல கோயில்கள் இருந்தன. பிறவா யாக்கைப் பெரியோன் கோயில், அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயில், வால்வளை மேனி வாலியோன் கோயில், நீல மேனி நெடியோன் கோயில், மாலை வெண்குடை மன்னவன் கோயில், நால்வகைத் தேவர், மூவாறு கணங்கள் போன்ற சிறு கடவுளர் கோயில்கள், அறவோர் பள்ளி, அறன் ஓம்படை, புறநிலைக் கோட்டம் ஆகிய பல்வேறு கோட்டங்கள் இருந்தன.[112]

---

108 முருகு. 222-26
109 புறம். 260:26-28
110 சிலப். 12:4-11
111 ஷெ 14:7-11
112 ஷெ.5:169-181,மதிற்புறத்தே உள்ள அறநிலையங்கள்

மற்றும் அமரர் தருக்கோட்டம், வெள்யானைக் கோட்டம், புகர் வெள்ளை நாகர்தங் கோட்டம், பகல்வாயில் உச்சிக் கிழான் கோட்டம், ஊர்க்கோட்டம், வேற்கோட்டம், வச்சிரக் கோட்டம், புறம்பணையான் வாழ்கோட்டம், நிக்கந்தக்கோட்டம், நிலாக்கோட்டம் போன்ற வேறு பல கோட்டங்களும் புகாரில் இருந்தன.[113] கட்டடங்கள் இல்லாமல் திறந்த வெளியில் வேல், வச்சிரம் போன்றவற்றை நட்டு, சுற்றிலும் வேலி அமைத்த பகுதிகள்கூடக் கோட்டம் என அழைக்கப்பட்டதை அறிகிறோம். அமரர் தரு என்பதிலிருந்து தனி மரங்கள்கூடத் தேவகோட்டமாக வழிபடப்பட்டதை அறிகின்றோம்.

காவிரியாறு கடலோடு கலக்கும் முன்துறையில் காமவேள் கோட்டம் அமைந்திருந்தது. அதன் தொடர்புடையதாக இரண்டு திருக்குளங்களும் அங்கு இருந்தன. அவை சோம குண்டம், சூரியகுண்டம் என அழைக்கப்பட்டன.[114] இது கோயிலோடு குளம் அமைக்கும் பழக்கத்தை உணர்த்துகிறது.

மற்றும் கொடுஞ்சிறை நீக்கிய கோட்டம், பொருள்புரி நெஞ்சிற் புலவோன் கோயில், அருள்புரி நெஞ்சத்து அறவோர் பள்ளி, அட்டிற்சாலை, அருந்துநர் சாலை[115] முதலியனவும் இருந்தன. இளங்கோவடிகள் அரசு துறந்து இருந்தது குணவாயில் கோட்டம் எனப்பட்டது. இது வஞ்சியில் இருந்தது.

திருமால் கோயில்

கோயில்களில் உருவ வழிபாடு இருந்ததை உணர முடிகின்றது. உருவங்கள் சுதையால் ஆனவையா, கல்லால் ஆனவையா எனத் தெரியவில்லை. புகாரில் இருந்த திருமால் கோட்டத்தில், தெய்வப் படிமம் அரவின்மேல் துயில்கொள்ளும் கிடந்தகோலத்தில் அமைந்திருந்தது.[116] திருமாலின் பாம்பணைப் பள்ளிக்கோலம் பெருவழக்காக இருந்ததைப் பெரும்பாணாற்றுப் படையாலும் அறியலாம்.[117] திருவரங்கத்தில் ஆயிரம் தலைகொண்ட பாம்பின்மீது துயிலும் படிமம் இருந்தது.[118] வேங்கடமலையின்மீது இருந்த திருமால் படிமம் நின்ற திருக்கோலத்தில் இருந்தது. இடையில் ஆடையும், மார்பில் மணி ஆரமும், கைகளில் சங்கு சக்கரமும், அருகில் வில்லும் கொண்டு அந்த உருவம் விளங்கியது.[119]

---

113 சிலப். 9:9-13
114 ஷ்ை. 9:59
115 மணிமே. 20:7.
116 சிலப். 10:9-10
117 பெரும்பாண். 373
118 சிலப். 11:35-40
119 ஷ்ை. 11:41-51

திருவரங்கத்திலிருந்து மதுரை செல்லும் மூன்று வழிகளில் ஒன்று திருமால் குன்றம் வழியாகச் சென்றது.[120] வஞ்சியில் ஆடகமாடம் என்றழைக்கப்பட்ட திருமால் கோட்டம் ஒன்று இருந்தது.[121] இங்கும் அரவணைப் பள்ளிகொண்ட உருவமே இருந்ததாகத் தெரிகிறது.

சிவன் கோயில்

வஞ்சியில் இருந்த சிவன்கோயிலில் தெய்வப் படிமம் இருந்தது. நெடிய உருவத்தோடு தலைமுடியில் நிலவணிந்த நிலையில் அது அமைந்திருந்தது.[122] மதுரையில் இருந்த சிவன் கோயில் வெள்ளியம்பலம் எனப்பட்டது.[123] அங்குள்ள படிமம், கொன்றைப்பூ அணிந்த சடாமுடியுடனும், நிலாப்பிறை, மழு வாள்கொண்டும் விளங்கியது.[124] உறையூரிலிருந்து மதுரை செல்லும் வழியில் கொடும்பை என்னும் ஊரின் குளக்கரையில் அமைந்த கோயிலில் பிறை, சடை, கண்ணி, சூலம் முதலியவற்றோடு உள்ள படிமம் இருந்தது.[125]

இந்திரன் கோயில்

ஆண்டுதோறும் நடைபெற்ற இந்திரவிழாவிலிருந்தே இந்திரனுக்கு இருந்த செல்வாக்குப் புலனாகும். இந்திரனின் வச்சிரம் நடப்பட்டு வணங்கப்பட்டது. இந்திரனுக்கு ஏழுவகைக் கோயில்கள் இருந்ததாகத் தெரிகின்றது. ஏழு விகாரம் என்பது ஏழு அறைகள்கொண்ட கோட்டம் எனக் கருதத் தோன்றுகிறது.[126] 'இந்திர மதம்' என்னும் பொறியியல் நூலின் அடிப்படையில் கட்டப்பட்ட கோட்டம் எனக் கருதுவாரும் உளர்.[127]

அருகர் கோட்டம்

சமணர் வணங்கி வழிபட அருகர் கோட்டங்கள் இருந்தன. மதுரையில் இருந்தது 'வான்பெரு மன்றம்' எனவும், 'இலங்கொளிச் சிலாதலம்' எனவும் வழங்கப்பட்டது. சிலாதலம் என வருதல்கொண்டு இதைக் 'கருங்கல் தளி' எனக் கொள்ளலாம்.[128]

---

120 சிலப். 11:91

121 ஷை 30:51, 26:62

122 ஷை 26:54-55

123 'அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்க் கொன்றையம் சடைமுடி மன்றப் பொதியலில் வெள்ளியம்பலம்' (சிலப். பதி. 39-41)

124 மதுரைக். 452-55

125 சிலப். 11:71-73

126 ஷை 10:14, 27:92

127 நாகசாமி, இரா., 'பூம்புகார்', தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு

128 சிலப். 10:15-25

மதுரைக்காஞ்சியில் வரும் அருகர் கோட்டமும் இதை உறுதிப் படுத்துகின்றது. அதே காலத்தில் சமணப் பெரியோர் பலர் காடுகளிலும் மலைகளிலும் இருந்த இயற்கைக் குகைத் தளங் களில் இருந்தனர். அந்தக் குகைத் தளங்களில் உள்ள படுக்கைகள் நன்கு பொளியப்பட்டு, வழவழப்பாக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம். தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அத்தகைய குகைத்தளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்தக் குகைகளில் மழைநீர் வழியாவண்ணம் இருப்பதற்காகத் தாரை அணிகள் வெட்டப்பட்டுள்ளன. மதுரைக்கருகில் உள்ள ஆனைமலைக் குகையிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டப் புகழிமலைக் குகை யிலும் அத்தகைய அமைப்பினைக் காணலாம்.

புத்த விகாரம்

பௌத்தர்களின் கோட்டங்களும் இருந்தன. பூம்புகாரில் புத்த விகாரங்கள் இருந்தனவென்பதை முன்னரே கண்டோம். அங்குப் புத்தரின் திருவடிகள்கொண்ட பீடிகைகள் இருந்தன. 'அறவோன் பங்கயப் பீடிகை பான்மையின் வகுத்து', 'ஒத்த கோயில் உளத்தகப் புனைந்து' என வரும் குறிப்புகள் கொண்டு இவற்றை அறியலாம்.[129]

இலங்கைத் தீவை அடுத்துள்ள மணிபல்லவத் தீவிலிருந்த புத்த பீடிகையின் அளவுகளைச் சாத்தனார் தெளிவாகத் தந்து உள்ளார். பகலொளி நிறைந்த இடத்தில் நிலத்திலிருந்து மூன்று முழம் (126 செ.மீ.) உயர்ந்திருந்தது. பக்கங்கள் ஒன்பது முழம் (380 செ.மீ.) நீளம் கொண்ட சதுரமாக இருந்தன. சதுரத்தின் மேல் வட்டம் அமைத்து அதன்மீது தாமரை மலர் போன்று பளிங்கினால் செய்யப்பட்டிருந்தது. அதைச் சுற்றிலும் நறுமலர் மரங்கள் சூழ்ந்திருந்தன. பறவைகள்கூட அதன்மீது பறக்காமல் அதன் தூய்மையைக் காத்துவந்தனவாம். அறவோர் இருக்கை போல அஃது அமைதியாக இருந்தது.

நகரமைப்பு

நகரமைப்புக் கலை

நகரமைப்புக் கலை சங்ககாலத்தில் தமிழகத்தில் சிறந்து விளங்கியதைப் பல இலக்கியங்களிலிருந்தும், தொல்லியல் அகழ்வு

---

129 மணிமே. 28:210-214

ஆய்வுகளிலிருந்தும் தெரிந்துகொள்கிறோம். அவை பல கோநகர் களின் அழகையும் அமைவையும் மிகத் தெளிவாக எடுத்துரைக் கின்றன.

பாதுகாப்பு

அக்காலத்தில் அண்டை நாடுகளுடன் போர் தொடுப்பது அடிக்கடி நிகழ்ந்த ஒன்றாகும். அதனால் படையெடுப்புகள் பல வற்றைத் தாங்கக்கூடியதாக நகரங்கள் இருந்தன. அவற்றில் பாதுகாப்பை முதன்மையாகக்கொண்டு பல ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. (1) காவற்காடுகள், (2) அகழிகள், (3) கோட்டை, (4) மதில்கள் (அகமதில், புறமதில்) முதலானவை அவற்றில் தலையானவை.

1. **காவற்காடுகள் (மிளை):** அடர்ந்த முள்மரங்கள் பெருமள வில் வளர்க்கப்பட்ட காடுகள் நகரக் கோட்டையைச் சுற்றிலும் வெகுதொலைவிற்கு வளர்க்கப்பட்டிருந்தன. எதிரிகள் நகரத்தை விரைவில் அணுகிடாவண்ணம் தொலைதூரத்திலேயே தடுத்து நிறுத்த இக் காடுகள் பயன்பட்டன. இக் காட்டரண் 'மிளை' எனப்பட்டது. வாழ்முள் வேலி, அருங்குழு மிளை, சூழ்மிளை, இலைசூழ் மிளை, கருமிளை எனப் பலவாறாக அவை குறிப்பிடப் பட்டுள்ளன.[130]

2. **அகழிகள்:** மிளைக்காட்டை அடுத்த இரண்டாவது அரண் அகழி ஆகும். அகழியைக் கிடங்கு எனவும் அழைத்தனர். இவை மிக்க ஆழமாக இருந்தன.[131] அருகில் ஓடும் ஆற்றுநீர் அகழி யில் பாய்ந்து எப்போதும் நீர் நிறைந்தே இருக்குமாறு பார்த்துக் கொள்ளப்பட்டது. மதுரையைச் சுற்றி வையையாற்று நீர் ஓடியது. இதனை 'வையைநீர் முற்றி மதில்பொருதக் கண்டோ மல்லாது பகைபொருதக் காணோம்' எனப் புலவர்கள் நயமாகப் பாடினர்.[132] வஞ்சிநகரின் அகழியை ஆன்பொருநை நதியின் நீர் நிரப்பியது.[133] ஆற்றுநீர் மட்டுமன்றி நகரத்தின் பல்வகை வெளிப்போக்கு நீர்களும் சுருங்கைத் தூம்பின் வழியாக ஓடிவந்து அகழியில் விழுந்தன. அவை விழுந்த வழி யானையின் துதிக்கை போன்று நீட்டிக்கொண்டிருந்ததாகத் தெரிகின்றது.[134] அகழி யைக் கடந்து கோட்டையின் வாயிலை அடையப் பாலங்கள் இருந்தன. யானை நிரைகள் ஒருசேர அணிவகுத்துச் செல்லும்

---

130 மதுரைக். 64; பெரும்பாண். 126; சிலப். 13:183, 14:62-63, 15:207

131 ஷெ. 351; புறம். 347:6

132 பரிபா. 12:9-10; கலி. 67:1-5

133 புறம். 387:33:34

134 பரிபா. 20:103-106

அளவு அகலமாகவும் உறுதியாகவும் அந்தப் பாலங்கள் இருந்தன. அவை 'சுருங்கை வீதி' என அழைக்கப்பட்டன.[135]

அகழியில் முதலைகளும் மீன்களும் நிறைந்திருந்தன. தாமரை, குவளை, கழுநீர், ஆம்பல் முதலான பல மலர்களும் பூத்திருந்தன. அவை புதிய அழகையே அளித்தன.[136] புகார் நகரத்தைப் பெண்ணாகக் காணும் புலவருக்குப் பூக்கள் நிறைந்த அகழியின் அலைகள் எழுப்பும் ஒலி அப் பெண்ணின் காலடிச் சிலம்பு ஏற்படுத்தும் ஒலியாகத் தோன்றுகின்றது.[137]

3. கோட்டை : அரண்களில் பெரியதும், வலியதும், முழுப் பாதுகாப்பானதும் கோட்டை ஆகும். இது தொடர்பாக எயில், இஞ்சி, மதில், புரிசை, ஞாயில் எனப் பல சொற்கள் வழக்கத்தில் இருந்தன.[138] தொடக்கக் காலத்தில் இவற்றில் நுணுக்கமான பொருள் வேறுபாடு இருந்தபோதிலும், காலப்போக்கில் அவற்றின் பொருள் வேறுபாடு சுருங்கிவிட்டது.

உயர்வு, அகலம், திண்மை, அருமை நான்கும் மதிலின் சிறப்பு இயல்புகளாகும்.[139] கோட்டைகள் மண்ணாலும், செங்கல் லாலும், கருங்கல்லாலும் அமைந்திருந்ததாகத் தெரிகிறது. கருங்கல்கொண்டு கட்டிய கோட்டைச் சுவர்களில் கருங்கல்லைப் பிணைக்கச் செம்பு உருக்கி இடையே வைத்துக் கட்டப்பட்ட தாகத் தெரிகின்றது. செம்பிற்குப் பதிலாக ஈயமும் பயன்பட்டு இருக்கலாம். மதில் சில இடங்களில் மண்ணாலும் கட்டப் பட்டது. வீடுகளுக்குப் பாதுகாவலாகக் கட்டப்பட்டிருந்த சில மதிற்சுவர்களின் முகத்தில் ஊகம்புல் வேய்ந்திருந்தனர்.[140] மழைக்காலத்தில் மிகையான சேதம் ஏற்படாமல் இந்த ஊகம்புல் கூரை உதவியது. மண்சுவர் என்றால் எளிதாக நினைத்திடல் கூடாது. செஞ்சல்லி மண்ணை அளவான நீர் கலந்து கெட்டித்த சுவர்கள் மிகுந்த உறுதியாக இருக்கும். அவை பெருமழையையும் எதிர்த்து நிற்கும் ஆற்றல் பெற்றவை.[141]

---

135 சிலப். 14:62-65
136 மணிமே. 28:18-22
137 ஷை 5:109-111
138 தேவநேயன், ஞா., 'பழந்தமிழர் ஆட்சி', பக். 59
139 குறள். 743
140 பெரும்பாண். 122

141 இம்மாதிரி மதில்களைக் கோவை மத்திய சிறைச்சாலையில் இன்றும் காணலாம். வீரபாண்டியக் கட்டபொம்மனின் கோட்டைகூட இவ்வாறுதான் அமைந்திருந்தது.

4. மதில்கள் : பெருநகரங்களின் மதில்கள் மிக உயர்ந்து விளங்கின. அவற்றின் சரியான உயரத்தைக் கணக்கிட்டு அறியத் தக்க குறிப்புகள் எவையும் கிடைக்கவில்லை. போர்யானைமேல் வீரர் கொடி பிடித்தவண்ணம் செல்லும் வகையில் கோட்டையின் கதவுகள் உயரமாக இருந்தன. எனவே, கோட்டைச் சுவர்கள் அவற்றினும் அதிக உயரத்தில் இருந்திருக்கக்கூடும். 'விண்ணுற வோங்கிய பல்படைப் புரிசை',[142] 'உயர்ந்தோங்கிய நிரைப்புத வின் நெடுமதில் நிறைஞாயில்'[143] முதலான குறிப்புகள் மதிலின் உயரத்தைக் காட்டுகின்றன.

மதில் வாயிலின் மேற்புறத்தே பந்தும் பாவையும் பொறித்து அணிசெய்யப்பட்டிருந்தன.[144] வஞ்சி நகரின் கோட்டை வாயிலின் மேல் சிலம்பும் தழையும் பொறிக்கப்பட்டிருந்தன.[145] பந்து. பாவை, சிலம்பு, தழை முதலானவை பெண்மையின் சின்னங்கள். அவை எதிரியை எள்ளி நகையாட அமைக்கப்பட்டன என்றும், கோட்டையைப் பெண்ணாக உருவகித்து அணியாக அமைக்கப் பட்டன என்றும் இரு கருத்துகள் அறிஞர்களிடையே உலவி வருகின்றன. மதிலின் முகப்பில் கொடிகள் அழகாகப் பறக்க விடப்பட்டிருந்தன.[146]

கோட்டைகளின் கட்டுமானத்தில் பலவகைப் பாதுகாப்பு ஏற்பாடுகள் அமைக்கப்பட்டிருந்தன. ஏராளமாகப் போர்க் கருவிகள் அமைத்து வைக்கப்பட்டிருந்தன. வெளியே ஒரு துளை மட்டுமே தெரிந்தாலும், அதற்கு உள்ளே பல திசைகள் தெரியக் கூடிய பொய்க் கண்கள் அமைக்கப்பட்டிருந்தன.[147] உள்ளே இருந்துகொண்டு எல்லாத் திசைகளிலும் ஈட்டி, வேல் முதலிய வற்றை வெளியே உள்ள எதிரியின்மீது வீசமுடியும். ஆனால், வெளியே இருந்து அவ்வாறு தாக்க இயலாது. அத்தகைய துளை கள் 'குரூஉக்கண்' எனப்பட்டன. மனித முயற்சி சிறிதளவும், எந்தி ரத்திறன் பெருமளவும் கொண்ட போர்க்கருவிகள் கோட்டைச் சுவரில் பொருத்தப்பட்டிருந்தன. பகைவர்கள் வரின் தானே அம்பு எய்து தாக்கும் விற்பொறி, குரங்கு உருவம்கொண்டு அமைந்த பொறி, கல் எறிந்து தாக்கும் கவண்பொறி, வெந்நீரைக் காய்ச்சி ஊற்றும் பொறி, வெல்லப்பாகைக் காய்ச்சி ஊற்றும் பானைப் பொறி, இரும்பைக் காய்ச்சி ஊற்றும் உலைப்பொறி,

---

142 மதுரைக். 352
143 ஷை 65-66
144 முருகு. 68-69; பெரும்பாண். 333
145 பதிற். 53:5-6
146 புறம். 17:27; சிலப். 14:215-216
147 அகம். 159:18; மதுரைக். 352

கவண் பொறிக்கு உதவியாகக் கல்லை நிரப்பி வைத்திருக்கும் கூடை, பகைவனை மீன்போல் தூக்குந் தூண்டிற்பொறி, பகைவனை முட்டித் தன் பக்கம் இழுக்கும் தொடக்குப் பொறி, ஆண்டலைப் பறவை உருவத்தில் அமைக்கப்பட்டு இருக்கும் அடுப்பு, பகைவனை நெருக்கிக் கொல்லும் கவை, பகைவனை அறியாமல் தன்மேல் விழச் செய்யும் கழுப்பொறி, தானே இயங்கி உள்ளே விழச்செய்யும் புதை கதவு, புழை அம்புக்கட்டு, மண்ணில் புதைத்த இரும்பு ஆணி, புழை என்று சொல்லக்கூடிய ஏவறை, விழுந்தவுடன் மேல்தூக்கி எறியும் ஐயவித் துலாம், கைப்பிடிகளில் கண்ணுக்குத் தெரியாமல் மறைத்து வைக்கப் பட்டிருக்கும் அவற்றைப் பிடித்தவுடன் வெளிக்கிளம்பிக் குத்தும் மறை ஊசிப் பொறி, திடீரெனப் பகைவரைச் சென்று தாக்கித் தன் இருப்பிடம் சேரும் சிரல்பொறி (மீன்கொத்திப் பறவை தாக்குவது போல), மோதித் தள்ளிக்கொண்டே இருக்கும் பன்றிப் பொறி, பகைவர் வரவை ஒலித்து அறிவிக்கும் முரசப்பொறி (பணை), மற்றும் எழு, சீப்பு, கணையம், கோல், குந்தம், வேல் முதலான போர்க்கருவிகள் மதிலில் வைக்கப்பட்டு இருந்தன.[148] ஒவ்வொரு கருவியும் ஒரு தனிப்பட்ட பயன்கருதி அமைக்கப் பட்டிருந்தது. அவை அனைத்தும் தக்க தருணத்தில் நிரல்படப் பயன்படும் வகையில், பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. யவன வாள்வீரர்கள் எந்நேரமும் கோட்டையின்மீது நின்று காத்துவந்தனர்.[149]

வாயில்கள்

மதில் அரண்களின் வாயில்கள் மிகவும் பெரியனவாகவும் அகலமாகவும் இருந்தன; போர்களில் வெற்றிபெற்ற பின்னர் யானைகள் தம்மீது பறக்கும் வெற்றிக்கொடியுடன் உட்செல்லும் அளவுக்கு மலைகளைக் குடைந்து அமைத்தாற்போன்று அகலமாகவும் உயரமாகவும் இருந்தன.[150] யானைகள் அணிஅணியாகச் செல்லும் அளவுக்கு அவை அகலமானவை.[151] அதன் அகலம் வையை ஆறு கிடந்தாற்போன்று இருந்ததாம்.[152] 'மலைதலைக் கொண்ட பேர்யாறு போலும் உலக விடைகழி'[153] எனச் சிலம்பு கூறுகிறது.

வாயில் கதவுகளில் கொற்றவையின் உருவம் பொறிக்கப் பட்டிருந்தது.[154] பூம்புகார் வாயிலின் கதவுகளில், புலியின்

---

148 சிலப். 15:207-216
149 ஷெ. 14:66-67
150 ஷெ. 10:8
151 ஷெ. 14:64-65
152 மதுரைக். 356
153 சிலப். 10:26-27
154 மதுரைக். 353-354

உருவம் பொறிக்கப்பட்டிருந்தது.[155] கதவுகள் முதிர்ந்த மரத்தால் செய்யப்பட்டிருந்தன. கைதேர்ந்த கம்மியர்கள் அவற்றைச் செய்தனர். பலகைகளை அறுத்து இழைத்து அதன் இணைப்புத் தெரியாமல் கோத்துச் செய்யப்பட்டன. வெயில், பனி முதலியவற்றால் கெடாமல் இருப்பதற்காக நெய் பூசப்பட்டுப் பாதுகாக்கப்பட்டது.[156] பெரிய இருப்புப் பட்டைகள் சேர்த்துக் கதவுகளுக்கு வலுவூட்டப்பட்டது.[157] கதவுகளை நிலையோடு இணைத்துப் பூட்டி வைத்துக்கொள்ளத் தாழ்ப்பாள் அமைப்பு இருந்தது.[158] வீட்டுக் கதவுகள் திறக்கும்போதும், மூடும்போதும் ஓசையிடுவது வழக்கம். அவ்வோசையைக் குறைக்க எண்ணெய் பூசி வைத்தனர்.[159]

வாயில் கதவுகள் மிகப் பெரியனவாக இருந்தமையால் எப்போதும் திறந்து வைத்திருத்தல் அவ்வளவு எளிதன்று. அவற்றைத் திறத்தலும் மூடுதலும் பெருஞ்சுமையாகும். அதற்காகக் கதவுக்குள் கதவாக ஒரு சிறிய கதவு பொருத்தப்பட்டிருந்தது. இரவுக் காலங்களிலும், போர்க்காலங்களிலும் இச் சிறிய கதவு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. இந்தச் சிறிய கதவிற்குப் 'புதவம்' என்று பெயர். 'புதவக் கதவம்', 'புதவம் பலவுள போகிடை கழி' முதலான சொல்லாட்சிகள் இதை உணர்த்துகின்றன.[160] பெரிய கோட்டைக் கதவுகளே அன்றிச் சிறிய வீடுகளின் கதவுகளில்கூடப் புதவம் அமைக்கும் பழக்கம் இருந்ததை அறியலாம். பொற்கைப் பாண்டியன் கதையில் வரும் கீரந்தையின் வீட்டிலும் புதவக் கதவம் இருந்ததாம்.[161]

தெருக்களும் சாலைகளும்

நகரத்திற்குப் பொலிவு தருவது அக்காலத்திய சாலை அமைப்புகளேயாகும். வீதிகள் அகலமாக இருந்தன. ஆறு கிடந்ததுபோன்று அவை அகன்று இருந்தனவாம்.[162] தமிழகத்து அகழ்வாய்வுகளில் இதுவரை தெருக்களின் அமைப்பு ஏதும் கிடைக்கவில்லை. எனினும், தமிழர்களின் மூலநாகரிகமான மொகஞ்சதாரோ அரப்பா நகரங்களில் பல சாலைகளின் அமைப்புகள் கிடைத்துள்ளன. அவற்றில் செங்கல் பரப்பிக் கெட்டி செய்யப்பட்டிருந்தது. அவையும் காலப்போக்கில் பெருந்தேர்களின் சக்கரங்கள் உருளுவதால் தேய்ந்து குண்டும் குழியுமாக ஆகிவிடுவதுண்டு. 'திண்டேர் குழித்த குண்டு நெடுந்தெரு'

155 பட்டினப். 40
156 நெடுநல். 82-86
157 ஷ 80
158 ஷ 62-63
159 மதுரைக். 354
160 சிலப். 11:119
161 ஷ 23:42-43
162 மதுரைக். 359

என வருதல் காண்க.[163] வெறும் மண்தளமாக இருந்தால் தேர் ஓட்டிக் குழிதல் குறிப்பிடத்தக்க செய்தியாகாது. அக்காலத்தில் கருங்கல் பாவிய சாலைகளும் இருந்திருக்கக்கூடும்.

தெருக்கள் பெரும்பாலும் நேர்நேராக அமைக்கப்பட்டன. நெடுங்கல் வீதி, நெடுந்தெரு, அகல் நெடுந்தெரு, பெருந்தெரு எனப் பலவாறு குறிப்புகள் வருகின்றன.[164] மொகஞ்சதாரோ, அரப்பா நகரத்துத் தெருக்கள் இணைகோடுகள் போல அமைந் துள்ளன. தாமரைப் பூப்போல அமைந்திருந்த மதுரையில் வளை வான பாதைகளும் இருந்தன. பாண்டிமாதேவியின் அந்தப்புர மாளிகையை ஒட்டிச் செல்லும் வழி வில்போல் வளைந்திருந்த தாகத் தெரிகிறது.[165] தெருச் சந்திப்புகள் 'கவலை' எனப் பட்டன. அங்குக் காவல் வீரர்களின் கண்காணிப்பு எப்போதும் இருந்தது. மாடமலி மறுகு, அத்தம், பீடிகைத் தெரு என்பன பல்வகைத் தெருக்களாகும்.[166]

நகரின் நடுவிலேயும் செப்பனிடப்படாத சாலைகள் சில இருந்தன போலும்! பட்டினப்பாலையில் ஒரு காட்சி வருமாறு: அறச்சாலை ஒன்றில் பெரிய கலங்களில் சோறு ஆக்கப்படுகிறது. அதன் கஞ்சி வடிக்கப்பட்டு ஆறுபோல ஓடுகிறது. கஞ்சி மண்ணில் பட்டு, அதன்மீது காளைகள் பொரச் சேறாகிறது. சேறு காய்ந்து அதன்மீது தேர் ஓடப் புழுதி கிளம்பிப் பரவு கிறது. இதை அறம் பெருகியதைக் காட்டும் உயர்வுநவிற்சி அணி யாகக் கொள்ளவேண்டுமே அன்றிச், சாலை பழுது எனச் சுட்டிய தாக எடுத்துக் கொள்ளல் கூடாது.[167] கண்ணகி நடந்துசென்ற காட்டுவழி 'கல்லதர் அத்தம்' எனப்பட்டது.[168]

சாலைகள் சில கருங்கல் பாவாமல் மண் தரையாக இருந்த நிலையும் உண்டு. மணல் நிறைந்த பாதைகள், தேர்கள் செல்லக் கெட்டியாகிக்கொண்டே வந்தன. முன்னே செல்லுகின்ற தேர்க் காலின் பாதையிலேயே அடுத்த தேரின் சக்கரமும் செல்வதால் வண்டித் தடங்கள் ஏற்படுகின்றன. 'பால்கண் டன்ன ஊதை வெண்மணல், கால்கண் டன்ன வழிபடப் போகி'[169] என்னும் இலக்கிய வரிகளால் இதை அறியலாம்.

நகர் அமைப்பு

நகரத்தின் முக்கியமான உறுப்பு பல்வகைப் பயன்படு கட்ட டங்கள். இவை தொடர்பாகச் சிறப்பான பல கோட்பாடுகள்

---

163 பெரும்பாண். 397; புறம். 15:1
164 ஷ்டி 397; மணிமே. 6:21; மதுரைக். 359
165 நெடுநல். 109
166 சிலப். 16:103-104
167 பட்டினப். 43-53
168 சிலப். 16:57
169 அகம். 400:15-16

அக்காலத்தில் இருந்தன என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. மன்னரின் அரண்மனைகளும், அரசாங்க அலுவலகங்களும், நீதி மன்றங்களும் நகரின் மையத்தில் அமைக்கப்பட்டிருந்தன. அங்காடிகள் அல்லங்காடி, நாளங்காடி என இரு பகுதிகளாக அமைக்கப்பட்டிருந்தன. நகர மக்கள் வாழும் இடங்கள் தனியாக இருந்தன. அதிலும் செல்வர்களின் மாளிகைகள் தனியாகவும் தொழில் செய்யும் மக்களின் மனைகள் தனியாகவும் இருந்தன. இவை தவிரவும் மக்களின் தேவைகளுக்கேற்ப அனைத்து அமைப்புகளும் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தன.

காஞ்சிமா நகர்

காவற்காடும் வயல்களும் சூழ்ந்த காஞ்சிமா நகரம் தாமரைப் பூப்போலக் காட்சி அளித்ததாகப் பெரும்பாணாற்றுப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது.[170] பாண்டிய மன்னர்களின் தலைநகரான மதுரையும் தாமரை மலரினைப் போன்று வட்ட வடிவமாக அமைந்திருந்ததாகத் தெரிகின்றது. தாமரையின் பொகுட்டுப் போல அரசனின் அரண்மனையும், அதன் இதழ்களைப்போலத் தெருக்களும் அமைந்திருந்தனவாம்.[171] தலைநகர்களில் எல்லாப் பணிகளும் அரசைச் சார்ந்ததாக அமையுமாதலின் அரச மாளிகையும் மற்ற அரசாங்க அலுவலகங்களும் நகரத்தின் நடுவில் அமைந்திருப்பது மிகவும் சிறப்பாகும், தாமரைப்பூ வடிவில் நகரங்கள் அமைப்பது பெருவழக்காகி இந்தியா முழுவதிலும் பின்பற்றப்பட்டுள்ளது. பெருங்கதையில் மகதநாட்டின் கோநகரான இராசகிருகத்தின் அமைப்பு தாமரை மலரின் வடிவத்தைப் போன்று இருந்தது என்று கூறப்பட்டுள்ளதை இதற்கு ஒரு சான்றாகக் கொள்ளலாம்.

சோழர்களின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினம்பற்றிய விவரங்களையும் நமது இலக்கியங்கள் காட்டுகின்றன. சிலப்பதிகாரமும், மணிமேகலையும், மதுரைக்காஞ்சியும், பிற சங்க இலக்கியங்களும் கூறும் செய்திகளிலிருந்து அது நீண்டசதுர வடிவில் அமைந்திருந்ததாக அறிஞர்கள் கருதுவர்.[172]

---

170 பெரும்பாண். 402-05

171 பரிபா. தி. 7:1-4

172 வேங்கடசாமி, மயிலை சீனி., 'சங்ககால வரலாற்றில் சில செய்திகள்', பக். 126-150, 'சங்ககாலத்துக் காவிரிப்பூம்பட்டினம்', அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, 1970

மதுரை

மதுரை நகரின் அமைப்பை மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம், பரிபாடல் மற்றும் பிற சங்க இலக்கியங்களின் துணைகொண்டு தெளிவாக அறியலாம். மதுரையில் மன்னனது அரண்மனை ஊரின் நடுவே அமைந்திருந்ததென முன்பே கண்டோம். மன்னனின் மாளிகையை ஒட்டி அதன் பகுதியாக அரச மங்கையரின் மாளிகைகள் இருந்தன. ஆடவர் அங்குச் செல்ல இயலாத வகையில் பாதுகாப்பு அமைப்புகளை அவை பெற்றிருந்தன. 'பீடுகெழு சிறப்பின் பெருந்தகை அல்லது ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பு' என இப் பாதுகாப்புக் கூறப்படுகிறது.[173] பாண்டிய மன்னன் தன் அரசாங்க அதிகாரிகளுடனும் அமைச்சர்களுடனும் ஆலோசனைகள் செய்தபின் காவல் நிறைந்த கோப்பெருந்தேவியின் கோயில் சென்றான்[174] என்பதாலும் இதனை அறியலாம். கோப்பெருந்தேவியின் மாளிகை எவ்வாறு இருந்ததென்பதைப் பின்னர்க் காண்போம்.

அறங்கூறவையமும் ஊரின் நடுவேயே இருந்தது.[175] அதனால் விருப்பு, வெறுப்பின்றி நீதி வழங்கும் சான்றோரின் பணியினையும் ஊரின் நடுவேயே மக்கள் பெற்றனர். நீதி வழங்குகின்ற காவிதி மக்களென்னும் அமைச்சர்கள் வாழும் தெருவும் அருகிலேயே இருந்தது.[176]

பௌத்தப் பள்ளிகள் மிகவும் பாதுகாப்புடன் அமைந்திருந்தன. மலைகளைக் குடைந்து அமைத்தாற்போன்று அந்தணர் பள்ளிகள் அமைந்திருந்தன. சமணர் பள்ளிகளும் மிகச் சிறந்த முறையில் அமைந்திருந்தன. அவை மிகவும் குளிர்ச்சியாக இருந்தன. செம்பு போன்ற வண்ணத்தில் சுவர்கள் அழகு செய்யப்பட்டிருந்தன. கல்லாலான கரண்டைகள் இருந்தன. பல உறிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. பல கலைகளிலும் சிறந்து விளங்கிய சமண முனிவர்கள் அங்கு இருந்தனர். பல்வேறு சமயங்களைச் சேர்ந்த கோயில்களும் நகரில் இருந்தன.[177] கோயில்கள் நிறைந்திருந்ததால் விழாக்களும் மிகுதியாக நடைபெற்றன. சிவன், மாயோன், முருகன் முதலான தெய்வங்களுக்குக் கோயில்களும் அமைந்திருந்தன.[178]

கடைத் தெருக்கள் வரிசையாக அமைந்திருந்தன. அவை நாளங்காடி எனவும், அல்லங்காடி எனவும் பிரிந்திருந்தன. எல்லா

173 நெடுநல். 106-107
174 சிலப். 16:137-140
175 மதுரைக். 492
176 ஷெ 499
177 மதுரைக். 481-488
178 சிலப். 14:7-11

வகையான பொருள்களும் அங்குக் கிடைத்தன. கூலங்கள், மணி வகைகள், முத்துகள், பொன் இன்னும் மக்கள் வாழ்விற்கு வேண்டிய அனைத்தும் கிடைத்தன. வண்டிகள், தேர்கள், கவசங் கள், அங்குசம், கைத்தாளம், பட்டிகை, சாமரை, வளைதடி, ஏனப் படம், கிடுகின்படம், குத்துக்கோல், செப்புப் பொருள்கள், வெண் கலப் பொருள்கள், கயிற்றுப் பொருள்கள், மாலைகள், தந்தப் பொருள்கள், நறுமணப் புகைப்பொருள்கள், சாந்துப்பொருள்கள் மற்றும் எல்லா வகையான பொருள்களும் அங்காடிகளில் கிடைத்தன.[179]

ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு வீதிவீதம் பலவகை வீதிகள் இருந்தன. இரத்தினங்கள் விற்போர் தனி வீதியில் முழுவதுமாக இருந்தனர். சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்புநதம் ஆகிய பொன் வகைகளை விற்போர் தனியாக இருந்தனர். நூல், பட்டு, மயிர் முதலான பொருள்களாலான துணிகள் விற்போர் தனித் தெருவில் இருந்தனர். கூலங்கள் எல்லாம் தனியாக ஒரு தெருவில் விற்கப்பட்டன.[180] இவ்வாறாக மதுரையில் கடைத்தெருக்களும் பல்வேறு வகை வணிகர்களின் தெருக்களும் இருந்தன.

தொழில்செய்வோர் வீதிகளும் தனித்தனியே அமைந்திருந் தன. படைப்பிரிவுகளின் தங்குமிடங்கள் தனியாக இருந்தன. நேரங்கண்டு மணி அடிக்கும் நாழிகைக் கணக்கர் வாழ்ந்து வந்தனர்.[181] கோட்டைக்கு வெளியே உழவர்கள், தங்களின் வயல் களுக்கருகிலும் வாழ்ந்துவந்தனர். மதுரையிலிருந்து திருப் பரங்குன்றம் செல்லும்வரை பல்வேறுவகைத் தொழிலாளிகளும் ஆங்காங்கு வாழ்ந்துவந்தனர்.

மன்னனது மாளிகையைச் சார்ந்து ஓர் உய்யானமும் இருந் தது. மதுரை நகரில் யானைகள் போர் புரியும் அரங்கு ஒன்று இருந்ததாகத் தெரிகின்றது. ஒரு சேரி மக்கள் பிற சேரி மக்க ளோடு பல்வகைப் போட்டிகள் நடத்துவதுண்டு. அவற்றுள் ஒன்று, யானைப்போர். ஒரு சேரி யானைகளுடன் மறுசேரி யானைகளை மோதவிட்டு அதை வேடிக்கை பார்ப்பர். மக்கள் நின்று பார்க்க உயரமான கரைகள் இருந்தன. அக் கரைகள் மண்ணாலானவை. அதில் சரளைக் கற்கள் பாவி, சரியாமலும் காத்தனர். மாயோன் திருநாளான ஓண விழாவின்போது இப் போட்டிகள் நடைபெற்றன.[182]

---

179 மதுரைக். 504-544;
சிலப். 14:168-179

180 சிலப். 14:180-211

181 முல்லைப். 55-58;
சிலப். 5:49

182 மதுரைக். 591-598

வையைத்துறை

மதுரையைச் சுற்றிலும் அகழி இருந்தது. அதன் ஒரு திசையில் வையை ஆறே அகழியாக இருந்தது. அத் துறையில், வையையைக் கடக்கப் பாலம் ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை. பல்வகைப் படகுகள் வையையைக் கடக்கப் பயன்படுத்தப் பட்டன. அப் படகுகள் குதிரைமுகம், யானைமுகம், சிங்கமுகம் ஆகியவற்றுடன் திகழ்ந்தன.[183]

பூம்புகார்

பண்டை நகரங்களுள் பெருஞ்சிறப்புடன் விளங்கியது பூம்புகார் நகரம் ஆகும். அது சில காலம் சோழர் தலைநகரமாகவும் இருந்தது. அது மிகச் சிறந்த கட்டடக் கலை அமைப்புடன் விளங்கியதை நமது இலக்கியங்களிலிருந்தும் தொலலியல் அகழ்வுகளிலிருந்தும் அறிகிறோம் பூம்புகார் ஒரு கடற்கரை நகரம். அதனால் துறைமுகச் சிறப்பும் சேர்ந்திருந்தது. வெளி நாட்டு ஏற்றுமதி இறக்குமதி வணிகம் இதன் தனிச் சிறபபு. வெளிநாட்டுக் கலங்கள் வந்து தங்குவதற்கான துறைமுகம் அங்குச் சிறந்து விளங்கியது. கலங்களை வழிப்படுத்தும் கலங்கரைவிளக்கம் முதலாகப் பல்வகைப் பொறியியல் கட்டட அமைப்புகள் சிறந்து விளங்கிய பெருநகரம் அது

பூம்புகார் இரு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என அவை அழைக்கப் பட்டன. அவற்றின் இடையில் பெருஞ்சோலை ஒன்று இருந்தது. அதில் பகல்வேளையில் கூடிய சந்தையை 'நாளங் காடி' என்பர். மருவூர்ப்பாக்கத்தில் பல்வேறு வகைத் தொழில் கள் செய்கின்ற எளிய மக்கள் வாழ்ந்தனர். காழியர், கூவியர், கள் விற்பனையாளர், மீன்விலை கூறும் பரதவர், உப்பு விற்பனை செய்வோர், பாசவர், வாசவர், ஊன் விற்போர், ஓசுநர், கஞ்சகாரர், செம்புவேலை செய்வோர், மரவேலை செய்யும் தச்சர், இரும்புவேலை செய்யும் கொல்லர், ஓவியர், மண்பொம்மை செய்வோர், பொன்வேலை செய்யும் கொல்லர், நன்கலம் தருநர், தையல்வேலை செய்பவர், தோற்பொருள் செய்பவர், பல்வேறு வகைக் கைத்தொழில் செய்பவர், பாணர் முதலானோர் தனித்தனி வீதிகளில் வாழ்ந்து வந்தனர்.[184] சோழ மன்னரின் படைவீரர்களும் மருவூர்ப்பாக்கத்திலேயே வாழ்ந்

---

[183] சிலப். 13:176-178

[184] சிலப். 5:24-29

தனர்.[185] புகார்த் துறைமுகத்திற்கு வந்த கலங்களைச் செலுத்தி வந்த மாலுமிகளும், வெளிநாட்டிலிருந்து வந்து காவல் முதலான பல தொழில்களில் ஈடுபட்டிருந்த யவனர்களும் இங்கு வசித்த தாகத் தெரிகிறது.[186] துறைமுகத்து ஏற்றுமதி இறக்குமதிப் பொருளான பலவகைக் கூலங்கள் குவித்து வைக்கப்படும் கூல வீதியும் மருவூர்ப்பாக்கத்திலேயே இருந்தது.[187]

பூம்புகாரின் இன்னொரு பகுதி பட்டினப்பாக்கம் ஆகும். இது மன்னனும் உயர்ந்த குடிமக்களும் வாழ்ந்த இடம் எனத் தெரிகின்றது. கோவியன் வீதி, கொடித்தேர் வீதி, பீடிகைத் தெரு, பெருங்குடி வணிகர் வசிக்கும் மாடமாளிகைகள் நிறைந்த வீதி, அந்தணர் இருக்கை, உழவர்களும், ஆயுர்வேத மருத்து வரும், காலக்கணிதரும் வசிக்கின்ற வீதி, திருமணி குயிற்றுநர் வீதி, அணிவளை போழுநர் வீதி, சூதர், மாகதர், வேதாளிகர், நாழிகைக் கணக்கர், ஓவியர், காவற்கணிகையர், ஆடற்கூத்தியர், பூவிலை மடந்தையர், ஏவற்சிலதியர், பயிறொழில் குயிலுநர், பன்முறைக் கருவியர், நகைவேழம்பர் முதலியோர் வாழும் வீதி களும், குதிரை மறவர், யானைப்பாகர், தேர் ஓட்டுநர், படை வீரர் முதலான பல்வகைக் குடிகள் வாழும் தெருக்களும் நிறைந்தது பட்டினப்பாக்கம்.[188]

சிவன், முருகன், மால், பலதேவன், இந்திரன் முதலானோ ருக்கு இங்குக் கோயில்கள் இருந்தன.[189] மேலும், அமரர்தருக் கோட்டம், வெள்யானைக் கோட்டம், புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம், சூரியனுக்கான உச்சிக்கிழான் கோட்டம், ஊர்க்கோட் டம், வேற்கோட்டம், வச்சிரக்கோட்டம், புறம்பணையான் வாழ் கோட்டம், நிக்கந்தக் கோட்டம், நிலாக் கோட்டம் முதலியன வும் இருந்தன.[190] ஆண்டுதோறும் நடக்கும் இந்திர விழா அரசாங்க ஆதரவோடு நடக்கும் பெரிய விழாவாகும். அதனால் இந்திரனுக்கே பல கோயில்கள் இருந்தன. அரசனின் மாளி கைக்கு அருகில் அரச மாளிகையைவிடச் சற்றே சிறிய அளவில் தருநிலைக் கோட்டம், வச்சிரக் கோட்டம் ஆகிய இரண்டும் அமைந்திருந்ததாகத் தெரிகிறது. இரண்டும் இந்திரனுக்கான வையே.[191]

---

185 'மருவூர் மருங்கின் மறங்கொள் வீரர்' (சிலப். 5:76)

186 சிலப். 5:9-12, 6:143; பட்டினப். 216-218

187 ஷ 5:22-23

188 ஷ 5:40-58

189 ஷ 5:169-173

190 ஷ 9:9-13

191 மணிமே. 5:109-118

புகாரில் சமணர் வணங்கிடும் அருகன் கோயிலும் இருந்தது. இலகொளிச் சிலாதலம் இடப்பட்ட வான்பெருமன்றம் ஐந்து தெருக்கள் கூடுமிடத்தில் இருந்தது.[192] புத்த விகாரைகள் பலவும் பூம்புகாரில் இருந்துள்ளன. 'வானோங்கு சிமையத்து வாலொளிச் சயித்தியம்' என இவை சொல்லப்பட்டன.[193] அண்மையில் காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு புத்த விகாரையின் அடித்தளம் அகழ்வாராய்ச்சியில் தோண்டிக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூதசதுக்கம் பாவை மன்றம் என ஐவகை மன்றங்களும் புகாரில் இருந்தன.[194]

நாளங்காடி

பட்டினப்பாக்கத்திற்கும் மருவூர்ப்பாக்கத்திற்கும் இடையில் நாளங்காடி அமைந்திருந்ததை முன்னரே கூறினோம். பூம்புகார் சோழநாட்டின் தலைநகரம். ஆதலின், சோழநாட்டு விளை பொருள்கள் அனைத்தும் இங்கு வநதுதான் விலைபோக வேண்டும். அதற்கேற்ப இந்த இடம் இருபேர் அரசர்கள் பொருதும் போர்க்களம்போலப் பரந்த இடமாக இருந்தது. வாங்குவோரும் விற்போரும் திரண்டு நாளங்காடியை உயிரோட்டம் நிறைந்ததாக்கினர். திறந்தவெளியாக இருந்த பசுஞ்சோலையாக இது காட்சிதந்தது.[195] இந்த நாளங்காடியின் நடுவே மருவூர்ப்பாக்கத்தையும் பட்டினப்பாக்கத்தையும் இணைக்கும் நெடுஞ்சாலை இருந்தது. இச் சாலையின் சந்தி ஒன்றில், இக் காலச் சந்திகளில் தலைவர் சிலைகள் அமைக்கப் பட்டிருப்பது போலப் பூதசதுக்கம் அமைந்திருந்தது. சதுக்கப் பூதம் புகாரின் காவல்தெய்வம் ஆனதாலும், நீதியை நிலை நாட்டும் தன்மையுடையது ஆதலாலும் வணிகர்கள் நடுவு நிலைமையோடு நடந்துகொள்வதற்காக இச் சிலை இங்கு இருந்ததுபோலும்!

வனங்கள்

புகார் நகரில் பல வனங்கள் இருந்தன. மக்கள் ஓய்வெடுப் பதற்கும், நகரில் தூய்மையான காற்று வீசவும் வனங்கள் இன்றி யமையாதன. போக்குவரத்தினால் உண்டாகும் தூசிகளையெல் லாம் சோலைகளில் உள்ள இலை தழைகள் தடுத்துவைத்துக் கொள்வதால், காற்று தூய்மை அடைகிறது. எனவே, நகரின்

192 சிலப். 10:15-25
193 மணிமே. 28:131
194 சிலப். 5:117-138
195 ஷை 5:57-61

நடுவே வனங்கள் பல இருப்பது மிகச் சிறந்தது. அரசனும் அவன் சுற்றமும் பயன்படுத்தும் இலவந்திகைச் சோலை, உய்யானம், சம்பாவதி வனம், கவேரவனம், உவவனம் என்பன அந்த வனங் களில் குறிப்பிடத்தக்கவை. இவ் வனங்கள் நகரத்தின் எந்தெந்த இடங்களில் இருந்தனவென்பது தெளிவாகத் தெரியவில்லை.

துறைமுகம்

புகாரின் பெருஞ்சிறப்பு அதன் துறைமுகம் எனக் குறிப்பிட் டோம். மரக்கலங்கள் பாய்களைச் சுருட்டாமலேயே உள்ளே வந்துநிற்கும் அளவிற்கு அகன்றும் ஆழமாகவும் துறைமுகங்கள் இருந்தன. துறைமுகம் காவிரியின் கழிமுகத்தில் இருந்திருக்க லாம்.[196] பல்வேறு கப்பல்கள் ஒருசேரத் தங்கி இருக்கும் அளவு பெரிதாகவும் அது இருந்தது.[197] துறைமுகத்தில் பண்டங்களை எடையிட்டு, வரிவிதித்து, புலி முத்திரை குத்தி அனுப்பும் ஏற் பாடுகள் இருந்தன.[198] கடலில் வந்து இறங்கிய வேற்றுநாட்டுப் பொருள்களின் வணிகம் நடைபெறும் கடைவீதிகளும் பண்ட சாலைகளும் அருகிலேயே இருந்தன.[199] துறைமுகத்தின் இன்றி யமையாத உறுப்பான கலங்கரைவிளக்கமும் அருகிலேயே இருந்தது.[200] எனவே, புகார்த் துறைமுகம், எல்லா வசதிகளையும் கருதிப் பார்த்துத் திட்டமிட்டு அமைத்த மிகப் பெரும் வணிகத் தலம் என்பதில் ஐயமில்லை.

ஈமப்புறங்காடு

ஒவ்வொரு நகரத்திற்கும் இன்றியமையாத இடம் ஈமக்காடு. பூம்புகாரில் அமைந்திருந்த ஈமப்புறங்காட்டைப் பற்றிய விரிவான குறிப்புகள் கிடைத்துள்ளன. ஈமப்புறங்காட்டிற்கு நான்கு வாயில்கள் இருந்தன. ஒரு வாயிலில் தேர் ஒன்று எழுதப்பட்டு இருந்தது. செழுமையான கொடிகள் அங்குப் படர்ந்திருந்தன. இன்னொரு வாயிலில் நெல் கரும்புச் சூழலில் அமைந்த ஓடை, பூஞ்சோலை, சாலை ஆகியவற்றுடன்கூடிய படம் வரையப் பட்டிருந்தது. மற்றொரு வாயில் மேன்மாடத்தோடு இருந்தது. அதில் சுண்ணாம்பு பூசப்பட்டிருந்ததால் வெள்ளிபோன்று பளிச் சென்று அது விளங்கியது. நான்காவது வாயிலில் பாசக்கயிற் றோடும் பிடித்த சூலத்தோடும் நின்ற கோலத்தில் விளங்கும் மண்ணால் சுட்டுவைத்த உருவம் இருந்தது. இந்த நான்கு வாயிலையும் இணைக்கும் காவல் மிகுந்த மதில் இருந்தது.

---

196 புறம். *30:11-15*
197 பட்டினப். *172-175*
198 ஷை *129-135*
199 ஷை *185-193*
200 சிலப். *6:141*

மதிலின் உள்ளே பல்வகைக் கோட்டங்கள் இருந்தன. இறந்தோர்க்கு இறுதிக்கடன் செய்து பூசையிடுவதற்கான உயர்ந்த பலிபீடம் இருந்தது. கொற்றவைக்கான கோட்டம் இருந்தது. மாதவர், அரசர், கணவனோடு உயிர் துறந்த பத்தினிப் பெண்டிர் மற்றும் பொதுமக்களில் சிறந்தவர்க்கும் சிறியதும் பெரியதும் ஆன பல்வேறு அளவுகளில் கல்லறைகள் எழுப்பப்பட்டிருந்தன. பல்வேறு குன்றங்கள் சிதறிக் கிடந்தாற்போன்று சுட்ட செங்கல்லாலான கட்டடங்கள் அவை; அவையும் கோட்டங்கள் என்றே அழைக்கப்பட்டன. 'அருந்திறற் கடவுள் திருந்துபலிக் கந்தம்' [201] நிறைக்கல் தெற்றி,[202] மிறைக்களச் சந்தி[203] முதலியனவும் அமைந்திருந்தன. ஈமக்காட்டுப் பணியாளர்கள் ஓய்வெடுத்துக் கொள்ள, உறங்க, குடியிருக்கக் குடிசைகள் இருந்தன.

சக்கரவாளக் கோட்டத்தில் தூமக்கொடி பறந்தது; பல்வகைத் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன; ஈமப்பந்தல் போடப்பட்டிருந்தது.

மற்றும் வாகை மன்றம், வெள்ளில் மன்றம், வன்னி மன்றம், இரத்தி மன்றம், வெள்ளிடை மன்றம் முதலிய மன்றங்களும் இருந்தன.[204]

ஈமப்புறங்காட்டின் புறத்தே சம்பாபதி அம்மன் கோயில் அமைந்திருந்த ஈமக்காடு 'சக்கரவாளக் கோட்டம்' என்னும் பொதுப் பெயரால் அழைக்கப்பட்டது [205]

சக்கரவாளக் கோட்டத்தில், இந்த உலகத்தின் போலிகை உருவம் ஒன்று மண்ணீட்டில் செய்துவைக்கப்பட்டிருந்தது. கடல் சூழ்ந்துள்ளது; அதன் நடுவில் மேருமலை; மேருமலையைச் சுற்றிலும் ஏழுவகைக் குன்றுகள்; நானிலம் காட்டுகின்ற பெருந்தீவு; சுற்றிலும் ஓராயிரம் சிறுதீவுகள். அங்குள்ள நில அமைப்புகள், அங்கு வாழ்ந்த உயிரினங்கள், சூழல்கள் அனைத்தும் அமைக்கப்பட்டிருந்தன. காண்போர் அறிவுபெறும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது; மயன் என்னும் பொறியாளரால் அமைக்கப்பட்டிருந்தது.[206]

---

201 கந்தம்-தூண்

202 வரிசையாகக் கற்களை அடுக்கி அமைக்கப்பட்ட திண்ணை

203 பல பாதைகள் ஒன்றுகூடும் இடத்தில் வட்டவடிவில் அமைக்கப்பட்டிருந்த சந்தி

204 மணிமே. 6:83-91

205 ஷை 6:31

206 ஷை 6:191-202

நெய்தலங்கானல்

கடற்கரையை அடுத்துள்ள ஒரு பகுதி நெய்தலங்கானல் எனப்பட்டது. புகாரில் ஆண்டுதோறும் 28 நாள் நடைபெற்ற இந்திரவிழாவின் இறுதியில் பொதுமக்கள் இங்குவந்து கூடாரங்கள் அமைத்துக்கொண்டு மகிழ்ந்திருந்து கடலாடிச் செல்வது வழக்கம்.

மதில், அகழி

பூம்புகார் நகரைச் சுற்றிலும் கோட்டையும் அகழியும் இருந்தன. அதன் மேற்புறத்தே மகரதோரணம் அமைக்கப்பட்டிருந்தது. மதில் வானளவு ஓங்கியிருந்தது அம் மதிலும் அகழியும் எதையெதை உள்ளடக்கி இருந்தன என்பது தெரியவில்லை.

காவிரிப்பூம்பட்டினத்து அகழ்வாராய்ச்சிகள்

காவிரிப்பூம்பட்டினம் கடலுள் மூழ்கிவிட்டதாக ஒரு கருத்து நிலவிவருகின்றது. அண்மையில் நடந்த அகழ்வாராய்ச்சிகள் பல உண்மைகளைத் தந்துள்ளன. கடற்கரை ஓரம் இருந்த ஒரு சில பகுதிகள் கடலுள் மறைந்திருந்தபோதிலும் இன்னும் பெரும்பகுதி நிலத்திலேயே உள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புத்தவிகாரை

அத்தகைய கண்டுபிடிப்புகளில் முதன்மையானது, பல்லவனீச்சுரம் பகுதியில் கிடைத்துள்ள புத்தவிகாரை ஆகும். புத்த விகாரையின் அடித்தளம் முழுதும், நடுவணரசு தொல்லியல் துறையால் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. அதில் 3.5 மீட்டர் பக்கம் கொண்ட சதுரமான நான்கு அறைகள் உள்ளன. அவை சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. செங்கற்களின் அளவுகள் 42 செ.மீ., 21 செ.மீ., 10 செ.மீ. ஆகும். சுவர் 170 செ.மீ. அகலம் உள்ளது. இந்த அளவுகளில் ஒரு சிறப்புண்டு. அது இக் கட்டுரையின் இறுதியில் 'அளவுகள்' என்னும் பகுதியில் விளக்கப்படும். செங்கல் சுவர்கள் அடியில் அகன்றும் படிப்படியாக அகலம் குறைந்தும் உள்ளன. இத்தகைய பத்திரிப்புகள் (ஆப்செட்) தற்காலக் கட்டட அடித்தளத்திற்கு முன்னோடி எனில் மிகை அன்று. செங்கற்கள் அழகாகப் பொருத்தப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளன. சுவர்ப்பூச்சில் வண்ண ஓவியங்கள் இருந்ததாகத் தெரிகிறது. புத்தரின் சிறிய

செப்புப் படிமம் ஒன்று கிடைத்துள்ளது. சுண்ணாம்புக் கல்லால் ஆன புத்தரின் திருவடி ஒன்றும் கிடைத்துள்ளது.

இங்குக் கிடைத்துள்ள பொருள்களும் அமைப்பும், ஆந்திர மாநிலத்திலுள்ள அமராவதி, நாகார்ச்சுனகொண்டா முதலான புகழ்மிகு புத்தத் தலங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளவற்றோடு ஒப்புமை உள்ளனவாகக் காணப்படுகின்றன. தொல்லியலார் இதைக் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் வைப்பர். இது மிகவும் தோராயமான கணிப்பே ஆகும். உறுதியான காலக் கணிப்புக்கு இதில் வாய்ப்பு இல்லை. இன்னும், இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர்க் கட்டியிருக்கலாம் என்றும் கருத இடம் உண்டு. கோவலனின் முன்னோர் ஒரு புத்த சயித்தியம் அமைத்ததாகத் தெரிகிறது.[207] சாத்தனார் காலத்தில் ஒரு புத்தவிகாரை அமைக்கப்பட்டதாகவும் தெரிகின்றது.[208] பூம்புகாரைப்பற்றிச் சில பிராகிருத நூல்களில் குறிப்பு வருகின்றது. கி.மு. முதல் நூற்றாண்டைச் சார்ந்த 'மிலிந்தபணகா' என்னும் நூலில் 'கோலப்பட்டணம்' என்று புகார் குறிப்பிடப்பட்டுள்ளது. அகீர்த்தி என்பவன் காசிமா நகரைவிட்டுத் தமிழ்நாட்டுக் காவிரிப் பூம்பட்டினத்தில் ஒரு வனத்தில் இருந்ததாகப் புத்த சாதகக் கதைகளிலிருந்து அறிகின்றோம்.

புத்ததத்தர் என்ற பௌத்தப்பெரியார் அபிதம்மாவதாரம், புத்த வம்சாத்தகதா என்னும் நூல்களை இயற்றியுள்ளார். இவ்விரண்டு நூல்களிலும் அவர் காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 'அங்கு உயர்குடி மக்களாகிய ஆண்களும் பெண்களும் நிரம்பி வாழ்ந்தனர். அது மிகவும் விசாலமானது. ஒரு நகரத்திற்கு வேண்டிய எல்லா அங்கங்களையும் உடையது. குற்றமற்ற காவிரி நீரும் கடல்நீரும் அங்கு உள்ளன. எல்லாவித இரத்தினங்களும் அங்குக் கிடைத்தன. பல்வேறு விதமான கடைத்தெருக்கள் அங்கு இருந்தன. மனத்துக்கு இன்பம் தரும் பல வனங்கள் அங்கு இருந்தன. கைலாயத்தை ஒக்கும் சிகரங்களோடு கூடிய மாளிகைகள் அங்குச் சூழ்ந்திருந்தன. அவ்வளவு எழில் மிகுந்த காவிரிப்பூம்பட்டினத்தில் கணதாசன் என்ற சாதுவால் கட்டப்பட்ட மனத்துக்குகந்த விகாரம் ஒன்று இருந்தது. அதில் அழகிய பல திருச்சுற்றுகளும் கோபுரங்களும் இருந்தன. அங்குப் பழமையான மாளிகையில் இருந்தபோது இந் நூலை இயற்றினேன்' என்று புத்ததத்தர் குறிக்கின்றார். அவர் தாம் இயற்றிய 'விநயவிநிச்சியம்' என்னும் நூலில், சோழ

207 மணிமே. 28:123-133 208 ஷை 28:214

நாட்டை அச்சுத விக்கிரந்தன் என்ற களப்பிர மன்னன் ஆண்ட போதுதான் இந் நூலை இயற்றியதாகக் குறித்துள்ளார். எனவே, இவர் சிலப்பதிகார மணிமேகலை காலத்திற்குச் சற்றே பிற் பட்டவர்.[209] அகழ்வாய்வில் கிடைத்துள்ள புத்தவிகாரம் மேலே குறிப்பிட்டுள்ள நான்கு புத்த விகாரங்களுள் எதுவாகவும் இருக்க லாம். அகழ்வாராய்ச்சியாளர்கள் சிலர் கருதுகிறபடி கி.பி. 4ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகத்தான் இருக்கவேண்டும் என்ற நியதி இல்லை. அதற்கு முன்னதாகக் கட்டப்பட்ட புத்த விகார மாகவும் இருக்கலாம்.

வானகிரித் தூம்பு

வானகிரிப் பகுதியில் ஒரு குளத்தின் பகுதி ஒன்று தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. இப் பொய்கை பிறைநிலா வடிவில் உள்ளது. சுட்ட செங்கல்லால் ஆன சுவர்ப்பகுதி நல்ல நிலையில் உள்ளது. சுவரில் தூம்புப் பகுதி ஒன்று இரு பக்கங்களிலும் வளைவுகளுடன் அமைந்துள்ளது. அதன் அகலம் 84 செ.மீ. அக்காலத்து ஒரு கோலின் சரியான அளவு இதுவாகும் (பின்னர் இதுபற்றி விரி வாகச் சொல்லப்படும்) இது பொய்கையினுள்ளே தண்ணீர் செல்லுவதற்கான வழியாக இருக்கலாம் என்று தொல்லியல் அறிக்கை கூறுகின்றது. கனமான சுவரில் உள்ள செவ்வகத் துளை யின் வழியே தண்ணீர் செல்லும்போது, நீர்த்துமுளியின் பாதை சுவருக்கு இணையாக அமையாமல் நடுவில் ஒரு கழுத்துப்போலக் குறுகி, பின்னர் அகன்று செல்லும். அதனால் நீர்புகுமுனையை அகலமாகத் தொடங்கி, குறுகலாக முடிப்பது நீரியலார் மரபு. அப்போதுதான் பெரும் நீர்ப்போக்கு இருக்கும். இந் நியதிக் கேற்பவே இத் தூம்பு அமைந்திருப்பது அக்காலப் பொறியியல் புலமைக்குச் சான்றாகின்றது. எனவே, இக் கட்டடத்தில் உள்ள வாயின் அமைப்பு வெளியேயிருந்து, குளத்தினுள்ளேயிருந்த தண்ணீர் வெளியே செல்ல அமைந்த தூம்பு ஆகும் என்பதைக் காட்டுகிறது.[210] எனவே, சுவரின் வளைவுகொண்டு இது வெளிப் போக்கு என்று உறுதியாகக் கூறலாம்.

இதன் மேல்மட்டம் செங்கல் நெருக்கத்தால் மூடப்பட்டு இருந்தது. வளைவுக்கூரை குத்துக்கல்லால் மூடப்படவில்லை. செங்கற்களை நெருக்கி வைத்துக் கட்டும் முறையே அக்காலத் தில் தமிழகத்தில் நிலவி வந்ததென்று இதன் மூலம் அறியப்படு கிறது. இதுவே பின்னர் வளர்ந்து வந்து தஞ்சைப் பெரியகோயில் விமானம் அமைய வழிசெய்தது.

---

209 நாகசாமி, இரா., 'பூம்புகார்', பக். 11-12, தமிழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1973

210 'கொங்கு' 3ஆம் தொகுதி, பக். 97, புகார்த்தூம்பு, கொடியன்



ஒளிப்படம் 5

நீர்த்தேக்கம்
(வானகிரி, தஞ்சை மாவட்டம்)

நன்றி : இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை-9

ஒளிப்படம் 6

புலி உருவமுள்ள சோழர்கால நாணயம்
(காவிரிப்பூம்பட்டினம்)

நன்றி: இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை-9

உறைக்கிணறு

கடற்கரை ஓரங்களில் உறைக்கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சுடுமண் உறைகள் இறக்கப்பட்டு மேலே கெட்டியான களிமண் பூசப்பட்டு விளங்கின. பட்டினப்பாலையில் 'உறைக் கிணற்றுப் புறச்சேரி' என்று வருவதோடு இதனை ஒப்பிட்டு உண்மை அறியலாம்.

காசுகள்

பூம்புகார்ப் பகுதியில் ஏராளமாகப் பழங்காசுகள் கிடைத்துள்ளன. அவற்றில் சதுரமாகவும் வட்டமாகவும் உள்ள காசுகள் பல இருந்தன. இக் காசுகளின் முன்புறம் வாலைத் தூக்கி நிற்கும் புலியின் உருவமும், அதன்மேல் சூரியனின் உருவமும் காணப்படுகின்றன. இவை கரிகாலன் காலத்தவையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. அமரர் தருவைச் சின்னமாக உடைய பண்டைய காசு ஒன்றும், காவிரிப்பூம்பட்டினத்தில் கிடைத்துள்ளது. அது இப்பொழுது சென்னைச் சாந்தி சதனத்தாரிடம் உள்ளது. வெள்ளையன் இருப்பு என்னும் இடத்தில் உரோமானியச் செப்புக் காசு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முந்தியது. பூம்புகாரில் யவனரிருக்கை இருந்ததை இவை உறுதிப்படுத்துகின்றன.[211]

பிற நகரங்கள்

மதுரை, புகார் தவிர வேறு பல நகரங்களும் சங்ககாலத்தில் சிறந்து விளங்கின. எனினும் அவற்றை விரிக்காது, பொறியியல் நுட்பம் காணும்போது ஆங்காங்கே குறிப்பிடப்படும்.

நீர் வழங்கல்

ஒரு நகரத்திற்கு இன்றியமையாதது மக்களின் தூய்மைக்கும் உண்ணுவதற்குமான நல்ல நீராகும். 'நீரின்று அமையாது உலகு' என வள்ளுவரும் கூறிப்போந்தார். நகரங்களில் உள்ள பெரும்பாலான வீடுகளில் உறைக்கிணறுகள் இருந்தன. சுட்டமண்ணால் ஆன உறைகள் இறக்கப்பட்டு, அதைச் சுற்றிலும் கெட்டிக் களிமண்கொண்டு பூசப்பட்டது. இத்தகைய உறைக்கிணறுகள் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் தோண்டி எடுக்கப்பட்டு உள்ளன. அரிக்கமேடு, வசவசமுத்திரம், கொற்கை, புகார் முதலான இடங்களில் உறைகிணறுகள் கிடைத்துள்ளன. உறைக் கிணறுகள் பெரும்பாலும் மணற்பாங்கான இடங்களிலேயே

211 நாகசாமி, இரா., மு. கு. நூ., பக். 16

கிடைத்துள்ளன. 'தொட்டனைத் தூறும் மணற்கேணி' என்னும் குறளும் கிணறுகளின் தன்மைக்குச் சான்று.

மணற்பாங்கான இடம் தவிர, மற்ற இடங்களிலும் ஆழ் கிணறுகள் தோண்டப்பட்டதாகத் தெரிகிறது. 'வல்லூற்று' என வரும் தொடரால் ஆழ்கிணற்றை உணரலாம். கொங்குநாடு போன்ற பாறைப் பாங்கான இடத்தில் பாறைகளை உடைத்துக் கிணறு தோண்டினர். கடப்பாரையால் பாறையில் துளை செய்து, அதில் வெடிமருந்து வைத்துக் கெட்டித்து, வெடித்துக் கிணறு தோண்டத் தண்ணீர் ஊறும்.[212]

குளங்கள், வாவிகள்

எல்லா வீடுகளிலும் கிணறு இருக்குமென்று எதிர்பார்க்க இயலாதன்றோ? பொதுமக்கள் பயன் கருதி ஊர்தோறும் பொதுக்குளங்கள் இருந்தன. மக்கள் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் அவற்றிலிருந்து நீர் எடுத்துச் சென்றனர். குளத்தில் நீராடி மகிழ்வது அக்கால மக்களின் பொழுதுபோக்காகவும் இருந்துள்ளது. பெருங்குடி மகளிருங்கூடப் பொதுக் குளங்களில் நீராடிக் களித்தனர். 'வளமனை மகளிர் குளநீர் அயர' என்பதால் இதனை அறியலாம்.[213] கோயில்களை அடுத்திருந்த குளங்களுக்கு ஒருசில புனிதத் தன்மையும், மருத்துவத் தன்மையும் கற்பித்துக்கொண்டு நீராடி வந்த விவரம் காணப்படுகிறது. 'புதல்வரைப் பயந்த புனிறுதீர் கயக்கந் தீர்வினை மகளிர் குளன்ஆ டரவமும்' என்பது காண்க.[214] புகார் நகரில் நெய்தலங்கானலில் காமவேள் கோட்டத்தருகே சோமகுண்டம், சூரியகுண்டம் என இரண்டு குளங்கள் இருந்தன. கோவலன் பிரிந்தபொழுது கண்ணகியை அக் குளங்களில் மூழ்கிவரத் தேவந்தி கோரியபோது 'பீடன்று' என மறுத்துவிடுகிறாள்.[215]

எந்திர வாவிகள்

வளமனைகளில் தத்தம் சொந்தப் பயனுக்காகத் தனியே வாவிகள் அமைத்துக்கொண்டிருந்தனர். அவை எந்திர வாவிகள் எனப்பட்டன. அவை தற்கால நீச்சல் குளம்போன்று இருந்தன எனக் கருத இடம் உண்டு. 'எந்திர வாவியில் இளைஞரும் மகளிரும் தந்தமில் ஆடிய சாந்துகழி நீரும்' என்பதால் இது புலனாகும்.[216] வேண்டும்போது நிறைத்துக்கொள்ளவும், அழுக்கு

---

212 பதிற். 22:12-14
213 மதுரைக். 603
214 மணிமே. 7:75-76
215 சிலப். 9:54-64
216 மணிமே. 28:7-8

நீரை வெளியேற்றவும் போதுமான எந்திர சாதனங்கள் இதில் இருந்தன. இந்த நிலையினை 'நிறைக்குறின் நிறைத்துப் போக் குறின் போக்கும் பொறிப்படை அமைந்த பொங்குஇல வந்திகை' என்னும் பிற்காலப் பெருங்கதை வரிகளால் அறியலாம்.[217]

இலவந்திகை

பொதுஇடங்களில், உய்யானங்களில் மக்கள் மகிழ்ந்திருப் பதற்கேற்ற 'இலவந்திகை' எனப்படும் பொதுக்குளங்கள் அமைக்கப்பட்டன. மற்றும் கிணறுகளும் பொய்கைகளும் அமைக்கப்பட்டன. அவற்றோடு செய்குன்றங்கள், செயற்கை அருவிகள், ஒளித்துறை இடங்கள், பளிங்கு மண்டபங்கள் முதலியன அமைக்கப்பட்டன.[218]

சிந்துவெளியில் அகழப்பட்ட அரப்பா நகரில் கிடைத்துள்ள வற்றில் குறிப்பிடத்தக்கது ஒரு பொதுக்குளம் ஆகும். நீர் நிரப்பவும், போக்கவும் வசதிகள் உள்ள ஒரு முழுக்குளம் அது. 'வளமனை மகளிர் குளநீர் அயர போன்ற சங்கநூல் செய்தி களைக் காணும்போது பொதுமக்களின் வசதிக்காகக் கட்டப்பட்ட பொதுக்குளம் என்பது தெளிவாகிறது.

கழிவுநீர் வடிகால் அமைப்புகள்

மக்கள் நாகரிகத்தின் ஒரு படியாக, அவர்கள் கழிவுநீரை எப்படி அகற்றினர் என்று காணும் நிலைமை உள்ளது. பண்டைத் திராவிட நாகரிகமான சிந்துவெளி அரப்பா, மொகஞ்சதாரோ நகரங்களிலேயே 'கரந்துபடை' எனப்படும் புதைசாக்கடைகள் இருந்தன. வீடுகளிலிருந்து வரும் கழிவுநீரைப் புதைசாக்கடை வழியாக வீட்டிற்கு வெளியே கொணர்ந்து, அவ்வாறு பல வீடு களிலிருந்து வருவனவற்றை ஒன்றாகத் திரட்டி, ஊருக்கு வெளியே கொண்டுசெல்லும் அமைப்பு இருந்தது. அரிக்கமேட்டு அகழ்வாராய்ச்சியிலும் விரிவான புதைசாக்கடை அமைப்புக் கிடைத்துள்ளது.

தமிழகம் முழுவதிலும் பல அகழ்வாராய்ச்சிகளில், இத்தகைய கரந்துபடைகள் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. உறை

---

217 பெருங். *1:40:311-12*

218 'எந்திரக் கிணறும் இடுங்கற் குன்றமும்
வந்துவீ ழருவியும் மலர்ப்பூம் பந்தரும்
பரப்புநீர்ப் பொய்கையுங் கரப்புநீர்க் கேணியும்
ஒளித்துறை யிடங்களும் பளிக்கறைப் பள்ளியும்'
(மணிமே. *19:102-105*)

யூர் நகரில் தோண்டியபோது ஒருசில செங்கல் கட்டடங்கள் கிடைத்தன. அதில் ஒன்று ஒரு சிறிய தண்ணீர்த் தொட்டியாகும். துணிகளைச் சாயம் தோய்ப்பதற்காக அத் தொட்டி அமைக்கப் பட்டிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். அதில் இருந்து தண்ணீரை வெளியே போக்குவதற்குச் செங்கல்லாலான கரந்துபடைகள் அமைக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்து உள்ளனர். உறையூர் துணிநெசவிற்குப் பேர்பெற்றிருந்தது என்பதை இங்கு நினைவுகூரலாம். புதுச்சேரியை அடுத்துள்ள அரிக்கமேட்டுப் பகுதியிலும் பல கட்டடங்கள் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அங்கும் சாயம் நனைப்பதற்கான தொட்டிகளும் கரந்துபடைகளும் இருந்தன. இங்குக் கரந்து படையின் விரிவான அமைப்புக் காணப்படுகின்றது. இரண்டு தொட்டிகளிலிருந்து வெளியாகும் கழிவுநீர் தனித்தனியே வந்து, பின்னர் ஒன்றாகச் சேர்ந்து வெளியே செல்லும் அமைப்பு விரி வாகப் பேசப்படுகிறது. வஞ்சி மாநகரத்தில் வீடுதோறும் உண்டாகும் பல்வகைக் கழிவுநீர் ஒன்றாகத் திரண்டு, கரந்து படை எனப்படும் சுருங்கைகளின் வழியாக ஓடிச்சென்று கோட்டையின் அகழியில் விழுந்தன.[219] செங்கல்லாலான சுருங் கைகள் அன்றி, கருங்கல்லைத் தோண்டியும் இத்தகைய கால் வாய்கள் அமைத்திருந்தனர்.[220] நீர் வெளியே அகழிகளில் விழுந்த இடம், யானையின் துதிக்கைபோல நீண்டு இருந்தது.[221] தெருவில் சென்ற கரந்துபடைகள், வீதியின் நடுவில் அமைந் திருந்ததாகவும் தெரிகிறது.[222] பொதுவாகச் 'சுருங்கை' என்னும் சொல் 'நீர் அடியில் செல்லும் அமைப்'பிற்கு வழங்கப்பட்டது. இதுவே பின்னர்ச் சுரங்கம் என்னும் சொல்லாக மாறியிருக்க லாம்.

அளவுகள்

கட்டடக்கலையின் இன்றியமையாக் கூறு அதன் அளவுகள் ஆகும். அக்காலத்திலேயே 'நிலைவு செய்யப்பட்ட அளவுகள்'[223] இருந்துள்ள விவரம் காணக்கிடைக்கின்றது.

மாதவி நல்லாள் ஆடிய மேடையின் அமைப்பினைச் சொல்லும்போது, அக்காலத்தில் வழங்கிய அளவுகள்பற்றி இளங்கோவடிகள் சிறப்பாகக் கூறுகின்றார்.[224] மலைகளில் வளர்ந்த நல்ல மூங்கிற்கோல் அளவுகோலாகப் பயன்படுத்தப்

219 மணிமே. 28:4-16
220 மதுரைக். 730
221 பரிபா. 20:104-107
222 ஷை 20:104-107
223 Standardized Units
224 சிலப். 3:95-131

பட்டது. அந்தக் கோல் 24 விரல்[225] நீளம் இருந்தது. அதன் கணுவுக்குக் கணு, ஒரு சாண் இருந்தது.

இப் பகுதிக்கு உரை எழுதிய அரும்பதவுரைகாரர் 'ஒத்த அணு முதல் உயர்ந்துவரு கணக்கில் உத்தமன் பெருவிரல் இரு பத்துநாலு கொண்டது கோல்' என்னும் பழம்பாடல் பகுதியை மேற்கோள் காட்டுவதிலிருந்து நீட்டல் அளவுகள்பற்றி அறியலாம். இதனை மேலும் விளக்குமுகத்தான் அடியார்க்குநல்லார் கீழ்க்கண்டவாறு கூறுகிறார். இப் பகுதியில் அடியார்க்குநல்லார் இன்னும் கூடுதல் விவரம் தருகின்றார்.

'அணு எட்டுக் கொண்டது தேர்த்துகள்
தேர்த்துகள் எட்டுக் கொண்டது இம்மி
இம்மி எட்டுக் கொண்டது எள்ளு
எள்ளு எட்டுக் கொண்டது நெல்லு
நெல்லு எட்டுக் கொண்டது பெருவிரல்'

என்றும், 'உத்தமராவார் கழிய நெடுமையும், கழிய குறுமையும் இல்லார்' எனவும் குறிப்பிடுகிறார்.[226]

இந்தக் கோலின் உண்மையான அளவுகளைக் கண்டுபிடிக்க நல்ல அடிப்படைச் சான்றுகள் சில கிடைத்துள்ளன. புகாரின் ஒரு பகுதியான வானகிரியில் ஒரு தூம்பு அகழ்வாராய்ச்சியில் தோண்டிக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் வாய் அகலம் சரியாக 84 செ.மீ. இதுவே அக்காலக் கோல் அளவு ஆகும்.

24 விரல் கொண்டது ஒரு கோல். இது நான்காகப் பிரிக்கப்பட்டிருந்தது. 4 சாண் கொண்டது ஒரு கோல். 6 விரல் ஒரு சாண்; இரண்டு சாண் ஒரு முழம். ஒரு கோல் 84 செ.மீ. அல்லது 33 அங்குலம். அதாவது, ஒரு பெருவிரல் 1-3/8 அங்குலமாகும்.

மாதவி ஆடிய மேடை தரையிலிருந்து ஒரு கோல் உயரத்தில் (2' 9") அமைந்திருந்தது. ஏழு கோல் (19'3") அகலத்தையும் எட்டுக் கோல் (22') நீளத்தையும் அது கொண்டிருந்தது. அரங்கத்தின்மேல் அமைந்த உத்தரப்பலகை நாலு கோல்

---

225 விரல் என இளங்கோவடிகள் குறித்ததைப் 'பெருவிரல்' என அடியார்க்குநல்லார் விளக்குகிறார். இது இக்கால 'விரற்கடை' என்பதினின்றும் வேறாகும். விரற்கடை என்பது விரலின் பருமனை அளவாகக் கொண்டது. விரல் என மேலே கூறியது பெருவிரலின் நுனிக் கணுவின் நீளமாகும். இது தற்கால 3.5 செ.மீ. (1-3/4 அங்குலம்) ஆகும்.

226 இந்த அளவுகள் தற்கால அளவுகளுக்குப் பொருந்தா என்பது டாக்டர் கே. கே. பிள்ளை கருத்து.

உயரம் (11'); ஏறுவதற்கும் இறங்குவதற்கும் இரண்டு பக்கமும் படிகள் அமைக்கப்பட்டு வசதியாக இருந்தன.[227]

உத்தரப்பலகை வெளியே தெரியாமல் முகப்பு அமைத்து அதில் பூதங்களின் படங்கள் வரையப்பட்டிருந்தன. தூணின் நிழல் ஆடுமகள்மீது விழாமல் இருக்கப் பெரிய விளக்குகள் திட்டமிட்டு எல்லாத் திசைகளிலும் அமைக்கப்பட்டிருந்தன. அதனால் ஏற்பட்ட ஒளிவெள்ளம் தூண்களின் நிழல் மேடையில் விழாமல் தூர விழுந்தது. நிழல் வீழா மேடை அதன் பெருஞ்சிறப்பு. ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி எனப் பல வகைத் திரைச்சீலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. வேண்டும் போது விரிக்கவும் மறைக்கவும் வசதியாகச் திரைச்சீலைகள் அமைக்கப்பட்டன. பல மாலைகளும் தோரணங்களும் மேடையை அணிசெய்தன.

கட்டடப் பணியினைத் தொடங்குதல்

கட்டடப் பணிகள் தொடங்கப்பட்ட விதத்தை நெடுநல்வாடையிலிருந்து அறியலாம். பொறியியல் புலமைமிக்க பெருந்தச்சர்கள், நுணுக்கமாகக் கயிறு இட்டு அளந்து மனைகளை வகுத்தனர். தெய்வத்தை வணங்கிய பின்னர்ப் பணியினைத் தொடங்கினர். குளிர்காலம் மழைக்காலம் நீங்கி வெயிற் காலம் வந்தபின்னரே கட்டடப் பணிகளைத் தொடங்கினர். கட்டடங்களைக் கிழக்கு மேற்காகவோ, தென்வடலாகவோ அமைத்தனர். உண்மையான வடக்குத் திசையைக் கோள்களின் நிலைகளில் இருந்து கணக்கிட்டனர். சூரியன் சுழற்சியிலிருந்து வடக்குத் திசையை அறியும் தமிழகத்து முறை இன்றும் பொறியியலில் பின்பற்றப்படுகிறது.[228]

இதேபோன்று பிற்காலப் பெருங்கதையிலும், ‘எண்நால் இலக்கணத்து உண்ணூல் வாங்கி திணைவிதி யாளர் இணையற வகுத்த’ என்பதிலும் நூல் வாங்குதல் என்று வருவது குறிப்பிடத்தக்கது.[229] பிற்காலப் பொறியியல் நூல்கள்கொண்டு இதன் பொருளை உணர முடிகிறது. மனைகளைப் பல சதுரங்களாக முதலில் வகுத்துக்கொண்டு அதில் கட்டடப் பகுதிகளை அளந்து வைப்பது கயிறிடுதல், நூல் வாங்குதல் முதலான தொடர்களால் குறிப்பிடப்படுகிறது. சதுரங்கள், 64 சதுரங்கள் போன்ற பல்வேறு கணக்குகள் உள்ளன.

---

227 கொங்கு-முதல் தொகுதி, பக். 267-மாதவி ஆடிய மேடை, கொடியன்
228 சண்முகன், கொடுமுடி ச., ‘அளக்கையியல்’, வடக்கறிதல் - பக். 491 தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வெளியீடு, 1972
229 பெருங். 1:33:100-101

கயிறு என்னும் பெயரில் ஓர் அளவும் தமிழகத்துக் கல்வெட்டு களில் காணக்கிடைக்கிறது. நெடுநல்வாடையில் குறிப்பிட்ட கயிறு ஓர் அளவுகயிறாக இருப்பதற்கும் வாய்ப்பு உள்ளது. பெரிய நிலங்களை அளப்பதற்குப் பயன்பட்டதும் கோல் என்றே அழைக்கப்பட்டது. ஆனால், அது நான்கு சாண் கோல் அன்று; 16 சாண் கோல் (11'). அதுபோல எட்டுக் கோல் கொண்டது ஒரு கயிறு (88'). எனப்பட்டது. மாளிகை கட்டுவதற்கான நிலத்தைத் தேர்ந்தெடுக்கும்போது இந்த அளவுகள் புழக்கத்தில் இருந்திருக்கும்.[230] பிற்காலத்தில் விளைநிலங்களை அளக்க இக் கோலும், கயிறும் பயன்படுத்தப்பட்டன. தெளிவு கருதி 'பதினாறு சாண் கோலால்' எனவும், 'பதினாறு அடிக்கோலால் அளந்தபடி' எனவும் குறிப்பிட்டுப் பதிவுசெய்வது பிற்காலத்தில் வழக்கமாகிவிட்டது.[231] சாண் என்பது அடி எனவும் வழங்கியது.

நூல்கள்

கட்டடக் கலைபற்றிச் சங்ககாலத்தில் பல நூல்கள் இருந்தன வாகத் தெரிகிறது. மன்னர்க்காகும் மாளிகையை 'நூலறி புலவர்' வகுத்துத் தந்ததாக நெடுநல்வாடை கூறுகிறது.[232] பத்தினிக் கமைத்த கோட்டம் 'மேலோர் விழையும் நூல்நெறி மாக்கள்' வகுத்ததாக இளங்கோவடிகள் கூறுகிறார்.[233] 'திணைவிதி யாளர்' எனப் பெருங்கதை கூறும்.[234] இத்தகைய நூல்கள் எல்லாம் அழிந்துபோயின; தற்போது ஏதும் கிடைக்கவில்லை.

மயன்

கட்டடக் கலையில் துறைபோகிய பெயராகிய 'மயன்' என்னும் பெயர் அடிக்கடி காணப்படுகிறது.[235] 'மயன்மதம்' என்னும் பெயரில் ஒரு வடமொழிக் கட்டடக்கலை நூல் கிடைத் துள்ளது. இது தமிழ்நாட்டில் வழங்கிவந்த கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுக் கேரளத்தில் கிடைத்துள்ளது. இது வடநாட்டில் கிடைக்கவில்லை. இதில் கூறப்படும் செய்திகளும் தமிழ் நாட்டிற்கே உரியவை. சங்க இலக்கியங்களில் காணப்படும் செய்திகள் பல இந் நூலால் உறுதிப்படுகின்றன. மயன்வழியில் வந்த பொறியியல் கதைநூல் தமிழகத்து அறிஞர்களால் வட மொழியில் மொழிபெயர்க்கப்பட்டதென்றும், காலப்போக்கில் தமிழ்நூல் போற்றுவாரின்மையால் அழிந்துவிட்டதென்றும் கொள்ளல் சாலப் பொருந்தும்.

---

230 நாகசாமி, இரா., 'கொங்கு' 2ஆம் தொகுதி, பக். 98, மயன் மரபு

231 கொங்கு-2ஆம் தொகுதி-பக். 144 'மாறி வழங்கிய மா', மகா தேவன், வே.

232 நெடுநல். 79

233 சிலப். 28:224

234 பெருங். 1:33:101

235 சிலப். 2:12

பிற்சேர்க்கை

1. கருங்கல் பணிகள்

தமிழகத்துக் கோயில் வரலாற்றில் பல்லவப் பெருமன்னர்களுக்குத் தனி இடம் உண்டு. தற்போது நின்று புகழ்பரப்பும் தொன்மையான கோயில்கள் பல்லவர் காலக் கோயில்களே. அதற்கு முன்னால் ஆண்ட மன்னர்களின் கோயில்கள் ஏதும் தற்போது இருப்பதாகத் தெரியவில்லை.

பல்லவப் பெருமன்னர்களில் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலும் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த மகேந்திரவர்மன் தலையானவன். பல குடைவரைக் கோயில்களையும், கருங்கல் கட்டுக்கோயில்களையும் நாட்டுக்களித்த பெருமை அவனையே சாரும். அத்தகைய கோயில்களில் தொண்டைநாட்டில் உள்ள மண்டகப்பட்டு என்னும் ஊரில் உள்ள கோயில் தனிச் சிறப்பு உடையது. அக் கோயிலில் அவன் பொறித்த கல்வெட்டு ஒன்று உண்டு. தமிழ்நாட்டுக் கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்ட வடமொழிக் கல்வெட்டு அது. அதன் வாசகம் வருமாறு :

'ஏத தனிஷ்டகம் அதருமம் அலோகம்
அசுதம் விசித்ரசித்தேன நிருமாபிதம் நிருபேன
பரம்மேசுவர விஷ்ணு லக்ஷ்தா யதனம்'

இதன் பொருள்:

'விசித்திரசித்தனான நான் இங்குச் சிவன், திருமால், பிரம்மாவிற்கு மரம், உலோகம், செங்கல் இல்லாமல் கோயில் அமைப்பித்துள்ளேன்' என்பதாகும்.

இக் கல்வெட்டு தமிழகத்தின் கட்டடக் கலை வரலாற்றில் மிகவும் முதன்மையானதாக அமைந்துள்ளது. பல கருத்துகள் இதனடிப்படையில் உலவுகின்றன.

அவற்றுள் தலையாயது பயன்படு பொருள்களின் காலம் பற்றியது. உலோகம், மரம், செங்கல் இன்றிக் கோயில் அமைத்தேன் என்று கூறுவதால் மகேந்திரவர்மன் காலத்திற்கு முன்னால் தமிழகத்தில கருங்கல் கோயில்கள் இல்லை என்று பொருள் கொள்ளப்படுகிறது. அதற்கு ஆதரவாக, இதுவரை அத்தகைய பழங்கோயில்கள் ஏதும் தமிழகத்தில் காணாமை சுட்டிக் காட்டப் படுகிறது. இதுவரை தமிழகத்தில் நடைபெற்றுள்ள அகழ்வு

ஆராய்ச்சிகள் எதிலும் கருங்கல் பணிகள் ஆறாம் நூற்றாண்டிற்கு முந்தியதாகக் கிடைக்கவில்லை. இக் கூற்றினை ஆராயலாம்.

ஒற்றைக் கற்களில் குகைகள் வெட்டிக் கோயில் அமைக்கும் பாணி மகேந்திரவர்மன் காலத்தில் பெருவழக்காகக் காணப்படுகிறது. மகேந்திரவர்மனது காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியும் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகும்.[1]

மகேந்திரவர்மனுக்கு முன்னரே குகைத்தளி அமைக்கும் பழக்கம் பாண்டியர்களிடையே இருந்துவந்துள்ளதாகத் தெரிகிறது. அந்த வகையைச் சேர்ந்தது 'பிள்ளையார்பட்டிக் குகை' ஆகும். இக் குகையில் உள்ள எழுத்துகளின் அமைதிகொண்டு இந்தக் குகை கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதி அல்லது ஆறாம் நூற்றாண்டின் தொடக்கமாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுவர்.[2]

தமிழகத்தில் ஏராளமான இயற்கைக் குகைத்தளங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சமண முனிவர்கள் ஒதுங்கி வாழ்வதற்கேற்ற இடமாக அவை இருந்துள்ளன. கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இருந்து அத்தகைய குகைகள் புழக்கத்திலிருந்துள்ளன. அங்குக் கல்லில் படுக்கைகள் செதுக்கப்பட்டு நன்றாகத் தேய்த்து வழவழப்பாக்கப்பட்டிருந்தன. படுக்கையில் தலையணை போன்றும் செதுக்கப்பட்டிருந்தன. அமர்ந்தே வழிபடும் இருக்கைகளும் செதுக்கப்பட்டிருந்தன. சில இடங்களில் மழைநீர் நேராக வழிந்து குகைக்குள் வாராமல் தடுக்கத் தாரை அணிகள் வெட்டப்பட்டிருந்தன. தமிழகத்தில் கருங்கல்லில் வேலை செய்யும் தொழிலாளர்கள் இருந்தமைக்கு இவை சான்று பகர்கின்றன. இயற்கைக் குகைத்தளங்களில் குறிப்பிடத்தக்கன கருவூரை அடுத்துள்ள ஆறுநாட்டார் மலைக்குகை, மதுரையை அடுத்துள்ள ஆனைமலைக்குகை, மீனாட்சிபட்டிக் குகை முதலியன ஆகும்.

கருங்கற் பணிகள் பற்றிய குறிப்புகள் பல சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. ஆறுகளின் குறுக்கே அவை கட்டப்பட்டிருந்தன. அவை கல்லால் ஆனவை. 'கற்சிறை' என்னும் பெயரால் அவை குறிப்பிடப்பட்டன.[3] 'கலிங்கு' என்னும்

---

[1] 'செங்கம் நடுகற்கள்', தமிழகத் தொல்பொருள் ஆய்வுத் துறை வெளியீடு.

[2] நாகசாமி, இரா., 'கொங்கு' 3ஆம் தொகுதி, பக். 96, பிள்ளையார் பட்டி.

[3] மதுரைக். 725

அழைத்தனர்.[4] பெருஞ்செல்வர்களின் வீட்டின் வாய்க்கடை கல்லிடித்து இயற்றியதாம். 'கல்லிடித் தியற்றிய இட்டுவாய்க் கிடங்கின் நல்லெயில் உழந்த செல்வர்த் தம்மின்' என வருதல் காண்க.[5] கல் பொளிதல் நன்கு தெரிந்த கலையாக இருந்து உள்ளது.[6] சாளரங்கள் கருங்கல்லால் ஆனவை.[7]

பூம்புகாரில் அருகர் வணங்கிய வான்பெருமன்றம், 'இலங்கொளிச் சிலாதலம்' எனப்பட்டது. இது முழுக்கக் கருங்கல்லால் கட்டப்பட்டதென உணரலாம்.[8] கல்மண்டபம் ஒன்றன் குறிப்பும் காணத்தக்கது. 'நிழல்கால் நெடுங்கல் நின்ற மன்றம்' எனத் தெளிவாகக் குறிப்பிடப்படுகிறது. உயரமான கல்தூண்களில் அமைக்கப்பட்டதால் தூண்களின் நிழல் நன்கு தெரிகிறது. சக்கரவாளக்கோட்டத்தில் 'நிறைக்கல் தெற்றி' இருந்ததாகவும் மணிமேகலை கூறுகிறது.

எனவே, சங்ககாலத்தில் கருங்கல் பணி இல்லையெனக் கூற முடியாது. இதுவரை கிடைத்துள்ள அகழ்வு ஆராய்ச்சிகளில் அத்தகைய பணிகள் ஏதும் கிடைக்கவில்லை என்று கோடலே பொருந்தும். மன்றங்கள், பெருங்குடி மக்கள் வீடுகள், ஆற்று இடையே கலிங்கு முதலானவை கருங்கல் பணிகளில் குறிப்பிடத் தக்கவை.

பல்லவர் காலத்திலும் அதற்குப் பின்னால் கட்டிய கருங்கல் கோயில் அத்தனையும் இன்று நிலைத்துநிற்கின்றன என்று சொல்ல இயலாது. அழிந்துபோனவை ஏராளமாக இருக்கும். அதேபோல அதற்கு முன்னாலும் அமைந்த கருங்கல் பணிகளும் அழிபட்டிருக்கலாம். மேலும், அகழ்ந்து காணும் ஆராய்ச்சிகள் தொடரத்தொடர அத்தகைய கருங்கல் கட்டடங்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

2. சிற்பக் கலை

பண்டைப் பொறியியல் நூல்கள், சிற்பக் கலையையும் உள்ளடக்கியவையாகும். உயிரோட்டமுள்ள சிற்பங்கள் செய்வதில் சங்ககாலம் பெருஞ்சிறப்புப் பெற்றிருந்தது. மண், மரம், சுதை, கல், பளிங்கு இவற்றால் சிற்பங்கள் செய்யப்பட்டன.

---

4 சீவக. 2476:4
5 மதுரைக். 730-31
6 ஷை 730-31
7 மணிமே. 4:53
8 சிலப். 10:20-25

அறிவு குறைந்து எழில் நிறைந்த மக்கள், மண்மாண் புனையும் பாவையை ஒப்பரென்கிறார் வள்ளுவர்.[9] கோயில்களில் எல்லாம் தெய்வப் படிமங்கள் வைத்து வணங்கப்பட்டன. திருமாலின் நின்ற திருக்கோலம், அரவணைப் பள்ளிக்கோலம் பெரு வழக்காக இருந்ததை முன்னரே கண்டோம். விளக்குகள் பல பாவை உருவில் திகழ்ந்ததையும் கண்டோம்.

படிமங்கள் செய்வதில் கைதேர்ந்த கலைஞர்கள் இருந்தனர்: ஆடவரின் அழகைக் கூறும்போது, 'வல்லோன் இயற்றிய பாவை' போன்றிருப்பதாகக் கூறுவது புலவர் வழக்கம்.[10] புகார் நகரில் ஒரு தெருவில் மண்ணீட்டாளர் வாழ்ந்தனர்.

தேர், சகடம், வண்டி, கட்டில், இருக்கை முதலியன செய்தலும் மனைநூலின் உட்பிரிவாகவே கருதப்பட்டது. அரசரது அமளிகள் பற்றியும், அந்தப்புரக் கட்டில்கள்பற்றியும் முன்னரே கண்டோம்.

தச்சர்கள் இளம் வயதிலிருந்தே தம் மக்களைத் தொழிலில் நன்கு பழக்கிவைத்தனர். ஓடாத பொம்மைத் தேர் செய்து விளையாடியவர்கள் பின்னர்ப் பெருந்தச்சர்களாகின்றனர்.[11] சிவிகை, பாண்டில், அமளி முதலியன பொலிவோடு அமைக்கப்பட்டன.[12] தேரின் உடலில் மணிகளைக் கோத்து அணிசெய்வது வழக்கம். அவை நாவசைத்து இனிய ஒலிகளை எழுப்பும்.[13] மாடவீதிகளில் தேர் ஓடுவது, முகிலைக் கிழித்துச் செல்லும் நிலவுபோல ஒரு புலவருக்குக் காட்சி அளிக்கின்றது.

சகடம் ஒன்றன் விரிவான விளக்கத்தைப் பெரும்பாணாற்றுப் படையால் அறியலாம். திரண்ட வட்டையில், ஆரக்கால்கள் செருகி அமைக்கப்பட்ட சக்கரங்கள், முழு மரத்தில் கடைந்தெடுக்கப்பட்ட குடங்கள் மத்தளம் போன்றுள்ளன. கணைய மரங்களாலான கை என்னும் பார்மேலே ஆரைப் புல்லாலான கூண்டு அமைக்கப்பட்டுள்ளது.[14] இக் குறிப்புகள் தேர், சகடம் முதலியன அமைக்கும் திறப்பாட்டைக் காட்டுகின்றன.

---

9 'நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று.' (குறள். 407)

10 மதுரைக். 723

11 பெரும்பாண். 248-9

12 சிலப். 14:126

13 'மணிநா வார்த்த மாண்வினைத் தேர்' (அகம். 4:12)

14 பெரும்பாண். 46-50

3. தொழிலாளர்

கலை நூல் அறிந்த தொழிலாளர்கள் அக்காலத்தில் ஏராள மாக இருந்தனர் பல்வகைத் தொழிலாளர்களும் இணைந்து பணி யாற்றினர். மரவேலைகள் செய்தவர் 'தச்சர்' எனப்பட்டனர். வீடுகளைப் புனைந்து ஓவியம் எழுதியவர் 'கண்ணுள் வினைஞர்', பொம்மைகள், உருவங்கள் செய்தவர் மண்ணீட்டாளர் அல்லது 'மண்மான் மண்வேலை செய்யும் மகன்). இவர்கள் அனைவரும் தனித்தனித் தெருவில் மருவூர்ப்பாக்கத்தில் வாழ்ந்துவந்தனர்.[15] பொதுவாகப் பொறியியற் பணிகள் ஆற்றியோர் 'கம்மியர்' எனப் பட்டனர்.[16] மதுரையில் இருந்த பட்டிமண்டபம், தோரண வாயில், பொற்றப்பந்தர் முதலானவை நுண்வினைக் கம்மியர் காணா மரபின தாக இருந்தனவாம். விசிறிகள் செய்யும் கம்மியர் கைவேலைப்பாடு மிகுந்தவர்.[17] கதவு நிலை போன்ற மரவேலை செய்தவர்களும் கம்மியர் எனப்பட்டனர்.[18] கைவினை முற்றிய நுண்வினைக் கொல்லர்',[19] 'கருந்தொழிற் கொல்லர்'[20] என்று புகழ்ந்துரைக்கப்பட்டனர்.

இவர்களுக்கெல்லாம் தலைமையேற்று இருந்த சிற்பி 'பெருந் தச்சன்' என்றழைக்கப்பட்டான். இம்மரபு பின்னும் தொடர்ந்து வந்துள்ளதை ப பிள்ளையார்பட்டிக் கல்வெட்டால் அறியலாம். 'எ(ரு)க்காட்டூருக்கோன் பெருந்தச்சன்' என்பதே அக் கல் வெட்டு வாசகம். தற்காலத்தில் ஸ்தபதி என்னும் சொல் பெருந் தச்சனை உணர்த்தப் பயன்படுத்தப்படுகிறது.

தமிழகத்தில் பிறநாட்டுக் கலைஞர்களும் வந்து இணைந்து பணியாற்றினர். வேந்தனின் பூங்கா மண்டபம் அமைப்பதில் மகத வினைஞர், மராட்டக் கம்மியர், அவந்திக் கொல்லர், யவனத் தச்சர் ஆகியோர் தமிழகத்து வினைஞர்களுடன் ஒத்து வேலைசெய்தனராம்.[21] பாவை விளக்கு அமைப்பதில் யவனர் சிறந்திருந்தனர்.[22]

4. பரப்பளவுகள்

சங்ககாலத்திலேயே நீட்டல் அளவுகள் நிலைவுசெய்யப்பட்டுப் புழக்கத்தில் இருந்தன. பரப்பளவுகளும் இருந்தன. ஆயினும். அவைபற்றிய குறிப்புகள் கிடைக்கவில்லை. அவையே வழிவழி

15 சிலப். 5:10-39
16 ஷெ 5:106
17 நெடுநல். 57-59
18 ஷெ 82-86
19 சிலப் 16:105-6
20 ஷெ 16:165
21 ஷெ 19:107-9
22 நெடுநல். 101

வந்து பல்லவர் காலக் சல்வெட்டுகளில் காணப்படுகின்றன. அவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட பரப்பளவுகள் வருமாறு :

நீட்டல் அளவு

4 சாண்—இரண்டு முழம்—ஒரு கோல் (33′)

(நில அளவுகட்குப் பயன்பட்ட கோல் இதைவிட நீள மானது.) 9, 12, 16, 18, 22 சாண் நீளம் கொண்ட கோல்கள் புழக்கத்திலிருந்தன.[3] எனினும் 16 சாண் கோலே பெரும்பாலும் நிலைவுசெய்யப்பட்ட கோலாக இருந்துள்ளது.

1 கோல் சதுரம்	=	1 குழி
100 குழி	=	1 மா[24]
20 மா	=	1 வேலி
240 வேலி	=	1 பாடகம்[25]
30 கோல் சதுரம்	=	1 கண்ணாறு[26]
20 கண்ணாறு	=	1 குடும்பு[27]

23 மகாதேவன், வே., கட்டுரை : 'மாறி வழங்கிய மா', நூல்: கொங்கு, 2ஆம் தொகுதி, பக். 143-146

24 256 குழி 552 குழிகளும் 'மா'வெனச் சிலவிடங்களில் வழங்கப்பட்டன.

25 S.I.I., Vol. VI, 287

26 S.I.I., Vol. VI, 292

27 S.I.I. Vol., VI, 294

இயல் 9

பண்டைத் தமிழரும் சிந்துவெளி நாகரிகமும்

கி.பி. 1922ஆம் ஆண்டுவரை வேதகால நாகரிகமே இந்தியாவின் தொல்பழ நாகரிகமெனக் கூறப்பெற்றுவந்தது. எகிப்திய, மெசபத்தோமிய நாகரிகங்களைப்போல் இந்தியாவுக் கென்று ஒரு பழம்பெரும் நாகரிகம் இல்லையென்றும், ஆரியரின் வருகைக்குப் பின்னரே இந்தியர் நாகரிகம் பெற்றனரென்றும் அவர்கள் கூறினர். ஆனால், 1922ஆம் ஆண்டு இந்தியத் தொல் லியல் துறையில் அதிகாரியாயிருந்த ஆர். டி. பானர்சி என்பார் சிந்து மாநிலத்தில் இலர்க்கானா மாவட்டத்திலுள்ள **மொகஞ்ச தாரோ** என்னுமிடத்திலிருந்த ஒரு பெரிய மண்மேட்டை அகழ்ந்து அதனடியில் நாற்கர வடிவிலான ஒரு புத்தத் தூமுளி (ஸ்தூபி) யைக் கண்டார். தொடர்ந்து நடந்த அகழ்வால் அங்கு மண்ணுக் கடியில் ஓர் அழகிய நகரமே புதைந்து கிடப்பது காணப்பட்டது. இதையே இன்று 'மொகஞ்சதாரோ நகரம்' என்றழைக்கிறோம். இதே காலத்தில் மேற்குப் பஞ்சாப் மாநிலத்தில் மான்டுகோமரி மாவட்டத்திலுள்ள அரப்பா என்னும் அழகிய நகரம் நிலத்திற் கடியில் புதையுண்டு கிடப்பதை இராய்பகதூர் தயாராம் சானி என்பார் கண்டறிந்தார். இவ்விரு நகரங்களும் ஒன்றுக்கொன்று சுமார் 580 கி. மீட்டர் தொலைவில் அமைந்திருந்தாலும் இவை சிந்துவெளியிலிருப்பதால் இவ்விடங்களில் கிடைத்த புதை பொருள் சின்னங்களால் அறியப்படும் நாகரிகத்தைச் 'சிந்து வெளி நாகரிகம்'[1] என்றும், இங்கு நிலவிய பண்பாட்டினை 'அரப்பன் பண்பாடு'[2] என்றும் அழைக்கின்றனர். இவ்விடங்களில் தொடர்ந்து அகழ்வாராய்ச்சி நடத்தி, இந் நாகரிகத்தை உலகு அறியச் செய்தவர் தொல்பொருள் ஆய்வுத்துறைத் தலைவரா யிருந்த சர் ஜான் மார்ஷல்[3] என்பவராவார். (இவ்விரு நகரங் களும் இன்றைய பாகிஸ்தானிலுள்ளன.)

---

[1] Indus Valley Civilization
[2] Harappan Culture
[3] Sir John Marshall

சிந்துவெளி நாகரிகச் சின்னங்கள், பாகிஸ்தானிலமைந்துள்ள பெரும் நகரங்களில் மட்டுமன்றி இந்திய நிலப்பகுதியில் சாங்கு தாரோ, கோட்சி, உலோத்தல், காளிபங்கன் ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன.

இன்று வடக்கில் உருபார் முதல் தெற்கில் கராச்சிக்கு 480 கி.மீ. தொலைவிலுள்ள இடம் வரையில் சிந்துவெளி நாகரிகம் பரவியிருந்தது என்பதைத் தொல்பொருள் ஆய்வாளர் கண்டு பிடித்துள்ளனர். மேற்கே தென்பலுச்சித்தானத்திலுள்ள சுதகா செத்தோரிலிருந்து கிழக்கே மேலைக் கங்கை-யமுனை யாற்றுப் பகுதியிலுள்ள (உ.பி.) ஆலங்கீர்ப்புரம் வரையிலும், வடக்கே இமயமலையடிவாரத்திலுள்ள உருபரிலிருந்து தெற்கே நர்மதை-தபதி யாறுகளுக்கிடையிலுள்ள 'கிம்' என்னும் சிற்றாற்றிலுள்ள பாக்தராவ் வரையிலும் அந்த நாகரிகம் பரவியுள்ளது. அஃதாவது மேற்கிலிருந்து கிழக்கே 1,600 கி.மீ. தொலைவும் வடக்கிலிருந்து தெற்கே 1,100 கி.மீ. தொலைவும் காணப்படுகிறது. எதிர்கால ஆய்வுகள் இதன் பரப்பை மேலும் விரிவுபடுத்தலாம். இப் பரப்பு இதன் சமகால எகிப்திய, மெசபத்தோமிய நாகரிகப் பரப்புகளைவிடப் பெரும்பகுதியை உள்ளடக்கியதாகும்.[4] சிந்து ஆறு கடலில் கலக்கும் பகுதியிலும், அவ்வாற்றின் இரு மருங்கிலும், வெகுதொலைவிலும் பல்வேறு இடங்களில் சிந்துவெளி நாகரிகச் சின்னங்களை அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டவண்ணம் உள்ளனர். உலோகுஞ்சதாரோ, தஞ்சதாரோ, சக்பூர் பானிசியால் அலிமுராது பாண்டிவாகு அம்ரி கோட்லா, நிகாங்கான் முதலிய இடங்களில் நடந்த அகழ்வு ஆராய்ச்சியில் இந் நாகரிகத்தின் சின்னங்கள் கிடைத்துள்ளன. (நிலப்படம் 1). ஆகவே, சிந்துவெளி நாகரிகம் சிந்து நதியின் படுகையில் மட்டுமேயன்றிச் சிந்து, பஞ்சாபு, கத்தியவார், வடமேற்கெல்லைப்புறம் ஆகிய மாநிலங்களிலும் கங்கைச் சமவெளியின் சில பகுதிகளிலும் பரவியிருந்ததைக் கண்டு வியக்கிறோம். இன்னமும் தொடர்ந்து அகழ்வாராய்ச்சி நடந்து வருவதால் இந் நாகரிகம் பரவியிருந்த எல்லையை நம்மால் திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூறமுடியவில்லை.

மொகஞ்சதாரோ

இந் நகரம் மண்ணுக்கடியில் புதையுண்டு காணப்படுகிறது. இதனைத் தோண்டிக் காணும்போது ஏழு அடுக்குகளைக் கொண்ட மண் படிவம்[5] காணப்படுகிறது. சிந்து ஆறு அடிக்கடி

[4] Basham, A L. (Ed.), *A Cultural History of India*, 1975, p. 11
[5] Debris



நிலப்படம் 1

தன் போக்கை மாற்றி ஓடியதால்தான் இந் நகரம் ஏழு முறை நீரில் மூழ்கியிருக்க வேண்டுமென்பதும், பின்னர்ப் புதுப்பிக்கப் பெற்றதால்தான் இவ்வேழு அடுக்கு மண் படிவங்கள் ஏற்பட்ட தென்பதும் ஆராய்ச்சியாளரின் முடிபாகும்.

ஆயினும் இந் நகரில் வரிசை வரிசையாகக் கட்டப்பெற்ற இல்லங்கள், மாடமாளிகைகள், மண்டபங்கள், நீராடும் குளம், கழிவுநீர்ப் பாதைகள் ஆகியவை அழிவுறாமல் காணப்பெறு கின்றன. இல்லங்களில் கண்டெடுக்கப்பெற்ற நாணயங்கள், பல எழுத்துகளைக் கொண்ட முத்திரைகள், பலவண்ண வடிவங் களில் காணப்பெறும் மட்பாண்டங்கள், பொம்மைகள், விளை யாட்டுப் பொருள்கள், களிமண்ணாலும் சுண்ணாம்புக் கற் களாலும் செய்யப்பெற்ற பலவகைப் பொருள்கள், பல்வேறு அணிகலன்கள் முதலியன மொகஞ்சதாரோவில் வாழ்ந்த மக்களின் நாகரிக வளத்தை விளக்குகின்றன. இப் பொருள்களில் பலவும் அசிரிய, பாபிலோனிய, மெசபத்தோமிய, ஏல, பாரசீக நாகரிகச் சின்னங்களைப் பெரிதும் ஒத்திருக்கின்றன.

மொகஞ்சதாரோவில் தெற்கு வடக்காகவும், கிழக்கு மேற் காகவும் அமைந்த நெடுந்தெருக்களும் குறுந்தெருக்களும் உள்ளன. இவை ஒன்றையொன்று கடக்குமிடங்களில் சந்திகள் உள்ளன. சந்திகளும் தெருக்களும் கெட்டிப்படுத்தப் பெற்று நன்கு மெழுகிப் பூசப்பெற்றுள்ளன. கட்டடங்கள் உலர்ந்த செங் கற்களாலும், சுட்ட செங்கற்களாலும் கட்டப்பெற்றுள்ளன. சுவர், தரை, கூரை ஆகிய பகுதிகள் களிமண் சாந்தால் பூசப் பெற்றுள்ளன. 107 செ மீ. முதல் 198 செ.மீ. வரை அகல முள்ள தடித்த சுவர்களின்மேல் ஓரடுக்கும், பல அடுக்குகளும் உடைய வீடுகள் உள்ளன. மாடியிலிருந்து நீர் வழிந்தோடக் குழாய்கள் அமைக்கப்பெற்றுள்ளன ஓரறை முதல் பல அறை களைக் கொண்ட வீடுகளும் உள்ளன. ஒவ்வோர் அறையும் காற்றோட்டமும் வெளிச்சமும் பெறுமாறு அவற்றில் சாளரங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. மேல்மாடிகளுக்குச் செல்ல ஒருவழிப் படிக்கட்டுகளும், இருவழிப் படிக்கட்டுகளுமுள்ளன. இங்குக் காணப்பெறும் மிகப் பெரிய மாளிகைகள் இருவழிப் படிக்கட்டு களையும், பல மேல்மாடங்களையும், பல படுக்கை அறைகளை யும், குளியலறைகளையும், கழிப்பிடங்களையும், அகன்ற தாழ் வாரங்களையும் கொண்டுள்ளன. இவற்றுள் மிகப் பெரியது 72 6 மீ. நீளமும், 33.6 மீ. அகலமும் உள்ள மாளிகையாகும் மாளிகைகளில் பல பெரிய, சிறிய வாயில்களும் தானியக்களஞ்சி யங்களும் உள்ளன. இம் மாளிகைகளைச் சுற்றிலுமுள்ள

கட்டடங்கள் சிறுசிறு மண்டபங்களைப்போல் சிற்றறைகளுடன் அமைந்துள்ளன. இம் மாளிகைகளில் வசித்தவர்கள் அரசர் அல்லது தானைத்தலைவர்களாக இருக்கலாமென்றும், இச் சிறுசிறு அறைகளில் வதிந்தவர்கள் காவலர் அல்லது ஏவலர் களாக இருக்கலாமென்றும் கூறுகின்றனர். எளிமையான வீடு களிலும் தனித்தனியே சமையலறை, படுக்கையறை, குளியலறை முதலானவை உள்ளன. குளியலறையிலிருந்து செல்லும் கழிவுநீர் தரையடிச் சாக்கடையில் கலந்து நகருக்கு வெளியிலுள்ள ஒரு பெரிய கழிவுநீர்க் குழியில் விழும்படி வகைசெய்யப் பெற் றுள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் குளியலறையை யொட்டிக் கிணறு உள்ளது.

9மீ. நீளம், 6மீ. அகலம், 2.4மீ. ஆழமுடைய ஒரு செய்குளம் ஒன்று அங்கு உள்ளது. இதன் உட்புறம் 'நிலக்கீல்' எனப்படும் ஒருவகை மெழுகால் பூசப்பெற்றுள்ளது. சுமேரியக் கட்டடங் களும் இத்தகைய மெழுகால் பூசப்பெற்றுள்ளன. இக் குளத் திற்கு வடக்கில் எட்டு அறைகள் உள்ளன. இதனையடுத்து மூன்று பெரிய கிணறுகள் உள்ளன. குளத்திற்கு வேண்டிய நீரை இக் கிணறுகள் நிரப்புகின்றன. துப்புரவில்லா நீரை வெளிப் படுத்தக் குளத்தின் முனையில் ஒரு புழை உள்ளது.

மேற்கண்ட மொகஞ்சதாரோ நகர அமைப்பை ஆய்ந்த மார்ஷல், மெக்காய், வீலர் போன்ற அறிஞர்கள் பண்டைய பாபி லோனிய நகரங்களைவிடச் சிறப்பானதென்றும், சுமேரிய நகர மான ஊர்[6] என்னும் நகரத்தைப் போன்ற சிறந்த அமைப்பு உடையதென்றும் வியக்கின்றனர். நீராடும் மனைகள், கழிவுநீர் வடிகால் முதலியன அக்கேடியரின்[7] அமைப்பை ஒத்தனவென்றும், இவர்களின் சமையலறை அமைப்பும் அடுப்புகளும் மெசபத் தோமியாவிலுள்ளவை போன்றனவென்றும் கூறுகின்றனர். எனவே, இந் நாகரிகம் உலகின் பிற பகுதிகளில் காணும் தொல் பழ நாகரிகங்களை ஒத்ததென்றும், அவற்றிற்கும் மேலான தென்றும் துணிந்து கூறலாம்.

அரப்பா[8]

இந் நகரத்திலுள்ள கட்டடங்கள் மொகஞ்சதாரோவைப் போலல்லாமல் இடிந்து காணப்படுகின்றன. இஃது எட்டுமுறை நீரில் மூழ்கி, எட்டுமுறை மீண்டும் புதுப்பிக்கப் பெற்றதென் பதை இதில் காணப்படும் எண்வகை மண் படிவத்தால் அறிய

6 Ur 7 Akkadians 8 Harappa

லாம். இந் நகரத்தின் சுற்றளவு 45 கிலோமீட்டர்களாகும். இங்குப் பல எழுத்துகளையுடைய முத்திரைகளும், சவக்குழிகளும், விலங்குகளின் எலும்புக் கூடுகளும், மட்பாண்டங்களும், பல தரப்பட்ட முத்திரைகளும், அணிகலன்களும் கிடைத்துள்ளன.

இந் நகரில் காணப்படும் கட்டடங்களைக் குடியிருப்புகள்' பொதுக் கட்டடங்கள் எனப் பிரித்தறியலாம். குடியிருப்புகள் தனித்தனி அறைகளையும், மாடிகளையும், முற்றங்களையும், கொண்டுள்ளன. பொதுக் கட்டடங்கள் வட்டவடிவிலும், அகன்றும், பெரிய மேடைகளுடனும் காணப்படுகின்றன. பொதுவாகக் கட்டடங்களின் அமைப்பு முறையும், தரை, கூரை முதலியன பூசப்பட்டுள்ள முறையும் மொகஞ்சதாரோவை ஒத்து உள்ளன. இங்கு 50.4மீ. நீளமும், 34.5மீ. அகலமும், 15.6மீ ஆழமுள்ள ஒரு பெரிய களஞ்சியமுள்ளது. இதன் சுவர்கள் 2.7மீ. அகலமுள்ளவை. இது 6.9மீ. அகலமுள்ள ஆறு அறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்வறைகளில் தானியங்கள் சேமித்து வைக்கப்பட்டிருக்கலாம்.

தொழிலாளர் இல்லங்களும் இங்குக் கண்டறியப்பெற்றுள்ளன. அவை வரிசைக்கு ஏழு வீடுகள் மேல் இரண்டு வரிசைகள் உள்ளன. இவ்வில்லங்களுக்கிடையில் குறுகிய பாதை உள்ளது. இஃது இரு பக்கங்களிலுமுள்ள பெரிய தெருக்களைத் தொடுகின்றது. ஒவ்வோர் இல்லத்திலும் மூன்று அறைகள் உள்ளன. இவ்வில்லங்களை எகிப்து நாட்டுத் தெல்-எல்-அமர்னாவிலுள்ள தொழிலாளர் இல்லங்களோடு ஒப்பிடுகின்றனர்.

மக்களின் வாழ்க்கைமுறை

உணவு வகைகள்

சிந்துவெளி மக்கள் சிறந்த நகர வாழ்க்கையை மேற்கொண்டவர். நகரத்தில் அரசனும், அதிகாரிகளும், பலவகைத் தொழிலாளர்களும், கலைஞர்களும் வாழ்ந்தனர். கோதுமை, பார்லி, பேரீச்சம்பழம், பால், இறைச்சி வகைகளை மக்கள் உண்டனர். நீர்வளம் மிக்க சிந்துவெளியில் தானிய வகைகளும், பட்டாணி முதலிய பருப்பு வகைகளும், முலாம்பழம் முதலிய பழ வகைகளும், ஆடைக்கேற்ற பருத்தி வகைகளும் பயிராயின. ஆடு, மாடு, பன்றி முதலிய விலங்குகளின் இறைச்சியும், ஆமை, மீன் முதலியனவும் அவர்களுக்குக் கிடைத்தன. எஞ்சிய உணவுத் தானியங்களையும், இறைச்சி வகைகளையும் பதப்படுத்தி

வைத்து அவர்கள் உண்டனர். இங்குக் கிடைத்துள்ள மாவு அரைக்கும் இயந்திரங்கள் அம்மி, ஆட்டுக்கல், உரல், எண்ணெய்ச் சட்டி, இட்டிலிச் சட்டி மற்றும் தட்டுமுட்டுப் பொருள்களைக் கொண்டு இவர்களின் உணவு வகைகளையும், உண்ட முறைகளையும் உய்த்துணரலாம். இவர்களின் உண்கலங்கள் மரப் பலகை. மண்சிப்பி, வெண்கலக்கிண்ணி முதலான வகைகளாகக் காணப்பெறுகின்றன. பலவகைக் கரண்டிகளும். கறிக்கிண்ணங்களும் காணப்பெறுகின்றன. ஆனால், உணவை அள்ளி உண்ணும் சிறு கரண்டிகளோ, முள் கரண்டிகளோ இல்லை. எனவே, இவர்கள் கையால்தான் உணவை அள்ளியுண்டனர் எனலாம்.

உடைகள்

சிந்துவெளி மக்கள் ஆண், பெண் இருபாலாரும் பருத்தி, தாவரி (கம்பளி), நார்ப்பட்டு ஆகிய ஆடைகளை அணிந்தனர். மேலாடையும் கீழாடையுமாக முழு ஆடைகளையே அணிந்தனர். பருத்தி ஆடைகள் பெரும்பாலும் வண்ணங்களாகவும், பூ வேலைப்பாடுகளுடனும் இருந்தன. கம்பளி ஆடைகள் தடித்தவை. நார்ப்பட்டாடை உடலோடு ஒட்டி, ஒளி ஊடுருவுமாறு காணப்பட்டது. கழுத்துப் பட்டையுடைய சட்டைகளையும், பொத்தான் தைத்த சட்டைகளையும் இவர்கள் அணிந்து கொண்டனர்.

பெண்கள் அரையில் பாவாடையும் மேலாடையும் அணிந்து உடல் முழுவதும் மறைத்துக்கொண்டனர். ஆண், பெண் இருபாலாரும் மங்கோலியரைப்போல் தலையில் முண்டாசு கட்டிக் கொண்டனர். வட்டுடை அணிந்தவருமுண்டு. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பெற்ற ஆண், பெண் உருவங்களைக்கொண்டே நாம் அவர்கள் அணிந்திருந்த ஆடை. அணிகலன்களைப்பற்றி இவ்வாறு விரித்துக் கூறுகிறோம். சில ஆண்களின் உருவங்களும் நாட்டியப் பெண்களின் உருவங்களும் ஆடையின்றியே காணப் படுகின்றன.

அணிகலன்கள்

கழுத்து, தலை, தோள்பட்டை, கை, விரல் ஆகியவற்றில் ஆண், பெண் இருபாலாரும் பட்டை, அட்டிகை. வங்கி, மோதிரம் முதலியவற்றை அணிந்தனர். பெண்கள் மூக்குத்தி, நெற்றிச் சுட்டி, கம்மல் (காதோலை), ஒட்டியாணம், வங்கி. மோதிரம், காற்சிலம்பு, காப்பு, டயம் முதலியவற்றை அணிந்தனர். அணிகலன்கள் தங்கம். வெள்ளி, செம்பு, சலவைக்கல், பளபளப்பான ஒருவகைக் கருங்கல், சங்கு, எலும்பு, பளிங்கு முதலியவற்றால்

ஆனவை பல வண்ணக்கற்களாலும், மணிவகைகளாலும் ஆன அணிகலன்கள் இங்குக் கண்டெடுக்கப்பெற்றுள்ளன. பொன் மணியும், பச்சைக் கல்லும் மாறிமாறிக் கோக்கப்பெற்று நடுவில் கடுத்தக்கல் எனும் ஒருவகை வைடூரியமும், சூரியகாந்தம் எனும் இரவைக் கல்லும் பதித்த பதக்கங்களுடன் கூடிய நீண்ட கழுத்து மாலையொன்றும் கிடைத்துள்ளது. இவற்றுள் அரப்பாவில் கிடைத்துள்ள கழுத்தில் சுருக்கிக் கட்டும் அட்டிகையும், மொஞ்சதாரோவில் கிடைத்துள்ள ஆறு தங்கச் சரங்களை யுடைய கையணியும் சிறப்பானவை.

ஒப்பனை

ஆண், பெண் இருபாலாரும் நெய்பெய்து கூந்தலை வாரிக் கொண்டனர். கொண்டை, கூந்தல், பின்னல் முதலியனவாகக் கூந்தலை ஒப்பனை செயதுகொண்டனர். பலதரப்பட்ட சீப்புகள், கொண்டையூசிகள் பயன்படுத்தப்பெற்றன. கொண்டையூசிகள், தங்கம் முதலிய மாழை (உலோகம்)களாலும் எலும்பாலும் செய்யப்பெற்றவை. பளபளப்பான செம்புத் தகடுகள் முகம் பார்க்கும் கண்ணாடிகளாகப் பயன்பட்டன. ஆண்கள் தாடி வைத்துக்கொண்டு மீசையை மழித்துக்கொண்டனர். மழித் தலுக்குப் பயன்பட்ட மழிகத்திகளும் இங்குக் கிடைத்துள்ளன. கண்ணுக்கு மைதீட்டியும், முகத்திற்கு வெண்பொடி பூசியும் ஒப்பனை செய்துகொண்டனர். நடனப் பெண்கள் ஆடையிலலா மலும், குறையாடையுடனும், நிறைந்த அணிகலன்களுடனும், எடுப்பான ஒப்பனைகளுடனும் காணப்பெற்றனர்.

விளையாட்டுகளும் பொழுதுபோக்குகளும்

சிந்துவெளி மக்கள் நகர வாழ்க்கையை மேற்கொண்டனர். இவர்களின் வாழ்க்கை மகிழ்ச்சிகரமானது. பந்து, கோலி, சதுரங்கம், சொக்கட்டான் முதலிய விளையாட்டுகளில் ஈடுபட்டு மகிழ்ச்சியாகப் பொழுதுபோக்கினர். கோழிச் சண்டை, காளைச் சண்டை, கௌதாரிச் சண்டை முதலியவற்றைக் கண்டு களித் தனர். வேட்டையாடுதலும் இவர்களின் பொழுதுபோக்காக இருந்தது. கிடைத்துள்ள விளையாட்டுப் பொருள்களில் கோலி யும் பந்தும் மிகுதி.

ஆயுதங்கள்

சிந்துவெளி மக்கள் இரும்பை அறியவில்லை. தங்கம், வெள்ளி, செம்பு, தகரம், ஈயம் ஆகிய மாழைகளையே அறிந்திருந்தனர். செம்பாலும் வெண்கலத்தாலும் செய்யபெற்ற கோடரிகள், பிச்சுவாக்கள், சுக்குமாந்தடிகள், நீண்ட வாள்கள், குறுவாள்

கள் முதலிய கருவிகளைப் பயன்படுத்தினர். இங்கு இதுவரை கேடயம், தலை மார்புக் கவசங்கள் முதலிய காப்புக் கருவிகள் கிடைக்கப்பெறவில்லை என்பது எண்ணத்தக்கது.

கல்வியும் கலைகளும்

சிந்துவெளி மக்கள் கல்வியறிவுடையவராயும் பல்வேறு கலையறிவுடையவராயும் திகழ்ந்தனர். இங்குக் கிடைத்துள்ள முத்திரைகள், நாணயங்கள், மட்பாண்ட ஓடுகள் முதலியவற்றில் தீட்டப்பெற்றுள்ள எழுத்துகளும் ஓவியங்களும் இவர்களின் கல்வி, கலையறிவைப் புலப்படுத்துகின்றன. களிமண், சுண்ணாம்புக்கல் முதலானவற்றால் செய்யப்பெற்ற உருவங்களும், வெண்கலத்தாலான நடனமாதின் உருவமும் இவர்கள் சிற்பக் கலையறிவையும், மண், மாழை முதலானவைபற்றிப் பெற்றிருந்த அறிவையும் நமக்குத் தெளிவாக்குகின்றன.

சிந்துவெளி எழுத்துகளை முதலில் 'சித்திர எழுத்துகள்'[9] என்று அழைத்தனர். இன்று இவை 'எழுத்துகள்' என்றே அழைக்கப்படுகின்றன. இந்த எழுத்துகள் மேலிருந்து கீழ்நோக்கியும், வலமிருந்து இடமாகவும் எழுதப்பெற்றுள்ளன. இவற்றை வலமிருந்து இடமாகவும், இடமிருந்து வலமாகவும், மேலிருந்து கீழாகவும் வாசித்துப் பொருள் காண முனைகின்றனர். சில எழுத்துகள் ஓசைகளையுணர்த்தும் 'ஒலிக் குறிப்பு'[10] எழுத்துகளாகவுள்ளன. எனவே, இவ்வெழுத்துகளை 'ஓவிய-ஒலி எழுத்துகள்' எனலாம். சிந்துவெளி மக்கள் ஓரசைச் சொற்களையே அதிகம் பயன்படுத்தியிருக்கவேண்டும். இவர்களின் கல்வியறிவு தன்னகத்தோடு மட்டுமேயன்றி அயலகத்தோடு தொடர்பு கொள்ளவும் பயன்பட்டதென்பதைப் பிற நாட்டு எழுத்துகளோடு இவற்றை ஒப்பிடும்போது அறிகிறோம். ஈராசுப் பாதிரியார் இவ்வெழுத்துகள் தமிழ் எழுத்துகளின் மூலமென்றும், இவற்றிலிருந்தே தமிழில் தொல்பழ எழுத்து வகைகள், பிராமி[11] ஆகியவை உருவாயினவென்றும் கருதுகிறார் ஓவிய வடிவிலான சிந்துவெளி எழுத்துகள் பல ஆண்டுகளுக்குப்பின் ஒலி வடிவான பிராமி எழுத்துகளாய் வளர்ச்சியடைந்தன. இப் பிராமி எழுத்திலிருந்தே மற்றைய இந்திய மொழிகளின் எழுத்துகள் தோன்றினவென்று ஆய்வாளர் சிலர் கருதுகின்றனர். சிந்துவெளி எழுத்துகள் ஓவிய எழுத்துகள் அல்ல. ஒவ்வொன்றும் ஒரு தனி ஒலி எழுத்தேயென்பது சிலர் கருத்தாகும். இக் கருத்தைப் பிற் சேர்க்கையில் காண்க.

---

9 Pictographic

10 Ideographic

11 Brahmi

ஓவியக் கலை

சிந்துவெளியில் கிடைத்துள்ள முத்திரைகளில் பலதிறப்பட்ட புடைப்போவியங்கள்[12] காணப்படுகின்றன. மூன்று முகங்களை யுடைய உருவம் மூன்று முத்திரைகளில் உள்ளது. கொம்புள்ள தேவதைகள், புலி, ஆடு முதலிய விலங்குகளின் உடல்களை யுடைய தேவதைகள், எருதின் கொம்புடைய புலி, தலையில் மாட்டுக்கொம்பும் வாலுமுடைய மாந்தனின் உருவம், முத்தலை களையுடைய விலங்கு முதலிய விந்தையான ஓவியங்கள் இம் முத்திரைகளில் காணப்படுகின்றன. பெரும்பாலான ஓவியங்கள் ஆடையின்றியே காணப்படுகின்றன. இவை, கலைத்திறனைக் காட்டவே சமைக்கப்பட்டவையாதலால் இவ்வாறு ஆடையின்றி யுள்ளன. சில முத்திரைகளில் வீணை, மதங்கம் (மிருதங்கம்), முதலிய இசைக்கருவிகளும், ஓரைக் (இராசிக்) கணங்களின் உரு வங்களும் உள்ளன. கோழிச்சண்டை, மாந்தன் விலங்கு வேட்டையாடல் ஆகிய காட்சிகளும் முத்திரைகளில் புடைப் போவியங்களாக உள்ளன.

சிந்துவெளியில் கிடைத்துள்ள சுடுமண் சிற்றுருவங்களிலும், பல அழகிய ஓவியங்கள் காணப்படுகின்றன. குறிப்பாகச் சிந்து, வெளி மக்களின் ஆடை, அணிகலன்களை அறிவதற்கு இந்த ஓவியங்களே தக்க சான்றுகளாயுள்ளன. பலதிறப்பட்ட தலைப் பாகைகள், கழுத்தணிகள், பாவாடைகள் முதலியவற்றை இந்த ஓவியங்கள் விளக்குகின்றன.

இங்குக் கிடைத்துள்ள மட்பாண்டங்களின்மீது தீட்டப் பெற்றுள்ள ஓவியங்கள் மிகவும் சிறப்பானவை. பிணக்குழிகளில் காணப்படும் தாழிகளின்மேல் கலுழன் (கருடன்) பறவைகள், மயில்கள் ஆகியவை வரிசை வரிசையாகப் பறப்பது போன்ற ஓவியங்கள் தீட்டப்பெற்றுள்ளன. இவற்றில் செம்படவன் மீன் பிடிக்கும் காட்சியும், மீன், ஆமை, இலை, கொடி முதலியவற்றின் ஓவியங்களும் உள்ளன. இவ்வாறு ஒரே உருவத்தையும், பல உருவங்களை ஒட்டுமொத்தமாகவும் ஓவியமாகத் தீட்டினாலும் அவற்றில் உயிரோட்டம் மிளிர்கின்றது.

படிமக் கலை

சிந்துவெளியில் கிடைத்துள்ள பலதரப்பட்ட உருவங்களைக் கொண்டு இம் மக்கள் படிமக் கலையில் சிறந்தவரென அறிய லாம். அவற்றுள் சிறப்பானவை ஒரு பூசாரியின் உருவம், ஒரு மாந்தனின் முண்டம், தாயும் சேயுமுள்ள இரட்டையுருவங்கள்,

12 Base-relief

நடனப்படிமை, நாட்டியமங்கை ஆகியனவாம். சுண்ணாம்புக்கல்லால் செய்யப்பட்ட பூசாரிப் படிமத்தில் தலைமயிர் நெய் தடவி வாரி வகிடு எடுக்கப்பட்ட நிலையும், முகத்தில் முழுத்தாடியுள்ள நிலையும் காணப்படுகின்றன. சட்டையில் மூன்று இலைகள் முத்திரைகள்போல் காட்சியளிக்கின்றன. வலக்கையிலும் தலையிலும் பட்டை கட்டப்பட்டுள்ளது. பட்டையின் நடுவில் வட்டத்தாயத்து உள்ளது. மாந்த முண்டப் படிமம் பளபளப்பானது. சுண்ணாம்புக் கல்லாலான மாந்த முண்டம் கை, கால், தலை இல்லாமல் உள்ளது. ஆனால், இந்த முண்டம் ஒரு மாந்த உடலின் தோல், நரம்பு, தசை முதலியவற்றைத் தெளிவுடன் எதிரொளிக்கிறது. தாய் இரு சேய்களை அணைத்துள்ளது போன்று கிடைத்துள்ள அழகிய சிறு படிமத்தை 'இரட்டையர் படிமம்' என்பர்.

தலையும் கைகளும் உடைந்த சுண்ணாம்புக் கல்லாலான உருவம் வலக்காலைத் தரையிலூன்றி, இடக்காலைத் தூக்கி ஆடுவது போலுள்ளது. இதனையே நடனப் படிமையென்றோம். ஓர் அழகிய நடனப் பெண்ணின் உடலழகு இதில் தெளிவாக எதிரொளிக்கிறது. வெண்கலத்தாலான முழு உருவ நாட்டிய மங்கையின் சிலையே சிந்துவெளிக் கலையின் சிறப்பியல்பாகும். இடக்கையை இடப்புறத் தொடையின்மீதும், வலக்கையை வலப்புற இடுப்பின்மீதும் வைத்துக்கொண்டு, இடக்காலை மடக்கிச் சற்று உயர்த்தி இச் சிலை காட்சியளிக்கிறது. இடக்கையில் தோள்பட்டை முதல் மணிக்கட்டுவரை வளையல்கள் உள்ளன. அக் கையில் ஓர் ஏனமுகம் உள்ளது. வலக்கையிலும் வளையல்கள் உள்ளன. கழுத்தில் மூன்று மணிகள் கோக்கப்பட்ட மாலையுள்ளது. இடுப்பில் நீர்ச்சீலை போன்ற சிறிதளவு துணியேயுள்ளது. உடல் முழுவதும் ஆடையின்றிக் காணப்படுகிறது. நமது நாட்டியக் கலையின் தொன்மையும் பாங்கும் இதில் மிளிர்கின்றன.

சமயம்

சிந்துவெளி மக்கள் எவ்வகையான சமயக் கோட்பாடுகளைப் பின்பற்றினரென்பது இன்னும் புதிராகவேயுள்ளது. இங்குக் கிடைத்துள்ள ஏராளமான முத்திரைகளில் பெண் உருவம் பதிக்கப்பெற்றுள்ளது. முத்திரையொன்றில் ஒரு பெண், புலியைத் தொட்டுக்கொண்டுள்ளாள். இத்தகைய சான்றுகளால் இவர்கள் நிலமகளை வணங்கினார்கள் என்பர். பலுச்சித்தானம் முதல் கிரேக்கம் வரையிலுள்ள மக்கள் நிலமகளை வணங்கியதால் இவர்களும் நிலமகள் வணக்கமுடையவர்கள் என்பர்.

பெரிய, சிறிய உருவங்களில் பல இலிங்கங்கள் இங்குக் கிடைத்துள்ளன. மூன்று முகங்களையுடைய ஓர் உருவம் கிடைத்துள்ளது.[13] இது மார்பில் பதக்கம், கையில் கடகம், இடுப்பில் கச்சை, தலையில் எருமைக்கொம்பு ஆகியவற்றுடன் காணப்படுகிறது. யானை, புலி, காண்டாமா, காளை ஆகிய விலங்குகள் இதன் இருமருங்கிலும் காணப்படுகின்றன. அடியில் இரு மான்கள் உள்ளன. இதனைச் சிவபெருமானின் உருவம் என்பர். பல முத்திரைகளில் காளையின் உருவம் பதிக்கப்பெற்றுள்ளது. ஒரு காலைத் தூக்கி நடனமாடும் உருவமொன்றும் கிடைத்துள்ளது. இத்தகைய சான்றுகளால் இம் மக்கள் சைவத்தைப் பின்பற்றினரென்றும், இலிங்கம், விடை (காளை), சிவபெருமான் ஆகியோரை வணங்கினரென்றும் கூறுவர். கண்ணனை வழிபட்டனரென்றும் சிலர் கருதுகின்றனர்.

இவர்கள் விலங்குகளையும், பறவைகளையும், காடு, மலை, ஆறு முதலிய இயற்கைப் பொருள்களையும் வழிபட்டனர். சுவர்களிலும், சில தாயத்துகளிலும் சுவஸ்திக் வடிவம் பொறிக்கப்பெற்றுள்ளது. இவர்கள் விலங்குகளைக் காவுகொடுத்தும், பல்வேறு படையல்களைப் படைத்தும், நேர்த்திக்கடன் செலுத்தியும் வழிபட்டார்கள்.

ஆனால், இதுவரை 'கோயில்' இருந்ததாக ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. மேற்காணும் சின்னங்களைச் சமயச் சின்னங்களாகக் கருதி அவற்றுள் பெருவாரியாகக் காணப்படும் இலிங்கம், முத்தலை, மும்முகன், காளை முதலியவற்றைக்கொண்டு சர் ஜான் மார்ஷல் போன்றோர், இவர்களின் சமயம் சைவமேயென்று முடிவு செய்திருப்பது ஐயத்திற்குரிய முடிவாகும். இத்தகைய சின்னங்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பெற்ற நாகரிகத் தொட்டில்களிலும் காணக்கிடக்கின்றன.

இவர்கள் மறுமையைப்பற்றிய நம்பிக்கையுடையவர்கள் என்றும் கூறலாம். யோகப் பயிற்சியையும் புலனடக்கத்தையும் இவர்கள் அறிந்திருந்தனர். இவர்களின் சவக்குழிகளை ஆயும்போது மறுமையில் இவர்கள் நம்பிக்கையுடையவரென்ற முடிவு மேலும் உறுதியாகிறது. அரப்பாவில் கண்டுபிடிக்கப்பெற்ற சவக்குழிகளில் எலும்புகளை மட்டும் சேர்த்துப் புதைத்துள்ள சவக்குழிகளும், உடலின் சில பகுதிகளை மட்டும் புதைத்துள்ள குழி

---

13 Sathianathaier, R., *A Political and Cultural History of India*, (1969, Madras), Vol. I, p. 23

களும், சுட்ட சாம்பலை மட்டுமுடைய குழிகளும் காணப்பெறுவதால் இவர்கள் இறப்புக்குப்பின் மாந்தன் ஏதோ ஒரு நிலையை அடைகிறானென்று நம்பினரென்பதை உய்த்துணரலாம். பிணங்களைத் தாழிகளிலிட்டு இவர்கள் புதைத்துள்ளனர். தாழிகளின் மேல் கழுழன் மயில் கூட்டங்களும், செம்படவன் வலைபோட்டு மீன்பிடிக்கும் காட்சிகளும், மீன், ஆமை, பறவைகள் முதலியவற்றின் உருவங்களும் ஓவியங்களாகத் தீட்டப்பெற்றுள்ளன.

இங்குக் கிடைத்துள்ள முக்கோண வடிவிலான முத்திரைகளைப் பதக்கங்களென்றும், நாற்கர வடிவிலான முத்திரைகளை ஒப்பந்தப் பட்டயங்களென்றும் கருதுகின்றனர். தாயத்துகளிலும், ஒப்பந்தப் பட்டயங்களிலும் ஓவியங்களோடு ஓவிய எழுத்துகளும் காணப்படுகின்றன. இத்தகைய ஓவிய எழுத்துகள் சுடுமண் உருவங்கள், எடைக்கற்கள், விளையாட்டுப் பொருள்கள் முதலியவற்றின்மீதும் பொறிக்கப்பெற்றுள்ளன. சதுரமான செப்புத் தகடுகள் நாணயங்களாகப் பயன்படுத்தப்பட்டன. இவற்றின் மீதும் ஓவிய எழுத்துகள் உள்ளன. இவ்வெழுத்துகளைப் படித்துப் பொருள் காண இன்றும் பலர் முயன்றுவருகின்றனர்.

சோவியத்து ஒன்றிய அறிஞர்கள் சிந்துவெளி எழுத்துகளை அறிவியல் முறையில் கணிப்பானின்[14] உதவிகொண்டு ஆய்ந்து, அவை திராவிட மொழியைச் சார்ந்தவையே என்று அறுதியிட்டுக் கூறுகின்றனர். மற்றும் பின்னிய[15] அறிஞர்கள் மேலும் இதனை ஆய்ந்து இவ்வெழுத்துகளையுடைய மொழி திராவிட மொழியேயென்றும், இத்தகைய நாகரிகத்தைத் தோற்றுவித்தவர் திராவிடரே என்றும் இறுதியாகக் கண்டுள்ளனர்.

சிந்துவெளி எழுத்துகளை ஆய்ந்துவரும் ஐராவதம் மகாதேவன், அவை திராவிட மொழியைச் சார்ந்தவையென்றும், தமிழ் அதிலிருந்து தோன்றியது என்றும் கூறுகிறார். கலைக் கண்ணோட்டத்தோடு பார்க்கும்போது இவை மிக அழகாக உள்ளன. சவர்க்காரக் கல்லின்மீது சுண்ணாம்பைத் தடவிச் சுட்டு, அதன்மீது எழுத்துகளை எழுதும் கலையை இம் மக்கள் நன்கு அறிந்திருந்தனர்.

ஆட்சிமுறை

சிந்துவெளியை ஆண்ட அரசன் சமயகுருவாகவும், ஆட்சியின் அதிகாரியாகவும் விளங்கினான். அவன் மொகஞ்சதாரோ, அரப்பா ஆகிய இரு தலைநகர்களைப் பெற்று இவ்விரு நகரங்

14 Computor 15 Finnish

களையும் இணைக்கும் சிந்து ஆற்றை உள்நாட்டுப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தினான். சுமேரியாவிலும் அக்கேடியாவிலும் ஆண்ட அரசர்களும் சமயத்திற்கும் நாட்டிற்கும் தலைவர்களாக இருந்தனரென்பதும் குறிப்பிடத்தக்கதாம். இவ்வரசர்கள் உலகச் செல்வத்தையும் அருட்செல்வத்தையும் மக்களுக்கே பகிர்ந்தளித்தனர்.

பொருளியல் நிலைமை

தொழில்கள்

சிந்துவெளியிலுள்ள நகரங்களின் அமைப்பையும், குறிப்பாக நிலத்தடிச் சாக்கடை அமைப்பையும் நோக்கும்போது இங்கு நிலவளமும் நீர்வளமும் சிறந்திருந்ததை அறிகிறோம். எனவே, வேளாண்மை இங்குத் தலைசிறந்த தொழிலாக இருந்தது எனலாம். கோதுமை, பார்லி முதலிய தானியங்களையும், பருப்பு, பழவகைகளையும், பருத்தியையும் இவர்கள் பயிரிட்டனர்.

ஆடு மாடுகளை வளர்த்தலும் இவர்களின் முகாமைத் தொழிலாகும். நீர்வளமிக்க நாடாகையால் மீன்பிடி தொழிலிலும், கப்பல் கட்டும் தொழிலிலும் இவர்கள் சிறந்து விளங்கினர். சுருங்கக்கூறின் சிந்துவெளியில் கொத்தர்கள், கற்றச்சர், மரத்தச்சர்கள், கன்னார்கள், பொற்கொல்லர்கள், சங்கு, பளிங்குகளைக்கொண்டு பொருள் செய்யும் கைவினைஞர்கள், பருத்தி, கம்பளம், பட்டு நெசவாளர்கள், மீன் ஆமை, பறவைகளைப் பிடிப்போர், வேட்டையாடுவோர், கப்பல்கட்டுவோர், வணிகர், மட்பாண்டம் செய்வோர் முதலான எண்ணிறந்த தொழிலாளர்களும், கல்வியாளர்களும், கலைஞர்களும், அரசியல், அறிவியல், சமய, சட்டவியல் அறிஞர்களும் இருந்தனர். மரத்தால் செய்யப்பெற்ற பொருள்கள் கிடைக்கவில்லையாயினும் முத்திரைகளில், முக்காலி, நாற்காலி, மிசை, கதவு, பெட்டி, தூண் முதலானவற்றின் உருவங்களைக் காண்கிறோம். எனவே, மரத்தாலான இத்தகைய பொருள்கள் மண்ணில் மக்கிப் போயிருக்கவேண்டும்.

வாணிகம்

சிந்துவெளி மக்கள் உள்நாட்டு வாணிகத்திலும் அயல்நாட்டு வாணிகத்திலும் சிறந்து விளங்கினர். இவர்கள் செம்பு, வெண்கலம் ஆகியவற்றை இராசபுதனம், மைய மாநிலம் முதலிய இடங்களிலிருந்தும், மான்கொம்புகளைக் காசுமீரத்திலிருந்தும், வெள்ளீயத்தை ஆப்கானிஸ்தானத்திலிருந்தும், உயர்வகைப்

பச்சைக்கல்லைத் (மரகதம்) திபேத்து அல்லது வடபர்மாவில் இருந்தும், பொன்னைக் கோலார், அனந்தப்பூர் ஆகிய இடங்களி லிருந்தும், அமேசகன் என்னும் மரகதத்தைத் தமிழகத்திலுள்ள நீலமலையிலிருந்தும், முத்து, சங்கு ஆகியவற்றைப் பாண்டிய நாட்டிலிருந்தும் பெற்றிருக்கவேண்டும். இதனால், இந்தியா முழு வதிலும் இவர்களின் உள்நாட்டு வாணிகம் பெருகியிருந்த தெனலாம்.

இங்குக் கிடைத்துள்ள முத்திரைகள், எழுத்துக்குறிகள், ஓவியங்கள், மட்பாண்ட வகை முதலானவை ஏலம், சுமேரியா, மெசபடோமியா, எகிப்து முதலான அயல்நாடுகளின் வணிகத் தொடர்பால் கிடைத்தவையாகும். சலவைக் கற்கள் சிந்து நாட்டில் கிடைக்கப்பெறாதவை. இவை ஏலம், சுமேரியாவில் இருந்து கொண்டுவரப் பெற்றிருக்கவேண்டும். மெசபதேமியா வில் காணப்பெறும் முத்திரைகளிலுள்ள எழுத்துகளும், யானை, காண்டாமா, முதலை ஆகியவையும் சிந்துவில் மட்டுமே கிடைக்கக்கூடியவை. அடியில் தொளையுள்ள மட்பாண்டங்கள் சிந்துவில் கிடைத்துள்ளன. இவை ஈராக்கிலிருந்து பெற்றவை. சுமேரியாவில் கிடைத்துள்ள பச்சைக் கல்லாலான ஓர் ஏனத்தின் மீது தீட்டப்பெற்றுள்ள காளையின் உருவம் இந்திய விலங் காகிய காளையாகும். உயர்வகைப் பச்சைக் கல்லால் ஆன அணி கலன்கள் சுமேரியாவிலும் சிந்துவிலும் ஒரே மாதிரியாகக் கிடைத் துள்ளன.

முறுக்குண்ட கொம்புகளையுடைய செம்மறியாடுகளின் உருவங்களைச் சிந்துவிலும், சுமேரியா, ஏலம், அனதோலியா, எகிப்து, மொரேவியா முதலான இடங்களிலும் காண்கிறோம். சுமேரியாவில் அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ள ஒருவகைக் கோடரி மொகஞ்சதாரோவிலும் கிடைத்துள்ளது. சுமேரியாவின் 'ஊர்' நகரத்தின் கல்லறையொன்றில் காணப்பெறும் குரங்கின் ஓவியம் சிந்துவைச் சேர்ந்தது. சிந்துவிலிருந்து யானை மருப்பு, சதுரங்க விளையாட்டு ஆகியவை சுமேரியாவிற்கும், தண்டு, தட்டு ஆகியவை சுமேரியாவிலிருந்து சிந்துவிற்கும் பரிமாற்ற மாயின எனலாம். சுமேரியரும் சிந்துமக்களும் ஒரே மாதிரியாகத் தலையை வாரிக்கொண்டிருப்பதும் மீசையில்லாமல் தாடிமட்டும் வைத்துக்கொண்டிருப்பதும் இவர்களின் பண்பாட்டுப் பரிமாற்றங் களை வலுப்படுத்துகின்றன. சுமேரியாவின் ஊர் நகரின் தெருக் களும் சந்துகளும் மொகஞ்சதாரோ நகரின் தெருக்களையும் சந்து களையும் ஒத்துள்ளன. மொகஞ்சதாரோ இல்லங்களிலுள்ள

நீராடும் அறைகளைப்போலவே அக்கேடியரின் எசுன்னா நகரத்திலும் நீராடும் அறைகள் காணப்படுகின்றன. மொகஞ்சதாரோவின் செய்குளத்தில் பூசப்பெற்றுள்ள நிலக்கீல் என்னும் பசையைச் சுமேரியாவிலிருந்தே சிந்துமக்கள் பெற்றனர். தலையில் முண்டாசு கட்டிக்கொள்ளும் வழக்கம் சிந்துவிலும் சிறிய ஆசியாவிலும்[16] காணப்பட்டது.

மேற்கண்டவாறு சிந்துமக்கள் சுமேரிய மக்களோடு தொடர்பு கொண்டிருந்ததைப்போலவே எகிப்தியரோடும் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தனர். சிந்துவிலும் எகிப்திலும் கிடைத்துள்ள கழுத்து மாலைகள் ஒரே மாதிரியாகவுள்ளன. எகிப்தில் கிடைத்துள்ள பீடங்கள் சிலவற்றின் கால்கள் சிந்துவெளிக் காளையின் கால்களைப் போலுள்ளன. எகிப்திலுள்ள பிரமிடுகளில் கிடைத்துள்ள மணிகளில் பெண்ணுருவம் செதுக்கப்பட்டு உள்ளது. இதேபோன்று சிந்துவிலும் சுமேரியாவிலும் மணிகள் கிடைத்துள்ளன.

பல முகப்புகளைக்கொண்ட உயர்வகை மணிகள் சிந்துவிலும் எகிப்திலும் கிடைத்துள்ளன. இம் மணிகள் இந்தியாவில் மட்டுமே கிடைக்கக்கூடியவை. சிந்துவில் கிடைத்துள்ள மூன்று செப்புத் தகடுகளில் காணப்பெறும் எழுத்துகளைப் போலவே எகிப்திலும் கிடைத்துள்ளன. மெழுகுதிரி தாங்கும் தண்டுகள், மட்பாண்ட வகைகள், கல், களிமண், செம்பு ஆகியவற்றாலான ஏனங்கள் ஆகியவை ஈரிடங்களிலும் ஒரே மாதிரியாகக் காணப் பெறுகின்றன.

இத்தகைய சான்றுகளால் சிந்துவெளி மக்கள் நீர்வழியேயன்றி நிலவழியாகவும் அயலகங்களில் வாணிகம் செய்ததையும், தொடர்புகொண்டிருந்ததையும் அறியலாம்.

பானையோடு ஒன்றில் பதிந்துள்ள ஓடத்தின் ஓவியத்தையும். முத்திரையொன்றில் காணப்பெறும் கப்பலின் உருவத்தையும் கொண்டு இவர்கள் சிறிய நீர்ப்பரப்பை ஓடத்திலும், பெருங் கடலைக் கப்பலிலும் கடந்ததை அறிகிறோம். பலுச்சித்தானம், பாரசீகம், ஈராக், அபிசீனியா, எகிப்து முதலான நாடுகளுடன் கடல் வாணிகமும், தென் பாரசீகம், சுமேரியா, சிரியா, எகிப்து முதலான நாடுகளுடன் நிலவழி வாணிகமும் செய்தனரென்று அறியலாம். நிலவழி வாணிகத்திற்கு உறுதியான காளைகளும் கழுதைகளும் பொதிசுமக்கப் பயன்பட்டன. சிந்துவெளியின்

---

16 Asia Minor

அழிவுக்குப்பின் எகிப்தில் இந்தியப் பொருள்கள் அருகிவிட்டன. செம்பாலான தட்டுகளும், வெண்கலத்தாலான தண்டும், ஒரு துலையும் (தராசும்), எடைக்கற்களும் சிந்துவில் கிடைத்துள்ளன. இதேபோன்ற எடைக்கற்கள் சுமேரியா, ஏலம்[17] ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன. சிந்து மக்களின் வளமான நகரவாழ்க்கை உள்நாட்டுத் தொழில்களால் மட்டுமேயன்றி அயலக வாணிகத்தாலும் வளம்பெற்றது.

யார் இந்த மக்கள் ?

சிந்துவெளி நாகரிகத்தைத் தோற்றுவித்த மக்கள் யாவரென்னும் வினாவிற்குத் தக்க விடையைப் பலரும் பலவாறு கூறுகின்றனர். ஆயினும், அவர்கள் பலவாறு முயன்று முடிவுகாண விழைகின்றனர்.

இந்தியாவின் பழங்குடியினரான நீகிரோ இனத்தவரே சிந்துவெளி நாகரிகத்தின் தந்தையரென்று ஒருசாரார் கூறுகின்றனர். இவர்கள் இன்றைய தமிழகத்திலுள்ள காடர், இருளர்களைப் போல் குட்டையாகவும் கருமையாகவும் இருந்தனர் என்பர்.

நீகிரோக்களுக்குப் பின் வந்த முண்டர், கொலேசியர், கொண்டா முதலானோரின் மூதாதையரே இந் நாகரிகத்தைப் படைத்தார்களென்று ஒருசாரார் கூறுகின்றனர். இவர்கள் ஆஸ்திரேலியா, பலுச்சித்தானம் முதலான பகுதிகளிலிருந்து இந்தியாவில் குடியேறியவர் என்பர். இவர்களும் கருமையாகவும் குட்டையாகவும் காணப்பட்டனர்.

மேற்கூறிய இருதரத்தாரின் கலப்பில் தோன்றி இன்றும் அசாம், பர்மாவின் எல்லைப்புறங்கள், நக்கவாரத் (நிகோபார்) தீவுகள், மலையாளக் கரைப்பகுதிகள் ஆகியவற்றில் வாழும் பழங்குடியினரின் மூதாதையரே சிந்துவெளி நாகரிகத்தைப் படைத்தார்களென்பது ஒருசாரார் கூற்று.

மேற்கூறிய இனத்தவர்களுக்குப் பின் நடுநிலக் கடற்பகுதியிலிருந்து வந்த பழங்குடியினர், கங்கைச் சமவெளியிலிருந்த ஆஸ்திரேலிய இனத்தவருடன் கலந்து கலப்பினமாயினர். இதைப் போலவே மெசபதேமியாவிலிருந்த பழங்குடி மக்கள் ஆர்மீனியரோடு கலந்து சுமேரியராயினர். பின்னர், இச் சுமேரியர் இந்தியாவிலிருந்த மேலே கூறிய கங்கைவெளிக் கலப்பினத்தோடு கலந்தனர். இதற்குப் பின்னர் மங்கோலியர், அல்பைனர் ஆகிய

[17] Elam

இனத்தவர் இந்தியாவில் குடியேறி மேற்கூறிய கலப்பினத்தோடு கலந்தனர்.

இவ்வாறு கலப்புண்ட இனங்களுள் பழங்குடித் திராவிட இனத்தின் கூறுபாடுகளே மேலோங்கிக் காணப்படுகின்றன. சிந்துவெளியில் கிடைத்துள்ள மண்டையோடுகளை ஆயும்போது இந்த உய்த்துணர்வு வலுப்பெறுகிறது. திராவிடரின் உயரம், மண்டையோடுகள் ஆகியவை குட்டையாக உள்ளன. இங்குக் காணப்படும் வீடுகளின் வாயில்களும் 165 செ.மீ.-க்கு மிகாத உயரமுடையவை. நடுநிலக் கடற்பகுதியிலிருந்து வந்தவர்கள் திராவிடரே. இவர்கள் தொல்பழங்காலத்தில் இந்தியாவில் தோன்றி நடுநிலக் கடல் வழியாக மேலைநாடுகளில் பரவி, மீண்டும் அதே கடல்வழியாக இந்தியாவிற்குள் புகுந்தன ரென்பது ஒருசாரார் கூற்று.

அவ்வாறு, நடுநிலக் கடற்பகுதியிலிருந்து வந்த மக்கள், ஆஸ்திரேலியாவிலிருந்து வந்த மக்கள், இமயத்தின் அடிவாரத்தி லிருந்த மங்கோலியர், இந்தியாவிலேயே இருந்த பழங்குடியினர் ஆகிய நான்கு இனத்தவர் அல்லது இந் நான்கு இனத்தவரின் கலப்பினத்தவர்தாம் சிந்துவெளி நாகரிகத்தைப் படைத்தவர் என்று ஆய்வாளர் சிலர் கூறுகின்றனர். ஆயினும், இதில் பழங் குடியினரின் (திராவிடரின்) பண்புகளே மேலிட்டுக் காணப்படுவ தால், இதனைத் திராவிடரின் (தமிழரின்) நாகரிகமெனலாம்.

சிந்துவெளி நாகரிகத்தைப் படைத்தவர்கள் இந்தியரே. அவர்களுள் திராவிட இனமே மேம்பட்டு நிற்கிறது இதனை இங்கு அதிகமாகக் காணப்படும் மரவணக்கம், விலங்கு வணக்கம், இலிங்க வணக்கம் முதலியவற்றைக் கொண்டும் அறியலாம்.

சிந்துவெளி மக்கள் ஒரே இனத்தைச் சார்ந்தவர் அல்லர் என்றும், பல்வேறு இனத்தவரின் கலப்பால் தோன்றியவர் என்றும் அங்குக் கிடைத்துள்ள எழுத்து வடிவங்களை ஆராய்ந்த வர்கள் கூறியுள்ளனர்.

உருசிய அறிஞர்கள் சிந்துவெளி எழுத்துகள் திராவிடமொழி யைச் சார்ந்தவையே என்று ஆராய்ந்து கூறியுள்ளார்கள்.

பின்னிய அறிஞர்கள் சிந்துவெளி எழுத்துகள் திராவிட மொழியைச் சார்ந்தவையென்றும், சிந்துவெளி மக்கள் திராவிட இனத்தைச் சார்ந்தவரேயென்றும் அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

சிந்துவெளி நாகரிகம் ஆரியரல்லாதாரால் படைக்கப் பெற்றது; ஆரியருக்கும் முற்பட்டது; ஆரிய நாகரிகத்தினும் மேம்பட்டதென்பது பேராசிரியர் ஆர். சத்தியநாத ஐயரின் முடிபாகும்.[18]

சிந்துவெளி எழுத்துகளை ஓவிய – சைகையெழுத்துகள் என்பர். தமிழ் எழுத்துகள் உரு, தன்மை, உணர்வு, ஒலி என வளர்ந்து பின்னர் உயிர், மெய், உயிர்மெய்யென நெடுங்கணக் காய் வளர்ந்தன. இது தமிழுக்கே உரிய சிறப்புத் தன்மை யாகும். இவ்வகையில் பிராமி எழுத்துகள் தமிழுக்கே உரியவை யென்பதும், இவற்றிலிருந்தே வடமொழி எழுத்துகளும் பிறவும் தோன்றினவென்பதும் அறிஞர்களின் முடிபாகும். சிந்துவெளியில் காணப்படும் ஒருவகை எழுத்துகளின் மாறுதல் வளர்ச்சியே பிராமி. சிந்துவெளியில் காணப்படும் இவ்வகை எழுத்துகளை இந்தியத் தொல்பிராமி என்பர். இதுவும் தோராயமாகக் கி.மு. 1500-ல் வடபிராமி, தென்பிராமியெனப் பிரிந்து வளர்ந்தது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த அசோக னின் கல்வெட்டுகளில் பொறிக்கப்பெற்றுள்ளவை வடபிராமி யாகும். திருநெல்வேலியில் கிடைத்துள்ள நாணயங்களில் சிந்துவெளி எழுத்துகளைப் பண்டைத் திராவிடரே தோற்று வித்தனரென்றும், அவை திராவிட மொழிக்கமைந்த பண்டைய எழுத்துகளே என்றும் ஈராசுப் பாதிரியார் முடிவு செய்துள்ளார்

சிந்துவெளி நாகரிகத்தைப் படைத்தவர் ஆரியரே என்பது மற்றொரு சாரார் கருத்து. ஆரியர்கள் சிந்துவெளியில் தங்கள் குடியிருப்புகள் மண் மூடியபின் மேற்காசியாவிற்குச் சென்று விட்டனரென்றும், அவர்கள் கி.மு. 2500-ல் சிந்துவில் குடியேறி, கி.மு. 2500 முதல் கி.மு. 1500 வரையில் சிந்துவெளியில் தங்கி இருந்தனரென்றும், இக்காலத்தில்தான் இருக்குவேதம் உருவான தென்றும் கூறுவர். ஆனால், இருக்கு வேதகால நாகரிகம் சிந்து வெளி நாகரிகத்திற்கு முற்றிலும் வேறுபட்டிருப்பதால் இக்கூற்று ஏற்புடைத்தாயில்லை. இருக்கு வேதத்தில் இந்திரனை ஏவிக் கறுப்பர்களின் மதில்களோடு கூடிய நூறு நகரங்களையுடைய தாசர்களை அழிக்கும்படியும், பல மண்டபங்களையும், பல்லாயிரம் கதவுகளையும் தூண்களையுமுடைய கறுப்பர்களின் (திராவிடர்) நகரங்களை அழிக்கும்படியும் வேண்டும் பகுதிகள் காணப்படு கின்றன. அவ்வாறு இருக்கு வேதத்தில் குறிப்பிடப்படும் நகரங்

---

18 Sathianathaier-*History of India*, Vol. I, p. 25

கள் கறுப்பருடைய (திராவிடர்) சிந்துவெளி நகரங்களாகவே இருக்கலாமென்று ஆராய்ச்சியாளர்கள் துணிகின்றனர்.[19]

பண்டாரகர் பிரான்நாத் என்பவரும், பண்டாரகர் வேடல் என்பவரும் இந்தோ–ஆரிய இனத்தின் ஒரு பிரிவே சுமேரிய இன மென்றும், அச் சுமேரியரிடமிருந்து சிந்துவெளி எழுத்துகள் கடன் வாங்கப்பெற்றனவென்றும், சிந்துவெளிச் சொற்களில் வேத கால அரசர்களின் பெயர்களும் காணப்படுகின்றனவென்றும் கூறி, சிந்துவெளி நாகரிகம் ஆரியரின் படைப்பே என்பர். இக் கருத்தைத் தொல்பொருளாராய்ச்சியாளர் எஸ். ஆர். ராவ் என்பார் சரியெனக் கொள்கிறார். எனினும் இக்கருத்தை ஏற்க இயலவில்லை. சிந்துவெளியில் காணப்படும் சில பெயர்கள் இருக்கு வேதகால அரசர்களின் பெயர்களாயுள்ளதால் இந் நாகரிகம் ஆரியரால் சமைக்கப்பெற்றதென்பதும் சரியில்லை. திராவிட நாகரிகம், ஆரிய நாகரிகத்திற்கும் முற்பட்டது. எனவே, திராவிட அரசர்களின் பெயர்களை இருக்கு வேதகால ஆரிய அரசர்களும் பெற்றிருந்தனரென்பதை இது வலியுறுத்துவதாகுமென்று ஆய்வாளர் கருதுகின்றனர்.

நாம் மேலே கண்டவாறு, சிந்துவெளி நாகரிகச் சின்னங்கள் எகிப்திய, மெசபதேமிய, சுமேரிய, ஏலம், பாபிலோனிய நாகரிகச் சின்னங்களைப்போல் பல வகையிலும் ஒத்துக் காணப் படுவதால் இதனைச் சமைத்த மக்கள் ஒரு மிகப்பெரிய பரப்பில் வாழ்ந்தவர்களென்றும், அவர்களின் நாகரிகம் ஒரு பொதுப் பண்பில் தோய்ந்து வளர்ந்ததென்றும் கூறலாம்.[20] சிந்துவெளி எழுத்துகள் சுமேரியாவிலும் பசுபிக் கடலிலுள்ள ஈஸ்டர் தீவிலும் கிடைப்பதாலும், பண்டைய எகிப்திய, சைப்பிரசு, இலிபியா ஆகிய நாடுகளின் எழுத்துகளைப்போல் இவை காணப் படுவதாலும், இவை அனைத்திற்கும் ஒரு பொதுவான எழுத்து முறை இருந்ததென்றும், பின்னர்ப் பிரிந்து இது வளர்ந்திருக்க வேண்டுமென்றும் தெரிகின்றது.

---

[19] இந் நிலம் தாசரைப் புதைக்கும் சவக்குழியாகும். இந்திரன் 30,000 தாசர்களையும், 50,000 கிருட்டிணர்களையும் கொன்றான். கறுப்பரை ஒழிக்க நடத்திய போரில் யஜுஸ்வான் என்பவன் வாங் கிரிதன் என்பவனுடைய நூறு நகரங்களைத் தாக்கினான். தாசரின் தலைவனான சம்பரனுக்குச் சொந்தமான 90 முதல் 100 வரையி லிருந்த நகரங்கள் அழிக்கப்பட்டன—Mookerji, R K., *Hindu Civilization*.

[20] Lal, B.B., *Indus Valley civilization- A Cultural History of India* (Ed.), Basham, A.L., p. 17

எகிப்திய, மெசபதேமிய சிந்துவெளி நாகரிகங்கள் ஒத்த தன்மையுள்ளவையாகவும், ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவையாகவும் காணப்படுவதாலும், மக்களின் வாழ்க்கை வழிபாட்டு நிலைகளும் எழுத்துமுறைகளும் எண்ணங்களும் ஒருமித்துக் காணப்படுவதாலும், இவற்றுக்கு மூலமான ஒரு நாகரிகம் இருந்திருத்தல் வேண்டுமென்றும், அத்தகைய மூலமுதல் நாகரிகம் இந்துமாவாரியில் மூழ்கிப்போன குமரி (பழம் பாண்டிய) நாட்டு நாகரிகமாகவே இருத்தல் வேண்டுமென்றும் சிலர் கருதுகின்றனர்.

சிந்துவெளி நாகரிகத்தின் காலம்

சிந்துவெளி நாகரிகத்தின் தந்தையர் யாவரென்பதைப் போலவே இதன் காலமும் ஐயத்திற்குரியது. எனவேதான், இன்றும் இதன் காலத்தைத் திட்டவட்டமாகக் குறிக்க முடியாமல் பலதரப்பட்ட காலக் கணக்குகள் கூறப்படுகின்றன. சிந்துவெளி நாகரிகம் இருக்கு வேத காலத்திற்கும் முற்பட்டது. இருக்கு வேதத்தில் குறிப்பிடப்படும் கறுப்பர் நகரங்களே மொகஞ்சதாரோவும் அரப்பாவும் ஆகுமெனக் கொண்டால், ஆரியரின் வருகைக்குக் குறைந்தது ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிந்துவெளி நாகரிகம் தோன்றியிருக்கலாம். இருக்கு வேதகாலம் தோராயமாகக் கி.மு. 2500-க்கும் 1500-க்கும் இடைப்பட்ட காலமெனக் கொண்டால், சிந்துவெளி நாகரிகம் குறைந்தபட்சம் கி.மு. 3000-ல் தோன்றியிருக்கலாம். இருக்கு வேதகாலம் தோராயமாகக் கி.மு. 1500 என்று கொண்டால் சிந்துவெளி நாகரிகம் கி.மு. 2500-க்கும் 1500-க்கும் இடைப்பட்ட காலத்தில் உருவாகியிருக்கலாம்.

மார்ட்டிமர் வீலர் இங்குக் கிடைத்துள்ள தொல்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு, இந் நாகரிகம் கி.மு.2500-க்கும் 1500-க்கும் இடைப்பட்ட காலத்தில் உருவானது என்கிறார். இவர் இங்குள்ள சுட்ட செங்கற்கள் முதற்கொண்டு கோலிக் குண்டுகள் வரையிலான பல்வேறு பொருள்களையும் பிற நாகரிகச் சின்னங்களோடு ஒப்பிட்ட பின்னரே இம் முடிவுக்கு வந்துள்ளார். அந் நாகரிகங்களும் ஏறத்தாழ இதே காலஅளவில் தோன்றியுள்ளன என்பதும் அவருடைய கருத்தாகும்.

இவரைப் போலவே சர் ஜான் மார்ஷல் ஊர், கிசு,[21] தெல் அசுமர்[22] முதலான பண்டைய நாகரிக நகரங்களில் கிடைத்துள்ள ஏறத்தாழ முப்பது முத்திரைகள் சிந்துவெளி முத்திரைகளை

[21] Kish [22] Tell Asmar

ஒத்திருப்பதைக்கொண்டு இந் நாகரிகங்களின் காலம் கி.மு. 3000 என்கிறார்.

ஜான் மார்ஷல், குறிக்கும் கி.மு. 3000 என்னும் காலக் கணக்கும் மொழிநூலறிஞர் பண்டித தேவநேயப் பாவாணர் தமது 'ஒப்பியல் மொழிநூ'லில் குறிக்கும் காலக்கணக்கும் ஓரளவு ஒத்துள்ளன. சிந்துவெளி நாகரிகம் கி.மு. 3250-க்கும் 2750-க்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றியதென்பது பாவாணரின் கருத்தாகும். ஜான் மார்ஷல் சுமேரிய நாகரிகத்திற்கும், அதற்குப் பின் தோன்றிய பல நாகரிகங்களுக்கும் சிந்துவெளி நாகரிகமே தாயாக உள்ளது என்கிறார். உலக நாகரிகங்கள் அனைத்திற்கும் சிந்து வெளி நாகரிகமே தாயாகும் என்பது பாவாணரின் கருத்தாகும். உருசிய அறிஞர் கொந்தராதரும் இவர் கருத்தையே வலியுறுத்து கிறார்.

மெசபதேமியாவிலும் ஏலத்திலும் கிடைத்த முத்திரை களில் காணப்படும் எழுத்துகளும், காளைமாட்டின் உருவமும் சிந்துவெளி எழுத்துகளையும், காளையின் உருவத்தையும் ஒத்து உள்ளன. ஊர், கிசு ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பெற்ற இரண்டு முத்திரைகள் கி.மு. 2800-க்கும் முற்பட்டவை என்று கூறுகின்றனர்.

ஊர், கிசு ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பெற்ற இரண்டு முத்திரைகள் கி.மு. 2500-ல் ஆண்ட அக்கேடிய அரசன் சார்க் கோன் காலத்திற்கும் முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவை யென்றும் (கி.மு. 2800), இவன் காலத்து உருளை வடிவிலான முத்திரைகளும், மட்பாண்டங்களும் தெல்அசுமர் என்னுமிடத் தில் கிடைத்துள்ளன என்றும் கூறுகின்றனர். இத்தகைய பல்வேறு முத்திரைகளும் சிந்துவிலிருந்தே இறக்குமதி செய்யப்பெற்றன என்பது ஆராய்ச்சியாளரின் முடிபாகும். எனவே, சிந்துவெளி நாகரிகத்தின் காலம் இவற்றிற்கெல்லாம் முற்பட்டதாகிறது.

சி14[23] எனப்படும் கரியக ஆய்வுமுறையால் சிந்துவெளி நாகரிகம் கி.மு. 2400-லிருந்து கி.மு. 1700 வரையிலான கால வெல்லையை உடையதென்றும், இதுவரை கரியக ஆய்வு தெளி வானகாலக்கணக்கை வெளிப்படுத்தவில்லையென்றும், மொகஞ்ச தாரோவில் இதுவரை அகழ்வாய்வு செய்யப்பட்ட பகுதிக்கும் கீழே பல அடுக்குகள் அமைந்திருப்பதால் மேலும் கி.மு. 4000

---

23 Carbon 14

வரை இதன் காலம் முன்தள்ளப்படலாமென்றும் ஆராய்ச்சி யாளர்கள் கூறுகின்றனர்.[24]

காண்டாமா, யானை ஆகிய இரண்டும் இந்தியாவில் மட்டுமே காணப்படும் விலங்குகளாகும். ஆனால், இவற்றின் உருவங்களைக்கொண்ட முத்திரைகள் பாபிலோனியாவில் கிடைத்துள்ளன. இவை மேற்கூறிய அக்கேடிய அரசன் சார்க்கோனுக்கு முன் பான்சுதரல் என்பவனுடைய பெயரைக் கொண்ட முத்திரையுடன் காணப்பெற்றதால் சார்க்கோன் ஆண்ட கி.மு. 2500-க்கு முன்பே சிந்துவெளி முத்திரைகள் பாபிலோனியாவில் இறக்குமதி செய்யப்பெற்றுள்ளன என்பதை அறியலாம்.

பர். சி. எஸ். பாப்ரி என்பார் சுமேரியாவிலும் பாபிலோனியாவிலும் கிடைத்துள்ள மண்சாடிகளை ஆய்ந்து அவை சிந்துவெளி மண்சாடிகளைப் போலுள்ளன என்கிறார். இதைப் போலவே எகிப்திய, ஏலம் முதலிய நாகரிகச் சின்னங்களையும் ஆய்ந்து அந் நாகரிகங்களின் காலத்தையும் சிந்துவெளி நாகரிகத்தின் காலத்தையும் கணித்துள்ளார். இந் நாகரிகத்தின் இறுதிக் காலம் கி.மு. 1500 ஆகுமென்பது ஒருசாரார் கருத்து.[25] பாப்ரியின் கணிப்புப்படி சிந்துவெளி நாகரிகத்தின் காலம் கி. மு. 2800- க்கும் 1500-க்கும் இடைப்பட்ட காலமாகும். இக் கருத்து ஏற்புடைத்தாகத் தோன்றுகிறது.

பிற்சேர்க்கை

சிந்துவெளி எழுத்துகள் ஓவிய, ஒலியெழுத்துகளே என்பது ஈராசுப் பாதிரியார் உள்ளிட்ட பலர் கருத்தாகும். திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் பல குறியீடுகளின் திரளை ஒரே உயிர் அல்லது மெய் எழுத்தாகக் கொண்டு படிக்கும் அடித்தளம் அமைக்கிறார். ஆனால், திரு. சு. மலையாண்டி அவர்கள் சிந்துவெளிக் குறி ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனி எழுத்தைக் குறிக்கும் என்கிறார். மொழியியலின்படி திரு. சு. மலையாண்டி கூற்றுப் பொருத்தமாகப்படுகிறது இவருடைய ஆய்வின்படி கொடுக்கப்பட்டுள்ள வரைபடம் படிக்கப்படுவதை நோக்குவோம்.[26]

---

24 Basham, A.L., *Cultural History of India*. pp. 18-19

25 Madho Sarup Vats, *The Cultural History of India*, Vol. I, p. 126

26 'Hans Jenson' எழுதிய '*Sign, Symboland Scripts*' என்னும் நூலிலிருந்து பட எண் பக்க எண் என்னும் வரிசையில் தரப்படுகின்றன.

சிந்துவெளி எழுத்துகள்



வரைபடம் 4

கொடுக்கப்பட்டுள்ள எழுத்து வரைபடத்தில் 1. எண்ணிட்ட எழுத்து வரிசையில் நான்கு எழுத்துகள் உள்ளன. அவற்றை வல மிருந்து இடமாகப் படிக்கும்போது 'ஆவழுதி' என்று படிக்கப் படுகிறது. இதைப்போலவே பிற வரிசை எழுத்துகளும் முறையே 2. அவ மதுரைஇ நகரோம், 3. ஆதி, 4. பரதன், 5. பரதவன், 6. பரத சோழன், 7. பரத சோழான், 8. கோ குடவரி உதி என்று படிக்கப்படுகின்றன.

கொடுக்கப்பட்டுள்ள படத்தில் (வரைபடம் 4) 4. எண்ணிட்ட வரியில் இடப்பக்கம் முதலாவதாக உள்ள எழுத்தை, ஈராசுப் பாதிரியார் சிந்துவெளி எழுத்துகளைச் சித்திர எழுத்தாகப் படிக்கும் முயற்சியில் 'கப்பல்' என்று படிக்கிறார். இந்த எழுத்து களுக்கு இந்த ஒலி வடிவங்கள் தரப்படுவதை அடியில் காணும் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன.[27]

1. 'ஆ' எழுத்துக்குறி—இது லிண்டன் டபீல்டு[28] அவர்கள் அமைத்துள்ள சுமேரிய அகரமுதலிப் பட்டியலை அடிப் படையாகக் கொண்டது.

'வ' எழுத்துக்குறி—இக் குறியில் வகரமும் உகரமும் சேர்ந்து உள்ளன. நாமக்குறியில் இடையில் காணப்படும் கோடு வகரத்தைக் குறிக்கும். இக் கோடு பிராமி (தாமிழி) எழுத்தில் வரும் வகரம், அடியில் ஒரு சுழியுடன் அமை வது போன்று பொதுவாகக் காணப்படும். இங்கு அந்தச் சுழி தெளிவாகத் தெரியவில்லை. எனினும், இது வகரமே. அடியில் தனித்துள்ள இக்காலப் பகரத்தில் வளைவு வடிவம் 'உ' ஒலி உடையது. இந்த வடிவம் உகர ஒலி பெற்றிருப்பதைத் தமிழ் வட்டெழுத்தில் காணலாம். வட்டெழுத்தில் இடப்பக்கம் சிறு வளைவு இருக்கும். இங்கு அந்த வளைவு இல்லை. ஆர்மீனியன் எழுத்தில் படத்தில் உள்ளது போன்றே அதே வடிவ மும் அதனை அடுத்து வலப்பக்கம் அடிக்கோடு நீளம் குறைந்த இக்காலத் தமிழ் டகர எழுத்தின் வடிவமும் சேர்ந்து உகர ஒலியைத் தரும்.

'மு' எழுத்துக்குறி—மூன்று செங்குத்துக் கோடுகளாக இப் படத்தில் உள்ள குறி 'ம'கர மெய்யைக் குறிக்கும். வகரத்தில் உள்ள உகரம் படிக்கும் முறையில் இதனோடு கூடி 'மு' என்னும் ஒலியைத் தரும். உகரித் (சிரியன்) தொல்பழங்கால (கி.மு. 1300 எழுத்து முறையில் இந்த வடிவம்[29] இவ்வொலி உடையது.

'தி' எழுத்துக்குறி – இதனை 'டி' என்றும் படிக்கலாம். உச்சி யில் கூம்புள்ள முக்கோணக் குறி 'த்' என்னும் ஒலியை உடையது. இவ்வாறு இக் குறி ஒலிக்கப்படுவதைக்

27 Hans Jensen, *Sign, Symbol and Scripts* என்னும் நூலிலிருந்து பட எண் பக்க எண் என்னும் வரிசையில் தரப்படுகின்றன.

28 Lindon l affield

29 Hans Jensen, Op. cit., Fig. 83a

காரியன்[30] எனப்படும் தொல்பழங்கால எழுத்தில் காணலாம். அடிக்கோடு இகர உயிரொலியைத் தரும் குறியாகும் 'ஆவழுதி' என்பது 'ஆவழுடி' என்று எழுதப்பட்டு இருப்பது சித்தன்னவாசல் தமிழ்க் கல்வெட்டில் 'காவுதி'என்னும் சொல் 'கவுடிஞன்' என்று எழுதப்பட்டிருப்பதனோடு தொடர்புடையது.

2. இந்த வரிசையை வலமிருந்து தொடங்கிப் படிக்கும் போது மேலும் கீழும் எழுத்துகள் இருக்கின்றன. இவற்றின் மேலுள்ள எழுத்தை முதலிலும் கீழுள்ள எழுத்தைப் பின்பும் ஒலித்துப் படித்தல்வேண்டும். இவ்வாறு படிக்கும்போது 'டவமத்ரஇ, நகரோம்' என்று அமைந்துள்ளதைக் காணலாம்.[31]

3. வலமிருந்து இடமாக 'ஆத்இ' என்னும் ஒலி தரும் வரி இது.[32]

4. பரதன்.[33]

5. பரடவன்.[34]

6. ப ர ட சோ ழ ன்.[35]

7. ப ர ட சோ ழ ா ன்

8. சொ கு ட வ உ ர் த் இ.[36]

---

30 Carian

31 Hans Jensen, Op. cit., ஓ(கார)ம் எழுத்து (படம் 579); எகிப்தியச் சித்திர ஒலி எழுத்து (படம் 46e); மெண்டி எழுத்து (படம் 186); சினாய் எழுத்து (படம் 224).

32 Ibid, கிரீட்டன் (Creton) எழுத்து (படம் 95).

33 Ibid, பண்டைய கமுடி எழுத்து (படம் 222), அவஸ்த்தான் (Avestan) எழுத்து (படம் 428, 31ஆம் எழுத்து). திரு. ஐ. மகாதேவனும் இவ்வரியின் பக்கத் தொடக்கத்தில் காணப்படும் எழுத்துக்கு வகர ஒலி தந்துள்ளார்.

34 Ibid, கிரீட்டன் மற்றும் ஹிட்டைட் (Hittite)மொழிகளில் இடப்பக்கம் முதலிலுள்ள சூலம் போன்ற எழுத்திற்கு னகர ஒலி தரப்படுகிறது.

35 Ibid, ஆப்பிரிக்க மொழியில் இடமிருந்து இரண்டாவதாகக் காணப்படும் எழுத்திற்கு ழகர ஒலி தரப்படுகிறது. (படம் 178)

36 Ibid, படம் 95 மொழி கிரீட்டன், (படம் 579) மொழி ஒ(கார)ம்.

கருவிநூல் பட்டியல்

(Bibliography)

தமிழ் இலக்கியம்

1. தொல்காப்பியம்
2. எட்டுத்தொகை
3. பத்துப்பாட்டு
4. பதினெண்கீழ்க்கணக்கு
5. சிலப்பதிகாரம்
6. மணிமேகலை
7. சீவகசிந்தாமணி
8. சூடாமணி நிகண்டு
9. திருக்கழுமல மும்மணிக்கோவை
10. திவாகர நிகண்டு
11. நல்வழி
12. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
13. பெரியபுராணம்
14. பெருங்கதை
15. மூதுரை

இயல் 1

1. இராசமாணிக்கம், மா. **பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழகம், 1970**

2. Basham, A. L. *The Wonder that was India*, Clarendon Press, Oxford, 1975

3. Iyengar, P. T. S. *Pre-Aryan Tamil Culture* in the Journal of Indian History, Madras, 1927

4. Jowett, T. M. *Aristotle's Politics*, Oxford University Press, London, 1905

5. Kanakasabai Pillai, V. *The Tamils Eighteen Hundred Years Ago*, Kazhagam, Madras, 1956

6. Nilakanta Sastri, K. A. *Sangam Literature-Its Cults and Culture*, Swathi Publications, Madras, 1972

7. Pillay, Dr. K. K. *A Social History of the Tamils*, University of Madras, 1969

8. Subramanian, Dr. N. — *The Sangam Polity*, Asia Publishing House, Bombay, 1966

9. Webster — *Third International Dictionary*, G. Bell & Sons, London, 1961

இயல் 2

1. இராசமாணிக்கம், மா. — பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழகம், 1970

2. Caldwell, R. — *A Comparative Grammar of the Dravidian or the South Indian Family of Languages*, University of Madras, 1961

3. Dipakranjan Das — *Economic History of the Deccan*, New Delhi, 1969

4. Kanakasabai Pillai, V. — *The Tamils Eighteen Hundred Years Ago*, Kazhagam, Madras, 1956

5. Kunjan Pillai, Elankulam — *Studies in Kerala History*, Trivandrum, 1970

6. Mortimer Wheeler — *Rome Beyond the Imperial Frontiers*, London, 1954

7. Nilakanta Sastri, K. A. *Foreign Notices of South India*, University of Madras, 1972

8. Sivaraja Pillai, K. N. *The Chronology of the Early Tamils*, University of Madras, 1932

9. Smith, V. A. *History of India*, Clarendon Press, Oxford, 1967

10. Schoff, W. H. (Ed.) *The Periplus of Erythraean Sea*, New York, 1912

11. Subramanian, Dr. N. *Sangam Polity*, Asia Publishing House, Bombay, 1966

12. Thomas, P. J. *The Pepper Trade of South India in Early Times* in S.K. Aiyangar's Commemoration Volume, Madras, 1936

இயல். 3

1. இராசமாணிக்கம், மா. தமிழர் திருமணத்தில் தாலி, செல்வி பதிப்பகம், காரைக்குடி, 1955

2. குழந்தைசாமி, வா. செ. — பழந்தமிழும் பொறியியலும், பல்கலைப் பழந்தமிழ், சென்னைப் பல்கலைக்கழகம், 1974

3. சஞ்சீவி, ந. — சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், சென்னைப் பல்கலைக்கழகம், 1973

4. சுப்பிரமணிய சாஸ்திரி, பி. எஸ். — சங்க நூல்களும் வைதீக மார்க்கமும், திருச்சி, 1951

5. திருநாவுக்கரசு, க. த. — இலங்கையில் தமிழ்ப் பண்பாடு, சேகர் பதிப்பகம், சென்னை, 1978

6. ௸ — வாழ்வும் இலக்கியமும், மணியகம், சென்னை, 1977

7. Albert Schweitzer — *Indian Thought and Its Development*, Wilco., Bombay, 1969

8. Do. — *Reverence for Life*, Bharatiya Vidya Bhavan, Bombay, 1964

9. Bowra, C. M. — *The Heroic Poetry*, London, 1952

10. Buhler, G. (Tr.) — *The Laws of Manu*, Clarendon Press, Oxford, 1886

11. Burrow, Dr. T. & Emeneau, M. B. — *A Dravidian Etymological Dictionary*, Oxford University Press, 1961

12. Chatterji, S. K. — *Pre-Aryan Culture* in the Bulletin of the School of Oriental and African Studies, GB, Vol. VIII, 1927

13. Eliot, T. S. — *Notes Towards the Definition of Culture*, Faber, London, 1967

14. Eliot, Sir C. — *Hinduism and Buddhism*, London, 1921

15. Gnanambal, K. — *Home Life among the Tamils in the Sangam Age*, Central Art Press, Madras, 1947

16. Gangoly, O. B. — *The Cult of Agastya* in the Quarterly Journal of the Mythic Society, Vol. 17, Bangalore, 1931

17. Iyengar, P. T. S. — *History of the Tamils*, C. Coomaraswamy Naidu & Sons, Madras, 1929

18. Do. — *Pre-Aryan Tamil Culture* in the Journal of Indian History, 1927

19. Do. — *Life in the Age of Mantras*, Madras, 1912

20. John Dowson — *A Classical Dictionary of Hindu Mythology and Religion*, London, 1908

21. Kailasapathy, Dr. K. — *Tamil Heroic Poetry*, Clarendon Press, Oxford, 1968

22. Kamil Zvelebil — *'A short Note on the Tamil Contribution to World Civilisation' Tamil Culture*, Vol. V.

23. Karmarkar, A. P. — *The Religions of India*, Vol. I, Lonavala, 1950

24. Law, B. C. — *South India as a Centre of Pali Buddhism* in S.K. Aiyangar's Commemoration Volume, Madras, 1936

25. Matthew Arnold — *Culture and Anarchy*, Oxford University Press, GB, 1969

26. Natana Kasinathan — *Hero Stones in Tamilnadu*, Arun Publications, Madras, 1978

27. Navaratnam, C. S. — *A Short History of Hinduism in Ceylon*, Jaffna, 1964

28. Nilakanta Sastri, K. A. — *Cultural Contacts between Aryans and Dravidians*, Bombay, 1967

29. Do. — *Sangam Literature-Its Cults and Cultures*, Swathi Publications, Madras, 1972

30. Do. — *The Culture and History of the Tamils*, Calcutta, 1964

31. Panikkar, K. M — *Geographical Factors in Indian History*, Bharatiya Vidya Bhavan, Bombay, 1956

32. Pillay, Dr. K. K. — *Origin of Muruga Worship* in Studies in the History of India with Special Reference to Tamilnadu, Madras, 1979

33. Pope, G. U. — *The Sacred Kurral*, Henry Frowde, London, 1886

34. Rajalakshmi, C. — *Women in the Age of Cangam* in the Journal of Tamil Studies, Institute of International Tamil Studies Madras, No. 8, Dec. 1975

35. Rene Grousset — *Bilan de Histoire*, Paris, 1927

36. Renou, L. — P. Meiles L. '*Inde Classique*' II Part Paris, 1929

37. Sivaraja Pillai, K. N. — *Agastya in Tamil Land* University of Madras 1929

38. Thaninayagam, Xavier S. — *Nature in Ancient Tamil Poetry*, Tamil Literary Society, Tuticorin, 1952

39. Do. — *The Tamils said It all with flowers* in Tamil Culture, Vol. II, No. 2.

40. Toynbee, Arnold J. — *A Study of History*, (Abd.) D. C. Somerwell, New York, 1969

41. Do. — *Civilisation on Trial*, Oxford University Press, London, 1957

42. Venkata Ramanayya, N. — *Origin and Development of South Indian Temple Architecture*, Madras, 1926

இயல் 4

1. புறநானூற்றுச் சொற்பொழிவுகள், கழக வெளியீடு, சென்னை, 1966

இயல் 5

1. கலியாணசுந்தரம், திரு. வி. — முருகன் அல்லது அழகு, சாது அச்சுக்கூடம், சென்னை, 1951

2. வெள்ளைவாரணன், க. — தொல்காப்பியத்தில் தத்துவ நெறிக் கொள்கைகள், திருக்கோயில், நவம்பர் ஏடு, 1978

3. Chatterji, Dr. S. K. — *Indo-Aryan and Hindi*, Ahmedabad, 1942

4. Das Gupta — *History of Indian Philosophy*, Vol. III, Cambridge, 1932-49

5. Estilin Carpenter, J. — *Theism in Mediaeval India*, Munshiram Manoharlal, New Delhi, 1977

6. Kanakasabai Pillai, V. — *The Tamils Eighteen Hundred Years Ago*, Kazhagam, Madras, 1966

7. Karmarkar, A. P. — *The Religions of India*, Vol. I. Lonavala, 1950

8. Radhakrishnan, S. — *Hindu View of Life*, Faber, London, 1950

9. Ramachandra Dikshitar, V. R. — *The Origin and Spread of the Tamils*, Kazhagam, Madras, 1947

10. Richard Garbe — *Philosophy of Ancient India*, Chicago, 1897

இயல் 6

1. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு — தொல்பழங்காலம், வரலாற்று வெளியீட்டகம், சென்னை, 1975

2. தங்கவேலு, கோ. இந்திய வரலாறு,
பழனியப்பா பிரதர்ஸ்,
சென்னை,
1972

3. ஷ்டி இந்தியக் கலை வரலாறு-
சிற்பக்கலை,
தமிழ்நாட்டுப் பாடநூல்
நிறுவனம், சென்னை,
1974

4. தேவநேயன், ஞா. தமிழ் வரலாறு,
நேசமணி பதிப்பகம்,
காட்டுப்பாடி,
1967

5. விபுலானந்தர் யாழ்நூல்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சை,
1947

6. Hans Jensen *Sign, Symbol and Script*,
London,
1970

7. Longhurst *Pallava Architecture*,
Memoirs of the Archaeological
Survey of India,
1924

இயல் 8

1. சண்முகம், கொடுமுடி ச. அளக்கையியல்,
தமிழ்நாட்டுப் பாடநூல்
நிறுவனம், சென்னை,
1973

2. நாகசாமி, இரா. — பூம்புகார், தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, சென்னை, 1973

3. ஷை — செங்கம் நடுகற்கள், தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, சென்னை, 1972

இயல் 9

1. Basham, A. L. (Ed.) — *A Cultural History of India*, Oxford, 1976

2. Hans Jensen — *Sign, Symbol and Script*, London, 1970

3. Mookerji, R. K. — *Hindu Civilisation*, Bombay, 1950

கல்வெட்டுத் தொகுப்புகள்

1. Epigraphia Indica, Vol. XXII

2. Indian Archaeology (A Review) 1962-63 ; 1963-64 1964-65 ; 1965-66.

பொருட்குறிப்பு அகராதி

அ

அகத்தியர் 180
அச்சுதவிக்கிரந்தன் 456
அசிரிய 473
அசோகன் 180, 382, 384
அஞ்சனக்கல் 166
அடியார்க்குநல்லார் 321, 401, 415, 461
அடுமகள் 97
அணியிழை 79
அந்தணர் 50, 66, 216
அநந்த ஞானம், அநந்த தரிசனம், அநந்த வீரியம் 321
அபிதம்மாவதாரம் 455
அம்பி 21, 144
அம்ரி 471
அம்ரர் தருக்கோட்டம் 327, 450
அமராவதி 455
அமுதம் 110
அமெரிக்க எழுத்துக்கள் 383
அயினி 110
அர்கரிடிக் 167
அரசலூரர் 405
அரிக்கமேடு 165, 363, 424
அரிகாம்போதி 413
அருகர்கோட்டம் 438
அருகன் 321
அல்லங்காடி 133, 446, 447
அலெக்சாண்டிரியா 171
அவந்திக் கொல்லர் 434
அவித்தம் 342
அழகுக் கலைகள் 338
அழுந்தூர் 70
அறங்கூறவையம் 447
அறச்சாலைகள் 109
அறத்தாறு நுவலும் பூட்கை 197
அறவிலை வாணிகர் 199
அறுமுகச் செவ்வேள் 436
அறுவகைத் தொழில்கள் 68

ஆ

ஆகூழ் 314
ஆசீவகத் தத்துவங்கள் 327
ஆட்டனத்தி 130
ஆடகம் 41
ஆடகமாடம் 438
ஆடை அணிகள் 74
ஆதிசேடன் 294
ஆதிபகவன் 307
ஆபுத்திரன் 324
ஆம்பற்குழல் 401
ஆமூர் 51
ஆய் அண்டிரன் 290
ஆய்ச்சியர் குரவை 298
ஆயர் தொழில் 152
ஆர்மீனியர் 486
ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் 46
ஆரிய மொழிகள் 387
ஆரியசு 364
ஆரியவர்த்தம் 180
ஆலத்தூர் கிழார் 224
ஆலமர் செல்வன், ஆல்கெழு கடவுள் 217
ஆவிநன்குடி 212
ஆவூர் மூலங்கிழார் 323
ஆற்கரு 167
ஆறலை கள்வர் 26, 158
ஆறுநாட்டார் மலைக்குகை 385
ஆனைமலைக் குகை 439

இ

இசைக்கருவி 301
இசைக்கலை 398
இசைத்தமிழ் 225
இசை நூல்கள் 398
இந்திர மதம் 438
இந்திர விழா 61, 132, 438
இந்திரன் 16, 62
இந்தோளம் 411

இமயவரம்பன் 66
இரட்டைக் காப்பியங்கள் 330
இரட்டையர் படிமம் 480
இரத்தி மன்றம் 453
இரவுக் கடைத்தெரு 30
இராசகிருகம் 446
இருந்தையூர் 295
இரும்பொறை 66
இருமைக் கோட்பாடு 316
இருளர் 486
இலங்கொளிச்சிலாதலம் 438, 466
இலஞ்சிமன்றம் 435
இலவந்திகைச்சோலை 452, 459
இழிசினன் 156
இழையணி 201
இளங்கடுங்கோ 385
இளங்கீரனார் 400
இளங்கோவடிகள் 262
இளந்திரையன் 85
இறைநிலை 270
இறைவழிபாடு 214
இறைவிழா 62

ஈ

ஈமப்புறங்காடு 452
ஈராசுப் பாதிரியார் 288
ஈரோடு 81
ஈழநாடு 42
ஈஸ்டர் தீவு 489

உ

உச்சிக்கிழான் கோட்டம் 327, 450
உதயகுமாரன் 216
உதய ரவிச்சந்திரிகை 412
உப்பெடுத்தல் 155
உபநிடதம் 289, 327, 331
உமணர் 24, 69, 157
உய்யானம் 447, 452
உரிப்பொருள் 340
உரிமைப்பள்ளி 434
உருத்திரன் 217,288
உருபார் 471
உருவ வழிபாடு 272
உரோமானியப் பேரரசு 171
உல்குபொருள் 169
உலகம் 19
உலோகாயதம் 328
உலோகுஞ்சதாரோ 471
உலோத்தல் 471
உவவனம் 356
உவாநாள் விழா 58, 61
உவியல் 96
உழிஞை 195, 205
உழைப்பண் 411
உள்நாட்டு வாணிகம் 156
உள்ளிவிழா 61, 131
உள்ளொளி 309

ஊ

ஊமைக்கவி 339
ஊர் 491
ஊர்க்கோட்டம் 327, 450
ஊர்தி 257
ஊழ்வினை 277

எ

எஃகாடுனம் 106
எகிப்து 255, 288, 383,471
எட்டி 43
எண்குணத்தான் 321
எயிற்பட்டினம் 162, 170
எயினர் 27

ஏ

ஏராளர் 71
ஏலம் (Elam) 484, 486
ஏழ்புழைக் குழல் 401
ஏழிசை நூல் 398
ஏறு தழுவுதல் 139

ஐ

ஐந்தவித்தான் 321
ஐந்திணை மக்கள் 191
ஐம்புல நுகர்ச்சி 275
ஐம்புழைக் குழல் 401
ஐயர் 57
ஐயவித் துலாம் 443
ஐயனார் 62
ஐயைகோட்டம் 436
ஐவனம் 8

ஒ

ஒருதுறைக் கோவை 395
ஒருமுக எழினி 462
ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் 45
ஒலிமொழி 378
ஒலியெழுத்து 382
ஒற்றாடல் 265

ஓ

ஓசுநர் 38
ஓண நன்னாள் 298
ஓணம் 128, 298,448
ஓய்மானாடு 82, 97
ஓவிய எழினி 358
ஓவிய எழுத்து 346, 383
ஓவியக்கலை 338
ஓவிய நூல் 346
ஓவியப் புலவன் 354
ஓவிய மாடம் 347
ஓவிய விதானம் 350

ஔ

ஔடவம் 409

க

கச்சை 78
கட்டுமரங்கள் 21
கட்டுவிச்சியர் 125
கடம்பன் 5
கடல்வேட்டம் 34
கடவுட்காட்சி 246
கடவுட்கொள்கை 270
கடற்கலங்கள் 161
கடுத்தக்கல் 477
கடைசியர் 16
கண்ணகி 120, 303
கண்ணுள் வினைஞர் 468
கண்ணேறு 117
கண்ணோட்டம் 178, 198
கணக்காயர் 192
கணதாசன் 455
கணியன் பூங்குன்றன் 250, 329
கத்தியவார் 471
கதிர்மாடம் 427
கந்தரத்தனார் 354
கந்தழி 274
கந்திற்பாவை 372
கபிலர் 317, 400
கம்மியன் 88, 153, 373
கமரா 165
கரகம் 51
கரந்துவரல் எழினி 462
கரந்தை 205
கரண்டைகள் 447
கருங்கட்கானவர் 28
கருத்தெழுத்து 382
கருத்தோவியங்கள் 381
கரோஸ்தி எழுத்து 383
கல்லாடனார் 271
கல்லெடுப்பு 366
கலங்கரைவிளக்கம் 433
கலிங்கம் 76
கலித்தொகை 297, 302, 395
கலைவிழா 62
கவேரவனம் 452
கழார்ப் பெருந்துறை 130
கழுத்தணிகள் 83
கழைவளர் தூம்பு 400
கள்ளுக்கடை 114
கள்ளுண்ணாமை 314
களமர் 16
கற்படுக்கைகள் 326
கற்புக்கரசியர் 187
கற்பூரம் 91
கறிவேப்பிலை 98
கன்னல் 59
காஞ்சி 350, 363 446
காஞ்சித்திணை 231
காடர் 486
காப்பியப் பண்புகள் 227
காபேரிஸ் 168
காமவேள் 62
காமவேள் கோட்டம் 437
காமவேள் விழா 133
காயாம்பூ 90
கால அளவுகள் 258
காலணிகள் 84
காலதர் 59
காவற்காடுகள் 440

காவிதி 36
காவிதி மக்கள் 30, 447
காவிரிப்பூம்பட்டினம் 160, 162, 446
காளி 271
கானல்வரி 420
கானவர் 28
கிரேக்கம் 46
கிரேக்கர் 163
கிழார் 70
கிள்ளி 66
கிளிச்சிறை 41
கீரந்தை 444
குகைத்தளி 465
குச்சரக்குடிகை 422
குட்டநாடு 164
குட்டுவன் 66
குடமலை 42
குடிமல்லம் 377
குடிவகை 112
குடும்பம் 3
குடைநாட்கோள் 63
குமணன் 202
குமுதக்குழல் 401
குயில் எழுத்து 380
குரம்பை 8
குரவைக்கூத்து 13
குரவைப்பாடல் 397
குவிமாடம் 426
குழல்மீன் 97
குறுந்தொடி 82
குறுநீர்க் கன்னல் 258
குறும்பொறி 85
குறுவங்கியம் 400
குன்னிஃபாம் எழுத்து 383
குன்றம்பூதனார் 343
குன்றுறை தவசியர் 180
கூர்மாவதாரம் 294
கூலவாணிகர் 69
கூவியர் 31
கைதை 20
கைம்பெண்டிர் 108
கொங்குவேள் 349
கொச்சக அமைப்பு 396
கொடிநிலை 274
கொடிப்பாலை 414
கொடுகொட்டி 332
கொடுங்கலூர் 164
கொடுங்கோல் 15
கொடும்பை (கொடும்பாளூர்) 438
கொடுமணம் 162
கொண்டிமகளிர் 48, 59
கொல்லிப்பாவை 118, 334
கொலேசியர் 486
கொற்கை 162, 167
கொற்றப்பந்தர் 468
கொற்றவை வழிபாடு 303
கொற்றி 303
கொன்றைக் குழல் 401
கோட்சி 471
கோட்டம் 326
கோட்டயம் 164
கோள் மீன் 247

ச

சாங்கியம் 314, 317, 331
சாங்குதாரோ 471
சாடவம் 409
சாணக்கியன் 345
சாத்துவர் 69
சாந்து (துவையல்) 108
சாந்தோக்கிய உபநிடதம் 345
சாம்பூநதம் 41
சாலியர் 77
சாவகர்கள் 30
சாவாமூவாப் பெருவாழ்வு 124
சித்தன்வாழ்வு 213
சித்தன்னவாசல் 364
சித்தாந்தம் 290
சித்திரத்தடாகம் 351
சித்திரமாடம் 347
சிந்துவெளி அசையெழுத்து 383
சிந்துவெளி எழுத்துகள் 382, 389, 392
சிந்துவெளி நாகரிகம் 470
சிரல்பொறி 443
சிறற்பறவை 430
சில்காழ் 85

சிலம்புகழி நோன்பு 203
சிற்பக்கலை 338, 365
சிறப்பெழுத்துகள் 387
சீர்த்தி 45
சீவகன் 358
சீழ்க்கை 10
சீன ஓவிய எழுத்து 383
சுக்கிரன் 249
சுத்த சாவேரி 412
சுத்தபீடகம் 324
சுதகாசெத்தோர் 471
சுப்பிரமணியன் 217
சுபாவவாதம் 330
சுமேரியன் 383
சுமேரியா 288, 485
சூடகம் 49
சூத்திரர் 73
சூதர்கள் 32
சூரியகுண்டம் 437, 458
சூழி 87
சூளுரை 273
செங்கம் 364
செங்குட்டுவன் 45, 421
செம்பியன் 66
செல்வக் கடுங்கோ வாழியாதன் 64
செவ்வழிப்பாலை 415
செவ்வழியாழ் 417
செவ்வேள் வழிபாடு 299
சைப்பிரஸ் தீவு 489
சைப்பிரஸ் நாட்டார் எழுத்து 383
சைவசித்தாந்தம் 291
சைவத்தின் தொன்மை 288
சோபாட்மா 165
சோமகுண்டம் 437, 458
சோழபுரம் 367
சோழன் 66
சோழியன் 6

த

தக்கோலக்காய் 89
தகஞ்சதாரோ 471
தடவு 59
தருமதத்தன் 353
தலைக்கோல் 49
தலையாலங்கானம் 83
தவச்சாலைகள் 350
தவச வாணிகர் 37
தழையுடை 74
தனிமப்பொருள் 243
தாமான் தோன்றிக்கோ 202
தாமிழி எழுத்துகள் 364, 383, 384, 385
தாரை வழிபாடு 220
திங்கள் 248, 258
திரவிடி 384
திராவிடர் 5
திரிகோண வடிவு 358
திருக்காம்புலியூர் 423
திருக்கோவலூர் 83
திருச்சீர் அலைவாய் 216
திருத்தக்கதேவர் 358
திருப்பரங்குன்றம் 333, 448
திருமந்திரம் 291
திருமால் குன்றம் 438
திருமாலிருஞ்சோலை 295
திருமுடிக்காரி 83
திருவரங்கம் 295, 437
திருவள்ளுவர் 222, 304
திருவாதிரை 53
திருவிளக்கு வழிபாடு 204
திருவேங்கடம் 295
தின்னன் எதிரான் 364
தினேரியா 364
தீக்கடைகோல் 11
தீர்த்தங்கரர் 392
துகில் 155
துகிலிகை 362
துடியன் 5
தும்பைப் போர் 195, 205
துறக்க இன்பம் 210
துறவறம் 304
தூங்கெயில் எறிந்த தொடித் தோட் செம்பியன் 83
தெய்வமேறியாடல் 126, 274
தெல் அசுமர் 490
தெற்கு ஓட்டம் 259
தேக்குமரம் 8
தேவதரு 62
தேறல் 38, 113
தேனிறால் 95
தைந்நீராடல் 129, 208
தொடக்குப்பொறி 443
தொண்டி 22

தொண்டை நாடு 82
தொய்யகம் 49, 87
தொல்லியல் அகழ்வு 430
தொழுநையாறு 294
தோடி 415
தோப்பி 38, 335
தோயன் மாறன் 202
தோள்வளை 49

ந

நக்கவாரம் 486
நகர மக்கள் 63
நச்சினார்க்கினியர் 148, 353
நடபைரவி 413
நடுகல் 63, 211, 214, 366, 436
நடுநிலக்கடல் மக்கள் 487
நப்பின்னை 218
நம்பண்ணனார் 348
நரந்தம் 59
நரம்பின் மறை 399
நல்லந்துவனார் 401
நல்லியக்கோடன் 202
நள்ளி 83
நன்னன் 64
நாகர் தங்கோட்டம் 450
நாங்கூர் 70
நாஞ்சில் வள்ளுவன் 202
நாட்சோறு 104
நாட்டியம் 228
நாநவில் அவையம் 64
நாவூர் 70
நாழிகை வட்டில் 258
நாள்மீன் 247
நாளங்காடி 446, 447, 451
நிக்கந்தக் கோட்டம் 327, 437, 450
நிகாங்கான் 471
நித்திலமதாணி 87
நிமித்தம் பார்த்தல் 118
நியதிக் கொள்கை 329
நிலக்கீல் 474, 485
நிலாக்கோட்டம் 327, 437, 450
நிழற்கோள்கள் 247
நிறைமொழி மாந்தர் 305
நீலமேனி நெடியோன் 436
நீர்க்குன்றம் 164, 166
நீர்ப்பெயற்று 165
நீர் விளையாட்டு 134
நெய்யணி மயக்கம் 207
நுளையர் 21

ப

பசுபதி 288
பட்டிமண்டபம் 468
பட்டினவர் 19
படவெழுத்து 382
பண்டமாற்று 158
பண்ணியம் 30, 39, 105, 111
பண்பாடு 182
பத்தினி வழிபாடு 204
பதிவுமொழி 379
பந்தர்த் துறைமுகம் 162, 167
பர்மா நாடு 42
பரத்தையர் 48, 59
பராபரக்கொள்கை 328
பராலியா 165
பருகுபானம் 115
பருப்பொருள் 182
பருமம் 85
பருவமழை 288
பல்காழ் 85
பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி 323
பல்லவனீச்சுரம் 454
பல்லிசொல் 121
பலதேவன் 62, 297
பவகாரணி 295
பவழம் 88
பழமுதிர்சோலை 333
பழைய கிரீத்தியர் எழுத்து 383
பழையாறை 367
பள்ளிப்படை 212, 369
பறம்பு நாடு 100, 200
பாண்டிமாதேவி 46, 445
பாண்டிவாகு 471
பாண்மகள் 159
பாதபீடிகை 320, 371
பாபிலோனியா 255, 383, 473
பாம்பணைப்பள்ளி 437
பார்ப்பனச்சேரி 4
பார்ப்பன வாழ்க்கை 54
பாரசீகம் 473, 485
பாரி 200

பால்வரை தெய்வம் 272
பாலாசிரியர் 192
பாலி 385
பாலினேசியன் 383
பாவை விளக்குகள் 171, 372
பானைக்கீறல் குறி 382
பிண்டியிலக்கணம் 402
பிராகிருத மொழி 383, 385
பிராமி எழுத்துகள் 389
பிறவாயாக்கைப் பெரியோன் 436
புகழூர் 385, 391
புகார் நகரம் 33, 35, 59, 437
புடைப்போவியம் 363, 479
புத்ததத்தர் 455
புத்தநெறி 382
புத்த வம்சாத்த கதா 455
புத்தவிகாரம் 439, 454
புத்தேளிர் உலகு 308
புதுப்புனல் விழா 130
புதைசாக்கடை 425 459
புறநானூறு 394
புறநிலைக்கோட்டம் 326
புறநீர்மைப்பண் 419
புனையா ஓவியம் 353, 362,
பூசை 206
பூதசதுக்கம் 435
பூதப்பாண்டியன் 186
பூநதொடை விழா 61, 131
பூம்புகார் 34, 255, 449, 466
பெண்ணைப்பிழி 113
பெரியாழ்வார் 298
பெரில் 175
பெருங்கடுங்கோ 352
பெருங்கதை 318, 350, 446 459
பெருஞ்சாத்தன் 96
பெருஞ்சோறு 104
பெருந்தகையாளன் 305
பெருந்தச்சன் 373, 468
பெரும்பூண் நன்னன் 85
பெருவங்கியம் 400
பெகன் 201
பெரிணையம் 374
பொதுக்கா 165
பொருமுக எழினி 462
பொருள்மொழிக்காஞ்சி 270
பொருளியம் 269
பொற்கைப்பாண்டியன் 43,444
போகூழ் 313
பௌத்தம் 326

ம

மகதநாடு 446
மகதவினைஞர் 434
மகரக்குழை 81
மகரப்பகுவாய் 87
மகரவலயம் 87
மகளிர் விளையாட்டு 135
மகாயானம் 320
மகிகலி கோசாலர் 328, 329
மகிழ்நன் 16
மகிழ்வுநல நோக்கம் 232
மங்கலவணி 189
மங்கோலியர் 476
மட்டுமகிழ் 38
மண்ணக வாழ்வு 228
மண்ணாள் செல்வர் 66
மண்ணீட்டாளர் 373
மணப்பொருள்கள் 74, 89
மணிக்கலன் 110
மணிபல்லவத் தீவு 439
மணிமிடற்றோன் 217
மணிமேகலை 404, 446
மத்திகை 49
மத்யமாவதி 411
மதகுருமார் 73
மதலைமாடன் 426
மதுரை 447
மயன் 463
மயில்தோகை 301
மரகதம் 41
மரக்கலன்கள் 144
மரபுச் செல்வம் 186
மரவுரி 75
மரலைச் செடி 9
மருங்கூர்ப்பட்டினம் 162, 165
மருத்துவக்கலை 244
மருதயாழ் 417
மருதன் இளநாகனார் 190
மலபத்திரம் 167
மலையமான் 7
மழுவாள் நெடியோன் 217
மன்பதை 1
மன்பெருங்கோயில் 434

மன்று 13
மன்னவன் கோயில் 370
மாங்குடி கிழார் 5, 6
மாசதிக்கல் 367
மாசறு காட்சி 307
மாணிக்கம் 41, 88
மாணிழை 79
மாதுளங்காய் 98
மாநாய்கர் 69, 255
மாமல்லபுரம் 165
மாயோன் 13, 14, 298
மார்கழி நோன்பு 208
மார்ஷல் சர் ஜான் 288, 470, 419
மாவண் கிள்ளி 45
மிதுனராசி 251
மிலிந்த பஞ்கா 455
மிர்சாபூர் 344
மிலைக்களச்சந்தி 453
மிஸ்ரம் 376
மீனாட்சிபுரம் கல்வெட்டு 385, 391
முக்கண்ணன் 289
முக்கோல் 51
முச்சுடர் வழிபாட்டுமுறை 333
முசுகுந்தன் 376
முடிசூட்டுவிழா 63
முண்டர் 486
முத்தமிழ் 224
முத்தொழில் 289
முதலைந்திசை 404, 407
முதலேழிசை 412
முந்நீர் விழா 61
மும்முதற் பொருள் 220
மும்முரசு 43
முரசப்பொறி 443
முரண்களரி 33
முருகியல் அமைப்பு 397
மொகஞ்சதாரோ 444, 445, 470, 471

ய

யவனத்தச்சர் 434
யவனர் கலங்கள் 164
யவனர் விளக்குகள் 174
யோகநெறி 291

வ

வச்சிரக்கோட்டம் 327
வசவசமுத்திரம் 457
வஞ்சி 195, 350
வஞ்சித்தூக்கு 396
வஞ்சிப்போர் 195, 205
வட்டாடுதல் 61
வட்டிகை 352, 362
வட்டுடை 78
வட ஆசிய எழுத்துகள் 383
வடக்கு ஓட்டம் 259
வடமலை 42
வடிம்பலம்ப நின்றான் 398
வண்ண ஆடை 77
வண்ண ஓவியங்கள் 352
வண்ணக்கோல் 352
வணிகர் 68
வந்திகை 82
வயநாடு 344
வயிரியர் 32
வர்த்தமான மகாவீரர் 392
வரிகாண் அரங்கம் 434
வரிக்குழை 81
வருடை 9
வருணபேதம் 324
வல்லாண்மை 286
வல்லுப்பலகை விளையாட்டு 61
வலம்புரிவளை 82
வலவன் ஏவா வானவூர்தி 257
வளிதொழில் 255
வன்னி மன்றம் 453
வாகுவலயம் 87
வாகை 195, 205
வாகைமன்றம் 453
வாத்சயாயனர் 337
வாயுறை வாழ்த்து 270
வால்வெள்ளி 249
வாலறிவன் 272
வாலியோன் 436
வாலிழை மகளிர் 189
வாளைமீன் 95
வான் பெருமன்றம் 438
வானகிரித் தூம்பு 456
வானநூலறிவு 246
வானவரம்பன் 66
வானவூர்தி 145
வானுலகம் 302

விசிட்டாத்துவைதம் 314
வித்தகன் 354
வித்தம் 342
விதலைப் பருவம் 53
விதானங்கள் 350
விந்தியமலை 180
விபுலானந்த அடிகள் 402, 403
வியாழன் 248
விரிச்சி 119
விருந்தோம்பல் 184
விழாமிகு வேங்கடம் 132
விளக்கீட்டு விழா 127
விளரியாழ் 403
விறலியர் 44
வினைப்பயன் கோட்பாடு 270
வினையின் நீங்கினான் 272
வீடுபேறு 222, 270
வீமபாகம் 92
வீரக்கல் 365
வீரசாலை 366
வீரர் விழா 131
வெட்சி 89, 195
வெண்கால் அமளி 351
வெண்குடை 56
வெண்ணெல் 157
வெண்முத்து 41
வெள்ளணி விழா 207
வெள்ளி 248
வெள்ளிக்கோள் 115
வெள்ளிடைப் பாடி 434
வெள்ளிடை மன்றம் 435
வெளிநாட்டு வாணிகம் 160
வெற்றிக்கொடி 29
வெற்றிலைக் கொடி 17
வெற்றிவிழா 63
வெறிப்பத்து 126
வெறியாடல் 300
வேங்கடமலை 437
வேங்கைமரம் 8
வேட்கோ 154
வேடர் 28
வேண்மாள் 434
வேதாளிகர் 450
வேய்ங்குழல் 401
வேளிர்குடியினர் 70, 148
வேற்கோட்டம் 327, 450
வேற்படை 300
வைக்கரை 164
வைடூரியம் 41, 88
வைதிக எதிர்ப்பு 234
வையை ஆறு 29, 449
வைரம் 41, 88

பிழைதிருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
42	21	மூடைட்டகள்	மூட்டைகள்
61	14	மகிழ்தழ்	மகிழ்தல்
63	21	எனலாம்	எனலாம்.
68	9	அலுவலகத்	அறுவகைத்
73	அ.கு.554	of History	of Indian History,
80	5	இருக்கலாமன்றோ.	இருக்கலாமன்றோ ?
85	ஒளிப்படம் 1	அணிகளில் மணிகள் (வானகிரி, தஞ்சை மாவட்டம்)	அணிகளில் மணிகள்
97	8	அவிப்புழுக்க் லுடனும்	அவிழ்ப்புழுக்கலுடனும்
109	3	ஊறறி	ஊற்றி
162	அ.கு.107	Eryrthraean	Erythraean
165	அ.கு.125	No. (1946)	No. 2 (1946)
179	அ.கு.8	CVP	OUP
181	அ.கு.13	Quartely	Quarterly
	பக்க எண்	185	183
191	அ.கு.45	Iyangar,	Iyengar,
	,,	Aryan	Pre-Aryan
193	20	காலவழிச்	கால்வழிச்
195	அ.கு.55	Grousse,	Grousset,
215	அ.கு.130	School	School of
217	அ.கு.158	Supra, No. 126-130	Supra 150-157
,,	,,	Religious	Religions
219	அ.கு.171	Hari vamsa, Granthamala	Hari Vamsa Granthamala
220	26	அறத்தின்வரு	அறத்தின்வழி

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
232	அ.கு 229	Supra No. 176	Infra 249
257	18	சார்ப்தவர்	சார்ந்தவர்
297	அ.கு.115	Kanakasabai Pillai, S.	Kanakasabai Pillai, V.
301	20	அணிவித்தனர்[16]	அணிவித்தனர் [136]
325	6	புத்தரும்	பௌத்தரும்
337	14	வாத்சயாயனர்	வாத்சாயனர்
337	17	'இலவித விஸ்தரம்'	'இலலித விஸ்தரம்'
367	31	இராசாத்தித்திய	இராசாதித்திய
372	36	நுட்பத் தேர்ச்சி [94]	நுட்பத் தேர்ச்சி [95]
373	18	சிறபங்களைச்	சிற்பங்களைச்
391	24	இதுவும்	அசோகன் எழுத்து முறையும்
,,	,,	முறையும்	முறையும் ஒன்றே
418	32	காலத்தீன்	காலத்தின்
423	15	புனைவதுரண்டு	புனைவதும் உண்டு
423	27	திருக்காப்புலியூர்	திருக்காம்புலியூர்
441	26	எளிதாசு	எளிதாக
471	18	மெசபத்தோமிய	மெசபத்தேமிய
473	16	,,	,,
495	அ.கு. 31	ஒ(கார)ம்	ஓ(க)ம்
,,	அ.கு. 36	ஒ(கார)ம்	ஓ(க)ம்.